# வட்டியும் முதலும்



ராஜுமுருகன்


வட்டியும்
முதலும்
ராஜுமுருகன்



Title :
VATTIYUM MUTHALUM
©RAJUMURUGAN
ISBN : 978-81-8476-473-4

விகடன் பிரசுரம்: **707**

நூல் தலைப்பு:
**வட்டியும் முதலும்**

நூல் ஆசிரியர்:
**© ராஜுமுருகன்**

ஓவியங்கள்:
**ஹாசிப் கான்**

முதற்பதிப்பு : **டிசம்பர், 2012**

விலை : **₹ 215**

பதிப்பாளர்:
**பா.சீனிவாசன்**

ஆசிரியர்:
**இரா.சரவணன்**

முதன்மை உதவி ஆசிரியர்:
**அ.அன்பழகன்**

தலைமை உதவி ஆசிரியர்கள்:
**எம்.நாகமணி, கே.பாகமணி, சிவராஜ்**

முதன்மை வடிவமைப்பு
**மு.ராம்குமார்**

**இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டுள்ளது. புத்தக விமர்சனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது**

**விகடன் பிரசுரம்**
757, அண்ணா சாலை, சென்னை-600 002.

எடிட்டோரியல் பிரிவு போன்: 044-28524074 / 84
விற்பனை பிரிவு போன்: 044-42634283 / 84
e-mail: books@vikatan.com

# மலர்க்கொத்தும் மன்னிப்பும்!

**ப**சியில் தொடங்கியதாலோ என்னவோ... ராஜுமுருகனின் 'வட்டியும் முதலும்' தொடரை வாசிக்க வாசிக்க பசி அடங்கவே இல்லை. இளைஞன் ஸ்தானம் கடக்காது வாழும் இந்த மனிதனுக்குள் இத்தனை கடல்களா? ஒவ்வொரு வாரமும் விகடனில் துளிகளாகத் தன் கடல்களை இறக்கிவைத்த இந்த இளைஞனுக்குள் கோபம், வாஞ்சை, பாசம், பரிதவிப்பு, நெருடல் என எத்தனை விதமான உணர்வுகள்!

தன் வாழ்வியல் அனுபவங்களாக வாழ்க்கையின் பன்முகங்களையும் பந்தி வைத்திருக்கும் ராஜுமுருகன், தமிழ் எழுத்துலகின் நம்பிக்கை மிகுந்த அடையாளம். சிரித்து, அழுது, விளையாடி, தூங்கி பன்முகத்தனங்களையும் தன்னை அறியாமலே செய்யும் ஒரு குழந்தையைப்போல் வாழ்வின் அத்தனை விதமான உணர்வுகளையும் போகிறபோக்கில் நெஞ்சு தைக்கச் சொல்லி இருக்கிறார் ராஜுமுருகன்.

துயரங்களும் நம்பிக்கைகளும் கலந்து நகரும் இந்த உலகை சற்று தூரத்தில் நின்று கவனித்த கணக்காய் அத்தனை விதமான அனுபவங்களையும் இந்தப் புத்தகத்தில் காணலாம். புறந்தள்ளப்பட்டவர்களுக்காக அழலாம்; போராடுபவர்களுக்குக் கைகொடுக்கலாம்; இழந்தவர்களுக்குத் துணை நிற்கலாம்; வென்றவர்களுக்கு மலர்க்கொத்து நீட்டலாம்; கொன்றவர்களுக்கு மன்னிப்புக் காட்டலாம். மனித உணர்வுகளின் அத்தனை விதமான வெளிக்காட்டல்களையும் நிச்சயம் இந்தப் புத்தகம் உங்களுக்குள் நிகழ்த்தும்.

குவிந்து கிடக்கும் பணத்தைப் பார்ப்பதும் பார்வையே... பணத்தின் நடு வட்டத்தில் யாரோ ஒருவன் தன் காதலைப் பிழைகளோடு சொல்லி

இருப்பதைப் பார்த்துச் சிலிர்ப்பதும் பார்வையே. அந்தக் காதலன் தன் காதலியோடு சேர்ந்திருப்பானா என, எவனோ ஒருவனுக்காக ஏங்கித் தவிப்பது மூன்றாம் பார்வை. இந்தப் புத்தகத்தின் அற்புதம் இத்தகைய பெருங்குணமே!

கடலுக்குள் கூடுகட்ட — கனவுக்குள் கடல் கட்ட மனப்பக்குவம் வார்க்கும் மயிலிறகுத் தீண்டலே இந்தப் புத்தகம்!

**— ஆசிரியர்**

அணிந்துரை

# நீ பார்த்த பார்வைக்கு...

இரண்டு நாட்களுக்கு முன் இரவு ஒன்பது மணியிருக்கும், கரன்ட் போய்விட்டது. அதுவரை, ‘புதிய தலைமுறை’ செய்திகள் ஓடிக்கொண்டு இருந்த தொலைக்காட்சியில் அசைவற்ற இருட்டு. அப்பா தன்னுடைய 87 வயது வாழ்வையும் தாங்குவதுபோல இடது கையில் முகத்தை வைத்து அசையாமல் இருக்கிறார். அரை மணி நேரமாக அப்படியே இருக்கிற அவரை நாங்கள் புரிந்துகொண்டோம். மறுநாள் வருகிற எங்கள் அம்மாவின் ஏழாவது நினைவு நாளுக்குள் அப்போதே அவர் நுழைந்துவிட்டார்.

திருவனந்தபுரத்தில் இருந்து நண்பருடைய தொலைபேச்சு. உலகத் திரைப்பட விழா நடந்துகொண்டு இருக்கிறது. அப்புறம் ஒரு புதிய மலையாளத் திரைப்படத் தயாரிப்பு தொடர்பான சந்திப்புகள். நான் ஒன்றும் கேட்கவில்லை. அவரே சொன்னார். விடுதியில்தான் தங்கி இருக்கிறாராம். மனைவியைப் பார்க்கவே இல்லையாம். நான்கு நாட்களுக்கு முன், ஓர் இரவில் நிசிக்குப் பிந்திய நேரம் தனியாக நடந்து போனாராம். நான்கு தெருக்களுக்கு அப்புறமே வீடு. வீட்டைத் தள்ளி நின்று பார்த்தாராம். விளக்கு எரிந்தபடியிருந்த ஜன்னலைப் பார்த்துவிட்டுத் திரும்பிவிட்டாராம்.

காவேரிக்கு முகம் எல்லாம் சிரிப்பு. நான் விருந்தாளியாகப் போயிருந்த வீட்டில் சமையல் வேலை. அந்த வீட்டின் கணவர், மனைவி, பையன், பெண்குழந்தை எல்லோரும் அப்படிச் சிரிக்கிறார்கள். மறைவிலிருந்து சுழலும் ஓர் இசைத்தட்டுபோல சிரிப்புச் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கிறது. அந்தச் சிரிப்பு காவேரிக்கும் தொற்றிக்கொண்டுள்ளது. ‘சிரிப்பு நல்லா இருக்கு!’என்று காவேரியிடம் சொன்னேன். காவேரி அங்கிங்கு அசையாமல் என் கண்களைப் பார்த்துக்கொண்டு நின்றது. ‘இங்கதான் சார் இப்படி சிரிக்கேன். வீட்டிலே நுழைஞ்சா ஒரே சண்டை’— இதைச் சொல்லும்போது சிரிப்பு மட்டும் அல்ல, பூசின கண்ணில் அழுகையும்.

சிறு கீரை, அரைக் கீரை, பாலாக் கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை, அகத்திக் கீரைஎன்று காலை ஏழு ஏழரைக்குக் கேட்டால் அது கணவதியுடையது. கி.ராஜநாராயண மாமா வீட்டு அத்தை பெயரும் ‘கணவதி’தான். கல்வெட்டாங்குழிப் பக்கத்தில் மழைக்குப் பிந்தி வளர்ந்து கிடந்த தும்பைச் செடியை முகர்ந்து பார்த்துக்கொண்டு இருந்த, பிறந்த களை மாறாத நாய்க்குட்டியுடன் குனிந்து கணவதி பேசிக்கொண்டு இருந்தாள். வலது கைப் பெருவிரலுக்கும் சுட்டு விரலுக்கும் மத்தியில் ஒரு செண்டுபோல பழுப்பு நிறத்தில் நாய்க்குட்டி முனங்கிக்கொண்டு இருந்தது. இன்றைக்கு கார்த்திகை கடைசி நாள். நாளை மார்கழி மாதப் பிறப்பு. ஈரமாகக் கிடக்கிற குழாயடிப் பக்கத்து மண்ணிலிருந்து ஊர்ந்து பஜனை பாடி வருவதுபோல, மூன்று, நான்கு வளையல் பூச்சிகள் வாசல் நடை ஓரமாக. செருப்பைக் கழற்றிப் போட்டுவிட்டு, கீழே உட்கார்ந்து இடது விரலை நீட்டுகிறேன். ‘திருப்பாவை’ மனனப் போட்டியில் கலந்துகொள்வதுபோல சத்தம் இல்லாமல் பாடிக்கொண்டு மணிக்கட்டை நோக்கி அது வருகிறது, ஒரு வினோதமான மண் உயிரி வாசனையுடன்.

இப்படிப் புழுவையும் பூச்சியையும் அப்பாவையும் கணவதியையும் காவேரியையும் பார்க்கச் சொல்லித் தந்தது நீங்கள்தான் ராஜுமுருகன். இந்த எழுபது சொச்சம் வாரங்களிலும் நீங்கள் குறைந்தபட்சம் எழுநூறு மனிதர்களையாவது எங்களுக்குக் காட்டியிருப்பீர்கள். வாழ்வு என்பதும்,

மனிதர்கள் என்பதும், மனிதரைப் புரிதலே வாழ்வினைப் புரிவது என்பதும்தானே அடிப்படையான உண்மை. அதில் பாதிக்குப் பாதி அனேகமாக, அவரவர் வாழ்வில், அவரவர் ஊரில் அதே சாயலில் நாங்கள் பார்த்த வேறு மனிதர்கள். அப்படி எல்லாம் வேறு வேறு மனிதர்கள் என்று எல்லாம் கிடையாதோ என்னவோ. அரசமர இலை மாதிரி, எஃப்.சி. கோடவுண் புறாக்கள் மாதிரி, குட்டி ரயில்வே ஸ்டேஷன் வேப்ப மரங்கள் மாதிரி, கல்லறைத் தோட்டத்தில் சிதறிக் கிடக்கிற சீட்டுக்கட்டுகள் மாதிரி மனிதர்களும் ஒரே மாதிரித்தான் வித்தியாசமே இல்லாமல் இருக்கிறார்களோ.

சரவணன் அண்ணனின் கல்யாண ஆல்பம் மாதிரித்தானே எங்களுடைய பையனின் கல்யாண ஆல்பமும் இருக்கிறது. மருது கோட்டோவியத்தில் இருக்கிற முகங்களைத்தானே நான் கோடாரங்குளத்திலும் சிவந்திபுரத்திலும் காணிக்குடியிருப்பிலும் பார்த்திருக்கிறேன். அந்தமானில் இருந்து இன்றைக்கு வந்திருக்கிற நாராயணியின் கடிதத்தில் எழுதியுள்ள, அவருடைய அறையில் எரிந்துகொண்டிருந்த கார்த்திகை விளக்கின் எண்ணெயில் திரி பட்டு எரிகிற வாசம்தானே ‘தீப தீபங்கள் ஓயும் நேரம், நீயும் நெய்யாக வந்தாய்’ என்ற ஜேசுதாஸ் குரலிலும் அடிக்கும்.

அது எப்படி உங்களுக்கு மட்டும் இத்தனை நிரம்பி வழிகிற மனிதர்கள்? கொரடாச்சேரி அபிவிருத்தீஸ்வரத்தில் இருந்து புறப்பட்டால், இவ்வளவு தூரம் போய்விட முடியுமா, இந்த முப்பத்தைந்து முப்பத்தாறு வயதுக்குள்? நானும் பி.பி.சாவடியில்தானே இருந்தேன். அரசரடி வழியாகத்தானே அலைந்தேன். எப்படி எல்லீஸ் நகர் லீலாக்காவும், ‘சின்னப் புறா ஒன்று…’ பாடிய ரெங்கய்யாவும் கண்ணில் படாமல் போனார்கள்? வினாயகா மேன்ஷனிலும் ஸோபியா மேன்ஷனிலும் நீங்கள் மட்டுமா இருந்திருப்பீர்கள்? உங்களுக்கு மட்டும் எப்படி பிரியங்காம்மா வீட்டுக்கு வழி தெரிந்துவிடுகிறது?

எங்கே இருக்கிறார்கள் அந்த வேணியாத்தா, ஆனந்தியக்கா, மயிலாட்டம் சுப்பு, சாந்தி சித்தி, கட்டாரி மாமா, அர்ச்சனாவின் தங்கச்சி

மாதிரி இருக்கிற நித்யா, திருச்சி கேசவன், பிள்ளை குட்டிகளோடு திருப்பதி போய் மொட்டை போட்ட தலையோடு, 'சின்னவண்டு நீ வாடி...' என்று கொஞ்சுகிற ஜோதி, 'முன்னே பின்னேனு எதுவும் இல்லாமல், நான் நானா மட்டும்' என்று ஹிமாச்சலத்துக்கு உங்களை அழைக்கிற அமர், லஷ்மன் ஸ்ருதி சிக்னலில் ரைம்ஸ் புத்தகம் விற்கிற குட்டி தேவதை, சமையல் கட்டுத் திண்டில் உட்கார்ந்திருக்கும் பூனையிடம் பேசும் நண்பனின் அம்மா.... அட, போங்க முருகா, அது முடியாத லிஸ்ட்.

நான் ஒரு தடவையாவது பார்க்கணும் முருகன், உங்க ரோசி சிஸ்டரை, மூலங்குடி மாதாகோயில் ஸ்கூலில் உங்களுடன் படித்த மணிமேகலையை, கோவா லிசியை, இந்துமதியக்காவை, விஜியண்ணனை, ஏற்காடு கோபியை, குரு அண்ணனை, கதிரேசனை, 'ஒரு முத்தம்தான் கேட்டான். தராமல் விட்டுட்டேன்' என்று காற்றில் கைவீசிப் புலம்பும் ஸ்டான்லி மருத்துவமனைப் பெரியம்மாவை. முத்துகிருஷ்ணன் மாமா வீட்டு சித்ரா அத்தையை, அந்த நீடாமங்கலம் டீச்சரை, இனிமேல பார்க்கவே முடியாமல் தூக்கில் நிர்வாணமாகத் தொங்கிய பி.ராஜாவை, ஹாசிப் கானின் ஓவியத்தின் அற்புதச் சிவப்பில் கொடியுயர்த்தி நிற்கிற முத்துக்குமாரை, செங்கொடியை... எல்லாவற்றுக்கும் அந்தரங்கமாக, கீர்த்தனாவுக்கெல்லாம் கீர்த்தனாவாகி நிற்கிற உங்கள் கீர்த்தனாவை.

இதை எழுதிக்கொண்டிருக்கும்போது, வேலூரிலிருந்து லிங்கம் கூப்பிடுவார் என்றும், கூப்பிட வேண்டும் என்றும் தோன்றுகிறது. உங்களுடைய அந்த 66—வது பகுதியின் வரிகளை, செல்வம் கல்யாணத்தில் மலர்வனத்தைப் பார்த்ததை, அவள் பார்த்தும் பாராது போனதை, 'இப்பவும் கண்ணாடி பார்த்துப் பொட்டுவைக்கும்போது திடுக்குனு இருக்குரா, பின்னால எளங்கோ வந்து நிக்கிற மாதிரி' என்று மாலதி அக்கா சொன்னதையெல்லாம், அவர் வாசித்த மனநிலையில் மிகவும் நெகிழ்ந்தும் ஒரு புதுப்பிக்கப்பட்ட பழைய தீயின் நெடுஞ்சுவாலையோடும் பேசிப் பேசித் திறந்துகொண்டே போனார்.

இப்படித் திறப்பதுதான் நம் வேலை முருகன். யாருடைய சாவியோ நம்மிடம் இருக்கிறது. யாருடைய கதவையோ நாம் திறக்கிறோம். திறக்கிற நாமே திறக்கவும் படுகிறோம். ஏதுமற்ற பருவம் எல்லாமுமான பருவம் ஆகிவிடுகிறது. தனித்தனி சேனலாக அலைகிறவர்கள் எல்லாம் ஒரே அலைவரிசையின் கீழ் வந்துவிடுகிறார்கள். தொட்டியிலே இருக்கின்ற கலர் மீன்கள் சட்டென்று குதித்து தங்களுக்கான நதிகளுக்குப் போய்விடுகின்றன. ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு சாயலுடன் யாரிடமாவது யாரையாவது தேடுகிறோம். யாரையாவது யாரிடமாவது அடைந்தும்விடுகிறோம்.

கட் பண்ணினால்— யாருடைய வீட்டில் எங்கே ஷாட் வைத்தாலும், ஃப்ரேமில் ஏதோ ஒரு மூலையில் நீங்களும் உங்களுடைய மனிதர்களும் ஹாசிப் கானும் இருக்கிறீர்கள்.

உற்றுக் கேட்டால், காட்சிகளுக்கு மேல் கீர்த்தனாவின் குரலில் அந்தப் பாடல் நகர்ந்து போகிறது, ‘நீ பார்த்த பார்வைக்கொரு நன்றி..!’

15.12.2012

**கல்யாணி.சி.**

(வண்ணதாசன்)

# நேற்று... மற்றுமொரு இன்றே!

**இ** க்கணத்தின் ஒரு துளியும் நழுவிவிட்ட பெருநதியின் கரையில் விளையாடப்போன சிறுவன், வீடு திரும்பவில்லை!

சிலுசிலுத்துக் கால் நனைத்தது இந்த நதிதான். வெறுமையில் கடுங்கோடை மணல் பார்த்து அக்கா குருவிகள் அழுதபடி திரும்பியதும் இதே நதிதான். கரன்ட் கம்பங்கள் சாய்ந்து, வெள்ளம் எழுந்து வீடுகள் தின்றதும் இதேதான். எட்டு குடம் தண்ணி தூக்கி, ஏழு கன்னிமார் சூழ அம்மன் குளித்தேறிக் கொடை வருவதும் இந்த நதியில்தான். நீந்தி மீண்டதும் நீர்ச்சுழலில் மாண்டதும் அடையாளம் ஆனதும் அழிந்து வருவதும்... இந்த நதிதான். ஒரே நதிதான்... ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு நதி. உறவும் பிரிவும் அன்பும் வெறுப்பும் புனிதமும் அற்பமுமாக ஒரே மனசுதான்... ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு மனசு.

மலைப்பாதை இடையனைப்போல எப்போதும் மனங்களின் பின்னால் அலைந்துகொண்டே இருக்கிறேன். அந்தியின் பள்ளத்தாக்கில் சூரியன் விழும்போதே நிலா எழுவது மாதிரி, ஒரு முகம் கடந்தால்... மறுமுகம். ஒரு நிலம் முடிந்தால்... மறுநிலம். பிரியங்களும் வருத்தங்களும் பூத்துக்குலுங்கும் ஒரு மரத்தின் கீழ் எப்போதும் காத்திருக்கிறேன்...இன்னொரு முகத்துக்காக. வெயில் சுட்டெரித்த பிரகாரத்தில் நெடுநேரம் விழுந்துகிடந்த ஒருத்தியின் பிரார்த்தனையை எழுத முடியாமல் நிற்கிறேன். சிறு நகரத்தின் பஸ் ஸ்டாண்டில், பை நிறைய குழந்தைகளின் பழைய செருப்புகளை அள்ளிக்கொண்டு நின்ற ஒரு பைத்தியக்காரனின் சிரிப்பைத் தொலைக்க முடியாமல் நிற்கிறேன்.

நிலத்தை விற்றுவிட்டு நகர்பெயரும் ஒரு விவசாயத் தகப்பனின் நினைவுகளுக்கு சொற்கள் இல்லாமல் நிற்கிறேன். மீள முடியாத அந்த

நாளில் இறந்துவிட்டதாய் காட்டப்பட்ட பிரபாகரனின் உறைந்த கண்களை என்ன செய்வதென்று தெரியாமல் நிற்கிறேன். மரக்கன்றுகள் விற்றபடி, ‘மக்கமாரே நல்ல ஊரே வத்தாது மழநீரே...’ எனப் பாடிப் போன ஒரு கிழவனின் குரலை எழுத வக்கற்று நிற்கிறேன். ஏதோ ஒரு பாடலில் சிலிர்த்த நினைவை, யாரோ தீர்த்துவைத்த பசியை, காரணமில்லாது வழிந்த கண்ணீரை, இலக்கற்ற ஒரு பயணத்தை, நோக்கமில்லாத ஓர் அன்பை... சொல்ல முடியாமல், சொல்லாமல் இருக்கவும் முடியாமல் நிற்கிறேன்.

தொடர்ந்து பொருள்வயிற் வாழ்வுக்கும் அதிகாரத்துக்கும் எதிரான மனநிலையிலேயே வாழும் ஜீவன் நான். அப்படியான உலகத்தில் ஒட்டாமல் எளிய மனசுகளை நோக்கியே ஓடிக்கொண்டு இருக்கிறது என் மனம். அதுதான் உண்மையான சந்தோஷமாக இருக்கிறது. எழுதுவதும், பேசுவதும், சினிமா எடுப்பதும் அந்த சந்தோஷத்துக்காக மட்டுமேதான். சக மானுடர்களின் அன்பும் அரசியலும்தான் எனது ஜீவனம்... இலக்கியம்... திரைப்படம்... எல்லாமே.

நாம் வாழ்கிற காலகட்டம் மிகவும் துன்பமும் குரூரமும் நிறைந்ததாக இருக்கிறது. கண்ணெதிரே ஈழப் போராட்டம் வீழ்ந்ததில் இருந்து லட்சம், கோடி ஊழல் வரைக்கும் இதுவரை காணாத அதிர்ச்சிகளை நாம்தான் சந்தித்தோம். அதே நேரத்தில் மக்கள் போராட்டங்களும், இணைய எழுச்சியும், இளைஞர்களின் புதுக் குரல்களும் நாளைய நம்பிக்கைகளுக்கான விளக்குகளை ஏற்றுகின்றன. இந்தக் காலகட்டத்தின், ஒரு முதல் தலைமுறை சாமான்ய இளைஞனின் குறிப்புகளாக ‘வட்டியும் முதலும்’ இருக்கும் என நம்புகிறேன்.

‘வட்டியும் முதலும்’ விகடனில் தொடராக வர முழுமுதற் காரணம் கண்ணன் சார். ‘டேய், நீ ஒரு தொடர் எழுதேன்டா...’ என ஒரு சந்திப்பில் அவர்தான் இதற்கு விதை போட்டது. அவர்தான் எனது எழுத்துகளுக்கு வாத்தியார். இது அவர் போட்ட பாதை. அப்படியே அண்ணன்கள் சரவணனையும் யுகபாரதியையும் நெகிழ்வோடு நினைத்துக்கொள்கிறேன்.

தொடர் வந்தபோது அதற்காக மெனக்கெட்ட என் பிரியத்துக்கு உரிய அசோகன் சார், பாண்டியன் சார், கி.கார்த்திகேயன், இரா.சரவணன் மற்றும் விகடன் தோழர்களுக்கு நன்றிகள். இதை தன் ஓவியங்களால் உயரமாக்கிய நண்பர் ஹாசிப் கானுக்கும், நட்பைக் கொண்டாடும் என் பிரிய மச்சான்கள் பரமுவுக்கும் அருள் எழிலனுக்கும் என் அன்பு.

இதற்கான களத்தை அளித்த விகடன் எம்.டி. சீனிவாசன் சாருக்கும், எப்போதும் என்னை உற்சாகப்படுத்தும் எனது இயக்குநர் லிங்குசாமி சாருக்கும், இந்தத் தொடர் வந்தபோது ஒவ்வொரு வாரமும் மனம் பகிர்ந்த என் ஆதர்சங்களில் ஒருவரான வண்ணதாசன் சார், வேலூர் லிங்கம் அய்யா, நடிகர் சிவகுமார் சார்... இன்னும் ஏராளமான வாசகர்களுக்கு நன்றிகள்.

'வட்டியும் முதலும்' தொடருக்கு கிடைத்த வரவேற்பு நான் நினைத்துப் பார்க்காதது. 'ஒரு தொடருக்கு இவ்வளவு வரவேற்பா..!' என பிரமிக்க வைத்தது. எல்லாத் திசைகளில் இருந்தும் அவ்வளவு அழைப்புகள். கடல் கடந்த தமிழர்கள், ஈழத்தமிழர்கள் என அவ்வளவு குரல்கள். அவ்வளவு கண்ணீர்... சிரிப்பு... சினேகம்..! எல்லாவற்றுக்கும் காரணம், விகடன். அப்புறம், 'எப்பிடிங்க அப்படியே என் வாழ்க்கைய பக்கத்துலேருந்து பாத்த மாதிரியே எழுதறீங்க?' என்ற உங்களின் கேள்வி. இக்கணத்தின் ஒரு துளியும் நழுவிவிட்ட பெருநதியின் கரையில் விளையாடப்போன சிறுவன் வீடு திரும்பவில்லை. அந்தச் சிறுவன் நான்தான்... நாம்தான்!

பிரியங்களுடன்,

**ராஜுமுருகன்**

rrajumurugan@gmail.com

# 1

# மானுடத்தின் பொது மொழி, 'பசி'

**ப** சிதான் மானுடத்தின் பொது மொழி!

அது... சோழ நாட்டு விவசாயியை, துபாய் ஷேக்கின் ஆறாவது மனைவியின் பிள்ளைக்கு ஆயா வேலை பார்க்க அனுப்புகிறது. மேகாலயா சப்பை மூக்குப் பெண்ணை, வடபழனி சிம்ரன்ஸ் ஆப்பம் ரெஸ்டா ரென்ட்டில் தட்டு கழுவவிடுகிறது. சில வெள்ளிகளுக்கு, கடைசி விருந்தில் கர்த்தரைக் காட்டிக்கொடுக்கிறது. அஞ்சாறு வயசுத் தளிர்களை, சிக்னலில் நின்று ரைம்ஸ் புத்தகம் விற்கச் சொல்கிறது.

விஜய்க்கும் அஜீத்துக்கும் டூப் போட்டு, மூணாவது மாடியில் இருந்து தள்ளி, காலை உடைக்கிறது. டீச்சர் சாயலில் இருப்பவளை, செம்மொழிப் பூங்கா வாசலில் அம்பதுக்கும் நூறுக்கும் ஆள் பிடிக்க அலைக்கழிக்கிறது. உறவு வீடுகளிலேயே திருட வைக்கிறது. சென்ட்ரல் ஸ்டேஷன் வாசலில் கிட்னிக்கு ஆள் பிடிக்கவிடுகிறது.

பசி... காலத்தையும் கோலத்தையும் அரித்துக்கொண்டு, அழுகைக்கும் சிரிப்புக்கும் நடுவே ஊர்ந்துகொண்டே இருக்கும் நிதர்சனக் கரையான்!

எங்கள் ஊரில் ஒரு தம்பதி, 30 வருடங்களாக ஒரே வீட்டில் பேசிக்கொள்ளாமல், தனித்தனி அடுப்பில் சமைத்து, தனித்தனியே சாப்பிட்டு வாழ்ந்தார்கள். மூன்று பெண் பிள்ளைகளையும் ஓர் ஆண் பிள்ளையையும் கட்டிக்கொடுத்து அனுப்பிவிட்டு, இப்படி ஒரு வாழ்க்கை. ஏதோ ஒரு பசிப் பொழுதில் சாப்பாடு போட்டுவிட்டு மனைவி சொன்ன

சொல்... அந்த மனுஷனுக்குத் தாங்கவில்லை. செருவாடாகச் சேர்த்துவைத்த பொம்பளை கோபம் பொசுக்கென்று அவிழ்ந்தபோது, ஆம்பளைக்குத் தாங்கவில்லை. 30 வருடங்கள் தனித்து, பசித்து, உண்டு, உறங்கும் வாழ்க்கையை ஒரு சொல் உருவாக்கியது எப்படி?

இருவரில் கணவர்தான் முதலில் செத்துப்போனார். அவர் கருமாதியில் கறிச் சோறு சாப்பிட்டுவிட்டு கொல்லைக்குக் கை கழுவப் போகும்போது, பின்கட்டில் இலை நிரம்பிய படையல் சாப்பாட்டை வெறித்துப் பார்த்தபடி அந்த அம்மா உட்கார்ந்து இருந்ததும்... பக்கத்தில் கறுப்பு — வெள்ளை புகைப்படத்தில் அவர் ஈட்டி மீசையோடு புன்னகைத்ததும்... இப்போதும் முடிவற்ற நினைவுகளை நோக்கித் தள்ளுகிறது.

பசி என்றால்... வெறும் வயிற்றுப் பசி மட்டும்தானா? இல்லை. பசி உருவாக்கும் புன்னகையும், துயரமும், நன்றியும், துரோகமும், காற்றைப்போல எங்கெங்கும் நிறைந்துகிடக்கின்றன!

மானுடத்தின் பொது மொழி பசி என்றால், பசியின் மொழி எது?

பசியின் மொழி கண்ணீர் என்பதை உலகுக்கு அறிவித்தபடிதான் பிறக்கின்றன ஒவ்வோர் உயிரும். ‘உனது பசியை நான் உணர்ந்துகொள்கிறேன்’ என்ற தாய்மையின் கருணையில்தான் தொடங்குகிறது ஒவ்வொருவருக்குமான உலகம். ஆனாலும், ஏன் பிறர் பசியைப் பலரும் உணர மறுக்கிறோம்?

**செ** ன்னை வந்த புதிதில், ஒரு முறை ஊருக்குப் போய்விட்டு ரயிலில் திரும்பினேன். அதிகாலை 4 மணிக்கு ரயில் நிலையத்தில் இறங்கி பஸ் ஸ்டாண்டுக்குத் தண்டவாளம் வழியாக இருட்டில் நடக்கையில், திடீரென ஓர் உருவம் முன்வந்து நின்றது. கைலி, சட்டையில் கெச்சலாக ஒருவன். கத்தியை எடுத்து முகத்துக்கு நேராக ஆட்டினான்.

‘‘துட்ட எடு... ம்ம்...’’

இருந்த 120 ரூபாயையும் எடுத்துக் கொடுத்தேன். பேக்கில் இருந்த 2 செட் பேன்ட் — சட்டை, 200 ரூபாய்க்கு வாங்கிய எலக்ட்ரானிக் வாட்ச் என எல்லாவற்றையும் சுருட்டிக்கொண்டான்.

‘‘திரும்பிப் பார்க்காமப் போயிட்டே இரு..." என்று முதுகில் கைவைத்துத் தள்ளிவிட்டான். பயத்தில் இருந்த நான் திரும்பிக் கொஞ்ச தூரம் நடந்தபோது, அவனே கூப்பிட்டான்.

‘‘அலோ... அலோ...’’

‘‘சத்தியமா எங்கிட்ட வேற ஒண்ணும் இல்லைங்க...’’

‘‘இந்தா, இதுல 20 ரூவா இருக்கு. காலைல டிபன் பண்ணிக்க... சாப்புடாம சாபம் வுட்டா, எம் பொழப்பு நாறிரும்.’’

நிச்சயமாக, அவன் வாழ்க்கையில் பசியை அதி தீவிரமாக உணர்ந்தவனாக இருப்பான். குடல் சுருங்கித் துடித்து, ஒரு வேளை சோற்றுக்கு செத்துச் சுண்ணாம்பாகி இருப்பான்.

இப்போதும் ஒரு வேளை சாப்பாடு மட்டுமே இலக்காக, வாழ்க்கையாக எண்ணி எத்தனை பேர் அலைகிறார்கள்! முருகன் கோயில் வாசலிலும், சாய்பாபா கோயில் திண்டிலும் சாப்பிட்டு முடித்த நிம்மதியில் எத்தனை பேர், எவ்வளவு நிம்மதியாகத் தூங்குகிறார்கள். ‘பாய்ஸ்’ பட செந்தில் மாதிரி, எந்த எந்த இடங்களில் என்ன என்ன சாப்பாடு கிடைக்கும் என லிஸ்ட் போட்டுக்கொண்டு எவ்வளவு பேர் வாழ்கிறார்கள்.

பிறந்த நாளைக்கும் கல்யாண நாளைக்கும் வசதியானவர்கள் போடும் அன்னதானத்தில் வயிறு கழுவிக்கொள்பவர்கள் எவ்வளவு பேர்! கையில் காசே இல்லாத கடும் பசியான தருணங்களில், அக்கம் பக்கத்துக் கல்யாண மண்டபங்களில் கேசரியோடு டிபனோ, ஐஸ்க்ரீமோடு விருந்தோ நானும் ருசித்தது உண்டு. வேலை செய்யும் வீட்டில் மீந்ததை முந்தியில் மறைத்துக்கொண்டு வரும் அம்மாக்களுக்காக இன்னும் எத்தனை பிள்ளைகள் காத்திருக்கிறார்கள்.

இப்போதும் ஹோட்டல் வாசல்களில், சாலை ஓரங்களில் எச்சில் உணவுகளைப் பொறுக்கித் தின்னும் மனிதர்களை, இயர்ஃபோனில் பேசிக்கொண்டு, எஃப்.எம். கேட்டுக்கொண்டு எவ்வளவு இலகுவாகக் கடந்துவிடுகிறோம். பஃபே சாப்பாடுகள்கொட்டப்படும் தெருக்களில் பசியில் விழித்து இருப்பவர்கள்தான் எத்தனை பேர்!

**தி** ருவல்லிக்கேணி விநாயகா மேன்ஷனில் தங்கியிருந்தபோது, என் பக்கத்து ரூம்காரன் சசி, அவ்வப்போது ஏதாவது வேலை பார்ப்பான். திடுதிப்பென்று வேலை இல்லாமல், அறையிலேயே முடங்கிக் கிடப்பான். இருக்கிற காசுக்கு ரெண்டு பேருமாகப் பகிர்ந்து தின்று வாழ்ந்தோம்.



அங்கே இருந்து நான் வெளியேறிய சில மாதங்களுக்குப் பிறகு, ஒரு நாள் சசியைப் பார்க்கப் போனேன். அறையில் அழுக்குத் துணிகளுக்கு நடுவே சுருண்டு முனகிக்கிடந்தான். பதறிப்போய்த் தொட்டுப் பார்த்தால்... காய்ச்சல்.

‘‘சசி... சசி... என்னாச்சு மாப்ள..?’’

‘‘சாப்பிடலை மச்சான்...’’

‘‘மதியம் சாப்பிடாம, அப்பிடி என்ன புடுங்கற வேலை உனக்கு..?’’

‘‘இல்லடா... மூணு நாளா சாப்பிடலை.’’

எனக்குப் பகீரென்றது. என் கையிலும் காசு இல்லை. ஏதோ கோபம், கழிவிரக்கம்... யாரிடமும் எதுவும் சொல்லாமல், மூன்று நாட்களாகச் சாப்பிடாமல் கிடக்கிறான். அவனை எழுப்பி இரவுச் சாப்பாட்டுக்கு கொளத்தூரில் இருந்த என் அத்தை வீட்டுக்கு அழைத்துப் போனேன். அத்தை வீட்டில் சமைத்து முடித்து சாப்பிடக் கூப்பிடும்போது, ‘‘பரவாயில்லைங்க... போகும்போது பார்த்துக்குறோம்’’ என நெளிந்த சசியை, இலையை நோக்கி நெட்டித் தள்ளினேன்.

சாப்பாடு, கூட்டு, பொரியல் என இலை முழுக்க பலவகை உணவு. உட்கார்ந்து ஒரு வாய் அள்ளி வைத்தவன், கரகரவென அழ ஆரம்பித்துவிட்டான். எதுவும் புரியாமல் அத்தை பதற, தடாலென எழுந்து வெளியே ஓடிவிட்டான். நான் பின்னாலேயே துரத்தி வந்தால், ரெட்டேரி பாலத்தில் நின்று தேம்பித் தேம்பி அழுகிறான்.



‘‘வேணாம் மச்சான்... நா கௌம்பறேன். எனக்கு என்னவோ மாதிரியிருக்கு...’’

‘‘லூஸுப் பயலே... என்னாச்சுரா?’’

‘‘முதல்ல என்னை விடுறா...’’

அத்தை வீட்டில் இருந்து கேரியரில் சாப்பாடு எடுத்துவந்து, மேன்ஷனில் அவனைச் சாப்பிடவைத்துவிட்டு வந்தேன். அந்த ஒரு வாய் சாப்பாடு அவனுக்கு... அம்மாவை, அப்பாவை, ஊரை, காதலியை, இழந்ததை, தவறுகளை, லட்சியத்தை... எதை எதையோ நினைவுபடுத்தியது. பசி ஏற்படுத்தும் அவமானத்தையும் வலியையும்விட வலியது வேறு இல்லை. பசியைத் தீர்ப்பது ஒரே ஒரு கனிதான்... ஆனால், அதற்காக நாம் கடப்பது ஒரு வனம்!

அதன் பிறகு, பெரிய நிறுவனம் ஒன்றில் சேல்ஸ்மேனாகச் சேர்ந்து, எனக்கும் இன்னும் பலருக்கும் சில பல வருடங்களுக்கு சசிதான் சாப்பாடு போட்டான். இப்போது ஃபேஸ்புக் போட்டோவில் நியூஜெர்ஸியில் ஜெர்கினுடன் கார் ஓட்டியபடி சிரிக்கிறான்!

**போ** ன வருடம் தஞ்சாவூர் போயிருந்தபோது, திலகர் திடலில் சர்க்கஸ் போட்டு இருந்தார்கள். சர்க்கஸுக்கு வந்திருந்த ஒட்டகச் சிவிங்கிக் குட்டி ஒன்று சீரியஸாகிவிட்டது. மாட்டு டாக்டரான நண்பனுடன் போயிருந்தேன். அந்த ஒட்டகச் சிவிங்கி மூக்கில் திரவமாக வழிய, சாவதற்காகவே படைக்கப்படும் செகண்ட் ஹீரோயின் மாதிரி கிடந்தது.

சர்க்கஸ் முதலாளி பதற்றமாகப் பேசினார்... ‘‘எவ்வளவோ சொன்னேன் சார். புரியாத பிராணில்லாம் வேணாம் வேணாம்னு... எம் பையன், அவன் ஒரு பிராந்து... சர்க்கஸை வளர்க்குறேனு இதுகளைக் கொண்டாந்தான். அம்மே, குட்டி ரெண்டையும் கொண்டாந்தான். இதுக என்ன சாப்புடும்... என்ன... ஏதுன்னு ஒரு மண்ணும் அறியல. புல்லு கில்லுனு என்ன போட்டாலும், மொனங்கிக்கிட்டே கெடக்கும். அம்மே ஒரு வாரத்துக்கெல்லாம் சாப்புடாமக் கொள்ளாம போய்ச் சேர்ந்துருச்சு. அது இருந்தாலாவது, இது எதாவது சாப்புடும்... இப்போ இதுக்கும் இழுத்துக்கிட்டு இருக்கு.’’

அந்த ஒட்டகச் சிவிங்கிக் குட்டி பாவமாகப் பார்த்தது. அதன் கண்களில் ஏழு பிறவிகளுக்கான பசி உருண்டது. எந்த வனத்திலோ பிறந்து, இரைப்பை சுமந்து, தஞ்சாவூர் திலகர் திடலில் பசித்துக்கிடக்கும் பரிதாபத்தை அதற்கு அருளியது யார்? பசியும் ஆசையும் உயிர்களை ஒரே பாதையில் துரத்திக்கொண்டே இருப்பது ஏன்? அந்த இரவில், ஏராளமான கேள்விகள் கிளர்ந்துகொண்டே இருந்தன. இப்போது அந்த ஒட்டகச் சிவிங்கி செத்துப்போய்இருக்கும். அதன் பசித்த ஆன்மா, சர்க்கஸ் கம்பெனி யானைக்குள் புகுந்து, ஓனர் பையனை ஒருநாள் தூக்கிப் போட்டு மிதிக்கவும் கூடும்!

ஒரு வகையில், இன்றும் இந்த உலகம் ஒரு சர்க்கஸ் கூடாரமாகவும், எளிய மனிதர்கள் ஒட்டகச் சிவிங்கிகளாகவும்தானே இருக்கிறார்கள்?

சோமாலியாவில் பசியால் சாகக்கிடக்கும் குழந்தையைத் தின்னக் காத்திருக்கும் அந்தக் கழுகையும் காட்சியையும் புகைப்படம் எடுத்தவர், அந்தக் குற்ற உணர்விலேயே மனநலம் தவறித் தற்கொலை செய்து செத்துப்போனார். இதைப் பசியின் துர்சாபம் என்று சொல்லுங்கள்.

உலகின் ஆதி இனம்... விதைத்து, அறுத்து, உழைத்துத் தின்னும் கலாசாரத்தை உருவாக்கிய இனத்தை... முள்வேலி முகாம்களில், வதைக் கூடங்களில், நிலம் இழந்த துயரப் பரப்புகளில், பசியின் உதிரம் பெருகப் பெருக அலையவிட்ட வரலாற்றை எந்தச் சாபம் தண்டிக்கப்போகிறது?

‘உங்கள் நண்பன்... உங்கள் சொந்தக்காரன்’ என ராஜபக்ஷேவின் புகைப்படம் போடப்பட்ட போஸ்டர்கள் ஒட்டிக்கிடக்கும் யாழ் மண்ணில், இன்று பசியையும் வலியையும் தவிர, எதுவும் இல்லை. ஒரு வேளை உணவுக்காக, திருட்டையும் விபசாரத்தையும் ஒரு வாழ்நிலத்தில் பரப்புகிறது அதிகார வர்க்கம்.

எனில், அதிகாரத்துக்கு எளியவர்களின் பசிதான் எப்போதும் சாப்பாடு. ஆனால், தாய் முலை இழந்த ஒரு சிறுபிள்ளையின் பசி தீரவே தீராது. அது அதிகாரத்தை என்றேனும் ஒருநாள், கொன்று தின்றுதான் தன் பசியைத் தீர்த்துக்கொள்ளும். அதிகாரமே... அதனிடம் இருந்து நீ தப்பவே முடியாது!

ஒரு ரெஸ்டாரென்ட்டில் சாப்பிடும்போது பக்கத்து டேபிளில் சாப்பிட்டு முடித்த ஒரு குடும்பம் சர்வரைக் கூப்பிட்டு, ‘டாக் பார்சல்’ என்றது.

அப்போதுதான் நான் அந்த வார்த்தையையே கேள்விப்பட்டேன். சாப்பிட்டு முடித்து மீதி இருந்தால் வீட்டில் உள்ள நாய்களுக்காம்... ‘டாக் பார்சல்.’ கொடுத்துவைத்த நாய்கள்.

இதைப் பார்த்துக்கொண்டு இருந்த நான், ‘‘ரெண்டு முட்டை பரோட்டா... லயன் பார்சல் பண்ணிருங்கண்ணே..." என்றேன்.

‘‘என்னங்க? லயன் பார்சலா?’’

‘‘ஆமா... என் ரூம்ல ரெண்டு சிங்கம் சாப்பிடாமக் கெடக்கு!’’

# 2

# பெண் மனசு

*‘**பெ** ண் மனசு ஆழமுன்னு ஆம்பளைக்குத் தெரியும்,*

*அது பொம்பளைக்கும் தெரியும்,*

*அந்த ஆழத்துல என்ன உண்டு யாருக்குத்தான் தெரியும்?’*

— ஒரு நாள் அதிகாலை 5 மணிக்கு, பக்கத்து டீக்கடைக்குப் போனபோது, யாரோ ஒருவர் சத்தமாகப் பாடிக்கொண்டு இருந்தார்.

ஒயின் ஷாப்புகளில் இந்தப் பாடலை வெகு ஆத்மார்த்தமாக பாடும் பலரைப் பார்த்து இருக்கிறேன். இப்படி அதிகாலை தேநீர் கடையில் ஒருவர் உலகம் மறந்து பாடுவதைப் பார்க்க விசித்திரமாக இருந்தது.

அப்போது இருந்து ‘பெண் மனசு’ என்ற வார்த்தை என்னைத் தொந்தரவு செய்துகொண்டே இருக்கிறது. அந்தச் சிறு சொல் முன்னும் பின்னுமாக ஏராளமான நினைவுக் கண்ணிகளைக் கோத்துக்கொண்டு பிரமாண்டமாக எழுந்து நிற்கிறது.

*‘தாயும் பகை; கொண்ட பெண்டீர் பெரும்பகை; தன்னுடைய*
*சேயும் பகை; யுறவோரும் பகை; யிச்செகமும் பகை;*

*ஆயும் பொழுதி லருஞ்செல்வம் நீங்கில்! இக்காதலினாற்*
*தோயுநெஞ்சே, மருதீசர் பொற்பாதஞ் சுதந்திரமே’*

— இது பட்டினத்தார் பாட்டு. ஆட்டம் எல்லாம் முடிந்து, அனைத்தையும் புறந்தள்ளி இறைவனின் பாதங்களில் சரண் அடையப் போகும்போது இந்தப் புலம்பல். தேடலின் முடிவில் எல்லாவற்றையும் பகை என்பவர், கொண்ட பெண்டீரைப் பெரும் பகை என்பது ஏன்?

*‘பெண்மைக்குள் உண்மை எது... பொய்மை எது? புரியாத சிறுவனடி நான்’* என, கண்ணதாசனைப் புலம்பவிட்டது எது? பாரதியை, செல்லம்மா புரிந்துகொண்ட அளவுக்கு, செல்லம்மாவை பாரதி புரிந்துகொண்டாரா? மாபெரும் ஓர் இயக்கமே உடைகிற நிலையில், அந்த வயதில் மணியம்மையை, பெரியார் கைப்பிடிக்க வைத்த தருணம் எது?

**சி** ல வருடங்களுக்கு முன்பு நண்பன் ஒருவனின் அம்மா, அபார்ட்மென்ட் படிக்கட்டில் வழுக்கி விழுந்துவிட்டார். 70 வயதுப் பெரியம்மாவான அவரின் இடுப்பு எலும்பு உடைந்து விட்டது. ஸ்டான்லி மருத்துவமனையில் ஆபரேஷன் நடந்தது. நண்பன், பணத்துக்கு அங்கே இங்கே என அலைந்ததால் நான்தான் பக்கத்தில் இருந்து பார்த்துக்கொண்டேன். ஆபரேஷன் முடிந்து அரை மயக்கத்தில் அவரைப் படுக்கையில் கொண்டுவந்து போட்டார்கள்.

‘‘பாட்டிக்கு அனஸ்தீஸியா கொடுத்திருக்கு... பழைய ஞாபகம் எல்லாம் வரும். கொஞ்ச நேரம் ஏதாவது பொலம்பிட்டு இருப்பாங்க...’’ என்று சொல்லிவிட்டுப் போனார் நர்ஸ். நான் பக்கத்தில் உட்கார்ந்து, அம்மாவையே பார்த்துக்கொண்டு இருந்தேன்.

சன்னமான குரலில் ஏதேதோ முனகிக்கொண்டு இருந்தவர், சட்டென்று சத்தமாக... ''ஒரே ஒரு முத்தம் கேட்டான். பாவிப்பய... ஒரே ஒரு முத்தம் கேட்டான்... தராம வுட்டுட்டேன். போடி... போடி... அய்யோ... ஒரே ஒரு முத்தம் கேட்டான்'' — எனக் காற்றில் கை வீசியபடி புலம்ப ஆரம்பித்தார். இடைவெளி விட்டு விட்டுச் சில நிமிடங்கள் வரை இதையே சொல்லிவிட்டு மெதுவாகத் தூங்கிப்போனார்.

எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. 70 வயதில் அனஸ்தீஸியா கொடுக்கப்பட்ட ஒரு பாட்டி, தன் நினைவு அடுக்குகளில் சஞ்சரித்து ஒரு முத்தத்தைப் பற்றிப் பேசுவது, சொல்ல முடியாத உணர்வுகளை ஏற்படுத்தியது. எப்போதைய நினைவு அது? அந்த முத்தம் யாருக்கானது? கொடுக்கப்படாத ஒரு முத்தத்தை எவ்வளவு காலமாகக் கனவுகளில் சுமக்கிறாள் இந்த மூதாட்டி?



கொடுக்க முடியாத ஒரு முத்தம், தீண்டல், வார்த்தை, காமம், தாய்மை எல்லா பெண்களிடமும் இருக்கின்றனவா? அழகும் திடமும் அத்தனையும் உதிர்ந்துவிட்ட பிறகு, மரணத்தின் நிழல் படிந்த அந்திமத்தின் தெருவில் மனம் எங்கும் கனக்கும் ரகசியங்களோடு எத்தனை எத்தனை பெண்கள் செத்துப்போகக் காத்திருக்கிறார்கள் என, ஏராளமான கேள்விகளை எழுப்பியது அந்த நிகழ்வு.

**இ**ன்னொரு முறை ஒரு மருத்துவமனைக்குப் போயிருந்தபோது, ஒருவர் தன் மனைவியை அபார்ஷனுக்காக அழைத்து வந்திருந்தார். கருவைச் சுமக்கிற தெம்பு அவர் உடலில் இல்லை. அபார்ஷன் முடிந்து அனஸ்தீஸியா கொடுக்கப்பட்ட நிலையில் அந்தப் பெண்ணை அறைக்குக் கொண்டுவந்தார்கள்.

உள்ளே ஓடிய கணவரை மறித்து டாக்டர் சொன்னார், ''சார்... அவங்களுக்கு அனஸ்தீஸியா கொடுத்திருக்கு. உங்களைத்தான் நல்லா திட்டுவாங்க. கொஞ்ச நேரத்துல சரியாகிடும்.''

அவர் உள்ளே ஓடினார்.

நான் டாக்டரிடம் கேட்டேன், ''ஏன் டாக்டர் அப்படி?''

''அப்படித்தான் சார்... அபார்ட் பண்ண பிறகு அவங்களுக்கு நிறைய வலி இருக்கும். எல்லாத்துக்கும் ஹஸ்பண்ட்தானே காரணம்னு சப்கான்ஸியஸ்ல இருக்கும். ஏதாவது திட்டிப் புலம்பிட்டே இருப்பாங்க!''

கொஞ்ச நேரம் கழித்து வந்த அந்த நபர், ''ஆமா டாக்டர்... ஏதேதோ சொல்லித் திட்றா. பார்க்கவே கஷ்டமா இருக்கு... வலி குறைஞ்சிரும்ல டாக்டர்!'' என்றார்.

சிறிது நேரத்தில் மனைவியைத் தோளில் சாய்த்தபடி அந்தக் கணவர் நீண்ட வராந்தாவில் நடந்து சென்ற காட்சி என் மனதில் ஒரு நிழல் புகைப்படமாகிவிட்டது.

இதைப்பற்றி அப்பாவான நண்பர் ஒருவரிடம் சொன்னபோது சொன்னார், ''அடப் போடா... சுகப்பிரசவம்னாலே, பிரசவ நேரத்துல வலி தாங்க முடியாம புருஷனைக் காய்ச்சி எடுத்துருவாளுங்க. எம் பொண்டாட்டில்லாம் என்னைப் 'போடா... வாடா'னு ஏசித் தள்ளிட்டா. அப்பத்தான் தெரிஞ்சுது, பொம்பளைங்க வலியை நம்மளால காலத்துக்கும் புரிஞ்சுக்க முடியாது சாமீ!''

அந்தக் கணம் தோன்றியது... பெண்களின் சப்கான்சியஸில் இன்னும் எவ்வளவு அன்பு இருக்கும்..? இன்னும் எவ்வளவு கோபம் இருக்கும்?

**வ** சந்தா அத்தை... எங்க ஏரியா கவுன்சிலர். அது பெண்களுக்கான வார்டு என்பதால், அ.தி.மு.க. லோக்கல் புள்ளியான மாமா, அத்தையை நிறுத்தி கவுன்சிலராக்கிவிட்டார். இரண்டு முறை 'கோழி' சின்னத்தில் அத்தை ஏகப்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயித்து கவுன்சிலராக வந்தது. நிறைய இடங்களைப்போலவே இங்கும் பேருக்குத்தான் அத்தை கவுன்சிலர், அதிகாரம் எல்லாம் மாமாதான்.

பஞ்சாயத்து போர்டு மீட்டிங்குகளுக்கு மட்டும்தான் அத்தை போகும். முந்தியை இழுத்து இழுத்துச் செருகிக்கொண்டே வேடிக்கை பார்த்துவிட்டு, கையெழுத்து போட்டுவிட்டு வரும். மற்றபடி காலையில் திண்ணையில் குத்தவைக்கிற பஞ்சாயத்தில் இருந்து, நிதி தள்ளுவது வரை கவுன்சிலர் வேலை அத்தனையும் செய்வது மாமாதான்.

பழ வாசம் வீச வீச... மாமா எப்போதும் லோக்கல் பிரச்னைகளில் பிஸியாகத் திரிவார். அத்தை, மகமாயிக்கு மாவிளக்கு போட்டு, பிள்ளைகளுக்கு ஈருளியில் பேன் எடுத்து, பால் டிப்போவில் பேரம் பேசி, சீரியல் பார்த்து... வாழ்ந்தது. எப்போதாவது பக்கத்து டவுனுக்கு கட்சிப் புள்ளிகள் வந்தால், அத்தைக்கு கட்சிக் கரைப் புடவை கட்டிக் கொண்டுபோய் நிறுத்திவிடுவார் மாமா.

''அங்கே போய் என்ன பேசுவீங்க அத்த..?'' என்றால், ''போடா, அந்தப் பொசகெட்ட பயலுவள்ட்ட நான் என்னா பேசுறது?'' எனச் சிரிக்கும். மாமாவோடு தஞ்சாவூர் கலெக்டர் ஆபீஸுக்குப் போய்விட்டு வரும் தினங்களில், கூடை நிறைய மாம்பழமும் 'பாம்பே ஸ்வீட்ஸ்' அசோகா அல்வாவும் வாங்கி வரும்.

போன வருஷம் மாமா செத்துப்போனார். திடுதிப் என்று ஓர் அதிகாலையில் நெஞ்சு வலி வந்து தஞ்சாவூர் பெரியாஸ்பத்திரிக்குப் போனவர்; அப்படியே போய்விட்டார். கட்சிக் கொடி போர்த்தப்பட்டு,

கரகாட்டம் பின்னி எடுக்க, சந்திக்கரையில் அத்தை 'மடேர் மடேர்' என நெஞ்சில் அறைந்து அழ... மாமா குட் பை சொன்னார்.

அடுத்த மாதம் திண்ணையில் கிடந்த மாமாவின் நாற்காலியில் அத்தை வந்து உட்கார்ந்தது. உண்மையில் அது அற்புதமான காட்சி. குளம் தூர் வாருவதற்காக வந்த வசூல் பணத்தை வைத்துக்கொண்டு, ஊர்க்காரர்களிடம் அத்தை பஞ்சாயத்து பேசியபோது, ஊரே திகைத்து நின்றது. அன்று முதல் அத்தைதான் நிஜமாகவே கவுன்சிலர். பஞ்சாயத்து போர்டில் இருந்து கலெக்டர் ஆபீஸ் வரை ஒத்தை ஆளாகப் போய் வந்ததையும், அங்கே பேசியதையும் பல பேர் கதை கதையாக இப்போது பேசுகிறார்கள்.

இலவச கலர் டி.வி. கொடுக்கும்போது வந்த தகராறில், புடவையை வரிந்து கட்டிக்கொண்டு தெருவில் இறங்கிக் கத்தியபோது, ஊரில் அத்தனை ஆண்களும் அடங்கிப்போனார்கள். 'திண்ணையில் உட்கார்ந்து மாமா கத்தும்போது, கொல்லையில் மீன் ஆய்ந்துகொண்டு இருந்த அத்தையா இது?!' என, இப்போதும் ஆச்சர்யமாக இருக்கிறது. அத்தைகளைப் புரிந்துகொள்வதற்கு மாமாக்கள் உயிருடன் இருப்பதில்லை!

**'பி** ள்ளைகள் தூங்கிவிட்டன' என்ற நினைப்பில் நாங்கள் விழித்து இருப்பது தெரியாமல், என் அம்மா எப்போதும் பின்னிரவுக்குப் பின்தான் அப்பாவோடு சண்டை போடும். ஒரு முறை 'உங்களுக்கு என்ன பழக்கம்தான் இல்லை?' என்று அம்மா சொன்ன பட்டியல், இப்போதும் என் தூக்கத்தைக் கலைத்துப் போடுகிறது. இப்போது வரை இப்படி எத்தனை ரகசியங்களை அம்மாவின் மனசு பூட்டிவைத்து இருக்கிறதோ?

வனிதா அக்கா, ஒரு முறை எதற்காகத் தற்கொலை முயற்சி செய்தது என, அவள் புருஷனுக்கே இன்று வரை தெரியவில்லை. காதலனுடன் சில வருடங்கள் 'லிவிங் டு கெதர்' வாழ்ந்த கலகலப்பான தோழி, அவனுடன் சண்டை வந்து, எங்கோ டெல்லி பக்கம் ஒருவரைக் கல்யாணம் பண்ணிக்கொண்டு போய், இன்று வரை யாருடனும் எந்தத் தொடர்பும் இல்லாமல் இருக்கிறாள்.

கல்யாணமாகி 20 வருடங்களாகக் குழந்தை இல்லாத விமலா அத்தை... ஊரில் திரியும் அத்தனை குழந்தைகளையும் மடியில் போட்டுக் கொஞ்சும். விமலா அத்தையின் கண்களில் ஆயிரமாயிரம் குழந்தைகள் சிரிப்பதை யார் அறிவார்?

மாதா கோயில் ஹாஸ்டலில் எப்போது போனாலும் வீடியோவில் ‘மரோசரித்ரா’ படத்தை ரசித்து ரசித்துப் பார்த்துக்கொண்டு இருக்கும் லீமா சிஸ்டர் எதற்காக கன்னியா ஸ்திரி ஆனார்?

இள வயதில் கணவனை இழந்து ஒற்றை ஆளாக நின்று பிள்ளைகளை ஆளாக்கும் தாய்களை, பிறந்து வளர்ந்த மண்ணில் இருந்து ஒரே நாளில் பிடுங்கிக்கொண்டு எங்கோ ஊன்றி விருட்சமாகும் சகோதரிகளை, அழுக்கு கைப்பை நிறையக் கனவுகளோடு எக்ஸ்போர்ட் கம்பெனிகளில் தேய்ந்து கருகும் தோழிகளை, பெரும் குடும்பத்தைத் தோளில் சுமந்துகொண்டு மிகப் பெரிய அரசுப் பொறுப்புகளில் சர்வீஸ் கமிஷன் துறைகளில் அவமானங்களையும் வலிகளையும் பொறுத்து முட்டி முளைக்கும் உழைக்கும் பெண்மணிகள்... என எவ்வளவு பேரைப் பார்க்கிறோம்.

ஜெயலலிதா, மாயாவதி, மம்தா பானர்ஜி என, இன்றைக்கு இந்தியாவின் மூன்று பெண் முதல் அமைச்சர்களும், கல்யாணம் பண்ணிக்கொள்ளாத தனி நபர்கள் என்பது ஆச்சர்யமான ஒற்றுமை! இந்த இடத்துக்கு இவர்கள் கடந்து வந்த பயணம் எவ்வளவு வலி மிகுந்தது என்பதை அவர்களே அறிவார்கள்.

வனங்களை, மிருகங்களைக் கடந்த பயணம் இருக்கிறது ஒவ்வொரு பெண்ணின் மனதிலும்!



பழைய வகுப்புத் தோழி, தன் குழந்தையின் பிறந்த நாளைக்கு அழைத்து இருந்தாள். புறநகரில் இருக்கும் அவள் வீட்டில் என்னையும் சேர்த்து ஏழு பேர்தான் இருந்தோம். அவளது அப்பா உள் அறையில் உட்கார்ந்து ஏதோ படித்துக்கொண்டு இருந்தார். அவளே பலூன்களை ஊதிக் கட்டி, கொதித்துக்கொண்டு இருந்த பாயசத்தை இறக்கி, குழந்தைக்குப் புது டிரெஸ் போட்டு, கேக் வெட்டவைத்தாள்.

டி.வி. மேல் இருந்த புகைப்படத்தில் அவளும் அவள் கணவனும் குழந்தையோடு சிரித்துக்கொண்டு இருந்தார்கள். குழந்தை மெழுகுவத்தியை ஊதி அணைத்து, கேக் வெட்டி, மொபைலில் போட்டோக்கள் எடுத்து... என்னை வழியனுப்ப வெளியே வந்தாள் தோழி. உள்ளே பிளாஸ்டிக் பூவில் சுழலும் மெழுகுவத்தியோடு குழந்தை தனியே விளையாடிக்கொண்டு இருந்தது.

‘‘ஏம்மா... உன் ஹஸ்பண்ட் எங்கே..?’’

‘‘ஓ... உனக்குத் தெரியாதுல்ல. நாங்க இப்போ தனித் தனியாத்தான் இருக்கோம்!’’

‘‘ஏன்..?’’

‘‘அவனால எங்களுக்கு டைம் ஸ்பெண்ட் பண்ண முடியலைடா. அவனுக்கு அது பிடிக்கலையானும் புரியலை. நிறையப் பிரச்னை. டைவர்ஸ் அப்ளை பண்ணலாமானு யோசிக்கிறோம். நிஜமா என்ன பண்றதுன்னே எனக்குத் தெரியலை முருகா!’’

‘‘என்ன இது... முதல்ல ரெண்டு பேரும் உட்கார்ந்து பேசுங்கம்மா!’’

‘‘இல்லப்பா... நிறையப் பேசியாச்சு. இப்போதைக்கு எந்த முடிவும் வரலை!’’ கொஞ்ச நேரம் உள்ளே விளையாடும் குழந்தையையே பார்த்துவிட்டுத் திரும்பியவள், ‘‘எங்க அப்பா, இவன்... யாரையுமே என்னால புரிஞ்சுக்க முடியலை. இந்த ஆம்பளைங்க ஏன் இப்பிடி இருக்காங்க..?’’ என்று கேட்டாள்.

கண்ணீர் உடையும் ஒரு பெண்ணின் கேள்வி, என்னை அங்கே இருந்து துரத்தியது.

வரும்போது தோன்றியது... ‘இங்கே ஏராளமான பெண் பட்டினத்தார்கள் இருக்கிறார்கள். அத்தனை பேருக்கும் அனஸ்தீஸியா கொடுத்தால்... உலகத்தில் ஓர் ஆணும் வாழ முடியாது!’

# 3

# ஒரு நாள், ஒரு சாமான்யன், பல அதிர்ச்சி!

**‘அ** திர்ச்சி’ என்ற சொல்லுக்கு இப்போது அர்த்தமே இல்லை! ஒரு சாமான்யன், ஒரு நாளைக்கு எத்தனை முறைதான் அதிர்ச்சியாவது?

நேற்று கோயம்பேட்டைக் கடக்கும்போது, ‘வெள்ளை காமராஜர் சரத்குமார் அழைக்கிறார்...’ என சுவரில் எழுதி இருந்தார்கள். பக்கத்திலேயே ‘கறுப்பு சே குவேரா’ திருமாவளவன். உச்சமாக, சுபாஷ் சந்திரபோஸ் கழுத்தில் கருணாஸ். மட்ட மத்தியானம், பேலன்ஸ் இல்லாத மொபைலுக்கு, ‘உங்களோடு பேச அழகிய இளம் பெண்கள் காத்திருக்கிறார்கள். செக்ஸி மற்றும் ஹோம்லி’ என எந்த நாய் மெசேஜ் அனுப்புவது?

பிரபுதேவா — நயன்தாரா காதல் பற்றி தங்கர்பச்சானிடம் எதற்கு கருத்துக் கேட்கிறார்கள்? பாரதிராஜா படத்தில் மாட்டு டாக்டர், வாத்தியார் கேரக்டர்களில் வரும் ராஜா மாதிரி, உத்தரப்பிரதேசக் கிராமங்களில் திரியும் ராகுல் காந்திதான் நம் அடுத்த பிரதமரா? எங்கெங்கும் பிதுக்கப்பட்டுக் கிடக்கும் வாட்டர் பாக்கெட்டுகளால் இந்த மண் அடையும் அதிர்ச்சியை நம்மில் எத்தனை பேர் அடைவோம் நண்பர்களே?

‘ஊழல்’ என்ற சொல்லையே கனம் இழக்கவைத்தவர்களை, கொடூரங்கள் அறையும் ஊடகச் செய்திகளை, இவ்வளவு நீளமான

ஐ.பி.எல். நடத்தி கல்லா கட்டுபவர்களை (சியர்ஸ் கேர்ள்ஸும், ஷில்பா, பிரீத்தி, தீபிகாக்களும் இல்லையென்றால், இந்நேரம் கிரிக்கெட் அழிந்தே போயிருக்கும்!), பெட்ரோல், கேஸ் விலையை ஏற்றிவிட்டு பி.எம்.டபிள்யூ. சிக்ஸ் சீரியஸுக்கு வரி குறைப்பவர்களை, கறுப்புசிவப்பு ராசா, சரத் ரெட்டியை இடஒதுக்கீடே இல்லாமல் ஒரே கொட்டடியில் அடைப்பவர்களை, தேங்காபத்தைகளோடு இலவச மிக்ஸிக்குக் காத்திருப்பவர்களை, இன்னமும் ஐ.சி.யூ. ஸீன் வைக்கிற சீரியல்காரர்களை, தமிழ்நாட்டில் வறுமைக்கோடே இல்லையென்று அறிவிக்கும் அதிகாரத்தை, அத்தனை நாயர்களும் டீக்கடை போட்டுக்கொண்டு திரியும்போது 1 லட்சம் கோடி நகைகளைக் கோயிலுக்குள் பதுக்கிவைத்த மன்னர்களை, ஈழத்து இசைப்ரியாக்கள் சிதைந்து கருகும் சேனல்—4 காட்சிகளை ரிமோட்டில் தாண்டும் தமிழர்களை, பேரறிவாளனின் வாழ்வுரிமை பற்றிப் பேசவே பயப்படும் அரசியல்வாதிகளை... கடந்துதான் இந்த வாழ்க்கை என்றால், ஒரு சாமான்யன் ஒரு நாளைக்கு எத்தனை முறைதான் அதிர்ச்சி ஆவது?

சென்னையின் முதல் அதிர்ச்சி, ஆட்டோக்காரர்கள். வடபழனியிலோ, நுங்கம்பாக்கத்திலோ உங்களை டிராப் பண்ணும் ஆட்டோ டிரைவர்கள், தாவூத் இப்ராஹிமாகவோ, ஜக்கி வாசுதேவாகவோ, தமிழருவி மணியனாகவோகூட இருக்கலாம். வள்ளுவர் கோட்டத்து ஆட்டோவின் இலக்கு... வளசரவாக்கம். வழியில், ஆற்காடு சாலை முழுவதும் பூக்கள் சிதறிக்கிடந்தன. தூரத்தில் தாரை, தப்பட்டை, சங்கு. ஆட்டோ டிரைவர் சைடு கண்ணாடியில் அலட்சியமாகச் சிரித்தார்.

‘‘சார்... எவனுக்கோ ஃபேர்வெல்.’’

‘‘அட... சாவை ஃபேர்வெல்னு சொல்லிட்டியே தலைவா...’’ என உற்சாகம் ஆனேன்.

‘‘ஹலோ... இந்தாளு ஓஷோ... இதையெல்லாம் ஒரே அடியா அடிச்சுட்டாரு சார். என்ன சொன்னாரு தெரியும்ல..?’’

‘‘என்ன..?’’

‘‘நான் பிறக்கவும் இல்லை; இறக்கவும் இல்லை. இந்தப் பூமிக்குச் சில காலம் வந்து தங்கிப் போகிறேன்னாரு... இதுலேர்ந்து என்னா தெரியுது?’’



‘‘என்ன..?’’

‘‘நாமெல்லாம் கெஸ்ட்டு சார். நீயும் நானும் சீஃப் கெஸ்ட்டு!’’

இந்தத் தேசத்தில் ஆட்டோக்காரர்களுக்கு இருக்கிற ஞானம், அரசியல்வாதிகளுக்கு இல்லையே!

**க** ண்ணன் மாமா கல்யாணத்துக்கு வந்துவிட்டு, தாம்பூலப் பையோடு வெட்டாத்தைக் கடந்து ஊருக்குப்போன சுந்தரி அத்தை, சாயங்காலமே அரளி விதை தின்று செத்துப்போனதுதான் என் வாழ்க்கையின் முதல்

அதிர்ச்சி. அத்தை செத்துப்போன அடுத்த வாரமே, அது புருஷன் மிட் நைட் மசாலாவில் அனுராதா பாட்டு பார்த்தது அடுத்த அதிர்ச்சி. அவர், கடைசியில் குடித்துக் குடித்தே குடலில் கேன்சர் வந்து, அந்த ரூமுக்குள் யாருமே போக முடியாத அளவுக்கு, நாற்றம் எடுத்து செத்துப்போனது எனக்கு எந்த அதிர்ச்சியும் இல்லை. ஆனால், கருமாதி முடிந்த சாயங்காலம், அந்த வீட்டின் கொல்லையில் அநாதையாகக் கிடந்த அம்மிக் கல்லில்... (அத்தை அரளி அரைத்த அதே அம்மிக் கல்லில்) தாயும் தகப்பனும் இல்லாத என் சின்ன மாப்பிள்ளை உட்கார்ந்து இருந்த காட்சி தந்த அதிர்வு, இந்தக் கணமும் இருக்கிறது.

**ஒ** ட்டக்குடியில் இருந்து குதிரை வண்டியில் வரும் சுப்ரமணியன் மச்சான், எப்போதும் அதிசயம். 25 வயசிலும் பொம்பளைப் பிள்ளைகள் மாதிரி கையில் மருதாணி வைத்து, மயில் வரைந்து இருக்கும். கட்டை விரல் நகத்தை மட்டும் நீட்டமாக வளர்த்து நக பாலீஷ் போட்டு ருக்கும். அந்த நகத்தால் யார் கன்னத்தையாவது கிள்ளிக்கொண்டே இருக்கும். எதிலும் ஒரு கணக்கு... மிடுக்கு. சுப்ரமணியன் மச்சான், ஒரு நாள் மோட்டார் செட்டில் கால் கிலோ அல்வாவும் மிக்சரும் வாங்கித் தின்றுவிட்டு, ஆஃபில் டெமக்ரான் கலந்து குடித்து செத்துப்போகும் என்று யாருக்குத் தெரியும்?

**சி** ல்க் ஸ்மிதா செத்துப்போனபோது நான் மணி மெஸ்ஸில் சாப்பிட்டுக்கொண்டு இருந்தேன். ''செம கட்ட போயிருச்சே மாப்ள...'' என எதிர் டேபிளில் கமென்ட் அடித்தார்கள். எனக்கு அப்போது மனதில் தோன்றியது, 'அலைகள் ஓய்வதில்லை' படத்தில், தியாகராஜன் இன்னொரு குடிசையில் படுத்துத் திரும்பும்போது, ஏராளமான உணர்ச்சிகளுடன் அந்தம்மா எதிரே நிற்கிற ஒரு விஷுவல்தான். கல்லாவில் உட்கார்ந்திருந்த மணி அண்ணன் சொன்னார், '''நீங்கள் கேட்டவை' படத்தை சிலுக்கு பாட்டுக்காகவே எத்தனை தடவை பார்த்தேங்குற... 36 தடவை முருகா...''

அந்த வருடம் செமஸ்டர் விடுமுறை முடிந்து கல்லூரி திரும்பியபோது, கல்லாவில் மணி அண்ணனுக்குப் பதில் சற்குணம் அக்கா உட்கார்ந்து

இருந்தார். நான் தூர்தர்ஷனில் ‘பதேர் பாஞ்சாலி’ பார்த்துக்கொண்டு இருந்த நாளில், கல்லாவுக்கு மேல் உள்ள ஃபேனில் அக்காவின் புடவையில் தூக்குப் போட்டு ‘குட் பை’ சொல்லி இருக்கிறார் மணி அண்ணன்.

**ஸ்** டெல்லா புரூஸ் தற்கொலை செய்துகொண்ட செய்தியை அன்று இரவு மிகத் தாமதமாக நான் பெற்றுக்கொண்டது லிபர்ட்டி பார்க் பாரில். இரவு திடீர் என்று பயங்கரமானது. மனம், அவர் முடிவு எடுத்த அந்த நொடியை நோக்கிக் கட்டுக்கடங்காமல் பயணிக்கிறது. மரணத்தின் பாசி படர்ந்துகிடக்கும் அன்பின் பேராழத்தில், மனம் மீனாகி அலைய ஆரம்பிக்கிறது. திருவல்லிக்கேணி மேன்ஷன், மெரினா பீச் மேகங்கள், அண்ணாசாலை பஸ் நிறுத்தங்கள், நௌஷத் இசை, சுகந்திகள்... எல்லோரையும் விட்டுவிட்டுப் போக இந்த மனுஷனுக்கு எப்படி மனசு வந்தது? இப்போதும் நள்ளிரவில் ஜெயா மேக்ஸில் ‘அடி பெண்ணே பொன்னூஞ்சல் ஆடும் இளமை’ பார்க்கும்போது ஷோபாவும், ‘பியாஸா’ பார்க்கும்போது குருதத்தும் என்னை எல்லை இல்லாத, அதிர்வற்ற தொடுவானத்துக்கு அப்பால் அழைத்துப் போகிறார்கள்!

15 வருடங்களுக்கு முன்பு, ஒரு பேய் மழைப் பின்னிரவில் எங்கள் வீட்டுக் கதவு தட்டப்பட்டது. அப்பாதான் திறந்தார். மழையில் நனைந்து இரண்டு பேர் நின்று இருந்தார்கள்.

‘‘சரவணன் உங்க பையந்தானே?’’

‘‘ஆமாங்க...’’

‘‘நாங்க தஞ்சாவூர் ஸ்டேஷன்ல இருந்து வர்றோம்... போலீஸு...’’

அப்பா அதிர்ந்துபோனார். அம்மா வாரிச் சுருட்டி எழுந்து அழ ஆரம்பித்தது.

‘‘உங்க பையன் கரந்தை தமிழ்ச் சங்கத்துலதானே படிக்கிறாப்ல? பெரிய அளவுல பிரச்னையக் கொண்டுவந்துட்டாப்லயே...’’

‘‘என்ன சார் பண்ணான்..?’’

‘‘நக்சலைட் மூவ்மென்ட்ல இருக்கான்யா உம் மகன். விடுதலைப் புலிகள் வரைக்கும் பொழக்கம் இருக்கும்போல... எங்க அவன்?’’

‘‘நக்சலைட்டா?’’

‘‘அதான்யா... குண்டு வைக்கிறவன், கொள்ளை அடிக்கிறவன், தண்டவாளத்தைப் பேக்குறவன்...’’

அந்த அகாலத்தில் அப்பா அவர்களோடு கிளம்பிப்போனார். குடும்பமே விடிய விடிய விழித்துக் கிடந்தது.



+2 ஆண்டு விழாவில் நெல்சன் மண்டேலா வேஷம் போட்டு நடித்தவன், நாலாறு மாதங்களில் நக்சலைட்டாகி புரட்சி பண்ணக் கிளம்பியதில் அம்மாவுக்குத்தான் அதீத அதிர்ச்சி. அப்பாவும்

சித்தப்பாவும் தஞ்சாவூர் ஸ்டேஷனுக்கும், திருச்சி கோர்ட்டுக்குமாக ஒரு வாரம் அலைந்து, அண்ணனை மீட்டு வந்தார்கள்.

விஷயம் இதுதான். கரந்தை கலைக் கல்லூரியில் அண்ணன் ஒரு ஜூனியர் வைகோ. மைக்கைப் பிடித்தால், பிரபாகரன் முதல் ஃபிடல் காஸ்ட்ரோ வரை போட்டுப் பொளப்பான். இதனால், பேராசிரியர்கள் மற்றும் பெண்கள் ஏரியாவில் ரெஸ்பான்ஸ் அள்ள... அம்மாவிடம் பால் காசு வாங்கி சிப்பி டெய்லரிடம் ரெண்டு குர்தா தைத்துக்கொண்டான்.

அன்றும் பேச்சுப் போட்டி ஒன்றில் புரட்சிப் பேச்சை அள்ளிவிட்டு இருக்கும்போது, தடை செய்யப்பட்ட அமைப்பைச் சேர்ந்த ஒருவர் அறிமுகமாகி இருக்கிறார். (அப்போது என்ன... இப்போதும் அண்ணனுக்கு உலக அரசியல் தெரிந்த அளவுக்கு, உள்ளூர் அரசியல் அவ்வளவாகத் தெரியாது!) ''தம்பி, உங்க கண்ல இருக்கிற ஒளிதான் முக்கியம். அந்தக் கோபம், அந்த வேகம், அந்தத் தாகம்... நாம அடிக்கடி சந்திச்சு நிறையப் பேசணும்...'' என்றபடி அண்ணனிடம் முகவரி வாங்கிப் போய் இருக்கிறார். சில நாட்களில் அண்ணன் வாழ்க்கையில் புரட்சி வெடித்தது. அந்த நபர், மன்னார்குடி அரசு வங்கியில் கொள்ளையடித்துத் தப்பும்போது போலீஸில் மாட்டி சுட்டுக் கொல்லப்பட, சட்டைப் பையில் அண்ணன் எழுதித் தந்த எங்கள் வீட்டு முகவரி.

ஏதோ குடும்பத்துக்கு நல்ல நேரம்... 'தமிழ் படித்த மாணவன் இந்தச் சமூகத்துக்கு ஒரு பெட்ரோமாக்ஸ் லைட்தானே தவிர, ஒரு நாளும் நக்சலைட் அல்ல!' என போலீஸ் விசாரணையில் தெரிந்து விட்டது. வீடு வந்த அண்ணனை அம்மா அழைத்துப் போய், மகமாயி கோயில் வாசலில், பட்ட மிளகாயும் எண்ணெயும் வைத்து எட்டு முறை சுத்திப்போட்டது.

இன்று வளசரவாக்கத்தில் இருந்து கோடம்பாக்கம் ஹவுஸிங் போர்டில் இருக்கும் வீட்டுக்கு வந்து இறங்கும்போது, அதே அண்ணன் வாசலில் பதற்றமாக நின்று இருந்தார்.

‘‘டேய்... ஹவுஸ் ஓனர் போன் பண்ணி வீட்டைக் காலி பண்ணச் சொல்றாரு. ரெண்டு வாரத்துல வீடு வேணுமாம்!’’

‘‘மாசா மாசம் வாடகைக்கு டிலே ஆகுதுன்னு நினைச்சிருப்பாரோ..? சரி... சரி, நீ எதாச்சும் சென்டிமென்ட்டாப் பேசிப் பாரு...’’

‘‘எல்லா மாதிரியும் பேசிட்டேன். சென்னைக்கு வந்து இது 20–வது வீடு... இங்கதான் அஞ்சாறு வருஷம் கொஞ்சம் நிம்மதியா இருந்தோம். இதுவும் போச்சா? இனிமே இன்னொரு அட்வான்ஸ், ஹவுஸ் ஓனர், வீடுனு நினைச்சாலே... அதிர்ச்சியா இருக்குடா.’’

ஒரு கணம் நிதானித்து, சத்தமாகச் சிரிக்க ஆரம்பித்த என்னை அண்ணன் அதிர்ச்சியாகப் பார்த்தார்.

ஆமாம்... ஒரு சாமான்யன், ஒரு நாளைக்கு எத்தனை முறைதான் அதிர்ச்சியாவது!

4

# காலத்தால் அழியாதது எது?

**ஒ**ரே நேரத்தில் எவ்வளவு பெரிய சர்வாதிகாரியாகவும், காமெடி பீஸாகவும் இருக்கிறது காலம்!

காலையில் தேதித் தாள் கிழிக்கும் பழக்கம் எனக்கு இல்லை. ஏதோ ஒரு சீரியல், ஆரம்பித்த முதல் வாரத்தில் பார்த்தது. நேற்று என் கையில் ரிமோட் சிக்கியபோது, ‘எபிசோட் 322’ எனப் போட்டார்கள். ஒரு கணம் காலத்தின் வேகத்தை எண்ணி அடி வயிற்றில் அச்சப் பந்து உருண்டது.

சீரியலின் முதல் காட்சியைப் பார்த்துவிட்டு அண்ணியிடம் கேட்டேன், ‘‘ஏன் அண்ணி... இவங்க லவ் பண்ணிட்டுத்தானே இருந்தாங்க. இப்ப ஏன் இப்பிடிச் சண்டை போட்டுச் சவால் விட்டுட்டு இருக்காங்க?’’

‘‘என்ன தம்பி நீங்க... அவங்க கல்யாணம் முடிச்சு, புள்ளை பெத்து, டைவர்ஸ் பண்ணி, இப்போ எதிர் எதிரா பிசினஸ் பண்ணிட்டு இருக்காங்க... இப்போ கம்பெனி ஏலம் எடுக்கறதுல ஒரு பிரச்னை...’’

நான் அவசரமாக ‘ஹெட்லைன்ஸ் டுடே’ மாற்றி அண்ணா – தாத்தா உண்ணாவிரதத்தைப் பார்க்க ஆரம்பித்தேன்!

உண்மையில் காலம் ஒரு மெகா சீரியல் மாதிரிதான் இருக்கிறது. கண்ணெதிரே எதையெதையோ கலைத்துப் போட்டுவிட்டு, ஒன்றும் அறியாத சிறுபிள்ளை மாதிரி ஓடி ஒளிந்து விளையாடிக் கொண்டே

இருக்கிறது அது. எதை வெறுத்தோமோ, அதை விரும்புகிறோம். எதை விரும்பினோமோ, அதை வெறுக்கிறோம்.

உலையாகிக் கொதிக்கும் அனுதினங்களின் யதார்த்தங்களில் இருந்து நிறைவேறாத ஆசைகளும் லட்சியங்களும் ஆவியாகிக்கொண்டு இருக்கின்றன. மலையடிவாரங்களின் காதல் கனவுப் பாடல்கள் முறிந்து, குடும்பப் பாடல்களும் சோக கீதங்களும் நீள்கின்றன. நரையோடிய காதலிகள், நம்ப முடியாத மரணங்கள், விசித்திரமான அரசியல் மாற்றங்கள், நினைத்துப் பார்க்காத உறவு முடிச்சுகள், வளர்ச்சிகள், வீழ்ச்சிகள்... எல்லாவற்றையும் நிகழ்த்திவிட்டு, நட்சத்திரங்களைப்போல உதிர்ந்துகொண்டு இருக்கின்றன நாட்கள்!

**எ**ன் மொபைலில் ஏதோ வெளி மாநில எண். எடுத்தால்...

‘‘சார், நான் அமரன் பேசுறேன்...’’

‘‘என்னங்க அமரனா... யாருங்க?’’

‘‘என்ன சார், அதுக்குள்ள மறந்துட்டீங்களா... கடலூர் ஜெயில்லேர்ந்து உங்களை மீட் பண்ண வந்தேனே சார்... என் கவிதையெல்லாம்கூடக் கொண்டுவந்து தந்தேனே...’’

‘‘ஐயோ ஸாரி அமரன்... நல்லா இருக்கீங்களா?’’

‘‘ஃபைன் சார்...’’

அண்ணாசாலை தேநீர்க் கடை ஒன்றில் ஆறு வருடங்களுக்கு முன்பு அமரனைப் பார்த்த காட்சி, நினைவில் ஆடுகிறது. கடலூர் சிறையின் ஆயுள் கைதியான அமரன், அப்போது பெயிலில் வந்திருந்தார். தான் எழுதிய கவிதைகளை விகடனில் பிரசுரிக்க முடியுமா எனக் கேட்டு, விகடன் நிருபராக இருந்த என்னைப் பார்க்க வந்திருந்தார்.

தஞ்சாவூர் பக்கம் ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர் அமரன். பங்காளிக்கும் இவரது குடும்பத்துக்கும் சொத்துத் தகராறு. ஒரு நாள்

தகராறு முற்றி, இவரது அப்பா, சித்தப்பா எல்லாம் சேர்ந்து அருவாள் சுத்த, சம்பவம் பங்காளி கொலையில் முடிந்துவிட்டது. குடும்பமே ஓடி ஒளிய, 19 வயதான அமரனையும் கேஸில் குற்றவாளியாக்கி, கோர்ட்டில் கொண்டுபோய் நிறுத்திவிட்டது போலீஸ்.



விசாரணைகளுக்குப் பிறகு, அமரனுக்கு ஆயுள் தண்டனை கிடைத்து, கடலூர் சிறையில் அடைக்கப்பட்டார். இளமை முறுக்கேறும் 19 வயதில் ஆயுள் கைதியாகி சிறைக்குப் போவது எவ்வளவு பெரிய கொடுமை...

வெள்ளை வேட்டியும் சட்டையுமாக தஞ்சாவூர் பக்கம் சைட் அடித்துக்கொண்டு திரிய வேண்டிய வயதில், சிறைக்குள் புழுங்கும் வாழ்க்கை ஒருவனுக்கு ஏன் விதிக்கப் படுகிறது? கல்வி, காதல், லட்சியங்கள் என எல்லாமும் வந்தடையும் வசந்த காலத்தில், சிறைக் கொட்டடியில் வாட வேண்டியதாகிவிட்டது அமரனுக்கு. ஆனால், அமரன் தடம் புரளவில்லை.

சிறைக்குள் இன்னும் குற்றங்கள் கற்கும், மீள முடியாத போதை வஸ்துக்களுக்கு அடிமையாகும், கூலிப்படைகள் தொடர்பில் வழி மாறும் ஏராளமான வாய்ப்புகள் இருந்தும் அமரன் மாறவில்லை. சிறைக்குள் சிறு

தொழில் கற்றார். யோகா பயின்று மற்ற கைதிகளுக்கும் சொல்லித் தந்தார்; கவிதைகள் எழுதினார்.

சிறையில் இருந்து வரும்போது அமரனுக்கு 31 வயது. இன்னும் தீர்க்கமான, நல்ல மனிதராக உலகம் பார்த்தார். ரிலீஸான பிறகு, தஞ்சாவூரில் இருந்து எனக்கு தொலைபேசினார்,

''சார்... ரிலீஸாகி ஊருக்கு வந்துட்டேன் சார்.''

''வாழ்த்துக்கள், ரொம்ப சந்தோஷம் அமர். என்ன பண்ணப் போறீங்க?''

''கிராமத்துக்குப் போனதும் எங்க பங்காளி பையன்கிட்ட போய் எல்லாத்தையும் பேசணும் சார். கால்லகூட விழுவேன் சார். 'போன தலைமுறையோட எல்லாம் போவட்டும்... நாம நல்லாருப்பம்டா'னு நிக்கப்போறேன்... கரெக்ட்தானே சார்!''

''ரொம்ப கரெக்ட் அமர்.''

அதன் பிறகு ஆறு வருடங்களுக்குப் பிறகு... அமரன்.

''உங்க பழைய நம்பருக்கு ரெண்டு மூணு தடவை அடிச்சுப் பார்த்தேன் சார். உங்க புது நம்பரும் கிடைக்கலை. அப்புறம் நானும் இங்கேருந்து போயிட்டேன். இப்போ டெல்லியில உங்க ஃப்ரெண்ட் செந்திலைப் பார்த்தேன். அவர்கிட்டதான் நம்பர் வாங்கினேன்.''

''இப்போ எங்க இருக்கீங்க அமர்? என்ன பண்றீங்க?''

''ஹிமாச்சல் பிரதேஷ்ல இருக்கேன் சார். இங்கே ஒரு யோகா ஸ்கூல் நடத்துறேன். நிறையப் பேர் கத்துக்க வர்றாங்க. ரொம்ப நிம்மதியா இருக்கேன் சார். முன்னே பின்னேனு எதுவும் இல்லாம இங்கே நான் நானா மட்டும் இருக்கேன் சார்.''

''கல்யாணம் ஆச்சா அமர்?''

‘‘என்ன சார்... உங்ககிட்ட அப்பவே சொன்னேனே... அவங்களைப்பத்தி. கட்டிக்கிட்டா, அதைத்தான் கட்டிக்கணும்னு இருந்தேன். நான் ஜெயில்ல கெடந்தப்ப, அதை அசல்ல கட்டிக் குடுத்துட்டானுவோ... பாவம்! அதுவும் என்ன பண்ணும். நீடாமங்கலத்துல வாக்கப்பட்டு அங்கதான் கெடக்கு. நமக்குக் கல்யாணங் காச்சின்னு ஒண்ணும் தோணலை சார். இந்த வாழ்க்கையே அற்புதமா இருக்கு. மலைமேல அவ்வளவு அமைதியான இடம் சார்... நீங்க நிச்சயமா இங்கே வரணும். ஒரு வாரம் ஃப்ரீ பண்ணிட்டு வாங்க சார்...’’

‘‘நிச்சயமா வர்றேன் அமர்.’’

அலைபேசி உரையாடல் முடிந்தும் வெகு நேரம் அமரின் ஞாபகம் அலையடித்துக்கொண்டே இருந்தது. சில வருடங்களில் தஞ்சாவூரில் இருந்து கடலூர் சிறை... அங்கே இருந்து ஹிமாச்சலப் பிரதேசத்தின் ஏதோ பெயர் தெரியாத மலைக் கிராமம் எனக் காலம் ஒருவனை எப்படி எல்லாம் துரத்தி அடிக்கிறது? நினைத்துப் பார்க்காத பாதைகளில் காலம் நடத்தும் மாயப் பயணங்களில் எத்தனை ஆட்டுக்குட்டிகள் வழி தவறிப் போய் இருக்கும்! அடித்து இழுத்துப் போய் எங்கெங்கோ வீசி எறிந்துவிட்டு ஓடிக்கொண்டே இருக்கிறது காலத்தின் தீரா வெள்ளம்!

**ஓ**ர் அதிகாலையில் கோடம்பாக்கம் ஹவுஸிங் போர்டு வீட்டின் கதவு தட்டிய பெரிய சரவணாவை எனக்கு அடையாளமே தெரியவில்லை. முன் பல் இரண்டும் உதிர்ந்து, உடல் வற்றி, முடி கொட்டி... ஆளே மாறியிருந்தார்.

‘‘டேய் முருவா... நா பெரிய சரவணாடா...’’

வேட்டி சட்டை, கக்கத்தில் மகாராஜா நகைக் கடை பேக் என அவரது உருவமே ஆச்சர்யமாக இருந்தது. உள்ளே அழைத்து கைலி தந்து படுக்கச் சொன்னேன். பெரிய சரவணா படுத்ததுமே எழுந்து பார்த்த குரு அண்ணன் என்னைத் தனியே அழைத்து, ‘‘டேய்! பெரிய சரவணாவா இவன்... என்னடா திடீர்னு வந்து நிக்கிறான்? தம்பி... டேக்

கேர்ரா. நீ பக்கத்துலயே படு...'' என எச்சரித்தான். எனில், அன்னாரது ஃப்ளாஷ்பேக் அந்த மாதிரி.

15 வருடங்களுக்கு முன்பு பெரிய சரவணா, எங்கள் ஊரின் ராபின்ஹூட். லோக்கல் ஆர்கெஸ்ட்ராவில் கங்கை அமரன் குரலில் பாடுவதைப் பகுதி நேரமாகவும், திருடுவதைத் தகுதி நேர வேலையாகவும் கொண்டு இருந்தவர்.

சொந்த பெரியப்பா மகளைப் பெண் பார்க்க வந்த நாளில், அவரது வீட்டில் ஓட்டைப் பிரித்து இறங்கி, ஒரு பித்தளை அண்டாவையும் மாப்பிள்ளை வீட்டாருக்கு வாங்கி வைத்து இருந்த ரெண்டு கிலோ ஜாங்கிரியையும் திருடிப் போன திருவாளன். பிடிபட்ட பிறகு, அவனை எகிறி எகிறிக் குத்திய பெரியப்பா, ''கம்னாட்டி... அண்டாவைத் திருடிட்டுப்போன சரி, அந்த ஜாங்கிரியை ஏன்டா எடுத்த?'' என்பதையே திரும்பத் திரும்பப் புலம்பினார்.

எங்கள் வீட்டில் வெகு காலமாகப் புழங்கிய ஹீரோ சைக்கிளை ஒருநாள் கொண்டுபோய்விட்டார். அம்மாகுளம் ஐ விட்னஸ் ஆனதில்தான் பட்சி சிக்கியது. பஞ்சாயத்து போர்டு எதிரில் குனிய வைத்து, முதுகில் ஒரு பெரிய பாறாங்கல்லை வைத்தார்கள். நாள் முழுக்க அப்படியே நின்று, சாயங்காலம் அந்தக் கல்லை அலட்சியமாகத் தள்ளிவிட்டு கள்ளு குடிக்க நடந்தவர்.

ஒரு முறை, கூத்தாநல்லூரில் முஸ்லிம் கல்யாணம் ஒன்றுக்கு ஆர்கெஸ்ட்ராவில் பாடப் போயிருக்கிறார். 'சரவணா, நீ பாடுவதற்கு முன்பாக விருந்தில் பிரியாணி சாப்பிடக் கூடாது' என்பது ஆர்கெஸ்ட்ரா ஓனரின் கட்டளை. காரணம், எக்கச்சக்கமாக பிரியாணி தின்றுவிட்டு பாடும்போது மூச்சுத் திணறி சரவணா இழுவையைப் போட்டு கூட்டத்தைக் கலைத்த வரலாறுகள் உண்டு. ஆகவேதான், இந்த அன்புக் கட்டளை.

ஆர்கெஸ்ட்ரா மேடையில், 'இப்போது அனைவரையும் சொக்கவைக்கும் பாடலான 'மாங்குயிலே பூங்குயிலே...' என்ற பாடலைப்

பாட வருகிறார் அபிவையின் இன்னிசை இளவரசன் சரவணன்...' என்ற அறிவிப்பு வர, சரவணாவைக் காணவில்லை. சரவணா பிரியாணி சாப்பிட்டானா எனக் கண்காணித்தவர்கள், பிரியாணி சாமான்களைக் கண்காணிக்கத் தவறிவிட்டார்கள். ஒரு மாட்டு வண்டி செட் பண்ணி, பின்கட்டு வழியாக சமையல் சாமான்களை ஏற்றிக்கொண்டு மன்னார்குடி மார்க்கமாக முத்துப்பேட்டையை அடையும்போது சரவணா மாட்டிக்கொண்டது, சோழ மண்ணின் கல்வெட்டுக்களில் ஒன்று.

இப்படி, பக்கங்களில் அடங்காத ஏராளமான வீர சாகசங்களுக்குச் சொந்தக்காரர்தான் இந்தப் பெரிய சரவணா!

காலையில் டிபன் சாப்பிட அழைத்துப்போனபோது மெதுவாகக் கேட்டேன், ''என்ன மாமா திடீர்னு வந்துருக்கீங்க?''

''உனக்குத் தெரியாதுல்ல மாப்ள... 10 வருசத்துக்கு முன்னாடியே நம்ம ஊரைவிட்டுப் போயிட்டேன்ல. அப்புறம் கல்யாணம் காச்சினு முடிச்சுட்டேன். அப்பிடியே திரிய முடியுமா... அப்பா வாத்தியாரா இருந்துதான செத்துப்போனாரு. அதை வெச்சு அப்பிடி இப்பிடி முண்டி, வலிவலம் கவர்மென்ட் ஸ்கூல்ல பியூனாயிட்டேன். ரெண்டு புள்ளைங்க... இப்போ புரொமோஷன் சம்பந்தமா மனு குடுக்கத்தான் வந்தேன். டி.பி.ஐ—யாம்ல... அது எங்க இருக்கு? கொஞ்சம் கொண்டுவந்து விட்ரு.''

அன்றைக்கு முழுக்கச் சாப்பிட்ட அத்தனைக்கும் நான் எவ்வளவு சொல்லியும், அவர்தான் காசு கொடுத்தார். சாயங்காலம் சரவணா ஸ்டோர்ஸில் தன் வீட்டுக்குப் பொருட்கள் வாங்கியவர், எனக்கு ஒரு சட்டை எடுத்துக் கொடுத்தார். பழைய நோக்கியாவில் நாலைந்து தடவை வீட்டுக்கு போன் பண்ணியிருப்பார்.

இரவு அவரை கோயம்பேட்டில் பஸ் ஏத்திவிடப் போனேன். சாப்பிட்டு முடித்து வீட்டுக்கு போன் அடித்தவர், ''சுகு எங்க..? ராஜி என்ன பண்றான்?'' என விசாரித்தபடி இருந்தார். திடீரெனப் பெருங்குரலெடுத்து, ''நாயே... வந்து கால் கையை முறிச்சுப் போட்ரேன்... ராஸ்கல்... மிதிச்சே கொன்ருவேன்'' எனத் திட்ட ஆரம்பித்துவிட்டார்.

ஆவேசமாக போனை கட் செய்தவரிடம், ‘‘என்ன மாமா?’’ என்றேன்.

‘‘எம் மவன் மாப்ள... ரெண்டாவது படிக்கிறான். க்ளாஸ்ல ஏதோ திருடிப்புட்டான்னு அப்பனை அழைச்சுட்டு வரச் சொல்லிட்டானுவோளாம். என்னா கொற வெச்சேன் இதுகளுக்கு?’’ என்றபடி எங்கோ வெறித்துப் பார்த்தவர், பொலபொலவென அழ ஆரம்பித்துவிட்டார்.

‘‘மாப்ள... நாந்தான் கொணங்கெட்டு சீந்துவார் இல்லாமப் போய்க்கெடக்கேன். காலங்கெட்டுப் புத்தி வந்துருக்கு... இதுகள நல்லா வளக்கணும்னுதான் இப்பிடி அல்லாடுறேன். இந்தப் பயலைப் பாத்தீகளா?’’ என அழுதவரைத் தேற்றி பஸ் ஏற்றி அனுப்பி வைத்தேன். பஸ் சென்று மறைந்த பின்னும் நினைவின் புழுதி மறையவில்லை.

காலம் ஒருவரை எப்படிக் கொண்டுவந்து நிறுத்தி தன் மகனுக்காக அழவைக்கிறது. எல்லாவற்றையும் நினைத்துத் தேம்பும்போது காலம் கைகளில் தருவது இன்னொரு தலைமுறையைத்தான். நாம் தொலைத்ததை மகனிடம், மகளிடம் தேடுகிறோம்.

காலமே... காலமே... பெரிய சரவணாவைப்போல் வளராமல், அவர் இழந்ததை மீட்கும் நிஜமான இளவரசனாக அவர் மகன் உருவாகத் துணை நிற்பாயாக!

‘வியாழக் கிழமைகளைத் தொலைத்தவன்’ என்ற விக்கிரமாதித்யன் அண்ணாச்சியின் கவிதைத் தலைப்பு எப்போதும் எனக்குள் ஈரமாகப் பிசுபிசுக்கிறது. வெற்றி, தோல்வி, நல்லது, கெட்டது... என நிமிர்வதற்குள் பாதரச உருண்டைபோல் நழுவிப் போகும் காலத்தை என்னதான் செய்ய முடியும்? மதுக் கோப்பைகளில், காதல் நினைவுகளில், வறுமையின் பிடியில், முதலாளிகளின் நிழலில்... எத்தனை எத்தனை பேர் கிழமைகளைத் தொலைத்துக்கொண்டு இருக்கிறோம்.

**மூ** லங்குடி மாதா கோயில் ஸ்கூலில் எட்டாவது படிக்கும்போது டூர் போவதற்காக வருடம் முழுவதும் சேர்க்கும் சிறுசேமிப்பில் மணிமேகலைதான் ஃபர்ஸ்ட். அப்போது மெட்ராஸ் பார்க்க வேண்டும்

என்பதுதான் அவளது வாழ்க்கைக் கனவு. டூர் போவதற்கு முதல் நாள், மணிமேகலை வயசுக்கு வந்தாள். அவள் இல்லாத பஸ் மெரினா பீச்சைச் சுற்றி வந்தபோது, ‘‘மணி பாவம்ல...’’ என்றது ரோஸி சிஸ்டர்.

அந்த மணிமேகலை, குரோம்பேட்டை லெதர் கம்பெனியில் வேலை பார்க்கும் மாப்பிள்ளைக்கு வாக்கப்பட்டாள். கையில் ஒன்றும் இடுப்பில் ஒன்றுமாக இரண்டு பிள்ளைகளோடு 25 ஜியில் ஒரு முறை பார்த்தபோது, ‘‘ஐயே! என்ன ஊருடா சாமி இது... எனக்குப் புடிக்கவே இல்ல முருகா. இந்தாளுகிட்ட முடிவா சொல்லிப்புட்டேன்... இந்த வருசத்தோட தோலு வேலையை மூட்ட கட்டிட்டு எலையூருக்கே போயிரணும்னு... எப்பிடித்தான் இருக்கியளோ?’’ என தொத்தலாகச் சிரித்த மணிமேகலை, காலத்தின் மணிக்கூண்டில் திசை அறியாது சிறகடிக்கும் ஒரு புறாவைப்போல் இருந்தாள்!

காலம் எல்லாவற்றையும் தின்றுவிடுகிறது. ஒருவனை உயரத்தில் வைத்து, இன்னொருவனைப் பள்ளத்தில் தள்ளி, கேட்காததைக் கொடுத்து, கேட்டதை மறைத்து, உறவைச் சிதைத்து, அழகைக் குலைத்து ஏதேதோ செய்து விடுகிறது.

தீவிர மார்க்சிஸ்ட் தோழர் ஜோசியக்காரர் ஆனதும், பெருவிவசாயி பெரியப்பா கோயம்பேட்டில் லோடுமேன் ஆனதும், மூன்று தங்கைகளுக்குக் கல்யாணம் முடித்து 47 வயதில் பெண் தேடும் நண்பர் ‘சாமியார் ஆயிரலாம்பா’ எனப் புலம்புவதும் காலத்தின் கோலமெனக் கொள்க!



**வை** க்கம் முகம்மது பஷீரின் கதை ஒன்று உண்டு. பஷீர், இரண்டு வருடங்களாகச் சிறையில் இருப்பார். வீட்டில் இருக்கும் அம்மாவைப் பார்க்கவே வாய்ப்பு கிடைக்காது. இரண்டு ஆண்டுகள் கழித்து விடுதலையாகி வீட்டுக்குப் போவார். அவர் போகிற அன்றைக்கு வீட்டில் அவருக்குப் பிடித்த மத்தி மீனும் கீரைப் புட்டும் செய்துவைத்திருப்பாள் அம்மா.

பஷீர் ஆச்சர்யமாகி, ''இன்னிக்கு நான் வருவேன்னு தெரியுமா? இன்னிக்குன்னு எப்படிம்மா எனக்குப் பிடிச்சதுகளைச் செஞ்சி வெச்சுருக்க?'' என்பார்.

அதற்கு அம்மா சொல்வாள், ''போடா... ரெண்டு வருஷமாத் தினமும் இதைத்தான் செய்றேன்...''

இதைப் படித்த பிறகு எனக்குத் தோன்றியது, காலத்தால் அழியாதது என்று ஒன்றுமே இல்லை... அன்பைத் தவிர!

# 5

# தீக்குளிக்கும் துணிவை ஏன் கொண்டாய்?

“மச்சான்... போன வருஷம் நம்ம அரசன் கல்யாணத்துக்கு வந்த கலைக் குழுவுல இந்தப் பொண்ணு வந்துச்சு மச்சான். பறையடிச்சுக்கினு இன்னாமா பாடி ஆடுச்சுங்கிற... சிரிச்சுச் சிரிச்சு விளையாடிக்கினு இருந்தது இன்னும் கண்ணுக்குள்ளய நிக்குது மச்சான்... இன்னாடா இப்பிடிப் பண்ணிக்கிச்சு..!’’ காஞ்சிபுரம் பொது மருத்துவமனைக்கு வெளியே நிற்கும்போது, குமுறி அழுகிறான் பரமு.

யார் யாரோ அழுகிறார்கள். கண்ணீர் அஞ்சலி போஸ்டரில் கறுப்பாக, கெச்சலாகப் புன்னகைக்கும் செங்கொடியை நானும் எங்கேயோ பார்த்து இருக்கிறேனே..?

செங்கொடிக்கு அப்படியே என் தங்கை தாரிணியின் சாயல். ஊருக்குப் போனால், ஓடி வந்து எண்ணெய்த் தலையை என் நெஞ்சில் அழுத்தும் தாரிணியின் சாயல். உள்ளங்கையை இறுக்கிக் கோத்துக்கொண்டு தோளில் கோலம் போடும் அதே அவளின் சாயல்.

தாரிணி 10—வது படிக்கிறாள். தஞ்சாவூர் ஈ.பி. காலனி சாலையில் இருந்து லேடி பேர்டு சைக்கிளில் தினமும் வீட்டுக்கு அந்தியை அழைத்து வருவது அவள்தான். அலைபேசியோடு கலகலத்து மொட்டை மாடிக்கு ஓடுகிறாள். சன் மியூஸிக்கில் பாடல் வைத்துக் கூடவே பாடுகிறாள். சித்தப்பாவுக்கு பட்டப் பெயர்கள் வைக்கிறாள். எங்கிருந்தோ

அவள் கொண்டுவந்து கொட்டும் ஜோக்குகளும் கமென்ட்டுகளும்தான் வீட்டை நிறைக்கின்றன.


காலையில் அவளுக்குத் தலை வாருவது என்பது தினசரித் திருவிழா. அவள் பருவங்களைக் கடப்பதை, அச்சமும் பெருமையுமாகப் பார்த்துக்கொண்டு இருக்கிறோம் நாங்கள். அவள் கல்யாணத்துக்கு என்று வங்கியில் சேமிப்புக் கணக்கு தொடங்கி இருக்கிறார் சித்தப்பா. ‘இந்த வயதைக் கடந்துவிட்டோமே’ என்ற ஏக்கத்தை விதைத்தபடி, ஒரு பூச்செடியைப்போல வளர்ந்துகொண்டு இருக்கிறாள் தாரிணி.

நீ ஏன் செத்துப்போனாய் செங்கொடி? இப்படித் தீ வைத்துக் கொண்டு வலித்துத் துடித்து ஏன் செத்துப்போனாய்? கனவுகளோடு தூங்கி இருக்க வேண்டிய இரவில், தீக்குளிப்பதற்குத் திட்டமிடும் துணிவை ஏன் கொண்டாய்? உடலைத் தீ தின்னும் நொடிகளை நினைத்துக்கூடப் பார்க்க முடியாதபோது, எப்படியடி அதைச் செய்தாய்? அணையவே அணையாமல் நினைவில் பற்றி எரிந்துகொண்டு இருக்கிறது உன் செயல். மருத்துவமனையில் இருந்து பாலிதீன் பையில் சுருண்டுவந்த உன்னைப் பார்த்தபோது, என் கண்களில் தளும்பி வழிந்தது தாரிணிதான் தங்கச்சி.

மங்கலபாடியில் செங்கொடி வளர்ந்த மக்கள் மன்றத்துக்கு உடல் போனபோது, நிறைய சின்னப் பிள்ளைகள், ‘‘அக்கா... அக்கா...’’ எனக் கதறி அழுதார்கள். ‘‘அய்யோ... இந்தப் புள்ளைகளுக்கு எல்லாம் தெனமும் செங்கொடிதான் டூஷன் எடுக்கும். எப்பமும் ‘அக்கா... அக்கா...’ன்னு இதுங்க அதுகூடயேதான் கெடக்கும்...’’ என்றார் ஒரு பெரியவர். ‘ஓர் உயிர், எல்லாவற்றையும்விட மேலானது என்பதில் சந்தேகமே இல்லை. ஆனால், அதைவிடவும் பெரிது எமது உரிமை, விடுதலை, பெருமிதம்’ என்ற வாசகங்களோடு பிரபாகரன் தீபம் ஏற்றும் புகைப்படத்துக்கு எதிரே கண்ணாடிப் பெட்டிக்குள் கிடந்த செங்கொடிக்கு, இப்போது என் அம்மாவின் சாயல் வந்திருந்தது!

செங்கொடியை எரித்துவிட்டுத் திரும்பும்போது, பரமு கோபமாகச் சொன்னான், ‘‘ச்சே... என்ன சொசைட்டி மச்சான் இது. இப்போ போய்ப்

பாரு... தியாகராஜா தியேட்டர்ல 'மங்காத்தா'வுக்கு நிக்கிற கூட்டம்கூட இங்க வரலியேடா!''



**இ**ப்படித்தான் ஒரு நாள் மூலக்கொத்தளத்தில் முத்துக்குமாரை எரித்துவிட்டுத் திரும்பினோம்.

வடபழனி டிராஃபிக்கில் சிக்கி நிற்கும்போது, அருள்எழிலன்தான் பதற்றமாக அலைபேசினான், ''முருகா... முத்துக்குமார்னு ஒரு பையன் சாஸ்திரி பவன் வாசல்ல தீக்குளிச்சுச் செத்துட்டான்டா...''

எழுதி வைத்த அத்தனை தீர்க்கமான கடிதத்தை விநியோகித்துவிட்டு, சாஸ்திரி பவன் வாசலில் கருகிக்கிடந்தான் முத்துக்குமார். அப்படியே குரு அண்ணன் சாயலில் இருந்தான்.

மெரினா கடற்கரையில் ஐஸ்க்ரீம் விற்கும் ஏழைத் தகப்பனுக்குப் பிறந்தவன். என்னைப்போல் ஒரு பத்திரிகைக்காரன். என்னைப்போல் சினிமா உதவி இயக்குநன். மனசுக்குப் பிடித்த பெண்ணுக்கான ஆசைகளை முத்துக்குமாரும் சேமித்து வைத்து இருப்பான். சன் டி.வி—யில் சோபாவில் அமர்ந்து பேட்டி கொடுக்கும் கனவுகள் அவனுக்கும் இருந்திருக்கும். பெற்றோரையும் சகோதரியையும் அழைத்துப் போய் போத்தீஸில் திருநாளுக்குத் துணி எடுத்துத் தரும் ஒரு நாள் அவனுக்கும் வாய்த்திருக்கும். பிள்ளைத்தாச்சியாக இருந்த தங்கச்சியின் சீமந்தத்தில் புதுச் சட்டையோடு உலவி, அவள் பிள்ளைக்குக் கொலுசு போட்டு, பிரபாகரன் என்றோ... ஆதிரை என்றோ பெயர் வைக்கும் ஒரு நாள் வந்திருக்கும்.

சாஸ்திரி பவன் பக்கத்து காலேஜ் ரோட்டில் பைக்கில் பறந்து, இஸ்பஹானியில் குழுமிக் கொண்டாடி, எம்.ஓ.பி. பஸ் ஸ்டாப்பில் சைட் அடித்தபடி... ஆயிரமாயிரம் இளைஞர்கள் இருந்தபோது, இவன் மட்டும் இன அழிப்புக்கு எதிராகத் தன்னைத்தானே எரித்துக்கொண்டது ஏன்?

அன்று, முத்துக்குமாரை எரியூட்டிவிட்டுத் தாள முடியாத மன அழுத்தத்தில் திரும்பும்போது அருள்எழிலனிடம் கேட்டேன், ‘‘அது ஏன் மச்சான், முத்துக்குமாரைப் பாக்கறதுக்கு இந்த ரஜினி, கமல்லாம் வரலை?’’

‘‘அடப் போடா இவனே... கலைஞர், ஜெயலலிதாவே வரலை. வெளில யாருக்குமே தெரியலைனு வெச்சுக்க... இந்நேரம் கார்ப்பரேஷன் வண்டில அள்ளிப் போட்டுப் போயிட்டே இருப்பானுங்க.

ஒருத்தன் ஏன்டா தீக்குளிக்கிறான்? நெஞ்சு நிறையக் கோபம். ஆனா, எதுவும் பண்ண முடியலைங்கிற இயலாமை... கண்ணு முன்னாடி ஆயிரக்கணக்கான அண்ணன், தம்பி, அக்கா, தங்கச்சிக சாவுதுங்க... நம்மால ஒண்ணும் பண்ண முடியலையேங்கிற துக்கம் பெருசுடா... தூக்கம் இல்லாம, டிப்ரஷன் அதிகமாகி தன்னைத்தானே எரிச்சுக்கிட்டு சாவுறான்.



‘என் உடம்பையே உயிர் ஆயுதமாக்கி போராட்டத்தைத் தொடருங்க’னு சொல்லிட்டுப் போயிட்டான்டா... ஏன்? ஏனா, இங்கே எல்லாரும் எல்லாத்துக்கும் எப்பவும் ஒண்ணு திரளமாட்டான். எல்லாத்துக்கும் காரணம், இந்த நாட்டோட கேவலமான பாலிடிக்ஸ்... இந்தத் தலைவருங்களோட கேவலமான சுயநலம்... எல்லாத் தலைவர்களும் ஒண்ணா நின்னு இதை எல்லாம் எதிர்த்துக் கேட்டா, எவனும் செத்து இருக்கமாட்டான் பார்த்துக்க!”

முத்துக்குமாரும் செங்கொடியும் சாக முழு முதற்காரணம் இந்தத் தேசம்... இதன் அதிகார மையங்கள்!

உண்மையில் இன்றைய எங்கள் தலைமுறைக்கான அரசியல் என்பது, உலக மயமாக்கலுக்குப் பிறகான குழப்பமான அரசியல். ஊடகங்களும் பொழுதுபோக்குகளும் மலிந்துவிட்ட நாட்டில்,

பொதுமக்களுக்கான அரசியல் ஈர்ப்புகளும் மழுங்கடிக்கப்படுகின்றன. வசதி வாய்ப்புகளும் அநீதிகளும் பெருகிவிட்ட சமூகத்தில், எந்த அரசியலைத் தேர்ந்தெடுப்பது? எவர் பின்னே போவது? என்ன செய்வது என்ற குழப்பமும் கலக்கமும் இந்தத் தலைமுறைக்குச் சாபம்போல் விதிக்கப்பட்டு இருக்கின்றன.

ஊழலும் அலட்சியங்களும் பெருகிவிட்ட சமூகம். 30 ஆண்டுகால ஈழப் போராட்டம் கண் முன்னே வீழ்ந்த கொடூரம்... இந்தத் தலைமுறையின் வரலாற்றை, எங்களைத் தாளாத துயரமாக அழுத்திக்கொண்டு இருக்கிறது!

மே 17 அன்று பிரபாகரன் கொல்லப்பட்டதாக, அவரது உடல் என்று காட்டப்பட்ட காட்சிகள் தொலைக்காட்சியில் விரிந்தபோது எங்கே போவது? யாரைக் கேட்பது? என்ன செய்வது? எனத் தவித்து அலைந்த பெரும் இளைஞர் கூட்டத்தை நான் அறிவேன். எங்கெங்கு இருந்தோ போன் பண்ணிக் கோபம் பொங்கிய நண்பர்கள், கூட்டம் போட்டுக் கொந்தளித்தவர்கள், எங்கே என்ன போராட்டம் என்றாலும் ஓடிப்போய் நின்றவர்கள், போராட்டத்துக்கும் பொருளுக்கும் உதவிய ஐ.டி. தோழர்கள், அவ்வளவு பேரும் இளைஞர்கள்.

சிதறிக்கிடந்த கோப நெருப்பைக் குவிக்க ஒரு மையம் இல்லையே. இலக்கு இல்லாமல், தலைமை இல்லாமல், குமுறிக் குமுறி கனலும் நெருப்பை ஒன்று சேர்க்க முடியாததுதான் இன்று வரை தொடரும் துயரமாக உள்ளது. அதுதான் இந்தத் தலைமுறைக்கான சாபமும்கூட. அதனால்தானே முத்துக்குமாரும் செங்கொடியும் உயிரை மாய்த்துக்கொண்டனர்!

செங்கொடியின் இறுதி ஊர்வலத்தில் பேசிய டி.எஸ்.எஸ்.மணி, ‘‘செங்கொடி நீ இப்படிச் செய்திருக்கக் கூடாது. நாங்கள் தீவிரமான உணர்வுகளைச் சொல்லிச் சொல்லி வளர்த்து, உன்னை இப்படி ஒரு மரணத்தில் தள்ளிவிட்டோமோ என்கிற குற்ற உணர்ச்சி வருகிறது...’’ என்றார்.

இது நேர்மையான குற்ற உணர்ச்சி. இது நம் எல்லாத் தலைவர்களுக்கும் இப்போதாவது வர வேண்டும். காலங்காலமாக பேசிப் பேசி, எங்களைத் தெருவில் இறக்கிவிட்டு, நீங்கள் உங்கள் மாளிகைகளை உள்பக்கமாகச் சாத்திக்கொண்டுவிட்டீர்கள். அநீதிகளுக்கு எதிராக அணி திரட்ட, வழி நடத்த, ஒன்று சேர்க்க முடியாத அத்தனை தலைவர்களுக்கும் இந்தக் குற்ற உணர்வு வர வேண்டும்.

மலையாளத்தில், ஜான் ஆபிரகாம் இயக்கிய ‘அம்ம அறியான்’ என்ற திரைப்படம் இருக்கிறது. கேரளாவில் நக்சல்பாரி இயக்கம் வேகமாக வளரத் தொடங்கிய காலகட்டத்தில், நிறைய இளைஞர்கள் அதில் இழுக்கப்பட்டார்கள். ஒரு கட்டத்தில், அரசியலும் வாழ்க்கையும் பந்தாட, வழிகாட்டுதல் இல்லாமல் நிறைய இளைஞர்கள் தற்கொலை செய்துகொண்ட விஷயத்தை ஒரு அம்மாவுக்கும் மகனுக்குமான உறவை மையமாக வைத்துப் பேசுகிற படம் இது.

ஒரு வகையில் 40 ஆண்டுகாலத் திராவிடக் கட்சிகளின் வழி நடத்துதல், நம்மைக் குழப்பமான அரசியல் சூழலில்தான் தள்ளிவிட்டு இருக்கிறது. இந்தத் தலைமுறைக்கு அவர்கள் தந்திருப்பது, இயலாமையும் கோபமும் கையறுநிலையும்தான்!

முத்துக்குமாரும் செங்கொடியும் இதை அறுத்தெறியத் தங்கள் உயிர்களையே தந்துவிட்டார்கள். மிகுந்த அரசியல் அறிவு நிலையில் முத்துக்குமார் அந்த முடிவை எடுத்ததை அவனது கடிதம் சொன்னது. உண்மையில், இந்தத் தலைமுறையின் இன, அரசியல் எழுச்சி முத்துக்குமாரும் செங்கொடியும் தந்ததுதான்.

அவர்கள் வைத்த நெருப்பு, அநீதிக்கு எதிராக ஒன்று திரளாத சமூகத்தையும், வறட்டு மௌனம் காக்கும் போலி ஜனநாயகத்தையும் பொசுக்கும் நெருப்பு என்பதை அதிகார மையங்கள் புரிந்து கொள்ளட்டும். முத்துக்குமாரும் செங்கொடியும் சொல்லிவிட்டுப் போன மானுட அன்பையும் கோபத்தையும் உயிரை மாய்த்துக்கொள்வதில்

அல்ல... ஒன்று திரள்வதிலும் உண்மையான போராட்டங்களினாலும் முன்னெடுப்போம் நண்பர்களே!

**கா**ஞ்சிபுரத்தில் இருந்து திரும்பும்போது சித்தி போன் பண்ணியது, ‘‘ஏம்ப்பா... நெனப்பிருக்குல்ல, காரண காரியம் சொல்லாம ஒழுங்கு மரியாதையா வந்து சேரு...’’ — பெரிய தங்கச்சி நந்துவுக்கு வளைகாப்பு வைத்திருப்பது அப்போதுதான் நினைவு வந்தது. அவளுக்கு ஆண் குழந்தை பிறந்தால் முத்துக்குமார் என்றும், பெண் குழந்தை பிறந்தால் செங்கொடி என்றும் பெயர்வைத்து, என் ஆயுள் முழுக்கக் கொஞ்சித் தீர்ப்பேன்!

# 6

# ஒரு படம் எடுத்தா... ஒரு படம் ஃப்ரீ !

கோடம்பாக்கத்தில் எனது வீடு இருக்கும் தெருவில் ராஜசேகர் சாரை அடிக்கடி பார்ப்பேன்!

'நிழல்கள்' படத்தில் 'இது ஒரு பொன் மாலைப் பொழுது...' என பீச் காற்றில் தலை கலைய ஏகாந்தமாய் வானம் பார்த்துப் பாடும் அதே ராஜசேகர் சார். உச்சி வெயிலில் கிறுகிறுத்து பழைய ஸ்கூட்டரில் அவர் தெருவில் போகும் இன்றைய காட்சி, வாழ்வின் நகைமுரண்களில் ஒன்று.

அவ்வப்போது கடக்கும்போது, கோடம்பாக்கத்து ரீ—சார்ஜ் கடைகளில் டாப்—அப் பண்ணிக்கொண்டு இருக்கிறார் '16 வயதினிலே' டாக்டர். நேற்றுகூட நான் விகடன் ஆபீஸ் வந்தது, ஒரு காலத்தில் ரஜினிகாந்த்துக்குப் போட்டி என வர்ணிக்கப்பட்ட நளினிகாந்த்தின் ஆட்டோவில்தான்!

'பத்திரிகை பெரியப்பா' சின்னக்குத்தூசி அய்யாவை, குண்டு பல்பு எரியும் பத்துக்கு எட்டு திருவல்லிக்கேணி மேன்ஷனில் பார்த்த நாளில், 'ஊருக்கே ஓடிர்றா முருகா!' என அலறியது மனசு.

27C—யில் அவித்த கடலையைக் கொறித்தபடி எதிர்ப்பட்ட முத்துலிங்கம் அய்யா, பவர் ஹவுஸ் டீக்கடையில் தனித்து நின்ற நா.காமராசன் அய்யா, பழைய உட்லண்ட்ஸ் ஹோட்டலுக்கு எப்போது

போனாலும் சட்டைப் பை நிறையப் பேனாக்களோடு ‘படை இல்லாத மன்னவனாய்’ உட்கார்ந்திருக்கும் பி.பி.ஸ்ரீனிவாஸ் என, நான் ஏற்றி வந்த ஏராளமான பிம்பங்களைப் போட்டு உடைத்த புண்ணியஸ்தலம்... சென்னை!

உண்மையில் என்போன்று ஏராளமான கனவுகளுடன் வரும் முதல் தலைமுறை இளைஞர்களுக்கு, சென்னை... ஒரு மாய மான். நான் விகடன் நிருபன். பிறகு, லிங்குசாமி சாரிடம் உதவி இயக்குநராக சினிமா கற்று, என் முதல் படத்தை இயக்கிக்கொண்டு இருக்கிறேன். கனவுக்கும் யதார்த்தத்துக்கும் நடுவில் அனுதினமும் அலைந்து திரியும் ஆயிரமாயிரம் நண்பர்களில் நானும் ஒருவன்.



எங்கெங்கோ கிராமங்களில் இருந்து, சினிமா, மீடியா, இலக்கியம், அரசியல் என லட்சியங்களோடு சென்னைக்குக் கிளம்பிவரும் முதல் தலைமுறை இளைஞர்கள் முட்டி முளைத்து எழுவதற்குள்... ஒவ்வொரு தினமும் ஒரு யுகம்!

காலையில் எழுந்து தெருவில் கால் வைக்கும்போதே, யாராவது இந்தக் கேள்வியோடு வந்துவிடுவார்கள், ‘‘அப்புறம் பாஸ்... என்ன போயிட்டிருக்கு?’’

கோடம்பாக்கத்தின் மிகப்பெரிய கெட்டவார்த்தை இதுதான். ‘‘ம்... ஜூலியா ராபர்ட்ஸுக்கு லூஸ்மோஷன் போயிட்டிருக்கு...’’ என்பது என் மைண்ட் வாய்ஸ்.

‘‘அது... முயற்சிகள்தான் பாஸ். ‘மங்காத்தா’ மாஸ் ஹிட்டாம்ல!’’ என நழுவுவது நிதர்சனம். தினம் தினம் இப்படி எதிர்ப்படுபவர்களிடமும், குடும்பத்தாரிடமும், உறவுகளிடமும் பதில் சொல்ல முடியாத கேள்விகள் துளைத்தெடுக்க, தவித்து அலைகிறவர்கள் எத்தனையோ பேர்.

எழுந்து வெளியே போனால், எதிர் டீக்கடையில் என்னை வரவேற்கும் முதல் நண்பன், ‘உலக சினிமா’ சீனு. ‘ஸாரி ஐ யம் அவுட் ஆ·ப் சர்வீஸ் ஆ·ப்டர் 5 பி.எம்.’ என்ற டீ—ஷர்ட் வாசகங்களுடன் நிற்கும் சீனுவின் உறக்கம் இல்லாத விழிகளில் நள்ளிரவில் பார்த்த உலக சினிமா வழிகிறது.

‘தெய்வத்திருமகள்’ படம் ‘ஐ யம் சாம்’ படத்தின் தழுவல் என்பது நமக்குத் தெரியும். ஆனால், ‘எங்க ஊரு பாட்டுக்காரன்’ ஒரு ·பிரெஞ்சு படத்தின் தழுவல் என்பது சீனுவுக்கு மட்டுமே தெரியும். ஆஸ்கர் வாங்கிய பிறகு ஆற்ற வேண்டிய உரையை இப்போதே தயாரித்துவிட்ட தாராளன்.

‘‘புதுசா ஒரு ஸ்கீம் போட்ருக்கேன். ஒரு படம் எடுத்தா... ஒரு படம் ·ப்ரீ. தமிழ் வித் தெலுங்கு. புரொடியூஸர் இருந்தா சொல்லு!’’

‘‘மொதல்ல ஒரு டீ சொல்லு சீனு!’’

பிரசாத் ஸ்டுடியோ எதிரே இருக்கும் ஹோட்டலுக்கு டிபன் சாப்பிடப் போனால், எல்லா டேபிள்களிலும் நடிகர்களின் கூட்டம். ‘அழகர்சாமியின் குதிரை’ அப்புக்குட்டி சிரிக்கிறார்.

''நல்ல கதைன்னா, ஹீரோவாப் பண்ணலாம். மத்தபடி கேரக்டர் ஆர்ட்டிஸ்ட்டா மெயின்டெய்ன் ஆவறதுல நமக்கு எந்தத் தயக்கமும் இல்லை. நாம நடிகன் தலைவா!'' — தொப்பை குலுங்க ஷைனிங் ஏறிய அப்புக்குட்டி.

'' 'பரிமளா தியேட்டர்' ஷூட்டிங் கூப்பிட்டாங்க. 30 ரூபா கிடைச்சா வீட்டுக்கு அனுப்பிட்டு நிம்மதியா இருக்கலாம் சார்!'' என வெண்பொங்கல் சொல்கிறான் 'அம்பாசமுத்திரம் அம்பானி' சங்கர். சூரி, 'ஜெமினி' பாலாஜி, மிமிக்ரி செந்தில் என ஏரியா எங்கும் வளரும் கலைஞர்கள்.

பிரசாத் ஸ்டுடியோவுக்குள் நுழைந்தால், ''வணக்கம் பாஸ்'' என வாசமாக வருகிறார் அஜயன் பாலா.

''நீங்கதான் தலைவா ஆல்வேஸ் யூத்து!'' என்றால் சிரிக்கிறார் அஜயன்.

''டைரக்டர் விஜய்கூட அடுத்த பட டிஸ்கஷன் ஆரம்பிச்சுருச்சு. நம்ம கதை 'காதல் கதையின் ஏழாம் அத்தியாயம்' ஸ்க்ரிப்ட் பக்காவா ரெடி. இமயமலை போயிட்டு வந்து பிக்கப் பண்ண வேண்டியதுதான் பாஸ்.''

''இமயமலையா?''

''பாஸு... நாங்களும் ரஜினிதான். ஈஷா குரூப்போட சேர்ந்து டூ வீக்ஸ் ரிஷிகேஷ் போறேன். இப்போ அனுராக் காஷ்யப்போட 'தட் கேர்ள் இன் எல்லோ பூட்ஸ்' போறேன். பின்றோம் பாஸ்!''

பிரசாத்தில் இருந்து வெளியே வரும்போது உரசிக்கொண்டு வந்து நிற்கிற காரில் யுகபாரதி அண்ணன்.

''ஏர்றா தம்பி...''

ஃபுல் ஏ.சி—யில் சென்னைக் காந்தலுக்கு கொஞ்சம் ரிலீஃப். யுகபாரதி அண்ணன்தான், சென்னைக்கு வந்ததும் எனக்குத் தங்க அறையும்

அடைக்கலமும் தந்தவர். டிரஸ்ட்புரம் ஏரியாவில் நள்ளிரவு வரை அவரோடு தினம் தினம் கனவுகளும் கவிதைகளும் இலக்குகளும் பேசித் திரிந்த கணங்களுக்கு இன்னும் ஈரம் சேர்க்கிறது இந்த ஏ.சி.

''இமான் ஸ்டூடியோல இருந்து வர்றேன்... 'கும்கி' டியூன்ஸ் பிரமாதமா வந்திருக்குடா!''

'கும்ஸிக்... கும்ஸிக்' என கார் அதிர்கிறது.

''ஈவினிங் 'ஒஸ்தி' ரெக்கார்டிங்குக்கு ஹைதராபாத் போறேன்டா... தஞ்சாவூர்ல இருந்து கிளம்பி வந்து, நாமளும் பல ஃப்ளைட்கள்ல பறந்துட்டோமேடா.''

சாலிகிராமம் விஷால் ஆபீஸுக்கு எதிரே 'உதயன்' பட இயக்குநர் சாப்ளின் வருகிறார். ''நண்பா... ரெண்டு ஸ்க்ரிப்ட் இருக்கு. க்யூட்டா ஃபேமிலி சப்ஜெக்ட் ஒண்ணு. ஹாட்டா மாஸ் ஃபீல்ல ஒண்ணு. தீவிரமா டிஸ்கஷன் போயிட்டு இருக்கு நண்பா!''

மதியம் மொபைலில் மை.பா. அண்ணன் வருகிறார். விகடனில் எனக்கு சீனியர். ஆழ்வாரடியன். அரசியல் குரு. அமைச்சர்களில் இருந்து அ.தி.மு.க. ஆபீஸ் வாட்ச்மேன் வரை அண்ணனுக்குப் பழக்கம். அந்தப் பக்கம் வைகோவுக்கு மிஸ்டு கால், இந்தப் பக்கம் விஜயகாந்த்துடன் ஆலோசனை, நடுவில் செங்கோட்டையனுடன் லஞ்ச் என ஆல்ரவுண்டர்.

''டேய்... இப்போதான் கேப்டனைப் பார்த்துட்டு வர்றேன். தமிழக அரசியல்ல நாமளும் ஒரு சொழட்டு சொழட்டிருவோம்றா...''

''அண்ணே... அடுத்த எலெக்ஷன்ல ஒரு எம்.பி—யாவோ, எம்.எல்.ஏ—வாவோ உங்களைப் பார்த்துரணும்ணே...''

''சொழட்டுவோம்றா... சொழட்டுவோம்றா...''

மாலை வீட்டுக்கு வந்து டி.வி—யைப் போட்டால், 'அண்ணா ஹஜாரே உண்ணாவிரதம் முடிவுக்கு வந்த பின்னாடியும் அதோட அனல் இன்னும்

அரசியல் அரங்குல போகலைங்கிறதைத்தான் ராகுல் காந்தியோட இந்தப் பேச்சு சொல்லுது. 'புதிய தலைமுறை'க்காக டெல்லியில் இருந்து கனகராஜ்...' எனக் கையில் மைக்குடன் தம்பி கனகராஜ் பொளக்கிறான்.

'கலைஞர்' டி.வி—க்கு மாற்றினால், டைரக்டராகிவிட்ட நண்பன் ஸ்ரீராம் பேசிக்கொண்டு இருக்கிறான், 'ஆக்சுவலா 'டூ' பார்த்தீங்கன்னா... ஃபுல்லி காமெடி பேக்கேஜாதான் எடுத்திருக்கேன்!'

இரவு ஃப்ரான்ஸிஸ் கிருபாவைச் சந்திப்பதோடு இந்த நாள் முடியக்கூடும். கல்வாரி மலையில் இருந்து இயேசுவே இறங்கிவந்துவிட்டதைப்போல, வானம்போல் கைகள் விரித்து என்னை நோக்கி வருகிறார் ஃப்ரான்ஸிஸ். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' — இது பூங்குன்றன் சொன்னது. 'யாதும் ஊரே யாதும் கேளீர்' — இது ஃப்ரான்ஸிஸ் கிருபா சொன்னது. மனிதர்களை மட்டும் அல்ல... மரம், செடி, கொடி, புல், பூண்டு, பறவைகள் யாவும் நம் உறவினர்கள்தான் எனச் சொன்ன அன்பன்; நண்பன்; அற்புதமான எழுத்தாளன்!

''ராஜூ... உன்னை எனக்கு ரொம்பப் பிடிக்கும்றா... இது ரெண்டு பெருங்கலைஞர்களோட சந்திப்பு. ஏன்டா, இதுக்கெல்லாம் கவர்மென்ட்ல ஹாலிடே அறிவிக்கமாட்டானுங்களா?''

''அதானே!''



''ஆனா, நீ பெரிய ஆளா வருவடா... நான் என்னாவேன்னு கேக்குறியா? நான் ஏற்கெனவே பெரிய ஆளுதான்!''

அறைக்கு நடக்கும்போது தோன்றுகிறது. இந்தப் பெருநகரத்தின் மீது ஒவ்வொரு நாளும் எத்தனைக் கனவுகள் பொழிகின்றன. என்னோடு முதல் தலைமுறை இளைஞர்களாக வந்த இளைஞர்கள் அவ்வளவு பேரும் வாழ்வின் அடுத்தடுத்த படிக்கட்டுகளில் ஏறி நிற்கிறார்கள். பத்திரிகைதான் உலகம் என வந்தவன் சினிமாவுக்கு ஓடிவிட்டான்; சினிமாதான் இலக்கு என வந்தவன் ஃபாஸ்ட் ஃபுட் வைத்துவிட்டான்; புரட்சி செய்ய வந்தவன் ஐ.ஏ.எஸ். படிக்கிறான்; பாடலாசிரியன் ஆக வந்தவன் பி.ஆர்.ஓ. ஆகிவிட்டான்; பிடிவாதமாக உழைத்து டைரக்டர், நடிகன், டி.சி.எஸ். சவுத் ஸோனல் மேனேஜர், பரபரப்பான வசனகர்த்தா, பின்னியெடுக்கிற ஜர்னலிஸ்ட் எனத் தங்கள் நாற்காலியைப் பிடித்துக்கொண்டவர்கள் எத்தனையோ பேர்?

லிங்குசாமி சார் அடிக்கடி சொல்வார், ''முருகன்... இது நம்ம கையில கிடைச்ச விளக்கு. மழை, புயல், வெள்ளம்னு எது வந்தாலும், இதை

அப்பிடியே பொத்திப் பாதுகாத்து அணையாமக் கொண்டுபோய்ச் சேர்த்துரணும்!''

உழைப்பையும் மனசையும் மட்டுமே சுமந்து பெருநகரம் வரும் ஆயிரமாயிரம் இளைஞர்களின் கையில் ஆயிரமாயிரம் விளக்குகள். அணையாமல் உரிய இடத்தில் எரிவது எத்தனை; பாதியில் அணைந்து கருகியது எத்தனை என நினைக்கும்போது மனம் எங்கெங்கோ அலைகிறது!

ஒரு நண்பன், கணவனை இழந்த தனது அக்காவுக்கு மறுமணம் செய்துவைத்தான். மணமகனும் ஒரு 'தோழர்' என்பதால், சீர்திருத்தக் கல்யாணமாகவே நடந்தது அது.

நண்பனின் ஊர் தஞ்சாவூர்ப் பக்கம் கிராமம். இன்னும் சாதிய மரபுகள் உடைபடாத ஊர். அந்த ஊரிலேயே இளவயதில் கணவனை இழந்த ஐந்தாறு பெண்கள் இருக்கிறார்கள். அதனால், அக்காவுக்கு நடக்கும் கல்யாணத்துக்கு ஊரில் எதிர்ப்பு இருக்கும் எனப் பயந்தான் நண்பன். அதையும் தாண்டி ஊர் உறவுக்காரர்களுக்கு பத்திரிகை அனுப்பி இருக்கிறான். ஆச்சர்யமாக சென்னையில் நடந்த கல்யாணத்துக்கு 30—க்கும் மேற்பட்டவர்கள் ஊரில் இருந்து வந்திருந்தார்கள்.

நண்பனின் பெரியப்பா வீட்டில் போகக்கூடாது என எதிர்ப்பு. அவர் அதிகாலையில் வயலுக்குப் போகிறேன் என, கைலி வெற்றுடம்புடன் பஸ் ஏறி சென்னைக்கு வந்துவிட்டார். மறுமணம், கலப்பு மணம், சீர்திருத்தக் கல்யாணம் என்ற மூன்று முக்கியமான அம்சங்களுடன் நடந்த நல்ல நிகழ்வு. அந்த அக்காவின் முகத்தில் மிளிர்ந்துகிடந்த வார்த்தைகளைக் கடந்த சிறு புன்னகை, முதல் தலைமுறை இளைஞன் ஒருவன் சாதித்தது.

''டேய்! சாதிச்சுட்டடா பாரதி'' விடை பெறும் முன் நண்பனிடம் சொன்னேன்.

''நிம்மதியா இருக்குண்ணே!'' என நெஞ்சில் கை வைத்தான்.

இப்படித்தான் ஏற்ற வேண்டும்... இன்னும் ஆயிரமாயிரம் விளக்குகளை!

7

# மனுஷ ரத்தத்தில், சாராய போதை!

**ரா** ஜேஷிடம் இருந்து போன். பால்ய நண்பன் இப்போது இந்தியன் வங்கியில் துணை மேலாளர்.

‘‘மாப்ள சென்னைக்கு வந்திருக்கேன். காஞ்சியில ரூம் போட்ருக்கேன். ஈவினிங் வந்துர்றா...’’

‘‘சந்திப்போம் மச்சான்...’’

‘‘உனக்கு கொரியன் நெப்போலியன் ஓ.கே.தானே? சினிமாக்காரன் ஆனதும் ரெமி மார்ட்டினைத் தவிர எதையும் டச் பண்றது இல்லைனு சொல்வீங்களேடா...’’

‘‘சொன்னா நம்பமாட்டே... இப்போ நான் சரக்கே அடிக்கிறது இல்ல.’’

‘‘பார்றா... கொரங்கு வாழப்பழம் வேணாங்குது. வாங்க பாஸு... வாங்க பாஸு...’’

8 மணி வாக்கில் நான் ஹோட்டலுக்குப் போனபோதே, ராஜேஷும் சுல்தானும் பாதி பிரேம்ஜி ஆகியிருந்தார்கள். சுல்தானும் எங்கள் செட்டுதான். மார்க்கெட்டிங் கம்பெனி ஒன்றில் மேலாளராக இருக்கிறான்.

நான் குடிப்பதை நிறுத்திவிட்டதை ராஜேஷால் ஜீரணிக்க முடியவில்லை. ‘‘அஞ்ஞ்ஞ்ஞ்சு வயசுல்ல்ல்ல... அர்ர்ருவாப் புடிச்சி...

அர்ர்ர்றுத்துப் பழகுனவன் நீ... கிச்சுகிச்சுகிச்சு...'' என கோட்டா சீனிவாச ராவ் குரலில் நக்கலடித்தான்.

கொடுமையின் கொடுமை என்னவெனில், சரக்கு அடிப்பதை நிறுத்தியவர்கள், சரக்கு அடிப்பவர்களோடு உட்கார்ந்து சைடு டிஷ் தின்பதுதான். பொதுவாக, தண்ணி அடிக்கும்போது ஒருவனது உள் மற்றும் வெளிமுகப் பயணம் என்பது புத்தன், முத்தன், சத்தன், பித்தன், எத்தன், ரத்தன், சித்தன் என ஏழு நிலைகளைக் கொண்டது.

எதிர்பார்த்ததைப்போலவே அடுத்த பெக்கில் மிகப் பெரிய ஃப்ளாஷ்பேக்குக்கான டிரெய்லரை கட் பண்ண ஆரம்பித்தான் ராஜேஷ்.

''அன்னிக்குத் திருவாஞ்சியம் கோயில்ல சித்ராவைப் பார்த்தேன்டா. பொம்ம்ம்முனு பலூன் மாரி உப்பிட்டாடா மாப்ள. என்னைப் பார்த்தும் பாக்காமலே போயிட்டாடா. ஆர்.கே.வி. வாத்தி வீட்ல டியூஷன் போறப்போ நடந்தது எல்லாம் ஞாபகம் வந்துருச்சுறா...''

பள்ளிக்கூடம், நண்பர்கள், காதல்கள், வெட்டாறு, கீரந்தங்குடி திருவிழா, மாதா கோயில், எம்.ஆர்., பூண்டி கலைச்செல்வம் என போதையின் மம்பட்டி வெட்ட வெட்ட... ஆறாகப் பெருக்கெடுக்கின்றன நினைவுகள்.

அஞ்சாறு ரவுண்டு முடிந்ததும்,

''எனக்கு எவனும் வேணாம் மாப்ள... செத்தா தூக்கிப்போட நீங்க மட்டும் வந்தாப் போதும்டா'' என அழ ஆரம்பித்தான் சுல்தான். அவனைச் சமாதானப்படுத்திவிட்டு, நான் ஒரு போன் பண்ண வெளியே வந்தேன்.

கொஞ்ச நேரத்தில் உள்ளே போய்ப் பார்த்தால், சென்டிமென்ட் முடிந்து ஆக்ஷன் ப்ளாக்...

''டேய்! உனக்கெல்லாம் என்னைப் புரியாதுறா...''

‘‘நீ பேசாத... கௌம்பு மச்சான்... ப்ளீஸ்... கௌம்பிரு...’’

‘‘சரி, கௌம்புறேன்டா... இந்தா பார்றா முருகா... நண்பன் சொல்லிட்டான், நா கௌம்பிக்கிறேன். குட் பை...’’



பால்கனி வழியாகத் தற்கொலைக்கு குதிக்கப்போன ராஜேஷை நான் இழுத்து வந்து உட்காரவைத்தேன்.

அதற்குள், ‘‘நா இப்பிடியே மொட்ட மாடிக்குப் போயிக் குதிச்சுருவேன். மச்சான் அப்பிடியே அள்ளிக் கட்டி எம் பொண்டாட்டிட்ட ஒப்படைச்சுரு...’’ என சுல்தான் கிளம்பினான். இரண்டு பேரையும் சமாதானப்படுத்திவிட்டு, வீட்டுக்குக் கிளம்புவதற்குள் எனக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது.

அங்கிருந்து கிளம்பி வரும்போதுதான் போதை பற்றிய ஏராளமான நினைவுகள் எனக்குள் சுழன்றன. ஜாலி, கேலி, சிரிப்பு, அழுகை, அன்பு,

பிரிவு, மரணம் என இந்த போதை எத்தனை எத்தனை மாயங்களை நிகழ்த்திவிடுகிறது?

நேற்று நான் அவஸ்தைப்பட்டதைப்போல, நான் எத்தனை பேரை அவஸ்தைப்படுத்தி இருக்கிறேன். யோசித்துப் பார்த்தால், கடந்த 10 வருடங்களில் 'நைட்டு நான் ஏதாவது தப்பாப் பேசிட்டேனா?' என்கிற கேள்வி என்னைத் துரத்திக்கொண்டே இருந்திருக்கிறது. இதை யாராவது என்னிடமோ, நான் யாரிடமோ கேட்டுக்கொண்டே இருந்திருக்கிறோம்!

சாராயத்துக்கும் எனக்குமான தொடர்பு அப்பாவிடம் இருந்து தொடங்கியது. கல்யாணமோ, கருமாதியோ, கறி விருந்தும் சாராயமும்தான் எங்கள் ஊரின் சந்தோஷமும் துயரமும். தெருவில் விசேஷம் விருந்து யாருக்கு என்றாலும், எங்கள் வீடுதான் கதைக் களம். அப்பாதான் கதை நாயகன். விருந்து நாளின் அதிகாலையில் தளபதி நடராஜன் மாமாவோடு வரும்போது, அந்த ராஜராஜ சோழனே உயிர்த்து வந்ததைப் போல இருக்கும் அப்பாவின் ஓப்பனிங் ஷாட்.

வீட்டில் பத்தாயம், மாட்டுக் கொட்டகைப் பரண், வெறகுக் கொட்டாயி, பைப்படி என எங்கெங்கும் சரக்கு பாட்டில்களின் புதையல் இருக்கும். பெண்கள் சமையலிலும் கூடத்து அரட்டையிலும் இருக்கும்போது, வீட்டைச் சுற்றிலும் ஆண்களின் சரக்கு தர்பார் நடக்கும். அப்பா கிடா மீசையைக் கையால் நீவி, 'ம்க்க்கும்... ம்க்க்கும்...' எனக் கனைத்தபடி சமையல் கட்டளைகளைப் பிறப்பித்தபடி சாராய வீச்சத்தோடு அங்கும் இங்கும் நடந்துகொண்டே இருப்பார். விசேஷமும் விருந்தும் அன்றோடு முடிந்துவிடும். ஆனால், சாராயம் போகாது.

பெரும்பாலும் அப்பா தினமும் குடிப்பார். கண்கள் கலங்கி மின்ன அப்பா வீட்டுக்குள் நுழையும்போதே, அம்மாவின் பார்வையில் அக்னி மூளும். போதையில் அப்பா வாங்கி வந்த பக்கோடாவை எங்களுக்கு ஊட்ட வருவார். தலையைக் கோதி கை—கால்களை அமுக்கிவிடுவார். திடுதிப்பென்று அம்மாவுடன் சண்டை வந்து சாப்பாட்டுத் தட்டை எட்டித் தள்ளிவிட்டு வெளியே போய்விடுவார். பற்பல அதிகாலைகளில் சாமி

ரூமில் அம்மாவிடம் ‘இனிமே குடிக்க மாட்டேன்’ என அப்பா சத்தியம் செய்யும் காட்சிகள் எங்களுக்குப் பழகிப்போய் இருந்தன.

அதே குடியினால்தான் அப்பா செத்துப்போனார். முதல் முறை தஞ்சாவூர் பெரியாஸ்பத்திரியில் சேர்த்தபோது, மிகவும் பலவீனமாக வராந்தாவைப் பிடித்தபடி நின்ற அப்பாவின் உருவம் எப்போதும் அழியாத சித்திரம். ஒரு முறை, தண்ணிக் காவலுக்குப் போகும்போது வரப்பில் படம் எடுத்து நின்ற பெரும் பாம்பை, போதையில் ஓர் அய்யனாரைப்போல நின்று ‘ச்சூ... ச்சூ’ என அலட்சியமாக விரட்டிய அப்பாவா இவர்? அப்பா மட்டும் இல்லை... அவரது சாராய சகாக்கள் உதயசூரியன் மாமா, முள்ளால் மாமா, இப்போது கட்டாரி மாமா என எல்லோரும் அல்பாயுசில் போனதற்குக் குடிதான் காரணம்!

ஆனாலும் நானும் குடித்தேன். நடைபாதைகள், நண்பர்களின் அறைகள், அழுக்கு டாஸ்மாக்குகள், ஐந்து நட்சத்திர பார்கள், ரூஃப் கார்டன்கள், வி.ஐ.பி—களின் ஃபார்ம் ஹவுஸ்கள், கடற்கரை வெளிகள், இசை வழியும் கார்கள் என எங்கெங்கோ குடித்து இருக்கிறேன். பார்க் ஷெராட்டன் பார்ட்டியில் பிரகாஷ்ராஜுடன் சியர்ஸ் சொன்னதில் இருந்து, நெல்சன் மாணிக்கம் பாலத்துக்கு அடியில் விக்ரமாதித்யன் அண்ணாச்சியுடன் குடித்தது வரை... அது ஒரு கறுப்புச் சரித்திரம்.

அருள் எழிலனுடனும் சுரேஷுடனும் குடிக்கும்போது நான் சே குவேராவின் ஜெராக்ஸ் ஆகிவிடுவேன். கடைசி பெக்கில் இருவரும் காலையில் எழுந்து கிளிநொச்சி போய், யுத்தக் களத்தில் நேரடியாகக் குதிப்பது என முடிவு எடுப்போம். அதிகாலையில் ஆட்டோவுக்கே காசு இருக்காது. பரமுவுடன் குடித்தால், பாடல்களில் நனையலாம். அவன் குடித்துவிட்டு ‘அன்புள்ளம் கொண்ட அம்மாவுக்கு...’ பாடினால் கரகரவென அழுவதைத் தவிர வேறு வழி இல்லை.

பாக்கியம் சங்கர், இளையராஜா வெறியன். குடித்துவிட்டால், ‘அழகிய கண்ணே...’வில் இருந்து, ‘பிச்சைப் பாத்திரம் ஏந்தி வந்தேன்...’ வரை ஏரியா எங்கும் இளையராஜா உருகி ஓடுவார். கூடவே, பாவாடை டான்ஸ் அவரது ஸ்பெஷல் அயிட்டம்!

க.சீ.சிவக்குமார் அண்ணனோடு குடிப்பது ரணகள அனுபவம். ‘‘ஜெயகாந்தனும் சந்திரபாபுவும் சேர்ந்து குடிச்சதை இந்தத் தலைமுறை பார்த்தது இல்லை இல்லையா... நாம சேர்ந்து குடிக்கிறதைப் பார்த்துக்கட்டும்...’’ என்பார்.

ஒரு முறை, நண்பனின் கல்யாணத்துக்காக ராமநாதபுரம் போயிருந்தோம். கல்யாணம் முடிந்த கையோடு குடித்துவிட்டு, கடற்கரைக்குப் போய் உருண்டு எழுந்ததில் உடலெங்கும் கடல். அப்போது தேவிபட்டினம் போலீஸ் ஸ்டேஷனில் அண்ணனின் நண்பர் மகேந்திரன்தான் இன்ஸ்பெக்டர். அப்படியே இந்த மணல் கோலத்தோடு நாங்கள் போய் ஸ்டேஷனில் நின்றதைப் பார்த்து, மகேந்திரன் வெலவெலத்துப்போவார் என நினைத்தேன். ஆனால், அவர் அலட்சியமாகச் சிரித்தார்.

‘‘சிவக்குமார் ஒரு ஃப்ளைட் டயர்ல தொங்கிக்கிட்டே வந்து இடுப்புல குண்டோட ஸ்டேஷன் மேல குதிச்சாலும் நான் அதிர்ச்சியாகமாட்டேன். ஏன்னா, அவன் குடிச்சா என்ன வேணும்னாலும் நடக்கும்.’’

ஒரு சாயங்காலம்... வடபழனியில் இருந்து வந்துகொண்டு இருந்த என்னை நோக்கி, ஒரு ஆட்டோவில் இருந்து குதித்து ஓடி வந்தார் விக்ரமாதித்யன் அண்ணாச்சி.

‘‘வா... எங்கேயாவது போய் உட்கார்ந்து பேசுவோம்...’’ — பக்கத்திலேயே இருந்த ஒயின் ஷாப்புக்கு என்னை நெட்டித் தள்ளிக்கொண்டு போனார். பாதிக் குடியில், தடாரென மேஜை மேல் ஏறி நின்றபடி கவிதை சொல்ல ஆரம்பித்த அண்ணாச்சியை மொத்த பேரும் கலவரமாகப் பார்த்தார்கள்.

*‘‘ஏன் குடிக்கிறேன் நான்*
*புத்தன் சிவனாக*
*பித்தன் நான் குடிக்கிறேன்*

*இந்தச் சமூகம்தான்*
*என்னைக் குடிக்கவைத்தது*
*இதன் அசிங்கங்கள் குடிக்கவைத்தன*
*குடும்பத்தைப் பிரித்த பொருள்*
*குடிக்க வைத்தது*
*தேவதேவியிடம் கிடைக்காத அருள்*
*குடிக்க வைத்தது...''*

என அவர் சொல்லச் சொல்ல... அந்தக் கவிதையை நான் டிஷ்யூ பேப்பரில் எழுதினேன். இப்படியே அன்றைக்கு மட்டும் ஏழெட்டுக் கவிதைகள்.

வள்ளுவர் கோட்டத்தில் குதித்து, ''கலைஞர் வாழ்க'' என ஓடினார். அண்ணா சாலையில் குதித்து, ''அம்மா வாழ்க'' எனக் கத்தினார். திருவல்லிக்கேணியில் ஒரு பிச்சைக்காரரோடு சீரியஸாக உரையாட ஆரம்பித்தவரைக் கொண்டுபோய் நண்பனின் மேன்ஷனில் சேர்ப்பதற்குள் எனக்கு டவுசர் கிழிந்தது.

லக்ஷ்மி மணிவண்ணன் எழுதிய ஒரு கட்டுரையில், 'விக்ரமாதித்யன் அண்ணாச்சியின் குடி, கொண்டாட்டத்தின் குடி. என்னுடைய குடி, வாழும் மரணத்தின் குடி' என எழுதினார். உண்மையில், கொண்டாட்டங்கள் எல்லாமே வாழும் மரணத்தின் குடிதான்.

ஒரு முறை ரமேஷ் வைத்யா அண்ணன் வீட்டுக்குப் போனபோது, அவர் குடித்துக்கொண்டு இருந்தார். அவருடைய அம்மா பக்கத்தில் உட்கார்ந்து, 'துன்பம் நேர்கையில், யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா' எனப் பாடிக்கொண்டு இருந்த காட்சி என்றென்றும் மறக்க முடியாதது!

தஞ்சாவூர் பழைய பஸ் ஸ்டாண்ட் ஒட்டியுள்ள ஒயின் ஷாப்பில் அடிக்கடி ஒரு பெண்மணியைப் பார்த்து இருக்கிறேன். கைகள் நடுங்க ஒரு குவார்ட்டரை வாங்கி ஓர் ஓரமாக இருளில் ஒதுங்கி கல்ப் அடித்துவிட்டுப் போகும். அதைப் பார்க்க, அப்போது ஆச்சர்யமாக இருந்தது.

அதன் பிறகு, கோயம்பேடு மார்க்கெட்டில் தங்கியிருக்கும் நண்பன் வினோத்தைப் பார்க்கப் போகும்போது, அங்கே ஒரு பெண்மணி உட்கார்ந்து குடித்துக்கொண்டு இருந்தாள். வினோத்திடம் கேட்டபோது சொன்னார், ''அது டெய்லி ஒரு ஃபுல் அடிக்கும் சார். மொத புருஷன் இதை விட்டு ஓடிட்டான். ரெண்டாவதா ஒருத்தனைச் சேர்த்துட்டு வந்துச்சு. கொஞ்ச நாள்ல அவன் காலையும் அடிச்சு முறிச்சுருச்சு. அவனும் ஓடிட்டான். இப்போ இதோ இந்த ஆளோடதான் இருக்கு. காலையில ஆரம்பிச்சா எப்பவும் போதைலதான் இருக்கும்.''

அந்தப் பெண்மணி குடித்துக்கொண்டு இருக்க, பக்கத்தில் அந்த ஆள் அதற்கு சைடு டிஷ் பரிமாறிக்கொண்டு இருந்ததைப் பார்க்க விசித்திரமாக இருந்தது.



சென்னைக்கு வந்த பிறகு, பப்களில், பார்களில் குடிக்கிற பெண்களைச் சாதாரணமாகப் பார்க்க நேரிடுகிறது. நள்ளிரவில் ஜெமினி

பாலத்துக்குக் கீழே தள்ளாடியபடி ஆட்டோவை மறிக்கும் யுவதிகளைப் பார்க்கும்போது திகிலடிக்கிறது. ‘‘ஏன்டா என்னைக் கல்யாணம் பண்ணே... ஏன்டா என்னைக் கல்யாணம் பண்ணே...’’ என்றபடி நெசப்பாக்கம் தெரு ஒன்றில் ஒருவரை ஒரு அம்மா இழுத்துப்போட்டு அடித்துக்கொண்டு இருந்தது. நான் அவசரமாகத் தடுக்கப்போனபோது தெருக்காரர் என்னை மடக்கிச் சொன்னார், ‘‘அய்யே தம்பி... ரெண்டு பேரும் ட்ரிங்ஸு...’’

தொடர்ந்து குடிக்கும் நிறைய நண்பர்களிடம் பேசும்போது பெரும்பாலானவர்கள், உறவுகளில் சிதைந்தவர்களாகவே இருக்கிறார்கள். அம்மாவுக்கும் மனைவிக்குமான குடும்பப் பிரச்னையில் சிக்கித் தவிப்பவர்களாய், அன்பின் பிரிவில் துடிப்பவர்களாய், செய்த தவறுகளின் குற்ற உணர்ச்சிகளால் தூக்கம் இழந்தவர்களாய், தேடியது கிடைக்காத ஏமாற்றங்களால், ஏதேதோ ஏக்கங்களால், வலிக்கும் துரோகங்களால், இயலாமையின் மன அழுத்தத்தினால், சமயங்களில் காரணமே இல்லாமல் குடிக்கிறார்கள்.

ஐ.டி. நண்பன் ஒருவனைக் கேட்டால், ‘‘ஸ்ட்ரெஸ் நண்பா...’’ என்கிறான். குடிப்பது குற்றம், தவறு எனப் பயந்து நடுங்கியது எல்லாம் என் தலைமுறையோடு ஒழிந்துவிட்டது. இப்போது குடிப்பது சமூக மயமாக்கப்பட்டுவிட்டது. பகல்களில்கூட பார்கள் நிரம்பி வழிகின்றன. பதின்பருவத்திலேயே நிறையப் பேர் குடிக்க ஆரம்பித்துவிட்டார்கள். வெயில் எரிக்கும் சாலைகளில் குடித்துச் சுருண்டுகிடப்பவர்களை அதிகமாகக் காண நேர்கிறது. இவர்கள் எல்லாம் ‘எங்கே போவது?’ என அறியாதவர்களா என நெஞ்சம் பதைபதைக்கிறது.

எங்கெங்கும் குடித்துவிட்டு, யாரேனும் யார் மீதேனும் அன்பைப் பொழிகிறார்கள், சண்டையிடுகிறார்கள். மொபைலில் கூச்சலிடுகிறார்கள். குடித்துவிட்டு அனுப்பும் குறுந்தகவல்களாலேயே உடைந்த உறவுகள் எத்தனை எத்தனை!

விநாயகா மேன்ஷனில் பக்கத்து அறையில் கேசவன் என்பவர் தங்கியிருந்தார். மலையாளி. ஏதோ ஒரு தனியார் நிறுவனத்தில்

அட்டெண்டர் வேலை பார்த்தார். தினமும் குடிப்பார். ‘‘ஏன் சேட்டா இப்பிடிக் குடிக்கிறீங்க?’’ என்றால், ‘‘பொறத்தே நெஞ்சு நிறைய வொர்ரிஸ்...’’ என்பார். திடுதிப்பென்று அவரை மூன்று நாட்களாகக் காணவில்லை. நான்காம் நாளில் பெல்ஸ் ரோடு பிளாட்ஃபார்மில் செத்துக்கிடந்தார். எப்படியோ விசாரித்து மேன்ஷனுக்குத் தூக்கி வந்தார்கள்.

ஆபீஸில் இருந்து வந்த பி.எஃப். பணத்தை வைத்துக்கொண்டு குடித்தபடியே ஊர் சுற்றியிருக்கிறார். உடம்பு தாங்காமல் பிளாட்ஃபார்மில் விழுந்து அடிபட்டு செத்துப்போயிருக்கிறார். அவரது பாக்கெட்டில் இருந்ததாக ஒரு மொபைல் போனைக் கொடுத்தார்கள். அதில் டயல்டு காலில் கடைசி எண்ணாக, ‘ஹோம்’ என இருந்தது!

நான் குடிப்பதை நிறுத்தியதற்கு இந்த ‘ஹோம்’ ஒரு காரணம். சாராயம், உடலையும் காலத்தையும் தின்றுவிடுகிறது. போதையில் பேரற்புதம்போல் மின்னும் சிந்தனைகளும் பேச்சுகளும் விடியலில் பேரபத்தமான பூதங்களாக எழுந்து நம்மைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிக்கின்றன. பல நேரங்களில் குடி, சர்க்கஸ் ஓனரை பஃபூனாக்கிவிடுகிறது. மேலும், சாராயம் சந்தேகப் பிசாசின் கஸின் பிரதர். சாராயத்தால் சில நல்ல இதயங்களை இழந்திருக்கிறேன். போதையில் நான் காயப்படுத்திய நட்புக்கும் அன்புக்கும் செய்யும் கைம்மாறென்பது, அதை நிறுத்துவதுதான் இல்லையா?

தஞ்சை பிரகாஷுக்கு குடிப் பழக்கம் கிடையாது. அவர் அடிக்கடி சொல்வார், ‘சாராயம்தான் போதைனு பல பேர் நினைச்சுட்டு இருக்கான். அது தப்பு... கடவுள், மனுஷன் ரத்தத்துலயே கொஞ்சம் சாராயத்தைக் கலந்துவிட்டு இருக்கான். பணம், காதல், புகழ், படைப்பு, அதிகாரம், ஆன்மிகம்னு ஒவ்வொண்ணும் போதைதான். போதையை மாத்திப் போட்டா, பாதையே மாறிப்போகும். உன் போதையை சாராயத்துல இல்லை... நல்ல விஷயத்துல போடு!’

உண்மைதான். இந்த உலகத்தின் ஒவ்வோர் அணுவிலும் போதை இருக்கிறது. ஒற்றைக் கோவணத்தோடு கரடு முரடான மலைப்

பாதையில் அடிவானம் நோக்கி ரமணர் நடக்கிற ஒரு புகைப்படத்தில் மகத்தான போதை நிரம்பி வழிகிறது. பல ஆண்டுகள் அதிகார வெறியர்களின் வீட்டுக் காவலில் இருந்து வெளியே வந்து மக்களுக்குக் கை காட்டும் ஆங் சான் சூகியின் கண்களில் பெருகித் ததும்புகிறது உரிமைக்கான போதை.

விகடனில் எப்போதோ படித்த கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது...

*‘‘மனசே சரியில்லை*
*பீச் போலாமா?*
*பார்க் போலாமா?*
*பார் போலாமா?*
*பேசாம, வூட்டுக்குப் போ நைனா!’’*

# 8

# மக்களைப் படித்தபோது...

'**ம** க்களைப் படி' என்றார் மாவோ!

டீக்கடையில் 'எவனோ ஒருவன்' பேப்பரில் பஜ்ஜிக்கு எண்ணெய் எடுத்தபடியே, ''நீ வேணாப் பாரு... கனிமொழிதான் அடுத்த சி.எம். லட்சம், கோடின்னு பார்த்துருச்சு. திஹார் வரைக்கும் போயிருச்சு. சனி உச்சம் போனா, அப்பிடியே அடுத்த ரவுண்டு சுக்கிரன்தான். இனி, ஸ்டாலினும் கிடையாது, விஜயகாந்த்தும் கிடையாது. குறிச்சுவெச்சுக்க, கனிமொழிக்குத்தான் சான்ஸு'' என்றார் அலட்சியமாக.

அவரது நண்பர் கிங்ஸை இழுத்து ஊதியபடியே சொன்னது இன்னும் பயங்கரம். ''இல்ல தலைவா, குஷ்புவுக்கு ஒரு சான்ஸ் இருக்குப்பா. இங்கிட்டு, சசிகலா குடும்பத்துல டாக்டர் வெங்கடேஷுக்குக் கட்டம் கொஞ்சம் ப்ரைட்டு தலைவா!''

போகிற போக்கில், தேநீர் இடைவேளையில் மூன்று முதலமைச்சர்களை ஃபிக்ஸ் பண்ணி விட்டுப் போகிறார்கள் தமிழர்கள்!



அதே தெருவில் இருக்கும் சேட்டுக் கடையில் மொபைல் டாப்—அப் பண்ணச் சென்றால், ஒரு பெண்மணி, கையில் குழந்தையோடு நிற்கிறார்.

''சேட்டு, கவர்மென்ட் மிக்ஸி வந்தா... எவ்வளவுக்கு எடுத்துக்குவ?''

''அது... நீ கொண்டா... பார்த்துட்டுச் சொல்லுது!''

''அட்வான்ஸா 200 ரூவா குடு சேட்டு...''

''கஸ்டமர் வர்றாங்கள்ல... தள்ளி நில்லும்மா...''

நான் தங்கியிருக்கும் அபார்ட்மென்ட்டுக்கு வந்தால், வாசலில் கூட்டம். போலீஸ் நிற்கிறது. 'என்ன ஆச்சு?' எனக் கேட்டால், ''சி—1காரருக்கும் மேல் ஃப்ளாட் ஆளுக்கும் கார் நிறுத்துறதுல தகராறு சார். ஒரு மாசமா எவன் முன்னாடி வந்து நிறுத்தறதுனு சண்டை போட்டுனு இருந்தானுங்க. காத்தால, கடுப்புல சி—1காரரர் கார் மேல, மேல் ஃப்ளாட் ஆளு கோடு போட்டுட்டான். ச்சும்மா இல்ல... இம்மாந்தண்டி கோடு'' என்றபோது இஸ்திரிக்காரர் முகத்தில் அதி உற்சாகம்.

சமாதானம் பேச வந்திருந்த போலீஸ்காரர் கல்லாப்பெட்டி சிங்காரம் வெயிட் போட்டதுபோல இருந்தார். ''அய்யய்ய... செத்தா சிட்டில ஒரு டம்ளர் சாம்பலுங்க. ஸ்டேஷன் போனா கேஸாயிரும். இங்கனயே வெச்சு சமாதானம் பேசிக்குவோம்னா சொல்லுங்க...'' எனச் சத்தம் போட்டுப்

பேசிக்கொண்டு இருந்த போலீஸ்காரரையும் சண்டைக்காரர்களையும் கொஞ்ச நேரத்தில் காணவில்லை.

காலையில் பார்த்தபோது வாசலில் மேல் ஃப்ளாட்காரரின் கார் நின்றிருந்தது. பக்கத்தில் ஓர் அட்டையில் 'போலீஸ் அனுமதியுடன் இங்கு கார் நிறுத்தப்பட்டு இருக்கிறது' என்று எழுதியிருந்தது!

அடையாரில் நடந்துகொண்டு இருந்தபோது, ஒரு ரெஸ்டாரென்ட்டுக்குப் பக்கத்தில், பிளாட்ஃபார்மில் நின்றபடி ரைம்ஸ் புத்தகங்கள் விற்றுக்கொண்டு இருந்தான் அழுக்குச் சிறுவன் ஒருவன்.

ரெஸ்டாரென்ட்டில் இருந்து வந்த ஒருவர், ''சொல்லிஇருக்கேன்ல... இங்கே நிக்காதேனு... போடா'' என அந்தச் சிறுவனை ஆங்கிலத்தில் திட்டியபடி தள்ளிவிட்டார்.

ஓரமாக தம் அடித்துக்கொண்டு இருந்த ஒருவர், தடாரெனக் குதித்து ஓடிவந்து, ''ஏன்டா... எங்கிருந்தோ வந்து ஏ.சி. கடை போட்டு பிசினஸ் பாப்பீங்க. தமிழ்நாட்டுப் பையன் ஒருத்தன் ரோட்ல நின்னு வேகாத வெயில்ல புக்கு வித்தா ஒனக்கு வலிக்குதா... கடை கிடைலாம் ஒடைச்சுத் தொம்சம் பண்ணிருவேன்... போடா உள்ள...'' எனக் கத்தியபடி ரெஸ்டாரென்ட்காரரை ஓர் இழுப்பு இழுத்தார். ரெஸ்டாரென்ட் பார்ட்டி சட்டென்று பம்மிக் கடைக்குள் ஓடிவிட்டார்!

ஒரு முறை, அம்பிகா எம்பயர் சிக்னல் பக்கத்தில் அச்சு அசல் ஹரி படம் மாதிரி ஒருவனை நாலைந்து பேர் துரத்தி வந்தார்கள். சிக்னலில் அத்தனை பேர் பார்க்க, அவனைப் பிடித்துத் துவைத்து எடுத்தார்கள். அவன் மக்களைப் பார்த்து, ''அய்யோ... யம்மா... சார்... சார்ர்ர்ர்...'' எனக் கதறினான். அவ்வளவு பேரும் வீடியோ கேம்ஸ் மாதிரி அதைப் பார்த்துக்கொண்டு இருந்தோம். கொஞ்ச நேரத்தில் அவனை அடித்துக் கிழித்து மூர்ச்சையாக்கி, வீசிவிட்டுப் போனார்கள்.

''அய்யோ பாவம்ப்பா...'' என ஒருவர் அவனைத் தூக்க ஓடினார். இயர்போன் போட்டபடி தொப்பையோடு பைக்கில் நின்ற ஒருவர், ''சார்,

இவன் என்ன பண்ணானோ? எல்லாம் ரெளடிங்க சார். கேஸ் அது இதுனு தலைவலி சார்'' என்றார். அதைக் கண்டு கொள்ளாமல், விழுந்தவனை ஆட்டோவில் அள்ளிக்கொண்டு ஓடினார் யாரோ ஒரு நல்லவர். நல்ல பசியில் நான் 'ஙே' என நின்று இருந்தேன்!

நண்பர் ஒருவரின் உறவினர் ஐ.பி.எஸ். அதிகாரி. சமீபத்தில் ஒரு வேலையாக அவரைச் சந்திக்கப் போயிருந்தேன். வள்ளுவர் கோட்டம் பக்கம் ஒரு ஹோட்டலில் லஞ்ச் சாப்பிட்டோம்.

''தம்பிக்கு ஊரு எது..?'' என்றார் அவர்.

''திருவாரூர் சார்...''

''திருவாரூரா... பக்கமா..?''

''பக்கம் சார்... கொரடாச்சேரி பக்கத்துல அபிவிருத்தீஸ்வரம்...''

''அட... அப்போ .............க்குச் சொந்தமா?''

''இல்ல சார். எனக்கு அவ்வளவு தெரியாது!''

''ம்... அது சரி... என்ன சாமி கும்பிடுவீக?''

''அது வந்து எந்த சாமியா இருந்தாலும் கும்புடுறதுதான் சார்!''

''என்ன தம்பி நீங்க... சரி, என்ன ஆளுக நீங்க?''

ஏற்கெனவே, இதுபோல நிறைய அனுபவங்களைக் கடந்து இருந்ததால், கோபம் வரவில்லை. இந்தப் பெருநகரத்திலும் சாதி அடையாளங்களைத் தேடும் ஆயிரம் ஆயிரம் நபர்களில் இவரும் ஒருவர்!

இந்திய மக்களைப் படிப்பது அதி பயங்கரமான அனுபவங்களைத் தருகிறது. ஒரு பக்கம் பிளாட்ஃபார்மில் சாமி கும்பிட்டு, பிள்ளை பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். இன்னொரு பக்கம் எக்ஸ்பிரஸ்

அவென்யூவில் குடும்பம் குடும்பமாக பாக்கெட் சிக்கன் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். ஓட்டுக்குக் காசு வாங்குகிறார்கள். இலவசத்துக்கு முட்டி மோதுகிறார்கள். ஈழப் பிரச்னை உச்சத்தில் இருக்கும்போது வைகோவைத் தோற்கடிக்கிறார்கள். வடிவேலுவில் இருந்து குண்டு ஆர்த்தி வரை யார் வந்தாலும் கூட்டம் காட்டுகிறார்கள்.

கருத்துக் கணிப்புகளை அடித்து நொறுக்கி, வாக்குகளை மாத்திக் குத்துகிறார்கள். அன்பே சிவத்தையும் ஆரண்ய காண்டத்தையும் காலி பண்ணுகிறார்கள். ‘திருப்பாச்சி’யை ஹிட்டாக்குகிறார்கள். அதே டெம்போவில் ‘திருப்பதி’ எடுத்தால், மொட்டை அடிக்கிறார்கள். ஈழப் பிரச்னைக்கு ‘உச்சு’ கொட்டிக்கொண்டே ஐ.பி.எல். பார்க்கிறார்கள்.

அண்ணா ஹஜாரே போராட்டத்துக்கு மெழுகுவத்தி ஏற்றிவிட்டு, ஆர்.டி.ஓ. ஆபீஸில் லஞ்சம் கொடுக்கிறார்கள். குழந்தையை ப்ரீ.கே.ஜி—யில் சேர்க்க ஒரு லட்சம் டொனேஷன் கொடுக்கிறார்கள். உணவகங்களில் மேஜை துடைக்கும் சிறார்களைத் திட்டுகிறார்கள். விஜய்க்கு எதிராக எஸ்.எம்.எஸ். இயக்கம் கட்டுகிறார்கள். ‘மக்கள் இயக்கம்’ மாநாடு போட்டால், ரவுண்ட் கட்டுகிறார்கள். மதுக் கடைகளிலும் கூட்டம். தியான மையங்களிலும் கூட்டம். துணிக் கடை, நகைக் கடை எங்கெங்கும் கூட்டம். ஆனால், எப்போது யாரைக் கேட்டாலும், ‘ஒரே பணக் கஷ்டம் பாஸ்’ என்கிறார்கள்.

நேர்மை, நியாயம், கோபம், அன்பு பேசும் எழுத்துக்கும் சினிமாவுக்கும் பேச்சுக்கும் கொந்தளிக்கிறார்கள்; அழுகிறார்கள். எதிர் ஃப்ளாட்டில் நடக்கும் வெட்டு, குத்தை மொபைல் பேசியபடி பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். தெருவில் ஒரு சத்தம் கேட்டால், கதவைச் சாத்திக்கொள்கிறார்கள். திருட்டு வீ.சி.டி. பார்க்கிறார்கள். நித்யானந்தா சீ.டி—க்கு அலைகிறார்கள். யாருக்கும் எதுவும் செய்யாமல் வாழ்நாள் முழுவதும் சேர்த்த காசை மருத்துவமனைக்குக் கொண்டுபோய் அழுகிறார்கள். இப்படி, சமூகத்தின் பெரும் அவலங்களையும் அபத்தங்களையும் நொடியில் கடந்து சென்றுவிடுகிறார்கள்!

நண்பனை பஸ் ஏற்றிவிட கோயம்பேடு பஸ் ஸ்டாண்ட் போயிருந்தேன். அது பண்டிகை நாள் என்பதால் கூட்டம் கும்மியடித்தது. 200 ரூபாய் டிக்கெட்டுகள் 1,000 ரூபாய்க்கும் கிடைக்கவில்லை. திடுதிப்பென்று ஒரு பிளாட்ஃபார்மில் முண்டியடித்தது கூட்டம். ஒரு வயசுதான் இருக்கும்... ஒரு குழந்தையை யாரோ நடு பஸ் ஸ்டாண்டில் விட்டுப் போயிருக்கிறார்கள். ஒரு தூண் ஓரமாக அது கிடந்து அலறியது.

''ரொம்ப நேரமா அது அங்கதான் கெடக்குது. நானும் யாராவது வருவாங்கனு பாக்கறேன்... காணோம்'' என்கிறார் பக்கத்துக் கடைக்காரர். எல்லோரும் வேடிக்கை பார்த்துக்கொண்டு இருக்க... ஒரு பெண்மணி மட்டும் சட்டென்று குழந்தையைத் தூக்கித் தோளில் போட்டு, ''ச்சு... ச்சும்மா... அம்மாவைக் காணமா... வந்துருவாங்கடா குட்டி'' எனத் தட்டிக்கொடுத்தார்.

கொஞ்ச நேரத்தில் போலீஸ் வந்தது. மைக்கில் குழந்தையைப் பற்றி அறிவிப்புக் கொடுத்தார்கள். அரை மணி நேரம் ஆகியும் யாரும் வரவில்லை. குழந்தை அழுதுகொண்டே இருந்தது.கூட்டத்தைக்கூடப் பார்க்காமல், அந்தப் பெண்மணி சட்டென்று குழந்தையை முந்திக்குள் வைத்துப் பால் கொடுக்க ஆரம்பித்தார். எனக்கு அந்தக் காட்சியைப் பார்த்த கணம், உடல் சிலிர்த்து அடங்கியது. கொஞ்ச நேரத்தில் கூட்டம் கலைந்து ஓடியது. அவரவர்க்கான ஊர்களுக்கு, அவரவர் போய்ச் சேர்வதுதான் முக்கியம் அல்லவா? போலீஸோடு குழந்தையை எடுத்துக்கொண்டு அந்தப் பெண்மணி சென்றார். எனக்கு, அந்தப் பேருந்து நிலையமே நம் தேசத்தைப் போலத் தோன்றியது!

# 9

# உறவுகளும் பற்றுகளுமே உலகின் பெரும் பிணி..!

**செ** ல்வியின் வீடு, கடவுள் படங்களால் நிறைந்துகிடந்தது! ஏழெட்டு வருடங்கள் இருக்கும் செல்வியைப் பார்த்து. அவ்வப்போது சினிமாவில் அட்மாஸ்பியருக்கு அழைத்து வரப்படுபவர். அவரைப் பார்க்கும்போது, அசோகமித்திரனின் ‘மானசரோவர்’நாவலில் வரும் சியாமளாதான் ஞாபகத்துக்கு வருவார்.

எப்போது பார்த்தாலும் பெரும் குரலெடுத்துச் சிரிப்பதோ, யாரேனும் திட்டி விசும்பலாக அழுவதும் செல்வியின் வாடிக்கை. வறுமையும் காலமும் தின்றுவிட்ட செல்வியின் உடலில் இன்னும் கொஞ்சம் வனப்பு இருப்பது, நாடகத்தின் எஞ்சிய காட்சிகளுக்கோ எனத் தோன்றும்.

ஒரு முறை, ஹேண்ட்பேக்கில் இருந்து மடித்து மக்கிய பழுப்புத்தாள் ஒன்றை எடுத்துக் காட்டினார். 20 வருடங்களுக்கு முன்பு ஏதோ ஒரு பத்திரிகையில் பாஸ்போர்ட் சைஸ் கறுப்பு — வெள்ளை போட்டோவுடன் செல்வியைப் பற்றி பெட்டிச் செய்தி வந்திருந்த பக்கம் அது. ‘தூண்டில் சிரிப்பிலேயே இழுக்கும் இவர், கோடம்பாக்கத்தில் நாயகியாக ஒரு சூப்பர் ரவுண்ட் வருவார் என்பதில் ஐயம் இல்லை’ என்றது அந்தத் துணுக்கு. ‘‘என் குடும்பத்தைக் கரை சேக்கறதுக்குள்ளயே ரவுண்ட் ரவுண்டா முடிஞ்சுருச்சு முருகா...’’ என அதிர அதிரச் சிரித்தார்.

ஒரு முறை சூளைமேட்டில் கை தட்டிக் கூப்பிட்டார். ‘‘பக்கத்துலதான் வீடு... வரலைன்னா, சாலை மறியல்ல உட்கார்ந்துருவேன்...’’ என்றபடி இன்னும் பெரிதாகச் சிரித்தார்.அவரது வீட்டுக்குப் போனபோதுதான் பார்த்தேன்... வாசலில் தொடங்கி சமையல் அறை வரை எங்கெங்கும் கடவுள் படங்கள். வாசல் மாடத்தில் அன்னை மேரி குழந்தை இயேசுவோடு நிற்கிற சிலை. சுவர் முழுக்க குரூப் போட்டோவுக்கு போஸ் கொடுத்த மாதிரி அத்தனை சாமிகளும் அலங்காரத்தில். கூடத்தில் சிவன், பிள்ளையார், ஷீர்டி சாய்பாபா. சமையலறை செல்ஃபிலும் மலைப் பிரசங்க இயேசு. ரூமில் பெரிதாக வெங்கடாசலபதி.

‘‘என்னங்க இது... வீட்ல ஒரு இடம் விடாம சாமி படமா மாட்டிவெச்சிருக்கீங்க?’’

‘‘படைச்சு அனுப்பிட்டா மட்டும் போதுமா முருகா? என்னை எப்பிடி வெச்சிருக்காங்கனு அவங்களுக்கு உறைக்க வேணாமா..? அதான் எல்லோரையும் கொண்டுவந்து உக்காரவெச்சிருக்கேன்.’’

செல்வி சொன்ன இந்த வார்த்தைகள், மனித இனத்தின் மனக்குரல் என இப்போது தோன்றுகிறது. கடவுளுக்கும் மனிதனுக்குமான தீராத உரையாடலின் முடிவற்ற சொற்கள் அவை.

சில வருடங்களுக்கு முன்பு எட்டயபுரம் போயிருந்தபோது, பூட்டப்பட்ட பாரதியாரின் வீட்டுக்கு வெளியே சட்டம் இடப்பட்ட கம்பிகளைப் பிடித்துக்கொண்டு அந்த இரவில் நின்றேன். வீட்டுக்குள் யாரோ ஏற்றிவிட்டுப் போன அகல் அசைந்துகொண்டு இருந்தது. சட்டென்று,

*‘காலை இளவெயிலின் காட்சி — அவள்*
*கண்ணொளி காட்டுகின்ற மாட்சி*
*நீல விசும்பினிடை இரவில் சுடர்*
*நேமி யனைத்துமவள் ஆட்சி’ — என்ற*

*பாரதியின் வரிகள் அசரீரியாக ஒலிப்பதுபோல்*
*ஒரு பிரமை தோன்றியது.*

அங்கே இருந்து திருநெல்வேலி போகிற பஸ்ஸில் ஏறியபோது, கூடை நிறையக் கொய்யாப் பழங்களோடு ஒரு சிறுமி உட்கார்ந்து இருந்தாள். கண்டக்டர் டிக்கெட் கேட்ட போது கொஞ்சம் பழங்களை எடுத்து நீட்டினாள் அந்தச் சிறுமி. கடுகடுத்து, நீண்ட விசில் அடித்த கண்டக்டர், ‘‘இதுகளுக்கு இதே வேலையாப் போச்சு... எறங்கும்மா...’’ என மின்னல் நொடியில் அவளை நடு வழியில் இறக்கிவிட்டு, பஸ்ஸைக் கிளப்ப வைத்தார். நடு வழி இருட்டில் அந்தச் சிறுமி கரைந்து மறைந்தாள்.

ஜெமினி பாலத்துக்குப் பக்கத்தில் இருக்கும் ஒரு பள்ளிக்குப் போயிருந்தேன். நண்பர் ஒருவரின் குறும்படத்தில் நடிக்க ஒரு சிறுமியைத் தேடிப் போயிருந்தோம். ஷோபனா என்கிற சிறுமியை அறிமுகப்படுத்தினார்கள். ‘‘நீங்க கேட்கற மாதிரி இவ கரெக்டா இருப்பா... ரொம்ப க்யூட் சார். பாரதியார் பாட்டெல்லாம் பிரமாதமாப் பாடுவா. ஷோபனா ஒரு பாட்டுப் பாடு...’’ என்றார் பார்வையற்ற ஒரு டீச்சர்.

சில விநாடிகள் மௌனித்து சட்டென,

*‘காலை இள வெயிலின் காட்சி — அவள்*
*கண்ணொளி காட்டுகின்ற மாட்சி’*

எனப் பாட ஆரம்பித்தாள் ஷோபனா. உண்மையில் இன்னொரு ஜென்மத்தில் நுழைவதைப்போல இருந்தது எனக்கு. பாடிக்கொண்டு இருக்கும்போதே அவள் உணர்ச்சிவசப்பட்டு காலை எடுத்துவைக்க, ‘தட்ட்ட்’டெனச் சத்தம் வந்தது. அப்போதுதான் அவளுக்கு ஒரு பக்கம் மரக் கால் என்பதைக் கவனித்தேன். சொல்ல முடியாத உணர்வு நிலை கிளர்ந்தது. அன்று நடு வழியில் இறக்கிவிடப்பட்ட சிறுமியும் ஷோபனாவும் ஒன்றேதான் எனத் தோன்றியது.

நடு வழியில் இறக்கிவிடப்பட்ட சிறுமியைக் கடவுள் திருநெல்வேலிக்குக் கொண்டுபோய்ச் சேர்த்திருப்பாரா? பதில் காண முடியாத ஒற்றைக் கேள்விக்குப் பெயர்தான் கடவுளா?

திருவண்ணாமலையில், வெளிச்சம் விளையாடும் யோகி ராம்சுரத்குமாரின் தியான மண்டபத்தில் உட்கார்ந்து இருக்கும்போது பார்க்கிற வெள்ளைக்காரர்கள் எல்லாம் எனக்கு ஹெலினாவை நினைவுபடுத்துகிறார்கள். ஹெலினாவைப் பார்த்தது, ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு ஒரு பௌர்ணமி நாளில். விகடன் கட்டுரை ஒன்றுக்காக திருவண்ணாமலைக்கு வந்தபோது, பௌர்ணமி இரவில் கிரிவலப் பாதையில் இருக்கும் ஒரு மண்டபத்தில் கண்களில் நீர் வழிய உட்கார்ந்திருந்தாள்.

ஆங்கில மொழிபெயர்ப்புக்காக நண்பர் குமாரபாலனை அழைத்துப் போயிருந்தேன். வெகு நேர தியானத்துக்குப் பிறகு எழுந்த ஹெலினாவைப் பேட்டி என அணுகியபோது, கடுமையாக மறுத்துவிட்டாள். தொடர்ந்து சென்ற குமாரபாலன், ரமணரைப் பற்றிப் பேச்சு ஆரம்பிக்க, கொஞ்சம் கொஞ்சமாக எங்களுடன் பேச ஆரம்பித்தாள் ஹெலினா.

மறுநாள் ரமணாஸ்ரமத்துக்கு வெளியே உட்கார்ந்து இரவெல்லாம் பேசிக்கொண்டு இருந்தோம். டென்மார்க்கில் இருந்து பிடுங்கிக்கொண்டு இந்தியாவுக்கு ஓடி வந்தவள். அம்மா இரண்டாவது கல்யாணம் பண்ணிக்கொண்டு வர, காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கொண்டவன் திடுதிப்பென்று டைவர்ஸ் கேட்க... எல்லாவற்றையும் தூக்கி வீசிவிட்டு, இந்தியாவுக்கு ஓடி வந்திருக்கிறாள். இரண்டு வருடங்களாக இந்தியா முழுக்கச் சுற்றிவிட்டு, இப்போது திருவண்ணாமலைக்கு வந்திருப்பதாகக் கூறினாள்.

அந்த பாராவின் முடிவில், பெருமூச்சோடு வானத்தைப் பார்த்தபடி, ‘உலகின் பெரும் பிணி... உறவுகளும் பற்றுகளும்தான்’ என்றாள். ‘எந்தச் சூழ்நிலையில் உன்னை வைத்திருந்தாலும் மனம் உடைந்துபோகாமல், அதற்காக கடவுளுக்கு நன்றியுடன் இரு. நடப்பவை

எல்லாம் அவரின் ஆசீர்வாதம்' என்ற வாசகத்தை புன்னகை ததும்பச் சொன்னாள். விடியலில் அவள் ஒரு வெண் புறாவைப்போல் ஆஸ்ரமத்துக்குள் சென்றது, இப்போது ஹாசிப்கானின் ஓவியம்போல் மனதில் வழிகிறது.

ஹெலினாவைப்போல் எங்கெங்கிருந்தோ ஆயிரமாயிரம் பேர் கடவுளைத் தேடி அலைகிறார்கள். ஏதேதோ தேசங்களில் இருந்து எவ்வளவோ காயங்களைச் சுமந்துகொண்டு கருணையின் பாதம் தேடி மூச்சிரைக்க ஓடி வருகிறார்கள்.

திருவண்ணாமலையில் எழுத்தாளர் பவா.செல்லதுரை சார் வீட்டுக்குப் போயிருந்தேன். அவர் மனைவி ஷைலஜா அக்கா பிரமாதமான மொழிபெயர்ப்பாளர். அவர்களின் பிள்ளைகள், ஏழாவது படிக்கிற வம்சியும், நாலாவது படிக்கிற மானசியும் கவிஞர் பரிணாமன் பாடல்களைப் பாடியதைப் பார்க்க ஆச்சர்யமாக இருந்தது.

பவாவிடம், ''உங்களுக்குக் கடவுள் நம்பிக்கை உண்டா...?'' எனக் கேட்டேன்.

''இல்லை...'' என்றார்.

''எப்பவுமே இல்லையா..?''

''மார்க்சிய சிந்தனைகளைப் படிச்சுத் தேறின பின்னாடி, இயற்கைதான் உலகம். கடவுள்னு ஒரு விஷயம் கிடையாதுனு உறுதியா நம்ப ஆரம்பிச்சுட்டேன் முருகன். நானும் ஷைலஜாவும் இப்பவும் அப்படித்தான் இருக்கோம். ஆனா, நடுவுல என் மூத்த பையன் சிபி ஒரு ஆக்ஸிடென்ட்ல இறந்து போனப்போ, ரெண்டு பேரும் உடைஞ்சு போயிட்டோம். முழுக்க ஒரு சூன்யத்துல போய் அடைஞ்சுட்ட மாதிரி ஆகிருச்சு. ரெண்டு பேருக்குமே ஏதோ ஓர் ஆறுதல் தேவைப்பட்டுச்சு.அது கடவுளா இருந்தாக்கூடப் பரவாயில்லைனு தோணுச்சு'' என்றவர் மனைவியைப் பார்த்துப் புன்னகைத்து விட்டுச் சொன்னார்.



‘‘சிபி, இனிமே கிடைக்கமாட்டான்னு தெரிஞ்சும் அவனை எங்கெங்கேயோ தேடினோம். ஒரு நாள், விசிறி சாமியார் யோகி ராம்சுரத்குமாரைப் பார்க்கணும்னு தோணுச்சு. ஏதோ ஆறுதல் கிடைக்கும்னு போனோம். ஆஸ்ரம வாசல்ல பெரிய கூட்டம். எல்லார்கிட்டயும் சீட்டு எழுதி வாங்கினாங்க. நான் ‘என் மகனைக் கண்டுபிடிக்க வேண்டும்’னு எழுதி அனுப்பினேன்.

சில நொடிகள்ல சுரத்குமார் வந்தார். ஷைலஜாட்ட, ‘என்னம்மா வேணும் உனக்கு?’னு கேட்டார். ‘என்னை அம்மானு கூப்பிட யாரும் இல்ல. எம் பையன் வேணும் சாமி’னு சொன்னாங்க. உடனே அவர், ‘உன் பையன் எங்கேயும் போகலையே... எ சன் வில் கம் டு கால் யு அம்மா. டோன்ட் வொர்ரி’னு சொல்லிட்டு எழுந்தார். ஒரு நிமிஷம் அந்த மண்டபத்துலேருந்து, ‘பவாப்பா... ஷைலம்மா’னு சிபி ஓடி வருவானோனு மனசு பதறுச்சு முருகன்.

அங்கேயிருந்து வெளியே வந்தப்போ ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி இருந்த அதே மனநிலைதான் இருந்துச்சு. ஷைலஜாட்ட, ‘உனக்கு சாமியாரைச் சந்திச்சது ஆறுதலா இருந்துச்சா?’னு கேட்டேன். ‘இல்ல பவா... சிபி திரும்ப வர்ற வரைக்கும் எதுவுமே எனக்கு ஆறுதல் தர

முடியாதுனு தெரிஞ்சது'னு சொன்னாங்க. இதோ இந்த நிமிஷம் வரை காலமும் மனுஷங்களும்தான் எங்களை ஆறுதல்படுத்தி அடுத்தகட்டத்துக்கு அழைச்சுட்டு வந்திருக்காங்க. இங்கே கடவுளை முன்வைக்கிற எல்லாமே அபத்தமா இருக்கு. நாமதான் நம்மளை வழிநடத்தணும்.''

அங்கிருந்து வரும்போது, வாசலில் வம்சியும் மானசியும் வீட்டை நிறைத்து விளையாடிக்கொண்டு இருந்தனர். சிபி எடுத்துப்போன சந்தோஷத்தையும் ஆறுதலையும் இவர்களிடம் கொடுத்து அனுப்பியது யார் என்ற கேள்வி என்னைப் பின்தொடர்ந்தது!

என் அப்பா 20 வருடங்களுக்கும் மேலாக பழநிக்கு மாலை போட்டவர். இப்போது நானும் சபரிமலைக்குப் போய் வருகிறேன். நிஜமாகவே காரண காரியங்கள் இல்லை. அதிகாலையில் எழுவதும், குடிக்காமல் இருப்பதும், சுத்தமாகப் புழங்குவதுமாக அந்த 48 நாட்கள்... ஓர் அனுபவம். பயணமோ அதி அலாதி அனுபவம். ரயில் ஏறிப் போய் அதிகாலை செங்கனூர் ஸ்டேஷனில் இறங்கினால், குளிர் காதடைக்கும். தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா சாமிகள் கூட்டம் கூட்டமாக பம்பை பஸ்ஸில் வாசமடிப்பார்கள். 'சாமியே சரணம் ஐயப்பா' என மலை முழுக்கக் கும்மியடிப்பார்கள்.

பம்பையில் குளித்துவிட்டு நடக்க ஆரம்பித்தால், யார் யாரோ குளுக்கோஸ் கொடுப்பார்கள்; விசிறி விடுவார்கள். சின்னப் பாதையிலும் பெரிய பாதையிலுமாக மூச்சு முட்ட முட்ட எத்தனை சைஸில், எத்தனை தினுசில், எத்தனை பேர்..? நடக்க முடியாமல் 'டோலி'யில் போகிறவர்கள்... ஒவ்வொருவர் கண்களிலும் எவ்வளவு பிரார்த்தனைகள். சரங்கொத்தியில் இருந்து பிதுங்கி, நகர்ந்து, பதினெட்டுப் படிகளில் திமிறி ஏறி, கர்ப்பக்கிரகத்தில் ஐயப்பனைப் பார்ப்பது ஒரு சிறு மின்னல் நொடிதான்.

'ஒரு கணம் கண் மூடினால், ஒரு கோடி மின்னல் மின்ன வேண்டும்' என்கிற பாரதியின் வரி மாதிரி, அந்த ஒரு நொடியில் மனம் துள்ளி அடங்கும். லட்சோப லட்ச அழுக்குகளைச் சுமந்தோடும் பம்பையை

மறுபடி கடக்கும்போது, மனம் பேரமைதியில் இருப்பது உண்மையா, பிரமையா? என சத்தியமாக இப்போதும் தெரியவில்லை. ஆனால், ஒவ்வொரு முறையும் மலைக்குப் போய் வந்த இரண்டொரு நாட்களில் குடி, ஒழுங்கின்மை, அசுத்தம் எனக் கலைத்துப் போட்ட பழைய வாழ்க்கை ஆரம்பித்துவிடும் எனக்கு!

தஞ்சாவூர் பெரிய கோயிலில் இருந்து ஸ்ரீபெரும்புதூர் ராமானுஜர் வரைக்கும் தமிழ்நாட்டில் ஏராளமான கோயில்களைச் சுற்றிவிட்டேன். சாமிகளின் முகங்கள் அன்றி, மனித மனம்போல் கனத்து இருண்டு இருக்கும் கர்ப்பக்கிரகங்களில், பேரெழிலாய் எரியும் தீபங்களையே நெஞ்சில் சுமந்து வந்திருக்கிறேன். தீமைகளை எரிக்கும் தீபங்கள் நிரந்தரமாவதே எப்போதைக்குமான பிரார்த்தனை.

வாழ்வின் மாயங்களைப் பொறுக்க முடியாமல், வருடம் முழுவதும் கோயில் கோயிலாகத் திரியும் நிறைய அன்பர்களை நான் அறிவேன். அமைதி இன்மையையும் நோய்களையும் சுமந்துகொண்டு எவ்வளவு பேர் கடவுளைத் தேடுகிறார்கள்..?

*'விடுபடுதல் வேண்டி விரதம் இருந்து*
*இருமுடி கட்டி மலையேறி*
*மணிகண்டனைத் தேடிப்போனால் – அவன் கேட்கிறான்,*
*'ஏன் இங்கு வந்தாய்? என்னிடம் பதிலில்லை''*

என்பது பூமா. ஈஸ்வரமூர்த்தியின் கவிதை. என்னிடமும் பதில் இல்லை!

தொ.பரமசிவம் அய்யாவின் 'பண்பாட்டு அசைவுகள்' படித்த பிறகுதான், செல்லூரில் வனாந்தரத்தில் கிடக்கும் குலசாமி மகமாயி மேல் எனக்குப் பரிவு வந்தது. அறிவுமதி அண்ணனோடு அவரது ஊர்

சு.கீணனூரில் வீர அய்யனாரைப் பார்க்கப் போனபோது நடந்த உரையாடல்களில் அது இன்னும் அதிகமானது.

மகமாயி, ஏழைகளின் சாமி. கோழிக் கறி வாசமும் பொங்கச் சோறுமாக ‘ஆத்தாவைக் கும்பிட்டுக்கடா...’ என்பார் அப்பா. கன்னிமார் சூழ, ஊரடிக்க வந்தவனைக் காலில் போட்டு மிதித்துக் குடலை உருவும் மகமாயி. அறுப்பறுக்கும் முன்பு மொதக் கொத்து நெல்லை மகமாயிக்குத்தான் வைக்கிறார்கள் இப்போதும்.

குழந்தைப் பிறந்தால் தேடி வந்து அவள் காலடியில் போட்டு, ‘ஊன் உசுரைக் காப்பாத்தும்மா...’ எனக் கும்பிடுகிறார்கள். இந்த மண்ணில் வாழ்ந்து, மக்களுக்காக வாழ்ந்து நடுகல் எய்திய முப்பாட்டன்களை, பாட்டிகளைக் கும்பிடும் இயற்கை வாழ்வை செல்லூருக்குப் போகும்போதுதான் மீட்டெடுக்க முடிகிறது.

எப்போது போனாலும் கோயில் வாசலில் உட்கார்ந்து ‘வாங்கப்பா’ எனச் சாந்தமாக அழைக்கும் வேணு பூசாரி, கொடை கொடுக்கும் நள்ளிரவுகளில் ரௌத்ரமாக இருப்பார். நாக்கைத் துருத்தி பூச்சட்டி ஏந்தி விபூதியை வீசி... ‘மட்டேர் மட்டேர்’ எனச் சிக்குபவர்களை அடி பின்னுவார்.



அவர் குறி சொல்ல, அத்தனை பேரும் பம்மி நிற்பார்கள். சமீபத்தில் ஊருக்குப் போனபோது வேணு பூசாரியைத் தேடினேன். ‘‘அவரு

செத்துட்டார்டா... போன மாசம்தான்’’ என்றான் அண்ணன். அவர் இல்லாத மகமாயி கோயிலில் மண்ணில் விழுந்து எழுந்தேன்... வேணு பூசாரி சிறு தெய்வமாகிவிட்டார்!

உண்மையில், எனக்கு மரணங்கள்தான் கடவுளை நெருக்கமாக்கின. பல பேர், விடை அறிய முடியாத நோய்களின் குரூரங்களில்தான் கடவுளைத் தேடுகிறார்கள். கனவு, உணவு என எல்லோருக்கும் அவரவர் உடலும் மனமும்தான் முதல் சுமை.

எது கடவுள்? இந்தத் தர்க்கத்தில் இருந்து நான் விடுபட்டுவிட்டேன். அது அவரவர்க்கான விருப்பம், தேடல். வாழ்நாள் முழுக்கத் தீவிரமான கடவுள் மறுப்பாளராக இருந்த பெரியார் ஓர் இடத்தில், ‘‘நாத்திகன் என்று சொன்னால், கடவுள் இல்லை என்று சொல்கிறவன் இல்லை. நான் கடவுள் இல்லை என்று சொல்கிறவன் இல்லை, இருக்கிறது என்று ஒப்புக்கொள்ளவும் இல்லை. புராண, இதிகாச, வேத சாஸ்திரங்களை ஒப்புக்கொள்ளாதவர்களையே பார்ப்பனர்கள் ‘நாத்திகன்’ என்று குறிப்பிடுகின்றனர்’’ என்கிறார்.

‘‘சாதி உள்ளிட்ட குரூரங்களையும், மூடநம்பிக்கைகளையும், மத துவேஷங்களையும் கடப்பதுதான் இறைவழியின் முதல் படி’’ என்கிறார் பரமஹம்சர். கடவுளைப் பற்றிய உரையாடல்கள் எப்போதைக்கும் முடியப்போவது இல்லை என்பதுதான் நிதர்சனம். ஜே.கிருஷ்ணமூர்த்தி, கடவுளைப் பற்றி எப்போதும் பேசவில்லை. அதைப் பற்றியான கேள்விகள் வரும்போதெல்லாம், ‘இங்கே இப்போது இருக்கிற உன்னைப் பற்றி பேசுவோம்’ என்பதுதான் பதில். ‘முழுமையின் உள்பக்கம்தான் கடவுள் என்பது. ஆனால், ஒருவர் தன்னுள் இருக்கும் நுழைவாயில் வழியாகத்தான் அதனுள் நுழைய முடியும்’ என்கிறார் ஓஷோ. ‘அஹம் பிரம்மாஸ்மி’ என்பதும் ‘அன்பே சிவம்’ என்பதும் கருணை என்ற சொல்லின் எச்சம். கடவுள் என்பது கருணை என்ற சொல்லின் உச்சம்!

# 10

# தேர்தலைப் போட்டு அரசியலை வாங்குவோம்!

**எ**னக்கு ஓட்டு, ஊரில் இருக்கிறது! தேர்தல் காலம் என்றால், ஊரில் திருவிழா தொடங்கிவிடும். தி.மு.க—வின் பிரபல தலைமைக் கழகப் பேச்சாளர் நன்னிலம் நடராஜன் எனக்கு ஒண்ணுவிட்ட தாத்தா. ஊரில், எங்கள் வீட்டில் இருந்து நாலைந்து வீடுகள் தள்ளித்தான் அவர் வீடு.

தெருவில் 'டபுடுபு டபுடுபு'வென புல்லட் சத்தம் கேட்டால், பொடிசுகள் நாங்கள் தெறித்துத் தெருவுக்கு ஓடிவந்து, 'கலைஞர் வாழ்க... கலைஞர் வாழ்க...' எனக் கத்துவோம். 'சுட்டிக் கழுதைகளா...' என்று 'தேவர்மகன்' சிவாஜி மாதிரி அவர் ஆரஞ்சு மிட்டாய்களை அள்ளி வீசுவார். எங்கள் ஊருக்கு அவர்தான் 'கறுப்புக் கலைஞர்'.

அவர் பிறந்த நாளைக்குத் தெருவே கரை வேட்டிகளால் களைகட்டும். 'பாளையங் கோட்டைச் சிறையினிலே, பாம்புகள் பல்லிகள் நடுவினிலே...' என ஸ்பீக்கர் அலறும். கோ.சி.மணி, பழனிமாணிக்கம், 'பூண்டி' கலைச்செல்வன்... எனக் கட்சிப் புள்ளிகள் எல்லாம் வியர்வை வழியத் திரிவார்கள். ஆரஞ்சு மிட்டாய்களுக்குப் பதில் அன்று கேக் கிடைத்த சந்தோஷத்தில் நாங்கள் எகிறி எகிறி 'வாழ்க...' சொல்வோம்.

எலெக்ஷன் என்றால் என்.என். தாத்தா பேச்சுக்குத்தான் ஏரியாவில் கூட்டம் கும்மும். சாந்தமாக ஆரம்பிப்பார். 'என் தலைவன் இருக்கானே... எங்கூட்ல ஒரு புள்ள டீச்சர் டிரெயினிங் முடிச்சுட்டு, சும்மா தோசை

சுட்டுக்கிட்டுக் கெடக்கு. அதுக்கு ஒரு போஸ்ட் வாங்கித் தாய்யான்னா, மூஞ்சைத் திருப்பிக்கிறாரு...' என பெர்சனல் டச் கொடுப்பார்.

திடுதிப்பென்று வேட்டியின் ஒரு நுனியைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு அவர் டபுள் மீனிங் ஆட ஆரம்பித்தால், கூட்டத்தில் பெண்கள் ஏரியா மொத்தமாகக் காலியாகும். 'ஏம்மா... நான் உன்னைக் கேக்கறேன்...' என அவர் கேட்க ஆரம்பித்தாலே... சென்ஸார்தான்!

ராதாரவியும் எஸ்.எஸ்.சந்திரனும் கொரடாச்சேரிக்கு ஒரு முறை வந்திருந்தார்கள். அப்போது இருவரும் தி.மு.க—வின் தீவிர கில்லிகள். அண்ணாவில் இருந்து சிம்ரன் வரை பார்த்த காந்தி பூங்காவில் நடந்த கூட்டத்தில், ஜெயலலிதாவைக் காலி பண்ணினார்கள். சிவப்பு கலரில் பப்பளபளவென ராமராஜன் சட்டை போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த ராதாரவியைப் பார்க்கக் கூட்டம் முண்டியது. கூட்டம் முடிந்து ஒரு பாய் வீட்டில் இரண்டு பேருக்கும் பிரியாணி விருந்து.

சில பல வருடங்களுக்குப் பிறகு, ஒரு பிரசாரத்துக்காக அதே காந்தி பூங்காவில் எஸ்.எஸ்.சந்திரன் அ.தி.மு.க. கில்லியாக வந்திருந்தார். கலைஞர் குடும்பத்தையே விட்டு விளாசினார். அ.தி.மு.க. பாய் வீட்டில் பிரியாணி சாப்பிட்டார்.

அன்று இரவு கட்டாரி மாமாவோடு வெட்டாத்துப் பாலம் சைக்கிள் கடைக்குப் போனபோது, என்.என். தாத்தாவும் தீப்பொறி ஆறுமுகமும் உட்கார்ந்திருந்தார்கள். ''இவுனுவோ பாருங்கய்யா... பொடுக்குனு அந்தம்மா பின்னாடி போயிட்டானுவோ. எம்.ஜி.ஆர். பின்னாடி போயிருந்தா... நானும் தீப்பொறியும் இன்னிக்கு மினிஸ்டருய்யா. மனுசனுக்குக் கொள்கை வேணாமாய்யா...'' எனத் தாத்தா கோபப்பட்டது இப்போதும் நினைவில் இருக்கிறது. அதன் பிறகு தீப்பொறியும் அ.தி.மு.க—வுக்குப் போனார்.

'ஒரே ஒரு ராத்திரி அ.தி.மு.க—வுக்குப் போய்விட்டு, காலையில் தாய்க் கழகத்துக்கு வந்துவிட்டார்' என என்.என். தாத்தா பற்றியும் சொல்வார்கள்!

தாத்தா வாரத்துக்கு ஒரு முறைதான் ஊரில் இருக்கும் வீட்டுக்கு வருவார். அவர் வருகிற அன்று மஞ்சள் தேய்த்துக் குளித்து, சுங்குடி கட்டித் தகதகவெனத் திரியும் ஜெகதாம்பா ஆத்தா. புல்லட்டில் வருகிற தாத்தா, ஒவ்வொரு முறையும் ஓர் அலுமினிய வாளியோடு வருவார். தெருவில் விளையாடித் திரியும் எங்களிடம், ''டேய்... இதை ஆத்தாட்டக் குடு'' என வாளியைக் கொடுப்பார்.

ஒரு முறை, யாருக்கும் தெரியாமல் அந்த வாளியைத் திறந்து பார்த்தேன் ஆவலோடு. அரை வாளிக்கு அரிசி இருந்தது. அதன் மேல் ஒரு பாலிதீன் கவரில் அல்வா, வாழை இலையில் மல்லிப்பூ பண்டல். இப்போது நினைத்தால், அத்தனை ஆண்டுகாலத் திராவிடக் கட்சிகளின் அரசியலை எவ்வளவு சூசகமாக அந்த வாளிக்குள் அடக்கிவிட்டார் தாத்தா! எனத் தோன்றுகிறது. அரிசி... மல்லிப்பூ... அல்வா!

தேர்தல் காலங்களில் கலைஞர், ஜெயலலிதா, வைகோ... எனப் பெருந்தலைவர்கள் ஆன் தி வேயில் ஊர் கடைத்தெருவுக்கு திடுதிப்பென்று வந்துவிடுவார்கள். தடதடவெனத் தகவல் பரவி மொத்த ஜனமும் ஓடும். ஊரில் சரிபாதி முஸ்லிம் மக்கள் என்பதால், வருகிற அத்தனை பேரும் 'மதச்சார்பின்மை', 'சிறுபான்மைச் சமுதாயத்துக்கு' போன்ற வார்த்தைகளை அள்ளி வீசுவார்கள்.

ஓர் இரவு, ஜெயலலிதா வந்து கடைத்தெருவில் வேனில் நின்றபடி பேசினார். டியூப் லைட் வெளிச்சத்தில் கொசுக்கள் மொய்க்க, அதைக் கைகளால் வீசியபடி, ஒரே நிமிடத்தில் பேசி முடித்துக் கிளம்பிவிட்டார். வீட்டுக்கு வந்த கமலா அத்தை, ''ஏயப்பா... ரோஸ் கலர்ல இருக்கு. நம்ம கைல மருதாணி வெச்சாப்ல இருக்கு அந்தம்மா கன்னம்... எவ்வளவு அழகா கொசு அடிச்சுச்சு பாரேன்...'' என ராத்திரியெல்லாம் பேசிக்கொண்டே இருந்தது.

ஒரு முறை கலைஞர் வந்தபோது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டைச் சேர்ந்த பாவா, ''ரோட்டோட போயிடாதீங்க... வெட்டாத்துல இறங்கிப் பார்த்துட்டுப் போங்க. மணல் அள்றது பூராம் உங்க ஆளுங்களும் அ.தி.மு.க—காரனும்தான்...'' எனக் கத்த, பெரிய களேபரம் ஆனது.

கடந்த தேர்தலில் எல்லாம் எங்கள் ஊர்க்காரர்கள் பயங்கர சோம்பேறிகளாகிவிட்டார்கள். விஜயகாந்த்தில் இருந்து வடிவேலு வரைக்கும் பொழுதுக்கும் டி.வி—யில் கரைச்சலைக் குடுக்க, எந்தத் தலைவருக்கும் கடைத்தெருவில் பாதிக் கூட்டம்தான் கூடியது. அந்த நேரத்தில் வீட்டுக்குப் போன் பண்ணும்போது அம்மாவிடம் கேட்டேன், ‘‘ஊர்ல என்னம்மா விசேஷம்?’’




‘‘ஸ்டாலின், கடைத்தெருவுக்கு வந்துருக்காராம்... சித்தார்த்தன் போயிருக்கான்...’’

‘‘ஏன் நீ போவுல..?’’

‘‘போய்யா, டி.வி—யிலயே போரடிச்சுப் போச்சுய்யா’’ என்றது அலட்சியமாக!

ஒருவன் கள்ள ஓட்டுப் போட்ட அனுபவத்தை எழுதினால், அது தேசத்தின் இறையாண்மையைப் பாதிக்குமா எனத் தெரியவில்லை. நான் போட்ட முதல் ஓட்டு கள்ள ஓட்டுதான்.

ஓட்டுப் பட்டியலில் இடம் இல்லாத 16 வயதில், முள்ளால் மாமா வீட்டுக்குப் போயிருந்தேன். தேர்தல் நாள் அன்று மூர்த்தி அண்ணன்

அவசரமாக வந்து, ‘‘தம்பிக்குட்டி, வாடா குட்டி... மாரீஸ்ல போய் ‘அபூர்வ சகோதரர்கள்’ படம் பார்ப்போம்!’’ என இழுத்துப் போனவர், லால்குடியில் ஒரு ஸ்கூலுக்கு எதிரே இருந்த அ.தி.மு.க. பூத்துக்குக் கூட்டிப்போனார்.

‘‘தி.மு.க—காரன் தாளிக்கிறான்... தடுக்கவே முடியலை. போன தடவை பூத் பாலிடிக்ஸ்லயேதான் ஜெயிச்சானுங்க...’’ என பூத்துக்குள் கூட்டம் போட்டுக் கொந்தளித்துக்கொண்டு இருந்தார்கள். அங்கே இருந்த ஒரு குண்டரிடம் மூர்த்தி அண்ணன் என்னைக் காட்டி, ‘‘குட்டி எப்பிடி? கோவிந்தராஜன் பையனுக்கு...’’ என்றார். அலட்சியமாகக் கையைக் காற்றில் வீசி ஓ.கே. சொன்னார் குண்டர்.



கோவிந்தராஜன் என்பவரது மகன் திருப்பூர் பனியன் கம்பெனிக்கு சாயம் போடப் போய்விட்டான். அவன் ஓட்டை நான் போட வேண்டும். அண்ணனும் கூட இரண்டு பேரும் என்னை மூத்திரச் சந்துக்குக் கூட்டிப்போனார்கள். அதில் ஒருவர் என்னிடம் சின்சியராக, ‘‘தம்பி... ஓட்டுப் போடப் போகும்போது உன்னை விசாரிப்பாங்க. தெளிவாச் சொல்லணும். இப்போ உன் பேரு ஜி.வீரமணி. ங்கொப்பன் பேரு கோவிந்தராஜி, அம்மா பேரு மயிலாம்பா... நல்லா ஏத்திக்கப்பா...’’

என்றார். தெருப் பெயர், வீட்டு அட்ரஸ் என எல்லாவற்றையும் மனப்பாடம் பண்ணிப்போய் வெற்றிகரமாக ஓட்டுப் போட்டுவிட்டு வந்தேன்.

நான் திரும்பி வந்தபோது பூத்தில் என்னைப்போல் இன்னும் நாலைந்து பேர் நின்றிருந்தார்கள். அந்தக் குண்டர் என் கன்னத்தைக் கிள்ளி ஓர் உம்மா குடுத்தார். ‘‘தம்பி, ஓட்டு போடப் போனப்போ என்ன நடந்துச்சுனு இவுனுவோளுக்குச் சொல்லு...’’ என என்னை புது கஸ்டமர்களுக்கு டியூஷன் எடுக்கவிட்டார்.

இரவு மாரீஸில் ‘அபூர்வ சகோதரர்கள்’ பார்த்துவிட்டு வீட்டுக்கு வந்தபோது, மூர்த்தி அண்ணன் கையில் பெரிய கட்டுப் போட்டுக்கொண்டு கூட்டத்தோடு திண்ணையில் உட்கார்ந்து இருந்தார். அதன் பிறகு பூத் ஏரியாவில் நடந்த தகராறில் கைகலப்பாகி அண்ணனுக்குக் கை பணால். மூன்று வருடங்களுக்கு முன்பு மூர்த்தி அண்ணனைப் பார்த்தபோது ஏரியா கவுன்சிலர் ஆகி இருந்தார்!

மதுரை டி.வி.எஸ்—ஸில் 12 வருடங்களுக்கு முன்பு வேலை பார்த்துக்கொண்டு இருந்தபோது, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் ஆர்வமாக இருந்தேன். நிரந்தரம் இல்லாத கூலித் தொழிலாளிகள் எல்லாம் ஓர் அணியாக இருந்தோம். லோகுதான் எங்கள் அணிக்கு லீடர். அப்போது வந்த நாடாளுமன்றத் தேர்தலில் மார்க்சிஸ்ட் வேட்பாளருக்காக லோகு ஆவேசமாகக் களத்தில் குதித்தார்.

கொள்கை வெங்காயம் எல்லாம் இருக்கட்டும்... கோனார் கடை கறித் தோசைக்காகவே நாங்கள் ஒரு குரூப் இரவெல்லாம் போஸ்டர் ஒட்டுவோம். ஒரு ஹீரோ அனுபவத்துக்காகவே மைக் கட்டிய ஆட்டோக்களில் தொத்திக்கொண்டு கோஷம் போடுவோம். ‘புரட்சி மலரும் பொழுது, விடியும் வறுமையின் இரவு, ஊழலை எரிக்க, ஏழைகள் சிரிக்க...’ என்றெல்லாம் லோகு மைக்கில் கவிதையாக முழங்குவார். ஏரியா ஏரியாவாகப் போய் நோட்டீஸ் போடுவதும், சைக்கிள் பேரணி கிளம்புவதுமாக உச்சி வெயிலில் செம பிஸியாகத் திரிவோம். அங்கங்கே தண்ணீர்ப் பந்தல், மோர்ப் பந்தல் சப்ளைக்கு

நிற்போம். வி.ஐ.பி—க்கள் பிரசாரத்துக்கு வந்தால் வண்டிகள் பின்னாலேயே ஓடி, போலீஸ் அடி வாங்குவது தனி ஹீரோயிஸம்.

பிரசாரத்துக்குப் போகும்போது, அங்கங்கே சாராயம் ஆறாக ஓடும். கரை வேட்டிகள் ஏரியாவில் பணப் பட்டுவாடா பின்னி எடுக்கும். ஆளாளுக்கு பிரியாணியைக் கட்டிவிட்டு வாட்டர் பாக்கெட்டுகளை பீய்ச்சிக்கொண்டு கிறுகிறுத்து அலைவார்கள்.

லோகு சரக்கடிப்பது இல்லை. அதனாலேயே எங்களுக்கும் சரக்கு கட். காசும் வாங்கமாட்டார். 'பசங்களுக்கு சாப்பாடு வாங்கிக் கொடுத்தா மட்டும் போதும்ணே...' என்பார். எங்கள் குரூப்புக்கே டென்ஷனாக இருக்கும். 'கான்ட்ராக்ட் லேபர்ஸைத் தகுதி அடிப்படையில நிரந்தரமாக்கணும். ஓ.டி. காசை அதிகம் ஆக்கணும்...' என லோகு, எலெக்ஷனுக்குப் பிறகு நிறைவேற்றிக் கொள்வதற்குப் பெரிய லிஸ்ட்டே வைத்து இருந்தார்.

அந்த எலெக்ஷனில், லோகு வேலை பார்த்த கூட்டணி வேட்பாளர்தான் ஜெயித்தார். நான் அங்கிருந்து வந்துவிட்டேன். லோகுவின் கோரிக்கைகள் நிறைவேறினவா என்பது தெரியவே இல்லை!

லோகு இப்போது சிவகாசியில் பிரின்டிங் பிசினஸ் பார்த்துக்கொண்டு இருக்கிறார். நான் பத்திரிகை, சினிமா என வந்துவிட்ட பிறகு, தொடர்பே அற்றுவிட்டது. சில மாதங்களுக்கு முன்பு எங்கேயோ நம்பர் பிடித்து போன் பண்ணினார். அவ்வப்போது பேசுவோம். போன மாதம் சென்னைக்கு வந்தபோதுதான் 12 வருடங்களுக்குப் பின்பு அவரை நேரில் பார்த்தேன்.

மதுரையில் சே குவேரா — ஸ்டாலின் படங்கள் ஒட்டப்பட்ட அறையில், மண் சட்டியில் பீடி தட்டியபடி ஆவேசமாகப் பேசும் லோகுவே இல்லை அவர். பளிச் என்று வெள்ளைச் சட்டை, கறுப்பு பேன்ட், கோல்டு வாட்ச் கட்டி அம்சமாக இருந்தார்.

‘‘அண்ணே... ஆளே மாறிட்டீங்களேண்ணே...’’ என்றதற்கு சிரித்தபடி, ‘‘முதலாளி ஆகிட்டோம்ல...’’ என்றார்.

‘‘என்னண்ணே... அரசியல்லாம் என்னாச்சு..?’’ என்றதும் இன்னும் சிரித்தார்.

‘‘தம்பி, அரசியல் பிசினஸ் ஆயிருச்சுன்னு நமக்குப் புரியத்தான் லேட்டாகிருச்சு. இங்க எலெக்ஷன், கலெக்ஷன் எல்லாத்தையும் அம்பானி ஆளுகதானே நடத்துறான். சிவகாசிப் பக்கம் கிராமத்துல எல்லாம் கேன் வாட்டர் குடிக்க ஆரம்பிச்சுட்டான். ஊருக்கு ஊர் தண்ணி ஃபேக்டரி வந்துருச்சு. நம்ம கண்ணு முன்னாடி சைக்கிள்ல போனவன்லாம் கவுன்சிலர் அது இதுன்னு ஆகி சுமோல போறான். ரியல் எஸ்டேட் பண்றேன்னு குவாலிஸ்ல போறான். அவனைக் கேள்வி கேக்க அவங்க கச்சித் தலைவருங்க யாருக்கும் தகுதி இல்லை. இவன் லட்சம்னா, அவன் அசால்ட்டா ஆயிரம்... லட்சம்... கோடிங்கிறான்.

ஒண்ணு தெரியுமா ஒனக்கு... வார்டு மெம்பர்ல இருந்து எம்.பி. வரைக்கும் ஒவ்வொருத்தருமா சம்பாதிக்கிறதே... வருஷத்துக்கு ஒரு ஸ்பெக்ட்ரம் காசாம். அதனாலதான், கம்யூனிஸ்ட் எம்.எல்.ஏ. கட்சி தர்ற மாசச் சம்பளத்துல நேர்மையா வாழ்றார்னா... அதை நியூஸ் போட்டு ஆச்சர்யமாக் கொண்டாடுற அளவுக்கு கேவலமா இருக்கு இந்த நாடு. இந்தியத் தேர்தல், அரசியல் மொத்தத்தையும் ‘போட்டு வாங்குவோம்’ என்ற வார்த்தைகளில் சொல்லிவிடலாம்.

11

# போலீஸுக்கும் எனக்கும் படா தோஸ்து உறவு!

**சு**மார் ‘12 ஆண்டுகளுக்கு முன்’ என்ற பின் நினைவு டைட்டில் கார்டுடன் தொடங்குகிறது.

அன்று நாச்சியார்கோவிலில் இலியாஸை பிக்கப் பண்ணிக்கொண்டு, கும்பகோணம் விஜயா தியேட்டரில் மேட்னி போவதாகத் திட்டம். தீபாவளி துணிக் கடை விளம்பரம் மாதிரி நண்பன் பளீர் வேட்டிசட்டையில் நின்றான்.



இருவரும் தெருவில் இறங்கி நடந்து திரும்பும்போது, இரண்டு போலீஸ்காரர்கள் எங்களைப் பின்தொடர்வதைக் கண்டேன்.

அலட்சியமாக என்னிடம் திரும்பிய இலியாஸ், ‘‘மாப்ள... அப்பிடியே மெதுவா மூவ் பண்ணு..." என்றான். எனக்குப் பகீர் என்றது.

‘‘என்னடா... எதாச்சும் பிரச்னையா?"

‘‘மூவ் பண்றா..."

அதற்குள் போலீஸ்காரர்கள் தபதப எனத் துரத்த ஆரம்பிக்க, சிதறி ஓட ஆரம்பித்தோம். சரியாகத் தெரு முக்கில் திரும்பும்போது பஸ் வர, படிக்கட்டில் தவ்வி ஏறினான் இலி. ‘கிழக்கே போகும் ரயில்’ க்ளைமாக்ஸ் ராதிகா மாதிரி பஸ் பின்னாலேயே ஓடிய எனக்கு, எதிர்பாராத கணத்தில் முதுகில் சொட்ட்ட்டேரென்று லத்தி இறங்கியது. அலறி ஸ்தம்பித்த நொடியில்... இன்னோர் அடி. கால்கள் பின்னி, கண்கள் இருளும்போதே கோத்து இழுத்து பஸ்ஸுக்குள் ஏற்றினான் இலியாஸ்.

கலவரமாகப் பார்த்த கண்டக்டரிடம், விரித்த கையில் கட்டை விரலை மட்டும் மடக்கி ஒரு ‘சிக்னல்’ வணக்கம் போட்டான். கும்பகோணம் பஸ் ஸ்டாண்டில் சைக்கிள் ஸ்டாண்ட் போட்டு இருக்கும் இலியாஸ், இப்படி ஏகப்பட்ட நட்பு சிக்னல்கள் வைத்திருந்தான். நான் கிட்டத்தட்ட பஸ்ஸுக்குள் மூர்ச்சையாகி விழுந்தேன்!

பஸ் ஸ்டாண்டில் என்னைக் கைத்தாங்கலாக இறக்கி, சைக்கிள் ஸ்டாண்டில் உட்காரவைத்து, கூல்டிரிங்க்ஸ் வாங்கி வந்தான் நண்பன்.

‘‘வலி பின்னுது மாப்ள...’’

‘‘பெருமாள் கோயில் திருவிழா வரட்டும்... அவனுங்க ரெண்டு பேரையும் பொலி போட்றேன்..."

‘‘அது இருக்கட்டும்ரா... நம்மளை ஏன்டா போலீஸ் தொரத்துச்சு?"

‘‘அரசியல் மாப்ள... நாளைக்கு எதிர்க்கட்சி பந்த்ல... அதான் முன்னெச்சரிக்கை நடவடிக்கையா தி.மு.ககாரன் எல்லாரையும் அரெஸ்ட்

பண்றானுங்க. நாந்தானே இளைஞரணித் துணைச் செயலாளரு..." என்று சொன்னபோதுதான் அவனது வேட்டியில் கறுப்புசிவப்புக் கரையைக் கவனித்தேன்.

''இதுக்கெல்லாம் பயந்து கொள்கைய விட்டா, அரசியல்ல வளர்ச்சி இருக்காது மாப்ள. இன்னிக்குப் பயப்படாம இப்பிடி வந்தாதான், கட்சியில ஒரு அட்டென்ஷன் வரும். சிட்டிபாபுலாம் மிசால அடி வாங்கி செத்தே போயிட்டாப்ல. தளபதிக்கு இன்னும் உடம்பு முழுக்கத் தழும்பு இருக்காம்... நம்ம சும்மா உட்ர முடியுமா மாப்ள..."

''அதுக்கு நீ அடி வாங்கலாம்... நான் எதுக்கு வாங்கணும்?"

**அ** டுத்த முறை என்னை போலீஸ் ஸ்டேஷனுக்கு இழுத்துப்போனது ஒரு நாய். நிஜமாகவே நிஜ நாய்!

கருமத்தம்பட்டியில் பாலிடெக்னிக் படிக்கும்போது, ஏரியா கவுன்சிலர் வீட்டுக்கு எதிர்த் திசையில் அறை எடுத்துத் தங்கி இருந்தோம். என் வகுப்பு மற்றும் அறைத் தோழன் ஜெகத், கல்லூரியின் வசூல்ராஜா.

ஒரு முறை பஞ்சாபி தாபாவில் மூன்று பீர் குடித்துவிட்டு, ஏதோ ஒரு லாரியில் ஏறிப் படுத்து, ஆந்திரா வரை போய்த் திரும்பியவன். மூன்றாவது செமஸ்டர் முடிவில் முறையே எனக்கு 5, அவனுக்கு 7 அரியர்கள். அந்தக் கடுப்பில் அவன் நடந்து வரும்போது, தெருவில் இரண்டு நாய்கள் 'என்னமோ ஏதோ...' கொண்டாடி இருக்கிறது. பயல் மிருகமாகிக் கல் எறிந்ததில், ஆண் நாய்க்குக் கால் முறிவு. கொஞ்ச நேரத்தில் ஏரியா பரபரப்பானது. காரணம், அடிபட்ட நாய் ஒரு கவுன்சிலர் வீட்டு ப்ளாக்கி.

அடுத்த ஒரு மணியில் ஜெகத்தை போலீஸ் வந்து அள்ளிப்போனது. 'கேவலம் ஒரு நாய்க்காக மாணவனைக் கைது செய்வதா..?' என்ற ஆவேசத்தோடு நாங்கள் குரூப் கட்டி சாலை மறியலில் இறங்கினோம். கொஞ்ச நேரத்தில் ஜீப்பில் இன்ஸ்பெக்டர் வந்தார்.

‘‘ஃப்ரெண்ட்ஸ்... எதுவா இருந்தாலும் வாங்க ஸ்டேஷன்ல போய்ப் பேசலாம்..." என்றார் இன்முகத்தோடு.

‘‘அதெல்லாம் முடியாது சார்... ஜெகத்தை ரிலீஸ் பண்ணிட்டு மன்னிப்பு கேளுங்க..."

‘‘அதுக்குத்தான் கூப்பிடுறேன். நீங்க ஸ்டூடன்ட்ஸ்... விஷயம் சீரியஸானா, எங்களுக்குத்தானே கெட்ட பேரு. ப்ளீஸ் ஃப்ரெண்ட்ஸ்... ஸ்டேஷன்லவெச்சு முடிச்சுக்கலாம்" உலகப் பணிவின் பிராண்ட் அம்பாஸடர் மாதிரி இருந்தார் இன்ஸ்பெக்டர். ‘‘இப்போ புரியுதா ஸ்டூடன்ட்ஸ் பவர்’’ எனக் கண்ணடித்தான் பகவதி.

ஸ்டேஷனில் ஜெகத், ஜன்னி வந்த முயல் மாதிரி உட்கார்ந்து இருந்தான். இன்ஸ்பெக்டர் எங்களைப் புன்னகையோடு உட்காரச் சொன்னார்.

‘‘உங்களை மீறி நாங்க என்னப்பா பண்ணிர முடியும்?"

‘‘பரவாயில்ல சார்... அந்த கவுன்சிலரை வந்து எங்கிட்ட ஸாரி கேக்கச் சொல்லுங்க. முடிச்சுக்கலாம்..." என்ற கேசவனை, ‘‘உங்க பேரு என்ன தம்பி... இங்க வாங்க" என பாசமாக அழைத்தார். பக்கத்தில் போனவனுக்கு, மின்னல் நொடியில், பொளேர் என்று விழுந்தது ஓர் அறை. சுதாரிப்பதற்குள் மொத்த பேரையும் போட்டுப் பொளக்க ஆரம்பித்தார்கள். ‘போலீஸ் புத்தி’ என்பார்களே... அதைப் புரிந்துகொண்ட முதல் தருணம் அது. கதவைச் சாத்திக்கொண்டு தூக்கிப் போட்டு மிதிக்க, ஆளாளுக்குக் காலில் விழுந்து கதற ஆரம்பித்தோம்.

‘‘ஸ்டூடன்ட்ஸ்னா என்ன பெரிய ....டா? யோவ்... போன் போட்டு இவனுங்க அப்பனுங்களை எல்லாம் வரச் சொல்லு..." என இன்ஸ்பெக்டர் சொன்ன நொடியில், பகவதி ஓடிப் போய் அவரைக் கட்டிப் பிடித்து அழுதான்.

‘‘வேணாம் சார்... ப்ளீஸ். நாங்கவேணா கவுன்சிலர்கிட்ட ஸாரி கேக்குறோம் சார்..."

‘‘போலீஸ்னா என்ன ரோட்ல போற நாயா..? அடுத்த தடவை எவனையாவது இப்பிடிப் பார்த்தேன்... அடிச்சுத் தொங்க விட்டுட்டு, செமஸ்டர் ரிசல்ட்டால சூஸைடுனு சொல்லிருவேன். போங்கடா..."

அன்று இரவு தாபாவில் பீர் அடித்துவிட்டு ஜெகத் சொன்னான்...

‘‘மாப்ள... எனக்கு ஒரு புள்ள பொறந்தா, அவன நாயும் போலீஸும் இல்லாத ஊர்லதான் படிக்க வைப்பேன். இது சத்தியம்!"

**தி**ருப்பூரில் பனியன் கம்பெனியில் வேலை பார்த்தபடி, இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தில் பணியாற்றிய நேரம். ஒரு சாயங்காலம், கம்பெனி தொலைபேசியில் அருளானந்தம் வந்தார்.

‘‘தோழர்... காலைல குமரன் சிலை பக்கம் வந்துருங்க..."

‘‘என்னண்ணே..?"

‘‘டங்கனை எதிர்த்து ஆர்பாட்டம். மறக்காம வந்துருங்க தோழர்..."

காலையில் கறுப்பு டிஷர்ட் மாட்டிக்கொண்டு கிளம்பினேன். ஆர்பாட்டம் தொடங்கிய சிறிது நேரத்தில், மூன்று அம்பாஸடர் கார்கள் புழுதி பறக்க வந்து நின்றன. ‘‘அமெரிக்காவுக்கும் அதன் அடிவருடி நாடுகளுக்கும் இந்தியச் சந்தையின் கதவுகளைத் திறந்துவிடும் அரசே... உள்ளூர்த் தொழில்களின் நசிவைப் பற்றி..." என அருளானந்தம் பேசிக்கொண்டு இருந்தபோதே அம்பாஸடர் கும்பல் கூட்டத்தில் நுழைய, கலவரம் வெடித்தது. யார் என்ன என்றே தெரியாமல் அனாமத்தாக எனக்கும் சில பல அடிகள் விழுந்தன.

எங்கெங்கு இருந்தோ கற்கள் பறந்து வர, தலைக்குள் பூச்சிகள் பறந்தன. புழுதி அடங்குவதற்குள் போலீஸ் வந்தது. அருளானந்தம் மண்டை உடைந்து ஓரமாக சுருண்டுகிடந்தார். எங்கள் தரப்புக்குப்

பலத்த சேதாரம். அப்படியே எங்களை வேனில் அரசு மருத்துவமனைக்கு அள்ளிப் போனார்கள். முதலுதவி முடித்து, கோயம்புத்தூர் கோர்ட்டில் ஆஜர்படுத்தி, பொதுச் சிறைக்குக் கொண்டுபோனார்கள்.

வேனில் பக்கத்தில் இருந்த போலீஸ்காரரிடம் அருள் கேட்டார், ‘‘ஏனுங்க... கலவரம் பண்ணது அவனுங்க. எங்களை எதுக்கு ஜெயிலுக்குக் கொண்டுபோறீங்க?"

‘‘நாங்க என்னங்க பண்றது... மேலிடம் சொல்றதைச் செய்றோம். இது சும்மாங்க... அரசியல் கைதிகள் லிஸ்ட்ல நாலஞ்சு நாள் உள்ளவெச்சுட்டு விட்ருவாங்க. உள்ள நம்ம ஆளுங்க இருக்காங்க, ஏதாச்சும் வேணும்னா கவனிக்கச் சொல்லவா?"

ஒரு வாரம் சிறைச் சுற்றுலா. ஒரு பெரிய ஹாலில் 20, 30 பேர் அரசியல் கைதிகளாக அடைக்கப்பட்டோம். சிறைச் சாப்பாட்டைச் சாப்பிட்டு, அப்படி ஓர் இடத்தில் தியாகு மாதிரியானவர்கள் பல வருடங்கள் வாழ்ந்ததை நினைத்தால் இப்போதும் ஆச்சர்யமாக இருக்கிறது. பேரறிவாளன் உள்ளிட்டவர்கள் பழகிக்கொண்ட சிறை வாழ்க்கையின் வனாந்தரங்கள் மிகக் கொடூரமானவை. கண்ணீரும் ரத்தமும் உயிருமானவை. எங்களைப் போன்ற, ஒரு வார அரசியல் கைதிகளுக்கு, கொடுமையான சாப்பாடு, பாத்ரூம் அவஸ்தைகள் தவிர்த்து, அது சும்மா ஓர் அனுபவம்.

காலையில் எழுந்ததும் மற்ற கைதிகளுக்குமாகச் சேர்த்து மாவோவையும் சே குவேராவையும் பேச ஆரம்பிப்பார் அருள். அதிகாரிகள் வருவது தெரிந்தால், அரசியல் கோஷம் போட ஆரம்பிப்பார். பின்னாலேயே நாங்களும் கோஷம் போடுவோம். சாயங்காலம் முழுக்க மக்கள் கலை இலக்கியக் கழகம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கப் பாடல்கள் களைகட்டும்.

அங்கே ‘கட்ட’ கோபால்தான் ‘சப்ளையர்’. எப்போதும் போலீஸ்காரர்களைக் கிண்டல் பண்ணிக்கொண்டு, எல்லாக்

கைதிகளோடும் ஏதாவது பேசியபடி சுற்றிக்கொண்டு இருப்பார். எங்கள் ஹாலுக்கு அவ்வப்போது வந்து காசுக்கு பீடி, சிகரெட் சப்ளை செய்வார்.



ஒரு நாள் சொன்னார், ‘‘நீங்கல்லாம் கெஸ்ட் மாரி வந்துட்டுப் போறீங்க. உங்களுக்கு ஜாலியாத்தான் இருக்கும். உள்ள இருக்கிறவங்களுக்கு எல்லாம் இது நரகம். குடும்பம் குட்டினு விட்டுட்டு வந்து, அவனவனும் செத்துச் சுண்ணாம்பாகுறான். தப்புப் பண்ணிட்டு வந்து, இங்கே இருந்து திருந்திப் போறவன் கொஞ்சம்தான். இன்னும் கொடூரமாப் போறவன்தான் அதிகம். விசாரணை, கோர்ட்டு, ஜெயில்னு போயிட்டீன்னா... நீ அழிஞ்ச தம்பி. எத்தனை பேர் நாசமாப் போயிருக்கான் தெரியுமா..? இந்த போலீஸ் அதிகாரிக இருக்காங்களே... மகராசனுங்க எப்போ, எப்பிடி இருப்பாங்கன்னு எவனுக்குமே தெரியாது..."

‘‘நீங்க எதுக்குண்ணே வந்தீங்க..?"

‘‘இந்தா... இந்த சப்ளைக்குத்தான். சின்னச் சின்னதா திருட்டு கேஸ்னு சுத்திட்டு இருந்தேன் தம்பி. போலீஸாப் பார்த்துதான் இப்பிடி ஒரு வேலையப் போட்டுக் குடுத்துச்சு. எதாவது சும்மா கேஸைப் போட்டுக்கிட்டு வந்துருவேன். வெளிய விக்கிறதைவிட இங்க டபுள், ட்ரிபிள் மடங்கு ரேட்டு. எனக்குப் பாதி, போலீஸுக்குப் பாதி!"

சென்னைக்கு வந்த பிறகு ‘நீயா நானா’வுக்குச் சிறப்புவிருந்தினராகப் போகிற மாதிரி ஆகிவிட்டது காவல் நிலையங்களுக்குப் போவது. சரக்கு

அடிக்கிற நண்பர்களும் பேட்ரோல் வண்டிகளும் இருக்கிற வரை இந்த நிலை நீடிக்கவே செய்யும்.

**ந** ள்ளிரவில், மொபைலில் ஆறு முறை அலறிய மோகன் நம்பரைப் பார்க்காமல் தூங்கிவிட்டேன். காலையில் கூப்பிட்டால் ஸ்விட்ச்டு ஆ.ஃப். சாயங்காலம் அறைக்குப் போனால், கையில் கட்டுடன் உதடு கிழிந்து உட்கார்ந்து இருந்தான். என்னைப் பார்த்ததும் அவனுக்குக் கிழிந்த உதடு துடித்தது.

‘‘மனுஷனாடா நீ... ஒரு மனுஷன் என்ன கண்டிஷன்ல இருக்கான்னு உணர வேணாம்..."

‘‘தூங்கிட்டேன் நண்பா... என்னாச்சு..?"

அசோக் நகர் டாஸ்மாக் ஒன்றில் நண்பனுடன் சரக்கடித்துவிட்டு, போதையில் தனது வண்டிக்குப் பதில் இன்னொரு வண்டியில் சாவி போட்டு இருக்கிறான் மோகன். சம்பந்தப்பட்டவர் ஓடி வந்து கேட்க, வார்த்தைகள் முற்றி கைகலப்பாகிவிட்டது. மிகச் சரியாக வந்த பேட்ரோல் வண்டி அப்படியே எல்லோரையும் அள்ளிப் போட்டுக்கொண்டு ஸ்டேஷனுக்குப் போக, அங்கே வைத்து விழுந்ததுதான் செம குண்டு.

மோகன் எடுத்துப்போனது அவன் நண்பனின் பைக். அந்த நண்பன் டியூவுக்கு வண்டி வாங்கி, சேட்டுக்குப் பணத்தைக் கட்டாமல் சவூதிக்கு ஒட்டகம் மேய்க்கப் போய்விட்டான். சேட்டு, அதே ஸ்டேஷனில் அந்த வண்டி திருடு போய்விட்டதாக ஏற்கெனவே புகார் கொடுத்து இருக்கிறார். மோகனின் வண்டி நம்பரை செக் பண்ணும்போது இது தெரியவர, அடிதடி கேஸோடு திருட்டு கேஸும் போனஸாக புக்கானது. போதையில் ஒரு சாவியை மாத்திப் போட்டதற்குப் பின்னால், இத்தனை ட்விஸ்ட்டுகளை மோகன் கனவிலும் நினைத்திருக்கமாட்டான்.

‘‘ஓஹோ... இப்பிடிப் போதையைப் போட்டு வண்டி திருடுறதுதான் சார் ஜாப்போ? டேய்! நம்ம தினத்தந்தி ரிப்போர்ட்டருக்கு போன் பண்ணி போட்டோகிரா.ஃபரோட வரச் சொல்லு... 50, 100 வண்டிக தேறும்போல

இருக்கே..." என மோகனை ஏதோ அல்கொய்தா தலைவர் ரேஞ்சுக்குக் கட்டம் கட்டிவிட்டார் எஸ்.ஐ.

கடைசியில் யார் யாருக்கோ போன் போட்டு, 24 ஆயிரம் தருவதாக ஒப்புக்கொண்டபின், எழுதி வாங்கிக்கொண்டுதான் விட்டனராம்.

**கே** ரளக் காவல் துறையில் பல ஆண்டுகள் போலீஸ் வேலை பார்த்த ராமச்சந்திரன் நாயர் என்பவர் எழுதிய, 'நான் வாழ்ந்தேன் என்பதற்கான சாட்சி' என்ற புத்தகத்தைப் படித்து இருக்கிறீர்களா? நக்ஸல்பாரி புரட்சியாளன் நர்கீஸை, மேலதிகாரிகளின் குரூரமான வற்புறுத்தலால் தனது கையால் சுட்டுக்கொன்றதில் இருந்து, இந்தியக் காவல் துறையில் பணியாற்றும் ஒருவன், பொதுமக்களிடம் இருந்து எவ்வளவு விலகி இருக்கிறான், அதிகார மையங்கள் அவனை எப்படியெல்லாம் கேவலமாகப் பயன்படுத்திக்கொள்கின்றன என்பது வரை மிகத் தீவிரமாக எழுதப்பட்ட பதிவு அது. உண்மையில், பிளாட்ஃபாரத்தில் இளித்துக்கொண்டு நிற்கும் போலீஸ்காரர்களை யார் உருவாக்குகிறார்கள்..? ரத்தம் வழிய வழிய... நாலு பேர் அடித்துக்கொள்ளும்போது ஒதுங்கி ஒளியும் போலீஸ்காரர்கள் எப்படி உருவாகிறார்கள்? சாலைகளிலும் கடைகளிலும் அனுதினம் பார்க்க நேரிடும் போலீஸ்காரர்களைக் கேவலமாகத் திட்டும் நமக்கு, பெரும் அரசியல் பேரங்களிலும் கலவரங்களிலும் கொலைகளிலும் பங்கு போட்டு நடத்தும் காவல் அதிகாரிகளைத் தெரிவதே இல்லை.

போலீஸ்காரர்களில் அற்புதமானவர்களை, நேர்மையானவர்களை, போராளிகளை, எழுத்தாளர்களை, கலைஞர்களை நான் பார்த்திருக்கிறேன். ஆனால், இங்கே நிறைய பேருடைய மனிதத்தை, அதிகாரமும் அரசியலும் தின்றுவிடுகின்றன.

கேவலமான அரசியல்வாதிகளின் கையில் காக்கிகளின் மனிதம் மழுங்கடிக்கப் பட்டுக்கொண்டே இருக்கிறது. அரசியலும், சாதியும், பணமும், காவல் துறையை இயக்கிக்கொண்டு இருக்கிற வரை வாச்சாத்திகளும் பரமக்குடித் துப்பாக்கிச் சூடுகளும் இந்தச் சமூகத்தின் மீது நிகழ்த்தப்பட்டுக்கொண்டேதான் இருக்கும். மனிதமும், அதன்

பொருட்டு எழும் கோபமுமே போலீஸின் ஆயுதங்களைத் தீர்மானிக்க வேண்டுமே தவிர, அரசியல் சந்தர்ப்பவாதம் அல்ல!

தேர்தல் முடிவுக்கு அடுத்த வாரம் ஓர் இரவு, அண்ணா சாலை புகாரியில் சாப்பிடப்போனால், பக்கத்து டேபிளில் இலியாஸ் உட்கார்ந்து இருந்தான். அவன் எதிரே இரண்டு போலீஸ்காரர்கள். ‘‘வா மாப்ள...’’ என எக்கச்சக்கமாக சந்தோஷமானான். சாப்பிட்டு வெளியே வந்ததும் இரண்டு போலீஸ்காரர்களும் எங்களுக்கும் சேர்த்து பீடா வாங்கப்போனார்கள். லைட் வெளிச்சத்தில் இலியாஸ் தே.மு.தி.க. வேட்டிக் கட்டியிருந்ததைக் கவனித்தேன்.

‘‘என்ன மாப்ள... கட்சி மாறிட்டியா..?" என்றதும் ஏப்பம் விட்டுக்கொண்டே சொன்னான்.

‘‘அரசியல்ல வளர்ச்சி முக்கியம் மாப்ள. போலீஸைப் பாத்து நாம பயப்பட்டா... அது வீழ்ச்சி. நம்மளைப் பாத்து போலீஸ் பயப்பட்டா... அது வளர்ச்சி!’’

12

# மிருகங்களுக்கு ஆத்மா கிடையாதாம்... நான்சென்ஸ்!

**‘‘எ** ன்னடா... அந்தக் கன்னுக்குட்டிக்குப் பேரு யோசிச்சிட்டியா..?’’— இருட்டுக் கருக்கலில், வெட்டாத்தங்கரைப் படித்துறையில் ஒரு சித்திரம்போல் கை கழுவியபடியே எத்தனை முறை இப்படிக் கேட்டிருப்பார் அப்பா.

பனிக்குடம் தொபுக்கென்று உடைய, உடம்பு முழுக்கக் கோழையோடு, சொளசொளவென மண்ணில் விழுந்து காது மடல் அசையும் ஒரு கன்னுக்குட்டிக்குப் பெயர் யோசித்துக்கொண்டு இருந்த அந்த அதிகாலை பொழுதுதான், என் வாழ்க்கையின் ஆசீர்வதிக்கப்பட்ட தருணம்.

என் அப்பா, கால்நடை மருத்துவர். ஊர்ப் பக்கம் சொன்னால், மாட்டு டாக்டர். தஞ்சைக் கிராமங்களில் ஆடு—மாடுகள் என்பது எங்களில் பாதி. அதுவும் அப்பா கைராசிக்காரர் என பப்ளிக்குட்டி ஆனதில், எங்கள் வீடு எப்போதும் கலெக்டர் ஆபீஸைவிடப் பரபரப்பாக இருக்கும்.

அப்பா வீட்டுக்குள் நுழையும்போதெல்லாம் மாடுகளின் தோலில் புதைந்திருக்கும் உண்ணி வாசனைதான் முதலில் வரும். ஆத்துக்குப் போய்க் குளித்துவிட்டு வரும்போதும் நாய்க்குட்டிகளின் பால் வாசனையையோ, கோழி இறக்கைகளையோ கொண்டு வருவார்.

கூட்டக் கூட்ட, ஆட்டுப் புழுக்கை வாசத்தில்தான் கிடக்கும் திண்ணை. பத்தாயத்தில் கூடு கட்டிக்கொண்டு ‘கீச்... கீச்...’ என்று வீட்டுக்குள் அலையும் தவிட்டுக் குருவிகளை விரட்டினால், ‘‘கம்னாட்டிகளா... அது பாட்டுக்குக் கெடந்துட்டுப் போகுது’’ எனத் திட்டுவார்!



பின்னிரவுகளில், அக்கம் பக்கத்து ஊர்களில் இருந்து யாராவது வந்து அப்பாவை அடிக்கடி எழுப்புவார்கள். ‘‘செனமாடு முக்கிட்டே கெடக்கு... கன்னு வரலைங்க. சத்தமா சத்தம் போடுது...’’ என இருட்டில் நிற்பார்கள். படக்கென்று எழுந்து மருந்துப் பையை எடுத்துக்கொண்டு, என்னையோ குருவையோ எழுப்பி டி.வி.எஸ்—50யை எடுக்க வைப்பார். கண்கள் காந்தலில் எரிய, பனிக்காற்றில் புளிய மரங்களைக் கடக்கும் அந்தப் பயணம், ஒரு ஜனனத்துக்கானது.

இருட்டுக் கொல்லையில் நாலைந்து பேர் கவலையாக நிற்பார்கள். சாணி தெறிக்க, ‘ம்ம்ம்மேஏஏஏ...’ என அலைபாய்ந்துகொண்டு இருக்கும் தாய்ப் பசு. கைலியை வரிந்து கட்டிக்கொண்டு மாட்டை பொத்தேரென்று அடிப்பார். ‘‘ந்தாரு... ந்தாரு... ச்சூ... ச்சூ...’’ எனப் பேசி அதை விழ வைப்பார். ‘‘எண்ணெய் கொண்டுவாங்க...’’ என வாங்கித் தடவிக்கொண்டு, மாட்டுக்கு பின்னால் கையைவிட்டுத் துழாவி, நேக்காக கன்னுக்குட்டி காலைப் பிடித்துவிடும்போது கண்கள் பிரகாசிக்கும். பொசுக்கென்று குட்டிக் கால் குளம்புகள் வெளி நீட்டும். இன்னும்

வெளிவர சிரமப்பட்டால், ரத்தமும் கோழையும் கலந்து வடிய, கன்னுக்குட்டி காலில் கயிறு கட்டி, நைஸாக வெளியே இழுப்பார். அந்த வீட்டுக்காரம்மா கொலசாமியைக் கும்பிட்டுக்கொண்டே பதறி நிற்கும். ஆளும் பேருமாய் இழுக்க... அது உயிர் வலிப் போராட்டம்.

கொஞ்ச நேரத்தில் சொத்தென்று மண்ணில் விரித்த கோணியில் வந்து விழும் கன்னுக்குட்டி. பக்கத்தில் உட்கார்ந்து இரண்டு கைகளாலும் அதன் முகத்தின் ஈரத்தையெல்லாம் வழித்துவிட்டு, அப்படியே அள்ளி காதிலும் மூக்கிலும் உயிர்க் காற்று ஊதுவார். கொஞ்ச நேரத்தில் கன்னுக்குட்டி காது மடல் அசைய, உடல் துள்ளும். வீட்டுக்காரம்மா ஓடிவந்து காளக் கன்னா, பசுவா எனப் பார்க்கும். மாடு தழைந்து தழைந்து வந்து கன்றை நக்கிவிடும்போது, பொலபொலவென விடியும் அந்த நாள்.

நாங்கள் வெட்டாத்தங்கரைப் படித்துறையில் கை கழுவிக்கொண்டு இருக்கும்போது, ஆலமரத்திலோ இலுப்பை மரத்திலோ நஞ்சு கட்ட வருகிறவர்கள் அங்கிருந்து, ‘‘ஐயா... வூட்டுக்கு சீம்பாலு குடுத்துவிட்றேங்க..!’’ எனக் கத்துவார்கள். மறுபடி எப்பவாவது அந்த வீட்டுக்கு ஊசி போடப் போகும்போது, அந்தக் கன்னுக்குட்டி திமிறிக்கொண்டு திரிவதைப் பார்க்கலாம். அப்போதுதான் அப்பாவை ரொம்பப் பிடிக்கும்!

டாக்டர் கிருஷ்ணமூர்த்தியைப் பற்றி ஜெயமோகன் எழுதிய ‘யானை டாக்டர்’ படிக்கும்போது எனக்கு அப்பா ஞாபகம்தான் வந்தது. அப்பா, பிராணிகளுக்கு வாழ்க்கைப்பட்டு இருந்தார். அவற்றோடு பேச சங்கேத மொழிகள் வைத்திருந்தார். வாயில்லா ஜீவன்கள் அவரைப் பார்த்ததும் கட்டுண்டு இருந்தன. ‘இந்த உசுருங்க தெய்வத்துக்குச் சமம்...’ என்பார் அடிக்கடி.

**கா**ல்நடை மருத்துவம் அவருக்குத் தொழில் இல்லை. அது அவரது ஆத்மார்த்தமான விருப்பம். மாமாவின் நெல்லு மில்லில் வேலை பார்த்துச் சேர்த்த காசில் அவர் தேர்ந்தெடுத்தது இந்தப் படிப்பைத்தான். அவர் ராமநாதபுரத்தில் வேலை பார்த்தபோது, வீட்டைச் சுற்றிலும்

மயில்கள் மேயும். வேலை முடிந்து வரும்போது மயில்களுக்கும் இரை வாங்கி வருவார்.

ஒரு முறை அவரது ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தபோது, எங்கோ அடிபட்ட ஒரு மயிலைக் கொண்டுவந்தார்கள். காலில் சீழ் வடிய, மயங்கிக்கிடந்தது அது. ''அப்பனே முருகா... புழுவெச்சுப் போச்சுரா...'' என்றபடி சீழ்வைத்த இடத்தை அறுத்து மருந்து போட்டுத் துணி கட்டினார். கொண்டுபோன சாப்பாட்டைச் சாப்பிடாமல் அப்படியே உட்கார்ந்து இருந்தார். கொஞ்ச நேரம் கழித்து நாகராஜன் மாமாவிடம், ''அது செத்துப்போயிரும்... ப்ச்ச்... முருகன் வாகனம்...'' என்றவர் அட்டெண்டரைக் கூப்பிட்டு, ''இந்தச் சாப்பாட்டை யாருக்காவது குடுத்துருங்கப்பா'' என்றார்.

சாயங்காலம் வீட்டுக்கு வந்தவர் இரவோடு இரவாக எங்களை திருச்செந்தூர் கோயிலுக்கு அழைத்துப்போய், விடியலில் சாமி கும்பிட்டுவிட்டுத்தான் திரும்பினார்!

'சீக்கு சீஸன்' வந்தால் ஊர் முழுக்க கோழிகள் கிறங்கி நிற்கும். பொத்துப் பொத்தென செத்து விழும். அந்த ஒண்ணு ரெண்டு மாதங்களும் எங்கள் வீட்டில் கூட்டம் தள்ளும். கோழி பின்னால் விரல் விட்டு சூடு பார்த்து ஊசி போடுவார். ஆஸ்பத்திரியில் இருந்து தடுப்பு மருந்து கொண்டுவந்து இலவசமாகப் போட்டுவிடுவார்.

**தெ** ருவில் கலர் கோழிகள் விற்றுப் போகிறவனை எப்போது பார்த்தாலும் உக்கிரமாகிவிடுவார். ''யாரும் கலர் கோழி வாங்காதீங்கய்யா... அது மீன் தொட்டி மீன் மாதிரிப்பா!'' என்பார்.

ஒரு நாள் சித்தார்த்தன் அண்ணனே ஏழெட்டு கலர் குஞ்சுகள் வாங்கி வந்துவிட்டான். அந்தக் குஞ்சுகளை கலர்வாரியாக ஆளுக்கு ரெண்டாகப் பிரித்து வளர்ப்பதில் எங்களுக்குப் போட்டி. 'ஆரஞ்சுதான் சச்சின்... ப்ளூ கலர் கங்குலி'. சாயங்காலம் அப்பா வீட்டுக்கு வந்தபோது பஞ்சாரத்தில் இருந்து 'கொக்—கொக்— கொக்' என ஆரஞ்சும் பச்சையுமாக குஞ்சுகள் இறங்கி வந்தன. ''சித்தார்த்தன் பய வேலதான

இது... சீக்கு கீக்குனு அம்மாவும் புள்ளையும் வந்தீங்கன்னா பிச்சுப்புடுவேன்'' என்றார் அப்பா கோபமாக.

அடுத்த வாரமே மூன்று குஞ்சுகள் செத்துப்போய்விட்டன. சாயங்காலம் வீட்டுக்கு வந்த அப்பா, கொந்தளிப்பாக எங்களைத் துரத்தினார். நாங்கள் தெறித்து ஓட, சம்பவத்துக்குச் சம்பந்தமே இல்லாத குரு சிக்கி அப்பாவிடம் தர்ம அடி வாங்கினான்.

ஒரு முறை தொழுவத்தில் கட்டிக்கிடந்த பசு மாட்டை, நள்ளிரவில் கன்னம் வைத்து அரசு மாமா ஓட்டிக்கொண்டு போய்விட்டார். தம்பிதான் இதைச் செய்தது எனத் தெரியவந்தபோது, அம்மா அழுதது. அப்பா பூஜை ரூமில் நின்று சொன்னார், ''முருகா... மாட அவனே வெச்சுக்கட்டும். செல்வாக்கா வளந்துருச்சு... அதை அடிமாட்டுக்கு மட்டும் விக்க வுட்ராதடா!''

மதுரையில் ஃப்ரீலான்ஸ் பத்திரிகையாளனாக இருந்தபோது, லீலாக்கா பழக்கம். எல்லீஸ் நகரில் இருந்தவர், வீட்டிலேயே 30, 40 தெரு நாய்களை எடுத்து வளர்த்து வந்தார். சாயலில் மேதா பட்கர் தங்கச்சி மாதிரி இருக்கிற லீலாக்கா, கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லை. வீட்டில் இருந்து பிரித்து வாங்கி வந்த கொஞ்சம் சொத்துக்களை வைத்துக்கொண்டு, முழு நேரச் சமூக சேவகியாக, தனியாக வாழ்ந்தார்.

வீட்டுக்குப் போனால் எங்கெங்கும் நாய்களாக இருக்கும். பின்னால், அவற்றுக்கென்று தனி இடம் அமைத்து இருந்தார். அவற்றுக்குச் சாப்பாடு போட்டுக்கொண்டு, குளிப்பாட்டிக்கொண்டு, மருந்து போட்டுக்கொண்டு... எப்போது பார்த்தாலும் அவற்றோடுதான் இருப்பார். எல்லா நாய்களுக்கும் பெயர் வைத்திருந்தார். நம்மிடம் பேசிக்கொண்டு இருக்கும்போதே, நாலைந்து நாய்கள் அவரை மோந்து, மேலே ஏறி தொற்றிக்கொண்டே நிற்கும்.

ஒரு முறை அந்த நாய்களில் ஒன்று விபத்தில் செத்துப்போனபோது, அப்படி அழுதார். போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் மோதிய வண்டிக்காரன் பற்றிப் புகார் கொடுத்து, ஒரு வாரம் அலைந்து திரிந்தார்.

ஓர் அதிகாலை அவரிடம் பேசிக்கொண்டு இருந்தபோது இதுபற்றிக் கேட்டேன், ‘‘இதுல என்ன ஆச்சர்யம் இருக்கு. இதுங்களும் உயிருங்கதானே...’’ என்றவர், கொஞ்சம் மௌனத்துக்குப் பிறகு சொன்னார், ‘‘எதிர்பார்ப்பும் ஏமாற்றமும்தான் மனுஷங்களோட பெரிய பிரச்னை. நம்பிக்கை, அன்பு எல்லாம் பொய்யாப் போறப்பதானே எல்லாம் கசந்துபோகுது. இதுங்ககிட்ட அது எதுவும் இல்ல... இதுங்க அன்புல எந்த அப்பழுக்கும் இல்ல.’’ உண்மையில் இந்த மனநிலையை பிராணிகளுடன் வாழும் பலரிடம் நான் பார்த்திருக்கிறேன். நம்பிக்கை இன்மை நிறைந்த மனித உறவுகளை மனதளவில் துரத்தியவர்கள், பிராணிகளின் பேசா அன்பை நிழலாக்கிக் கொள்கிறார்கள்!

வாலை ஆட்டும் ஒரு நாய்க்குள், பெயர் சிணுங்கும் கிளிக்குள், கூட உறங்கும் முயலுக்குள்... ஒரு காதலை, பிரிவை மீட்டெடுக்கிறான் மனிதன். நள்ளிரவுகளில் சாலையோரத்து நாய்களைக் கட்டிப்பிடித்து கிஸ்ஸடித்துக் கொஞ்சிப் பேசிக்கொண்டு இருக்கும் குடிகார அண்ணன்களை ‘அன்பு மிருகங்கள்’ என்று அழைக்கலாமா? காலம் முழுக்க ஜல்லிக்கட்டுக் காளைகளைத் தயார் செய்வதிலேயே வாழ்க்கையைத் தொலைத்தவர்கள், பறவைகளுக்கான ஆராய்ச்சிக்காகவே தன்னை அர்ப்பணித்தவர்கள், பாம்புகளின் புதிர்களைத் தெரிந்துகொள்வதையே பயணமாக்கிக் கொண்டவர்கள்... ஓர் அதிசயம்போல் நம்மைக் கடந்துகொண்டே இருக்கிறார்கள்.



மூளைக்குழாயில் ரத்தக் கசிவு ஏற்பட்டு லீலாக்கா செத்துப்போனது, சென்னையில் இருந்த எனக்குத் தெரியாது. வெகு நாட்களுக்குப் பிறகு, அவரைத் தேடிப்போனபோது, அந்த வீட்டில் வேறு யாரோ இருந்தார்கள். வெறுமையாகக் கிடந்த வீட்டில் இருந்து வெளியே வரும்போது, 'முலைக்காம்பு தேடி, வாய் குவித்துத் தடுமாறும் கண் திறக்காத நாய்க் குட்டிகளை பிரித்துப் போடும் மனமா உனக்கு!' என்ற வைத்தீஸ்வரனின் கவிதை நினைவில் இடறியது!

இப்போது பிராணிகளுக்கும் நமது பிள்ளைகளுக்குமான ஜீவார்த்தம், அனிமல் பிளானெட்டுகளிலும் டிஸ்கவரியிலும் இருக்கின்றன.

'பிச்சை எடுக்கும் யானையின் கண்களில் அசைகிறது பிறந்த பெருவனம்' என்ற மலையாளக் கவிஞர் அய்யப்பனின் கவிதையைப் படித்து இருக்கிறீர்களா? காடுகளுக்குச் சுற்றுலா போகும் மனிதர்கள் குடித்துவிட்டு வீசிப்போகும் பீர் பாட்டில்கள் காலில் குத்திச் சீழ் வைத்து யானைகள் செத்துப்போகின்றன.

கல் மண்டபத்துக் கிளிகள், பனகல் பார்க் வாசலில் சீட்டெடுத்துக் கொடுத்து நம்மைச் சபிக்கின்றன. சிங்கமும் சிறுத்தையும் அலவன்ஸ் சாப்பாடு சாப்பிட்டுக் கூடாரங்களில் கண்ணைக் கசக்கிக்கொண்டு இருக்கின்றன. 'புலியைக் காப்போம்' என மவுன்ட் ரோட்டில் ஸ்பான்ஸர் பிடித்துப் பேனர் வைக்கிறார்கள். அதேநேரத்தில், பன்னாட்டு நிறுவனங்களிடம் நமது காடுகளையும் உயிர்களையும் விலை பேசி விற்றுக்கொண்டு இருக்கிறோம்.

10, 20 வருடங்களுக்கு முன்பு வரை வெளியில் பேசிக்கொண்டு இருந்தால் ஏதேனும் குருவிச் சத்தங்கள் நம்மைக் கடந்துபோகும். செல்போன் டவர்கள் முளைத்துக்கிடக்கும் மண்ணில், இப்போது ஒரு சிட்டுக்குருவியைப் பார்க்க முடிகிறதா?

மண்ணில்பூச்சிக்கொல்லி மருந்து அடிக்கிற விஷத்தன்மையில் பருந்துகளும் பலவிதமான பறவைகளும் அழிந்துகொண்டே இருக்கின்றன என்றெல்லாம் 'பசுமை விகடன்' நண்பர் ஒருவர் சொன்னபோது, 'யானை

டாக்டர்' கதையில் ஜெயமோகன் எழுதியிருந்தது நினைவுக்கு வந்தது. 'மனுஷன் என்னமோ அவனைப் பெரிய புடுங்கினு நினைச்சுக்கிறான். மிருகங்களுக்கு ஆத்மா கிடையாது... பகுத்தறிவு கிடையாதுனு. அவனோட எசப்புத்தியில ஒரு சொர்க்கத்தையும் கடவுளையும் உண்டு பண்ணிவெச்சுருக்கானே... அதுல மிருகங்களுக்கு இடம் கிடையாதாம்... நான்சென்ஸ்!'

நான் என் அப்பா அளவுக்கு இல்லை. இதுவரை ஆர்வமாக ஒரு நாய்க்குட்டிகூட வளர்த்தது கிடையாது. ஆசையாக முயல் குட்டிகளையோ, வாத்துகளையோ தூக்கிப் பார்த்தது இல்லை. திருச்சி சுப்ரமணியபுரத்தில் இருந்தபோது, கார்ப்பரேஷன் ஆளுங்களோடு பன்னி வேட்டைக்குப் போன பாதகன். அய்யனார் கோயில் மரத்தில் கோவப்பழம் மாட்டி வலை விரித்துக் கிளி பிடித்தது, டயர் கொளுத்தி வெட்டாத்தில் மீன் வெட்டியது, ஓணானுக்கு பொகையிலை போட்டு, நாய் வாலில் பட்டாசு கட்டியவர்களோடு கூட்டணி சேர்ந்தது... எனப் பின்னிருப்பது பிளாக் ஹிஸ்டரிதான்.

**செ**ன்னை வந்த பிறகு, கிறிஸ்துவப் பெண் ஒருத்தியைக் காதலித்தேன். அவளுக்குப் பரிசளிப்பதற்காக மூர் மார்க்கெட்டில் ஒரு ஜோடி கிளிகள் வாங்கினேன். அதைக் கொண்டுபோய்க் கொடுத்தபோது அவள் மறுத்துவிட்டாள். ''எவ்வளவு கஷ்டப்பட்டு வாங்கினேன் தெரியுமா...'' என்றதற்கு அவள் சொன்னாள், ''இல்ல... இதை வீட்ல வளர்க்கிறது கஷ்டம். எங்க வீட்ல எல்லாரும் வேலைக்கு வேற போறோமா... இது செத்துக்கித்துப் போயிட்டா மனசு கஷ்டமாகிரும். எடுத்துட்டுப் போயிருப்பா...''

துயரத்தோடு வந்து காசி தியேட்டர் பக்கம் கூண்டைத் திறந்துவிட்டேன். அந்தப் பறவைகள் தாய் நிலம் மீண்ட பிள்ளைகள் போல் பறந்தன. இப்போது சொல்கிறேன்... கிளிகளை வாங்க மறுத்தவளே... எங்கிருந்தாலும் வாழ்க!

# 13

# கட் பண்ணா... வன்மமான வாழ்க்கை!

**‘‘க**ட் பண்ணா... அஜீத் சார் ரத்தம் வழிய வழியப் புழுதியில கெடக்குறார்ஜி. அப்பிடியே கட் பண்ணா... மும்பைல ஒரு மொட்டை மாடியில நின்னுக்கிட்டு ‘அவன் எனக்கு உயிரோட வேணும்டா’னு பேய்த்தனமா கத்திக்கிட்டே சுருட்டைத் தூக்கிப்போட்டு மிதிக்கிறாரு பிரகாஷ்ராஜ். கட் பண்ணா...’’

இந்த ‘கட் பண்ணா’ என்கிற வார்த்தைகள் கோடம்பாக்கம் கதைச் சொல்லிகளிடம் அவ்வளவு பிரபலம். கதை சொல்லும்போது ஒரு காட்சி முடிவதற்கும் அடுத்த காட்சி தொடங்குவதற்குமான இணைப்பு வார்த்தைகள் இவை. ஒவ்வொரு நாளும் 24 மணி நேர சினிமாவாகத்தானே இருக்கிறது நமக்கு. ஆகவே...

கட் பண்ணா...

ஃபேஷன் டி.வி—யில் ஏதேதோ தேசத்து அழகிகள், நாம் ஒருபோதும் அணிந்து நடமாடவே முடியாத துணிமணிகளைப் போட்டுக்கொண்டு, இசை அதிர நடந்துகொண்டு இருக்கிறார்கள். தொடை வரைக்கும் கீறிவிடப்பட்ட ஆடைகளோடு, அத்துமீறி எனது ஹாலுக்குள் பிரவேசிக்கும் பிரியப்பட்ட பிசாசுகள். எப்போதோ தூங்கிவிட்டேன். விழித்தபோது, அணைக்க மறந்த அழகிகள் இன்னும் நடந்துகொண்டே இருக்கிறார்கள். டீ குடிக்க வெளியே வந்தால், அபார்ட்மென்ட் வாசல்

பிளாட்ஃபார்மில் தையல் மெஷின் தடதடக்க, 'வணக்கம் சார்' எனச் சிரிக்கிறார் ஒரு டெய்லர் அண்ணன்.

ஒரு கணம் சட்டென்று குற்ற உணர்வு மனதைப் பிசைகிறது. இத்தனை நாட்களாக இந்த டெய்லர் இங்கேதான் இருக்கிறார். எப்போதும் ஏதாவது பழைய துணிகளைத் தைத்தபடி உட்கார்ந்திருக்கிறார். இதுவரை ஒரு சட்டையைக்கூட இவரிடம் தைக்கக் கொடுக்கலாம் எனத் தோன்றியதே கிடையாது. உள்ளே போய் பட்டன்போன இரண்டு சட்டைகளையும், ஆக்ஸிடென்டில் முட்டி கிழிந்த, ஜிப்பு போன பேன்ட்களையும் எடுத்துவந்து அவரிடம் தந்தேன்.

''காஸ்ட்லி சட்டைங்க சார்... நம்மகிட்ட இந்த பட்டன்லாம் இருக்காதே... காலர்லேர்ந்து உருவி வெச்சுரலாமா?'' எனச் சிரிக்கிறார். முட்டி கிழிந்த பேன்ட்டைப் பார்த்து, ''அச்சச்சோ... பைக்ல விழுந்துட்டீங்களா? எப்போ சார்? சரியாகிருச்சுல்ல...'' எனப் பதறுகிறார். ''மொத்தமா 120 ரூவா ஆகும் சார்.''

எங்கெங்கும் ரெடிமேட்ஸ் மலிந்துவிட்ட பெரு நகரத்தில், ஒரு அபார்ட்மென்ட் வாசலில் மெஷின் போட்டு உட்கார்ந்திருக்கும் அவரை நினைத்தால் பாவமாக இருக்கிறது. தினம் தினம் ஏதாவது கிழிந்த துணி கிடைக்குமா என அடுக்குமாடிகளையே பார்த்துக்கொண்டு இருக்கிறார். யாரோ வாட்ச்மேனுக்குக் கொடுக்கும் சாப்பாட்டை, யாருக்கும் தெரியாமல் கூச்சத்தோடு பகிர்ந்துகொள்கிறார். சும்மா இருக்கப் பிடிக்காமல், வீட்டில் இருந்து எடுத்துவந்த பழைய துணிகளை வெட்டி வெட்டி இறைக்கிறார்.

எஃப் டி.வி. அழகிகளைப்போல் மனிதர்கள் அவரைக் கடந்து நடந்துகொண்டே இருக்கிறார்கள். கிழிந்த துணிகளுக்கு நடுவே, பசித்த, ஏக்கப்பட்ட ஒரு டெய்லர் குடும்பம், நடிகைகள் ஆடும் துணிக் கடை விளம்பரங்களைப் பார்த்துக்கொண்டு இருக்கிறது. என்ன செய்ய முடியும்? ஏதாவது புதுத் துணி வாங்கிவந்து அவரிடம் தைக்கக் கொடுக்கலாம். அதைத் தொட்டுத் தடவி, ''சார்ர்ர்...'' என அவர் தரப்போகும் ஒரு சின்ன சிரிப்புக்காக!

கட் பண்ணா...



டிரஸ்ட்புரம் கடைத் தெருவில் அவரவர் வேலைக்குப் போய்க் கொண்டு இருக்கும் காலையில், பொட்ட்டெரென்று டியூப் லைட்டைத் தன் நெஞ்சில் அறைந்து உடைக்கிறார் ஒரு பெரியவர். நொறுங்கிச் சிதறிய டியூப் லைட் கண்ணாடிச் சில்லுகளின் மேல் உருள்கிறார். பக்கத்தில் அவர் பேரன் மாதிரி ஒருவன் குத்தவைத்து, துண்டை விரிக்கிறான். யாரும் நின்றுகூடப் பார்க்கவில்லை. பக்கத்தில் ஏ.டி.எம். வாசலில் நிற்கிற ஒரு கூட்டம் திரும்பிப் பார்த்துவிட்டு நகர்ந்துகொண்டே இருக்கிறது. அஞ்சு டியூப் லைட்டுகள் உடைத்த பிறகு, ''டீ வாங்கித் தாங்க சார்...'' எனத் தாத்தாவும் பேரனும் எதிர் டீக்கடையில் கெஞ்சுகிறார்கள். எதிர்த் திசையில் இன்னும் அஞ்சாறு லைட்டுகள் கிடக்கின்றன!

கட் பண்ணா...

சாந்தி தியேட்டருக்கு எதிரே, சப்—வே வாசலில் கையில் தட்டை நீட்டியபடி, எதுவும் பேசாமல் உட்கார்ந்திருக்கிறாள் ஒரு பெண்மணி. மழைக்கு சப்—வேயில் ஒதுங்கிய கூட்டம் அவளைப் பார்க்கவே இல்லை. மழைக்கு உள்ளே வந்து தட்டுடன் பக்கத்தில் நிற்கிற அவளை உற்றுப் பார்க்கிறேன். 10 வருடங்களுக்கு முன்பு இதே இடத்தில் இவள் பாவாடை சட்டையோடு சிறுமியாக

உட்கார்ந்திருந்தாள். அழுக்குச் சட்டை — பேண்ட்டில் தட்டு நீட்டியபடி பதின்பருவத்தைக் கடந்துகொண்டு இருந்தாள். இன்று குண்டடித்து, பாழடைந்த கண்களோடு புடவையில் தட்டு நீட்டி நிற்கிறாள்.

யாருக்கும் குரல் கொடுக்காமல் மௌனமாகத் தட்டை நீட்டிக்கொண்டு, ஒரு சிம்பல் மாதிரி இதே இடத்தில் நிற்கிறாள். அவள் ஒரே ஒரு காட்சியை மட்டுமே நமக்குத் தருகிறாள். ஆனால், அந்தக் காட்சிக்குப் பின்னால் ஆயிரமாயிரம் மனிதர்கள், காதல்கள், அவலங்கள், கனவுகள் ஒளிந்திருக்கின்றன. மழை வலுக்கும்போது அவள் சுரங்கத்தில் பர்ஸ் விற்கிறவன் பக்கத்தில் போய் உட்கார்ந்துகொள்கிறாள். கால் இல்லாமல் தொடையோடு மொண்ணையான அவன், அவளை எதற்காகவோ திட்டத் தொடங்கும்போது... மழை இன்னும் வலுக்கத் தொடங்குகிறது!

கட் பண்ணா...

நான் வசிக்கும் தெருமுனையில் காலையில், புதிதாக ஒரு பைத்தியக்காரப் பெண் கிடக்கிறாள். மொட்டைத் தலையோடு, ஏகப்பட்ட அழுக்குத் துணிகளை ஒரு பையில் அடைத்து, நெஞ்சோடு அணைத்தபடி நீல்மெட்டல் தொட்டிக்குப் பக்கத்தில் கிடக்கிறாள். கடக்கையில் பார்க்கும்போது எல்லாம் அந்த அழுக்குப் பையில் இருந்து துணிகளை எடுத்துத் தன் மார்புப் பகுதியில் அடைப்பதும் எடுப்பதுமாக இருக்கிறாள். எப்போதும் தனக்குத்தானே பேசிக்கொண்டே இருக்கிறாள். இரவுகளில் பெரும் குரலெடுத்து யாரையோ திட்டுகிற தொனியில் கத்துகிறாள்.

வாசலுக்கு போன் பண்ண வந்தால், அவள் கத்துவது காதடைக்கிறது. ‘‘அய்யே! நைட்டெல்லாம் இது டார்ச்சர் தாங்கலைங்க...’’ எனக் காலையில் டீக்கடையில் நின்று தெருக்காரர்கள் சொன்னார்கள்.

டீக்கடைக்காரர் சொல்கிறார், ‘‘சார்... அதோட ஒரு பக்கம் மாரை யாரோ அறுத்துட்டானுங்க சார். அதான் துணியை அடைச்சுட்டுக்

கெடக்கு. நேத்து ஒரு கெழவி வாளில சாப்பாடு எடுத்துட்டு வந்து தந்துச்சு. பக்கத்து ஏரியாதான்போல...'' என்றார். மழை பிடித்த நாளில் அவளைக் காணவில்லை!

கட் பண்ணா...

ஸ்பான்சர் நண்பரோடு, நள்ளிரவு ஒரு மணிக்கு ரெசிடென்ஸி டவர்ஸ் ஹோட்டல். லாபியில் நின்றபடி சையிஃப் அலிகானும் கரீனா கபூரும் கொஞ்சிக்கொண்டு இருக்கிறார்கள். பக்கத்து டேபிளில் நண்பர்களோடு நகுல் உட்கார்ந்து இருந்தார். கடைசி டேபிளில் மொபைலை நோண்டிக்கொண்டு இருந்தது அமலா பால்தானா?

தூக்கத்தின் சுவடுகளே இல்லாமல் செவத்த பையன்களும் பெண்களும் ஹை டெஸிபலில் சிரித்துக்கொண்டு இருக்கிறார்கள். இந்த நேரத்திலும் அங்கங்கே நடுத்தர வயது மனிதர்கள் பணம் வழியும் கண்களோடு நிசப்தமாக பிசினஸ் பேசுகிறார்கள். ரெஸ்ட் ரூம் போய்விட்டுத் திரும்பும்போது, கை நிறையத் தட்டுகளுடன் ஹோட்டல் யூனி ஃபார்மில் எதிரே சம்பத் வருகிறான். என்னைப் பார்த்த கணம் அவன் முகம் சங்கடத்தில் நெளிகிறது.

சம்பத், மன்னார்குடியில் பெரிய விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவன். மாடுகளுக்கு ஒரு தொழுவம், குதிரைகளுக்கு ஒரு தொழுவம் எனப் பெருவாழ்வு பார்த்தவன். ஊருக்குப் போகும்போது, பரந்துகிடக்கும் வயல்களுக்கு நடுவே அவன் அப்பாவோடு நடந்து வந்த காட்சி, பழுப்பேறிய புகைப்படம் போல மனதில் உதிர்கிறது. ஆலங்குடி திருவிழாவுக்கு, வலங்கைமானில் பட்டாசு வாங்கிக் கொண்டு, ஆறேழு பைக்குகளில் அவன் வந்ததைப் பார்த்து 10 வருஷம் இருக்கும்.

''சம்பத்து... இங்கேயா வேலை பார்க்கற..?''

''ஆமா மாப்ள... ரெண்டு வருஷமாச்சு... ரெஸ்டாரென்ட் டூட்டி.''

கொஞ்ச நேரத்தில் நகுல் டேபிளுக்கு பில் வைத்துவிட்டு எங்கள் டேபிளுக்கு வந்து நின்றான் சம்பத்.

‘‘சார், ஆர்டர் ப்ளீஸ்!’’

கட் பண்ணா...

மழைக்கு ஒதுங்கி கோடம்பாக்கம் பாலத்துக்குக் கீழே நிற்கிறேன். சட்டென்று மனசுக்கு ஏதோ ஆகிவிடுகிறது. மழையா, தனிமையா, தோல்வியா? எதுவுமே புரியவில்லை. இப்படித்தானே எல்லோரும் ஒரு கணமும் மறு கணமுமாக மாறிமாறி வாழ்கிறோம். மழைக்கு ஒதுங்கி நின்று ஊரை, மனிதர்களைப் பார்க்கும்போது, நெஞ்சு நனைந்து ஏதேதோ முளை விடுகிறது. இதெல்லாம் எதன்பொருட்டு? என்ற கேள்வி, குடைக்காளான்போல் பூக்கிறது.

வேளா வேளைக்குச் சாப்பாடு, சம்பளம், துயரம், சந்தோஷம் எனக் கிடைக்கும் ஒரு வாழ்வு, எல்லோருக்கும் எப்போதும் அமைவது இல்லை. கனவு, லட்சியம், வேட்கை எனத் துரத்தும் வாழ்வில் எங்கேதான் போய் நிற்கப்போகிறோம்? பாழாய்ப்போன மனசு எப்போதும் அடைவதற்கான ஆவேசங்களிலோ, விடுபடுவதற்கான விமோசனங்களிலோதான் இருக்கிறது. அன்புக்கு ஏங்குகிறது. வன்மம் இல்லாத உலகுக்குத் தவிக்கிறது. தளைகள் அற்ற சந்தோஷத்துக்குக் காத்திருக்கிறது. மாடிப்படியின் கீழ் இரவெல்லாம் கத்தும், குட்டிகள் ஈன்ற பூனையைப்போல, எப்போதும் பரிசுத்தமான காதலுக்குப் பரிதவிக்கிறது.

ஆனால், நாமே நாம் நினைத்ததுபோல் இருப்பது இல்லையே. யாருக்கும் நாம் வேண்டுவதைக் கொடுப்பதும் இல்லை. வன்மமும், கோபமும், வெறுப்புமான ஒரு வாழ்க்கை, நம்மை அனுதினமும் அழைக்கிறது.

எஃப். டி.வி. அலறும் அபார்ட்மென்டுக்கு முன்னால் ஒரு பாவப்பட்ட டெய்லர், வெயில் சாலையில் நெஞ்சில் டியூப் உடைக்கும் முதியவர், சப்வேயில் காலங்காலமாக மௌனமாகத் தட்டு நீட்டும் ஒருத்தி,

தெருமுனையில் மார்பு அறுந்துகிடக்கும் மன நோயாளி, நட்சத்திர ஹோட்டலில் பேரர் வேலை பார்க்கும் விவசாயி மகன், இதை எழுதிக்கொண்டு இருக்கும் நான்... எல்லோரும் ஒன்றுதான். வறுமை என்பது, பணமும் பொருளும் மட்டும் அல்ல... அன்பின் வறுமைதான் உலகின் அதிபயங்கரம்.

கட் பண்ணா...

இரவு வீட்டுக்கு பாலா வருகிறார். தீவிரமான அரசியல் விமர்சகர். ''அமெரிக்கா, இங்கிலாந்துனு முக்கியமான அஞ்சு நாடுகள் இந்தியாவுக்குச் சுற்றுலா போகாதீங்கனு சொல்லிட்டாங்க பார்த்தியா? எனக்கென்னவோ சீனாவும் பாகிஸ்தானும் சேர்ந்து இந்தியாவுல பெரிய போரைக் கொண்டுவரப் போறானுங்கனு நினைக்கிறேன்.''

''மெட்ராஸ்லயும் குண்டு போடுவானுங்களா..?''

''பின்னே... இதுதானே மெயின் அயிட்டம். சென்னைல்லாம் அதுல நம்பர் ஒண்ணுடி. மக்களோட எதிர்காலத்தைப் பத்திக் கவலைப்படாம அதிகாரம், அணு ஆயுதம், ஊழல்னு நடக்கிற உலக அரசியல் அதோட முடிவைத் தேடிட்டே இருக்கு. அதுக்கும் நாமதான் பலி.''

தவிர்க்கவே முடியாமல் குண்டுகள் விழுகிற கற்பனை வருகிறது. அறிவாலயத்திலும், போயஸ் கார்டனிலும், ப.சிதம்பரம் வீட்டிலும் ஒளிந்துகொள்ள மக்கள் முட்டிமோதுவதைப்போல் காட்சி வருகிறது. தெருமுனைப் பைத்தியம், ''ஓடுங்கடா... ஓடுங்கடா...'' எனப் பெருங்குரல் எடுத்துச் சிரிப்பது பின்னணிக் குரலாகக் கேட்கிறது.

கூடவந்த இன்னொரு நண்பர், ''அதை விடுங்க... எனக்கென்னவோ இந்த மாயன் காலண்டர் வேலையைக் காட்டுமோனு தோணுது. பார்த்தீங்களா... வரவர எல்லா மக்களும் டி.வி., மொபைலு, இன்டர்நெட்னு கொண்டாட்டமா இருக்கான். ஆண்டவன், 'எல்லாரும் அனுபவிச்சுகங்கடா... மொத்தமா சோலியை முடிக்கப் போறேன்'னு சொல்றான்னு நெனைக்கிறேன்...''

‘‘மாயன் காலண்டரா?’’



‘‘அதாம்ப்பா... சீக்கிரம் உலகம் அழியப்போகுதுன்னு சொல்ற காலண்டரு...’’

கட் பண்ணா...

‘‘டேய்... தோட்டத்துக்கு வந்தப்ப நீ நட்டுவெச்ச தேக்கு இப்போ மரமாகிருச்சுரா...’’ என மொபைலில் சௌபா அண்ணன் வருகிறார். திடீரென்று மனசு சந்தோஷமாகிறது. இனம் புரியாத உற்சாகமாகிறது. பெரும் நம்பிக்கை உள்ளே தழைக்கிறது. சில வார்த்தைகள்தான்.... ஒரு செயல்தான்... ஒரு விடியல். இந்த மழைக் காலத்தில் யார் யாரோ வைத்த எத்தனையோ செடிகள் வளரும் என்கிற நம்பிக்கைதான் இன்னொரு கோடையைக் கொண்டுவருகிறது.

செடிகள் என்பது செடிகள் மட்டுமே அல்ல!

# 14

# டீச்சர்கள், கடவுளின் நிழல்!

**ஏ**ழெட்டு வருடங்களுக்கு முன்பு, ஒரு நள்ளிரவில் என் அறைக்குப் பதற்றமாக வந்தான் சுகந்தன்!

இவன், என்னோடு டி.வி.எஸ்—ஸில் வேலை பார்த்த நண்பன். புதுக்கோட்டைக்காரன். நீண்ட நாட்—களுக்குப் பிறகு நள்ளிரவில் வந்து நின்றான். உட்காரக்கூட இல்லை.

''நண்பா... அவசரமா ஒரு ஹெல்ப்!''

''என்னடா..?''

''நாளைக்குள்ள ஒரு... ஒரு லச்சம் ரூவா பொரட்டித் தர முடியுமாடா?''

எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. என் ரேஞ்சுக்கு ஏதோ அஞ்சாயிரம், பத்தா—யிரம் என்றால் பரவா—யில்லை. ஒரு லட்சமா..?

''அவ்வளவு காசுக்கு நான் எங்கடா போறது... எதுக்கு இப்போ இவ்வளவு பணம் உனக்கு..?''

''வேண்டப்பட்டவங்களை ஆஸ்பத்திரியில சேர்த்துருக்கு... நீ வட்டிக்காச்சும் வாங்கித் தாயேன். எப்பிடியாவது திருப்பித் தந்துர்றேன்!''

காலையில் அவனோடு பக்கத்தில் இருந்த ஒரு மருத்துவமனைக்குப் போனேன். 60 வயசு இருக்கும்... ஒரு பெரியம்மா ஐ.சி.யூ—வில் மூச்சுவிட சிரமப்பட்டுக்கொண்டு கிடந்தார்.

அது சுகந்தனின் நடுநிலைப் பள்ளி டீச்சர். ‘‘இசபெல்லா சிஸ்டர் நண்பா... அவங்களுக்கு ராஜமுந்திரி. குடும்பத்தையே விட்டுட்டு வந்துட்டாங்க... சும்மா ஃபார்மாலிட்டிக்கு டீச்சர்னு சொல்றேன். நான் பேராவூரணி ஹாஸ்டல்ல தங்கிப் படிச்சப்போ, அம்மா மாதிரி என்னைக் கவனிச்சுக்—கிட்டவங்கடா. உடம்பு முடியாததால வேலையை விட்டுட்டு ராஜமுந்திரிக்கே போயிட்டாங்க. எங்க ஆயா ஒண்ணு... அதுகிட்ட நம்பர் புடிச்சுப் போய்ப் பாத்தேன். போன வாரத்துல இருந்து இப்பிடிக் கெடக்காங்க... இங்கே அழைச்சுட்டு வந்துட்டேன். யாருக்கும் சொல்லவேயில்ல!’’ என சுகந்தன் அழுதான்.

வளசரவாக்கம் அழைத்துப்போய், ஆறு காசு அநியாய வட்டிக்கு அவனுக்கு ஒரு லட்சம் வாங்கிக் கொடுத்தேன். 80 ஆயிரம் செலவு பண்ணி அறுவைசிகிச்சை செய்தார்கள். ஆனாலும், மூன்று நாட்கள் கழித்து இசபெல்லா சிஸ்டர் இறந்து—போனார். சிஸ்டரின் அண்ணன் எதற்குமே சம்பந்தம் இல்லை என்பதுபோல் ஓரமாக ஒதுங்கிக்கொண்டார். சுகந்தன்தான் எல்லாவற்றையும் செட்டில் பண்ணினான். டீச்சரின் உடலை வாங்கிக்கொண்டு ராஜ—முந்திரி போனான்.

மறு நாள் இரவு போன் பண்ணி, "சிஸ்டர்கூட இப்பிடி ஒரு டிராவல் பண்ணுவேன்னு நெனைச்சே பாக்கலடா. இப்பத்தான் தகவல் தெரிஞ்சு ஸ்கூல்ல பாதிப் பேர் கெளம்பி வந்துட்டாங்க. ஆளாளுக்குப் பணம் தர்றேங்குறாங்க... நான் யார்ட்டயும் எதுவும் வேணாம்னுட்—டேன் நண்பா. இந்த வாழ்க்கையே சிஸ்டர் கொடுத்ததுரா!’’ என மொசு—மொசு—— வென அழுதான்.

**எ** னக்குத் தெரிந்த எல்லா ஆண்களுக்கும் முதல் ஆதர்ஷம் அவர்களது டீச்சர்—களாகத்தான் இருக்கிறார்கள். சுகந்தனுக்கு இசபெல்லா சிஸ்டர். எனக்கு ரோஸி சிஸ்டர். வெள்ளை நிழலாக,

குழந்தை இயேசு—வின் புன்னகையாக, கைப்பிடி ஈர மண்ணாக என்னோடு எப்போதும் இருக்கிறது ரோஸி சிஸ்டரின் நினைவு. இப்போதும் நினைக்கிற நொடியில், மெது— மெதுவெனத் தலைக்குள் இறங்கும் வெண் கரம். தேவாலய மணியோசையும், 'மேரி——யின் ராஜ்ஜியம் எந்நாளும் உன்னோடு' பாடலும் மூச்சை முகிழ்த்தும் குட்டிகூரா பவுடர் வாசமுமாக பொசுக்கென்று மனசு நிறைகிறது!

மூலங்குடி கிறிஸ்துவப் பள்ளியில் படிக்கும்போது ரோஸி சிஸ்டர் எங்கள் டீச்சர். வகுப்பில் அனேகம் பேருக்கும் சிஸ்டர் மீது அவ்வளவு பிரியம். அப்போது ஊரில் பெரும்பாலான வீடுகளில் விசேஷ சமயங்களில்தான் இட்லி, தோசை போடுவர். மதியங்களில் பள்ளி வராந்தா முழுக்க முள்ளங்கி சாம்பாரும், பீட்ரூட் பொரியலுமாக எப்போதும் ஒரே வாசத்தில் மணக்கும் சத்துணவு.

இதற்கு நடுவே, தோட்டத்துக்குத் தண்ணீர் ஊற்றும் பி.டி. வகுப்புகளில், யாருக்கும் தெரியாமல் விடுதிக்கு அழைத்துப்போய் ஃப்ரிஜ்ஜில் இருந்து ரோஸி சிஸ்டர் எடுத்துத் தரும் கேக் ஓர் உலக அதிசயம். யானையைப் பற்றிய ஒரு இங்கிலீஷ் எஸ்ஸே ஒப்பிக்கச் சொல்லி, மொத்த வகுப்பையும் நொச்சிக் குச்சியால் ஹெச்.எம். சிஸ்டர் உரித்தெடுத்த—போது, 'உஸ்ஸு...உஸ்ஸு...' எனக் கைகளை ஊதிக்கொண்டு அலைந்தோம். அடுத்த வகுப்புக்கு ஆலிவ் எண்ணெய் டின்னோடு வந்து, ''கைல தேச்சிக்கங்கடா...'' எனக் கொடுத்த ரோஸி சிஸ்டர் மீது எந்தப் பய—லாவது பிரியம் வைக்காமல் இருக்க முடியுமா?

ஒவ்வொரு கிறிஸ்துமஸ் இரவிலும் சர்ச்சில், கர்த்தர் அவதரித்த நாடகம் நடக்கும். ரோஸி சிஸ்டர்தான் மேக்——அப் இன்சார்ஜ். தேவதூதனுக்கு தெர்மோகோல் சிறகு கட்டிவிட்டு, முன்னால் உட்கார்ந்து, ''என் தலையில கை வெச்சுச் சொல்லு... ரட்சகர் பிறக்கும் நாளில், தென்மேற்கில் ஒரு நட்சத்திரம் உங்களை அழைத்துச் செல்லும்..." என சிஸ்டர் சொல்லித்தரும் காட்சி அப்படியே இருக்கிறது. வாணி ஒழுக, அவர் மடியில் தூங்கிப்போகும் கிறிஸ்துமஸ் இரவு, நிறைய தின்பண்டங்களோடு விடியும். சாதாரணமாகவே பென்சில்,

கர்ச்சீப், சாக்லேட் எனத் தினமும் யாருக்—காவது ஏதாவது பரிசுப் பொருள்—களுடன்தான் வருவார் சிஸ்டர்.

எட்டாவது படிக்கும்போது ஒரு சாயங்காலம், சர்ச்சுக்குப் பின்னால் வைத்து, என்னிடமும் சோலையம்மாவிடமும் ஏதோ விழாவுக்காக வேளாங்கண்ணி போனபோது, தன்னிடம் ஒருவர் தவறாக நடந்துகொண்டதைச் சொல்லி சிஸ்டர் அழுதார். அந்தக் கணம்தான் நான் பெரிய மனிதனா—னேன்!

அப்புறம் நான் ரோஸி சிஸ்டரைப் பார்க்கவே இல்லை. அவர் எங்கே இருக்கிறார் என்று தெரியவில்லை. மஞ்சள் வெயில் இறங்கும் மலை உச்சியில், மேய்ப்பனுக்காகக் காத்திருக்கும் வழி தவறிய ஆட்டுக்குட்டியைப் போல நாம் வாழ்க்கை முழுக்க நம் மனதுக்குப் பிடித்த டீச்சருக்காகக் காத்திருக்கிறோம்.



பறவையின் இறகைப் போன்ற அப்பழுக்கு எதுவும் இல்லாத நமது பால்யத்தை எடுத்துக்கொண்டு டீச்சர்கள் போய்விடுகிறார்கள். அதனால்தான் நாம் காலத்துக்கும் அவர்களை நினைத்துக்—கொண்டே இருக்கிறோம். டீச்சர்கள் நமது பரிசுத்தம்!

**பா** தி பின்னப்பட்ட கலர் கலர் வயர் கூடைகள்தான் தேன்மொழி டீச்சரின் அடையாளம். சிவப்பு கலர் சைக்கிளில் வரும் தேன்மொழி டீச்சர், வயர் கூடை பின்ன சொல்லித்தருவார். எம்ப்—ராய்டரி பூக்கள் தைக்கச் சொல்லித்தருவார். குப்பைகளை வைத்து பொம்மைகள் செய்து தருவார். இத்தனை வருடங்களில் தேன்மொழி டீச்சரைப் போல நளினமாகப் புடவை கட்டி வருகிற யாரையும் நான் பார்த்தது இல்லை.

சீயக்காய் மணக்க, இடுப்பு வரைக்கும் தலைமுடியை அள்ளிப்போட்டு, ஒற்றை செம்பருத்தியோடு வரும் தேன்மொழி டீச்சருக்குப் பக்கத்து வீட்டில்தான் மோகன் இருந்தான். அதனாலேயே அவன் வகுப்பின் வி.ஐ.பி.

''காலையில 6 மணிக்கு டீச்சர் பால் வாங்க வரும்டா'', ''இன்னிக்கு டீச்சர் ஆத்துல குளிச்சுட்டு வந்துச்சு தெரியுமா..?'', ''டீச்சர் தங்கச்சியோட ஒரே சண்ட...'', ''நேத்து பிலிப்ஸுக்கு டீச்சர் படம் பாக்கப் போச்சுரா'', ''நாளைக்குப் பாரேன் டீச்சர் வராது'' என அவன் வாசிக்கும் டீச்சர் நியூஸுக்காகவே எலந்தக்கொட்ட, தேன் மிட்டாய் எனக் கல்லாக் கட்டுவான்.

தாஸ்தான் தேன்மொழி டீச்சரை அதீதமாகக் காதலித்தான். ஒரு முறை மோகன், ''நேத்து டீச்சரைப் பொண்ணு பாக்க வந்தாங்க. மாப்ள சூப்ப்பரா இருக்கான்டா. புன்னகை மன்னன் கமலாசன் கணக்கா..." எனச் சொன்ன நாளில், அத்தனை பேரும் சோகமாகத் திரிந்தோம்.

தாஸ், ''மாப்ள எந்தூருன்னு சொல்றா... எங்க மாமா காங்கிரஸ் கச்சி தெரியும்ல... மாப்ளையை க்ளோஸ் பண்ணச் சொல்லிருவோம்" என சீரிய—ஸாகச் சொன்னான்.

பல வருடங்—களுக்குப் பிறகு குடவாசல் பஸ் ஸ்டாண்டில் மோகனைச் சந்தித்தபோது கேட்டேன், ‘‘தேன்மொழி டீச்சர் என்ன பண்றாங்கடா..?’’

"தெரியல மாப்ள... நான் பார்த்தே ரொம்ப நாளாச்சு!"

**ச** த்யராஜ் மாதிரி உடம்பு முழுக்க முடி இருக்கும் ஆர்.கே.வி. வாத்தியார், இங்கிலீஷ் புத்தகம் எடுத்துப் போகாததற்காக ஒரு முறை என்னைத் தூக்கிப் போட்டுப் பந்தாடினார். கிளாஸ் முழுக்க ஓடவிட்டுக் கும்மி எடுத்தார். லஞ்ச் இடைவேளையில் நான் அழுதபோது பஷீர் சொன்னான், ‘‘விட்றா... அந்தாளு டி.வி.எஸ்—. 50——ல—தானே வர்றாரு? டேங்க்ல சீனியைக் கொட்டிருவோம்."

‘‘டேங்க்ல சீனியைக் கொட்டுனா..?"

‘‘இன்ஜின் சீஸ் ஆகி, வண்டி நாசமா—கிரும். சமயத்துல ‘டொம்ம்ம்’முனு வெடிச்சுரும். அப்பதான் நீ யார்னு தெரியும்!" எனக்கு வெறி ஏறியது.

மறுநாள் வம்பாடுபட்டு கால் கிலோ சீனி வாங்கிப் போனேன். அந்தச் சீனியோடு ஒரு வாரம் பள்ளிக்கூடத்தில் பஷீரோடு அலைந்து திரிந்தேன். எட்டாவது நாள் பார்த்தபோது 50 கிராம்தான் மீதி இருந்தது. அதையும் தின்றுவிட்டு பஷீர் சொன்னான், ‘‘அவர்ட்ட டியூஷன் சேர்ந்துருவோம் மாப்ள...’’

**எ** ப்போதும் வெத்தலைப் பாக்கு, டீ, வடை வாங்கி வரச்சொல்லும் பத்மநாபன் வாத்தியார்—, பிச்சையம்மாள் டீச்சர் இரண்டு பேரும் தம்பதி. ஒரே ஸ்கூலில் உத்தியோகம். பத்மநாபன் வாத்தியார் எங்கள் காதைத் திருகி ‘கம்னாட்டி... கம்னாட்டி...’ என அடித்துக்கொண்டு இருக்கும்போதே பிச்சையம்மாள் டீச்சர் வந்து, ‘‘ஏன் அவனைப் போட்டு அடிக்கிறீங்க... விடுங்க’’ எனக் காப்பாற்றிவிட்டுப் போவார்.

நெற்றியில் நாமம் போட்டு, பெல்பாட்டம் பேன்ட்டால் தெருவையே கூட்டிக்கொண்டு வரும் ஜி.ஆர். வாத்தியார், எப்போதும் எச்சில் தெறிக்கப் பேசும் பன்னீர் சார், எப்போதும் மாதவி படம் வரைந்து—கொண்டே இருக்கும் ஓவியம் சார்... எத்தனை ஆசிரியர்கள் சேர்ந்து இந்த வாழ்க்கையை வடிவமைத்துக் கொடுத்திருக்கிறார்கள்!

**எ**னக்குத் தெரிந்த ஒரு பள்ளிக்கூடத்தில் தலித் என்பதற்காக, பாரதி டீச்சரை ஏற்றுக்கொள்ள மறுத்தார்கள். ‘எங்க பிள்ளைகளுக்கு இவ பாடம் சொல்லித் தர்றதா..?’ என எதிர்ப்பு. ஆசிரியர்— பெற்றோர் சங்கம் மீட்டிங் போட்டு பாரதி டீச்சரை வேலையை விட்டுப் போகச் சொன்னபோது, பிரேயர் ஹாலில் இருந்து அவர் அழுதுகொண்டே வெளியேறியது இப்போதும் ஞாபகத்தில் இருக்கிறது. மெட்ரிகுலேஷன் ஸ்கூல் ஒன்றில் இப்போது அவர் டீச்சராக இருக்கிறார். அப்போது அவரை வேண்டாம் என்று சொன்ன—வர்களின் பேரன், பேத்திகள் எல்லாம் இப்போது அவரிடம்தான் படிக்கிறார்கள்.

ஒரு சமூகத்தின் முதல் நீதி பள்ளிக்கூடத்தில்தான் பிறக்கிறது. டீச்சர்களிடம் இருந்துதான் ஒவ்வொரு சமூகமும் முதல் ஒளி வாங்கிக்கொள்ள முடியும்!

‘கடலோரக் கவிதைகள்’ படத்தை இதுவரை அம்பது, அறுபது தடவை பார்த்—திருப்பேன். ஒரே காரணம், ஜெனிஃபர் டீச்சர். பாதி நிழலும் பாதி வெயிலுமாய் ஓர் ஒளி விழுந்திருக்க, சர்ச்சுக்கு வெளியே நின்று, ‘டீச்சர்... டீச்சர்... எனக்காக கடவுள்ட்ட பிரார்த்தனை பண்ணுவீங்களா டீச்சர்’ என சின்னப்பதாஸ் கெஞ்சுவது மாதிரிதான் நாமும். நமக்கான பிரார்த்—தனைகள் எப்போதும் அவர்களிடம்தான் இருக்கின்றன.

‘அழியாத கோலங்கள்’ இந்து டீச்சரை இப்போது தொலைக்காட்சியில் பார்க்கும்போதும் நினைவுகள் சிலிர்க்கின்றன. ஜாங் இமு இயக்கிய ‘நாட் ஒன் லெஸ்’ என்ற சைனீஸ் படம் பார்த்திருக்கிறீர்களா?



ஒரு ஸ்கூலுக்குப் புதிதாக ஒரு பெண் டீச்சர் வருவாள். அவளும் கிட்டத்தட்ட மாணவி தோற்றத்திலேயே இருப்பாள். அவரை டீச்சராக ஏற்றுக்கொள்ள முடியாமல், சண்டை போடுவான் ஒரு மாணவன். அவள் கண்டிப்பதால், அந்த ஸ்கூலே பிடிக்காமல் அவன் ஓடிவிடுவான்.

தொலைந்துபோன அவனைத் தேடி அலைந்து, நகரத்தில் கண்டுபிடித்து, மறுபடி அழைத்து வருவாள். கடைசிக் காட்சியில் வகுப்பில் அவள் போர்டில் ஒரு பூ வரைந்து, ''இது என்ன?'' என அவனிடம் கேட்பாள். அவன் ''பூ'' என பதில் சொல்வதோடு படம் முடியும். அவன் அவளை டீச்சராக ஏற்றுக்—கொண்டான் என்பதை அவ்வளவு கவிதையாகச் சொல்லியிருப்பார் இமு!

டீச்சர்கள் நமக்கு சொல்லித்தந்த பூக்கள், எப்போதும் உதிராத பூக்கள். நிறம் இழக்—காமல், வெயில் மழை குடிக்கும் பூக்கள். எங்கே சென்றாலும், என்ன ஆனாலும் டீச்சர்களுக்கு நாம் சிறு பிள்ளைகள்தான். அவர்கள் கடவுளின் நிழல்போல் எங்கோ இருக்கிறார்கள். வயதாகி உடல் உடைந்து சிரமங்கள் கடந்து எப்படி

எப்படி எல்லாமோ ஆகிவிடுகிறார்கள். ஆனால், நம் நினைவில் நிற்பது கம்பீரமான டீச்சர்—கள்தான்.

‘ஆண்கள் தங்கள் டீச்சரைக் காதலிப்பதுபோல் சிறு வயதில் பெண்கள் தங்கள் ஆசிரியர்களைக் காதலித்தார்களா?’ எனத் தோழி ஒருவரிடம் கேட்டேன். சட்டென்று முகம் பிரகாசமாகி, ‘‘அதேதாம்பா... உனக்கு சிவக்குமார் வாத்தியார் ——பத்தி சொன்னது இல்லேல்ல...’’ என இமைகள் படபடக்கப் பேச ஆரம்பிக்—கிறார்!

சுகந்தன், போன மாசம்தான் அந்த ஒரு லட்சத்துக்கான வட்டியைக் கட்டி முடித்——தான். அது சரி... டீச்சர்களுக்கும் நமக்குமான கடனை முழுமையாகத் தீர்த்தவர்கள் யாராவது இருக்கிறோமா என்ன..?

# 15

# லாஜிக் இல்லாத காமெடி!

**ம**னித வாழ்க்கையை, 'துயரங்களின் நகைச்சுவை' என்றார் சாப்ளின். படித்ததிலேயே எனக்கு மிகவும் பிடித்த பஞ்ச் இதுதான். நிஜமாகவே இந்த உலகம், எவ்வளவு பெரிய காமெடிக் கழகம்!

ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு ஓர் இரவு... புலியூர் ஹவுஸிங் போர்டில் மூன்றாவது தளத்தில் உள்ள எனது அறைக்குள் நுழைந்தேன். நடுக்கூடத்தில் நெஞ்சில் 'நெஞ்சுக்கு நீதி'யை விரித்துவைத்துப் படுத்திருந்தார் சரவணன் அண்ணன். செருப்பைக் கழற்றிவிட்டு ஓர் அடி எடுத்துவைத்தபோது, காலடியில் தரை இட வலமாக நகர்வதை உணர்ந்தேன். அடுத்த ஸ்டெப்பில் கட்டடமே ஒரு குலுக்கல் போட, பொசுக்கென்று மூளை அலறியது. ''அண்ணே... பூகம்பம்ணே... எர்த்க்வாக்...'' என அலறியபடி வெளியே தவ்வினேன்.

எனக்கு முன்னால் சிதறிப் பறந்துவந்து விழுந்தது 'நெஞ்சுக்கு நீதி'. அதற்குள் மாடிப் படிகளில் தபதபவென ஓடத் தொடங்கியது கூட்டம். எனக்கு எல்லாமே அவுட் ஆஃப் ஃபோகஸ் ஆகிவிட்டது. அத்தனை பேரையும் தாண்டி, சைடு ஸ்லாப்பில் சறுக்கியபடி மின்னல் நொடிகளில் தரைத் தளத்தை அடைந்தேன். வெளியே வந்து மூச்சு வாங்கியபோதுதான், தன்னிலை அடைந்து சட்டெனக் கூச்சம் மண்டியது.

இரண்டாவது தளத்தில் இருந்த மலையாளக் குடும்பத்தில் மூன்று மோகினிகள் இருந்தனர். மேல் தளத்து பிரம்மசாரிகள் போகும்போதும் வரும்போதும் பார்வைகளிலேயே அந்தப் பெண்களோடு வாழ்ந்து

வந்தோம். எனக்கும் கடைசிப் பெண்ணோடு ஒரு கெமிஸ்ட்ரி ப்ராசஸில் இருந்தது. இந்தப் பூகம்பப் பொழுதில் வீர தீர இளைஞனாக அவர்களை வழிநடத்தி இருக்க வேண்டியவன், இப்படி உயிருக்குப் பயந்து அந்தரத்தில் பறந்து வந்தது எவ்வளவு பெரிய அவமானம்? மனசு பிசைந்தது. படக்கென்று பக்கத்தில் விழித்துக்கொண்டு இருந்த ஒரு குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டேன். கீழே இறங்கி வந்த அந்தப் பெண்களின் அம்மா என்னைப் பார்த்து, ''எந்தா முருகா... உயிருக்கு அவ்வளவு பயமா?'' எனச் சிரித்தார். ''இல்லைங்க... கிரவுண்ட் ஃப்ளோர்ல இந்தக் குழந்தை தனியா நின்னுட்டு இருந்துச்சு... இதைத் தூக்கத்தான்...'' எனச் சொன்னபோது எனக்கே தொண்டை அடைத்தது. மூன்று பெண்களும் கோரஸாகப் பெருஞ்சிரிப்புச் சிரித்தார்கள்!

டி.வி., மிக்ஸி, கம்ப்யூட்டர் என்று கையில் கிடைத்த பொருட்களை அள்ளிக்கொண்டு முக்கால் நிமிடத்தில் மொத்த ஹவுஸிங் போர்டும் கீழே நின்றது. ஒரு ஆபீஸர் ஜட்டியோடு நின்றார். தெருவெல்லாம் மக்கள் மரண பயத்தில் நசநசத்தனர். பக்கத்து ஃப்ளாட் ரிப்போர்ட்டர் தன் மொபைலில், 'என்னது... இந்தோனேஷியாவுல 1,000 பேர் செத்துட்டாங்களா?! 6.2 ரிக்டரா...' என அப்டேட் கேட்டுத் தன் பங்குங்குப் பீதி கிளப்பினார்.

''யாரும் உள்ளே போகாதீங்க... திரும்ப எர்த்க்வாக் வருமாம். ப்ளீஸ் ஸ்டே அவுட் சைட்...'' என அசோஸியேஷன் தலைவர் கத்தினார். அப்போது ஃபுல் மப்பில் வந்த என் ரூம்மேட் சந்திரமோகன், அவன் பாட்டுக்குப் படி ஏறி, எல்லோருக்கும் கை காட்டிக்கொண்டே ரூமுக்குப் போய்த் தூங்கிவிட்டான். எல்லோரும் வெட்ட வெளியில் செட்டிலானோம்.

ஒருவர் டி.வி. பெட்டிக்கு கனெக்‌ஷன் கொடுக்க, சீரியல் ஓட ஆரம்பித்தது. பக்கத்தில் ரம்மி கச்சேரி. வாட்ச்மேன் என்னிடம் வந்து, ''ஆறு மாசமா சம்பளம் ஏத்திக் கேக்கறேன் சார்... எவனும் கண்டுக்கலை. சும்மா மீந்ததைப் போட்டா போச்சா... அதான் பூமி மாதா போட்டுப் பாக்குறா...'' எனத் தன்னளவில் ஒரு கேயாஸ் தியரி

சொல்கிறார். விடிய விடிய விழித்துக்கிடந்து, அதிகாலையில் அவரவர் வீடு மீண்டனர். ‘‘என்ன மாமா... நேத்து நிலநடுக்கம்னதும் டவுசரோட நின்ன...’’ என மறுநாள் அத்தனையும் காமெடியாகி விட்டது. முன் தினம் பூமி கொஞ்சம் கூடுதலாக அசைந்திருந்தால்... இந்த நகைச்சுவை எவ்வளவு பெரிய துயரம்!

**உ** ண்மையில் அபத்தக் காமெடிகளால்தான் நிறைந்திருக்கிறது நம் வாழ்க்கை. கண்ணீருக்கும் சிரிப்புக்கும் நடுவே நெளியும் ஒரு மின்னலென மாயம் செய்கிறது மனித மனம். டைஃபாய்டு வந்து ஆஸ்பத்திரிக்குப் போனேன். ஓரமாகப் படுக்கப்போட்டு, சலைன் சொருகிவிட்டார்கள். நாலைந்து மணி நேரம், வருகிற போகிற நோயாளிகளை வேடிக்கை பார்ப்பதைத் தவிர வேறு வழி இல்லை.

அப்போது, கைக்குழந்தையோடு ஒரு பெண்மணி கதறிக்கொண்டு வந்தார். அவருக்கு, ஓட்டுப் போடுகிற வயசுதான் இருக்கும். கைலி சட்டையில் கெச்சலாக இருந்த அப்பனுக்கு வயது 20—25 இருக்கும். ஏழைக் குடும்பம். குழந்தைக்கு வாணி ஒழுக ஃபிட்ஸ் வந்து இழுத்துக்கொண்டு இருந்தது. ‘‘ஏங்க அறிவிருக்கா..? இவ்வளவு நேரம் என்ன பண்ணிட்டு இருந்தீங்க... வெரி சீரியஸ். இப்போதைக்கு மருந்து தர்றேன்... உடனே சைல்டு ஹாஸ்பிட்டல் கொண்டுபோனாத்தான் ஏதாவது பண்ணுவாங்க. பிள்ளையைத் தூக்கிப் பிடிங்க...’’ என்றபடி டாக்டர் குழந்தைக்கு மருந்து கொடுக்கும்போது, அந்த அப்பனின் பாக்கெட்டில் இருந்த மொபைல் அலறியது.

‘சிங்கத்தை போட்டோல பார்த்திருப்ப, சினிமால பார்த்திருப்ப, டி.வில பார்த்திருப்ப...’ என ரிங்டோனில் சத்தமாக சூர்யா கதறினார். பையன் தடுமாறி போனை ஆஃப் பண்ணும்போது, அந்தப் பெண் அவனை ஒரு முறை முறைத்தாள். அந்தக் காட்சி வாழ்வின் ஆகப்பெரிய துயர நகைச்சுவை.

**இ** ன்னொரு நாள் நண்பர் ஒருவரோடு பேசிக்கொண்டு இருந்தபோது, அவருக்கு போன் வந்தது. ‘குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி கொள்வதென்பதேது’ என்றது ரிங்டோன். அவர் எடுத்து, ‘‘ஒரு மீட்டிங்ல

இருக்கேன்மா... கூப்பிடுறேம்ப்பா’’ என வைத்துவிட்டு என்னிடம், ‘‘ரிங்டோனைக் கேட்டதும் கண்டுபிடிச்சு இருப்பீங்களே... என் வொய்ஃப்தான்னு’’ எனச் சிரித்தார். அது சரி... வாழ்க்கையைக் காமெடியாகப் பார்க்காவிட்டால், நம்மில் பல பேர் ஐ.சி.யூ. க்ளைமாக்ஸில்தான் கிடப்போம்!

**‘ச**மூகம்’ என்கிற வார்த்தைதான் இருப்பதிலேயே சூப்பர் காமெடி என்பது என் தாழ்மையான அபிப்ராயம். இந்தச் சமூகத்தால் எதுவெல்லாம் மிக சீரியஸாகக் கொண்டாடப்படுகிறதோ... அது எல்லாமே மிகப் பெரிய காமெடிதான்.



உங்கள் ஏரியாவில் யாராவது அப்படியே எம்.ஜி.ஆர். மேனரிஸங்களோடு வாழ்ந்தால், அவரை நீங்கள் எவ்வளவு பெரிய காமெடியனாகப் பார்க்கிறீர்கள்! நண்பர்களில் எவனாவது ‘திருமலை’ விஜய் மாதிரி காலரில் இருந்து சிகரெட் உருவினால், அவன்தானே உங்கள் செட்டில் கோமாளி. உலகின் மிகப் பெரிய சர்வாதிகாரி ஹிட்லரின் உருவம்தானே காமெடிக்கும் மிகப் பெரிய சிம்பல். மம்மர் கடாஃபியின் ஆடை அலங்காரங்கள் செம காமெடிதானே?

‘‘சார்... ஓப்பன் பண்ணா கல்வி அமைச்சர். ஆனா, அவர் பத்தாவது ஃபெயில். கட் பண்ணா... ஆள் மாறாட்டம் பண்ணி பத்தாவது பரீட்சை எழுதும்போது அமைச்சர் மாட்டிக்கிறார்...’’ என யாருக்காவது கதை சொன்னால், ‘‘என்னங்க... ஒரு லாஜிக் வேணாமா?’’ எனச் சிரிப்பார்கள்தானே... ஆனால், அந்த லாஜிக் இல்லாத காமெடியைச் சமூகம் எவ்வளவு எளிதாக நடத்திக் காட்டுகிறது?



சுப்ரமணியன் சுவாமி, தங்கபாலு, ஜே.கே.ரித்தீஷ் எல்லாம் பயங்கரக் காமெடியன்களாகவே சமூகத்தால் பார்க்கப்படுகிறார்கள். அவர்கள் காமெடியன்கள் அல்ல... காரியவாதிகள். கோடிகளில் புரளும் அரசியல் முதலைகள். இவர்களைப் போன்ற அரசியல்வாதி களைக் காமெடியன்களாகப் புரிந்து வைத்திருக்கும் சமூகம்தான், எப்போதும் காமெடி பீஸ். விதவிதமான இலவசங்கள், அறிக்கைகள், லட்டுக்குள் மூக்குத்தி, பால் பாக்கெட்டில் பணம், இட்லிக் கடையில் கரன்ஸிக் கத்தை, சினிமா ஸ்டார்களின் பிரசாரங்கள், பிரியாணி, சரக்கு என ஒவ்வொரு முறையும் தேர்தல்தானே ஜனநாயகத்தின் ஈடு இணை இல்லாத காமெடியாக இருக்கிறது.

விலைவாசியும், லஞ்ச ஊழலும்தானே பத்திரிகைகளில் நாம் அதிகமாக ரசித்துச் சிரிக்கும் ஜோக்குகள்? பெட்ரோல் விலை உயரும்போதும், கலைஞரைச் சந்திக்கும்போதும் மன்மோகன் சிங் எத்தனை காமெடியனாகத் தெரிகிறார். பச்சை கலர், யாகம், ஜோசியம்,

பூமி பூஜை எனக் கழகங்கள் நடத்தும் காமெடிகளை எத்தனை சீரியஸாகப் பார்க்க வேண்டிய கட்டாயம் இந்தச் சமூகத்துக்கு?

ஒரே இரவில் சூப்பர்மேனாகிவிட முடியுமா இந்தச் சமூகம்? பறந்து பறந்து அரசியல்வாதிகளின் வீடுகளிலும் சுவிஸ் வங்கியிலும் இருக்கிற மொத்தக் கறுப்புப் பணத்தையும் அள்ளிக்கொண்டு வந்து போட்டால் எப்படி இருக்கும்? இந்த மாதிரியான சமூகக் கனவுகள் எல்லாமே இங்கு காமெடியாக மட்டுமே இருக்க முடியும்!

**வ** டபழனி ரஹத் ப்ளாஸாவில் டிஷர்ட்ஸ் தேடிக்கொண்டு இருந்தேன். புது டிசைனில் இருந்த சே குவேரா டிஷர்ட்டைப் பார்த்துக்கொண்டு இருந்தபோது அந்தக் கடைக்காரர் என்னிடம் வந்து, ''சார்... எடுத்துக்கங்க சார். இவரைத்தான் இப்போ எல்லாரும் தேடுறாங்க. மைக்கேல் ஜாக்சனுக்கு அப்புறம் ஹாலிவுட்ல இவர்தான் ஸ்டாரு. ஜேம்ஸ்—பாண்ட்லாம் இந்தாளுக்கு அப்புறம்தான்... ம்ம்ம்...'' என்றார்.

'சீமான் அண்ணனுக்கு சேதி சொல்லி, முற்றுகைப் போராட்டம் நடத்தலாமா?' என ஒரு கணம் யோசித்தேன். கீழே வந்தபோது தரைத் தளத்தில் ஒரு பையன் சே டிஷர்ட்டோடு நின்று இயர் போனில் பேசிக்கொண்டு இருந்தான், ''டிஸ்கோன்னா அம்பிகா எம்பயர்தான் சீப்பஸ்ட்... சரி, அவ நிஜமா வர்றேன்னாளாடா?'' ஐயகோ... இந்தச் சமூகத்துக்கு சே குவேரா ஹாலிவுட் நடிகனாகவே இருந்துவிட்டுப் போகட்டும்!

எனக்குத் தெரிந்து, இல்லாதப்பட்டவர்கள்தான் சிரிக்கிறார்கள். காமெடியை அனுபவிக்கிறார்கள். இரவுகளில் பிளாட்ஃபார்மில் எஃப்.எம். கேட்டுக்கொண்டு, கறிக் குழம்பு ஆக்கிக்கொண்டு, குடும்பமாகக் கூடிச் சிரிக்கிறார்கள். பர்மா பஜாரில் அம்பதுக்கும் நூறுக்கும் உடல் விற்று, பொக்னா சோறு வாங்கித் தின்னும் மங்கைகளும் திருநங்கைகளும் இந்தச் சமூகத்தை எவ்வளவு காமெடி பண்ணிச் சிரிக்கிறார்கள் தெரியுமா?

எப்போதும் வந்த உடனே பொண்டாட்டிக்கு போன் பண்ணிப் பேசிவிட்டு, சாமி கும்பிட்டுவிட்டு, ‘வேலை’யை ஆரம்பிக்கும் ஆபீஸர்களை, வரும்போதெல்லாம் ‘ஒருதலைராகம்’ பாட்டைப் பாடச் சொல்லி நச்சரிக்கும் எழுத்தாளனை, ‘உன்னோடு நானிருந்த ஒவ்வொரு மணித்துளியும்’ எனக் கவிதை படிக்கும் கவுன்சிலரை, வெளியே வாங்கினா செலவு எனக் கறி எடுத்துவந்து சமைக்கச் சொல்லும் அண்ணாச்சியை... எவ்வளவு காமெடியாக்கிக் கடந்துவிடுகிறார்கள் அவர்கள்.

பாரில் வந்துபோவோரிடம் எல்லாம் ஓசிச் சரக்கு கேட்டுப் பிச்சையெடுக்கும் மனிதர், எல்லோரும் போய்விட்ட நள்ளிரவில், தெரு விளக்கின் அடியில் உட்கார்ந்து தனியே எதை நினைத்துச் சிரிக்கிறார்?

ஒரு காலத்தில், நாம் துயரங்களோடு கடந்துவந்த ஃபீலிங்குகள் எல்லாமே ஒரு கட்டத்தில் காமெடியாகிவிடுகின்றன. காதலிக்காக கையைக் கிழித்துக்கொண்டது, தூக்க மாத்திரை தின்றது, நண்பனுக்காகச் சண்டை போட்டது, உறவுகளிடம் மல்லுக்கு நின்றது, அலுவலகத்தில் கொந்தளித்தது, எவனுக்கோ சூனியம் வைத்தது, பழிவாங்கத் துடித்தது... எல்லாமே காலத்தால் காமெடியாகி நம்மைப் பார்த்துச் சிரிக்கின்றன!

எப்போதும் சிரித்துக்கொண்டே இருக்கிற தோழர் ஒருவரிடம் எரிச்சலாக ஒரு முறை கேட்டேன், ‘‘உனக்கு எதையும் சீரியஸாவே பார்க்கத் தெரியாதா? எதுக்கு எப்போ பார்த்தாலும் சிரிச்சுக்கிட்டே இருக்கே. இங்கே எல்லாமே உனக்குக் காமெடியா?’’ அதற்கும் அவர் சிரித்தபடியே சொன்னார், ‘‘சீரியஸாப் பார்க்க ஆரம்பிச்சா... செத்துருவேன்டா!’’

அது நம் சமூகத்தின் குரலாகக் கேட்டது!

# 16

# உறக்கம் வராத இரவுகள்..!

*‘**க**ள்ளம் கற்றது*
*ஓர் இரவு*
*காமம் கற்றது*
*ஓர் இரவு*
*ஜனனம் கற்றது*
*ஓர் இரவு*
*நான் மரணம் கற்றதும்*
*ஓர் இரவு*
*கோடி இரவுகள்*
*கற்றபோதும்*
*இந்த இரவு*
*கேட்கப்போகும்*
*எந்தக் கேள்விக்கும்*

எனக்கு விடை தெரியாது’ — ஆப்பிரிக்கக் கவிஞன் டெஸாமுரின் கவிதை எவ்வளவு உண்மை?!

**ஐ** நாக்ஸில் நைட் ஷோ முடிந்து திரும்புகிற இந்த இரவில், டிரஸ்ட் புரம் தெருவின் அபார்ட்மென்ட் ஒன்றின் கீழ் கொஞ்சம் நாற்காலிகள்

போட்டு சிலர் உட்கார்ந்து இருக்கிறார்கள். நடுவில் கண்ணாடிப் பெட்டிக்குள் யாரோ ஒருவர் உறைந்துகிடக்கிறார். பக்கத்தில் ஓர் அம்மா அழுது வீங்கிய முகத்தோடு புடவை முந்தியால் ஈக்களை விரட்டியபடி இருக்கிறது. ஓரமாகச் சில பெண்கள் கிசுகிசுப்பாகப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள். சிலர் தூங்கிவிட்டனர்.

செத்துப்போனவர் ரூபம்கொள்ளும் கடைசி இரவு... பக்கத்தில் இருப்பது அவர் மனைவியா? உட்கார்ந்திருப்பது அவர் பிள்ளைகளா? சகோதரர்களா? அவரைப் பற்றிய நினைவுகள் மண்டும் இந்த இரவை, அவரது உடலோடு கடந்துகொண்டு இருக்கும் உறவுகளின் பேசாப் பெருந்துயரை நான் அறிவேன். ஞாபகங்களின் கண்ணீர் உறைந்துவிடும் இந்த இரவு, அவர்களுக்கு எப்போதும் விடியப்போவதே இல்லை.

குப்பைகள்போலக் குவிந்துவிடும் கடந்தகால தினங்களில், எடுத்து வீச முடியாத காலிக் குப்பியாக இந்த இரவு கிடக்கும். ஒருவர் எழுந்துபோய், கண்ணாடிப் பெட்டிக்குப் பக்கத்தில் உட்கார்ந்து இருக்கும் அம்மாவிடம், ‘‘உள்ள போயி ரெண்டு இட்லியாவது வயித்துல போட்டுக்கம்மா...’’ என்கிறார். அந்த அம்மா எதுவும் பேசாமல் முகத்தைத் திருப்பிக்கொள்கிறார். மனிதர்களின் பசியையும் நினைவையும் தின்றபடி நழுவுகிறது அந்த இரவு! அந்த அம்மாவின் இடத்தில் நாம் எல்லோரும் இருக்கிறோம். மரணங்களிலும் நோய்களிலும் கடக்க முடியாத இரவுகள் எல்லோருக்குமான இறைவனின் பரிசு.

**எ**ன் அம்மா தற்கொலைக்கு முயற்சி செய்த ஓர் இரவில், ஆளும்பேருமாகச் சேர்ந்து லட்சுமாங்குடி ஆஸ்பத்திரிக்குத் தூக்கிப் போனார்கள். விவரம் தெரியாத சிறு பிள்ளைகளான எங்களை அத்தை வீட்டில் கொண்டுபோய்விட்டார்கள். எதுவும் புரியாமல் விளையாடிவிட்டு, ஆத்தா விசும்பியபடி போட்ட சோத்தைத் தின்றுவிட்டு தூங்கிப்போனோம். மறுநாள் ராத்திரிதான் ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போனார்கள். அம்மா பிழைத்துக்கொண்டது. பக்கத்தில் போன எனது கையைப் பற்றியபடி

மௌனமாகப் பார்த்த அம்மாவின் கண்களில் வழிந்துகொண்டே இருந்த நீர்... கோடி இரவுகளுக்கும் உலராது!

**த**ஞ்சாவூர் வினோதகன் ஆஸ்பத்திரியில் கனகராஜ் சித்தப்பாவைச் சேர்த்திருந்தபோது, இரவுகளில் யாராவது துணைக்கு இருக்க வேண்டும். வாட்ச்மேனோடு சேர்ந்து எஃப்.எம்—ல் பாட்டு கேட்டபடி இரவெல்லாம் விழித்திருப்போம். திடீர் திடீரென சித்தப்பா அலறுவார். ஓடிப்போய் டாக்டரை அழைத்துவர வேண்டும். எப்போதும் எதுவுமே நடக்காததுபோல் இருப்பதுதானே டாக்டர்களின் இயல்பு. சலனமே இல்லாமல் ஏதாவது சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். விடியும் வரை திகிலடித்துக்கொண்டே இருக்கும்.



உறக்கம் வரும் நொடிகளில் திடுதிப்பென்று யாரையாவது தூக்கிக்கொண்டு ஒரு குடும்பம் அழுதுகொண்டே உள்ளே ஓடும். அந்த நேரத்தில் போனுக்கு அலைவார்கள். ஆம்புலன்ஸுக்குத் திரிவார்கள். கிடைக்காத மருந்துக்குத் தவிப்பார்கள். வாழ்வின் நிலையாமையை மருத்துவமனை இரவுகள்தான் முகத்தில் அறைந்து சொல்கின்றன. எத்தனை பேருக்கு... எத்தனை எத்தனை இரவுகள் ஆஸ்பத்திரியிலேயே கழிந்திருக்கின்றன.

உறங்காத கண்களில் உறவுகளைச் சுமந்துகொண்டு, மருத்துவமனையின் புதிரான இரவுகளில் தவித்துக்கிடப்பவர்கள்

எத்தனை பேர்... ‘தெளிவா சொல்லுங்க சார்... ஒண்ணும் ஆபத்து இல்லையே டாக்டர். ஆபத்தில்லையே...’ என வராந்தா முழுக்கத் தவித்து அலைகிறவர்களின் இரவுகள் எவ்வளவு துன்பமானவை?

*‘கடையடைக்கிற நேரம்*
*அவசரமாக ஆம்புலன்ஸ் வேண்டி*
*தொலைபேசுகிறவனின்*
*முன் விரிகிறது...*

உலகின் மிக நீண்ட இரவு உங்களை வரவேற்கிறது!’ — என்ற கவிதை எப்போதோ படித்தது... உலகின் மிக நீண்ட இரவென்பது ஒரு பிரசவம்... ஒரு மரணம்... ஒரு கடவுள்... ஒரு ஜென்மம்!

ரஹ்மானைப் போல நானும் ராத்திரிகளின் ரசிகன்தான். உறக்கம் வராத இரவுகள் ஒரு காலத்தில் ஏகாந்தமாகவும் பிறகு கடக்க முடியாத துயரங்களாகவும் மாறிவிடுகின்றன. 10 வருடங்களுக்கு முன்பு தூக்கம் பிடிக்காமல் இரவுகளில் சுற்றித் திரிவதுதான் பொழுதுபோக்கே.

**ஓ** ர் ஆடி மாத இரவு... நல்ல போதையில் இலக்கு தெரியாமல் சுற்றினேன். வள்ளுவர் கோட்டம் பக்கம் ஏதோ ஒரு கோயில் திருவிழா. நள்ளிரவில் தெருவடைத்து மேடை போட்டு அமர்க்களமான ஒரு கச்சேரி. மேடையில் ஒரு எம்.ஜி.ஆர். மஞ்சுளாவைச் சுற்றி, ‘கடலோரம் வாங்கிய காற்று...’ பாடிக்கொண்டு இருந்தார்.

கொஞ்ச நேரம் கீழே நின்று பார்த்தவன், மேடைக்குப் பின்னால் போய், அந்த நாட்டியக் குழுவோடு கலந்துவிட்டேன். அவர்களுக்கு டீ— பன் விநியோகித்து, விசிறிவிட்டு, பணிவிடைகள் செய்ததில் நான் ஏதோ விழாக் குழுவைச் சேர்ந்தவன் என நினைத்துவிட்டார்கள். விழாக் குழுவினர், என்னை அந்த நடனக் குழுவின் ஆபீஸ் பாய் என நினைத்துவிட்டார்கள். மேடை ஏறி கூல்டிரிங்ஸ் கொடுத்து, மைக்கில்

அறிவிக்கும் ஊக்கத்தொகையை வாங்கி வைத்துக்கொள்ளும் அளவுக்குச் சகஜமாகிவிட்டேன்.

பின்னிரவுக்குப் பிறகு ஆட்டம் முடிந்து, நடனக் குழு கிளம்பியது. எம்.ஜி.ஆர்., ரஜினி, மஞ்சுளா, சிம்ரன் எல்லாம் தலையைச் சொறிந்துகொண்டு சரக்கடிக்க ஆரம்பித்தார்கள். ‘‘தம்பிதான் ரொம்ப ஹெல்ப்புல்ல...’’ என்றபடி நடனக் குழுத் தலைவரான எம்.ஜி.ஆர். எனக்கு செவன்—அப் கொடுத்தார். அவர்களது வேன் கிளம்பியபோது நானும் ஏறிக்கொண்டேன்.

எம்.ஜி.ஆர். என்னைக் கூப்பிட்டுப் பக்கத்தில் உட்காரவைத்துப் பேச ஆரம்பித்தார். பக்கத்தில் இருந்த பெண்களைக் காட்டி, ‘‘தம்பி... எனக்கு மூணு பொண்டாட்டி. ஒண்ணு வூட்ல இருக்கு. இதுவோல்லாம் எம் புள்ளைங்க... த்த்தா... சாவுற வரைக்கும் இதுங்களுக்கு எல்லாம் பண்ணுவேன். நீ டான்ஸெல்லாம் ஆடுவியா?’’ என ஓங்கி என் தோளில் குத்தினார்.

ஆட்டக்காரர்கள் அவரவர் குடும்பக் கதை பேச ஆரம்பித்தார்கள். பொசுக்கென்று அழுத சிம்ரனை, ‘‘அடச்சீ... அழுவாத... நாளைக்குப் பாரு அவனை...’’ என எம்.ஜி.ஆர். எல்லோருக்கும் பணத்தைப் பிரித்துக் கொடுத்தார். வண்டி எங்கெங்கோ சுத்தி, போரூரைத் தாண்டி ஒரு கிராமத்தில் நின்றது.

‘‘நீ வந்து வூட்ல படு...’’ என எம்.ஜி.ஆர். என்னை அழைத்துப் போனார். ஏகப்பட்ட பழுப்பு நிறப் புகைப்படங்கள் மாட்டப்பட்ட கூடத்தில் உட்கார்ந்து அவர் குடித்தார். ‘‘கலைஞர்கள் பாருங்க... நமக்கு ராத்திரிதான் பகலு, பகல்தான் ராத்திரி’’ என ஏதேதோ பேசிச் சிரித்தார்... அழுதார்... நான் தூங்கிவிட்டேன்.

அதிகாலையில் திடுக்கிட்டு விழித்து, யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் ஓடிவந்துவிட்டேன். அந்த இரவு முழுவதும் ஒருவர்கூட என்னை ‘நீ யார்?’ என்று எதுவுமே கேட்கவில்லை. அந்த எம்.ஜி.ஆர். இரவை மறக்க முடியாது!

**ம** துரையின் இரவுகளைப்போல இல்லை சென்னையின் இரவுகள். மதுரை டி.வி.எஸ்ஸில் வேலை பார்த்தபோது பெரும்பாலும் நைட் ஷிஃப்ட்டுகள்தான். பேய்த்தனமான சத்தங்களோடு சுழலும் இயந்திரங்களின் இரவுகள். மாலையில் குளித்துவிட்டு, நெற்றி நிறையப் பட்டை அடித்து, கோகுல் சாண்டல் மணக்க அத்தனை ஃப்ரெஷ்ஷாக வந்து நிற்பார் சூப்பர்வைஸர் சோமய்யர்.

அடுத்த ஒரு மணியில், கரி மண்டிய பாத்ரூமில் தலை கலைய ஷேக்கிடம் பீடி வாங்கி 'உஷ்ஷ்ஷு... உஷ்ஷ்ஷென...' இழுத்துக் கொண்டு இருப்பார். நாங்கள் கான்ட்ராக்ட் லேபர்கள். 35 ரூபா ஷிஃப்ட்டுக்கு ராத்திரி முழுக்கக் கரி அள்ளுபவர்கள். ஆனாலும், அந்த இரவுகள்தான் ரொம்பவும் சந்தோஷமாக இருந்தன. தஞ்சாவூரிலும் சென்னையிலும்கூட நடுராத்திரிகளில் சிகரெட் வாங்க அலைய வேண்டும். மதுரை டவுன் ஹால் ரோட்டில் நடுநிசியிலும், ஆவி பறக்க இட்லித் தட்டை எடுப்பார்கள். கிணுங்கிணிங்கென சைக்கிளில் திரிவார்கள்.

பெரியார் பஸ் ஸ்டாண்ட் பக்கம் போனால், 'சார்... ஜாரி இருக்கு. ஃபுல் சேஃப்ட்டிண்ணே' என பாவப்பட்ட சித்தப்பாக்கள் அலைவார்கள். எப்போது வேண்டுமானாலும் சரக்கு கிடைக்கும். மார்க்கெட் போய் கதவு தட்டினால் எந்தப் பொருளும் வாங்கலாம். வாழைத்தாரு லோடடித்துவிட்டு வருகிறவர்களுக்காகச் சுடச்சுட தக்காளி சாதம் இருக்கும்.

டி.வி.எஸ். கேன்டீனில் அதிகாலை 4 மணிக்கு சுடச்சுட பொங்கல் கிடைக்கும். அதைத் தின்றுவிட்டு, ஒரு டீயடித்து பீடி போட்டால், 8 மணி வரைக்கும் வேலை றெக்கை கட்டும்.

நைட் ஷிஃப்ட் முடித்து வருகிற குடித்தனக்காரனின் பகல் கொடுமையானது. குழந்தைகள் விளையாடும், அக்கம்பக்கத்து ஆட்கள் பரபரப்பாகும் பகல்களில், அவன் தூங்க முடியாமல் கண்கள் எரியக்கிடப்பது பலர் அறியாத கவலை!

பெருநகரில் கூர்க்காக்களும், வாட்ச்மேன்களும், திருடர்களும், பாலியல் தொழிலாளர்களும், காவலர்களும் உறங்காமல் கிடக்கிறார்கள். கூடவே, எண்ணற்ற ஆசைகளும் கனவுகளும் துயரங்களும். உறக்கம் வராத இரவுகளை என்ன செய்வது? என்னையும் பயமுறுத்தும் கேள்வி இதுதான். நமது உறக்கத்தைக் கலைத்துப் போட்டுவிட ஒரு வார்த்தை போதும்.

மனுஷ்யபுத்திரனின் ‘கடைசி வாடிக்கையாளன்’ கவிதையில் வரும்,

‘ஏதாவது மிஞ்சியிருக்குமா என்று கேட்க நினைத்தான்,

பசியைக் காட்டிலும் அந்த நிராகரிப்பை மறுக்க விரும்பினான்’ என்ற வரிகளைப் போலத்தான் இருக்கிறது நமது இரவுகள்.

ஏதோ நினைவு, பாடல், வருத்தம்... நமது இரவுக்குள் நம்மைக் கேட்காமல் நுழைந்துவிடுகிறது. வீட்டுக்குக் கொடுக்க முடியாத பணம், அடைய முடியாமல் தவிக்கவைக்கும் இலக்கு, அணையாமல் எரியும் ஓர் அவமானம், பிரிவின் வெக்கை, அன்பின் அவஸ்தை, ஈழம், கூடங்குளம், நெஞ்சறுக்கும் செய்திகள், செரிக்க முடியாத மனிதர்கள்... ஏதாவது வந்துவிடுகிறது உறக்கத்தைக் கலைத்துப்போட.

காதலின் தொடக்கத்தில் இரவெல்லாம் விழித்து அலைபேசிக் கொண்டு இருப்பவர்களையும், உறவின் பிரிவின் கண்ணீரில் உறங்காமல் கிடப்பவர்களையும் நகைத்தபடி கடந்துகொண்டே இருக்கின்றன இரவுகள்.

கடைசி மின்சார ரயிலில் வீட்டுக்குப் போகும் நீல்மெட்டல் பனால்கா பையன்களை, மார்க்கெட்டில் கம்பிகள் திருடும் சிறார்களை, கூதக் காற்று பொறுக்காமல் பிளாட்ஃபார்மில் நடுங்கிக் கிடக்கும் குடும்பத்தை, அந்த நேரத்தில் கடை தேடும் குடிகாரர்களை, வீட்டைவிட்டு ஓடும் காதலர்களை, தம் டீ விற்பவர்களை, கால் சென்டர்களில் அமெரிக்காவுக்கும் ஆஸ்திரேலியாவுக்கும் தூக்கத்தை விற்பவர்களை... என உறங்காத பைத்தியங்களை வைத்திருக்கும் இரவே... இரவே... ஒரு

குழந்தையின் இதயம்போல உறங்கிடும் கண்களை எங்களுக்குக் கொடு போதும்!

**ஒ**ரு முறை கொடைக்கானல் போயிருந்தேன். இரவில் மதுரைக்குத் திரும்பும் கடைசி பஸ்ஸுக்காக நண்பரோடு காத்திருந்தபோது ஸ்வெட்டர், கூலிங் க்ளாஸ் போட்ட ஒருவர் காற்றில் தடவி என் கைகளைப் பிடித்தார். அவர் பார்வையற்றவர். கையில் ஒரு தபேலா வைத்திருந்தார். ''சார்... ஸாரி சார். இந்த அட்ரஸ் எங்கே இருக்குனு சொல்ல முடியுமா?'' என்றார். அதில் இருந்த அட்ரஸை வாங்கி அங்கே இருந்த ஒரு கடைக்காரரிடம் விசாரித்தேன். அந்த இடம் அங்கிருந்து 30 கி.மீ. தள்ளி உள்ள ஓர் பள்ளிக்கூடம்.

அவர் ஓர் ஆசிரியரைத் தேடி, திருநெல்வேலியில் இருந்து வந்திருக்கிறார். அந்த நேரத்தில் அந்த ஊருக்குப் போவதற்கு பஸ் ஏதும் கிடையாது. அவரைத் தனியே அங்கே விட்டு வர மனம் இல்லாமல், நண்பர் போய் பஸ் ஸ்டாண்ட் பக்கத்தில் ஒரு கார் எடுத்துக்கொண்டு வந்தார். அவரை விட்டுவரச் சென்றோம். அவர் ஒரு தபேலா கலைஞர். 50 வயசுக்கு மேல் இருக்கும். வீட்டில் தன்னை யாரும் சரியாகக் கவனிக்காத கோபத்தில் இங்கே கிளம்பி வந்துவிட்டார்.

ஓர் ஆசிரிய நண்பர் அங்கே தனக்கு வேலை வாங்கித் தரப்போவதாகச் சொன்னார். அவர் சொன்ன முகவரிக்குப் போனபோது, வேறு ஓர் இடம் சொன்னார்கள். இன்னும் சில கிலோ மீட்டர்கள் அலைந்து, பின்னிரவுக்குப் பின் அவர் சேரவேண்டிய இடம் வந்தது. அந்த நண்பர் எங்களை அந்த இரவு அங்கேயே தங்கச் சொன்னார். நாங்கள் மறுத்துவிட்டுத் திரும்பினோம்.

வரும்போது அந்தப் பார்வையற்றவர் ஸ்வெட்டருக்குள் கை விட்டுக் கசங்கிய சில ரூபாய் நோட்டுகளை எடுத்துக் கொடுத்தார். நண்பர் அதை வாங்க மறுத்துவிட்டார். உடனே அவர் கைப் பையில் இருந்து எங்களுக்கு ஆளுக்கு ஒரு குறுந்தகடு எடுத்துத் தந்தார். அது அவர் பாடி, தபேலா வாசித்த பாட்டுகள் அடங்கிய சி.டி.



எத்தனை எத்தனை இரவுகள் கடந்துவிட்ட பிறகும், இன்னும் வெள்ளியாகச் சுழல்கிறது என் வீட்டில்... அந்த இரவு!

# 17

# ஒரு நல்ல படைப்புக்கான வாசிப்பு!

**ஒ** ரு புத்தகத்துக்காக நீங்கள் எவ்வளவு அலைந்து இருப்பீர்கள்?

ஜோனன் டிக்கன்ஸ் என்கிற ஃபிரெஞ்சுக்காரர் கிட்டத்தட்ட 12 ஆண்டுகளாக, 16 ஆயிரம் கிலோமீட்டர்களுக்கும் மேலாக அலைந்து திரிந்து இருக்கிறார். காரணம், 102 ஆண்டுகளுக்கு முன்பு அச்சான, 'ப்ரோக்கன் தி ஹெல்' என்ற புத்தகத்தைத் தேடி.

ஃபிரெஞ்சு பழங்குடியினரிடம் தொடங்கிய முதல் கிளர்ச்சி பற்றிய அந்தப் புத்தகத்தின் ஒரே ஒரு பிரதி எங்கோ இருப்பதாக அறிந்து, மனம் தளராமல் 12 ஆண்டுகள் எங்கெங்கோ சுற்றி, கடைசியில் கண்டுபிடித்துவிட்டார்.

ஒருவரிடம் அந்தப் பிரதியைக் கண்டுபிடித்து வாங்கியபோது, டிக்கன்ஸ் தனது வாழ்வின் ஒரு தசாப்தத்தை இழந்திருந்தார். குடும்பம், சந்தோஷம், வயது, பணம்... எனஎல்லாவற்றையும் தொலைத்திருந்தார். ஆனால், அந்தப் பிரதியை வாங்கிய கணம், ''இந்த நிமிடம் உலகிலேயே மகிழ்ச்சியான மனிதன் நான்தான். இந்த மகத்தான பிரதியை அச்சாக்கி... வரும் தலைமுறைகளுக்குத் தந்துவிட்டு நான் செத்துப்போய்விட்டால், அதைவிடச் சந்தோஷம் வேறு என்ன இருக்க முடியும்" என்ற டிக்கன்ஸ், அதை உடனே செய்தார்!

புத்தகங்கள் உருவாக்கும் தலைமுறைதான் உலகை மேம்படுத்தும். 'மைனராக இருந்த மானுடம், புத்தகங்களின் அறிமுகத்துக்குப்

பிறகுதான் மேஜரானது' என வலம்புரிஜான் சொன்னது எவ்வளவு உண்மை? 'ஜார்களின் ஆட்சியில் ஏழைத் தொழிலாளி ஒருவன் தும்முவதற்கு எவ்வளவு கஷ்டப்படுகிறான்' என்ற துயரத்தைச் சொன்ன ஒரு சிறுகதை ஏற்படுத்திய கொந்தளிப்பு, ரஷ்யப் புரட்சியின் முக்கியமான அங்கம்.

ஜனநாயக சர்வாதிகாரத்தைக் கிழித்தெறிந்து, தொடர்ச்சியாக எழுதப்பட்ட எகிப்து இலக்கியங்கள், அங்கு நடந்த புரட்சிக்கான ஒரு விதை. ஜெயகாந்தன், புதுமைப்பித்தன் கதைகள்... தமிழ் நிலத்தில் பெரியார் முன்னெடுத்த சமூகப் புரட்சிக்கான இன்னொரு சுடர். ஈழ எழுத்தாளர் எஸ்.பொ. அய்யா தனது நெடும் சுயசரிதையை 'தவம்' என்ற பெயரில் புத்தகமாக்கி இருக்கிறார். 10 வருடங்களுக்கு முன்பு அதை அவர் எழுதிக்கொண்டு இருந்தபோது, தினமும் சாயங்காலம் யுகபாரதி அண்ணனோடு அங்கே போய்விடுவேன். எஸ்.பொ. சொல்லச் சொல்ல படியெடுப்பதுதான் எங்கள் வேலை. ஈழத்தின் வரலாறு, அரசியல், போராட்டம், குடும்பம், கண் எதிரே இழந்த உயிர்கள் என அவர் சொல்லும் ஒவ்வோர் அத்தியாயமும் தூக்கத்தைத் தின்னும்.

ஒரு சாயங்காலம், அவர் அடுத்த அத்தியாயம் சொல்ல வேண்டும். எதுவும் பேசாமல் அப்படியே உட்கார்ந்து இருந்தார். நிறைய சிகரெட்டுகள் புகைத்தார். சட்டென்று உதடுகள் துடிக்க, அவர் கண்களில் நீர் பெருகி வழிந்தது. வீட்டில் இருந்த உறவுகளை ராணுவம் இழுத்துப்போய் கடற்கரையில் வைத்து குரூரமாகச் சுட்டுக்கொன்ற நினைவுகளைச் சொன்னபோதுகூட, அவர் இப்படிக் கலங்கவில்லை.

அன்று கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, யாழ் நூலகம் எரிக்கப்பட்ட சம்பவம் பற்றி சொல்லத் தொடங்கினார். ''கண் முன்னால் எங்கள் வரலாறு எரிக்கப்பட்டதைப் பார்த்தவர்கள் நாங்கள்" என அவர் அழுதது... நூற்றாண்டுகளின் துயரமாக இந்த இனத்தின் கடைசி உயிர் வரை இருக்கும்!

வாசிப்புதான், ஒரு வரலாற்றை உருவாக்குகிறது; அரசியலை நிர்மாணிக்கிறது; கனவுகளைக் கொண்டு வருகிறது; கோடானுகோடிக்

கூடுப்புழுக்களைப் பட்டாம்பூச்சிகளாக்குகிறது. எனது தலைமுறையின் அநேகருக்கான வாசிப்பு, காமிக்ஸ்களில் இருந்தும் அம்புலிமாமாவில் இருந்தும்தான் தொடங்கியது. இரும்புக் கை மாயாவி, டெக்ஸ் வில்லர், கேப்டன் டைகர், ஜேம்ஸ் பாண்ட், லக்கிலுக் என காமிக்ஸ் பாத்திரங்கள் தரும் கற்பனைகள் எவ்வளவு ரம்மியமானவை?



மெக்ஸிகோ நகரின் எல்லையோரக் கிராமத்து சீட்டாட்ட க்ளப்பில் நடக்கும் துப்பாக்கிச் சண்டைகள் நம் பால்யத்தை எவ்வளவு சுவாரஸ்யமாக்குகின்றன? திருச்சி சுப்ரமணியபுரம் சித்தி வீட்டில், குட்டி

கிருஷ்ணன், முல்லா, தெனாலிராமன், பீர்பாலுடன் கழிந்த கோடைக்காலங்கள், 4ஜி தலைமுறையினருக்குக் கிடைக்குமா, தெரியவில்லை.

அடுத்து, க்ரைம் த்ரில்லர் காலம். ராஜேஷ்குமார், சுபா, பட்டுக்கோட்டை பிரபாகர்... இவர்களால்தான் பத்தாவது பப்ளிக் பரீட்சையில் எனது குடும்பத்தில் மூன்று தமையன்கள் சேர்ந்து ஏழெட்டு அட்டைகள் வாங்கினார்கள். தஞ்சாவூர் பழைய பஸ் ஸ்டாண்டில் ‘கொலையுதிர்கால’மோ ‘திக் திக் திவ்யா’வோ வாங்கிக்கொண்டு பஸ் ஏறினால், இறங்க வேண்டிய கொரடாச்சேரி கடந்தது தெரியாமல் ‘உறைந்துகிடக்கும் ரத்தத்தை உற்றுப் பார்த்துக்கொண்டு இருப்பார்’ துப்பறியும் விவேக்.

கரந்தை தமிழ்ச் சங்கத்துக்குப் படிக்கப்போன சரவணன் அண்ணன்தான், நா.காமராசனையும் வைரமுத்துவையும் சுஜாதாவையும் பாலகுமாரனையும் வீட்டுக்குக் கொண்டுவந்தார். விடுதியில் இருந்து அவர் வீட்டுக்கு வரும் வெள்ளிக்கிழமைக்காக நாங்கள் காத்திருப்போம். ‘கண்ணீர்ப் பூக்கள்’, ‘கறுப்பு மலர்கள்’, ‘ஸ்ரீரங்கத்துத் தேவதைகள்’ என வாராவாரம் பையில் புதையல் எடுத்து வருவார். (இடைச்செருகலாக ஒளிந்து கிடக்கும் ‘பருவகால’மும் ‘சரோஜாதேவி’யும் போனஸ்.) தி.ஜானகிராமனைக் கொண்டுவந்தது, ஓகையில் இருந்து சைக்கிளில் வரும் தொழுநோய் இன்ஸ்பெக்டர் நீலமேகம் சார், "‘மோகமுள்’ளில் சிலிர்த்துக் கிடக்கும்போதே சோலை சுந்தரபெருமாளைக் கொண்டுவந்து படிச்சின்னா, பொங்கிருவ..." என உருவேற்றினார்.

புதிய மனிதர்களும் கனவுகளும் அன்பும் கோபமுமாக புத்தக உலகை எவ்வளவு விசாலமாக்கிவிடுகின்றன? ஆர்வம் தலைக்கேற, குரு அண்ணனும், சுந்தரபுத்தன் அண்ணனும் சேர்ந்து ஊருக்குள் ‘காவ்யா’ என்ற கையெழுத்துப் பத்திரிகையை ஆரம்பித்தார்கள். தினமும் கண் கொடுத்த வணிதம் ஊரில் இருந்து சுந்தரபுத்தன் அண்ணன் சைக்கிளில் சீமாட்டி மஞ்சள் பையில் மேட்டர்களோடு வீட்டுக்கு வருவார். ஆட்டுப் புழுக்கைகள் இறைந்துகிடக்கும் திண்ணையிலும், காந்தி பூங்கா

நூலகத்திலுமாக இருவரும் எடிட்டோரியல் மீட்டிங் போடுவார்கள். கீழத் தெரு செந்தில் கவிதைகள், நீடாமங்க் இன்ஸ்பெக்டர் எச்சரிக்கை, பூண்டி காலேஜ் கலக்கல் எனச் செய்திகள் பின்னும். பிரதியின் கடைசியில் வெள்ளைத்தாள்களை மீதம் விட்டு, வாசகர் கடிதம் எழுதச் சொல்வார்கள். விகடனையும் குமுதத்தையும் தாண்டிவிடுகிற ஆவேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட ‘காவ்யா’, பொட்டிக்கடை அக்கவுன்ட் நிதி நெருக்கடியால் நின்றுபோனது!

அப்போது சிவகங்கைப் பூங்கா பக்கம் சீனிவாசபுரத்தில் இருந்தது யுகபாரதி அண்ணனின் வீடு. அவரது அப்பா த.கா.பரமசிவம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் நகரச் செயலாளர் என்பதால், வீடு எப்போதும் தோழர்களால் நிறைந்துகிடக்கும். சரவணன் அண்ணனும், யுகபாரதி அண்ணனும் சேர்ந்து புத்தகங்களின் அற்புதமான உலகத்தை அங்கேதான் உருவாக்கினார்கள். கரந்தை பிரின்ட்டிங் பிரஸ் ஒன்றில் கூல்டிரிங்ஸ் குடித்தபடி உட்கார்ந்திருந்த தஞ்சை பிரகாஷை அறிமுகப் படுத்தினார்கள். மூலதனத்தில் இருந்து பாரதி, ஓஷோ, பிரமிள் வரை வாசிப்புகளால் கிளர்ந்த இரவுகள் அப்போதுதான் தொடங்கியது.

சென்னை வந்த பிறகு யுகபாரதி அண்ணன், ‘கணையாழி’யில் உதவி ஆசிரியராக இருந்தார். அவரோடு தினமும் கணையாழி போவதுதான் எனக்கு வேலை. பிரபஞ்சன், ஆத்மாநாம், எஸ்.ரா., ஜெயமோகன், இமையம், அழகிய பெரியவன், யூமா வாசுகி என வாசிப்பின் இன்னொரு கட்டத்தை இந்த நாட்கள்தான் தந்தன.

ஆயிரமாயிரம் விழிகள், ஆயிரமாயிரம் காட்சிகள், ஆயிரமாயிரம் செவிகள், ஆயிரமாயிரம் குரல்கள்... என வாசிப்பு தரும் தரிசனங்கள்தான் ஒவ்வொருவரின் உலகையும் அழகாக்குகின்றன.

வண்ணநிலவனின் ‘கடல்புரத்தில்’ தந்த ஈரம் சாகும் வரை போகுமா? சுந்தர ராமசாமி, சம்பத், கி.ராஜநாராயணனின் எழுத்துக்களின் அதிர்வுகள் அடங்கக்கூடியதா? ஜி.நாகராஜனின் ‘கந்தன்’ பாத்திரம் உருவாக்கிய கேள்விகள் ஆயுசுக்கும் தீருமா? அசோகமித்திரனின் வெயிலெரியும் சாமான்யனின் நகரத்துப் பகல்கள் தரும் வெக்கை

எந்தக் காற்றில் தீரும்? அம்பையின் 'வீட்டின் மூலையில் சமையலறை'யில் இருந்து எழும் கரி படிந்த ஏக்கங்கள் காலத்தால் அழியுமா?

வண்ணதாசனின் பேனாவில் இருந்து உதிர்ந்து அலைந்து கொண்டே இருக்கும் பழுப்பு இலைகளை நம் காலத்தில் கூட்டி அள்ளிவிட முடியுமா? ப.சிங்காரத்தின் 'புயலிலே ஒரு தோணி' நமது நினைவு சமுத்திரத்தில் எப்போதும் ஆடிக்கொண்டேதானே இருக்கும்? மௌனியின் ஆழ்கடல் மொழியில், லா.ச.ராவின் ஏகாந்த ரசத்தில் திளைக்காத மனம் யாருக்கு உண்டு?

கோபி கிருஷ்ணனின், நகுலனின் உளவியல் தரிசனம் தரும் துயரம் எத்தனைக் கதவுகளைத் திறந்துவிடுகிறது? கலாப்ரியாவின் சசிக்கும் கோணங்கியின் மதினிமார்களுக்கும் பிரியப்படாதவர்கள் இருக்க முடியுமா?

கண்மணி குணசேகரனின் 'அஞ்சலை'யைப் படித்துவிட்டு, நினைவின் சுமை பொறுக்காமல் ஆலக்குடி அத்தைக்கு போன் பண்ணி அழுதது ஏன்? சாருவின் 'முள்' படித்துவிட்டு மணிமொழி அக்காவை நினைத்துத் தூங்காமல் கிடப்பது எதற்காக? இரோம் ஷார்மிளாவைப் பற்றிய நாஞ்சில் நாடனின் கட்டுரை எழுப்பும் அரசியல் அதிர்வுகள் எவ்வளவு வலிமையானவை?


மின்னல் நொடியில் வாணி ஜெயராமின் குரலை அவதானிக்கும் க.சீ.சிவகுமாரின் நுணுக்கத்தில், பாஸ்கர்சக்தியின் மண் மணக்கும் நையாண்டியில், ஃப்ரான்ஸிஸ் கிருபாவின் பேரன்பில், குட்டி ரேவதியின் வீச்சில், மாலதி மைத்ரியின் ரௌத்ரத்தில், ஜாகிர் ராஜாவின் சமூகப் பார்வையில், நா.முத்துக்குமாரின் அழகியலில்... வாசிப்பு ஏற்படுத்தும் மகத்தான வாழ்வனுபவங்கள்தான் இந்த வாழ்வை, உலகை, நாட்களைப் புதிதாக்கி வருகின்றன.

எனது வாசிப்பு அனுபவம் மிகவும் குறைவுதான். இதற்குள் எப்போதைக்குமான ஆதர்ஷமாக, மனதுக்கு நெருக்கமாக இருப்பது

வைக்கம் முகம்மது பஷீர். அவரது பயணத்தின் எல்லாச் சாலைகளும் தெருக்களும் போய் முடிவது மனிதத்தின் வாசலில்தான். ஒவ்வொரு மனிதனுக்குமான அன்பும் வன்மமும் மாறி மாறி கண்ணீரிலும் புன்னகையிலும் போய் முடியும். அவரது எழுத்துக்களுக்கு நான் அடிமை!

பாரதியில் இருந்து சின்னக்குத்தூசி அய்யா வரை புத்தகங்களோடும் உன்னதக் கனவுகளோடும் வாழ்ந்த பலரையும் கிறுக்கர்களாக, வேலைக்கு ஆகாதவர்களாகத்தான் இந்தச் சமூகம் நடத்தி இருக்கிறது. திருப்பூரில் இருந்தபோது, தோழர் அருளானந்தம் வீடுதான் எங்கள் நூலகம். சே குவேராவில் இருந்து அயோத்திதாசர் வரை அவர் தந்த புத்தகங்கள்தான் அப்போது எங்களின் சிறகுகள்.

ஒரு நாள் திடுதிப்பென்று அருளானந்தம் செத்துப்போனபோது, வீடு முழுவதும் நிறைந்துகிடந்த புத்தகங்களுக்கு மத்தியில் இரண்டு பிள்ளைகளோடு கிடந்து அவரது மனைவி அழுதது மறக்க முடியாதது. இறுதிச் செலவுக்கே நாங்கள்தான் பணம் திரட்டித் தந்தோம். வீட்டில் கிடந்த அவ்வளவு புத்தகங்களைக் கண்டு, வந்த உறவுகள் அத்தனை பேரும் திட்டித் தீர்த்தார்கள். அடுத்த வாரம் அந்தப் புத்தகங்களைத் தோழர்கள் எல்லோரும் பிரித்து ஆளுக்குக் கொஞ்சம் எடுத்துக்கொண்டோம். அது தோழர் வாழ்க்கை முழுக்கச் சேகரித்த மகத்தான சொத்து என்பது யாருக்கும் புரியவே இல்லை.



**ம** யிலாப்பூரில் பிளாட்ஃபார்மில் புத்தகங்கள் போட்டு விற்பதையே பல வருடங்களாக வாழ்க்கையாக்கிக்கொண்ட ஆழ்வாரை, விகடனில் நிருபராக இருந்தபோது ஒரு முறை பார்க்கப்போனேன். பிளாட்ஃபார்மில் கடை போட்டதற்காக அவரை போலீஸில் பிடித்து, அப்போதுதான் வெளியே விட்டிருந்தார்கள். வரலாறு, அரசியல், இலக்கியம்... என ஏராளமான புத்தகங்களுக்கு நடுவே அவர் மழையில் கரையும் சாலையோர ஓவியம்போல் உட்கார்ந்து இருந்தார்.

‘‘தம்பி, இந்த மக்களும் அரசாங்கமும் எதையெதையோ கொண்டாடுறாங்க... பாதுகாக்கிறாங்க. நம்ம அடையாளம், ஆதாரம், வரலாறு இதைப் பத்தி யாருக்கும் கவலை இல்லை. இத்தனை வருஷமா இந்தப் புத்தகங்களோட வாழ்ந்துட்டேன். எனக்கு ஒண்ணுமே கிடைக்கலைங்கிறதை நினைச்சு நான் கவலைப்படலை. எனக்குப் பிறகு இதெல்லாம் இன்னொரு தலைமுறைக்குப் போய்ச் சேரணும்... அதை யார் செய்வாங்கங்கிறதுதான் என் கவலை" என அவர் சொன்னது

சத்தியமான கவலை. புத்தகங்களையும் எழுத்தாளர்களையும் மதிக்காததுதான் இந்தியச் சமூகத்தின் முதல் சாபக்கேடு!

இப்போது புத்தகக் காட்சியில் கூட்டம் கட்டி ஏறுகிறது. இணையத்தில் வாசிக்கும் ஒரு தலைமுறை மிக வேகமாக வளர்ந்திருக்கிறது. சேத்தன் பகத்தின் புதிய நாவல் வந்தவுடன் சென்சேஷன் ஆகிறது. இதையெல்லாம் வைத்து, வாசிக்கும் பழக்கம் அதிகரித்துவிட்டது எனச் சொல்ல முடியாது. புத்தகக் காட்சியில் இப்போது அதிகமாக விற்பது சமையல், வாஸ்து வகையறா புத்தகங்கள்தான்.

தமிழின் ஸ்டார் எழுத்தாளர்களாகப் பார்க்கப்படும் எஸ்.ரா., ஜெயமோகன், சாரு போன்றவர்களின் புத்தகங்கள் ஆயிரம், இரண்டாயிரம் பிரதிகள் விற்பதுதான் சாதனை. இணையத்தில் 'கொல வெறி' பாடல் பதிவேறிய ஓரிரு நாட்களில் அடிக்கும் லட்சக்கணக்கான ஹிட்ஸ்களில் ஒரு சதவிகிதம்கூட இல்லை ஒரு நல்ல படைப்புக்கான வாசிப்பு.

தொலைக்காட்சி, சினிமா, இணையம் என எல்லாவற்றிலும் புதிய புதிய வேகமெடுக்கும் இன்றைய தலைமுறை, வாசிக்கும் பழக்கத்திலும் புதிய கதவுகளைத் திறக்க வேண்டும். புத்தகங்களும் வாசிப்பும்தான் நல்ல மனதை, கனவை, தேசத்தை உருவாக்கும்!

# 18

# ஆண்—பெண் சிநேகிதம் என்பது ஒரு புதிர்...

**ஏ** ழு வருடங்களுக்கு முன்பு கோவா திரைப்பட விழாவுக்குப் போயிருந்தபோது இது நடந்தது!

விழாவின் இரண்டாம் நாள் போனதால், மீடியா அலாட்மென்ட்டில் கிடைக்கும் அறை எனக்குக் கிடைக்கவில்லை. என்னைப் போலவே அறை கிடைக்காமல் அரங்கத்துக்கு வெளியே நின்று இருந்தாள் லிசி தாமஸ். டெல்லி சேனலில் வேலை பார்க்கும் மலையாளப் பெண்.

நண்பர் ஒருவர் லிசியை எனக்கு அறிமுகப்படுத்தினார். பாவனா சாயலில் லிசி அப்படியே மேட் இன் கேரளா. இரண்டு உலகப் படங்களுக்குப் பிறகு மறுபடியும் அவளை தேநீர்க் கடையில் சந்தித்தேன். அதன் பிறகு நடந்தது எல்லாம்அப்படியே உள்ளூர் சினிமா.

'மறுநாள் தனக்கு வேறு இடத்தில் ரூம் தயாராகிவிடும். வழக்கமான தனது நண்பர்கள் வராததால், அன்று இரவு மட்டும் ஓர் அறை எடுத்து இருவரும் ஷேர் பண்ணிக்கொள்ளலாம்' என்றாள் லிசி. எனக்கு முன்னும் பின்னும் அப்படி ஒரு நிகழ்வு வாய்த்தது இல்லை. அடிவயிற்றில் ஐஸ் உருண்டது. மாலை, ஒரு விடுதியில் இரு படுக்கை அறை எடுத்தோம். கொஞ்சம் வேலை இருப்பதாகச் சொல்லிவிட்டு வெளியே போனாள் லிசி.

என்னை, பரவசமும் பதற்றமும் பந்தாடியது. அப்போது பெண் சிநேகிதம் என்ற ஏரியாவே எனக்குத் தெரியாது... புரியாது. தயக்கமும் ஏக்கமுமாக ஓர் உலகத்தை சிருஷ்டித்துக்கொண்டவன்தான் நானும். இப்படி ஒரு பெண்ணோடு தனியாகத் தங்குவது என்றால்... அந்த இரவு அவளோடு பேசப்போகிற, தங்கப்போகிற ஒவ்வொரு நொடியையும் கற்பனை செய்யத் தொடங்கினேன்.

8 மணிக்கு மேல் அவளுக்கு போன் பண்ணினால், ‘கொஞ்சம் லேட்டாகும்... வந்துருவேன்’ என்றாள். நான் வெளியே போய் கொஞ்சம் பீர் குடித்தேன். ஒரு பெண்ணோடு தங்கப்போகிறோம் என்ற நினைவுறுத்தலில் அளவோடு குடித்துவிட்டு (அதுவும் ஒரு தைரியத்துக்காக) அறை எய்தினேன்.

கொலாஜ் கனவுகள், இலக்கியம், சினிமா, அரசியல், காதல், லட்சியம்... என அவளிடம் பேச ஒரு ஸ்பீச்சே ரெடி பண்ணிக் காத்திருந்தால், ஆளையே காணோம். போன் பண்ணினால், நாட் ரீச்சபிள்.

சாப்பிட்டு முடித்துத் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டால்... நள்ளிரவு 1 மணிக்கு மேல் கதவு திறக்கிற சத்தம். வெளியே ஒரு வெள்ளைக்கார கிழவன் கிழவியோடு லிசி. ஒரு கையில் நாய்க்குட்டி. இன்னொரு கையில் கிலோ கணக்கில் கிளிஞ்சல் மாலைகள். நிற்கவே முடியாத போதையில் தள்ளாடிக்கொண்டு இருந்தாள். அவளை ஒப்படைத்துவிட்டு அந்த வெள்ளைக்காரப் பெருசுகள் சிதறி ஓடினார்கள்.

அறை முழுக்கக் கடற்கரை மணல் சிதற உள்ளே நுழைந்த லிசி என்னைப் பார்த்து கோபமாக, ‘ஹூ ஆர் யூ மேன்?’ என்றாள் பாரதிராஜா ஸ்டைலில். நான் அதிர்ச்சியாகி நிற்க, ‘கெட்—அவுட்’ எனக் குழறிக்கொண்டே அந்த நாய்க்குட்டியை எனது படுக்கையில்விட்டாள். அடுத்த கணம் பொத்தேர் என்று தனது படுக்கையில் விழுந்து மட்டையாகிவிட்டாள். எனக்குத் திகிலடித்தது. என்ன செய்வது என்று தெரியாமல் பால்கனியில் நின்று இரண்டு தம்மைப் போட்டுவிட்டு, ஓரமாய் சுருண்டேன்.

காலையில் எழுந்து கேஷுவலாக, ‘‘ஸாரிப்பா... நைட் உன்னை எதாவது படுத்திட்டேனா..?’’ என்றாள் லிசி. அன்று தியேட்டரில் நடந்த கான்ஃபரென்ஸில் எல்லோரையும் திகைக்க வைக்கும்படி நிறையக் கேள்விகளைக் கேட்டாள். சாயங்காலம் பீச்சில் மஜீத் மஜீதி, அருந்ததி ராய், சாருமஜும்தார் என மணிக்கணக்கில் பேசித் திரிந்தாள். இரவு வெள்ளைக்காரத் தம்பதியோடு குடித்துவிட்டு வந்து பாப் மார்லிக்கு டான்ஸ் ஆடினாள். அங்கே இருந்து விடைபெறும்போது, எனக்கு ஒரு கிளிஞ்சல் மாலையைப் பரிசளித்தாள். அதன் பிறகு லிசியை நான் பார்க்கவில்லை. ஆனால், இன்றுவரை அவள் எனக்குத் தோழி. அலை பேசியிலும் மின் அஞ்சலிலும் இன்றும் தொடர்பில் இருக்கிறோம்.



கல்யாணப் பத்திரிகை அனுப்பியிருந்தாள். சென்னை வந்து என்னோடு சக்தி கருமாரியில் படம் பார்க்க வேண்டும் என்பது அவளுக்கு ரொம்ப நாள் ஆசை!

என் மனதில் புதிய கதவுகளைத் திறந்துவிட்டவள் லிசி. என்னைப் போல் கிராமங்களில் இருந்து பெரு நகரம் எய்தும் ஒரு தலைமுறைக்கு, ஆண்பெண் சிநேகிதம் என்பது ஒரு புதிர்... கனவு... ஆச்சர்யம். சிறு வயதில் இருந்து பெண் பிள்ளைகளோடு சமமாய்ப் பேசி வளராத சமூகக் கட்டமைப்பில் இருந்து வந்தவர்களுக்கு இது ஓர் அவஸ்தை.



**மு**தன்முதலில் சைக்கிளில் குரங்கு பெடல் போட்டுப்போன குளோரியாவைப் பார்த்தபோது வந்த அதே ஆச்சர்யம்தான், சிட்டி சென்டரிலும், எக்ஸ்பிரஸ் அவென்யூவிலும் நடமாடும் பெண்களைப் பார்த்ததும் வருகிறது. உடல் சார்ந்த பார்வைகளிலேயே மனசு நிலைக்கிறது. ஒரு புன்னகையும் பார்வையும் ராத்திரிகளைத் தின்கிறது.

எல்லாமே அபத்தம் என்பது எல்லோருக்கும் ஒரு நாள் புரியும். காலமும் வயதும் பக்குவமும் மீட்டெடுக்கும்போதுதான் ஆண் — பெண் சிநேகிதத்தின் அற்புதங்கள் புரிய ஆரம்பிக்கும்.

உண்மையில், உடல் என்பது காலிப் பெருங்காய டப்பா. மனதின் தேவைகள்தான் எப்போதைக்குமானது. சிநேகம்தானே எப்போதும் மனதின் தேவை. ஆனால், பொதுவாகவே இந்தச் சமூகத்தின் அறுதிப் பெரும்பான்மை மனநிலை என்ன? பலருக்கு இரண்டாவது சந்திப்பிலேயே அத்தனை ஆதுரமாய்ப் பேசும் தோழியிடம் இருந்து பயந்து விலகி நிற்கத் தோன்றுகிறது.

அலுவலகத்தில் ஓர் ஆணும் பெண்ணும் தொடர்ந்து தேநீர் குடிக்கப் போனாலே, தவறாகப் பேச வைக்கிறது. 'தோழமை' என்ற வார்த்தையை சட்டென்று யாராலும் கொச்சைப்படுத்த முடிகிறது. சந்தோஷத்திலும் துயரத்திலும் குறுஞ்செய்தி அனுப்பும் சிநேகிதத்தைப்

பற்றி தவறாகப் பரப்பச் செய்கிறது. ஸ்பரிசங்களைப் பிரித்து உணரவே முடியாமல் போகிறது.

காதல், காமம் என்ற வார்த்தைகளைத் தாண்டி, பிரியம், விருப்பம், ஆறுதல், அக்கறை என்ற வார்த்தைகளுக்கு அர்த்தம் தேடாமலே குறுகிவிட முடிகிறது. எவ்வளவு பெரிய அன்பையும், நல்லியல்புகளையும், குடும்பங்களையும்... எங்கோ பார்களிலும் ஹோட்டல்களிலும் ஆபீஸ்களிலும் குட்டிச்சுவர்களிலும் உட்கார்ந்துகொண்டு, கலைத்துவிட முடிகிறது!

**சி**ல வருடங்களுக்கு முன்பு ஓர் அதிகாலையில், அப்போது வடபழனியில் இருந்த எனது அறைக்கு இந்துமதி அக்கா வந்தது. எனது அறையில் இருந்த விஜி அண்ணனின் காலேஜ்மேட். வீட்டில் கோபித்துக்கொண்டு யாரையும் தெரியாமல் இவரைத் தேடி வந்துவிட்டது.

அடுத்த இரண்டு நாட்கள் எங்கள் அறையில்தான் தங்கியிருந்தது. அதன் பிறகு அவரை அழைத்துப்போய் தி.நகரில் ஒரு லேடீஸ் ஹாஸ்டலில் சேர்த்துவிட்டார் அண்ணன். ஸ்டெபிளைஸர் கம்பெனி ஒன்றில் வேலையும் வாங்கித் தந்தார். வாரத்துக்கு ஒரு தடவை இந்துமதி அக்கா எங்கள் அறைக்கு வந்து சமைத்துப் போடும். பீச் போவோம். சினிமா போவோம். இரவு வரை கதை பேசிக்கொண்டு இருப்போம்.

ஒரு நாள் இந்துமதி அக்கா வீட்டில் இருந்து பெருங்கூட்டமே திரண்டு வந்தது. விஜி அண்ணனை வளைத்து அடித்தார்கள். ‘‘அவள வெச்சுருக்கியாடா நீயி..? கல்யாணம் முடிச்சுட்டீங்களா இல்லையா..? மானத்தை சந்தி சிரிக்க— வெச்சுட்டீங்களேடா...’’ எனக் கத்தியபடி தெருவே பார்க்கக் களே—பரம் பண்ணிவிட்டு, இந்துமதி அக்காவை அப்படியே அடித்து ஊருக்கு இழுத்துப் போனார்கள்.

எனக்குத் தெரிந்து விஜி அண்ணனுக்கும் இந்துமதி அக்காவுக்கும் இருந்தது அழகான தோழமை. அந்த சம்பவத்துக்குப் பிறகு அந்த

அக்கா வீட்டைவிட்டு நிரந்தரமாகப் பிரிந்துபோய், இப்போது புனேவில் வேலை பார்த்துக்கொண்டு இருக்கிறது.

விஜி அண்ணன், மலேசியாவில் கார் கம்பெனியில் வேலை பார்க்கிறார். இரண்டு பேருமே 40 வயதுக்கு மேல் ஆகியும் இன்னும் கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லை!

ஆண்—பெண் தோழமை எவ்வளவு வைராக்கியமானது. ஒரு பெண்ணின் நட்புதான் ஆணுக்குப் பெருங்கொடை. எல்லா தோழிகளுக்கும் கொஞ்சம் அம்மா சாயல் இருக்கிறது. அவர்களின் ஒரே ஒரு குறுஞ்செய்தி... நமது நாளையே மலர்த்திவிடுகின்றன. ஒரு வார்த்தை, உரையாடல் எவ்வளவோ நம்பிக்கைகளை அளித்துவிடுகின்றன; கனவுகளைப் புதுப்பிக்கின்றன. அவர்கள் உடன் இருந்தால், துயரங்கள் சிறியதாகிவிடுகின்றன. உறவுகளாலும் பிரிவுகளாலும் மனதில் எரியும் காயங்களுக்கு இந்த விரல்கள்தான் விசிறிவிடுகின்றன. யாரோ தவறாகப் பேசுவதைக் கேட்டு, நம்மிடம் முகத்தைத் திருப்பிக்கொண்டுபோகும் ஒரு தோழி, நமது எல்லா வேலைகளையும் முடக்கிவிடுகிறாள்!

சிலருக்கு இந்தத் தோழமை... காதலாகக் கனியும் நேரம் மிகவும் ரகசியமானது. கர்ப்பக்கிரகத்தில் உறைந்துகிடக்கும் இருளில், ஒரு தீபம் எழுவதைப்போல அது சுடர்விடும்போது இரண்டு மனங்களுக்கு மட்டுமே தெரியும். அது பிரியத்தின் இன்னொரு கட்டம். 'நாம் ஏன் வாழ்க்கைத் துணையாக இருக்கக்கூடாது?' என்ற கேள்வி, பரஸ்பரம் எழுவது என்பது பெரிய புரிதல்.

நீண்ட சிநேகிதத்துக்குப் பிறகு, ஒரு பின்னிரவில் 'நாளை உனக்கு ஒரு பரிசு தரப்போகிறேன்' என ஒரு குறுஞ்செய்தி. இளவெயில் புன்னகைத்த மறுநாள் காலை வீட்டுக்கு வந்து, ''நாம ஏன் கல்யாணம் பண்ணிக்கக்கூடாது?'' எனக் கேட்ட ஒருத்தி... இப்போதும் என் ஆத்மார்த்த தோழிதான். என்னைப் பொறுத்தவரை நட்பும் பிரியமும் அது நிகழ்த்தப்படும் கணங்களின் மேல் மகத்தான உண்மையோடு இருக்கின்றன. அந்த உண்மைகளிலேயே வாழ்வோம்.

உறவையும் பிரிவையும் காலம்தான் தீர்மானிக்கிறது. அது செய்யும் மாயங்கள், எதையும் கலைத்துப் போட்டுவிடும். ஆனால், எப்போதும் நமக்கு நடுவே அன்பும் பரிவும் நிரந்தரம். எதிர்பார்ப்பும் அப்பழுக்கும் இல்லாத ஆண்—பெண் சிநேகிதத்தால்தான் இந்த உலகில் இன்னும் மழை பெய்து, ஈரம் எய்தி, இயற்கை பூக்கிறது!

**ஊ** ரில் இருந்து நண்பன் அலை—பேசினான்!

‘‘நண்பா... நம்ம அனு விஷயமா உன்ட்ட பேசணும்ரா...’’

அனு அவன் தங்கச்சி. எனக்கும் நண்பர்களுக்கும் அவள் தங்கையே. +2 முடித்துவிட்டு எங்கள் கிராமத்தில் இருந்து இப்போது திருவாரூர் போய் கல்லூரியில் படிக்கிறாள்.

‘‘சொல்றா பங்ஸு...’’

‘‘ஏண்டா... அனு டென்த்ல எத்தனை மார்க்றா..?’’

‘‘நானூத்திச் சொச்சம்தானே... அவதானே ஸ்கூல் செகண்டு?’’

‘‘ஆமா... அவளே ப்ளஸ் டூவுல எத்தனை மார்க்கு..?’’

‘‘எழுநூத்தி சொச்சம்னு சொன்னா...’’

‘‘ஆமா... எப்பிடி டென்த்துக்கும் ப்ளஸ் டூ—வுக்கும் இவ்வளவு ஆவரேஜ் குறைஞ்சது..?’’

‘‘என்ன..?’’

‘‘அவ லவ்வுல இருக்காடா. ஆவூன்னா மொபைலைத் தூக்கிட்டு மொட்டை மாடிக்கு ஓடிர்றா... அப்பவே சந்தேகப்பட்டேன். நம்ம குணாதான் கண்டுபிடிச்சான்... பையன் நம்ம செல்லூருதான். கூடப் படிக்கிறானாம்.’’

‘‘என்னடா பண்றது..?’’

‘‘அதுக்குத்தான் உனக்கு போன் பண்ணேன்... என்ன பண்ணலாம்னு சொல்லு...’’

‘‘அனுகிட்ட பக்குவமா விசாரிப்போம். புரியும்படியா எடுத்துச் சொல்லுவோம்... பொறுமையா...’’

‘‘அதை நீயே பேசு...’’

நான் அனுவுக்கு போன் பண்ணி தயங்கி தயங்கி இந்த விஷயத்தை கேட்க, அவள் வெடித்துச் சிரித்தாள்.

‘‘ஹலோ... அவன் என் ஃப்ரெண்டுண்ணா... ஆமா, இவன் செல்லூர்காரன்... புடிச்சு அடிச்சுருவீங்க. ஆஸ்திரேலியால எனக்கு ஃபேஸ்புக்ல ஒரு ஃப்ரெண்ட் இருக்கான்... அவனை என்ன பண்ணுவீங்க? பிரதர்... நீங்கெல்லாம் நிறைய சீரியலாப் பார்த்து ரொம்ப கெட்டுப் போயிருக்கீங்க. அய்யோ... அய்யோ...’’

போனை வைக்கிறவரை அனு சிரித்துக்கொண்டே இருந்தாள்.

போன் வைத்த பிறகு எனக்கும் சிரிப்பு வந்தது!

# 19

# வீதிக்கு வராத முகங்கள்!

**ம** துரையில் இருந்து போன். ரங்கய்யா காலமான தகவலைச் சொன்னார் லோகு அண்ணன். அப்போது நான் மறைமலை நகரில் இருந்து கடற்கரைக்கு மின்சார ரயிலில் போய்க்கொண்டு இருந்தேன்.

அலைபேசியை விட்டு நிமிர்ந்தபோது, ஒரு காகிதத்தை நீட்டியபடி எதிரே நின்று இருந்தார் ஒருவர். அதில், 'டியர் சார்/மேடம்... எனக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பு கடுமையான விஷக்காய்ச்சல் தாக்கியதில், வலது கையும் காலும் செயல் இழந்துவிட்டன. இதற்கான ஆபரேஷனுக்குத் தங்களால் முடிந்த பண உதவியைச் செய்து உதவவும்...' என அச்சிட்டு இருந்தது.

அவரது வலது கையும் காலும் உடைந்து தொங்குவதைப்போலa ஆடிக்கொண்டு இருந்தன. நான் 10 ரூபாயை எடுத்து நீட்டினேன். வாங்கிக்கொண்டவர் தயக்கமாகச் சிரித்தபடி, "சார்... நீங்க சினிமாக்காரரா?" என்றார். மொபைல் உரையாடலை வைத்து யூகித்து இருக்கிறார். பதில் சொல்லாமல் பார்த்துக்கொண்டு இருந்தபோதே, தன் இடது தோளில் தொங்கிய பையில் இருந்து ஒரு நோட்டை உருவி நீட்டினார். நோட்டு முழுக்கக் கவிதைகளும் பாடல்களும். புரட்டிவிட்டு, 'நல்லாயிருக்குங்க...' என அவரிடம் கொடுத்துவிட்டு பீச் ஸ்டேஷனில் இறங்கினால், பின்னாலேயே கெந்திக் கெந்தி வாசல் வரை வந்துவிட்டார்.

‘‘சார்... சின்ன வயசுல இருந்தே கவிதை எழுதுவேன் சார். இன்னும் நிறையப் பாட்டுங்க எழுதி வெச்சிருக்கேன் சார். நீங்க மாடர்னா கேட்டாலும் எழுதித் தருவேன் சார்!’’ என்றார் பரிதவிப்பாக. அவருக்கு என் அலைபேசி எண்ணைத் தந்துவிட்டுத் திரும்பும்போது, ரங்கய்யாவின் ஞாபகம் வந்தது!

**ம** துரையில் நண்பர்களோடு நான் தங்கியிருந்த மொட்டைமாடிக்கு எதிர் மொட்டைமாடியில் தங்கியிருந்தார் ரங்கய்யா. மீனாட்சி அம்மன் கோயிலுக்குப் பக்கத்தில் அர்ச்சனைத் தட்டுக் கடை போட்டு இருந்தார். அதிகாலையில் குளித்து முடித்து, பட்டையும் கொட்டையுமாக அவர் கோயிலுக்குக் கிளம்புவதே ஜெகஜோதியாக இருக்கும். மதியங்களில் பார்க்கும்போது அறையைப் பெருக்கிக் கொண்டும், சமைத்துக்கொண்டும், துவைத்த துணிகளைக் கொடியில் உலர்த்திக்கொண்டும் இருப்பார்.

சாயங்காலம் மீனாட்சி அம்மன் கோயில் பக்கம் போனால், அர்ச்சனைத் தட்டுக்களோடு உட்கார்ந்தபடி, ‘என்ன தம்பி... நைட் ஷி◌ஃப்ட்டா? டீ சாப்பிடுங்க’ என்பார். இரவில் போதையில் சிவந்த கண்களோடு வந்து நின்று, ‘தம்பி... பெப்பர் தூளு வெச்சிருக்கீங்களா..?’ எனத் தினமும் எதாவது கேட்பார். இவைதான் ரங்கய்யாவைப் பற்றி நான் அறிந்த சித்திரங்கள்.

ஒரு புத்தாண்டு இரவில் குடித்துக்கொண்டு இருக்கும்போது, "தம்பி வா... ரங்கய்யா ரூமுக்குப் போவோம். ரங்கு கச்சேரியைக் கேட்டது இல்லையே நீயி..." என இழுத்துப்போனார் தனபால் அண்ணன். மொட்டைமாடியில் விபூதி, குங்குமம் பொட்டலம் போட்டபடி உட்கார்ந்து இருந்தார் ரங்கய்யா.

"தம்பி... உனக்குத் தெரியாதுல்ல... ரங்கய்யா பெரிய பாகவதரு. எஸ்.பி.பி–ல்லாம் ரதிமீனாவுல டிக்கெட் போட்டு வந்து ரங்கய்யாகிட்ட பிச்சை எடுக்கணும். யோவ் ரங்கு... பாடுய்யா. அந்த ‘சின்னப் புறா’வப் பறக்கவிடுய்யா..." என தனபால் கேட்க, ‘அடப் போய்யா... ஒன் எழவு வேற...’ எனச் சலித்துக்கொண்டார் ரங்கய்யா. தொடர்ந்து வற்புறுத்தவே,

சின்ன மௌனத்துக்குப் பிறகு குரலைக் கனைத்துக்கொண்டு 'சின்னப் புறா ஒன்று...' என ரங்கய்யா பாட ஆரம்பிக்க... அதிர்ந்துவிட்டேன்.

சட்டென்று நெஞ்சை ஊடுருவிப் பாயும் குரல். 'ஒருவன் இதயம் உருகும் நிலையை அறியாக் குழந்தை நீ வாழ்க, உலகம் முழுதும் உறங்கும் பொழுதும் உறங்கா மனதை நீ காண்க...' என அவர் பாடப் பாட... மனசு துள்ளியது. பாடி முடித்துவிட்டு ஆவேசமாக ரெண்டு பெக் போட்டவர், "எழவு... இதெல்லாம் வேணாம்னு கெடந்தா... நீ வேற கௌப்பிவிட்டுட்ட..." என்றபடி உள்ளே போய் கொஞ்சம் புகைப்படங்களை அள்ளி வந்து என் முன்னால் கொட்டினார்.

எல்லாம் இளவயதில் லோக்கல் ஆர்கெஸ்ட்ராவில் அவர் பாடுகிற போட்டோக்கள். ஸ்டுடியோ பின்புலத்தில் யேசுதாஸுடன் நிற்கிற, சந்திரபோஸுக்குக் கை குலுக்குகிற போட்டோக்கள்.

"அஞ்சு வயசுலயே சங்கீதம் படிக்க ஆரம்பிச்சுட்டேன்... சாஸ்திரிய சங்கீதம் சப்ஜாடாத் தெரியும். எல்லாத்தையும் தேடித் தேடிக் கத்துக்கிட்டேன். இறைவன் இப்பிடி ஒரு குரல் வளத்தைக் குடுத்துட்டான்... பாடகர் ஆயிரணும்னுதான் அலைஞ்சேன். என்ன பண்றது... வாழ்க்கை நம்மளை அடிச்சுத் தொவைச்சு இங்க கொண்டுவந்து போட்ருச்சு. பொழப்பே பெரும்பாடாப் போயிருச்சு. இதுல என்ன கழுத பாட்டு... எல்லாத்தையும் விட்டேன். இந்த தனபாலு மாதிரி நண்பர்களுக்காகத்தான் எப்பவாவது பாடுறது..." என்றபடி, 'தீர்த்தக்கரைதனிலே...' பாட ஆரம்பித்தார். அதன் பிறகு பல இரவுகள் ரங்கய்யாவின் பாடல்களில் கரைந்திருக்கின்றன.

ஒரு மார்கழி சாயங்காலம், மீனாட்சி அம்மன் கோயிலில் பாட்டுக் கச்சேரி நடந்துகொண்டு இருக்க, வெளியே இவர் அர்ச்சனைத் தட்டு விற்றுக்கொண்டு இருந்த காட்சி இப்போது நினைவுக்கு வருகிறது!

அந்த ரங்கய்யா இப்போது காலமாகிவிட்டார். அவருடைய அத்தனை அழகான குரலும் காலமாகிவிட்டது. வனத்தில் காய்ந்த நிலவாக, எங்கோ ஓர் இடுகாட்டில் எரிந்துவிட்டது அவரது குரல். மின்சார ரயிலில்


கை—கால் இழுத்தபடி என்னிடம் ஒரு கவிஞன் நீட்டிய கவிதைகளும் யாரும் அறியாமல், எவரும் தீண்டாமல் மக்கி மண்ணாகிவிடக்கூடும். இப்படி எத்தனை எத்தனை முகங்கள் வீதிக்கு வராமலேயே தொலைந்துபோய் இருக்கின்றன!

நம்மைச் சுற்றி இப்படி எத்தனையோ ‘பாடப்படாத நாயகர்கள்’ (unsung heroes) இருக்கிறார்கள்! அடையாளமும், அங்கீகாரமும், வெளிச்சமும் இல்லாமல் மகத்தான திறமைகளோடு சாமான்யர்களாக வாழ்ந்துகொண்டு இருப்பவர்கள் எத்தனை பேர்? ரசிப்பதற்கும், ஸ்பரிசிப்பதற்கும், பறிப்பதற்கும், தொடுப்பதற்கும் விரல்கள் இல்லாமல் பூத்துப் பூத்து உதிர்ந்துகொண்டு இருப்பவர்கள் எவ்வளவு பேர்?



வசீகரக் குரலை வைத்துக்கொண்டு, ஒயின் ஷாப்பில் சாராயத்துக்காக யாசகம் செய்து பாடிக்கொண்டு இருப்பவர்களை, பிரமாதமான நடனக் கலையை மூட்டைகட்டி வைத்துவிட்டுக் குடும்பத்துக்காக கூரியர் பையனாக அலைபவர்களை, அற்புதமான ஓவியத் திறமையோடு சோத்துக்கும் சொற்பக் காசுக்கும் சுவரில் சின்னங்கள் வரைந்துகொண்டு இருப்பவர்களை, பெரிய எழுத்துத்

திறமையை முடக்கிப் போட்டுவிட்டு பொருளாதாரச் சுமையில் கக்கூஸ் துடைப்பானுக்கு விளம்பர வாசகங்கள் எழுதிக்கொண்டு இருப்பவர்களை, கிரிக்கெட்டில் இந்திய அணி வரைக்கும் போகிற எல்லா தகுதிகளும் இருந்தும் முடியாமல் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸுக்கு சிக்னல் போட்டுக்கொண்டு இருப்பவர்களை, இணையத் தமிழில் வியக்கவைக்கும் மென்பொருள்கள் கண்டுபிடித்துவிட்டு வெளிப்பட முடியாமல் அலைபவர்களை, ஏராளமான நடிப்புத் திறமை இருந்தும் ஏதேதோ அலுவல்களில் குப்பை கொட்டிக்கொண்டு இருப்பவர்களை... அனுதினம் எவ்வளவு பாடாத நாயகர்களைக் கடந்துபோகிறோம் நாம்!



**த**ஞ்சாவூரில் 'கொடிமரத்து மூலை' என்ற ஏரியாவுக்குப் போயிருக்கிறீர்களா? தமிழக அளவில் பிரபலமான பல கரகாட்டக் குழுக்கள் இங்குதான் இருக்கின்றன. அதனாலேயே 'கரகாட்ட ஏரியா' என இந்தப் பகுதி பிரபலம்.

ஒரு காலத்தில் எப்போதும் பரபரப்பாக இருந்த இந்தப் பகுதி, இப்போது திருவிழா முடிந்த நாடகக் கொட்டகை மாதிரி கிடக்கிறது. திருவிழாக்களாலும் கொடைகளாலும் நிறைந்து கிடந்த அவர்களின் பொழுதுகள், இப்போது வெறுமையிலும் வறுமையிலும் கழிகின்றன. க.சீ.சிவகுமாரின் 'சண்முகசித்தாறு' கதையில் வரும் மனோன்மணி

போன்ற பெரும் ஆடல் அழகிகள் எல்லாம் இன்று கட்டட வேலைக்குப் போகிறார்கள்.

போன முறை ஊருக்குப் போயிருந்தபோது கிட்டுவைப் பார்த்தேன். கிட்டு, அந்தக் கரகாட்டக் குழுக்களில் பெரியவர். ஒரு காலத்தில் பெரும் நட்சத்திரமாக வாழ்ந்தவர். வெண்ணவாசலில் வெட்டாத்தங்கரை அரை நிலவில் அவரது கண்களில் கலையும் கூத்துமாகக் கடந்துவந்த காலங்கள் நுரைத்துக்கொண்டு இருந்தன.

‘‘எங்கே தம்பி... இப்போல்லாம் வருஷத்துக்கு அஞ்சாறு அழைப்புங்க வந்தாலே பெருசு. எல்லாத் திருவிழாவுலயும் புதுப் படம் போட ஆரம்பிச்சுட்டான். ‘மானாட மயிலாட’ புகழ்னு டான்ஸ் போடறான். எங்களை யாரு கூப்பிடுறா? எங்களுக்கும் இந்தக் கலையைவிட்டா வேற நாதி இல்ல. இதான் சோறு தண்ணினு இருந்து தொலைஞ்சாச்சு. சரி... அவனவன் புள்ளைங்களையாவது மடை மாத்திவிட்ருங்கடானு சொல்லிட்டேன்.

இந்தத் தெறமையை வெச்சுக்கிட்டு என்ன தம்பி பண்ண. அன்னந் தண்ணிக்கே வழி இல்லையே. என்னென்னா தம்பி... ஜொலி ஜொலிப்பா இருந்துட்டு, யாரும் கண்டுக்காமக்கெடக்கறது இருக்கு பாருங்க... அதான் பெரிய கொடுமை!" என்றபோது, காலத்தின் நிராகரிப்பு தந்த வலி, அவருடைய சொற்களில் சொட்டின!

இதைப்போலவேதான் பக்கத்திலேயே ரெட்டிபாளையத்தில் தப்பாட்டக் கலைஞர்கள் இருக்கிறார்கள். உலகமயமாக்கலின், பன்னாட்டு நுகர்வுக் கலாசாரத்தின் புறக்கணிப்புகளின் துயரத்தில் துரத்தப்பட்டவர்கள். உதிரம் தகிக்க, அவர்கள் அடிக்கும் பறை இசைதானே இந்த மண்ணின் அடையாளம். அதுதானே நமது உழைப்பின்... கோபத்தின்... கொண்டாட்டத்தின் இசை.

நமது ஆதி வேர்களில் கிளைத்த இலைகளின் இசை நரம்புகள் இவர்களுடையதுதானே. ஆனால், அந்த மண்ணின் கலைஞர்களும் இன்று திறமைக்கு வாய்ப்பு இல்லாமல் வறுமைக்குள் கிடக்கிறார்கள்.

இந்த தேசம் முழுவதும் 'பாடப்படாத நாயகர்களாய்' இறைந்து கிடக்கும், மண்ணின் கலைஞர்களை மீட்க இந்த அரசும் சமூகமும் செய்ய வேண்டியது நிறைய இருக்கின்றன!

நண்பரோடு அவரது ஊரான திருக்காட்டுப்பள்ளிக்குப் போயிருந்தேன். "இங்கே தீவிரமான ஒரு வாசகி இருக்காங்க. எல்லா ரைட்டரையும் படிச்சுருவாங்க. விகடன்ல ஒண்ணுவிடாமப் படிச்சுருவாங்க... நீ வந்து பார்த்தின்னா ரொம்ப சந்தோஷப் படுவாங்க..." என்றபடி ஓட்டுக்கட்டு வீட்டுக்கு அழைத்துப்போனார்.

சமையல்கட்டில் இருந்து புடவை முந்தியில் கை துடைத்தபடியே ஓடிவந்தார் அந்தப் பெண். எங்களைப் பார்த்ததும் அவருக்கு அவ்வளவு சந்தோஷம். தனக்குப் பிடித்த எழுத்துக்களைப் பற்றித் தடதடவெனப் பேசிக்கொண்டு இருந்தவர், சட்டென்று உள்ளே போய் தயக்கத்துடன் கொஞ்சம் பேப்பர்களை எடுத்து வந்தார். "நான்கூடக் கதையெல்லாம் எழுதுவேன்... குடும்பம் குட்டினு வந்துட்ட பிறகு அப்பிடியே நிறுத்திட்டேன். எழுதினாலும் இங்கே யார்ட்டயும் காட்றது இல்லை. ஏதோ நீங்க வந்தீங்களேனு தந்தேன்..." என்றபடி ஒரு சிறுகதையைக் கொடுத்தார்.

அதை வாங்கிப் படித்துப் பார்த்தால் ஆச்சர்யமாக இருந்தது. நிஜமாகவே நல்ல கதை அது.

"ஏங்க... ரொம்ப நல்லாருக்குங்க..." என்றால், "தேங்க்ஸுங்க..." என்றார் சமையல் அறையைத் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி. அங்கிருந்து திரும்பிய வெகு நேரம், அவர் கண்கள் மினுங்க வாசலில் நின்ற சித்திரம் அழியவில்லை.

இன்னும் ஆயிரம் ஆயிரம் மனிதர்களிடம் இருக்கின்றன, நம்மால் வாசிக்கப்படாத ஆயிரம் ஆயிரம் கதைகள்!

# 20

# ‘பால்யம்’ என்ற பேராற்றின் கரையில்...

**நா**ங்கள் குடியிருக்கும் கோடம்பாக்கம் ஃப்ளாட்டில் எல்.கே.ஜி. படிக்கும் என் அண்ணன் பொண்ணுக்கு விளையாட தோஸ்துப் பாப்பாக்களே இல்லை. முன்னர் குடியிருந்த ஹவுஸிங் போர்டு வீட்டிலாவது சாயங்காலம் பூங்காவில் கூடி பிள்ளைகள் விளையாடுவார்கள். இருக்கிற சொற்ப இடத்தில் சைக்கிள் விடுவார்கள்.

இங்கே அதுவும் இல்லை. வீட்டுக்குள் தனியே கிடந்து பொம்மை உருட்டும் பொன்மலரைப் பார்க்கக் கஷ்டமாக இருக்கிறது. இவளது பால்யம், நினைவுகளை மலர்த்தும் விளையாட்டுகள் இல்லாமலேயே போய்விடுமா?

தொலைக்காட்சியில் இருந்து இவளது உலகத்தில் குதிக்கும் கார்ட்டூன் கேரக்டர்கள் நிகழ்த்தும் சாகசங்களைத் தவிர, வேறு எந்த நேரடி சாகசத்தையும் இவளது பால்யம் நிகழ்த்தப்போவதே இல்லையா?

வெட்டாற்றில் ஊறிக்கிடந்து, தாரை தாரையாகத் தண்ணீர் வழிய பெரியம்மா அடித்து இழுத்துப்போகும் மீரா அக்காவின் சித்திரத்தைப் போன்ற ஒரு காட்சியை இவளது வாழ்வில் பார்த்துவிடுவேனா? கன்னிப்பொங்கலுக்கு சாமந்திப்பூ ஜடை கட்டி தென்னந்தோப்பில் திருடன்—போலீஸ் விளையாடிய சாந்தினி அக்காவின் சந்தோஷம் இவளுக்கு எதில் கிடைக்கும்?

காமுட்டிகா ராத்திரியில் மன்மதன்—ரதி வேஷம் கட்டும் அனுபவத்தைப் போன்ற ஒன்று இவளுக்கு நடக்குமா? சிவன் கோயிலில் பஜனை பாடி பொங்கல் வாங்கித் தின்றுவிட்டு, பள்ளிக்கூட மைதானத்தில் சில்லு விளையாடும் வெண்ணிலாவின் மார்கழி மாத அதிகாலை ஒன்று இவளுக்கு வாய்க்குமா? திருக்களம்பூர் வரை நுங்கு வண்டி உருட்டி, சக்கிலடியில் புளியங்கா பறிக்கும் வினோதா சித்தியின் ஞாயிற்றுக் கிழமைகளில் இவள் வாழ்வாளா?

நாட்டார் வீட்டு மாடியில் கண்ணாமூச்சி ஆடி, பட்டக்காலில் கூட்டாஞ்சோறு சமைத்து, அய்யனார் மேட்டில் கிச்சிக் கிச்சி தாம்பூலம் போட்டு, அம்மா குளத்தில் வெங்காயத்தாமரைப் படகு விட்டு, குருக்குமாரி வீட்டில் சொக்கட்டான் விளையாடி, கார்த்திகைக்குப் பனங்கருக்கு சுத்தும் சுவாரஸ்யங்கள் இவளுக்குக் கிடைக்கப்போவதே இல்லை என நினைக்கும்போது வருத்தமாகிறது!

**எ** ங்கள் தலைமுறையின் (எங்கள் தலைமுறை வரைக்கும்தான் என நினைக்கிறேன்) ஊர்காட்டுப் பால்யம், விளையாட்டுக்களால் நிறைந்து கிடந்தது. கிட்டிப்புள், பம்பரம், பளிங்கு, பேபே, ஓடிப்புடிச்சு... என நினைவுகள் முழுக்க எத்தனை எத்தனை விளையாட்டுக்கள். கவட்டைதான் முக்கியமான அவுட்டோர் கேம். மூங்கில் குச்சியில் ஆளுக்கொரு கவட்டை செய்துகொள்வது!

‘சாட் பூட் த்ரீ’ போட்டு ஒருவன் ஆட்டத்தை ஆரம்பிப்பான். ‘கல்லா... மண்ணா..?’ என மாறி மாறிக் கேட்டுவிட்டுப் படாரென ரெண்டில் எதையாவது சொல்வான். கல் என்றால் கல்லிலும், மண் என்றால் காய்ந்த சாணியிலும் கவட்டையை வைத்துவிட வேண்டும். எதிலும் வைக்காமல் திண்டாடுபவனின் கவட்டையை இழுத்துக்கொண்டு ஓடுவோம். பாதிக்கப்பட்டவன் நொண்டியடித்துக்கொண்டே பின்னால் ஓடிவர வேண்டும். அவன் பின்னால் ஒரு கூட்டம் ‘எங்க வீட்டு நாயி எதையோ திங்கப் போச்சு...’ எனப் பாடி வெறுப்பேற்றிக்கொண்டே வரும்.

அப்போது பங்காளி உத்திராபதி சென்னையில் சித்தப்பா வீட்டில் தங்கிப் படித்தான். கோடை விடுமுறைக்கு மட்டும் ஊருக்கு வருபவன்,

எதற்கெடுத்தாலும் 'மெட்ராஸ்ல எப்பிடித் தெரியும்ல...' என்பதையே பஞ்ச் டயலாக்காக வைத்து எங்களை வெறுப்பேற்றுவான். விளையாடிக்கொண்டு இருக்கும்போதே ஓடிப்போய் கொஞ்ச தூரத்தில் நின்று, 'ப்ளடி ஃபூல்ஸ்...' எனக் கத்திவிட்டு வீட்டுக்கு ஓடிவிடுவான். 'மெட்ராஸ்ல எல்லாம் கிரிக்கெட், பேட்மின்டன்தான்... உங்களுக்கு அதெல்லாம் தெரியாதா' என அவன் டமாரம் தாங்கவில்லை.



ஒரு நாள் சபையைக் கூட்டி சதி ஆலோசனை செய்தோம். திட்டப்படி முபாரக் அலி, உத்திராபதியைக் கவட்டைக்கு இழுத்து வந்தான். டார்கெட் வைத்து அவனை செல்லூர் மார்க்கமாக இலையூர் வரை இழுத்துப் போனோம். சில பல கிலோ மீட்டர்கள் நொண்டியடித்தபடி உத்திராபதி ஓடி வர... எல்லோரும் 'எங்க வீட்டு நாயி எதையோ திங்கப்போச்சு, கல்லால அடிச்சோம் காலு உடைஞ்சுபோச்சு' என உற்சாகமாகக் கத்தினோம். அதில் ஒருவன், 'மெட்ராஸு நாயி...' எனக் கத்த, அழுதபடி ஓடிய பதி, லீவு முடிகிற வரைக்கும் விளையாடவே வரவில்லை.

இப்போது மறைமலை நகரில் ஸ்டீல் ஃபேக்டரி ஒன்றில் வேலை பார்க்கிறான் பதி. போன் பண்ணும்போது சொல்லிச் சிரித்தான், ''மெட்ராஸ்ல எப்பவுமே நாய்ப் பொழப்புதான்... அன்னிக்கே கரெக்ட்டாத்தான்டா சொல்லியிருக்கீங்க!''

**எ** ங்கள் ஊர் கபடி அணியின் பெயர் 'அபிவை செவன் ஸ்டார்'. கிரிக்கெட்டின் ஆக்கிரமிப்புக்குப் பிறகு, வைப்பாட்டி புகுந்த வீட்டில்

பொண்டாட்டியின் கதி ஆகிவிட்டது கபடிக்கு! 20 வருடங்களுக்கு முன்பு வரை ஊருக்கு ஊர் கபடி டோர்னமென்ட்தான் களைகட்டும். விளையாட்டு என்றால், வெற்றியும் தோல்வியும்தானா? அது அலாதியான அனுபவம். ‘வெண்ணிலா கபடிக் குழு’ மாதிரியே எங்கள் ‘செவன் ஸ்டார்’ குழுவும் செம மொக்கை டீம். அதில் நான் சைக்கிள் மிதித்து, துணி மூட்டை சுமந்து, குளுக்கோஸ் விநியோகிக்கும் சூப்பர் ஜூனியர். கோவிந்தராஜ் சித்தப்பா தலைமையில், சைக்கிளில் ஆக்ரோஷமாகப் புறப்பட்டுப் போகும் டீமை அக்கம்பக்கத்து ஊர்களில் அடித்துத் துவைத்துக் காயவைப்பார்கள்.

ஒரு முறை, கூத்தாநல்லூர் டோர்னமென்ட்டில் திடுதிப்பென செவன் ஸ்டாருக்கு எதிராக திருவாரூர் குண்டர்கள் களம் கண்டார்கள். ‘பளாக்’ அடிப்பதில் மாவட்டத்திலேயே அவர்கள்தான் ‘அட்டாக்’ பாண்டிகள். எங்கள் டீமில் இருந்து ரைடு போகிற ஒவ்வொருவரையும் அநாயாசமாகத் தூக்கி வெளியே வீசினார்கள். பாதி ஆட்டத்திலேயே அவனவனுக்கு நுரை தள்ளியது.

கடைசி ஆளாக ரைடு போன சாகுலை ஒரு குண்டன் தூக்கி டியூப் லைட் மீது வீசினான். சிதறி விழுந்த சாகுலுக்கு வலது கால் சப்பை நழுவியது. அப்படியே ஊருக்கு அள்ளிவந்து கருப்புவிடம் மாவுக் கட்டு போட்டு, வீட்டில் ஒப்படைத்தோம். அவனது அம்மா ‘கழிச்சல்ல போவ... கழிச்சல்ல போவ...’ என கோவிந்தராஜு சித்தப்பாவைக் கட்டையோடு துரத்தியது. சித்தப்பா ஒரு வாரம் தஞ்சாவூரில் தலைமறைவாகி, திரும்பினார்.

இன்னொரு முறை, துபாய் போவதற்கு விசா ஏற்பாட்டில் இருந்த செந்திலை சேங்காலிபுரம் டோர்னமென்ட்டுக்குக் கொண்டுபோய், கை மூட்டை இறக்கிக்கொண்டு வந்தோம். ‘‘அடுத்த வாரம் திருச்சிக்கு மெடிக்கல் டெஸ்ட்டுக்குப் போறவனைக் கொண்டுபோயி இப்பிடிக் கொண்டாந்திருக்கீங்களேடா... கம்னாட்டிங்களா...’’ என நண்பனின் அப்பா எங்களை வெறிகொண்டு துரத்தினார்.

**பெ** ரிய சரவணாதான் எங்கள் டீமின் ப.ஃபூன். சாயங்காலம் கிளம்பிப்போனால் ராத்திரியெல்லாம் கண் விழித்து விளையாடிவிட்டு, அதிகாலையில் பல ஊர்களைக் கடந்து திரும்புவோம். ஜெயிப்போ, தோப்போ பெரிய சரவணாவின் பாட்டும் கூத்துமாக அந்தப் பயணங்கள் மறக்க முடியாதவை. வரும் வழியெல்லாம் ஒரு கெட்டவார்த்தையைச் சத்தம்போட்டுக் கத்திக்கொண்டே வருவது பெரிய சரவணாவின் ஹாபி.

ஒரு சாயங்காலம் அப்படிப் போகும்போது வழியில் ஒரு கல்யாண வீட்டைக் கடந்து போனோம். பெரிய சரவணா அந்தக் கெட்டவார்த்தையை முழங்கியபடி ஏரியாவைக் கடந்தான். செருகளத்தூரில் தோற்றுவிட்டு நள்ளிரவில் திரும்பும்போது மறுபடி அந்தக் கல்யாண ஏரியாவில் சரவண கோஷம் ஆரம்பித்தது. எங்கெங்கிருந்தோ ஒளிந்திருந்தவர்கள் தடதடவென ஓடிவந்து எங்களை மடக்கிப்போட்டுப் பொளந்தார்கள்.

‘‘பல மாசமா ஒங்கள நோட் பண்றம்டா... இன்னிக்கு சிக்குனீங்கடா... பொண்டுபுள்ளைங்க பொழங்குற எடத்துல...’’ எனப் பிரித்து மேய்ந்தவர்கள், பெரிய சரவணாவின் சைக்கிளைப் பிடுங்கிக் குளத்தில் எறிந்தார்கள். சைக்கிளை மீட்க கட்டாரி மாமாவோடு போய் பஞ்சாயத்து நடந்ததெல்லாம் செம காமெடி!

**நா** ங்கள் சீனியர் ஆகும்போது கிரிக்கெட் யுகம் ஆரம்பித்துவிட்டது. ஏ.சி.சி—யை (அபிவை கிரிக்கெட் க்ளப்) உருவாக்கினோம். நானும் சித்தார்த்தனும் ஓப்பனிங் பேட்ஸ்மேன்கள். கருங்கபில் (கறுப்பின எ.ஃபெக்ட்டில் இருக்கும் செந்திலுக்கு பெட் நேம்) ஓப்பனிங் பௌலர். அய்யா, ஒயிடு உத்திராபதி, ஒலிவில்லா என செம டீம் .ஃபார்மானது. இரவு பகல் சோறு தண்ணி இல்லாமல் எப்போதும் கிரிக்கெட்தான்.

கொரடாச்சேரிக்கு முதல் தடவையாக டோர்னமென்ட் போனோம். மைக் கட்டி கமென்ட்ரி எல்லாம் எங்களுக்குப் புதுப் பரவசம். அதுவரை ஸ்டிச் பாலில் ஆடியதே இல்லை. முதலில் பேட் பிடித்த கொரடாச்சேரி பின்னிப் பிரித்தார்கள். கல்லியில் நின்று இருந்த உத்திராபதிக்குப் பந்து தாக்கிக் கன்னம் பணியாரமானது. 178 ரன்கள் டார்கெட். அடுத்து

இறங்கிய எங்கள் டீமில் மளமளவென விக்கெட்டுகள் காலி. உத்திராபதி விளையாடுகிற கண்டிஷனில் இல்லை.

எங்கள் ஊருக்கு வெல்லம் விக்க வருகிற ரவி, ஓரமாக உட்கார்ந்து சரக்கடித்துக்கொண்டு இருந்தார். கடைசி விக்கெட்டாக இறங்க வேண்டிய பதிக்குப் பதில் ‘நான் இறங்குறேன்டா’ எனக் கைலியை வரிந்து கட்டிக்கொண்டு ரவி இறங்க, அவருக்குச் சரியாக பேட் பிடிக்கவே தெரியாது என்பதால், எதிர் டீம் தடுக்கவே இல்லை. ஆவேசமாக இறங்கிய வெல்லம் ரவி, மானாவாரியாகச் சுழற்றி அஞ்சாறு சிக்ஸர்களைப் பறக்கவிட, திடீர் திருவிழாவானது.

டீம் தோற்றாலும் ரவியின் புயல் ஆட்டத்தால் டீம் மானம் காக்கப்பட்டது. ‘‘நீ பேட்டே பிடிச்சதுல்ல... எப்பிடியா அடிச்ச?’’ என்றால், ‘‘கண்ணை மூடிட்டு சுத்துனேன் மாப்ள...’’ என்ற ரவியை ‘மோடுமுட்டி ரவி’யாக்கி அன்றில் இருந்து டீமில் சேர்த்துக்கொண்டோம்!

அப்போது டி.வி—யில் பெப்ஸி விளம்பரத்துக்கு கங்குலி வந்துகொண்டு இருந்தார். எங்கள் ஊரில் அதுவரை யாருமே பெப்ஸி குடித்தது இல்லை. கங்குலி விளம்பரத்தைப் பார்த்து, எங்கள் எல்லோருக்குமே பெப்ஸி மேல் மோகம்.

அப்போது வலங்கைமானில் கிரிக்கெட் டோர்னமென்ட் வந்தது. ‘‘இதுல ஏதாவது பிரைஸு வாங்கிட்டா, அந்தக் காசுல எல்லாருக்கும் பெப்ஸிரா...’’ என்றான் சித்து. அதனாலேயே உயிரைக் கொடுத்து விளையாடி அந்தப் போட்டியில் மூன்றாவது பரிசைத் தட்டினோம்.

எல்லோரும் குடவாசலுக்கு வந்து ஒரு கடையில் எங்கள் கனவு பானமான பெப்ஸியை வாங்கினோம். ஆசை ஆசையாக ஒரு வாய் குடித்த சசி, ‘‘அய்யே... ஒறைக்குதுரா’’ எனக் கத்தியபடி பாட்டிலை அப்படியே கீழே உருட்டிவிட்டான்.

‘‘மொளவாப் பொடி தூவிருக்கானுங்க டோய்... இதுக்குப் போயா இந்த கங்குலி கம்னாட்டி இந்த பில்டப்பு குடுக்குது...’’ என ராஜு

கத்தினான்.

ஊருக்குப் போகும்போது பார்த்தால் யூனிஃபார்ம், லோக்கல் கடைகளின் ஸ்பான்சர், லோக்கல் கேபிளில் செய்திகள் என எங்கள் ஊர் டீம் மினி சென்னை சூப்பர் கிங்ஸ் மாதிரியே இருக்கிறது. வயலில் கிரவுண்ட் போட்டு அவர்கள் ஹோவென ஆடுவதைப் பார்க்க ஏக்கமாக இருக்கிறது.

''நானும் வர்றேன்டா...'' என பேட் கேட்டால், ''நீங்க அம்பயரா இருங்கண்ணே'' என்றார்கள். நமக்கு அம்பயராக இருக்கும் வயது வந்துவிட்டது என்பதை நினைக்கும்போதே கடுப்பாக இருக்கிறது!



**செ** ன்னையில் என்னைப் பார்க்க சிவந்தி வந்திருந்தார். வெட்டாற்றில் எங்கள் ஊர்க் கரையில் இருந்து கம்மங்குடி கரைக்கு நீச்சல் போட்டி நடத்துவோம். அடித்துப் பொங்குகிற நீரில் பாதி ஆறு போவதற்குள் மூச்சு முட்டும். அந்தப் போட்டிகளில் அதிகம் ஜெயிப்பது சிவந்திதான்.

தோப்பில் இருந்து ஆற்றை நோக்கிச் சரிந்திருக்கும் ஒரு மரத்தில் இருந்து தெப்பலங்கட்டி குதிப்பது, காதர் பாய் வீட்டுத் தூங்குமூஞ்சி மரத்தில் இருந்து சொருவல் விடுவது, டியூப் போட்டு ராக்கபெருமாள் கோயில் வரை போவது என வெட்டாற்றை ரவுண்டு கட்டி அடிப்பதுதான் எங்களுக்கு விடுமுறை.

இப்போது சிவந்தியைப் பார்த்ததும் எனக்கு நுரைத்துப் பொங்கும் வெட்டாறுதான் ஞாபகத்துக்கு வந்தது.

''என்ன சிவந்தி எங்கே இருக்கீங்க? என்ன பண்றீங்க?''

''நான் சென்னைக்கு வந்து மூணு வருஷமாச்சுங்க. இங்கதான் பக்கத்துல கங்கையம்மன் கோயில் தெருவுல ஒரு நீச்சல் கொளத்துல வேலை பாக்குறேன்...''

''நீச்சல் கொளத்துலயா?''

''ஆமாங்க... ஸ்விம்மிங் டிரெயினிங்க்கு வர்ற பிள்ளைங்களைப் பார்த்துக்கறது. சம்பளம் ரெண்டாயிரத்துச் சொச்சம்தான் தர்றான். அதான் வேற வேலை தேடிட்டு இருக்கேன். சமைச்சுச் சாப்பிட்டாலே 15 நாளைக்குத் தாக்குப்புடிக்க முடியல. எதாவது வேலை இருந்தா சொல்லுங்க...'' என்றபோது தொபுக்கடீர் என அவர் குதித்த வெட்டாற்றின் நினைவுத் துளிகள் என் மேல் தெறித்தது.

'பால்யம்' என்ற திரும்பிவராத பேராற்றின் கரையில் சந்திக்கும்போது, நினைவுகளின் ருசியும் நிகழ்வுகளின் வலியும் கைகுலுக்கிக்கொள்கின்றன.

விளையாடுவதை நாம் நிறுத்தும்போது, நம்மை வைத்து இந்த உலகம் விளையாட ஆரம்பிக்கிறது!

# 21

# புத்தாண்டைத் தொடங்கி வைப்பது யார்?

**கு** வைத்தில் இருந்து வந்திருந்தார் மாமா. 10 வருடங்களுக்கு முன்பு போனவர் இப்போதுதான் வருகிறார். ஈராக் எல்லையில், பாலைவனத்தில் வேலை. இரவெல்லாம் ஊடுருவும் பனி, பகலெல்லாம் கொளுத்தும் வெயில் எனக் கொடூரமான தட்டவெப்பத்தில் வெந்திருக்கின்றன அவரது 10 வருடங்கள்.

''வெள்ளிக்கிழமை மட்டும் லீவு மாப்ள... அன்னிக்கு சிட்டிக்குள்ள வந்தேன்னா, நம்ம ஊர் பயலுகளப் பார்ப்பேன். அந்த ஒரு நாளைக்காகத்தான் ஒவ்வொரு நாளும் உசுரு தங்கியிருக்கும் மாப்ள'' என்றார் சிரித்தபடி.

முற்றாக முடி கொட்டி, கறுத்து ஆளே உருமாறிப்போய் இருந்தார். ''வேணாம்னு சொன்னாலும் கேக்காம ஒன் ஆத்தாதான் எனக்குப் பொண்ணு பாத்துக்கிட்டு அலையுது. குச்சிப்பாளையத்துல ஏதோ பொண்ணு இருக்காம். ஒங்கம்மா வகையறால சொந்தம்தான்னு சொல்லுச்சு. போய் பாக்கலைன்னா விடாது போலிருக்கு'' எனச் சொன்னபோதுதான், அவருக்கு இன்னும் கல்யாணம் ஆகாதது நினைவுக்கு வந்தது.

அவரது செட் மாமாக்களின் பிள்ளைகள் கல்லூரிக்கும் வேலைக்கும் போய்க்கொண்டு இருக்கிறார்கள். விருப்பம் இல்லாததுபோல் பேசினாலும்

அந்தப் பெண்ணைப் பற்றிப் பேசும்போது ஒரு கணம் அவருடைய முகத்தில் சந்தோஷமும் வெட்கமும் நெளிந்து மறைந்தது... பாலைவனத்தைக் கடக்கும் ஒரு மழை மின்னல்போல.

அவரிடம் பேசிக்கொண்டே டி.வி. சேனல்களை மாற்றிக்கொண்டு இருந்தேன். அப்போது ஒரு சேனலில், ஏதோ சீரியலில் ஆவேசமாக வசனம் பேசிக்கொண்டு இருந்தார் நளினி. நெடுந்தொடர்களின் பயங்கரவாத மாமியாராக வலம்வரும் நளினியைப் பார்த்த சில நொடிகளில் துள்ளிக் குதித்து எழுந்தார் மாமா.


''டேய் மாப்ள... நம்ம நளினியா இது? 'துள்ளி எழுந்தது பாட்டு...' பாடின நளினியா இது?'' எனப் பதற்றப்பட்டவர், ''நானெல்லாம் சீக்கிரமா டிக்கெட் வாங்கிருவேன் போல இருக்கே மாப்ள...'' என்றார் சீரியஸாக.

''அட, என்ன மாமா... அம்பிகா, ராதாவை எல்லாம் இன்னும் பார்க்கலையா நீயி...'' என்றதும், ''சரி விடு... ஒரு டீயைப் போடுவோம் வா மாப்ள!'' என யதேச்சையாக எழுந்து கண்ணாடியில் முகம் பார்த்தார் மாமா. சில நொடிகள்தான்... அபிவிருத்தீஸ்வரம் வடக்குத் தெருவில் இருந்து குவைத் பாலைவனம் வரைக்குமான வானத்தின் உடைந்த ஒரு துண்டைப்போல மாறியது அந்தக் கண்ணாடி. கனவுக் கன்னிகளை உருக்குலைத்து, முடி கொட்டிய மாமாக்களின் பிம்பங்கள் காட்டும் அந்தக் கண்ணாடியைப் பார்க்க எனக்குப் பயமாக இருக்கிறது!

சீரியலில் நளினியைப் பார்த்து மாமா ஷாக்கானதுபோலத்தான் ஒவ்வொரு முறையும் திடுக்கிட வைக்கிறது, திடீரென எதிர் வந்து நிற்கும் புத்தாண்டுகள். வருடம் கடந்து ஏழெட்டு மாதங்கள் ஆன பிறகும், எங்காவது தேதி எழுதும்போது மறதியாக பழைய வருடத்தையே எழுதுபவர்களில் நானும் ஒருவன்.

ஒவ்வொரு புத்தாண்டிலும் கண்ணாடிகள் நம்மைப் பார்த்து நகைக்கின்றன. பேரண்டத்தின் குடுவையில், காலத்தின் புழுதி இன்னும் கொஞ்சம் சேர்கிறது. இயற்கையை இன்னும் கொஞ்சம் தின்கிறோம். புதிய உயிர்களின் அழுகையாலும் சிரிப்பாலும் பிரபஞ்சம் துளிர்க்கிறது.

ஏதேன் தோட்டத்துக்கும் ரிலையன்ஸ் ஃப்ரெஷ்ஷுக்குமாகத் தொடரும் ஒரு முடிச்சு வியக்க வைக்கிறது. கண்ணீர், புன்னகை, பூகம்பம், யுத்தம், சமாதானம் எனப் புது வருடத்தின் டைரியைக் கடவுள் எழுதி வைத்திருக்கக்கூடும். அந்த டைரியில், புத்தாண்டு இரவில் அளவுக்கு அதிகமாகக் குடித்துவிட்டு வண்டிகளில் பறக்கும் அன்பர்களுக்கான விபத்துகள் சிவப்பு மையால் அடிக்கோடு இட்டிருக்கின்றன!



**செ** ன்னைக்கு வந்த புதிதில் ஒரு புத்தாண்டு. வேலை இல்லாமல், கையில் காசும் இல்லாமல் திரிந்த நேரம் அது. 'தினசரி சோத்துக்கே சிங்கியடிக்கும்போது, நியூ இயராவது மண்ணாவது' — என்கிற மனநிலையில் இருக்கும்போது, அசோக் அண்ணன் வந்தார். ஒரு தம்மைப் போட்டுக்கொண்டே, ''அடுத்த வாரம் நியூ இயரை நாம ஜெகஜோதியா செலிபரேட் பண்றோம். எல்லாருக்கும் காஸ்ட்லி சரக்கு, பஃபே சாப்பாடு... அண்ணன் ரெடி பண்ணிட்டேன்'' என்றார்.

''எப்பிடிண்ணே?'' என்றால் ''இனிமே எல்லாம் அப்படித்தான்!'' எனச் சிரித்தார். அப்போது அசோக் அண்ணனும் சரவணன் அண்ணனும் சேர்ந்து 'பாதைவாசிகள்' என்ற நாடகக் குழு ஆரம்பித்து இருந்தார்கள்.

புத்தாண்டு இரவில், காஸ்மோபாலிடன் கிளப்பில் நாடகம் போடுவதற்கு, இசை அமைப்பாளர் ஜேம்ஸ் வசந்தன் மூலமாக வாய்ப்பு வாங்கியிருந்தார் அசோக் அண்ணன். ''டேய்... சென்னைலயே பெரிய கிளப்பு. பணக்காரய்ங்க கூடுற இடம். யாரும் எதுவும் சொதப்பிடாதீங்கடா...'' என்ற அண்ணன், ''நாம ஒரு மைம் ப்ளே பண்ணப் போறோம்'' என்றார்!

அண்ணன்கள் தலைமையில் நாங்கள் ஏழெட்டுப் பேர் சேர, கில் நகர் பார்க்கில் ரிகர்சல் ஆரம்பித்தது. மைம் என்கிற மௌன நாடக வடிவத்தில் கரகரவென எதையோ நாடகமாக்கிக்கொண்டுவந்தார் சரவணன் அண்ணன். 'சூரியன் எழுகிறது' என்றால் நாலைந்து பேர் கையாட்டிக்கொண்டு சூரியன் மாதிரி எழ வேண்டும். 'மரம் விரிகிறது' என்றால் கொஞ்சம் பேர் கைகளை வளைத்து நிற்க வேண்டும். பயிற்சியில் எவனாவது சொதப்பினால், ''டேய்... ஃபாரின் சரக்கு... பஃபே சாப்பாடு'' என்பார் அசோக். நிஜமாகவே எல்லோருக்கும் அதுதான் டார்கெட்.

''மாப்ளே... டிராமா முடிஞ்சதும் ஒரு ஃபுல்ல எடுத்துக்கிட்டு அந்தக் கூட்டத்துல ஐக்கியமாயிர்றோம். அங்க நெறைய சேட்டுப் பொண்ணுங்கள்லாம் வருமாம்ல!'' என்றான் பஷீர். நியூ இயர் இரவில், காஸ்மோபாலிடன் கிளப்பில் கூடினோம். கறுப்பு உடை, முகம் முழுக்க வெள்ளை பெயின்ட், லிப்ஸ்டிக் என எல்லோருக்கும் கொடுமையான மேக்கப். பெர்ஃப்யூம் மணக்க இங்கிலீஷும் இந்தியுமாக அங்கே கூடிக்கிடந்தவர்களைப் பார்க்கவே மிரட்சியாக இருந்தது. அதுவரை பாக்காத கார்கள். செவசெவவெனக் குடும்பங்கள் கூடி ஒயின், பீர் குடித்தார்கள்.

ஒரு பக்கம் விதவிதமான சரக்கும் சாப்பாடுமாக இருக்க, வயிற்றைப் பிராண்டியது. ''டிராமா முடிஞ்சதும் டோக்கன் தருவானுங்க... அதுக்கப்புறம் பார்த்துக்கலாம்டா!'' என்றார் அண்ணன். பாட்டும் டான்ஸுமாக மொத்தமாக அருள் ஏறிக்கொண்டு இருந்தது ஏரியாவுக்கு. 11 மணிக்கு மேல் மைக்கில் எங்கள் குழுவை அழைத்தார்கள்.

மொத்தக் கூட்டமும் அரை போதையில் இருந்த நேரம்... நாங்கள் மேடையேறி 'மைம்' போட ஆரம்பித்தோம். 'மௌன நாடகம்' ஆரம்பித்த ஐந்தாவது நிமிடமே மொத்தக் கூட்டமும் திட்டிக் குமிக்க ஆரம்பித்தது. ஒரு கோட் சூட் பெரியப்பா இங்கிலீஷில் கடுமையான கெட்ட வார்த்தைகளால் திட்டி, எங்களை இறங்கச் சொன்னார். நாடகம் முடிவதற்குள் கிட்டத்தட்ட கலவரச் சூழல் உருவானது. கீழே இறங்கினால், யாரும் கண்டுகொள்ளவே இல்லை.



வியர்வையில் பெயின்ட் வழிய, ஏக்கமாக சரக்கையும் சாப்பாட்டையும் பார்த்தோம். டோக்கன் வாங்கப்போன அசோக் அண்ணன் பதற்றமாக வந்தார். ''டேய்... டோக்கன் இல்லைனு அனுப்பிட்டானுங்கடா'' என்றதும் திகீரென்றது. எவன் கையிலும் காசு இல்லை. உயர்ரக மதுவும் உணவும் இறைந்துகிடந்த அந்த இடத்தில் இருந்து பசி அரிக்கும் வயிற்றுடன் வெளியேறினோம். எவனோ, இருந்த காசில் திறந்து இருந்த மெடிக்கல் ஷாப்பில் இருந்து ஒரு பாக்கெட் பிரெட் வாங்கி வந்தான். குதூகலமும் சத்தமுமாக நகரம் நிறைந்து கிடந்தபோது, பசித்துப் படுத்த அந்தப் புத்தாண்டு... கோடானுகோடி ஏழைகளின் புத்தாண்டு!

**இ**ன்னொரு புத்தாண்டில், ஏற்காட்டில் கோபியைச் சந்தித்தேன். அவர் ஒரு திருநங்கை. அற்புதமான தோழி. புத்தாண்டு இரவில், சேலத்தில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கக் கலை இரவில் கலந்துகொண்டுவிட்டு, ஏற்காடு சென்றபோதுதான் தோழர்களுடன் கோபி

அறிமுகமானாள். ஏற்காட்டில் இரவெல்லாம் கண் விழித்துத் தோழர்கள் பேசிக்கொண்டு இருந்தோம்.

‘தென்றல் வந்து தீண்டும்போது என்ன வண்ணமோ...’ பாடலை கோபி பாடியபோது அந்த வருடம் அழகாகத் தொடங்கியது. அவளிடம் பேசப் பேச அதிர்ந்தேன். ‘‘எல்லாருக்கும் நியூ இயர்னா ஏதேதோ ஞாபகத்துக்கு வரும்... எனக்கு என்னை ஏலம்விட்டதுதான் ஞாபகம் வரும்!’’ எனச் சிரித்தாள்.

மதுரையில் பிறந்த கோபி, கொஞ்சம் கொஞ்சமாகப் பாலினம் மாறியபோது, வீட்டில் வெறுத்து விரட்டப்பட்டு எங்கெங்கோ அலைந்திருக்கிறாள். வாழ்க்கை அடித்துத் துரத்த, மும்பைக்குப் போய் பார் டான்ஸராக இருந்திருக்கிறாள். 12 வருடங்களுக்கு முன்பு, தனது 18 வயதில், ஒரு புத்தாண்டு இரவில் தான் ஏலம் விடப்பட்ட கதையைச் சொன்னபோது அவள் முகத்தில் சின்ன சோகம்கூட இல்லை.

‘‘நான் அங்ஙன டான்ஸரா கான்ட்ராக்ட்லதான் வேல பாத்தேன். அந்த மொதலாளி... மொன்ன நாயி. என்ட்ட எதுவும் சொல்லவே இல்ல. நியூ இயர் அன்னிக்கு நைட், ஸ்பெஷல் ஷோனு எல்லா டான்ஸர்க்கும் டிரெஸ்ஸைக் கொறைக்கச் சொன்னானுங்க. பாதி ராத்திரில பார்த்தா திடுதிப்புனு எங்கள செலெக்ட் பண்ணி ஏலம்விட ஆரம்பிச்சிட்டானுங்க. விளையாட்டுக்குத்தான்னு நான்கூட சும்மா இருந்தேன். சீரியஸாவே ரேட்டு பேசி அந்த மொதலாளி என்னை வித்துட்டான். ஒரு மார்வாடி என்னை வாங்கிட்டுப் போனான். ஒரு திருநங்கைகூட இருந்தா தொழில் செழிக்கும்னு எவனோ சொன்னதுக்காக. என்னைக் கொண்டுபோய் ஒரு வீட்ல வெச்சுக்கிட்டான். அவன்ட்ட இருந்து தப்பிச்சு வர்றதுக்குள்ள... யப்பே... அது நரகம்பா... இப்பிடி ஒரு நியூ இயரைப் பார்ப்பேன்னெல்லாம் நெனச்சே பாக்கல...’’ என கோபி சொன்னபோது, அந்தப் புத்தாண்டு ராத்திரி ஏதேதோ செய்தது!

இப்போது கோபி ஒரு தொண்டு நிறுவனத்தில் வேலை பார்க்கிறாள். நிறையக் கவிதைகள் எழுதுகிறாள். ஊர் ஊராகப் போய் குழந்தைக் கல்வி பற்றி விழிப்பு உணர்வுப் பிரசாரம் செய்கிறாள். புத்தாண்டு இரவில்

எங்கு இருந்தாலும் அவளுடைய பெருஞ்சிரிப்பு பூத்த வாழ்த்து என்னை வந்தடையும்!

எத்தனையோ புத்தாண்டுகளில் குடித்துவிட்டு இரவெல்லாம் திரிந்திருக்கிறோம். மெரினாவில் கூடிக் கும்மியடித்திருக்கிறோம். போதையில் ரோட்டில் எதிர்ப்படுபவர்களை எல்லாம் கட்டிப்பிடித்துக் களே—பரம் பண்ணியிருக்கிறோம்.

கிண்டி ஒயின் ஷாப்பில் யார், ஏன், எதற்கு என்றே தெரியாமல் ஒரு கும்பல், நண்பன் போலீஸ் சுரேஷ் தலையில் கத்தி சொருக, நிலைகுலைந்து ஆஸ்பத்திரியில் கிடந்திருக்கிறது ஓர் இரவு. ரெசிடென்ஸி டவர்ஸில், வி.ஜி.பி. கோல்டன் பீச்சில் பணக்கார நண்பர்களோடு மினுங்கி இருக்கின்றன சில இரவுகள். பெரும்பாலானவர்கள் இப்படித்தான் திரிகிறார்கள். மது விடுதிகளில் கூடிக் கொண்டாடுகிறார்கள்.

கோயில்களிலும் தேவாலயங்களிலும் கூட்டம் கூட்டமாகப் பிரார்த்திக்கிறார்கள். சபதங்கள் எடுத்துக்கொள்கிறார்கள். ஏராளமான கனவுகளை விதைக்கிறார்கள். தொலைக்காட்சியில் யார் யாரோ வாழ்த்து சொல்கிறார்கள். பெரு நிறுவனங்கள் கொட்டும் கோடிகளின் வியாபாரத்தில், சினிமா, அரசியல், வி.ஐ.பி—க்களின் பார்ட்டிகளில் பளபளக்கிறது அந்த இரவு. எங்கெங்கும் பட்டாசு வெடித்து, பைக்கில் பறந்து, பலூன்கள் கட்டி... நாளையே மானுடம் மாறப்போவதாக இருக்கிறது இந்த இரவு!

ஆனால், சைதாப்பேட்டை ஏ.ஜி.எஸ். சர்ச்சுக்கு, ஒவ்வொரு புத்தாண்டு இரவிலும் ஏராளமான பிரார்த்தனைகளுடன் பெருங்களத்தூரில் இருந்து வரும் ஏழைத் தம்பதிக்கு பிரியாணிப் பொட்டலம், ஒரு சோப்புக்கட்டி, பவுடர், எண்ணெய் டின் தவறாமல் கிடைத்துவிடுகிறது. ஸ்டான்லி மருத்துவமனையில் உடல் சிதைந்துகிடக்கும் ஏழைத் தகப்பனுக்கு ஆசீர்வாதமும் ஒரு புதுச் சட்டையும் கிடைத்துவிடுகிறது.

விடியலில் தெருமுனைக் குப்பைத் தொட்டியில் காலி மது பாட்டில்கள் பொறுக்க வரும் தலை கலைந்த சிறுமிதான் தொடங்கிவைப்பாளா இந்தப் புத்தாண்டையும்?

22

# மண்ணு வேற... மனுஷங்க வேற!

''**ஊ**ர்ல வூடெல்லாம் ஈரங்காத்துப்போச்சு மாப்ள... பத்தூரு வாய்க்கா ஒடைச்சிக்கிட்டு கீழப்பங்கு வரைக்கும் தண்ணி அட கட்டிருச்சி!'' நேற்று ஊரில் இருந்து வந்திருந்த சின்ன மாமா பேசிக்கொண்டு இருந்தபோது, வெகு இயல்பாக வந்து விழுந்த 'ஈரங்காத்துப்போச்சு' என்ற வார்த்தை, ஒரு மழைத் துளியாகி 'சொட்'டென முகத்தில் விழுந்து தெறித்தது.

குழம்புக் கையைத் தட்டில் வழித்தபடி, ''ஏந்த... என்னாந்த நீயி இப்பிடி விட்டடிக்கிற...'' என அவர் அண்ணியைப் பார்த்துச் சொன்னபோது, 'சொடசொட'வென'என்னாந்த'வும் 'விட்டடிக்கிற'வுமாகத் தூத்தல் போட ஆரம்பித்தது.

போர்வையை உதறிப் போட்டபடி, ''நாளைக்கு செல்வம் பயல போய்ப் பாத்துரணும்... நெனப்புக் காட்டு மாப்ள...'' என அவர் படுத்துவிட்டார். அந்த 'நெனப்புக் காட்டு', தூத்தலைப் பெருமழையாக்கி நினைவு முச்சூடும் வண்டலைக் கரைக்கிறது!

ஒரே ஒரு வார்த்தை... எங்கோ கிடக்கும் ஊரையும் நிலத்தையும் வீட்டையும் இந்தப் பெருநகர இரவுக்குள் இழுத்து வந்துவிட்டதை நினைத்தால் ஆச்சர்யமாக இருக்கிறது. உழவடிக்கும் டிராக்டரின் பின்னால் புழுப் பூச்சியைத் தேடிப் பறக்கும் குருவிகள்போல மாமாவின் வார்த்தைகளுக்குப் பின்னால் பறக்கிறது மனம்.

எப்போதும் இப்படித்தான்... போனில் பேசிக்கொண்டு இருக்கும்போதே, ‘‘அவனுவோ வறண்டிப் பயலுவோண்ணே...’’ என பாரதிதம்பி நடுவில் போடும் ஒரு வார்த்தை, பச்சையும் மஞ்சளுமாகக் கதிரை உருவி உள்ளங்கையில் கசக்கிய மாதிரி பொசுக்கென்று வாசம் அடிக்கிறது.



‘‘அப்பிடி இல்ல மக்களே...’’ என அருள் எழிலன் ஆரம்பிக்கும் போதே நாகர்கோவில் புத்தன்துறை சர்ச்சில் இருந்து மணி அடிக்கிறது. சத்யம் தியேட்டர் டிக்கெட் கவுன்ட்டரில் நின்றுகொண்டு, ‘‘செவுட்டு மூதியா இருக்காம்ணே...’’ என கார்ட்டூனிஸ்ட் பாலா சொல்லும்போது, லாலா கடை முக்கில் ‘சொர்ர்ர்’ரென்று எண்ணெய் பொரிய... கரண்டி நிறைய சேவு எடுக்கும் அண்ணாச்சி முகம் வந்துபோகிறது.

கூட்டம் கும்மும் கோயம்பேடு மார்க்கெட்டில், ‘‘அலோ... சீனியெரக்கா அரக்கிலோ போடுங்க...’’ என ஒருவர் கேட்ட நொடியில், சட்டென்று நிமிர்ந்து, ‘‘சாருக்கு மதுரையா...’’ எனக் கேட்கும் கடைக்காரரின் முகத்தில் எவ்வளவு பிரகாசம்?

ஆட்டோவில் ஏறிய யாரோ ஒருவர், ‘‘இல்லைங் மாப்ள... நங்கதான் சொல்லுச்சு...’’ என மொபைலில் பேச, ‘‘கோயம்புத்தூருங்ளா... பக்கமுங்ளா? நமக்கு எலச்சிப்பாளையம்ங்க...’’ என ஆட்டோக்காரர் சந்தோஷம் வழிய வழிய சைடு கண்ணாடியில் சிரிக்கிறார். ஐ.ஐ.டி—யில் வேலை பார்க்கும் சாஸ்திரி நகர் நண்பன், ‘‘டிட் யு செண்ட் தி

ரிப்போர்ட் மை டிபார்ட்மென்ட்?'' என புரொஃபசர் ஒவ்வொரு முறை கேட்கும்போதும் ''ரூமாண்ட அனுப்பிட்டேன் சார்...'' எனச் சொல்லிவிட்டு நாக்கைக் கடித்துக்கொள்கிறான்.

''சொம்மா பேசாத...'' எனச் சொல்லும்போதே 'சொம்மா'வின் சின்னச் சுழிவில், பண்ருட்டி பக்கம் ஒரு கிராமத்து வீட்டின் முற்றத்தில் காயும் பலாக்கொட்டைகள் மணக்கின்றன!

உலகம் முழுக்கப் பிழைப்புக்காகப் புலம் பெயர்ந்து அலையும் ஏராளமான ஜீவன்களிடம் மிச்சம் இருப்பவை வாழ்வின் மீதான தீராத நம்பிக்கையும், அந்த மண்ணின் சொற்களும்தான். ஏதோ ஒரு நாளில் தமது சொந்த மண்ணில் இருந்து வெளியேறும் அல்லது துரத்தப்படும் கணங்கள் செத்துப்போகிற வரைக்கும் மறக்குமா என்ன?

ஊரில் இருந்த நிலத்தை எல்லாம் விற்றுவிட்டு, மொத்தமாகக் காலி பண்ணிக்கொண்டு சென்னைக்குக் கிளம்பிய நாளில், மகமாயிக் கோயில் திண்டில் உட்கார்ந்து மணி தாத்தா மொசுமொசுவென அழுது 20 வருடங்கள் இருக்கும். பொருட்களை ஏற்றிக்கொண்டு டெம்போ வேன் கிளம்பி நிற்க, ''நா வரமாட்டேன்...'' என ஆத்தா வீட்டில் ஒளிந்துகொண்ட அத்தையை அடித்து இழுத்து ஏற்றிப் போனார்கள்.

காலையில், அதுவரை அறிந்தறியாத இடத்தில் திடுக்கிட்டு விழிக்கும் ஒரு பிள்ளையின் தவிப்பு அப்போது தெரியாது. இப்போது நினைத்துப் பார்த்தால் ஏதேதோ நினைவுக்கு வந்து மனசு கனக்கிறது.

தஞ்சாவூர் பக்கம் தாத்தா விற்றுவிட்டுப்போன அந்த நிலத்தில் இப்போது ப்ளாட் போட்டு, கலர் கலராகப் பெயின்ட் அடித்து, ரியல் எஸ்டேட் பலகைகள் நட்டிருக்கிறார்கள். அதைப் பார்க்கும்போது எல்லாம் பிணத்தின் மீது வைக்கப்பட்ட மலர் வளையம் மாதிரி இருக்கின்றன. அந்த மண்ணில் இருந்து இன்னும் ஆயிரமாயிரம் பேர் விவசாயத்தைக் கட்டி மாரடிக்க முடியாமல், நிலங்களை விட்டுவிட்டு, திருப்பூர் பனியன் கம்பெனிகளிலும் அரபு நாடுகளின் கொடும் வேலைகளிலும் உழல்கிறார்கள். யானை கட்டிப் போரடித்த,

சோறுடைத்த சோழ வளநாடு, இன்று ஒருவேளை சோற்றுக்கும் பணத்துக்கும் எங்கெங்கோ அலைகிறது.

‘‘மாப்ள... பொங்கலுக்கு ஊருக்குப் போறியா?’’ என மலேசியாவில் இருந்து ராஜி கேட்பதற்கும் ‘‘எங்க மச்சான்... போவ முடியுமானு தெரியலையே...’’ என சென்னையில் இருந்து நான் சொல்வதற்கும் நடுவில் விளையாடிக் களித்த ஒரு விவசாய பூமியின் வலி நிறைந்த நிகழ்காலமும் எதிர்காலமும் ஒளிந்திருக்கிறது.

பண்டிகைக்கு முதல் நாள் போன் பண்ணி, ‘‘யாருல்லாம் வந்திருக்கா? ஆத்துல தண்ணி ஓடுதா?’’ எனக் கேட்பவர்களின் பட்டியல் நீண்டுகொண்டே போவதை நினைத்தால் வருத்தம் கனக்கிறது!

**கொ** ஞ்ச காலம் இருந்த வீட்டைக்கூட நம்மால் மறக்க முடிவதில்லை. முன்பு வடபழனியில் நான் தங்கியிருந்த வீட்டுப் பக்கம் போனபோது பார்த்தால், அங்கு அந்த வீடே இல்லை. வீட்டை இடித்துவிட்டு சின்னதாக ஒரு காம்ப்ளெக்ஸ் வந்திருக்கிறது.

வீடு இருந்த இடத்தில் மொபைல் சர்வீஸ் கடை வந்திருக்கிறது. அதைப் பார்த்த நொடி, சட்டென்று எதையோ இழந்ததைப்போல இருந்தது. அந்த வீட்டில் இருந்தபோது மொட்டைமாடியில் நாகஸ்வர வித்வான் குடும்பம் ஒன்று தங்கியிருந்தது. தெலுங்கு நடிகர் பிரம்மானந்தம் இன்னும் குண்டடித்து சிவப்பாக இருந்தால் எப்படி இருப்பாரோ அப்படி இருப்பார் அந்த வித்வான்.

காலையில் அஞ்சாறு மணிக்கெல்லாம் குளித்து முடித்து, மாடியில் உட்கார்ந்து நாகஸ்வரம் வாசிக்க ஆரம்பித்துவிடுவார். அரை மணி நேரத்துக்குக் காது அடைக்கும். எங்கள் ரூமில் அவனவனும் அவர் மீது பெருவெறியில் திரிந்தோம். ‘இவர் டார்ச்சர் தாங்கலைங்க...’ என அவர் மகனே எங்கள் அறையில் வந்து பதுங்கிக்கொள்வான்.

ஒரு நாள் கேஸ் ஸ்டவ் வெடித்து அவர் மனைவிக்குப் பலத்த காயமாகிவிட்டது. ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டு ஓடியபோது

அவருடன் நான் மட்டும்தான் இருந்தேன். ஒரு வாரம் ஆஸ்பத்திரியிலேயே அவர் கிடந்தபோது அவ்வப்போது நான் போய் ஒத்தாசைக்கு இருந்தேன். அப்போதுதான் அவரைப் பற்றிய விவரங்களே தெரியும்.

''அட... நீங்களும் நம்மூரா தம்பி'' என்பதில்தான் நெருக்கமானார். அவருக்கு கும்பகோணம் பக்கம் ஒரு கிராமம். அங்கே பிரபலமான நாகஸ்வர வித்வான். அவருக்கு அஞ்சு பெண் பிள்ளைகள். இரண்டு பையன்கள். ஏகப்பட்ட பணப் பிரச்னையில் ஊரைச் சுற்றிக் கடன் வாங்கி, திருப்பித் தர முடியாமல் இருக்கிற நில புலன்களை எல்லாம் விற்றுவிட்டு, இங்கே ஓடிவந்துவிட்டார். திரும்ப ஊருக்கே போக முடியாத சூழல்.

''என்னமோ தம்பி... எப்பிடியோ பொண்டுகளக் கட்டிக் குடுத்துட்டேன். இங்க ஏதோ ஜீவனம் ஓடுது. திரும்ப ஊருக்குப் போகணும்னுதான் ஆச... சாவறதுக்குள்ள அது நடக்காதுபோல இருக்கே. தெனமும் கொஞ்ச நேரம் நாகஸ்வரம் வாசிச்சாதான் ஏதோ கும்போணம் போயிட்டு வந்த மாரி இருக்கும் எனக்கு'' என அவர் சொன்னபோது, எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. இப்போது அவர் எங்கு இருக்கிறார் எனத் தெரியவில்லை. அவரைச் சகித்துக்கொள்கிற கீழ்வீட்டுக்காரர்களோ, மேல்வீட்டுக்காரர்களோ இருப்பார்களா என்றும் தெரியவில்லை!

**'அ** ற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்' எனப் பாரி மகளிரின் சங்கப் பாடலிலேயே புலம் பெயர்வின் துயரம் வழிகிறது. இடப்பெயர்வுதான், மனித குலத்தின் ஆதி துயரம்; பேரனுபவம்; மகத்தான தரிசனம். இருளும் வலியும் விசித்திரமான புதிர்களும் நினைவுகளும் நிறைந்த புலம் பெயர்வை ஈழத் தமிழர்களைப் போல நம்மால் உணர முடியாது.

*'உயிர் சுமந்து அலைபவளை*
*ஊருக்குத் திரும்பவிடு*
*கருணை பசுமையிலா*
*பாழ்வெளியில்*

*குந்தவொரு மரமுமிலை*
*அந்தரத்து வானத்தில்*
*நெடுங்காலம் சஞ்சரிக்கவியலாது*
*பெருமித வெளிச்சம் அணைந்த விழிகளும்*
*துரோகிக்கப்பட்ட இதயமும்*
*தீர்ந்துபோன சொற்களுமாய்*
*வாழ்வென்ற பெயரில்*
*எப்படியோ நாட்களை நாம்*
*எரித்துவிட்டுச் சாகலாம்*
*உன் மூக்குத்திக் கல் பதிய*
*முத்தமிட்டு வாவெனச் சொல்*
*பளிங்கு மாளிகை முன்*
*தொட்டிச் செடியாயிருப்பதிலும்*
*எனது தாழ்வாரத்தினோரம்*
*சிறுபுல்லாய் சீவித்தல் சுகம் அம்மா*
*மரணக்கூடெனினும்*
*என் மண் இனிது தாயே*
*மறுக்காதே வருகின்றேன்!'*



என்ற தமிழ்நதியின் கவிதையில் தகிக்கும் காயம், நிரந்தரமாக நிலம் இழந்து, புலம் பெயர்ந்து திரியும் கோடானுகோடி அகதிகளின் வலி. போலியான அரசியலுக்கும் ஆறுதலுக்கும் அப்பாற்பட்டு எரியும் அந்தக் காயத்தைக் கண்டு பயந்து, முகம் திருப்பிக்கொள்கிறேன் நான்.

இனம், மொழி, தேசம் எல்லாம் உடைந்து சிதறிக்கிடக்கும் ஒரு தெருவில், புன்னகைத்துக்கொண்டு இருக்கும் அவர்களின் இந்தக் கவிதைக்கு எதிரே வெட்கிக் குனிகின்றன நமது துன்பங்கள். இதைப்போலவே ஒடுக்கப்பட்ட தமிழ் அகதி ஒருவரின் மன அவஸ்தைகளை, அலைதல்களைச் சின்ன எள்ளலுடன் பேசும் ஷோபா சக்தியின் கதைகளில் எரிந்துகொண்டு இருக்கின்றன நாம் அறிய முடியாத காயங்கள்.

‘கொரில்லா’ நாவலில் வரும் அந்த அந்தோணிதாசனின் அலைதல்கள் பயங்கரமான அனுபவம். அ.முத்துலிங்கத்தின் கதைகள் எனக்குப் புலம்பெயர்வின் சிலிர்க்கச் செய்யும் ஆச்சர்யங்களை அளித்துக்கொண்டே இருக்கின்றன. தாய் நிலத்தின் தீராத நினைவுகளைச் சதா மீட்டிக்கொண்டே, இளைப்பாற ஒரு நிழல் இன்றி, சிறகுகள் வலிக்க வலிக்கப் பறந்துகொண்டே இருக்கும் ஓர் ஏதிலிப் பறவையின் அபாரமான பாடல்கள் அவை.

எத்தனை தேசங்கள்... எத்தனை மனிதர்கள்... எத்தனை கதைகள்... புலம்பெயர்வின் பாதை எங்கும் முத்துலிங்கம் திறந்து காட்டிக்கொண்டே போகும் மனித உணர்ச்சிகள் நாம் கண்டு உணராதவை. அவரது ‘அங்கே இப்ப என்ன நேரம்’ என்ற சிறுகதையைப் படித்திருக்கிறீர்களா?

இவர் சூடானில் இருந்தபோது அங்கே இவருக்கு அலி என்ற நண்பர் இருப்பார். அலிக்குப் பல நாடுகளில் சுற்றிக்கொண்டு இருக்கிற வேலை. அதனால் நியூயார்க், டோக்கியோ என ஏதாவது ஓர் ஊரில் இருந்து இவர் வீட்டுக்குப் போன் பண்ணி ‘அங்கே இப்ப என்ன நேரம்?’ என்றுதான் பேச்சை ஆரம்பிப்பார். பெரும்பாலும் அது நள்ளிரவாக இருப்பதால் இவர் டென்ஷனாவார். ஒரு முறை அவர் போன் செய்து தனக்கு ஜப்பானுக்கு மாற்றலாகி விட்டதால் அங்கேயே போகப்போகிறோம் என்பார்.

வீட்டைக் காலி பண்ணிக்கொண்டு போகும்போது அலியின் மகள் நுஸ்ரத், முத்துலிங்கத்தின் வீட்டில் இருந்து ஒரு முக்கியமான சரித்திரப் புத்தகத்தை எடுத்துப் போய்விடுவாள். இது சில நாட்கள் கழித்துத்தான் இவர்களுக்குத் தெரியும். ‘புத்தகத்தைத் திருடிப் போய்விட்டாள். திரும்ப போன் பண்ணும்போது அதைக் கேட்க வேண்டும்’ எனக் கோபமாக இருப்பார்கள்.

ஆறு மாதங்களுக்குப் பிறகு அலி போன் பண்ணும்போது ‘அங்கே இப்ப என்ன நேரம்’ என ஆரம்பிக்கமாட்டார். குரல் தடுமாற அவர் பேசும்போதே ‘புத்தகத்தைக் கேளுங்க’ என இங்கே மனைவி சைகை செய்வார். அதற்குள் அலி அழுதபடி நுஸ்ரத் மூளையில் ரத்த நாளம் வெடித்துச் செத்துப்போன தகவலைச் சொல்வார். இதன் பிறகு அந்தக் கதையின் இறுதி வரிகளை முத்துலிங்கம் இப்படி முடிக்கிறார்... ‘திருட்டுப்போன அதே அளவுக்கு வேறு ஒரு புத்தகத்தை என் மனைவியால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனபடியால், என்னுடைய புத்தக செல்ஃபில் செவ்வக வடிவான ஓட்டையொன்று, நாங்கள் சூடானை விடும் வரைக்கும் அப்படியே நிரப்பப்படாமல் இருந்தது,

உதிர்ந்துபோன கிழவரின் முன்பல்லைப் போல, எப்பவும் ஞாபகப்படுத்தியபடி!' அட... எவ்வளவு உண்மை!

தொலைத்துவிட்டு வந்திருக்கும் நிலங்களும் வீடுகளும் மனிதர்களுமாக நம் ஒவ்வொருவரிடமும் இருக்கின்றன நிரப்பப்படாத ஒரு புத்தக செல்ஃப்... உதிர்ந்துபோன ஒரு கிழவனின் பல்!

**சி**ன்ன மாமா ஊருக்குக் கிளம்பும்போது வழியனுப்ப இன்னொரு ஊர் நண்பன் வந்திருந்தான். கோயம்பேட்டில் எங்கெங்கும் ஏதேதோ ஊர்களுக்குப் போகும் பஸ்களின் அலறல்களுக்கு மத்தியில் கொட்டுகிற மழையில் பிஸ்லெரி வாங்கிக்கொண்டு பஸ் ஏறியிருந்தார் மாமா. ஜன்னலில் இருந்து நண்பனிடம் பேசிக்கொண்டு இருந்தார் மாமா...

''என்னய்யா... நீ ஊர்ப் பக்கம்லாம் வர்றது இல்லையா?''

''இல்லைங்க... நமக்கு அங்க என்ன இருக்கு?''

''என்னப்பா இப்பிடிச் சொல்லிப்புட்ட...''

''ஆமாங்க... இங்க எவனைப் பாத்தாலும் சாதி கேக்கமாட்டான். சேரி கெடையாது. ஊர விட்டு வந்ததே சந்தோஷங்க... மண்ணு வேற... மனுஷங்க வேறங்க.''

மாமா திடுக்கிடும்போதே பஸ் கிளம்பிவிட்டது. தெப்பலாக நனைந்து வீடு வந்த பிறகும் விடிய விடிய அடித்ததுஎல்லோருக்குமான மழை!

# 23

# மறந்துகொண்டே இருப்பதுதான் மக்களின் இயல்பு!

**ச** ம்பவம்—1

நேற்று ஓர் அலைபேசி அழைப்பு, 'எழுத்தாளர் இருக்காப்லயா...' என்றது!

''சொல்லுங்க சார்...''

''சார்லாம் ஒண்ணும் வேணாம்... சுத்திச் சுத்திப் பாத்தா, நான் ஒனக்கு மாமன் மொறதான். மாமான்னே கூப்பிடு'' எனச் செல்லமாக அதட்டிய எதிர்முனைக்கு ''சரிங்க...'' என்றேன். அதன்பிறகு நடந்த உரையாடல் இது...

''நமக்கு மன்னார்குடிதான் மாப்ள... நீ நம்ம ஊரப் பத்தில்லாம் விகடன்ல எழுதினதைப் படிச்சுட்டு கண்ணுல தண்ணி வந்துருச்சு... உணர்ச்சிகளப் பொத்துவுட்டுட்டியே மாப்ள... அதான் ஒடனே ஒன் நம்பரப் புடிச்சுப் பேசுறேன்...''

''ரொம்பத் தேங்ஸுங்க...''

''அப்புறம்... ஒரு டீட்டெயிலு வேணும் மாப்ள. இந்தம்மா, சின்னம்மா குடும்பத்த மொத்தமா வெரட்டிவுட்ருச்சே... அது என்னா மேட்ரு? இங்க

வேற மாரிப் பேசிக்கிறானுவோ... அம்மாவும் சின்னம்மாவும் தெனமும் சேட்டிலைட் போன்ல பேசிக்கிறாகளாம்ல. எல்லாமே சும்மா டிராமா. சீக்கிரமே ஒண்ணு சேர்ந்துருவாக. ஒண்ணும் பிரச்னை கெடையாதுங்கறானுவோ... நீ மீடியா தொடர்புல இருக்கியே, ஒனக்கு டீட்டெயில் தெரிஞ்சிருக்குமேனுதான் கேக்குறேன்...''

''ஏன்... உங்களுக்கு அதுல என்ன பிரச்னை? நீங்க கட்சிக்காரரா..?''

''கட்சிய விடு மாப்ள... இங்க சுத்துப்பட்டுல ஆத்துல மணல் அள்றது பாதி நாமதான் பண்ணிட்டு இருக்கோம். எல்லாம் நமக்கு வேண்டப்பட்ட தொடர்புல வந்ததுதான். இப்பவரைக்கும் பிரச்னை இல்ல. இந்த அரசியல் கரைச்சல்ல நாளப்பின்ன நம்மளப் புடிச்சு சந்தியில இழுத்துவுட்ருவானுவளோனு பயமா இருக்கு மாப்ள. இதுலதான நமக்குத் தொழில் ஓடுது...'' என அவர் கேஷுவலாகச் சொன்னபோது எனக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''ஏங்க... ஊரப் பத்திப் படிச்சுட்டு அழறீங்க. அப்புறம் எப்பிடிங்க இப்பிடி ஆத்துல மணல் அள்றீங்க?'' என்றால், சிரித்தார்.

''அதுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம் மாப்ள... நீங்க இந்த சின்னம்மா மேட்ர கொஞ்சம் டீட்டெயிலா விசாரிச்சுட்டு ஒரு போன் அடிங்களேன். இல்ல, ரவைக்கு நானே பேசுறேன்...''

திரும்பவும் அவர் ராத்திரி போன் பண்ணும்போது சொன்னேன்...

''விசாரிச்சேங்க... உங்க பேர் வரைக்கும் இன்டெலிஜென்ஸ் ஹிட் லிஸ்ட்ல இருக்காம். ஸ்பெஷல் ஸ்குவாட் போட்டாச்சாம். பார்த்து இருந்துக்கங்க... லாடம் கட்டிருவாங்க!''

சம்பவம்—2

டிரஸ்ட்புரத்தில் வழக்கமாகப் போகிற குஞ்சாகோபன் டீக்கடை கொஞ்ச நாட்களாகப் பூட்டிக்கிடந்தது.

அந்த நாயர் அப்படியே மலையாள ஹீரோ குஞ்சாகோபன் மினியேச்சர் என்பதால், கடைக்கு இந்தப் பெயர். முல்லைப் பெரியாறு பிரச்னையின் பீக் ஹவர்ஸில், யாரோ ஒரு பையன் நாயரிடம் கோல்டு ஃபில்டர் கேட்டிருக்கிறான். இவர் காதில் வாங்காமல் வேறு வேலை பார்க்க, பையன் எகிறியிருக்கிறான். இவரும் எகிற, பதிலுக்குப் பையன் கேட்டது ரத்தினச் சுருக்கமான ரத்தச் சரித்திர வசனம்... ''யோவ்... நீ மலையாளிதானே?''

உடனடியாக கோல்டு ஃபில்டரைக் குனிந்து எடுத்துக் கொடுத்த குஞ்சாகோபன், அன்றைக்குச் சாயங்காலமே கடையைப் பூட்டிவிட்டு எஸ்கேப்.

போன வாரம் பார்த்தால், நாயர் ரிட்டர்ன். பகவதி அம்மன் போட்டோவுக்கு புதுச் சந்தனம் தெளித்து, எஃப்.எம்—மில் 'தமிழ்நாட்டுக் காப்புதான், தரணியெல்லாம் டாப்புதான்...' அலற, டீ ஆத்திக்கொண்டு இருந்தார்.

''என்ன குஞ்சாகோபன் எப்போ வந்தீங்க?''

''நேத்துதான் வந்துச்சு. சோத்துக்கு ஜீவனம் நடக்கணுமில்லே பிரதர்...''

''உங்க ஊர்ல என்ன பேசிக்கிறாங்க?''

''எல்லாம் பொலிட்டீஷியன்ஸ் ப்ளே பண்றதுதான் பிரதர்... எங்களுக்கு கரன்ட், ஃபுட் எல்லாம் நீங்க தர்றதுதானே... பின்னே... மியூச்சுவல் அண்டர்ஸ்டாண்டிங் வந்துதானே ஆகணும்.''

''சரி... பயந்துக்கிட்டுதானே போனீங்க. இப்போ வந்து கடையத் தொறந்துட்டீங்க?''

''அதான் முல்லைப் பெரியாறு பிரச்னை முடிஞ்சுதே...''

''பிரச்னை முடிஞ்சுருச்சா? எப்ப... யார் சொன்னது?''

‘‘என்ன பிரதர் நீங்க... மம்முட்டியன்டே புது மலையாளப் பட போஸ்டர்ஸ் ரோடு எங்கிலும் ஒட்டியிருக்கு பாக்கலியா நீங்க... பிரச்னை முடிஞ்சதுக்கான அடையாளம்தானே அது. இப்போ நம்ம தமிழ் மக்களுக்கான பிரச்னை சசிகலாவை வாக்அவுட் பண்ணதுதானே’’ — கேஷுவலாகச் சொன்னபடி டீ நீட்டிய நாயருக்குப் பொங்கல் வாழ்த்துக்கள் சொல்லிவிட்டு வந்தேன்!

சம்பவம் — 3

உலக சினிமா டி.வி.டி. ஒன்றை லவட்டிக்கொண்டுபோன நண்பரைக் கண்டிப்பதற்காக அலைபேசியில் அழைத்தேன். அவர் போனை எடுத்து ஹஸ்கி வாய்ஸில், ‘‘உண்ணாவிரதத்துல இருக்கேன் பாஸ்... கூப்பிடுறேன்’’ என்றார். எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. ‘இந்த ஆளு உண்ணாவிரதத்துல எல்லாம் போய் சிக்குற ஆள் இல்லையே...’ என மண்டை குடைந்தது.

கொஞ்ச நேரத்தில் அவரே ரூமுக்கு வந்தார், ‘‘அண்ணா ஹஜாரே உண்ணாவிரதம் பாஸ்... ராகவேந்திரா மண்டபத்துல இருந்தேன். சொல்லுங்க...’’ என்றார். பக்கத்தில் இருந்த இன்னொரு நண்பனுக்குச் சட்டென்று கோபம் வந்தது, ‘‘யோவ்... மூணு பேர் தூக்குக்கு எதிரா எத்தனை போராட்டம் நடந்துச்சு. எதுலயாவது கலந்துக்கிட்டியா நீ..? கூப்பிட்டப்ப எல்லாம் வேலை இருக்குனு ஓடிட்ட... இப்போ அண்ணா உண்ணாவிரதத்துல போய் உக்காந்திருக்க..?’’ என்றதும் பெரிதாகச் சிரித்தார்.

‘‘பாஸ்... நாங்கல்லாம் தேசியவாதி. தமிழ்... தமிழுன்னு எதுக்கு உங்களைச் சுருக்குறீங்க? பி இந்தியன் பாஸ். ரஜினி, மூணு பேர் தூக்கை எதிர்த்து நடந்த உண்ணாவிரதத்துக்கு இடம் கொடுத்தாரா? அண்ணாஜி உண்ணாவிரதத்துக்குக் கொடுத்துருக்கார்ல... அதான் தேசியம். சரி... மூணு பேர் தூக்கை நிறுத்தச் சொல்லி போராட்டமா நடந்துச்சே... அதெல்லாம் இப்போ என்னாச்சு? பிரச்னை முடிஞ்சா போச்சு? அடுத்ததா, கூடங்கொளம்னு கௌம்புனீங்க... அந்தப் பிரச்னை

முடிஞ்சா போச்சு? அப்துல்கலாமே வந்து பிரச்னை இல்லைனு சொல்லிட்டார்ல.

பாஸ்... உங்களால எந்தப் பிரச்னையும் முடிச்சுர முடியாது பாஸ்... வேணும்னா, புதுசா ஒரு பிரச்னை வந்து பழசை மறக்கடிச்சுரும். ஆனா, அண்ணாஜி போராட்டத்தை யாராலயும் மறைக்க முடியாது. ஏன்னா, நாங்க தேசியவாதிகள். ஒண்ணு ஊழல் ஒழியுற வரைக்கும் தொடரும். இல்லைன்னா, அண்ணா அடுத்த ஜனாதிபதியாகிற வரைக்கும் தொடரும்'' என அவர் பேசப் பேச... எனக்குத் தலை கிறு கிறுத்தது.

''யோவ்... காதடைக்குதுய்யா நீ கௌம்பு.''

''பாஸ்... பாஸ்... இந்த மேட்டரைக் கேட்ருங்க. காலைல ஒரு ட்விட்டர் லைன் தோணுச்சு. இப்போ தட்டப்போறேன்... கேளுங்களேன்...''

''சொல்லித் தொல...''

'''வர வர விஷாலைப் பார்க்கும்போது எல்லாம் அருண் பாண்டியனின் ஞாபகம் வருவதைத் தவிர்க்க முடியவில்லை' — இது ஒண்ணு பாஸ்... அப்புறம் 'ஸ்ருதிஹாசனைப் பார்க்கும்போது மட்டும், கமல் ஓர் உலக நாயகன் என்பதை ஒப்புக்கொள்கிறது மனம்' — இது ஒண்ணு பாஸ்... எப்பிடி?''

''யோவ்... உண்ணாவிரதத்துல உக்கார்ந்துக்கிட்டு யோசிக்கிற விஷயமாய்யா இது. சரி, திருப்பி நீ உண்ணாவிரதத்துக்குப் போகலையா?''

''சச்சின் 70 ரன்னை க்ராஸ் பண்ணிட்டாருன்னாங்க... அதான் செஞ்சுரி மொமென்ட்டைப் பார்த்துட்டுப் போயிரலாம்னு வந்தேன்.''



‘‘போடா... போயி சச்சினுக்கு பாரத ரத்னா கொடுக்கணும்னு உன் தலைமையில நாளைக்கு உண்ணாவிரதம் உக்காரு போ!’’

சம்பவம் – 4

கடலூரில் இருந்து நண்பர் குணசேகரன் பேசியது, நிலைகுலைய வைத்துவிட்டது. குணசேகரன், அற்புதமான நண்பர்; விவசாயி; புத்தகப் பிரியர்; சமூக ஆர்வலர். ‘தானே’ புயலின் பேயாட்டத்தில் அவரது 20 ஏக்கர் முந்திரித் தோப்பு முற்றாக அழிந்துவிட்டது. தோப்புக்கு அருகில் இருந்த அவரது வீடும் இப்போது இல்லை. பெரும் போருக்குப் பிறகான மண்ணில் இருந்து கதறும் ஓர் உயிரின் கதறலாகவே இருந்தது அவரது குரல்.



‘‘அடிச்சுக்கெடக்கறதப் பார்த்தா, நாங்க எந்திரிக்கறதுக்கு பத்துப் பதினஞ்சி வருஷம் ஆகும்போல தம்பி. முந்திரி, பலாவெல்லாம் வெச்சு, வர்றது பத்து வருஷ உழைப்பு. எங்க வேர்வையையும் ரத்தத்தையும் போட்டு வளத்ததை எல்லாம் புயல் வந்து தின்னுட்டுப் போயிருச்சு. ஏற்கெனவே விவசாயிகள் வாழ்க்கை பெரும் போராட்டம். இதுல இந்தப் புயல் வந்து எங்க எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கிட்டுப் போயிருச்சு.

வுழுந்துகெடக்குற ஒவ்வொரு மரத்தைப் பார்க்கும்போதும் உசுரு நடுங்குது தம்பி... ஒரு மரம்கிறது நூறு மனுஷன் தம்பி. இங்க ஜனங்களுக்குக் குடிக்கத் தண்ணிகூட இல்ல... வெறுமனே நாங்களும் நிவாரணப் பணிகள் பண்றோம்னு இல்லாம முழுமூச்சா இந்த அரசாங்கம் இறங்கி ஏதாச்சும் பண்ணாத்தான் கொஞ்சமாவது மீள முடியும் தம்பி...’’ எனச் சொன்னபோது குழந்தை மாதிரி அழுதார்.

குணசேகரன் சொன்னதில் இரண்டு விஷயங்கள் மிக முக்கியமானதாக இருந்தது எனக்கு.

‘‘எல்லாத்தையும் வெளியில் இருந்து பார்த்துட்டு, கடந்துபோறது நம்மளோட இயல்பாயிருச்சு தம்பி. ஒரு பார்வையாளனாவே இருந்து செத்துப்போறவங்கதானே இங்கே பெரும் விழுக்காடு. ‘இதுவும் கடந்துபோகும்’னு தினம் தினம் சின்னக் குற்ற உணர்ச்சியோட நம்ம வேலையைப் பார்க்கறோம். யாருக்கு என்ன பிரச்னைன்னாலும் மந்தைங்க மாதிரி டி.வி—ல என்ன போட்டாலும் பார்க்கறோம்... அணு உலை பாதிப்பு நமக்கும் வரும்... புயல் அடிச்சு நாம இருக்கற இடமும் ஒரு நாள் இல்லாமப்போகும்... எவனோ ஒருத்தன் நம்ம குழந்தையோட எதிர்காலத்தையும் தப்பாக்குவான்னு புத்தியில ஒரு ஒறைப்பு வேணாமா?’’ என்றவர் அடுத்துச் சொன்னார்,

‘‘‘மறந்துகொண்டே இருப்பது மக்களின் இயல்பு; அதை நினைவுபடுத்துவதுதான் நமது கடமை’னு சொல்வாங்க. அரசியல்வாதிகளும் அறிவுஜீவிகளும் எவ்வளவு பேர் உருப்படியா எதை எதை நினைவுபடுத்துனான்? மக்களாலதான் மக்களை உண்மையா காப்பாத்த முடியும். இப்போ கூடங்குளம், முல்லைப் பெரியாறு பிரச்னை எல்லாம் இந்த அளவு நடக்கறதுக்குக் காரணமே, அந்தந்த மண்ணின் மக்களோட உண்மையான ஈடுபாட்டாலதானே...

இவ்வளவு நாள் இங்கே இப்படி நடந்தது இல்லையப்பா... இன்னும் நிறைய இப்படி நடக்கணும். புயலடிச்ச எங்க பூமியையும் இந்த மக்கள்தான் மீட்டெடுத்து வரணும். இந்த மக்கள்னா, புயல் பாதிச்ச மண்ணோட மக்களை மட்டும் சொல்லலை... உங்களை மாதிரி ஒவ்வொரு தமிழ் மக்களையும்தான் சொல்றேன். எல்லாரும் தான் நிக்கணும். கெடைக்கிற கைகளைப் பத்திக்கிட்டு எந்திரிச்சு, இந்த மக்கள்தான் தெடமா வரணும்... போராட்டத்துலேயும் நெருக்கடிகள்லயும் ஒவ்வொருத்தனும் அரசாங்கமா மாறிரணுமப்பா...’’

பேசி முடித்த அந்த இரவு, வழியும் பானைகளும் கரும்புமாக ஒரு பொங்கல் வாழ்த்துக் குறுந்தகவல் வந்திருந்தது... அதே குணசேகரனிடம் இருந்து!

24

# ஆழ்மன பாதிப்புகளின் படிமம், கனவு!

**ச**ம்பந்தமே இல்லாமல் குறிப்பிட்ட ஒரு சித்திரம் அடிக்கடி கனவுகளில் வருவது எல்லோருக்கும் நடக்கும் இல்லையா?

கொஞ்ச காலம் முன்பு நண்பர் லோகுவுக்கு இது பெரிய பிரச்னையாக இருந்தது. ‘‘ஏன்... எதுக்குன்னே தெரியல முருகா... ஒரு கை பொட்டேர்னு சுடுது. காந்தி ரத்தம் தெறிக்க ‘லோகூஊஊஊ’னு கத்திக்கிட்டே துள்ளி விழறாரு... எம் பொண்டாட்டி புள்ளைங்கள்லாம் கத்திக்கிட்டே ஓடி வருதுங்க... பின்னாடி துப்பாக்கியோட பெரிய கூட்டமே தொரத்திக்கிட்டு வருது... தடார்னு முழிச்சு எந்திரிச்சுருவேன். இப்பிடி ஒரு கனவு அடிக்கடி வருதுப்பா. கழுத... நாம கம்யூனிஸ்ட்டு... ஒரு ஜீவாவோ ஏ.கே.ஜி—யோ வந்தாலும் பரவாயில்ல. இந்த காந்தி எதுக்கு வர்றாப்ல?’’ எனப் புலம்புவார்.

அதன் பிறகு, ஒரு நாள் லேட்டாக வந்தவர், வாஷருக்கு எண்ணெய் போட்டபடியே சொன்னார், ‘‘காந்தி கனவுக்குக் காரணம் கண்டுபுடிச்சுட்டேன் தம்பி... இப்ப புதுசாப் போன வூட்ல மேல் தளத்துல குடியிருந்தவரு ஒரு சுதந்திரப் போராட்டத் தியாகி. காந்தி மதுரைக்கு வந்தப்ப, முன்னாடி போய் நின்னு துண்டுப் பிரசுரம் போட்ட ஆளுகள்ல ஒருத்தராம். காலைல தல டிக்கெட் வாங்கிருச்சு. இனிமே, காந்தி வர மாட்டாருனு நெனைக்கிறேன்.’’

**ந**ண்பர் முருகேஷுக்கு எப்போது பார்த்தாலும் டிஸ்கவரி சேனல் மாதிரி விதவிதமான பாம்புகள் கனவுகளில் வந்து அதிரவைத்துக்கொண்டே இருக்கின்றன. ‘‘பாம்புக் கனவுக்குப் பலன் என்னப்பா?’’ என அவர் பார்க்கிறவர்களிடம் எல்லாம் கேட்பார்.



சித்தார்த்தனுக்கு, ஆங்கிலப் படங்கள் மாதிரி பின்னணியில் கட்டடங்கள் சீட்டுக்கட்டுக்களாகச் சரிய, இவன் தப்பித்து ஓடிக்கொண்டே இருக்கிற ஒரு சேஸிங்.

பவானிக்கு, ஏதோ ஓர் உருவம் பெரிய கோட்டைச் சுவரில் இருந்து அவளைத் தூக்கி முதலைகள் வாய் பிளந்து நிற்கும் அகழியில் போடுவது மாதிரியான விஷுவல்.

பாஸ்கருக்கு அவன் உடல் கிடத்தப்பட்டு இருக்க, தெரிந்தவர்கள் அழுதுகொண்டு இருக்கிற சித்திரம். ஜெகத்துக்குப் பனிமலைப் பயணம். விஜிக்கு குதிரை ரேஸ். பகவதிக்கு மூச்சடைக்கும் ஆழ்கடல் நீச்சல்.

என் கனவுகளிலும் அடிக்கடி விசித்திரமான ஒரு காட்சி வருகிறது. இலை தழைகளை உடுத்திக்கொண்டு (ஆதாம் – ஏவாள்தான்) இருவர், ஏ.டி.எம். மெஷினில் பணம் எடுக்க முயற்சி செய்கிறார்கள். ஒரு கும்பலே அவர்களை நெருக்கி இழுத்து வெளியே தள்ளுகிறார்கள். அதோடு

அந்த விஷுவல் அறுந்து விடுகிறது. சம்பந்தமே இல்லாமல், தொடர்பறுந்த கண்ணியாக இப்படி ஒரு காட்சி அடிக்கடி வந்துபோகிறது!

கனவுகளை, 'ஆழ்மன பாதிப்புகளின் படிமங்கள்' என்கிறார் ஃப்ராய்ட். 'மௌனத்தின் ஆழ்கடலில் படிந்துகிடக்கும் நிராசையின் பாசி' என்கிறார் மௌனி. எனில், எனக்கு அடிக்கடி வரும் இந்த ஏ.டி.எம். மெஷின் கனவின் அர்த்தம் என்ன?

பணமும் பொருளும் அற்ற ஆதி வாழ்வின் வனக்குகையில் தொலைந்துவிடத் துடிக்கிறதா இந்த மனம்? பணத்தின் தேவைகளால் உயிரனைய சில உறவுகளை இழந்துவிடுவேனோ எனத் தவிக்கும் ஓர் ஏழை மனதின், பதற்றத்தின் படிமமா அது?

பணத்தை முன்வைத்து நடக்கும் சூதாட்டமாக வாழ்க்கையை மாற்றிக்கொண்ட நல்ல நண்பர்கள் தந்த அழுத்தமா? மருத்துவ மனையில் இருந்த கர்ப்பிணித் தங்கைக்குப் பழங்கள் வாங்கிப் போகவும் யோசிக்கும் நிதி நிலையில் இருந்த ஓர் அண்ணனின் நினைவில் எரியும் காயமா? மருத்துவமனைகளிலும்விசேஷங்களிலும் பணத்தின் திசை தேடி அலைந்துகொண்டே இருக்கும் நடுத்தரவர்க்கத்து உப்புச் சமுத்திரத்தின் ஒரு துளியா அது? கடன் கேட்கும் கணங்களின் மிகு துயர் கூச்சங்களை அடிக்கடி அனுபவிக்கும் ஆத்மாக்களின் குரலா? எதுவெனினும் இந்தக் கனவுக்கான எல்லா சாத்தியங்களும் தொடங்கும் வார்த்தை... பணம்!

**எ**ன் அண்ணன்களின் வாழ்க்கை ஒரு காசு, ரெண்டு காசில் தொடங்கியது. என் தலைமுறையின் பொருளியல் வாழ்வு தொடங்கியது ஐந்து பைசா, பத்து பைசாவில். வீட்டில் இருந்து 50 பைசா எடுத்து வருவது எவ்வளவு பெரிய சாதனையாக இருந்தது? தினமும் ஜாமெட்ரி பாக்ஸில் பதுக்கி ரெண்டு ரூபாய் எடுத்துவரும் சாதிக்தான் அப்போது எங்கள் வகுப்பின் வி.ஐ.பி.

வாத்தியார் வெளியில் போகும் ரீஸஸ் பீரியடில், வகுப்பறையின் நடுவே வந்து நின்று ஜாமெட்ரி பாக்ஸை ஸ்டைலாகத் திறந்தபடி, ''

'விஜயகாந்த்து வாழ்க' சொல்றவங்கள்லாம் இந்தப் பக்கம் வா... கலைவாணி வூட்டுக்கு ஐவ்வு மிட்டாய் வாங்கப்போறேன்... டுர்ர்ர்ர்ர்'' என்பான். உடனடியாகப் பாதி கிளாஸ், 'விஜயகாந்த் வாழ்க...' எனக் கத்திக்கொண்டே அவன் பின்னால் ஓடும். அவன் அப்போது விஜயகாந்த் வெறியன். ரெண்டு ரூபாயைக் காட்டிக் காட்டியே பாதி வகுப்பை விஜயகாந்த் ரசிகர்களாக மாற்றி வைத்திருந்தான்.

இப்போது சாதிக், சவுதியில் ஒரு ஷேக் வீட்டில் கார் ஓட்டுகிறான். சில மாதங்களுக்கு முன்பு ஊருக்குப் போனபோது சாதிக் வந்திருந்தான். காலையில் இருந்தே குடிப்பவனாக மாறி இருந்தான். அதனாலேயே அவன் வீட்டில் எப்போதும் பிரச்னையாகக்கிடந்தது. வீட்டுக்குத் தெரியாமல் காலையிலேயே போய் எங்காவது குடித்துவிட்டு வந்து கரைச்சல் பண்ண ஆரம்பிப்பான்.

ஒரு நாள் மிக அதிகமாகக் குடித்துவிட்டு, சந்திக்கரையில் கிடந்தவனை எல்லோரும் போய்த் தூக்கி வந்தோம். நல்ல போதையில் அவன் திமிறிக்கொண்டு எழுந்து நின்று, ''டேய்... விடுங்கடா. நான் சம்பாதிக்கிறேன்... காசனுப்புறேன். இதுங்க யாருக்கும் என்னைக் கேக்க அதிகாரம் கெடையாது... கல்யாணம் ஆயி நாலு நாள்ல பிளைட்டு ஏத்தி வுட்டவுனுவோதான இவுனுவோ... இங்க பாரு... இங்க பாரு...'' என்றபடி கைலியைத் தூக்கி சாதிக் காண்பித்தபோது அதிர்ந்து போனேன்.

அவன் தொடையில் ரெண்டு உள்ளங்கை சைஸுக்கு முற்றாக ஆறாத தழும்பு இன்னும் ரணமாகக் கிடந்தது. ''ரோத்தாடி தெரியுமா... ரோத்தாடி. ஆறு மாசம் தூங்க முடியாது. சும்மானு நெனைச்சியா இந்த சாதிக்க...'' எனக் கத்திக்கொண்டே அவன் தள்ளாடி நடந்த காட்சியை மறக்கவேமாட்டேன்.

**எ** னது இன்னொரு பால்ய நண்பன் சாகுல், வீட்டோடு மாப்பிள்ளையாகக் கொழும்பில் இருந்து 200 கி.மீ. தள்ளி இருக்கிற ஒரு சிங்களக் கிராமத்தின் சைக்கிள் கடை ஒன்றில் பஞ்சர் ஒட்டுகிறான். இன்னொருவன் குரோம்பேட்டை லெதர் கம்பெனியில் மூச்சடைக்க

மூச்சடைக்க கெமிக்கல் அடிக்கிறான். ஆசை ஆசையாக மேரியைக் காதலித்து, பணம் இல்லாததால் தோற்றுப்போன சேகர், நைஜீரியாவில் மெக்கானிக் ஆகி மோட்டார் பிரிக்கிறான். நான் பர்ஸில் ஒரு டெபிட் கார்டும், கிரெடிட் கார்டும் வைத்துக்கொண்டு, ''என்னது... டீ ஆறு ரூபாயா! எப்போலேர்ந்துங்க?'' என அண்ணா சாலையில் ஒரு டீக்கடை முன்பு அதிர்ச்சியாகி நிற்கிறேன். 50 காசே போதுமானதாக இருந்த காலம், ஆறு ரூபாய் தேநீரில் நுரைக்கிறது மீள முடியாத நினைவுகளாக.

**ஒ** ரு நண்பர், வட்டிக்கு வளைத்து வளைத்துப் பணம் வாங்கிக்கொண்டு, 12 சிம் கார்டுகளுடன் கிட்டத்தட்ட அபோதாபாத் வீட்டில் பதுங்கியிருந்த பின்லேடன் மாதிரி வாழ்கிறார். ''என்னோட வாழ்நாள் சாதனை என்ன தெரியுமா? நான் இன்னும் தற்கொலை பண்ணிக்காம இருக்கறதுதான்...'' என அவர் ஒரு முறை சொன்னபோது, நிம்மதி இல்லாத அவருடைய அன்றாடங்களின் வலி, முகத்தில் அறைந்தது!

காலக் கொடுமையில், ஆறேழு வருடங்களுக்கு முன்பு நானும் தவணையில் ஒரு கணினி வாங்கினேன். 30 மாதங்கள் கட்ட வேண்டிய தவணையில் பாதியைக் கட்டாமல் அப்படியே மறந்துவிட்டேன். (அதெப்படி மறக்கும்... பணக்கஷ்டம்தான் பாஸ்.) இந்த மாதிரியான குற்றங்கள் கிரிமினலா... சிவிலா? என்றுகூட அறியாத பாலகன் நான்.

சில பல மாதங்கள் கழித்து திடுதிப் என்று ஹைகோர்ட்டில் விசாரணைக்கு ஆஜராகச் சொல்லி ஒரு கடிதம் வரவே வெலவெலத்தது. இந்த விவகாரங்களில் தளபதியான நண்பர் ஒருவரிடம் ஆலோசித்தேன். அவர் ஆறு சிம் பார்ட்டி. ஆகவே, ஐடியாக்களைப் பொழிந்தார்.

''அவங்க வரச்சொன்ன அன்னிக்குப் போயிரு... இருக்கறதுலயே டஞ்சனா ஒரு சட்டைபேன்ட்டை மாட்டிக்கிட்டுப் போ. அவங்க என்ன சொன்னாலும் 'அய்யா... நான் ரொம்ப ஏழைங்க. சாப்பாட்டுக்கே

கஷ்டங்க. என்னால அவ்வளவு கட்ட முடியாதுங்க'னு கதறு. கஷ்டப்படற மாதிரியே நடி.''

''நடிக்கிறது என்ன பாஸ்... அப்பிடித்தானே இருக்கு பொழப்பு. நீங்க மேல சொல்லுங்க...''

''அப்பிடி இப்பிடிப் பாதி அமௌன்ட்டுக்கு வருவாங்க. ஒரு டைம் வாங்கிட்டு வந்து கட்டிரு. நீ கொஞ்சம் டீசன்ட்டுங்கிறதால இப்பிடிச் சொல்றேன். நம்மள மாதிரி ஆட்டத்துக்கு ரெடின்னா சொல்லு... சிம்மை உருவி வீசிட்டு, வீட்டை மாத்திட்டுப் போயிட்டே இருக்கலாம்.''

''இல்ல... நான் அவங்களையே டீல் பண்ணிக்கிறேன்...''

குறிப்பிட்ட நாளில் கோர்ட்டுக்குப் போனேன். நாலைந்து நீதிபதிகள் உட்கார்ந்து இருக்க, அந்த ஹால் முழுக்கக் கூட்டம் கும்மியது. டோக்கன் போட்டு வரிசைப்படி பார்ப்பதற்குள் மூச்சு முட்டியது. அங்கே இருந்த கூட்டத்தைப் பார்க்கும்போது... நமது தேசத்தின் கடன், ஸ்பெக்ட்ரம் ஊழல் தொகை, கலைஞர் — சசிகலா குடும்பங்களின் சொத்து மதிப்பு, அஜீத் — விஜய் — சூர்யா சம்பளங்கள், பெப்ஸி — கோக் வியாபாரம், மல்லையா மகன் முகம் எல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. ஆனாலும், நான் எளியன் இல்லையா?

''அய்யா... நான் ரொம்ப ஏழைங்க... இவ்வளவு பணம் கட்ட முடியாதுங்க'' என ஒரு நீதிபதியின் கையைப் பிடிக்கத் தவ்வினேன்.

அவர் சிறு சலனமும் இல்லாமல், ''எஸ்.பி. லோன் கேஸா? முதல்ல கைல இருக்கிற பணத்தைக் கட்டிட்டு, அப்பிடி ஓரமா உக்காரு'' என்றார்.

''அய்யா... முப்பத்தஞ்சு ரூபா இருக்குங்கய்யா...'' என நான் அப்பாவியாக பாக்கெட்டைத் தடவ, அவர் பயங்கர டென்ஷன் ஆனார். ''நீ அப்பிடி உக்காரு... பேங்க்காரங்க பேசுவாங்க... உன் மூஞ்சே சரியில்லையே...'' என உட்கார வைத்தார்.

உண்மையைச் சொல்லப்போனால், அங்கே அன்று இருந்த முகங்களில் நான் கொஞ்சம் அபவ் ஆவரேஜ். அந்த அளவுக்குப் புலம்பல்களாலும் கதறல்களாலும் நிறைந்து கிடந்தது ஹால்.

அப்போது என் பக்கத்தில் தனது மனைவியுடன் கைலியில் சல்பேட்டா மணக்க உட்கார்ந்து இருந்த ஒருவர், ‘‘கோடிக்கணக்குல கொள்ளை அடிக்கிறவன்லாம் கொட்டடிச்சுட்டு சுத்துறான்... மாட்னாலும் ஜெயில்ல ஏ.சி. போட்டுக்கறான். நமக்கு என்னடி... இப்பப் பாரு... நீ பாட்டுக்குப் பின்னாடியே வா...’’ என எழுந்தார்.

திடுதிப்பென மனைவியை இழுத்துக்கொண்டு எதிரே இருந்த நீதிபதியின் முன்னால் தடாலென விழுந்தார். ‘‘அய்யா... நீங்க இப்ப மனசு வைக்கலைன்னா, நாங்க ரெண்டு பேரும் வெளிய போய் வெஷம் வாங்கிக் குடிச்சுட்டு, இங்கயே ஓடிவந்து வுழுந்து செத்துருவோம்யா...’’ எனக் கைலி கதற, அந்த நீதிபதி அலட்சியமாகப் பக்கத்தில் இருந்த வங்கி அதிகாரியிடம் திரும்பி அடித்ததுதான் செம பஞ்ச்... ‘‘கேட்டீங்கள்ல... நீங்கதானே கடன் குடுத்தீங்க. அப்பிடியே அந்த விஷத்தையும் வாங்கிக் குடுத்துருங்க... பாவம், ரொம்பக் கஷ்டப்பட்றாங்க...’’ எப்படியோ உருட்டிப் புரட்டி அந்த லோனை அடைத்தேன்!


**சா** தாரணமாகவே வங்கிகளில் இருந்தும் கால் சென்டர்களில் இருந்தும் ‘சார்... உங்க மன்த்லி சேலரி சொல்ல முடியுமா?’ என்கிற பெண் குரல்கள் எரிச்சலூட்டும். மேற்சொன்ன சம்பவத்துக்குப் பிறகு தீவிரவாதம் ஏறியிருந்தது. அப்படி ஒரு கணத்தில், பேசிய பெண் குரலிடம் கண்டபடி திட்டிவிட்டேன். சட்டென்று எதிர்முனை அழுதபோது சுருக் என்றது.

‘‘அய்யோ ஸாரிம்மா... ஸாரிம்மா...’’ எனத் தேற்றிய பிறகு கேட்டேன், ‘‘ஏம்மா... இப்பிடி நிறையப் பேர் ஏதேதோ பேசுவாங்களே... உங்களுக்குக் கஷ்டமா இருக்காதா?’’அதற்கு அந்தப் பெண் சொன்னாள், ‘‘என்ன பண்றது சார். அவங்கவங்க மூடுக்கு ஏதேதோ பேசுவாங்க. ரொம்பக் கஷ்டமா இருக்கும். அப்புறம் எங்களுக்கு சேலரி

யார் சார் கொடுப்பாங்க... இந்த லைன்ல பெர்சனல் பேசக் கூடாது சார்'' எனத் தேம்பியபடி வைத்துவிட்டாள். அதன் பிறகு, இப்படிப் பேசுகிற யாரிடமும் நான் எரிச்சலைக் காட்டுவது இல்லை!

**எ** எங்கள் ஊர்ப் பக்கம் உள்ள பேராவூரணியில் மொய் விருந்து பிரபலம். ஏதாவது ஒரு வீட்டில் பணக்கஷ்டம் என்றால், பத்திரிகை அடித்து சொந்த பந்தங்களுக்கு எல்லாம் கொடுத்து வீட்டில் மொய் விருந்து நடத்துவார்கள். விருந்துக்கு வரும் உறவுகள் சாப்பிட்டுவிட்டு வைத்துப்போகிற மொய்யில் அந்த வீட்டின் தேவைகள் தீர்ந்துவிடும்.

மைக் கட்டி, போஸ்டர் அடித்து, கிடா வெட்டி இது பெரிய களேபரத் திருவிழாவாகவே நடக்கும். சில வீடுகளில் லட்சக்கணக்கில் மொய் நடந்த ரெகார்ட் பிரேக் எல்லாம் உண்டு. தான் வைத்ததைவிடக் குறைவாக வைத்து உறவுகளுக்குள் பெரிய வெட்டுக் குத்தெல்லாம் நடக்கும். இந்த மொய் விவகாரங்களால் நமது கிராமங்களில் உடைந்து போன உறவுகள் எத்தனையோ உண்டு. ''காளி... அசிங்கப் படுத்திட்டானுவோ. இங்க குடுறி...'' என பொண்டாட்டி போட்டிருந்த மூக்குத்தியைப் பிடுங்கி வாசல் கூரையில் எறிந்துவிட்டுப்போன மாமாக்களை நான் பார்த்திருக்கிறேன்.



**ந** ண்பர் ஒருவர் காதலித்துக் கலப்புத் திருமணம் செய்துகொண்டவர். காதல் திருமணம் என்பதால் ஊருக்குப் போகாமல் சென்னையிலேயே நடந்தது கல்யாணம். நண்பர் சொன்னார், ''எங்க அம்மாவுக்குப் பெரிய வருத்தம்... ஊர்க்காரங்க மொய் எல்லாம் போச்சேங்கறதுதான். ஏன்னா...

எங்க சொத்துல பாதியை இதுவரைக்கும் சொந்த பந்தங்களுக்கு மொய்யாவே வெச்சுருப்போம். பையன் கல்யாணத்துலதான் அதை நேர் செய்யணும்னு நெனைச்சவங்களுக்கு, அது மொத்தமும் போச்சேங்கறதுதான் பெரிய வருத்தம்!''

அடையாறு மருத்துவமனை ஒன்றில் கேன்சருக்காகச் சேர்க்கப்பட்ட நண்பனின் அப்பா இறந்துவிட்டார். ஒன்றரை லட்சம் கட்டினால்தான் உடலைத் தருவோம் என்றார்கள் மருத்துவமனையில். உடலை வாங்குவதற்காக இரண்டு நாட்கள் ஏகப்பட்ட பஞ்சாயத்துக்கள் செய்து, ஒரு வழியாக ஒரு லட்சம் திரட்டிக் கட்டி, போய் எரித்துவிட்டு வந்தோம்.

திரும்பும்போது, ''நல்ல வேளைங்க... இந்தக் காசு கெடைக்கலைன்னா, எங்கப்பாரு புள்ள இருந்தும் அநாதையாப் போயிருப்பாரு...'' என நண்பன் சொன்னபோதுதான் எனக்குத் தோன்றியது... வாழும்போது, எதை வேண்டுமானாலும் பணம் தீர்மானிக்கட்டும், நமது பிரியங்களை மட்டும் ஒருபோதும் அது தீர்மானித்துவிடக்கூடாது!

# 25

# சென்னைக்கு, 372 வயது!

**ந** ண்பனைப் பார்க்க ஆழ்வார்பேட்டை போயிருந்தேன்!

‘‘டேய்... பக்கத்துல போய் வீருவை அழைச்சுட்டு வீட்டுக்குப் போயிரலாம்...’’ என்றான். ஏதோ யோசனையில் இருந்த நான், ‘அந்த வீரு யார்?’ என்று கேட்கவில்லை.

ஏதோ ஒரு கட்டடத்தின் முன் காரை நிறுத்தியவன், உள்ளே போய் கையில் ஒரு ஹட்ச் நாய்க்குட்டியோடு வந்தான். ‘என்னடா வீருக்குட்டி... ஒரு வாரம் பசங்களைப் பார்க்காம தவிச்சுட்டியாடா குட்டி...’ எனக் கொஞ்சிவிட்டு, நாய்க்குட்டியை என் பக்கத்தில் விட்டவன், அடுத்து சொன்ன தகவல் ஆச்சர்யமாக இருந்தது.

‘‘பொங்கலுக்காக ஒரு வாரம் குடும்பத்தோட மதுரைக்குப் போயிட்டம்ல... அதான் வீருவை கேர் சென்டர்ல விட்டுட்டுப் போனோம்!’’

‘‘கேர் சென்டரா?’’

‘‘ஆமாடா... பெட் அனிமல்ஸைப் பாத்துக்கிருவாய்ங்க. ஒரு நாளைக்கு முந்நூறு ரூவா. ஃபுட்டெல்லாம் நீட்டா பண்ணிருவாய்ங்க.’’ அந்தக் கணமே வீருவுக்கு ஒரு சலாம் வைத்தேன்.

மியூஸிக் அகாடமி சாலையில், காருக்கு வெளியே பார்த்தேன். நேற்று பார்த்தபோதுகூட இந்தச் சாலையில் மரங்கள் இருந்ததைப் போலவும்,

இப்போது வெறுமையாக இருப்பதைப் போலவும் தோன்றியது. சட்டென்று பாப் மார்லியின் பாடல் வரிகள் ஏனோ மனதில் கீ—இன் ஆனது.

*‘என் மூதாதையர்களின்*
*உதிரம்... இந்த நகரம்*
*நகரும் சாலைகளில்*
*நகராத மரங்களில்*
*வாழ்கிறார்கள் அவர்கள்*
*என் மூதாதையர்களின்*

*உதிரம்... இந்த நகரம்!’* — இந்த வரிகள் இந்த சென்னைக்கும் அப்படியே பொருந்தும். நினைக்கும்போதே இந்த நகரத்தின் மீது சொல்ல முடியாத பேரன்பும் பெருவியப்பும் பொங்குகின்றன.

நானும் மதுரைக்கார நண்பனும் கல்லூரி நண்பர்கள். கிட்டத்தட்ட ஒரே நேரத்தில் சென்னைக்கு வந்தவர்கள். அவனுக்குச் சொந்த வீடு, கார் என ஒரு வாழ்க்கையும், எனக்கு நண்பர்கள் சூழ் ஓர் உலகையும் தந்தது இந்த சென்னைதான்.

சென்ட்ரல் ஸ்டேஷனில் படுப்பதற்கு இடம் பிடித்துக்கொடுத்தால், ஒரு இடத்துக்கு ஐந்து ரூபாய். ஹோட்டல்கள், கிளப்புகளின் குப்பைத் தொட்டிகளில் கிளறி, பிளாஸ்டிக் ஸ்பூன்களைப் பொறுக்கி மூர் மார்க்கெட்டில் விற்றால் ஸ்பூனுக்கு நாலணா. ரிச்சி ஸ்ட்ரீட்டில் கடை போட்டு அசெம்பிள்டு கம்ப்யூட்டர் விற்றால், சிஸ்டத்துக்கு ஆறாயிரம். பனகல் பார்க் பக்கம் ஒரு வேனைப் போட்டு ஃபாஸ்ட் ஃபுட் போட்டால், தினப்படி ஐயாயிரம். கிராண்ட் ஓரியன்ட்டில் டி.ஜே. ஆகி, ஷகிரா பாட்டு போட்டால், இரவுக்கு ஆயிரம் (இரவுக்குள் ஆயிரம் என்றும் படிக்கலாம்!).

தீவுத் திடலில் பாப்கார்ன் மெஷின் போட்டால், ரோகிணி லாட்ஜில் ரூம் போட்டு ஜோசியம் சொன்னால், காமராஜர் அரங்கை புக் பண்ணி

விழிப்பு உணர்வு வகுப்பு நடத்தினால், ரியல் எஸ்டேட் தாதாவாகி சினிமா எடுத்தால், அரசியல்வாதி வீட்டுக்கு டிரைவராகப் போய் பினாமியானால்.... ஆயிரமாயிரம் வாய்ப்புகளையும் வசதிகளையும் அள்ளி இறைத்தபடி மின்னிக்கொண்டு இருக்கிறது சென்னை. ஆனால், ஒரு நாய்க்குட்டிக்குக்கூட கேர் சென்டர் வைத்து, தினசரி முந்நூறு ரூபாய்க்கான வாழ்க்கையை அருளும் இந்த நகரத்தில்... அதன் பூர்வகுடிகள் எங்கே இருக்கிறார்கள்?



**செ** ன்னை, கபாலிகளின் நகரம். ஆனால், இன்றுவரை திருடன், பிக்பாக்கெட், சாராய வியாபாரி என்பவைதான் கபாலிகளைப் பற்றி ஜோக்குகளிலும் சினிமாக்களிலும் நாம் அறிந்த சித்திரங்கள்.

முனிம்மாக்களை இன்னும் ஆப்பக்காரியாகவும் மீன்காரியாகவுமே வைத்திருக்கிறோம். கபாலீஸ்வரரின் பெருங்கொண்ட படையலுக்கு முன், பாடிகாட் முனீஸ்வரனின் கோழி ரத்தம் தடவிய ஒற்றை எலுமிச்சம் பழத்துக்கு மதிப்பே இல்லை. தங்களுக்கான வாழ்நிலத்தில் எல்லா வாழ்வுரிமைகளும் மறுக்கப்பட்டு, வறுமைக்குள் கிடக்கும் கபாலிகளையும் முனிம்மாக்களையும் பற்றி நாம் அறிந்துணரவே இல்லை.

எங்கெங்கு இருந்தோ வந்தவர்கள்தான் பக்கிங்காமைக் கூவமாக்கிவிட்டோம். அந்தக் கூவத்தின் கரையில், நெருக்கியடிக்கும் குடிசைகள் போட்டு கொசுக்களோடு வாழ்கிறார்கள் இந்த மண்ணின் பிள்ளைகள்!

**ரா** ஜேந்திரன் என் சென்னைக்கார நண்பன். அவன் அருணாஇன் பாரில் சப்ளையராக வேலை பார்த்தபோது எனக்குப் பழக்கம். ராஜேந்திரனின் அப்பா திருவல்லிக்கேணி ஃபர்னிச்சர் கடை ஒன்றில் மீன்பாடி வண்டி ஓட்டிக்கொண்டு இருந்தார்.

ஒரு முறை பீச்சுக்கும் ராதாகிருஷ்ணன் சாலைக்கும் நடுவில் இருந்த அவனது குடிசைப் பகுதிக்குப் போயிருந்தேன். அப்போது ராஜேந்திரனின் அப்பா அவனது அண்ணனோடு ஆவேசமாக மீன்பாடி வண்டியில் வந்து இறங்கினார். ராஜேந்திரனின் அண்ணனை போலீஸ் பிடித்துப்போய்விட்டது. அவர்தான் போய் மீட்டு வந்திருக்கிறார். அவர் வண்டியில் இருந்து குதித்து, ஒரு கட்டையை உருவி அண்ணனை அடித்தபடி கத்தினார், ''த்தா... இந்த நாயி பீச்சாண்ட 'தூள்' வித்திருக்கு. அதான் போலீஸ் இட்டுனு பூட்டான். பின்ன குந்தவெச்சு மெடலாக் குத்துவான்...''

கொஞ்ச நேரத்தில் ஆசுவாசமாகி வாசலில் உட்கார்ந்தவர் என்னைப் பார்த்து, ''ராஜேந்திரன் சினேகிதக்காரனா நீயி... சாரிபா... எங்க தாத்தன் பக்கிங்காம்ல போட்டுவுட்டவன். பிரிட்டிஷ்காரன் காலத்துல எங்க நைனாதான் ஆர்பர்ல இன்சார்ஜே. இந்த ஏரியால 'ஆர்பர்' மூர்த்தின்னா எம்மாம் பேமஸுங்கற... த்தா... நாந்தான் நாய்ப் பொழப்புக்கு வந்துட்டேன். ஆனா, பிரெஸ்டீஜு வுட முடியுமா? இந்த கரிபால்டி நாயி, நம்ம பேரையே ரிப்பேர் பண்ணிக்கினு அலையுதுபா...'' எனக் கந்தல் வேட்டியால் மூக்கு சிந்தினார்.

வீட்டுக்குள் இருந்து வந்த ராஜேந்திரன், கையில் ரெண்டு சட்டையும் ஒரு சுவர்க் கடிகாரத்தையும் எடுத்து வந்தான். ''போலாமா சார்...'' என்றவன், வரும்போது அந்தக் குடிசைப் பகுதியின் ஆரம்பத்தில் இருந்த சேட்டுக் கடையில் அந்த சட்டையையும் கடிகாரத்தையும் கொடுத்துப்

பணம் வாங்கி வந்தான். ‘‘என்னடா இது?’’ என்றால், ‘‘இது அப்பப்போ ரெகுலர்தான் சார்... இருக்குற திங்ஸ வெச்சுட்டு, சேட்டுகிட்ட அம்பது நூற வாங்கிக்கறதுதான்...’’ என்றான். எனக்கு அவனது கொள்ளுத் தாத்தா அந்த ஏரியாவில் படகுவிட்ட காட்சியும், அந்த சேட்டின் தாத்தா ராஜஸ்தானிலோ குஜராத்திலோ ஜிலேபி விற்ற காட்சியும் மனக்கண்ணில் எழுந்தன!



அதன் பிறகு, ராஜேந்திரன் என் தொடர்பு எல்லைக்கு வெளியே போய்விட்டான். கிட்டத்தட்ட 10 ஆண்டுகளுக்குப் பிறகு அவனது குடியிருப்பு இருந்த இடத்துக்குப் போனபோது, அதிர்ச்சியாக இருந்தது. அப்படி ஒரு குடிசைப் பகுதி இருந்ததற்கான அடையாளமே இல்லாமல், அங்கே மிகப் பெரிய வணிக நிறுவனம் வந்திருக்கிறது. ‘அந்த அடகுக் கடை சேட்டுதான் இந்த வணிக நிறுவனத்தின் ஓனரோ?’ என சந்தேகம் தட்டியது. இல்லையெனினும், அந்த காம்ப்ளெக்ஸில் அவன் அலைபேசிக் கடையோ பீட்ஸா கடையோ போட்டிருக்கக் கூடும்.

**அ**டையாறு சாஸ்திரி நகரில் பரமு வீட்டுக்குப் பக்கத்தில் கருமாரியம்மன் கோயில் இருக்கிறது. ஏரியாக்காரர்கள் சேர்ந்து வருஷத்துக்கு ஒரு முறை கோயிலுக்குத் திருவிழா எடுப்பார்கள். இந்த முறை திருவிழாவுக்குப் போயிருந்தபோது பரமு சொன்னான், ‘‘20, 30 வருஷத்துக்கு முன்னாடி வரைக்கும் நாலு தெருவுலயும் நம்ம ஜனம்தான் இருந்துச்சு மச்சான்... முக்காவாசி ஜனம் பூடுச்சு. இப்போ

பாதி ஜனம் மார்வாடி, ஐ.டி. பசங்க, வேற ஊரு ஆளுங்க, அடுத்த தெருவுக்கு கோயில் கலெக்ஷனுக்குப் போனா நீங்க யாருனு கேக்கறான்? ஏழெட்டுக் குடும்பம்தான் நம்மளோடது. திருவிழாவே இன்னா படமா இருக்கும்... இப்போ எதுவும் இல்ல!''

இந்த நகரத்தை உருவாக்கியவர்களை இங்கிருந்து அகற்றி, நகரத்துக்கு வெளியே கண்ணகி நகருக்குத் தள்ளிவிடுகின்றன அரசும் அதிகாரமும். குடிசைப் பகுதிகள் எல்லாம் அழிந்து, ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்களும் அபார்ட்மென்ட்டுகளும் முளைத்துக்கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு விடியலிலும் அரசியல் வாரிசுகளும் பண முதலைகளும் தொழில் அதிபர்களும் பொக்லைனோடு வந்து நிற்பார்களோ என்ற நிராதரவான பயத்துடனேயே கழிகின்றன சென்னை மைந்தர்களின் பொழுதுகள். அந்த பயத்தில்தான் எப்போதும் குடிசைப் பகுதிகளில் ஒரே கம்பத்தில் மாறி மாறி ஆளும் கட்சிக் கொடிகள் பறந்துகொண்டே இருக்கின்றன. திடுதிப்பென்று எழுந்து நிற்கும் கட்டடங்கள் விளையாடிக்கொண்டு இருக்கும் பிள்ளைகளுக்குத் தெரியப்போவது இல்லை... அதற்கு முன்பு அங்கே விளையாடிக்கொண்டு இருந்த பிள்ளைகளின் நிரந்தரமற்ற எதிர்காலம்.

ஓ.எம்.ஆரில் இந்த ஐ.டி. நிறுவனம் எழுந்திருக்கும் இடத்தில் இதற்கு முன்பு கூடிக்கிடந்த உயிர்கள் இப்போது எங்கே? மெட்ரோ ரயில் வருவதற்கான வழித்தடத்தில் இதற்கு முன்பு படுத்து உறங்கிய ஜீவன்கள் இப்போது எங்கே? பேசின் பிரிட்ஜ் ரயிலடி ஓரமாக 'ஒதுங்கும்' பெண்களுக்கு மேலே விளம்பரத்தில் ஷாருக்கான் சிரிக்கிறாரா... நகைக்கிறாரா?

வண்ணாரப்பேட்டையில் பிறந்து புழங்கி, ரிக்ஷா ஓட்டிக்கொண்டு இருந்த கவுசா நைனா, வீட்டை இழந்து சென்னையைத் தாண்டிய புதிய குடியிருப்பில் எவ்வளவு நினைவுகளோடு துயரப்படுவார்? காசிமேடு, தண்டையார்பேட்டை, திருவொற்றியூர் என மீனவர்களின் ஏரியாக்களிலும் வணிகமயமாக்கலின் கைகள் நீண்டுவிட்டன. அவர்களையும் நகரத்தில் இருந்து துண்டித்துப் பார்க்கும் மனநிலையே பலருக்கும் இருப்பது ஏன்?

ஆங்கிலேயர்களின் ஆளுகைக்கு சென்னை வந்த கணக்கை வைத்துக்கொண்டு இப்போது சென்னைக்கு 372 வயது என்கிறார்கள். சென்னையின் பழைய புகைப்படங்களைப் பார்க்கும்போது ஆச்சர்யமும் பரவசமுமாக இருக்கிறது. அசோகமித்திரனின் கதைகளில்கூட மவுன்ட் ரோடு முழுக்க மரங்கள் இருந்திருக்கின்றன. புதுமைப்பித்தனின் சென்னையில் எக்மோர் ரயிலடியில் புங்கை மரங்கள் பூத்திருக்கின்றன. என் அண்ணன் வந்தபோது தி.நகர் ஜி.என். செட்டி ரோட்டில் இருந்த மரங்களும், நான் பார்த்தபோது வேளச்சேரியில் இருந்த மரங்களும் இப்போது இல்லை.

ஆளும் பேருமாகச் சேர்ந்து ஜீவிதம் அளித்த நகரத்தை நிர்வாணமாக்கிக்கொண்டே இருக்கிறோம். இந்த நகரத்தை அதன் ஆதி மனிதர்களிடம் இருந்து பிடுங்கி, அதன் அத்தனை அடையாளங்களையும் அழித்துக்கொண்டு இருக்கிறோம். பூமி துளைக்கும் பெருங்கட்டடங்களும், செயற்கை உணவுகளும், இயந்திர நாற்றமும் மலிந்துவிட்ட நகரத்தில், ஒரு மரம் விடும் மூச்சு கபாலியுடையது. அதன் வேரில், கிளையில், பூவில் அவர்களின் ஆக்சிஜன் இருக்கிறது. அந்த இயற்கையை மீட்டு எடுப்பதில்தான் இருக்கிறது சிங்காரச் சென்னை!

10 வருடங்களுக்குப் பிறகு ராஜேந்திரனைப் பார்த்தேன். என்னைத் தேடிக் கண்டுபிடித்து, தன் சகோதரியோடு அலுவலகத்துக்கு வந்திருந்தான். இப்போது சென்னையைத் தாண்டிய செம்மஞ்சேரியில் குடும்பத்தோடு இருப்பதாகச் சொன்னான். அவனுடைய சகோதரியிடம், ‘‘என்னம்மா பண்ற..?’’ என்றேன். அவர் சொன்னார், ‘‘முன்னாடி நம்ம வூடு இருந்துச்சுல்லண்ணே... அங்க கட்டிக்கீறாங்களே... அந்த காம்ப்ளெக்ஸுல கார் பார்க்கிங்கு டோக்கன் போடுறேண்ணே!’’

26

# வேலை என்பது, விருப்பம் சார்ந்த விஷயம்!

‘‘**மூ** த்தவனுக்குப் பிரச்னை இல்லைங்க... அவன் கவர்மென்ட் காலேஜ்ல தமிழ்ப் பேராசிரியராகி கண்ணுக்கழகா வந்துருவாங்க...’’ அப்போதெல்லாம் சொந்தபந்தங்களிடம் அப்பா அடிக்கடி சொல்கிற டயலாக் இது!

சரவணன் அண்ணனைத் தமிழ்ப் பேராசிரியர் ஆக்கிவிட வேண்டும் என்பதுதான் பிள்ளைகளைப் பற்றிய அப்பாவின் முதல் அஜெண்டா. அதற்குக் காரணமும் அண்ணன் தான். +2—விலேயே தி.ஜா—வையும் பாலகுமாரனையும் கரைத்தடித்துவிட்டு, வெட்டாத்தங்கரையில் வீறுநடை போடுகிறவனை தமிழ்ப் பேராசிரியராகத்தானே ஆக்க முடியும்!

தமிழ்ப் பேராசிரியர் என்றால், ஊர்ப் பக்கம் தனி மரியாதை; கை நிறையச் சம்பளம். பட்டிமன்றம், அது இதுவென ஹிட்டடித்தால்... டி.வி. புகழ் வேறு. கல்யாணம் என்று வந்தால் 50 பவுன், மாருதி கார், ரொக்கம்... என மாப்பிள்ளைக்கு கிரா∴ப் எகிறும். ஆகவே, அது நல்கனவுதான்.



அப்பாவின் கனவுக்கு லிட்டர் கணக்கில் பால் வார்க்கிற மாதிரியே இருந்தன அண்ணனின் அட்ராசிட்டிகள். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் பி.லிட்., எம்.ஏ. படித்தவன், எக்கச்சக்கமாக குர்தா தைத்து மாட்டிக்கொண்டு, வைரமுத்துவின் ஜெராக்ஸாக அலைந்தான். தனது நடை, உடை, பாவனைகளால் பிரிக்கப்படாத தஞ்சை மாவட்டத்தில் மூத்தவன் அதிர்வலைகளை உருவாக்கிக்கொண்டு இருந்தபோதே அடுத்தவன் குரு விளைந்து நின்றான்.

குரு விஷயத்தில் நடந்தது எங்கள் தாலுக்காவே எதிர்பாராத அதிரடி. அவனை கேட்டரிங் டெக்னாலஜி என்னும் சமையல் கலைப் படிப்பில் சேர்த்துவிட்டார் அப்பா. அதுவரை அப்படி ஒரு படிப்பு இருப்பது எங்கள் ஊருக்கே தெரியாது. அவன் லீவுக்கு வரும்போது, செஃப் ஜேக்கப் மாதிரி நீள குல்லா எல்லாம் போட்டுக்கொண்டு, கரி மண்டிய எங்கள் அடுக்களையில் மஷ்ரூம் பன்னீர் ஃப்ரை எல்லாம் செய்து கலவரப்படுத்தினான்.

படிப்பு, பயிற்சி முடித்ததும் அவனை மலேசியாவுக்கு வேலைக்கு அனுப்புகிற ஏற்பாட்டில் இருந்தார் அப்பா. அங்கே ஆரம்பச் சம்பளமே 50 ஆயிரம். ஆக, இந்த இருவரின் செயல்திட்டங்களிலேயே குடும்பம் தன்னிறைவை எய்திவிடும்!

மூன்றாமவன் சித்தார்த்தன், படிப்பைப் பொறுத்தவரை 'பாஸ் என்கிற பாஸ்கரன்'. கிரிக்கெட் வெறியில் திரிந்தவனை லோக்கல் தொழிலதிபர் ஆக்கிவிடலாம் எனக் குறைந்தபட்ச செயல்திட்டம் வைத்திருந்தார் அப்பா. நான் படிப்பில் சுமார் என்பதால், என்னை காசு கீசு கட்டி இன்ஜினீயர் ஆக்கிவிடலாம் என்கிற பேராசையில் எலக்ட்ரானிக் டிப்ளமோ சேர்த்துவிட்டார் (எனக்கு இன்றுவரை ஜீரோ வாட்ஸுக்கும் 100 வாட்ஸுக்குமே வித்தியாசம் தெரியாது என்பது தனிக் கதை).

நிற்க. படிப்பெல்லாம் முடித்து, பூண்டி காலேஜில் புரொஃபசர் போஸ்ட் வந்தபோது, சரவணன் அண்ணன் அசால்டாகச் சொன்னான், ''நான் மெட்ராஸ் போறேன். சினிமால டைரக்டராகிட்டுதான் ஊருக்கு வருவேன்.'' அப்பா அதிர்ந்துபோய், நண்பர்களைத் தூதுவிட்டு பல கட்டப் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். அனைத்தும் தோல்வியில் முடிந்து, அண்ணன் லட்சிய வெறியோடு ஆம்னி பஸ் ஏறினான்.

தாஜ் கொரமண்டலில் டிரெயினிங் போன குருவும் மலேசிய விளக்கை விசிறி அணைத்தான். ''மூட்ட மூட்டையா வெங்காயம் உரிக்கச் சொல்றானுங்க... பேஸிக்கலி ஐ அம் எ கலைஞன். ஒரு சிற்பியை அம்மிக் கொத்தச் சொல்லாதீங்க...'' எனப் பல பக்க வசனங்களோடு வந்தவன், ''நானும் சினிமாவுக்குப் போறேன்...'' என அடுத்த ஆம்னி பஸ் பிடிக்க, அப்பா செங்கல் சூளைக் கொட்டாயில் செய்வது அறியாது படுத்துக்கிடந்தார்.

பல வருடங்கள் கழிந்துவிட்ட இன்று... அப்பா இல்லை. தமிழ்ப் பேராசிரியர் ஆவான் என நினைத்தவன் சினிமாவுக்கு வந்துவிட்டான். மலேசியாவில் செஃப் ஆவான் என நினைத்தவன் 'புதிய தலைமுறை' சேனலில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இருக்கிறான். படிப்பே வராதவனுக்கு அரசு வேலையில் இருந்த அப்பாவின் வழியில் வேலை கிடைத்து, கவர்மென்ட் சர்வென்ட் ஆகிவிட்டான். என் விஷயத்தில் நடந்ததும் அப்படியே உல்டா. ஆக... மகன்களின் வேலை விஷயத்தில் அப்பாவின் ஒரு கனவுகூடப் பலிக்கவில்லை!

சம்பளம், அன்றாடம், சமூகத் தேவைகள் என்பதைத் தாண்டி... வேலை என்பது விருப்பம் சார்ந்த விஷயமாக இருப்பதுதான் இங்கே பெரிய பிரச்னை.

**நா** னறிந்த நண்பர்களில் அதிக வேலைகள் பார்த்தவர் க.சீ.சிவகுமார் அண்ணன். தோராயமாக 40 வேலைகள் பார்த்திருப்பார். வேலை விஷயத்தில் அவர் நாடோடித் தென்றல் அல்ல... நாடோடிப் புயல். போட்டோ ஸ்டுடியோ வேலையில் இருந்து பத்திரிகைப் பணி வரை அது பெரிய லிஸ்ட் (சமூகச் சேவைகள் தனிக்கணக்கு). அவரிடம் இது பற்றிப் பேசும்போது, ‘‘அது ஏண்ணே நம்மளால மட்டும் இங்கே சரியா சர்வைவல் பண்ண முடியலை?’’ என்றால், ‘‘அதுக்கு மேனேஜர் மைண்ட் வேணும்டா... உனக்கும் எனக்கும் அது கம்மி’’ என்பார்.

‘‘அது என்னண்ணே மேனேஜர் மைண்ட்..?’’

‘‘வாட்டர் பாட்டில் வாங்கினா எக்ஸ்ஃபையரி டேட் பாப்பியா நீ..?’’

‘‘அப்பிடின்னா?’’

‘‘அதான்... அதான் மேனேஜர் மைண்டு. எக்ஸ்ஃபயரி டேட்டுன்னாலே என்னன்னு கேட்குறம்ல... நமக்கு ஒருக்காலும் அந்த மைண்டு வராது. வெளங்குதா..?’’

**எ** னது இன்னொரு நண்பர், ஒரே நேரத்தில் பல வேலைகள் பார்க்கிறார். ஏழெட்டு கேரவேன்கள் வாங்கி வாடகைக்கு விடுகிறார். பார்ட் டைமாக ஒரு சேனலில் நியூஸ் வாசிக்கிறார். இன்னொரு பக்கம் மாடல் கோ—ஆர்டினேட்டராக இருக்கிறார். ‘ஃப்ரெண்ட்ஸ் ஆஃப் போலீஸ்’ என்று சொல்லிக்கொண்டு டிராஃபிக் க்ளீன் பண்ணுகிறார். அவரிடம், ‘‘ஏங்க... எதுக்குங்க இவ்வளவு வேலைகளை இழுத்துப் போட்டுக்கிட்டு பார்க்கறீங்க? டைம் கிடைச்சா, வீட்ல உக்கார வேண்டியதுதானே?’’ என்றால், ‘‘டேய்... வேலைங்கிறது ஓர் அனுபவம். ஒவ்வொரு வேலையும் ஒவ்வொரு விதமான படிப்பு. டைம் கிடைச்சா இன்னும் மூணு வேலைகளைப் பார்ப்பேன்’’ என்கிறார்.

என் அத்தைப் பெண் எனக்கு போன் பண்ணினாள். பன்னாட்டு ஐ.டி. நிறுவனம் ஒன்றில் வேலை பார்க்கிறாள். ''வேலை எப்பிடிப் போகுதுடி?'' எனக் கேட்டதற்கு, ''நாட் பேட் மாமா. இங்கே ஃபோர் லேக்ஸ் பேக்கேஜ் பெர் ஆனம் மாமா. இப்போ இன்னொரு கம்பெனியில ஃபைவ் லேக்ஸ் பேக்கேஜ் சொல்றாங்க... நெக்ஸ்ட் மன்த் அங்கே ஜாயின் பண்ணலாம்னு இருக்கேன்'' என்றாள்.

அவளது அப்பா, 40 வருஷமாக ஒரே தனியார் கம்பெனியில் வேலை பார்த்து ரிட்டையர்ட் ஆனவர். இவ்வளவுக்கும் ரிட்டையர்ட் ஆவதற்கு ஐந்து வருடங்களுக்கு முன்புதான் அவர் சீனியர் மேனேஜர் ஆனார். அவர் பேசும்போது அடிக்கடி, ''இத்தனை வருஷத்துல மொதலாளிக்கு விசுவாசமா இருந்திருக்கேன். அந்தத் திருப்தி போதும் எனக்கு...'' என்பார். அவரது மகள் பேக்கேஜ் பேசி, நாலு வருடங்களில் மூணு கம்பெனி மாறிவிட்டாள். முதலாளி, கம்பெனி விசுவாசத்துக்கெல்லாம் கிட்டத்தட்ட போட்டோ மாட்டி மாலை போட்டாகிவிட்டது.

தனது உடல், பொருள், ஆவியை எல்லாம் ஓர் இடத்துக்காக, ஒரு மனிதனுக்காக அர்ப்பணித்துக் காலம் முழுதும் வேலைக்கான சரியான ஊழியம் பெறாமலே தேய்ந்துபோனவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். இந்தத் தலைமுறைக்குத் தனிமனித வளர்ச்சிதான் வேலை குறித்தான பெரிய அளவுகோல். சமூகத்துக்கும் மக்களுக்கும் பயன்படும் நோக்கம் குறைந்துவருவது மட்டுமே இதில் கவலைக்குரிய அம்சம். மற்றபடி இந்தத் தலைமுறையில் வேலை குறித்த பார்வையையும் அதிவேக வளர்ச்சி விகிதத்தையும் நிச்சயமாக ஆதரிக்க வேண்டும்!

ஆனால், இந்த அரசு உத்தியோகஸ்தர்களில் சரி பாதி சதவிகிதத்தினர் ஒருபோதும் திருந்தமாட்டார்கள். எனது செக்ரட்டரியேட் தோழன் ஒருவன் எப்போது போனாலும் கம்ப்யூட்டரில் சீட்டாடிக்கொண்டு இருக்கிறான். அவ்வப்போது வாரக்கணக்கில் லீவு போட்டுவிட்டு, சினிமா டிஸ்கஷனுக்கெல்லாம் வருவான்.

டோக்கன் வாங்க மக்கள் க்யூவில் நிற்கும்போதுகூட செல்போனில் மொக்கை போட்டுக்கொண்டு இருப்பான். கேட்டால், ''மாப்ள... எவன்டா உருப்படியா இருக்கான்? நம்ம லெவலுக்கு இதை யூஸ் பண்ணிட்டுப் போயிட்டே இருக்க வேண்டியதுதான்'' என்கிறான். காசு கொடுத்து அரசு வேலை வாங்கிய பல பேரின் மனநிலை இப்படித்தான் இருக்கிறது!

**ப** த்து ஆண்டுகளுக்கு முன்பு நான் மதுரையில் தீவிரமாக வேலை தேடிக்கொண்டு இருந்தபோது, ''ஆறு மாசத்துல காரு... ஒரு வருஷத்துல சொந்த வீடு... இப்படிப்பட்ட வேலை இந்தியால எங்க கிடைக்கும்..? வாங்க பாஸு'' என்றபடி என்னை ஓர் இடத்துக்கு அழைத்துப்போனார் நண்பர் செந்தில்.

பெரியார் பஸ் ஸ்டாண்ட் பக்கம் ஒரு ஹோட்டல் ஹாலில் எக்கச்சக்கமாக இளைஞர், இளைஞிகள் கூடியிருந்தார்கள். நான் கலவரமாக... டை கட்டிய நான்கைந்து ஆசாமிகள் மேடையில் ஏறி முழங்க ஆரம்பித்தார்கள்.

''இதோ இவர்தான் ப்ரவீன்... ஒரு வருஷத்துக்கு முன்னாடி நம்ம நெட் வொர்க்ல ஜாயின் பண்ணி ஷார்ட் பீரியட்ல அச்சீவ் பண்ணி இருக்கார். நேத்து ஹோண்டா சிட்டி கார் வாங்கிஇருக்கார். கிவ் ஹிம் எ பிக் ஹேண்ட்...'' என ஒருவர் சொல்ல... பக்கத்தில் நின்ற கறுத்த பையன் கார் சாவியைத் தூக்கிக் காட்டினான். எனக்கு பரவசத்தில் நெஞ்சு விம்மியது. மறுநாளே கடன் வாங்கி 4,000 ரூபாய் கட்டி, அந்த மல்டி லெவல் மார்க்கெட்டிங் (M.L.M.) நெட்வொர்க்கில் சேர்ந்தேன்.



‘‘அதாவது பிரதர்... நீங்க நாலு மெம்பரைச் சேர்க்கணும். அவங்க ஆளுக்கு நாலு நாலு பேரா 16 பேரைச் சேர்ப்பாங்க. அந்த 16 பேரும் ஆளுக்கு நாலு நாலு ஆளா...’’ என்றபடி அந்த டை பார்ட்டி மேப் போட்டுக்காட்ட, எனக்கு எதுவும் விளங்காமல் செந்திலைப் பார்த்தேன். அவர், ‘‘ஒரு வருஷத்துல ஹோண்டா சிட்டி...’’ என்றபடி தம்ஸ்அப் காட்டினார். கட்டிய 4,000 ரூபாய்க்கு ஒரு கிட் கொடுத்தார்கள். பவுடர், பேஸ்ட், க்ரீம் என கே.ஆர்.விஜயாவின் மேக்—அப் கிட் மாதிரி இருந்ததைத் தூக்கிக்கொண்டு பெருமிதமாக வீட்டுக்கு வந்தேன்.

ஒரு வாரமாக வெயிலில் அலைந்து திரிந்து மண்டை சூடானதே தவிர, ஒரு மெம்பரும் சேரவில்லை. ‘‘என்ன சார் இது..?’’ என சம்பந்தப்பட்ட டை பார்ட்டியிடம் போய் நின்றால், ‘‘நீங்க ப்ளூ டீம் போயிருங்களேன்...’’ என்றார்.

‘‘ப்ளூ டீமா..?’’

‘‘ஆமாங்க... உங்களுக்குக் குடுத்து இருக்கற கிட் ஆரஞ்ச் டீம். மேக்னெட்டிக் பெட் எடுத்துக்கிட்டீங்கன்னா... ப்ளூ டீம். அதுல நீங்க ஈஸியா வொர்க்—அவுட் பண்ணலாம். எக்ஸ்ட்ரா த்ரீ தவுசண்ட் கட்டினாப் போதும்.’’

அந்த மேக்—அப் கிட்டை என் ஹவுஸ் ஓனர் பொண்ணுக்குக் கொடுத்துவிட்டு, குவாட்டரைப் போட்டுவிட்டுப் போய் செந்திலை வண்டை வண்டையாகத் திட்டினேன். அவரது மேக்—அப் கிட் சுக்குநூறாக உடைந்துகிடந்தது. உள் ரூமில் கோபமாக உட்கார்ந்திருந்த மனைவியைக் காட்டி, ‘‘உஷ்ஷ்ஷ்... வெளில போய்ப் பேசலாம்...’’ என்றார்.

அப்படியே ரெண்டு பேரும் போய் இன்னொரு நண்பர் மூலம் ஒரு கம்பெனியில் சேர்ந்தோம். அது ரியல் எஸ்டேட் கம்பெனி. ‘‘சிட்டிக்குப் பக்கத்துல ப்ளாட்டுங்க. கல்கண்டு மாதிரி தண்ணி... எல்லா வசதியும் உண்டு’’ என ஏகப்பட்ட பொய்கள் சொல்லி, சிக்குகிறவனை வேனில் அள்ளிக்கொண்டு மேலூரைத் தாண்டி 30 கிலோ மீட்டருக்குப் போகிற வேலை அது. ஓர் அந்நியன் பொங்கி எழுந்து எங்களை ப்ளாட் காட்டிய இடத்திலேயே வெளுத்து எடுக்க, சாயங்காலமே ராஜினாமா கடிதம் நீட்டினோம்.

அந்த முதலாளி ரொம்ப கூலாக, ‘‘ஓ.கே. இந்த வேலை உங்களுக்குச் சரிப்பட்டு வராது. நம்ம கம்பெனில புதுசா டீத்தூள் பிசினஸ் ஆரம்பிச்சுருக்கோம். அதை டிஸ்ட்ரிப்யூட் பண்ணுங்க...’’ என்றபடி ‘த்ரீ ரோஸஸ்’ மாதிரி டீத்தூள் பாக்கெட்டை நீட்டினார். எனக்கு ஆச்சர்யம் தாங்கவில்லை. ‘இவர்தான் ‘த்ரீ ரோஸஸ்’ கம்பெனி ஓனரா..? இந்தப் பெருமை தெரியாமலேயா இவரிடம் வேலை பார்த்தோம்! பெரிய கம்பெனியாச்சே...’ எனப் பரவசமாகி உற்றுப் பார்த்தேன். அவர் காட்டிய பாக்கெட்டில் ஒரு ரோஸ் குறைந்தது. ஆக்சுவலி அது டூ ரோஸஸ். உடனடியாக ராஜினாமா செய்தேன்!

கரடி பொம்மை விற்றது, டி.வி.எஸ்—ஸில் கரி அள்ளியது, கம்ப்யூட்டர் சர்வீஸ், ஸ்டெபிளைசர் கம்பெனியில் லோடு மேன் என ஆரம்பித்து, பத்திரிகை, சினிமா வேலைகள் வரை நானும் 10, 12 வேலைகள் பார்த்திருக்கிறேன். குடும்ப, சமூக நெருக்கடிகளாலேயே ஏதேனும் ஒரு வேலைக்குச் சேர்ந்துவிட்டு, அந்தச் சூழலை ஏற்க முடியாமல் தவிப்பது வலி மிகுந்த அனுபவம்.

ஓர் அலுவலகம் என்பது, ஒரு சமூகம்; ஒரு தேசம். அலுவலகத்தையும் அதன் மனிதர்களையும் அனுசரிக்க முடியாததுதான் பல பேருக்கான பிரச்னை என நினைக்கிறேன். வேலையையே தனது சந்தோஷமாகவும் காதலாகவும் அனுபவிப்பவர்கள் நம்மில் எத்தனை பேர்? சுதந்திரத்துக்கும் கனவுக்கும் நடுவில் சிக்கிக்கொண்டு திண்டாடும் வேலைக்காரர்கள் எத்தனை பேர்? கண்காணாத நாடுகளில் வேலையின் பொருட்டு துயரம் சுமப்பவர்கள் எத்தனை பேர்? வெளிநாட்டு வேலையையே கனவாக வைத்துக்கொண்டு தவிப்பவர்கள் எத்தனை பேர்?

**நா** ங்கள் இருக்கிற ஃப்ளாட்டுக்கு, புதிதாக ஒரு வாட்ச்மேன் வந்தார். அவருக்குக் கிட்டத்தட்ட 70 வயதுக்கு மேல் இருக்கும். இரவுகளில் வீடு திரும்பும்போது பார்த்தால், பனியில் குன்னி இருமிக்கொண்டு கிடப்பார். யாராவது வருகிற மாதிரி தெரிந்தால், முனகிக்கொண்டே ரவுண்ட்ஸ் போகிற மாதிரி நடப்பார். 10 ரூபாயோ, சாப்பாடோ கொடுக்கும்போதுதான் முகம் பிரகாசமாவார்.

இரண்டு நாட்களுக்கு முன்பு, பனி தாங்காமல் ஒரு ஆட்டோவுக்குள் சுருண்டுகிடந்தார். காய்ச்சல் தாங்காமல் சத்தமாக முனகிக்கொண்டு இருந்தார். அவரை எழுப்பி டீயும் மாத்திரையும் வாங்கித் தந்து, ''ஏங்க... எதுக்குங்க இந்த வயசுல இப்பிடி இருக்கும்போது வேலைக்கு வர்றீங்க?'' என்றேன்.

எதுவும் பேசாமல் தலைகுனிந்து டீயைக் குடித்தார். கண்கள் கலங்கியிருந்தன. சட்டென்று க்ளாஸை வைத்தவர், ''சார்... ஈ ப்ளாக் சார் வர்றாரு. பார்த்தா திட்டுவாரு... வர்றேன்...'' என்றபடி குச்சியைத் தட்டிக்கொண்டே அபார்ட்மென்ட்டைச் சுற்ற ஆரம்பித்தார்!

# 27

# காதலால் காதல் செய்வீர்!

**இ**ந்த அத்தியாயத்தில் வரும் காதலிகளுக்கு, 'கீர்த்தனா' என்ற பொதுப் பெயரை வைத்திருக்கிறேன்... ஆமென்!

'வண்டுக் கடி' தெரியுமா உங்களுக்கு?

மதுரை மரக்கடை ஏரியாவுக்குப் பின்புறம் 'வண்டுக் கடி' கிடைக்கும். ஒரு கடிக்கு அஞ்சு ரூபா (பத்து வருஷங்களுக்கு முன்பு!). சிவப்பு நிறத்தில் ஒரு வண்டை உள்ளங்கைக்கு மேலே ஊசி நரம்பில் விடுவார்கள். 'சுருக்' —என்று ஒரு கடி. கிர்ர்ர்... —என்று தலை வரைக்கும் ஒரு ஃபீலிங் ஏறும். கொஞ்ச நேரத்துக்கு உலகம் மசமசத்து, மனசு நசநசத்துத் திரியலாம்.

கீர்த்தனாவுடனான காதல் ஃப்ளாப் அடித்தபோது, தனபால்தான் என்னை வண்டுக்கடி ஏரியாவுக்குக் அழைத்துப்போனார். ஒரு 'சுருக்' வாங்கிக்கொண்டு, தங்கம் தியேட்டரில் ஏதோ ஒரு படத்துக்குப் போய் உட்கார்ந்தோம்.

இடையில் எழுந்து பாத்ரூம் போனவன், அந்த போதையிலும் அதிர்ந்தேன். பாத்ரூம் உள்ளே இரண்டு பேர் ஆதாம்ஏவாள் கெட்டப்பில், டெரர் போஸில் கிடந்தார்கள். பின்னாலேயே வந்து எட்டிப்பார்த்த தனபால் வெளியே வந்து, ''அஞ்சி அஞ்சி வாழ்ந்தது போதும் ராஜா, நீ ஆற்று வெள்ளம் போலெழுந்து ஓடு ராஜா... ஹேஹேய்...'' எனச் சத்தம் போட்டுப் பாடினார்.

கொஞ்ச நேரம் கழித்து எந்தப் பரபரப்பும் இல்லாமல் அந்த ஜோடி வெளியே வந்தது. அந்தப் பெண் தலையை முடிந்துகொண்டு போய்விட, அந்த ஆள் எங்களிடம் வந்தான். ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டே படுகூலாக, ‘‘ரொம்ப நாள் கழிச்சு மீட் பண்றோம்... எடம் இல்ல தலைவா. லவ்வர்ஸ்தான் தலைவா!’’ என்றபோது எனக்குத் திடுக்கென்றது.

படம் முடிந்து வரும்போது தனபால் சொன்னார், ‘‘ஏன்டா... ஒரு வருஷமா கே.எஸ்.ஆர். லாட்டரி பக்கத்துல நின்னு அவளை லுக்கு விட்டுக்கிட்டே இருந்த... இப்ப வந்து லவ்வு புட்டுக்கிச்சுங்கற. வேற என்ன பண்ண நீ? பார்த்தியா... அவனவன் பப்ளிக் டாய்லெட்லேயே காவியம் படைக்கிறான்!’’

நிஜமாகவே ஒரு வருஷமாக கீர்த்தனாவைப் பார்த்துக்கொண்டே இருந்ததைத் தவிர அந்தக் காதலில் எதுவும் இல்லை. ஒரு காம்ப்ளெக்ஸில் இரண்டாவது மாடி ஜெராக்ஸ் கடையில் கீர்த்தனாவும் மூன்றாவது மாடி ரியல் எஸ்டேட்டில் நானும் வேலை பார்த்தோம். மாடிப்படிகளில் ஏறும்போதும் இறங்கும்போதும் ஒரு பார்வை. ‘ஷ்ஷ்ஷ்ளிச்’ என ஒரு பேப்பர் நகலாகி வெளிவரும் மின்னல் நொடிப் பார்வை. ஆறு மாதங்களாகத் தினசரி நாலைந்து ‘ஷ்ஷ்ஷ்ளிச்’... அவ்வளவுதான்.

ஒரு முறை மொட்டைமாடியில் சாப்பிட்டுவிட்டுக் கை கழுவும் போது, பக்கத்து டேப்பில் வந்து கை கழுவியபடியே, ‘‘நீங்க எந்த ஏரியாலேர்ந்து வர்றீங்க?’’ என்றாள்.


‘‘அது... அது... சம்மட்டிபுரங்க. நீங்க?’’

‘‘நான் அரசரடி.’’

‘‘ஓ... அப்டிங்களா...’’

‘‘இல்ல... சும்மாதான் கேட்டேன்!’’

– இவ்வளவுதான் மொத்தமாகவே எங்களுக்குள் நடந்த வசனப் பரிவர்த்தனை. அங்கு இருந்து நான் வேலையைவிட்டு வந்த பிறகு, தினமும் இரவு 8 மணிக்கு பெரியார் பஸ் ஸ்டாண்டில் கே.எஸ்.ஆர். லாட்டரிக் கடைக்குப் பக்கத்தில் போய் நின்று கொள்வேன். சரியாக அந்த நேரத்துக்குக் கீர்த்தனா வருவாள். எதிரே அரசரடிக்குப் போகும் பஸ்ஸில் ஏறி ஜன்னலோரம் உட்கார்ந்துக்கொள்வாள். பஸ் கிளம்புகிற வரைக்கும் பார்த்துவிட்டு வந்துவிடுவேன். இப்படியே ஒரு வருஷம் போனது.



திடீரென்று கீர்த்தனாவைக் காணவில்லை. பஸ் ஸ்டாண்டே ப்ளாக் அண்ட் ஒயிட்டில் வெறுமையாகக் கிடந்தது. பழைய காம்ப்ளெக்ஸுக்குப் போனால், இன்னொரு பாசிமணி ஜெராக்ஸ் எடுத்துக்கொண்டு இருந்தது. நினைவுகளால் நெஞ்சு குமுறியது. தூக்கமே இல்லை.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, இன்னொரு வேலையில் சேர்வதற்காக பயோடேட்டா ஜெராக்ஸ் எடுக்க, மாப்பிள்ளை விநாயகர் தியேட்டர் பக்கம் இருந்த ஒரு கடைக்குப் போனேன். நெற்றி வகிடு நிறையக் குங்குமம் அப்பிக் கொண்டு அங்கே ஜெராக்ஸ் எடுத்துக்கொண்டு இருந்தாள் கீர்த்தனா.

எந்தச் சலனமும் இல்லாமல் என்னைப் பார்த்தாள். காசு கொடுத்ததும் வாங்கிப் போட்டுக்கொண்டே மெல்லிய குரலில் அவள் என்னிடம் கேட்டதை ஆயுசுக்கும் மறக்க மாட்டேன்.

''இன்னமும் அந்த லாட்டரிக் கடை பக்கத்துலயேதான் நிக்கிறீங்களா..?''

**தி** ருப்பூரில் ஒரு பனியன் கம்பெனியில் வேலை பார்த்தேன். 'டையிங்'கில் வேலை பார்த்த 20 பெண்களில், 19 பேர் என்னை 'அண்ணா' என்றே அழைக்க, கீர்த்தனா மட்டும் 'வாங்க போங்க' என்பாள். அந்த வயதில் இது போதாதா ஒருத்தியிடம் எனக்குப் பிரியம் வர?

''வாங்கண்ணே... 'காதல் தேசம்' வினித்தண்ணே!''

''இல்லடி... அவரு 'ஆவாரம்பூ' வினித்தண்ணே!'' என அந்தப் பெண்கள் என்னைக் கண்டபடி கலாய்க்கும்போது, ''ச்சீ... சும்மா இருங்கடி... பாவம்'' என்பாள் கீர்த்தனா.

இப்படியாக யாரும் அறியாமல் என் இதய பனியனை ஏழு வண்ணச் சாயத்தில் முக்கிமுக்கி எடுத்தாள். வீட்டில் இருந்து சாப்பாடு எடுத்து வந்தாள். வேஸ்ட் பீஸில் எம்பிராய்டரி அடித்து, விண்டோ ஸ்க்ரீன் தந்தாள். நான்கே மாதத்தில் வந்தது ட்விஸ்ட். மேடிட்ட வயிற்றுடன் சாயம் போட வந்தாள் கீர்த்தனா. கர்ப்பகர்த்தா... சூப்பர்—வைஸர் மகேஷ். உடனடியாக கம்பெனி அளவில் பஞ்சாயத்து நடந்து, கல்யாணத்துக்கு ஏற்பாடானது.

பிரச்னை என்னவெனில், கீர்த்தனா பாபநாசம் பக்கம் கள்ளர் வீட்டுப் பெண். மகேஷ் ஒரத்தநாடு பக்கம் தலித் பையன். விவசாயம் கெட்டுப்போய், ஏற்றத்தாழ்வுகள் எல்லாம் நொறுங்கி, இரண்டு பேரும் வாழ்க்கையைத் தேடி திருப்பூருக்கு வந்ததில் பூத்துவிட்டது காதல். பாபநாசத்தில் இருந்து பெண் வீட்டார் டென்ஷனாகி கிளம்பி வர, சேஸிங்குகளுக்கு நடுவே நண்பர்கள் கூடி, திருப்பரங்குன்றத்தில் இருவருக்கும் கல்யாணம் செய்து வைத்தோம்.

கோயில் மலைப் படிக்கட்டுகளில் வயிற்றைத் தள்ளிக்கொண்டு நின்றபடி, ‘‘நம்ம செக்ஷன்ல இருக்கறவங்கள்ல நீங்கதான் நம்மூருக்காரவுக... நீங்க இந்தக் கல்யாணத்துல இருக்கறது எங்க வூட்ல இருந்து ஒருத்தர் வந்தமாரி. ரொம்ப நன்றிண்ணே’’ என்று கீர்த்தனா கை கூப்பிய காட்சியை மறக்க முடியுமா என்ன?

**ப** ஷீர், மெஹரை லவ் பண்ணினான். நானும் அவனும் மிட்லேண்ட் தியேட்டர் பக்கம் மொட்டைமாடிக் கூரைக் கொட்டாய்மேட். நாங்கள் இருந்தது மதுரை. மெஹர் சென்னை. அப்போது மொபைல் கிடையாது.

ஒரு முறை காதலியிடம் பேச அவன் லேண்ட்லைனுக்கு போன் போட, அவள் அப்பா எடுத்து கொத்து பரோட்டா ஆனது. அதில் இருந்து பஷீர் ஒரு வியூகம் வகுத்தான். அவனுடைய ஏ.எம்.ஐ.இ. கிளாஸ்மேட் கீர்த்தனாவை விட்டு, காதலி வீட்டுக்கு போன் பண்ண வைப்பான். மாமனார் எடுத்தால் ‘‘மெஹரு ஃப்ரெண்டு மாலினி பேசறேன் அங்கிள்!’’ என டுப்கான்ஸ்விட்டு அவள் லைனுக்கு வந்ததும், இவனிடம் கொடுப்பாள் கீர்த்தனா. இதற்கு என்றே ஒரு எஸ்.டீ.டி. பூத்தைப் பிடித்து வைத்திருந்தான். இருவரும் போனில் ஃபீலிங் ஓட்ட, நானும் கீர்த்தனாவும் வெளியே காத்திருப்போம். இது போதாதா..?

‘‘லவ் பண்ண ஆரம்பிச்சாலே, மத்தவங்களை மறந்துடுறாங்கப்பா...’’

‘‘ஏங்க... நீங்க லவ் கிவ்வெல்லாம் பண்ணலியா..?’’

‘‘அய்யோ அதெல்லாம் இல்லப்பா... நீங்க..?’’

‘‘நானும் இல்லப்பா...’’

இப்படி ஆரம்பித்தது அந்த அத்தியாயம். அடிக்கடி காசு சேர்த்து சென்னைக்குப் போய், மெஹருடன் மகாபலிபுரம், வி.ஜி.பி., ஸ்பென்சர் ப்ளாஸா என போட்டோ செஷன் முடித்துக்கொண்டு வந்து என் வயிற்றெரிச்சலைக் கிளப்புவான் நண்பன். நான் அப்போது உச்சக்கட்ட வறட்சியிலும் கழிவிரக்கத்திலும் இருந்தேன். இதை அறிந்து ஓர் ‘அண்ணா மறுமலர்ச்சித் திட்ட’த்தை முன் வைத்தான் பஷீர்.

‘‘மாப்ள... நீ ஏன் கீர்த்தனாவை லவ் பண்ணக்கூடாது?’’

‘‘அல்ரெடி பண்ணிட்டுத்தான் இருக்கேன்...’’

‘‘ஐ நோ மாப்ள... நீ கவலைப்படாதரா... நானே அவகிட்ட லீடு குடுக்கறேன்...’’

அன்று பஷீர் என்னை அழைத்துக்கொண்டு போய் ஒரு முட்டுச் சந்தில் கீர்த்தனாவைச் சந்தித்தான்.

‘‘ஏங்க... இந்த நாயி எப்போ பார்த்தாலும் உங்களைப்பத்தியே பேசிட்டிருக்கான். என்னன்னு கேளுங்க...’’ என பஷீர் சொன்னதும், அவள் முகத்தில் சர்க்கரைத் தூக்கலாய் ஒரு வெட்கம்.

‘‘ஆமா... நீங்க என்ன பண்றீங்க?’’ என்றாள்.

‘‘அது... டி.வி.எஸ்—ல சூப்பர்வைஸரா இருக்காங்க...’’ எனப் பொய் சொன்னான் பஷீர். உண்மையில் நான் டி.வி.எஸ். ஒப்பந்தக் கூலித் தொழிலாளி.

‘‘ஹைய்யோ... அங்கதான் எங்க அப்பாவும் சூப்பர்வைஸரா இருக்கார். எந்த செக்ஷன் நீங்க?’’ எனக் குண்டை வீசினாள் கீர்த்து.

‘‘அது... கெமிக்கல் செக்ஷன்ங்க...’’

‘‘ஏய்... எங்க அப்பாவும் அந்த செக்ஷன்தான்...’’

எந்த நேரமும் தயிர்ச்சாத ஏப்பத்தோடு எங்களைத் திட்டிக்கொண்டே திரியும் சத்தியமூர்த்தி மகளா இவள்? சோலி பாதி முடிந்துவிட்டது.

மறுநாளே சத்தியமூர்த்திக்குச் சாப்பாடு எடுத்துவருகிற சாக்கில், என்னைப் பார்க்க வந்தாள் கீர்த்தனா. அப்பா வேலை பார்க்கிற கம்பெனியிலேயே சூப்பர்வைஸர் என்றால் காரியம் கச்சிதம் என்பது அவள் கணக்கு. ‘‘ஏய்ய்ய்... ட்ரம்மைத் தள்ரா... தள்ரா...’’ எனக் கத்தியபடியே கரி வண்டியை உருட்டிக்கொண்டு ஷேக் தாவூதோடு ஓடிவந்த எனக்கு எதிரே அவள் வந்து நின்ற கணமே, அந்தக் காதலுக்கு ‘எ ஃபிலிம் பை பஷீர்’ என கார்டு விழுந்தது!

அரசுப் பள்ளி 5—ம் வகுப்பில் என்னை விட்டுவிட்டு நீலன் மெட்ரிகுலேஷன் பள்ளிக்குப் போன கீர்த்தனாவில் இருந்து, நடுத்தெருவில்... நள்ளிரவில்... பெரு மழையில் முத்தங்கள் தந்து, அழுதபடி திட்டி அனுப்பிய கீர்த்தனா வரை எனக்கும் ஒரு பட்டியல் உண்டு. பாரதிக்கு கண்ணம்மா மாதிரி, நகுலனுக்கு சுசீலா மாதிரி, கலாப்ரியாவுக்கு சசி மாதிரி எனக்கு இந்தக்கீர்த்தனா.

*‘பாண்டி ஆட்டத்தின் முதல் உப்பை*
*நான் கடவுளுக்குக் கொடுத்தது கிடையாது*
*முதல் பல் விழுந்தபோது*
*சாணத்தில் பொதிந்து சொர்க்கம் நோக்கி*
*எறிந்தது கிடையாது*
*ஒரே ஒருமுறைதான் நூலில்*
*பக்கத்திற்கொன்றாய்*
*விட்டில் பூச்சிகளைக் கட்டி பரிதவிக்கவிட்டு*
*இருக்கிறேன்,*

*இருந்தும் மருதமர நிழல்கள் மீட்டாத*
*தண்டவாளச் சோகங்களை எனக்கேன்*
*நிரந்தரித்தாய் சசி'*

என்ற கலாப்ரியாவின் கவிதை, காதலின் நெடுவழியில் நின்று எப்போதும் கைகாட்டுகிறது.

**ஒ** ரு வாரச் சண்டைக்குப் பின்பு, அழுது வீங்கிய முகத்துக்கு பவுடர் போட்டுக்கொண்டு, டி.வி.எஸ். 50—ல் உட்கார்ந்து அப்பாவின் தோள் பிடித்து, ஔவையார் தியேட்டருக்குக் கிளம்பும்போது அம்மாவின் முகத்தில் நெளிந்து மறையும் அந்தப் புன்னகையில்தான், முதன்முதலில் நான் கீர்த்தனாவைப் பார்த்தேன்.

'நெஞ்சு சளிக்கு நல்லது' என வைத்தியர் சொன்னதால், அப்பா போய் அணில் கறி கொண்டுவர, ''அறிவிருக்கா உங்களுக்கு... அணிலைப் போய் யாராவது சாப்பிடுவாங்களா...'' என வயல் சேத்து வாசத்தோடு அம்மா சொன்ன வார்த்தைகளை ஒரு குழந்தையின் கைகளால் இறுக்கிவைத்திருக்கிறேன் இக்கணமும்.



யுத்தத்துக்குப் பிறகு மானிக் ஃபார்ம் முகாமில் இருந்து தன் காதலி எழுதி அனுப்பி இருந்த கடிதத்தை, ஈழ நண்பன் ஒருவன் காட்டிய நொடியில்தான் நான் பிரியத்தின் உதிரத்தைக் கண்டேன். சில ஆண்டுகளாக ஈழத்தில் இருந்து கனடாவில் இருந்த காதலியிடம் சேர்வதற்கு அலைந்த நண்பன் அகிலனின் கதை, காலத்தின் வாசலில் ஒரு மரக்கன்றைப் போல உட்கார்ந்திருக்கிறது.

**க**திர் சார் பாப்பா பர்த்டேக்குப் போனபோது, பக்கத்து ஃப்ளாட் பெருசுகள்... 70, 80 வயசு ஜோடி... உட்கார்ந்து எழும்போது அந்தப் பாட்டி ''ஷ்ஷ்ஷ்... பெருமாளே...'' எனக் காலைப் பிடிக்க, அத்தனை பேருக்கும் மத்தியில் ஓடிவந்து பாதத்தைத் தாங்கிக்கொண்டு நிமிர்ந்த அந்தத் தாத்தாவின் முகம்... டைரக்டர் ரமணா தொண்டையில் கேன்சர் வந்து, ஆபரேஷனுக்கு அட்மிட் ஆகப் போகும்போது, இரண்டு பெண் பிள்ளைகளை வாரி இடுக்கிக்கொண்டு, ''அவரைப் பத்தி எனக்குத் தெரியாதா... சூப்பரா வந்துருவாருங்க...'' என்ற அவர் காதல் மனைவியின் புன்னகை...

‘மறுபடியும்’ பட க்ளைமாக்ஸில் கணவனையும் காதலிக்க வந்தவனையும் விட்டுவிட்டுப் போகிற ரேவதி உறைந்து சிரிக்கிற ஒரு ஷாட்... சென்ட்ரல் ஸ்டேஷனில் 10 வருடங்களாக அதே இடத்தில் சாமி படங்கள் விற்றுக்கொண்டு இருக்கிற அந்தத் தம்பதி... திடுதிப்பென்று ஃபேஸ்புக் ஃப்ரெண்ட்ஷிப் ரெக்வஸ்ட்டில் குழந்தையோடு சிரிக்கும் கீர்த்தனா... ‘‘அவருக்கு இளையராஜான்னா ரொம்பப் பிடிக்கும். அவர் காதாண்ட இந்த டேப்ரெக்கார்டரை வைக்கிறீங்களா...’’ கூடத்தில் கிடத்தப்பட்டு இருந்த நண்பனின் அப்பாவைப் பார்த்தபடி சொன்ன அவன் அம்மாவின் குரல்... டைவர்ஸ் வாங்க வரும்போது, ‘இது உங்ககிட்டயே இருக்கட்டும்’ எனக் கல்யாண ஆல்பத்தைக் கொண்டுவந்து கொடுத்த நண்பரின் மனைவி... எவ்வளவு இருக்கிறது? ஒரு முறையா... இரு முறையா... அதுவா... இதுவா... காதலிலும் பிரியத்திலும் வியாக்கியானம் என்னய்யா வேண்டிக்கிடக்கிறது?

இப்போதும் கீர்த்தனாதான் என்னிடம் காதலைச் சொன்னாள்!

பெசன்ட் நகர் பீச்சுக்கு அழுக்குச் சட்டை போட்டுப் போயிருந்த நாளில், ஓட ஓட துரத்தி அடித்தாள். காபி ஷாப்புக்கு அழைத்துப் போய், மெனு கார்டு கிளாஸ் எடுத்தாள். சே குவேராவையும் சாப்ளினையும் ஃப்ரேம் பண்ணி, ‘காதல்தான் புரட்சியை வழிநடத்தும்’ என்ற வாசகங்களோடு பரிசு கொடுத்தாள். மருத்துவமனையில் படுத்துக்கொண்டு சிரித்தபடி, அழவைத்தாள். நிறையப் பிரியம் வைத்து, நிறைய சண்டை போட்டாள். கேட்கும் போதெல்லாம் காசு கொடுத்தாள். அம்மாவைப் போல இருந்தாள். எவ்வளவோ நல்ல நினைவுகளைத் தந்தாள். பதிலுக்கு அவளுக்கு எதுவும் செய்யவில்லை நான். ரயிலடி மேம்பாலங்களின் இருளைக் கடக்கும்போது முத்தமிடும் த்ரில்லிங்கைக் கடந்துவிட்டால்... காதலுக்கு முன்பு நிறைய சவால்கள் இருக்கின்றன. கமிட்மென்ட்கள் இருக்கின்றன. இயலாமை ஒரு கரையிலும் அன்பு மறு கரையிலுமாக ஓடிக்கொண்டே இருக்கிறது காதல் நதி.

‘‘ரெண்டு பேருக்குமே நிறைய கமிட்மென்ட்ஸ், தேவைகள் இருக்கு. பரஸ்பரம் உதவி பண்ண முடிஞ்சா, பண்ணிக்குவோம். இல்லைன்னா...

தனித்தனியா எதிர்கொள்வோம். இதெல்லாம் முடிஞ்ச பின்னாடி சந்திப்போம்... அப்புறம் பார்க்கலாம்!''

அது சரி. பார்த்தால், பேசினால்தான் காதலா..? நினைவுகள் போதாதா..? வாழ்க்கையை இன்னும் கடுமையாக, தீவிரமாக எதிர்கொள்வதற்குக் காதல்தான் கற்றுத்தருகிறது. அதுதான் உலகின் மகத்தான உந்து சக்தி. இன்னும் அற்புதமான சந்திப்பு... இன்னும் மகத்தான நம்பிக்கை... இன்னும் அழகான வாழ்க்கை... காதலால்தானே தர முடியும்? ஃப்ரேமுக்குள் இருந்து சே குவேராவும் சாப்ளினும் புன்னகைக்கிறார்கள்.

இந்தக் காதலர் தினத்துக்கு கீர்த்தனாவிடம் இருந்து எனக்கு எந்தப் பரிசும் வராது. அது சரி... பிரிவைவிடவும் பெரிய பரிசு காதலில் இருக்கிறதா என்ன..?

28

# காயின் பூத்திலிருந்து தொலைபேசிய ஒரு கிராமத்தான்!

**‘‘உ** ங்களுக்கு எதுவும் ஆபத்து வராதா..?’’

விகடனில் நான் நிருபராகப் பணிபுரிந்த ஆரம்ப காலகட்டங்களில், சொந்த பந்த நட்பு வட்டாரங்களில் அதிகமாக எதிர்கொள்ளும் கேள்வி இதுதான். ‘ஆமா... லொள்ளு சபா மனோகரை மெரினா பீச் அழைச்சுட்டுப் போய் சுண்டல் விக்கச் சொல்றதுக்கும், நமீதாவை ஜிம்முக்கு கூட்டிட்டுப் போய் போட்டோ எடுக்கிறதுக்கும் எதுக்கு ஆபத்து வரப்போகுது? ஒருவேளை மனோகருக்கு ஆபத்து வந்தாத்தான் உண்டு’ என மைண்ட் வாய்ஸ் போட்டுக்கொள்வேன்.

பத்திரிகை ரிப்போர்ட்டர் என்றவுடன் மொந்தை கண்ணாடி, ஜோல்னா பை, குர்தாவோடு ஓர் உருவம்தான் பலருக்கும் மனக்கண்ணில் எழும். (கோ, சதுரங்கம் படங்களுக்குப் பிறகு கொஞ்சம் தேவலாம்!)

அந்த ரிப்போர்ட்டர், நள்ளிரவில் ஊழல் அரசியல்வாதி வீட்டில் ஏறிக் குதித்து, ஏதேனும் தேசத் துரோக ஆவணத்தைக் கைப்பற்றி ஓடி வரும்போது, ஜிம் பாய்ஸ் மடக்கிக் கொண்டுபோய் அழுக்கு கோடவுனில் கழுத்தறுப்பார்கள் அல்லது கார் ஏற்றிக் கொல்வார்கள். அவர் சாவதற்கு முன், ‘‘என்னைச் சாகடிச் சுடலாம்... என் பேனாவை... அதுக்குப் பின்னாடி வரப்போற ஒரு கூட்டத்தை உன்னால ஒண்ணும் பண்ண முடியாது. ஜெய்ஹிந்த்...’’ எனச் சவால்விட்டு சாவார்.




எனக்கு நடந்த அதிகபட்ச ஆபத்தெல்லாம், ‘‘ஏய்... யாருய்யா அந்த லூஸுப் பையன்... ஒரு 300 ரூவா ரெமுனரேஷன் வாங்குவானா? ஏய்ய்... என்னை வாங்காதீங்கய்யா பழி, அவனைப் போட்ருவேன் பொலி...’’ என டி.ஆரிடம் திட்டு வாங்கியதும், ‘‘ஃபைனலி ஐ வார்ன் ஹிம்...’’ என பாரதிராஜா சாரிடம் சீறல் வாங்கியதும்தான். ‘முரசொலி’யில் அவ்வப்போது ‘லூஸுப் பையனின் அராஜகம் பாரீர்’ எனப் பாராட்டு விழா நடக்கும்.

சுஜாதா சார், ஒரு முறை அன்பாகக் கண்டித்து வீட்டுக்குக் கூப்பிட்டு இருந்தார். தங்கர்பச்சான் சார், ‘‘ஏங்க... மோசம் பண்றானுவோங்க...’’ என அலைபேசுவார். விகடனில் லூஸுப் பையன் பகுதியை ஆரம்பித்து ஒரு வருடம் வரை நான்தான் எழுதினேன். அதற்கு முன்பு அஞ்சாறு வருடங்கள் பல்வேறு பெயர்களில் காமெடி ஏரியாக்களை எழுதியது உண்டு.

அப்போது சினிமா ஏரியாவில் பேட்டிக்குப் போகிற இடங்களில், ‘‘எவன்யா அவன்... அந்த லூஸு... உள்ள தள்ளிருவேன்யா அவனை...’’ எனச் சிலர் என்னிடமே எகிறுவார்கள். ‘‘அட ஏன் சார்... அந்த ஆபீஸுக்குப் போயி அஞ்சு வருஷம் ஆகுது. கொஞ்சம் டைம் குடுங்க... கண்டுபிடிச்சுச் சொல்றேன்...’’ என்றபடி வந்துவிடுவேன்.

வாராவாரம் அரசியல் நிருபர் மை.பா. அண்ணன் படு பயங்கரக் கெட்ட வார்த்தைகளைப் போட்டு, ‘‘ஏண்டா என் ஏரியால தாலியறுக்குற... எங்க போனாலும் எவன் அவன்னு என்னைக் காய்ச்சுறாங்கடா...’’ எனப் பூ மாரிப் பொழிவார். சின்னக்குத்தூசி அய்யா ஒரு முறை, ‘‘இந்த லூஸுப் பையன் பக்கம் இருக்கே... தமிழ்ச் சமூகத்தோட முகமூடிகளைக் கிழிக்கிற பக்கம்யா. நையாண்டியும் ஒரு வலுவான ஆபரேஷன் கத்திதான்...’’ என்றார். அதுதான் நிஜம்!



இதுபோக, அவ்வப்போது நைட் ரவுண்ட்ஸில் இருக்கும்போது ஜெமினி பக்கமோ, கோயம்பேடு பக்கமோ டிராஃபிக் போலீஸ் நிறுத்தி, ‘‘வாய ஊது!’’ என்பார்கள். ‘‘சார்... பிரஸ் சார்...’’ என்றால், ‘‘சார், என் மச்சான எதாவது மினிஸ்டர்கிட்ட பி.ஏ—வா சேத்துவிட முடியுமா?’’ எனப் பகீர் அப்ளிகேஷன் போடுவார்கள்.

திடுதிப்பென்று எடிட்டோரியல் மீட்டிங்கில், ‘‘சைக்கோ கொலைகாரன் மேட்டரை யார் டீல் பண்றா? நேத்துகூட ஒரு வாட்ச்மேன் தலைல கல்லைத் தூக்கிப் போட்டுக் கொன்னுருக்கான். முருகா... போட்டோகிராஃபர் விவேக்கைக் கூட்டிட்டு இன்னிக்கு நைட் ஃபுல்லா

வடபழனி, கே.கே.நகர் ஏரியால நீ ரவுண்ட்ஸ் போயிரு...'' என ஃபிக்ஸ் பண்ணுவார்கள். காலையில் கண் சிவக்க வந்து, ''சார்... போலீஸும் மக்களும் ஆயுதங்களோட தேடுறதை எல்லாம் போட்டோஸ் எடுத்திருக்கோம். அவனைப் பார்க்க முடியலை...'' என்றால், ''இல்லையில்ல... நான் டிபார்ட்மென்ட்ல விசாரிச்சுட்டேன். இன்னிக்கு அவன் வியாசர்பாடி, புளியந்தோப்பு ஏரியாவுக்கு ஷிஃப்ட் ஆகிட்டானாம். இன்னிக்கு நைட் அந்தப் பக்கம் போயிருங்க...'' என போலீஸ் ரிப்போர்ட்டர் கொளுத்திப்போட்டுவிட்டுப் போவார். அன்றைக்கும் சிவராத்திரிதான்.

மங்களகரமாக மறுநாளே சிம்ரன் பேட்டி அமையும். இருப்பதிலேயே புதுச் சட்டையைப் போட்டுக்கொண்டு கிளம்புவோம். ஆன் தி வேயில் சப்—எடிட்டர் போன் பண்ணி, ''முருகன்... 'ராஜுசுந்தரத்தோட காதல் முறிஞ்சுருச்சா? இப்போ கமல் சாரோட லிவிங் டுகெதர்ல இருக்கீங்களாமே?'ங்கிற கேள்விக்குப் பதில் வாங்காம ஆபீஸ் பக்கம் வந்துறாதீங்க...'' என வெடிகுண்டைக் கடித்து வீசுவார்.

''ஹாய்... ஹவ்ஸ் யூ?'' என கேரவனில் காபி கொடுத்துச் சிரிக்கும் சிம்ரனிடம் இந்தக் கேள்வியை எப்படிக் கேட்பது? சுற்றி வளைத்து, மென்று முழுங்கி அந்தக் கேள்விக்குப் பதில் வாங்கி வருவதற்குள் மனுஷனுக்கு டவுசர் கிழியும்.

'எடக்குக் கேள்வி — மடக்குப் பதில்' என விடியும்போதே விசித்திரமான ஐடியாவோடு வருவார் ஒரு ரிப்போர்ட்டர். அதுவும் பலர் தலையில்தான் வந்து விடியும். 'விஜய் அரசியலுக்கு வர்றதைப்பத்தி என்ன நினைக்கிறீங்க?' இந்தக் கேள்வி அஜீத்துக்கு. 'அழகிரி நல்லவரா... கெட்டவரா?' இது ஸ்டாலினுக்கு. 'சிம்பு — தனுஷ் யார் சிறந்த நடிகர்?' இது நயன்தாராவுக்கு. 'ஜெயலலிதா — சசிகலா ஒப்பிடுக?' இது ஓ.பன்னீர்செல்வத்துக்கு... என சகல திசைகளிலும் தலை கிறுகிறுத்துத் திரிவோம்.

திடீரென்று, ''ரிசப்ஷன்ல ஒருத்தர் வெயிட் பண்றார்... போய் சின்சியரா அட்டெண்ட் பண்ணு. கவர் ஸ்டோரிக்கே வாய்ப்பு இருக்கு...'' எனக்

கோத்துவிட்டுப் போவார்கள். கீழே போனால், நம்மைப் பார்த்ததும் நெஞ்சு வரைக்கும் பேன்ட் போட்ட ஒருவர், கையில் இருக்கும் குண்டு பல்பைக் கரகரவெனக் கடித்துத் தின்ன ஆரம்பிப்பார். பையில் இருந்து ஒரு பாம்பை எடுத்து வாய்க்குள்விட்டு மூக்கு வழியே இழுத்துக்காட்டி, அப்துல் கலாமோடு நிற்கிற அஞ்சாறு போட்டோக்களை வீசிக் கலவரப்படுத்துவார்.

கண்ணடைக்கும்போதே மெரிடியன் ஹோட்டல் வாசலில் நின்றபடி, ''ஜி... இன்னிக்கு நம்ம பிரஸ் மீட் இருக்கு... மறந்துட்டீங்களாஜி!'' என போன் அடிப்பார் ஒரு பி.ஆர்.ஓ. 'புரட்சி... புரட்சி' என மனசு கூவிக்கொண்டு இருக்கும்போதே, டி.வி. காம்பியர்களை அழைத்துப்போய் ரங்கநாதன் தெருவில் தீபாவளி பர்சேஸ் செய்கிற அசைன்மென்ட் வரும். காதலியோடு மாயாஜாலில் படம் பார்க்க பிராமிஸ் பண்ணி, வாழ்வில் முதல்முறையாக கால் டாக்ஸி எல்லாம் புக் பண்ணி, ரொமான்டிக் மூடில் கிளம்பும்போது, ''நீங்க லக்கி பாஸ்... நடிகர் செந்திலோடு எலெக்ஷன் பிரசாரம் கவரேஜுக்குக் கிளம்பறீங்க. இப்பிடியே சிந்தாதிரிப்பேட்டை ரவுண்டானா போனீங்கன்னா, அப்பிடியே காஞ்சிபுரம், ஈரோடு, பொள்ளாச்சி...'' என அசைன்மென்ட் வரும்.

சாயங்காலம் சாரு நிவேதிதா சந்திப்பு, நள்ளிரவு வரை எஸ்.ராமகிருஷ்ணன் உரை என ஒரு நாள் அமையும். 'மனசே சரியில்லையே' என ஈஷாவில் யோகா சேர்ந்திருப்போம். கிளாஸ் முடிந்து பார்த்தால், ஒரே நம்பரில் இருந்து 17 மிஸ்டு கால்கள் இருக்கும். அவசரமாகப் பேசினால் ஒருவர் ஹஸ்கி வாய்ஸில், ''ரெட் ஹில்ஸ் பக்கம் சாராயம் காய்ச்சுறாங்க... எடத்தைக் காட்றேன் ஒடனே வாங்கய்யா...'' என்பார்.

விடியற்காலையில் ஒருவர் நாகர்கோவிலில் இருந்து போன் பண்ணி, ''த்ரிஷா அம்மா மொபைல் நம்பர் கெடைக்குமா சார்... திறப்பு விழாவுக்குக் கூப்பிடணுங்க!'' எனக் கடுப்பேத்துவார். அதிகாலை 4 மணிக்கு காசிமேட்டில் இருந்து நடுக்கடல் வரை ஒரு மீன்பிடிப் படகுப்

பயணம் கிடைக்கும். எதிர்பாராத ஒரு நாளில், கேரளக் காடுகளில் போராளி அஜிதாவுடன் அதி அற்புதமான சந்திப்பு வாய்க்கும்!

நான் அரசியல் — புலனாய்வுப் பத்திரிகையாளனாக இருந்தவன் இல்லை. இவை ஒரு சாமான்யப் பத்திரிகையாளனின் குறிப்புகள். பத்திரிகையாளனின் வாழ்க்கை நிஜமாகவே அதி சுவாரஸ்யமானது. வாழ்வின் பல பக்கங்களுக்கும் பயணப்படும் வாய்ப்பைத் தருவது. அவன் அனுதினமும் கூடுவிட்டுக் கூடு பாயும் வித்தைக்காரனாகவே வாழ ஆசீர்வதிக்கப்பட்டவன் அல்லது சபிக்கப்பட்டவன். தனது எல்லாப் பொழுதுகளையும் அவன் இந்தச் சமூகத்துடனும் சமூகத்துக்காகவுமே பகிர்ந்துகொள்கிறான். வரலாறுகளை அவன்தான் உருவாக்குகிறான். ஆனால், அவன் ஒருபோதும் வரலாறு ஆவதில்லை. அனைத்துக்கும் அவன் சாட்சி.

அசையும் மரங்களை உணரும் கண்கள், காற்றை அறியாதது மாதிரி... எல்லோரையும் எழுதிவிட்டு, காற்றைப்போல வாழ்பவர்கள்தான் பல நிருபர்கள்!

வாழ்வின் மிச்ச சொச்சங்களையும் உச்சபட்சங்களையும் தினசரி கடப்பதால், அதன் நிலையாமையைப் பத்திரிகையாளர்களைப் போல் அறிந்தவர்கள் யாரும் இல்லை. அதனால்தான் ஒரு கொடூரத்தை போலீஸைப் போலவும், ஒரு மரணத்தை டாக்டரைப் போலவும் அவர்களால் பார்க்க முடிகிறது. ஓர் அரசை உருவாக்கவும் அகற்றவுமான வலிமை மக்களுக்கு அடுத்ததாக மீடியாக்களுக்கே இருப்பதாக நான் உறுதியாக நம்புகிறேன்.

தவறான, அதிகாரத்துக்கு விலைபோகும் மீடியாக்காரர்களும் இருக்கிறார்கள். ஆனால், உண்மையான, துணிவான பத்திரிகைக் குரல்கள் இல்லாவிட்டால் என்ன ஆகும் இந்த தேசம்?

போஃபர்ஸில் இருந்து அலைக்கற்றை வரை ஊழலில் திளைக்கும் அதிகாரத்தின் முகமூடிகள் கிழிக்கப்படாமலேயே போயிருக்காதா? சமச்சீர்க் கல்வி குழப்பம் வரை மீடியாக்களின் எதிர்ப்பு அலைகள்

இல்லாவிட்டால், இன்னும் எத்தனை அவலங்கள் அரங்கேறிக்கொண்டு இருக்கும். இப்போதே இந்தக் கேவலமான அரசியல் ஆட்டத்தில் இந்தப் பாடு... ஈழப் போராட்டத்தில் விகடன் மாதிரியான நேர்மையான பதிவுகள் இல்லாவிட்டால், என்ன கூத்தடிப்பார்கள் இந்த அரசியல்வாதிகள்?

சட்டசபையில் கேடுகெட்ட எம்.எல்.ஏ—க்கள் ஆபாசப் படம் பார்த்தால், அடுத்த அரை மணியில் தேசம் அலறுகிறதா இல்லையா? பெண் சிசுக் கொலையில் இருந்து மரபணு மாற்றம் வரை இவர்கள் கொண்டுவந்த உண்மைகள் எவ்வளவு இருக்கும்? ஒரு மேதாபட்கரை... கத்தாரை... சுப.உதயகுமாரனை... மக்கள் முன்பு கொண்டுவந்து நிறுத்தியிருக்காவிட்டால், வரலாற்றையே திரித்துவிடமாட்டார்களா இந்தப் போலிவாதிகள்?

பத்திரிகைக்காரன் என்பவன் இரவு, பகல், விடுமுறை எல்லாம் இல்லாதவன். எல்லோருக்குமான அடையாளங்களைத் தந்துவிட்டு, எந்த அடையாளங்களும் இன்றி அந்திமத்தில் வாழும் பத்திரிகை நண்பர்களையும் நான் அறிவேன். அவர்களின் திசைக்குக் கை தொழுகிறேன்!



நான் பத்திரிகைக்காரனாக ஆனது ஒரு வரம். அண்ணா சாலை காயின் பூத் ஒன்றில் இருந்து தொலைபேசிய ஒரு கிராமத்தானை, கண்ணன் சார் மட்டும் விகடனில் வேலைக்குச் சேர்க்காமல் போயிருந்தால், வாழ்வின் அரிய தரிசனங்களையும் மதிப்பீடுகளையும் நான் இழந்திருப்பேன். அதுதான் இந்த வாழ்வை, எழுத்தை எனக்குச் சொல்லித் தந்தது.

நானும் நண்பன் அருள் எழிலனும் ஒரே நாளில் விகடனில் வேலைக்குச் சேர்ந்தோம். நான் ஏவி.எம். ஸ்டுடியோவில் கிசுகிசுக்களுக்கு அலைந்துகொண்டு இருக்கும்போது, அவன் வயநாடு மலைவாழ் மக்களின் வாழ்வைப் பற்றி சி.கே.ஜானுவுடன் பேசிக்கொண்டு இருப்பான். நான் ‘கோலங்கள்’ ஷூட்டிங்கில் தேவயானியைப் பார்த்துக்கொண்டு இருக்கும்போது, அவன் சர்ச்சில் மணி அடிக்கிற மெலிஞ்சி பற்றி ஹ்யூமன் ஸ்டோரி எழுதிக்கொண்டு இருப்பான்.

‘‘மச்சான்... நாமெல்லாம் நெஜமாவே ரிபெல் பாத்துக்க...’’ என்பது அவனது பஞ்ச் டயலாக்.

நிஜமாகவே நான் அறிந்த பத்திரிகைப் போராளிகளில் அவனும் ஒருவன். ஈழப் போராட்டத்தில் இருந்து கூடங்குளம் பிரச்னை வரை இடைவிடாமல் இயங்கிக்கொண்டு இருக்கிறான். அருள் அடிக்கடி, ‘‘ஏதோ மச்சான்... கண்ணன் சாரால நாம இந்தச் சமூகத்துக்குக் கொஞ்சமாவது பயன்பட்டு இருக்கோம்ல...’’ என்பான். அது உண்மைதான்.

சமூகத்துக்குப் பயன்படும் ஒரு தலைமுறையை ஆசிரியர்களும் பத்திரிகையாளர்களும்தானே தீவிரமாக உருவாக்கித் தர முடியும்?

பத்திரிகையாளனின் உலகம், மனித முகங்களாலும் மனங்களாலும் நிறைந்துகிடக்கிறது. சிறைக்கூடத்தில் இருந்து பெருவெளியை நம்பிக்கையாகத் துழாவும் பேரறிவாளன் முகம் முதல்... எப்போது போனாலும் தாடையைக் கைகளால் தாங்கிப் பிடித்துக்கொண்டு, ‘ம்ம்ம்ம்...’ எனக் கண்களை உருட்டும் பி.சி.ஸ்ரீராமின் முகம் வரை எத்தனை முகங்கள்?

‘‘சிட்டிக்குள் மீன்பாடி வண்டி ஓட்டக்கூடாதுனு சொல்லிட்டாங்க. இனிமே நாங்க எப்படிப் பொழைப்போம்?’’ எனக் கைகள் நீட்டிக் கதறிய வண்டிக்காரரில் இருந்து, ‘‘சார்... சார்... அவரைப்பத்தி நான் அப்படிச் சொன்னேன்னு எழுதிராதீங்க. ஏதோ உணர்ச்சி வேகத்துல பேசிட்டேன்...’’ என்ற ஹீரோயினின் குரல் வரை எத்தனை குரல்கள்?

ஒரு சொல்... செயல்... எழுத்து... ஏதோ ஒன்றுதான் நம் வாழ்வை அர்த்தப்படுத்தும் என்பார்கள். முத்துக்குமார் கடிதம் எழுதி வைத்துவிட்டுத் தீக்குளித்து இறந்துபோனபோது மனசு தகித்துக்கொண்டு இருந்தது. அவரவருக்கான உணர்வுகளிலும் போராட்டங்களிலும் ஏதேனும் செய்ய வேண்டும் இல்லையா..? கண்ணன் சார் போன் பண்ணி, ‘‘முத்துக்குமாருக்கு நீ ஒரு பதில் கடிதம் எழுதேன்...’’ என்றார். ஆயிரமாயிரம் நண்பர்களின் குரலாக தோழன் முத்துக்குமாருக்கு ஒரு

கடிதம் விகடனில் எழுதினேன். அந்தக் கடிதம்தான் ஒரு பத்திரிகைக்காரனாக என் வாழ்வில் ஓர் அர்த்தம் உள்ள பொழுது.

அப்புறம்... சென்ட்ரல் பக்கம் பிளாட்ஃபாரத்தில் வசிக்கும் ஒரு சிறுமியைப் பற்றி எழுதியிருந்த மறு வாரம், அவள் படிப்பதற்காக விகடன் மூலமாக நிதி கிடைத்தது. ''அண்ணே, இப்போ நான் படிக்கிறேன்ணே... ரொம்பத் தேங்ஸுண்ணே!'' என அவள் கண்கள் மலர்ந்து எதிரே நின்ற ஒரு கணம்... அற்புதம்!

# 29

# பாடல்கள் வெறும் பாடல்களாக இல்லை!

**ஒ**ரு வேலையாக, கால் டாக்ஸி எடுத்துக் கொண்டு மதுராந்தகம் வரை போயிருந்தேன்!

வேலை முடித்து வருகிற கேப்பில் டிரைவரிடம் பழ வாசனை. ''அய்யய்யோ தலைவா... நீங்க கட் பண்ணிட்டுக் கெளம்புங்க. நான் பஸ்ல போயிக்கிறேன்!'' என்றேன்.

அவர் பதற்றமாகி, ''சார்... சார்... சிக்ஸ்ட்டி தான் சார். இங்க பாருங்க ஸ்டாக்வெச்சுட்டேன். ப்ளீஸ் உக்காருங்க சார்!'' எனக் கெஞ்சி உட்காரவைத்தார். ஈ.சி.ஆரைப் பிடித்ததும் அவர் ஒரு சி.டி—யைச் சொருகித் தட்ட, 'ஆண்டவனைப் பாக்கணும்... அவனுக்கும் ஊத்தணும்...' பாடல் ஒலித்தது. நான் போனில் பிஸியாகிவிட்டேன்.

மாயாஜாலைக் கடந்ததும் கவனித்தால், அந்தப் பாடலே ஒலித்துக்கொண்டு இருந்தது. ''ஏங்க... பாட்டை மாத்துங்க!'' என்றால், ''இல்ல சார்... சி.டி. முழுக்க இந்த ஒரு பாட்டைத்தான் பதிஞ்சுவெச்சுருக்கேன்!'' என்றபடி மேலும் ரெண்டு பாயின்ட் சவுண்டைக் கூட்டினான் தலைவன்.

அடையாறு வருகிற வரை அதே பாடல்தான் ரிப்பீட். வீட்டுக்குள் சென்று பணம் எடுத்து வரும் இடைவெளியில் அவர் குவார்ட்டரை

முடித்திருந்தார். காசை வாங்கிக்கொண்டு, என் தோளைப் பிடித்து அழுத்தி இழுத்து, ‘‘ராஜ்ஜியம் இருக்கு... ஒரு ராணி இல்லையே...’’ என்று சத்தமாகப் பாடிவிட்டு போயே போய்விட்டார்!

வந்து படுத்தால், மண்டை முழுக்க அந்தப் பாட்டும் அவர் முகமுமே கொலாஜ் ஆகிக்கொண்டு இருந்தது. அவர் யார்... என்ன... எதுவுமே தெரியாது. ஆனால், அவருக்கும் அந்தப் பாட்டுக்குமான உறவு, கடைசியாகப் பாடிவிட்டுப்போன அந்த வரிகள், அவரைப் பற்றி ஏதேதோ கதைகளைச் சொல்லின.

நினைக்கும்போதே பட்டென்று திறந்த சாயங்கால ஜன்னலில் இளங்கோ அண்ணனின் முகம் தோன்றுகிறது. கூடவே, மணிமொழி அக்காவின் முகம் பரவி, ‘மயங்கினேன்... சொல்லத் தயங்கினேன்’ பாடல் ஒலிக்கத் துவங்குகிறது. 20 வருடங்கள் இருக்கும். ஒரு ‘டி 90’ கேசட் முழுக்க ‘மயங்கினேன் சொல்லத் தயங்கினேன்...’ பாடலைப் பதிந்துவைத்து, சாயங்காலம் ஆனால் போட்டுவிடுவான் இளங்கோ அண்ணன். அந்த நேரத்தில் அம்சாத்தா வீட்டுக் கொல்லையில் ஆட்டுக்கல்லில் மாவாட்ட வந்திருக்கும் அக்கா. ‘கம்னேட்டி... அத அமுத்துரா’ என ஆத்தா திட்டத் திட்ட, அதே பாட்டு மறுபடி மறுபடி ஒலித்துக்கொண்டு இருக்கும்.

கைலி, முண்டா பனியனோடு துண்டால் முதுகை முறுக்கிக்கொண்டு, பாடல் பின்னணியில் வேலிப்படலோரம் அவன் நிற்கிற காட்சி புகைப்படம்போல் இருக்கிறது இப்போதும். நெடுந்தூர ஊர் ஒன்றில் அக்கா வாக்கப்பட்டுப்போன நாளில் இருந்துதான் அந்தப் பாட்டுச் சத்தம் நின்றிருக்கக்கூடும்!

**அ**தன் பிறகு, பூண்டி காலேஜில் சேர்ந்திருந்த ரவி மாமா, வீட்டில் நேஷனல் டேப் ரெக்கார்டர் வாங்கிவைத்து, பாட்டுப் போட ஆரம்பித்தார். ‘கண்மணி நீ வரக் காத்திருந்தேன், ஜன்னலில் பூத்திருந்தேன்...’ அவரது ஃபேவரைட். கொல்லையில், எறும்புகள் ஊரும் செம்பருத்திச் செடியின் அடியில், சீயக்காய் மணக்க ஈருளியில் பேன் பார்த்தபடி

கிசுகிசுத்துக்கொண்டு இருக்கும் அத்தைகளின் மேல் அந்தப் பாடல் ஒலிக்கும்.

கோகுல் சாண்டல் பவுடர், ரோஸ் கலர் ரிப்பன், மருதாணி காயும் விரல்கள், காற்றில் உருளும் கொத்து முடி, பித்த வெடிப்புப் பாதம், ஆதுரம் ததும்பும் ஸ்பரிசங்கள்... இவ்வளவும் எழுகிறது இந்தப் பாட்டுக்குப் பின்னால். 'ஈரமான ரோஜாவே, என்னைப் பார்த்து மூடாதே...' பாடலைப் பிரபலப்படுத்தியது கட்டாரி மாமா. 'உன் வாசலில் என்னைக் கோலம் இடு, இல்லை என்றால் ஒரு சாபம் இடு...' என்ற வரிகள் ஒலிக்கும்போது 'மாலைமதி'க்குள் லெட்டர் வைத்துக்கொண்டு, அத்தைகளின், அக்காக்களின் வீடுகளுக்குப் போன தேவதூதர்களில் நானும் ஒருவன். யாரும் அறியாத் தனிமைகளில், இதயத்தில் இருந்து மெல்லிய குரலில் அக்காக்கள் பாடுவதைக் கேட்டு இருக்கிறீர்களா? அது... ஏக்கமும் பிரியமும் ததும்பும் எல்லை இல்லாத ஆத்மார்த்தம்.



இப்போது நரை ஓடி, காய்த்த கைகளில் பிள்ளைகளை இழுத்துக்கொண்டு விசேஷ வீடுகளிலும் எழவு வீடுகளிலும் காணக் கிடைக்கிறார்கள் அத்தைகள். செம்பருத்திச் செடிகள் முளைத்துக் கிடந்த இடத்தில் பாத்ரூம் கட்டியாயிற்று. புழக்கடையில் ஓடும் பாத்திரம்

கழுவிய தண்ணீரைப் போல, காலம் ஓடிவிட்டது. ஆனால், இன்னும் சில பாடல்களில்தான் அத்தைகள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள்... தேவதைகளாய்... சிறு தெய்வங்களாய்... அப்பழுக்கற்ற பிராயத்தின் பேரழகிகளாய்!

**‘ஒ** லியும் ஒளியும்’ பார்க்க ஊரே திருவிழா மாதிரி ஆயத்தமாகும் காலம் இருந்ததே... வெள்ளிக் கிழமைதான் டி.வி—யில் அப்போது புதுப் பாட்டு கேட்க முடியும்.

முபாரக் அலி வீட்டில் அடித்துப் பிடித்து ஆளுக்கு நாலணா கொடுத்துக் கூடுவோம். அண்ணன்கள் ஆளுக்கொரு பேப்பர் கொண்டுவந்து, ஒளிபரப்பாகிற பாடல்களைக் குறித்துக்கொண்டு, கொரடாச்சேரி போய் ரெக்கார்ட் பண்ணிக் கொண்டு வருவார்கள். அப்போது ஒரு சித்தப்பா கொரடாச்சேரியில் ப்ரியா என்ற பெண்ணைக் காதலித்தார். ஹெட்—மாஸ்டரின் மகள் அந்த ப்ரியா.

சித்தப்பா கொரடாச்சேரியில் ரெக்கார்டிங் கடை நடத்திய அன்பரை நட்பு பிடித்தார். ‘ஓ... ப்ரியா ப்ரியா...’, என் ப்ரியா ப்ரியா...’ என்று ப்ரியா என்கிற பெயர் வருகிற பாடல்களாகத் தேர்ந்தெடுத்து, ஒரு கேசட்டில் பதிவு பண்ணினார். அந்தப் பெண் கிராஸ் ஆகிற நேரங்களில் ‘ப்ரியா பாடல்’களைத் தட்டிவிட்டு, காலாட்டியபடி கோல்ட் ஸ்பாட் குடித்துக்கொண்டு இருப்பார் சித்தப்பா. ஆறேழு மாதங்களாக ரோட்டிலும் வீட்டிலுமாக இதே ரப்சர். பாட்டு போடும்போது அந்தப் பெண் மட்டும்தானா கடந்துபோகும்? ஹெட்—மாஸ்டர் தகப்பன், மாமன், பெரியப்பன்களை எல்லாம் ‘ப்ரியா பாட்டு’ கடுப்பேற்றி இருக்கிறது.

ஒரு விசேஷ தினத்தில், வெட்டாத்துப் பாலத்தில் வைத்து சித்தப்பாவை வெளுத்தெடுத்தது அந்தப் பெண்ணின் உறவுக்காரக் கும்பல். அடுத்த வாரமே அந்தப் பெண்ணை மன்னார்குடிக்கு ஷிஃப்ட் பண்ணினார்கள். கையில் மாவுக்கட்டுடன் அந்தச் சித்தப்பா, இளையராஜா சிரிக்கும் ரெக்கார்டிங் கடையில் ‘ஓ பாப்பா லாலி...’ ஒலிக்க உட்கார்ந்திருந்த காட்சி ஓர் ஈஸ்ட் மென் கலர் காவியம்!

இப்போது யாரைப் பார்த்தாலும் எஃப்.எம்—களிலும் சேனல்களிலும் பாடல்களை டெடிகேட் பண்ணிக்கொண்டே இருக்கிறார்கள். ‘ ‘டெடிகேட்’ என்பது எவ்வளவு பெரிய வார்த்தை? அதை இவ்வளவு சாதாரணமாக அடித்துத் துவைக்கிறார்களே’ என எனக்கே கோபம் இருந்தது. இப்போது யோசித்துப் பார்த்தால், ‘டெடிகேட்’தான் நமக்கும் இசைக்கும் பொருத்தமான இணைப்பு வார்த்தை என்று படுகிறது.

ஆடிக் காத்துக்கு நொச்சிப் பழங்கள் கொட்டிக்கொண்டே இருக்கும் கோடைகாலச் சாலைகள் மாதிரி, ஒரே பாட்டில் குப்பென்ற ஞாபக வாசத்தால் நிறைந்துவிடுகிறதே இந்த மனம்... எப்படி? பாடல்கள் தரும் நினைவுகளாலும் கண்ணீராலும் கருணையாலும் ஏகாந்தத்தாலும் தானே இயங்குகிறது நம் ஒவ்வொருவருக்குமான உலகம்?

**‘தா** யின் மணிக்கொடி பாரீர்’ எனச் செம்பட்டைத் தலை சிலுப்பிச் சிலுப்பி பிரேயரில் பாடும் லீலா, சடங்கான பிறகு பாடுவதை நிறுத்திவிட்டாள். சர்ச்சில்கூடப் பாடுவது இல்லை. ஆனால், அவளுக்குப் பாடல்கள் மேல் அவ்வளவு பிரியம். எப்போது பார்த்தாலும் பாட்டுப் புத்தகங்களைக் கொண்டுவந்து, சர்ச் திண்டில் வைத்து பாடிக் காட்டிக்கொண்டே இருக்கும் முரளியோடு வாழ்வதற்காகத்தான் அவள் ஓடிப்போனாள்.

‘ஒரு ஜீவன் அழைத்தது...’ பாடலில், ‘இனி எனக்காக அழ வேண்டாம்...’ என அவன் இழுத்துப் பாடும்போது... ‘யேசப்பா...’ என ஒவ்வொரு முறையும் லீலா தன் நெஞ்சில் கை வைத்துக்கொள்வது நினைவில் இருக்கிறது. அவர்கள் இப்போது எங்கு இருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. குழந்தைகள் நிறைந்த, மேரி மாதா சிலை வைத்து சாமந்திப்பூ பூத்த வீடு ஒன்றில் இப்போதும் ‘பெண்ணல்ல பெண்ணல்ல ஊதாப்பூ...’ — பாடலை அவன் அவளுக்காகப் பாடிக்கொண்டு இருந்தால்... எவ்வளவு அழகாக இருக்கும்?!

**எ** ட்டாவது படிக்கும்போது ஆண்டு விழாவில் மகேஸ்வரியோடு சேர்ந்து ‘ஆட்டமா தேரோட்டமா...’ பாடலுக்கு நெற்றியில் ரிப்பன் கட்டி, லிப்ஸ்டிக் போட்டு டான்ஸ் ஆடினேன். ஆடி முடித்துக் கை கோத்தபடி

கடைசியாக போட்டோவுக்கு நிற்க வேண்டும். அந்தப் பிள்ளை கையை நீட்டியபடி வியர்வை வழிய நிற்க, நான் கூச்சத்தில் ஓடிப்போய்ப் பதுங்கிக்கொண்டேன். அது எனக்கு ஒரு வருஷம் ஜூனியர்.

எட்டாவது முடிந்து வேறு ஸ்கூலுக்குப் போன பிறகு ஒரு நாள், குடவாசலில் பஸ்ஸுக்கு நிற்கும்போது பக்கத்தில் இருக்கும் மகேஸ்வரி வீட்டுக்குத் தண்ணி குடிக்கப் போனோம். திண்ணையில் நாங்கள் உட்கார்ந்து இருக்க, உள்ளே போய் டேப்பில் 'ஆட்டமா தேரோட்டமா...' பாட்டைப் போட்டுவிட்டு, மூச்சிரைக்க மகேஸ்வரி தண்ணீர் கொண்டுவந்து நீட்டியதை இப்போது நினைத்தாலும் சிலிர்க்கிறது. கோயம்புத்தூரில் இருந்து கருமத்தம்பட்டிக்கு வரும் கல்லூரிப் பேருந்தில் 'என்னைத் தாலாட்ட வருவாளா...' பாட்டை மட்டுமே போட வைப்பான் பிரசாத். அதுதான் விஜயலட்சுமிக்குப் பிடித்த பாட்டு. எங்கள் வகுப்பில் 20 பேர் விஜி மேல் காதல்வயப்பட்டு இருந்தார்கள். அந்த நேரத்தில் அத்தனை பயல்களும் 'என்னைத் தாலாட்ட வருவாளா...' எனப் பாடிக்கொண்டே திரிந்தார்கள்.

'நீ பார்த்த பார்வைக்கொரு நன்றி...' பாடல் கீர்த்தனாவுக்கும் எனக்குமான ரிங்டோனாக வெகு நாட்கள் இருந்தது. இப்போதும் எங்கேனும் அந்தப் பாடல் வழிந்தால், தொண்டைக்குள் பபிள்ஸ் பறக்கின்றன. முதுகில் வரி எழுதிக் கண்டுபிடிக்கும் பால்யத்தின் விளையாட்டை மறுபடி காதலில் ஆடிப்பார்க்கும்போது பாடல்கள் எவ்வளவு பெரிய காவியங்களாக மாறிவிடுகின்றன? பாடல்கள் வெறும் பாடல்கள் மட்டுமே இல்லை. ராமநாதபுரத்தில் அப்பாவோடு முதல்முறையாக தியேட்டருக்குப் போய் 'கடலோரக் கவிதைகள்' படம் பார்த்துவிட்டு வந்து பஸ் ஸ்டாண்டில் படுத்திருந்தபோது, 'கொடியிலே மல்லிகைப்பூ மணக்குதே மானே...' பாடலை மாமாவும் ஒரு போலீஸ்காரரும் மாறி மாறிப் பாடிக்கொண்டு இருந்தது, இந்த நொடி வரை பிசிறு இல்லாமல் நினைவிருக்கிறதே எப்படி?

**ந** ண்பன் குணா, மனைவி கர்ப்பமாக இருந்தபோது எப்போதும் வயிற்றுக்குப் பக்கத்தில் இளையராஜாவின் 'ஹவ் டு நேம் இட்'டையும்

‘நத்திங் பட் விண்ட்’டையும் ‘ரமண மாலை’யையும் வைத்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான். பெண் குழந்தை பிறந்தபோது, குடும்பமே கூடி அங்கலாய்த்தபோதும் ‘ஜென்ஸி’ எனப் பெயர் வைத்து அவன் கொஞ்சியது எவ்வளவு பெரிய பிரியம்!

‘தாழம்பூவே கண்ணுறங்கு...’ பாடலைத் தேடித் தேடிப் பிடித்து ரிங்டோனாக வைத்துக்கொண்ட கீதக்குமாரி சிஸ்டருக்கு 40 வயதாகியும் ஏன் இன்னும் கல்யாணம் ஆகவில்லை? ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு தஞ்சாவூர் ஞானம் ஒயின்ஸ் வாசலில் எப்போது பார்த்தாலும் ‘உலவும் தென்றல் காற்றினிலே...’ பாட்டைப் பாடிக்கொண்டு காசு கேட்கும் பெரியவர் எங்கே போனார்? ஒவ்வொரு முறையும் ‘அன்புள்ளம் கொண்ட அம்மாவுக்கு’ பாடலை கே.ஏ.குணசேகரன் குருப்பில் அந்தப் பெண் பாடி முடிக்கும்போதெல்லாம் அழுகை வருகிறதே... ஏன்?

‘சம்மதமா சம்மதமா... நீ இந்துவென்றால் சொல் சம்மதமா?’ பாடலை கோவன் பாடிக் கேட்கும்போது எல்லாம், உதிரம் சூடாகி இன்னும் கொஞ்சம் மனுஷனாகிறோமே... எப்படி? ஒரு நள்ளிரவில் பேசின் பிரிட்ஜ் பக்கம், குடிசை வாசலில் இறந்துகிடந்த ஒரு அம்மாவுக்கு முன் பறையடித்தபடி ‘மரண கானா’ விஜி பாடிய, ‘இந்த ஊத்த உடம்பு மனுஷனுக்கு’ பாட்டை ஜென்ம ஜென்மத்துக்கும் மறக்க முடியுமா? காசி ஆனந்தனின் ‘அழகான அந்தப் பனைமரம்’ பாடலை தேனிசை செல்லப்பா குரலில் கேட்கும்போதெல்லாம் ஒரு நூற்றாண்டு உயிர்க்கிற மாதிரி இருக்கிறதே!

சிரிப்பு, அழுகை, பிறப்பு, இறப்பு எனப் பாடல்களாலேயே ஆகிவிட்டது இந்த வாழ்க்கை. அதுவும் நாலு தலைமுறைக் கண்ணீரையும் புன்னகையையும் இந்தப் படுபாவி இளையராஜா எடுத்துக்கொண்டார். நள்ளிரவுக்கு மேல் ‘நின்னைச் சரணடைந்தேன் கண்ணம்மா...’ பாடலைக் கேட்கும்போது இன்ப — துன்பம், வன்மம் எல்லாம் கரைந்து, மனம் ஒரு விண்மீனாகி எல்லையற்ற பெருவெளியில் ஒளிர்ந்து ஒளிர்ந்து உதிர்கிறது. எத்தனை எத்தனை பாடல்கள்... பேரன்பின் கண்ணீரில்

ஆன்மா கரையும் தருணத்தைத் தாய்மையும், காதலும், இசையும்தானே தர முடியும்?

பாஸ்கர் சக்தி சார் ஒரு பாட்டு டிக்ஷனரி. ஒரு கார் பயணத்தில், 'பூ வண்ணம்போல நெஞ்சம்...' பாடலைக் கேட்டு, ''என்னங்க இந்த ராஜா..." என அசந்தபோது, ''இல்ல முருகன்... இதுக்கு மியூஸிக் சலீல் சௌத்ரி'' என்றார் பாஸ்கர் சார். 'காதல் வைபோகமே' பாட்டு வந்தபோது ''இது கங்கை அமரன்!'' என்றபடி ஒரு லிஸ்ட்டே சொன்னார். 'மேகமே மேகமே' பாட்டுக்கு இசை சங்கர் கணேஷ் என்று உங்களுக்குத் தெரியுமா? நமக்கு எல்லாமே இளையராஜாதான்! அலைகடலும் அவரே ஆழ்கடலும் அவரே என்றான பின், கரைகளும் நுரைகளும் என்னவாகும்?

எனது 20 வருடங்களை நடத்தியதும் ராஜாதான். அவரைப் பற்றி எழுதவே போரடிக்கிறது. காதலியிடம் முத்தம் கேட்பதைப் போல... மனைவியிடம் திட்டு வாங்குவதைப் போல... அம்மாவைப் பற்றி கவிதை எழுதுவதைப் போல!

பாடல்கள் போலவே எல்லோருக்குள்ளும் ஒரு பாடகன் எப்போதும் துள்ளிக்கொண்டு இருக்கிறான். சிறுவயதில் திருவிழாவில் அண்ணன்கள் மைக் ஏரியாவைக் குத்தகைக்கு எடுத்துக்கொள்ளும்போது, அவர்கள் இல்லாத கேப்பில் 'அல்லோ அல்லோ... பொங்கல் வைக்க இருப்பதால் அனைவரும் வருக!' எனச் சொல்லிவிட்டு ஓடிவிடுகிற ஆசை எல்லோருக்குள்ளும் இருக்கிறது. கண்ணதாசனின் வரிகளையே வாழ்க்கையாக்கிக் கொண்டவர்கள்... எம்.ஜி.ஆரின் பாடல்களையே வெறியாக, வேதமாக எடுத்துக்கொண்டவர்கள்... டி.எம்.எஸ்.போல, எஸ்.பி.பி.போல லோக்கல் ஆர்கெஸ்ட்ராக்களில் பாடிக்கொண்டு அந்த மகிழ்ச்சியிலேயே வாழ்ந்து முடித்தவர்கள்... எவ்வளவு பேர்? பறவைகள் தடயங்களே இல்லாமல் போய்விடுகின்றன. அவற்றின் எச்சங்கள் மரங்களாவதைப் போலத்தான் இந்த இசையும் பாடல்களும்.

நேற்று சந்தோஷமாக இருந்த மனம், இன்று சோகமாகிவிட்டது. ஏதோ மனச் சோர்வு. பகிர முடியாத தனிமை. பயம். நள்ளிரவைத் தாண்டியும்

உறக்கம் இல்லாமல் எழுந்து சிஸ்டத்தில் பாட்டு வைக்கிறேன். பொசுக்கென்று நெஞ்சில் ஏதோ நிம்மதி பூக்கிறது. ஜன்னலில் நிலா இறங்கும்போது இந்தப் பாட்டில் தூங்க ஆரம்பிக்கிறேன்...

'துன்பம் இனியில்லை சோர்வில்லை தோற்பில்லை...'

# 30

# காத்திருப்புகள், வாழ்க்கை முழுதும்!

**ம**னநிலை தவறியதால் கீழ்ப்பாக்கம் மனநலக் காப்பகத்தில் இருக்கும் நண்பர் ஒருவரின் அப்பாவைப் பார்ப்பதற்காகப் போனோம். ஆறேழு மாதங்களுக்கு முன்பு அவரை நாங்கள்தான் அங்கே கொண்டுபோய் சேர்த்தோம். அவருக்கு இப்படி ஆகி ஒரு வருடத்துக்கும் மேலாகிவிட்டது.

நள்ளிரவில் எழுந்து, ‘டிரெயின் வருது... டிரெயின் வருது...’ எனக் கத்தியபடி தெருவுக்கு ஓடிவிடுகிறார். ஏதேதோ பேசிக்கொண்டு தெரு நாய்களோடு சண்டையிடுகிறார். வீட்டுக்குக் கூப்பிடும் மனைவியைப் பிராண்டி வைக்கிறார். திடுதிப்பென்று தலையைப் பிடித்துக்கொண்டு பெரும் கூச்சலிடுகிறார்.

ஒரு முறை இப்படி நள்ளிரவில் எழுந்துபோய், பக்கத்துத் தெருவில் தோண்டி வைத்திருந்த குழிக்குள் விழுந்து பலத்த காயம்பட்டார். அக்கம்பக்கத்து ஃப்ளாட்காரர்கள் தங்களுக்கும் குழந்தைகளுக்கும் பாதுகாப்பு இல்லை என மொத்தமாகப் புகார் கொடுத்த பிறகுதான் அவரை அங்கே கொண்டுபோய் விட்டுவிட்டு வந்தோம்.

போன வாரம் போயிருந்தபோது அவருக்குக் கொஞ்சம் தேவலாம் எனப் பட்டது. கொண்டுபோயிருந்த பிஸ்கட் பாக்கெட்டைப் பாதி தின்று, மீதியை வெளியே விட்டெறிந்துவிட்டு சாதுவாக உட்கார்ந்து இருந்தார்.

மீன் குழம்பு சாப்பாடு கொண்டுவந்திருந்த மனைவியைப் பார்த்துச் சின்னதாகச் சிரித்துவிட்டு முகத்தைத் திருப்பிக்கொண்டார்.

''அவரைப் பார்த்தா இப்போ கொஞ்சம் தெளிவானா மாதிரி இருக்கே சார்... அழைச்சுட்டுப் போயிரலாமா?'' என டாக்டரிடம் கேட்டார் நண்பரின் அம்மா. அதற்கு அந்த டாக்டர், ''இல்லைங்க... அவர் இன்னும் முழுசா குணமாகலை. ராத்திரிதான் அட்ராசிட்டி பண்றார். நிச்சயமா இப்போ கொஞ்சம் முன்னேற்றம் இருக்குதான். இன்னும் கொஞ்ச நாள் வெயிட் பண்ணுங்க!'' என்றபடி போய்விட்டார். அம்மாவின் முகத்தைப் பார்த்தேன். அதில் உறைந்திருந்தது யுகங்களின் காத்திருப்பு. ஒரு கணம், மனம் தாள முடியாத துயரத்தில் அமிழ்ந்தது. ''கொஞ்ச நாள் வெயிட் பண்ணுங்க...'' என்ற டாக்டரின் குரல் இப்போதுகூட ஒலிக்கிறது.

அங்கு இருந்து திரும்பும்போது சொல்ல முடியாத உணர்வு நிலை. ஏதேதோ காரணங்களுக்காக மனநிலைப் பிறழ்ந்து, தன்னிலை அவிழ்ந்து இங்கே கிடக்கும் ஜீவன்களுக்காக, எத்தனை ஆத்மாக்கள் வெளியே காத்திருக்கின்றன? தனக்குத்தானே என்னென்னவோ பேசிக்கொண்டு, காலத்தை எட்டி உதைத்தபடி திரியும் இவர்களின் ஞாபகத்தில் எந்தெந்த முகங்கள் இருக்கும்? ஒரு தாய்மை... ஒரு காதல்... ஒரு நட்பு... ஒரு சகோதரம்... இவர்களுக்காக இதயம் துடிக்க எங்கோ காத்திருக்கும் என்பதை நினைக்கும்போதே கலங்குகிறது!

யோசித்துப் பார்த்தால் காத்திருப்புதான் இந்த வாழ்வின் மிகப் பெரிய சுவாரஸ்யமும் துயரமும் எனத் தோன்றுகிறது. ஒரு தாய்க்குப் பிரசவ வலி எடுக்கும் கணத்தில் இருந்தே தொடங்குகிறது ஒவ்வோர் உயிருக்குமான காத்திருப்பு. நார்மலா... சிசேரியனா? ஆணா... பெண்ணா? அலைபாயும் உறவுகளின் காத்திருப்பில் இருந்துதானே ஆரம்பிக்கிறது நமக்கான உலகம். கருவின் இருளில் இருந்து பூமியின் முதல் ஒளிக்கீற்றை வாங்கும் நொடிக்குத்தானே பத்து மாதம் காத்திருந்தோம்!

''அடங்க... கொற மாசத்துல பொறந்தவனா நீயி... பின்னால போய்யா'' — சென்ட்ரல் ஸ்டேஷனில், ஆபீஸ் அவர்ஸில்டிக்கெட்டுக்குக்

காத்திருக்கும் வரிசையில் புகுந்துவிட்ட ஒருவனை மொத்தப் பேரும் கொந்தளித்துப் பின்னால் தள்ளுகிறார்கள்.



''இந்த எழவுக்குத்தானய்யா ஓட்ட மாத்திக் குத்துனோம். எப்பய்யா கரன்ட் வரும்?'' — நின்றுவிட்ட மோட்டார் செட்டைப் பார்த்தபடி, வரப்பில் தவித்துக் காத்திருக்கிறார் ஒரு விவசாயி.

''இன்னும் ஆறு மாசத்துல எல்லாம் செட்டில் ஆகிரும் குட்டி. உடனே, மேரேஜ் பண்ணிக்கலாம்''— யாரோ ஒரு காதலன், காதலியைச் சமாதானப்படுத்திக்கொண்டு இருக்கிறான்.

''கம்பெனில வேல பார்த்துட்டு இருக்கும்போது டவர்லேருந்து தவறி வுழுந்துட் டானாம்... அங்க மலேசியா கவர்மென்ட்ல பேசித்தான் வாங்கணுமாம். பாடி வர்றதுக்கு நாலு நாள் ஆகுமாம்பா''— தூர தேசத்தில் செத்துப்போய்விட்ட மகனின் சடலத்துக்காக, தஞ்சாவூர் பக்கம் குக்கிராமத்தில் காத்திருக்கிறது ஓர் ஏழைக் குடும்பம்.

‘‘ரெண்டு மூணு நா லீவு கெடைச்சா... ஊர்ல புள்ளைய போய் பாத்துட்டு வந்துருவேன்’’ — பீகார் பக்கம் போர்வெல் கம்பெனிக்கு வேலைக்குப்போன புருஷனின் போனுக்காக அனுதினமும் காத்திருக்கிறாள் மனைவி. ‘‘ஜீவாவுக்குக் கதை சொல்லிட்டேன் பாஸ்... சொல்றேன்னு சொல்லியிருக்கார்’’ — பதற்றமாக தம் அடித்தபடி சொல்கிறான் ஓர் உதவி இயக்குநர் நண்பன்.

‘‘ஆகவே, தலைவர் வந்துகொண்டு இருக்கிறார்...’’ தலைவர்களைப் பார்க்க இப்போதும் இரவுகளில் ஏதேனும் ஒரு முச்சந்தியில் காத்துக் கிடக்கிறது ஜனக் கூட்டம். ‘‘கடவுள் வருவார்... நம்மை எல்லாம் காக்க வருவார்’’ — மொட்டைமாடிகளில் ஷாமியானா போட்டு பேசிக்கொண்டே இருக்கிறார்கள் மத போதகர்கள்.



‘‘அடுத்த மாசம் வேஜ்போர்டுல ஸ்கேல் இன்க்ரீஸ் பண்ணிருவாங்கம்மா...’’, ‘‘புரட்சி வரும் தோழர்...’’, ‘‘சனிக்கெழம தண்ணி லேட்டாதான் வருமாம்...’’, ‘‘எதாவது ஒரு முடிவை

சொல்லுடி...'', ''திரும்பவும் நாங்க சேருவோம்னு நம்பிக்கை இருக்கு சார்...'', ''இப்பிடிப் பண்ணுவானு நெனைக்கலைங்க... என் பையனை எப்பிடியாவது கண்டுபுடிச்சுக் குடுங்களேன்'', ''உங்க கடக ராசிக்குக் கூடிய சீக்கிரமே நெனைச்சது கைகூடுற கட்டம் இருக்கு...'', ''ஜெயிச்சுட்டு வந்து உன் முன்னாடி நிக்கிறேன்டா...'', ''மாப்ள வூட்ல போன் பண்றேன்னு சொல்லியிருக்காங்க...'', ''டைவர்ஸ் அப்ளை பண்ணிட்டு வெயிட் பண்றோம் நண்பா...'', ''நீயும் பணம் அனுப்புவ... ஒரு பொடவ எடுத்துத் தருவனு பாத்தேன். கோடித் துணிதான் கொண்டுவருவ போலயிருக்கு...'', ''அழாதீங்கம்மா... ஐ.சி.யூ. கொண்டு போறோம், இப்போதைக்கு எதுவும் சொல்ல முடியாது...''

எத்தனை எத்தனை காத்திருப்புகள் இந்த வாழ்க்கையில்? எங்கெங்கும் எல்லோரும் எதற்காகவேனும் காத்துக்கொண்டே இருக்கிறோம். உறவுகள், வியாபாரம், வேலைகள்... எல்லாமே காத்திருப்புகளாலேயே நிறைந்திருக்கின்றன.

**எ** ட்டு வருடங்களுக்கு முன்பு ஒரு ராத்திரி, கோடம்பாக்கம் ஹவுஸிங் போர்டு லேண்ட் லைனுக்கு வீட்டில் இருந்து போன். ''அய்யா... அப்பாவுக்கு ஒடம்பு சரியில்ல'' என அழுதது அம்மா. ''ஒடனே கெளம்பி வாங்கடா... ஒங்களப் பாக்கணும்...'' என்றார் அப்பா. என்னவோ உள்மனசு திக்கென்றது. அப்போதே அப்பாவைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது. மருந்து வாசத்தோடு, தூங்கிவிட்டோம் என நினைத்து தடவிக் கொடுக்கும் மரமரத்த கையை உடனே பற்ற வேண்டும் என தவித்தது மனசு.

ஆம்னி பஸ்ஸில் அவரை நினைத்துக்கொண்டே போன அந்தப் பயணம் பயங்கரமானது. வீட்டில் அவர் பிணமாகக் கிடத்தப்பட்டு இருக்கும் ஒரு காட்சி மறுபடி மறுபடி தோன்ற, ''மகமாயி... சாமீ...'' என முணுமுணுத்துக்கொண்டே விடிந்த இரவு.

பழங்கள் வாங்கிக்கொண்டு கும்பகோணம் பஸ் ஸ்டாண்டில் நின்றபோது மனம் கொஞ்சம் தெளிந்திருந்தது. ஊருக்குப் போய் தெருமுக்கில் திரும்பும்போதே வீட்டில் கூட்டம் கூடியிருந்தது.

‘‘தஞ்சாவூர் பெரியாஸ்பத்திரிலதான்... இன்னும் பாடியைத் தரல...’’ என்றார் மாமா. ஓடிவந்து என் கையை இறுக்கிக்கொண்டு விம்மியது விமலா அத்தை. அப்பாவின் ‘பாடி’க்காகக் காத்திருந்த அந்தத் தருணங்கள் வார்த்தைகள் அற்றவை. எல்லோரும் வந்துவிட்டார்கள். நேரமும் ஆகிவிட்டது. பொய்யாமொழி மாமா மட்டும் வரவில்லை. ‘‘அவன் வராம எப்பிடிய்யா தூக்கறது...’’ சாயங்காலம் வரை காத்திருந்து தூக்கிவிட்டோம்.

சந்திக்கரை திரும்பும்போது அம்பாஸடர் கார் ஒன்றில் பழ வாசத்தோடு வந்து இறங்கினார் பொய்யாமொழி மாமா. ‘‘யோவ்... நான் வராம மச்சானைக்கொண்டு போறீங்களா? வர்றவரைக்கும் காத்திருக்கமாட்டீங்களா? எம் மச்சான்யா...’’ என முறுக்கியவரைச் சமாதானப்படுத்துவதே பெரும்பாடானது.

சுடுகாட்டாங்கரையில் இருந்து திரும்பிய பிறகு, கழுவிவிட்ட வெறிச்சென்ற வீடு விசித்திரமாக இருந்தது. கொல்லைக்கட்டில் மௌனமாக அம்மா உட்கார்ந்து இருந்தது. இப்படியே இந்த வீட்டில் அப்பாவுக்காக எத்தனை இரவுகள் காத்திருந்தாள் இவள்! இனி, பிள்ளைகளுக்காகக் காத்திருப்பாள். காத்திருப்பின் பெருவானில் உதிராத கடைசி விடிவெள்ளியாய் எப்போதும் இருக்கிறாள் நம் தாய்!

**தி**னமும் சாயங்காலமானால் வாசல் நிறைய விளக்கேத்தி வைத்துவிட்டு, சரசரவென புடவை உடுத்தி, தலை நிறைய மல்லிப் பூவோடு வாசலில் வந்து உட்கார்ந்திருக்கும் ரூபா அக்கா. அதோட கணவர் துபாய் போயிருந்தார். மூணு வருஷ கான்ட்ராக்டில் போனவர், அஞ்சு வருஷமாகியும் வரவில்லை. ஆனால், ஒவ்வொரு நாளும் அப்படி ஓர் அழகுக் கோலத்திலேயே வந்து வாசலில் உட்கார்ந்திருக்கும் அக்கா. ‘புருஷந்தான் இங்க இல்லைல்ல... எதுக்காக இப்பிடி மினுக்கிட்டு அலையுது?’ — தவறான கற்பனைகளோடு அக்காவை நெருங்கி, தெறித்து ஓடியவர்களையும் எனக்குத் தெரியும்.

சில்லறை கேட்கிற சாக்கில் சில்மிஷம் பண்ணப்போன ஒரு நண்பனை, வீடு கட்டக் கொட்டியிருந்த ஜல்லியால் அடித்து விரட்டியது அக்கா.

பத்து வருடங்களுக்குப் பிறகுதான் அக்காவின் கணவர் வந்தார். நரை கூடி, சொட்டை விழுந்து வந்தார். மூஞ்சி முழுக்க வெட்கமும் சந்தோஷமும் பூசி, அவரோடு புடவையும் பூவும் சரசரக்க பைக்கில் உட்கார்ந்து அக்கா போன ஒரு காட்சி காத்திருப்பின் கவிதையாய் எஞ்சியிருக்கிறது எனக்குள்.

இப்போதுகூட நாங்கள் இருக்கிற ஃப்ளாட்டில், இரவு போகும்போதெல்லாம் அலங்காரத்தோடு வாசலில் வந்து நிற்கிறது ஓர் அக்கா. அப்படியே ரூபாக்கா மாதிரி. எல்லோரும் சீரியல் பார்த்துக்கொண்டு இருக்கும்போது, இந்தக்கா மட்டும் ஏன் இப்படி நிற்கிறது? எனத் தோன்றும். ஒரு காலையில் தெருவில் புருஷனோடு இளநி வாங்கிக் குடித்துக்கொண்டு இருந்தபோது பார்த்தால், அவரும் அப்படியே ரூபாக்கா கணவன் சாயலிலேயே இருந்தார்.

''எங்கூரு கிராமம்ணே... இதக் கட்டிக்கிட்டு வந்த பொறவுதான் கடலே தெரியும் எனக்கு. இது மீன் புடிக்கப் போயிட்டாலே திக்குதிக்குனு கெடக்கும்...'' பெசன்ட் நகருக்கு மீனவ நண்பன் ராஜேந்திரன் வீட்டுக்குப் போகும்போது அவன் மனைவி சிரித்தபடி சொன்னது.

**ல**ண்டனில் இருக்கும் அக்காவைப் பற்றி பேச்சு வந்தபோது, கோடம்பாக்கத்தில் தங்கியிருக்கும் ஈழத் தமிழ் நண்பன் அஜந்தன், ''எப்போ பார்க்கறதுண்டு தெரியலையேண்ணே...'' என்றான் புன்னகையோடு.

ஏதோ பெயர் தெரியாத நோய் தாக்கி உடல் 15 கிலோவாகச் சுருங்கி, பேராவூரணி வீட்டில் கிடந்த பாலு அண்ணனைப் பார்த்து, ''இவன் சீக்கிரமா போயிட்டா தேவலைனுதான் காத்திருக்கோம்... பாக்க முடியலைங்க...'' என்ற சகோதரனின் குரல் காத்திருப்பின் இருண்ட பள்ளத்தாக்குகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

''ஒரு கொழந்த பொறந்தா வருவாங்கனு பார்த்தோம்... வரலை. என்னைக்காவது வராமலா போயிருவாங்க?'' ஓடிவந்து கல்யாணம்

பண்ணிக்கொண்ட நண்பனும் தோழியும் விலகியிருக்கும் பெற்றோர்கள் வருவார்கள் என இப்போதும் காத்திருக்கிறார்கள்.

5 வருடங்களாகக் குழந்தை இல்லாமல் இருந்த நண்பர் ஒருவர், வளசரவாக்கத்தில் உள்ள காப்பகத்துக்கு மனைவியோடு சென்று ஒரு குழந்தையைத் தத்தெடுத்துக்கொண்டு வந்தார். ஒரு வாரம் அழுதுகொண்டு இருந்த அந்தக் குழந்தை, இப்போது அவர்களோடு ஒட்டிக்கொண்டது. அந்த வீட்டில் சிரித்துச் சிரித்து விளையாட ஆரம்பித்துவிட்டது. ‘ம்மா...‘ ‘ப்பா...’ என அவர்களைக் கூப்பிட ஆரம்பித்துவிட்டது. சட்டென்று அந்த வீட்டுக்குள் பெருவெளிச்சம் வந்த மாதிரி இருந்தது.

யுகங்களின் காத்திருப்பை ஒரு நொடியின் தரிசனம் துடைத்தெறிவது மனித வாழ்வில்தான் நடக்கும். காத்திருப்பின் வலியைச் சுகமாக்கும் உயிர்கள்தான் பிரபஞ்சத்தின் பெருங்கொடை இல்லையா?

எதிர்பார்த்துக் காத்திருப்பது பல நேரங்களில் நடப்பதில்லை. ஆனால், காத்திருந்ததைவிடவும் அழகான விஷயங்கள் நடந்து விடுகின்றன பல நேரங்களில். நண்பனின் வீட்டில் இருந்து திரும்பும்போது எனக்கு எப்போதைக்குமான கல்யாண்ஜியின் கவிதைதான் ஞாபகத்துக்கு வந்தது.

*‘சிவப்பு லில்லியென்று*
*தொட்டியிலே புல் வளர்த்து*
*புல் வளர்ந்து*
*இளம் வெள்ளை*
*பூ வெடித்து*
*பூவைவிடப் புல் அழகு*
*என உணர்ந்து*
*புல் என்றே மறுபடியும்*

*புல் வளர்க்க*
*ஈரம்*
*நிரந்தரம் தொட்டிக்குள்!'*

# 31

# ‘ஏதுமற்ற பருவம்’ என்றால் என்ன?

**ஐ** நாக்ஸில் ‘ஏக் தீவானா தா’ ஷோ! தியேட்டர் முழுக்க பெண்களும் பையன்களுமாக டீன் டிக்கெட்டுகள். படம், திரையில் ஓடிக்கொண்டு இருக்கும்போதுகூட மொபைல் மூலம் மெசேஜ், சாட் என்று பரபரப்பாக இருக்கிறார்கள். இன்டர்வெல்லில் ஆளுக்கொரு பக்கம் ‘‘க்ராஷ் மாமா... நோ சான்ஸ்ரா!’’ என பேசிக்கொண்டு திரிகிறார்கள்.

ஷேர் ஆட்டோவில் ஏறினால் திமுதிமுவென இன்னொரு காலேஜ் கூட்டம். அத்தனை பேர் கையிலும் மொபைல்கள். கணிசமாக 3ஜி. இதிலும் பாதிப்பேர் இன்பாக்ஸைத்தான் மேய்ந்துகொண்டு இருந்தார்கள்.

‘‘மச்சி... கேம்பஸ்ல நான் விப்ரோதான். கன்ஃபார்ம்!’’ என்றது ஒரு ஷார்ட்ஸ். ‘‘குல்லு... நீ கிங்ஃபிஷர்ல போய் மாட்டிக்காதரி... அங்க மல்லையாவுக்கே வேலை இல்லையாம்!’’ என்றது ஒரு த்ரீபோர்த். இப்படியே தி.நகர் வரை கச்சேரி.

வீட்டுக்குப் போகிற வழியில் திருச்சியில் பொறியியல் படிக்கிற என் சித்தப்பா பையன் அருண் போன் பண்ணி, ‘‘அண்ணே... இன்டன்ஷிப் சென்னைல... அடுத்த வாரம் வர்றேண்ணே" என்றான். அவன் எப்போது பேசினாலும் கல்லூரி பற்றியும் எதிர்காலம் பற்றியுமே பேசுவது எனக்கு ஆச்சர்யமாக இருக்கிறது. வீட்டுக்கு வந்து படுக்கும்போது பார்த்தால், எதிர் ஃப்ளாட் தினேஷ் இன்னும் சிஸ்டத்தில் உட்கார்ந்திருக்கிறான். தினேஷ் நள்ளிரவு வரை ஃபேஸ்புக்கில்தான் கிடப்பான். எதிர் ஃப்ளாட்டில் இருந்து எனக்கு சாட்டிங்கில் வந்து, ‘‘ ‘அரவான்’ ரிசல்ட்

என்ன பிரதர்?" என்பான். ஏதேதோ ஸ்டேட்டஸ் போட்டுவிட்டு, ‘‘இன்னைக்காச்சும் லைக் போடுங்க பிரதர்!" என ஓட்டு கேட்பான். ஜன்னலில் மங்கலாக அவன் உட்கார்ந்திருப்பதும் அவன் அப்பா திட்டிக்கொண்டு இருக்கிற சத்தமும் கேட்கிறது.

அப்போது, ‘ஏதுமற்ற பருவம்’ என்ற வார்த்தை என் தூக்கத்தைக் கெடுக்க ஆரம்பித்திருந்தது. அதற்கு முதல் நாள் நண்பர் ஒருவரிடம் பேசிக்கொண்டு இருந்தபோது, சட்டென்று அவர் சொன்ன இந்த வார்த்தையைக் கேட்கும்போதே ‘அடடா’ என இருந்தது. எத்தனை அழகான சொற்சேர்க்கை. இப்போது நினைவில் அந்த வார்த்தை மறுபடி மறுபடி வருகிறது. இந்த வார்த்தையின் அர்த்தம் தரும் அலாதியான ருசியை இந்தத் தலைமுறையினர் அறியவே மாட்டார்கள் இல்லையா?

**ஏ** துமற்ற பருவம் என்றால் என்ன? பொறுப்புகள், துயரங்கள், லட்சியவாதங்கள்... ஏதுமற்ற பருவம். அடுத்த நிமிடம் பற்றிய எந்த நிர்பந்தங்களும் இல்லாத, ஆனால் மிகுந்த பரபரப்பான பருவம். டிகிரி முடித்துவிட்டு, வேலை இல்லாமல் குட்டிச்சுவர்களில் சித்தப்பாக்கள் ‘பாலைவனச் சோலை’ ஓட்டிக்கொண்டு இருந்த பருவம். நண்பர்களின் காதல்களுக்குக் கவிதைகள் எழுதித் தருவதும், கல்யாண சாகசங்களில் ரத்தம் சிந்துவதுமாக அண்ணன்கள் வாழ்வாங்கு வாழ்ந்த பருவம்.

‘சிப்பி’ டெய்லர் கடையிலும், ‘விடியல்’ போட்டோ ஸ்டுடியோவிலும், ‘ராயல்’ டீக்கடையிலும், சிவகங்கைப் பூங்காவிலும் கதைகள் கதைத்துக் காத்திருந்த பருவம். சாயங்காலம் பள்ளி விடுகிற வாக்கில் பேருந்து நிலையத்தில் நின்றுகொண்டு, சுத்துப்பட்டுக்குப் போகிற எல்லாப் பெண்களையும் பஸ் ஏற்றி அனுப்பிவிட்டு, எங்கே போவதென்று தெரியாமல் நாங்கள் நின்ற பருவம். ஏலக்கா போட்டுக்கொண்டு, குடித்த பீர் வாசம் போகிற வரை ஊர் சுற்றிய பருவம். நள்ளிரவுக்கு மேல் படுத்து, பிற்பகல் எழுந்த பருவம்.

பத்தாவதிலும் ப்ளஸ் டூ—விலும் அட்டெம்ப்ட்டுகள் அடித்து, மாட்டுக்குத் தண்ணி காட்டி, க்ரைம் நாவலுக்கு வாசகர் கடிதங்கள்

எழுதிய பருவம். நண்பனின் தங்கச்சியை சைட் அடித்தவனை மேப் போட்டுத் தூக்கியதும், அதே தங்கச்சியின் தோழிக்குக் கடிதம் எழுதி செருப்படி வாங்கியதுமான பருவம். பச்ச முட்டை, கொண்டைக் கடலை தின்று ஏராள எக்சர்சைஸ் பண்ணியும் உடம்பு ஏறாத பருவம். கல்யாண வீடு, எழவு வீடு என எங்கெங்கும் சைட் அடித்துத் திரிந்த பருவம். கீரந்தங்குடி, வலங்கைமான், நாச்சியார்கோவில், அடவங்குடி, கூத்தாநல்லூர், திருவிழா, சந்தனக்கூடு என மைக்செட் கட்டுகிற இடம் எல்லாம் குரூப் கட்டிய பருவம்.

கருக்கலில் கும்பகோணம் சந்தைக்குக் காய்கறி எடுத்துப்போகிற காளிதாஸுடன் ஒருநாள், வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலைக்கு லோடு அடிக்கிற சங்கரோடு ஒருநாள், ஆச்சமங்கலம் பஸ்ஸில் ரூட் அடிக்கிற சாகுனுடன் ஒருநாள்... என, மனம் போன போக்கில் தினம் போகிற பருவம். செவ்வாய்க் கொழுக்கட்டைக்கு தெருப் பொம்பளைகள் எல்லாம் அம்சத்தா வீட்டில்கூட, 'அங்க என்னடா நடக்கும்?' என இரவெல்லாம் விழித்துத் திரிந்த பருவம். ரஜினி கட்சியா... கமல் கட்சியா? எனப் பட்டிமன்றம் நடத்திய பருவம். சேர்மனுக்கு நிற்கும் நண்பனின் அப்பாவுக்காக ஆட்டோவில் மைக் கட்டிக்கொண்டு, 'நமது சின்னம் ஏணி... ஏணி... ஏணி...' என எக்கோவில் பேசிக்கொண்டு சாப்பிடாமல்கொள்ளாமல் அலைந்த பருவம். 'ஆடிவெள்ளி' படத்தை, அலைமோதும் பெண்கள் கூட்டத்துக்காகவே அஞ்சாறு தடவை பார்க்கிற பருவம். சுருக்கமாகச் சொன்னால்... சும்மாயிருந்த, சுகமாயிருந்த பருவம்!

**இ**ந்த ஏதுமற்ற பருவத்தில்தானே வாழ்வின் எல்லா சுவாரஸ்யங்களும் ஆச்சர்யங்களும் நமக்கு அறிமுகமாகின. முதன்முதலில் எனக்கு 'பிட்டு' படத்தை அறிமுகப்படுத்தியது குரு அண்ணன்தான். அப்போது அவன் கேட்டரிங் முடித்துவிட்டு சும்மா இருந்தான். 'சாம்பியன்'க்கு வாசகர் கடிதம் எழுதுவதில் இருந்து 'கண்மணி'க்கு நாவல் அனுப்புவது வரை எழுத்தாளனாக உருவாகும் வெறியுடன் இருந்தான்.

அவன் எழுதிய சிறுகதை ஒன்றை, மாவட்ட அளவில் சிறந்த கதையாகத் தேர்ந்தெடுத்து பரிசு அறிவித்திருந்தது ஓர் அமைப்பு. திருவாரூரில் நடந்த பரிசளிப்பு விழாவுக்கு என்னையும் அழைத்துப்போனான். சாயங்காலமே போய்விட்டோம். வேறு ஏதேதோ கலை நிகழ்ச்சிகள் நடந்துகொண்டு இருந்தன. ‘‘பரிசுலாம் குடுக்க 11 மணி ஆகிரும்ப்பா’’ என்றார்கள். என்ன செய்வது என்று தெரியாமல் ஓரமாக வந்து உட்கார்ந்தபோது, எதிர்ச் சுவரில் இருந்து எங்களைப் பார்த்துக் கண்ணடித்தது பேபி தியேட்டர் போஸ்டர். அப்போது திருவாரூரில் பேபி தியேட்டர்தான் ‘அந்த’ப் படங்களுக்கு ஃபேமஸ்.

‘ஷிராக்கோ’ எனப் போட்டு ஒரு வெள்ளைக்கார ஷகிலாவின் கிளாமர் போஸ்டர். அதை ஒரு கணம் உற்று நோக்கிய குரு என்னிடம் திரும்பி, ‘‘வாடா தம்பி படத்துக்குப் போவோம்... உன்னை வாழ்க்கையோட அடுத்த கட்டத்துக்குக் கொண்டு போறேன்!" என்றான். எனக்குப் பரவசத்தில் தொண்டை கம்மியது. அதுவரை ஒளித்து ஒளித்து ப்ளாக் அண்ட் ஒயிட் ‘பருவகால’மும், ‘சரோஜாதேவி’யும்தான் படித்திருக்கிறேன். மனசு படபடக்கக் கிளம்பினோம்.

கூட்டத்தைக் கடக்கும்போது, ‘‘எங்க கிளம்பிட்டீங்க?’’ என எதிரே வந்தார் இன்னோர் எழுத்தாளர் அண்ணன். ‘‘இல்லண்ணே... பரிசு தர நேரம் ஆகும்போல இருக்கு. பக்கத்துலதான் பெரியம்மா வூடு இருக்கு. போயிட்டு வந்துர்றோம்!" எனத் தங்குதடை இல்லாமல் அடித்துவிட்டான் குரு. அந்த அண்ணனும், ‘‘போயிட்டு வாங்க... போயிட்டு வாங்க. நானும் பக்கத்துலதான் நம்ம சின்ன தாத்தா வூடு இருக்கு... ஒரு எட்டு போயிட்டு வந்துரலாம்னுதான் கெளம்புறேன்!" என எதிர் திசையில் நடந்தார்.

பயங்கர த்ரில்லாகி தியேட்டரில் உட்கார்ந்தால், ஏதோ பழைய மம்முட்டி படம். ‘‘என்னடா குரு?" என்றால், ‘‘வெயிட்ரா தம்பி... வரும்" என்றான் அண்ணன். இன்டர்வெல் வரைக்கும் சமாசாரம் வரவே இல்லை. கடுப்பாகி வெளியே தண்ணி குடிக்க வந்தோம். சங்கிலி கட்டிய குவளையோடு இருக்கும் தண்ணீர் பீப்பாவை நெருங்கினால்,

அவசர அவசரமாகத் தண்ணி குடித்துக்கொண்டு இருந்தார் ‘சின்ன தாத்தா’ வீட்டுக்குப் போவதாகச் சொன்ன எழுத்தாளர் அண்ணன். எங்களைப் பார்த்ததும் குவளையை அந்தரத்தில் விட்டுவிட்டு, சட்டை நனைய ‘யு டர்ன்’ போட்டு எகிறினார்.

செகண்ட் ஆஃப் ஆரம்பித்தது. மறுபடியும் மம்முட்டி டார்ச்சர். டென்ஷன் எகிறும்போதே சட்டென்று திரைக்குப் பக்கத்தில் ஒரு சிவப்பு லைட் ஒளிர்ந்தது. மொத்த தியேட்டரும் அமைதியானது. குரு என் தோளை அமுக்கி, ‘‘ம்ம்ம்ம்..." என்றான். ஸ்க்ரீனில் பாடாவதி பிரின்ட்டில் ஓட ஆரம்பித்தது ‘அஜால் குஜால்’ சினிமா. எனக்கு மேனி சிலிர்த்தது. எதுவுமே விளங்கவில்லை!

முன்னாடி கொத்துக் கொத்தாக மறைக்கும் தலைகளைத் தாண்டிப் பார்க்க முயலும்போதே, பிட்டு முடிந்து மம்முட்டி என்ட்ரி ஆகிவிட்டார். இப்போது பச்சை லைட் ஒளிர, கண்டபடி திட்டிக்கொண்டே கலைய ஆரம்பித்தது கூட்டம். ‘‘ஏமாத்திட்டானுவோடா..." என ஒரு குரூப் சீட்டை எல்லாம் தூக்கிப்போட்டு அடிக்க ஆரம்பிக்க, நாங்கள் அவசரமாக வெளியேறினோம். கூட்டத்தில் பார்த்துக்கொண்டபோது, எழுத்தாளர் அண்ணனும் சரி... நாங்களும் சரி... எதுவுமே நடக்காதது மாதிரியே நடந்துகொண்டோம்!



அதன் பிறகு சில பல முறைகள் பிட்டு படம் பார்க்கப் போனபோது எல்லாம் எனக்கு விசித்திரமான அனுபவங்களே நடந்தேறின. ஒரு நண்பர் செம பில்டப்போடு அழைத்துப்போன தியேட்டரில், படம் முழுக்க

மாட்டுக்குப் பிரசவம் பார்த்துக் கொண்டே இருந்தார்கள். ‘அல்லடு மஜ்ஜாக்கா’ என்ற பெயரே ஒரு சைஸா இருக்கே எனப் போன இடத்தில் சிரஞ்சீவி லட்சுமி நடித்த மாமியார் மருமகன் குடும் பச்சித்திரம் போட்டார்கள். இன்னொரு தியேட்டரில், எந்தக் கொடூரனும் கற்பனையில்கூட நினைத்துப் பார்க்க முடியாத காட்சியாக, பழம்பெரும் அந்த நடிகையை ஒரு ஆட்டோ டிரைவர் ரேப் பண்ணுகிற சீனைப் போட்டார்கள். 20 செகண்டுகளில் தெறித்து ஓடி வந்தோம்.

என்னோடு வந்த நண்பர் சங்கிலியாக ஐந்து சிகரெட்டுகளைப் பிடித்து வீசினார். இன்னோர் இடத்தில் அதுவரை காணாத வகையில் அரிய காட்சியைப் போட்ட இரண்டாவது நிமிடம் தியேட்டரைச் சுற்றி வளைத்தது போலீஸ். ‘‘லைசென்ஸ் வாங்கலைன்னா தேட்டர்காரய்ங்களப் புடிங்கப்பு. நாங்கள்லாம் சிட்டிசன்ஸ்..." என ஒரு பெருசு பேசி, மொத்தப் பேரையும் வெளியேவிட வைத்தார்.

10, 15 ஆண்டுகளுக்கு முன்பு வரை பலான படம் என்பது தமிழ்நாட்டின் கலாசார நிகழ்வுகளில் ஒன்று. அது ஒரு வைபவம். யாருக்கும் தெரியாமல் தியேட்டருக்குப் போவதே தனி சேஸிங். உள்ளே போனதும் யாரும் யாருடனும் பேசிக்கொள்ளாமல் பேரமைதியோடு இருப்பார்கள். சில பேரெல்லாம் சின்ஸியராக உட்கார்ந்து முகத்தை மறைத்து இங்கிலீஷ் பேப்பர் படித்துக்கொண்டு இருப்பார்கள். பையன்கள், வாத்தியார்களையோ சொந்தக்காரர்களையோ பார்த்துத் திடுக்கிடுவார்கள்.

அநேகம் பேரின் ஏதுமற்ற பருவம் இதனாலும் நிறைந்தது. அதன் பிறகு வி.சி.டி. வந்தது. நண்பன் வீட்டில் யாரும் இல்லையென்றால், அங்கே கூடுவது. அது பெரிய புராசஸ். காசு போட்டு டெக் வாடகைக்கு எடுக்க வேண்டும். தெருவே தூங்குகிற வரைக்கும் காத்திருக்க வேண்டும். அப்படியும் கரெக்ட்டாக கேஸட் போடும்போதுதான் கரன்ட் போகும். அல்லது வி.சி.டி. மக்கர் பண்ணும். நேரம் பார்த்து பங்காளிகள் வருவார்கள். அந்தக் கருமத்தைப் பார்ப்பதற்குள் தாவு தீரும்!

இப்போது பாலியல் குறித்து எந்த ஆச்சர்யமும் சுவாரஸ்யமும் இல்லை. நெட்டைத் தட்டினால் ஆபாசப் படங்கள் கொட்டுகின்றன. போகிற இடங்களில் எல்லாம் இந்த மாதிரியான டி.வி.டி—க்களைக் குவித்து வைத்திருக்கிறார்கள். ''அர்ச்சகர் சி.டி. பார்ட் த்ரீ வந்திருக்கு. நித்யானந்தா சி.டி. பார்ட் டூ இருக்கு..." எனக் கொடுமை பண்ணுகிறார்கள். எந்த அழகியலும் த்ரில்லும் இல்லாத பருவத்தைக் கடந்துகொண்டு இருப்பவர்கள்... பாவம்தான்!

**எ** ங்களது ஏதுமற்ற பருவம் திருவிழாக்களாலும் கலைகளாலும் நிறைந்திருந்தது. கட்டாரி மாமா நாடகம் எழுதி, எங்கள் மொத்த குரூப்பையும் கலைஞர்கள் ஆக்கினார். வழக்கமான வள்ளித் திருமணம், மயான காண்டம், ராமாயணத்தை எல்லாம் ஏறக்கட்டிவிட்டு, 'உன்னால் முடியும் தம்பி', 'ஜெயிப்பது நிஜம்', 'நீயின்றி நானில்லை' எனச் சமூக நாடகங்களை மாமா அடித்துவிட, டெரரானது ஊர். நாடார் வீட்டில் ரிகர்சல் நடக்கும். ''சாதி என்னய்யா சாதி... காதல்தான்யா கடவுளோட நீதி" என டி.ஆர். பாணி வசனங்களை நாங்கள் பேச, தலையாரி வரைக்கும் பிராது போகும்.

வீட்டில் இருந்து அக்காக்களின் பாவாடை தாவணிகளைக் கொண்டுவந்து பொம்பளை வேஷம் போடுவோம். வெள்ளை சட்டை போட்டு கண்ணாடி போட்டால், அவன் டாக்டர். கலர் சட்டை போட்டு கண்ணாடி போட்டால், கலெக்டர். துண்டைத் தோளில் போட்டு வண்டி மசையால் மீசை வரைந்தால், பண்ணையார். கக்கத்தில் துண்டை வைத்தால், வேலைக்காரன். வெங்காயத் தாமரையை ஒட்டவைத்தால் சாமியார். வேலை இல்லாத அத்தனை பேரும் கூடிக் கும்மியடிப்போம்.

ட்ரூப்பில் நான்தான் ஸ்டார் டான்ஸர். அக்கம்பக்கத்துத் திருவிழாக்கள் அத்தனைக்கும் கிளம்பிவிடுவோம். அபிவை நண்பர்களின் டிஸ்கோ நடைபெறும் என போஸ்டர் போட்டு அதில் 'டிஸ்கோ' என்ற எழுத்தை மட்டும் தலைகீழாக எழுதியிருப்போம். தீ மிதி, கரகாட்டம், வாழைத்தார் ஏலம், பாம்பே சர்க்கஸ், கலர் பாயாசம், பீமபுஷ்டி

அல்வாக்களுக்கு நடுவே கழிந்த அந்தப் பருவம் ஏதுமற்றதா என்ன? எல்லாம் நிறைந்தது.

திருவிழாக்களுக்குப் போய்விட்டு சைக்கிள்களில் கூட்டமாகத் திரும்புகிற பின்னிரவுகளை இப்போது நினைத்தாலும் மனதை மின்மினிகள் மொய்க்கின்றன. அப்புறம் இளைஞர் மன்றம்... மார்கழியில் சிவன் கோயிலைச் சுத்தம் செய்வதில் இருந்து கார்த்திகையில் சொக்கப்பனைக்குத் தயார் செய்வது வரை கூடுவோம். அம்மா குளத்தை ஏலம்விட்டு மீன்பிடி நடக்கிற வரை... ஒவ்வொன்றும் திருவிழாதான்!

இப்படி எதுவுமே இப்போது இல்லை. 'ஏதுமற்ற பருவம்' என்ற ஒன்றே இந்தத் தலைமுறைக்கு இல்லை. அவர்கள் எப்போதும் பிஸியாக இருக்கிறார்கள். அவர்களது நாட்கள் எப்போதும் அவர்களது திட்டங்களாலோ, மற்றவர்களின் திட்டங்களாலோ நிரம்பி வழிகின்றன. நிறையப் பேருக்கு அதிகபட்சம் கூடுகிற இடம் ஒயின் ஷாப், பார்ட்டி என்றாகிவிட்டது. கொஞ்சம் அப்பாவித்தனம், ரசனை, அழகியல், மனம் வெறுமையாகக் கிடக்கிற சுகம், அடுத்த கணம் பற்றி அறியாத சுவாரஸ்யம் இதெல்லாம் வேண்டும் இல்லையா? வெற்று அறிவாலேயே அடைத்து ரொப்பிய ஒரு சமூகத்தை உருவாக்கிக்கொண்டு இருக்கிறோமோ என பயமாகஇருக்கிறது எனக்கு!

**டி** ப்ளமோ முடித்துவிட்டு வேலை எதுவும் இல்லாமல், எதைப் பற்றியும் யோசிக்காமல் ஆறு மாதம்போல் சும்மாவே இருந்தேன். 'வேலை தேடுகிறேன்' எனச் சொல்லிவிட்டு, திருச்சியில் என் வகுப்புத் தோழன் ஒருவனின் அறையில் தங்கியிருந்தேன். அப்போது படிப்பதற்கு புரட்சிகரமான புத்தகங்களை எடுத்துக் கொண்டு, தினமும் பக்கத்தில் உள்ள ஒரு சர்ச்சுக்குப் போய், அங்குள்ள தோட்டத்தில் உட்கார்ந்துகொள்வேன். சாயங்காலம் வரை அங்கேயே உட்கார்ந்து இருப்பேன். அங்கே தினமும் காலை 10 மணிபோல் ஒரு பெண் வருவாள். அவளுக்கு வலது காலும் கையும் இல்லை.

ஒரு தாங்குக் கட்டையோடு விந்தி விந்தி வருவாள். ஒரு பையில் மெழுகுவத்தி பாக்கெட்டும் தேன் மிட்டாய் பாக்கெட்டும் எடுத்துவருவாள். உள்ளே போய் அதைத் தந்துவிட்டுப் போய்விடுவாள். மறுபடி சாயங்காலத்துக்கு முன் வருவாள். இப்போது பை நிறைய பூக்கள் எடுத்து வருவாள். அவளைப் பார்த்த முதல் கணமே மனம் என்னவோ ஆகிவிட்டது. இப்போதுகூட ஒரு தேன் மிட்டாயின் இனிப்பும் மல்லிப் பூவின் வாசமும் மெழுகுவத்தியின் தீரவே தீராத சிறு வெளிச்சமுமாக அவளது உருவம் எனக்குள் இருக்கிறது. இதுவரைக்கும் அவள் பெயர்கூடத் தெரியாது.



ஒரு நாள், அவள் வரும்போது கேட்டைத் திறக்க யாரும் இல்லாமல் நின்றாள். நான் போய்த் திறந்துவிட்டேன். ‘தேங்க்ஸ்’ எனச் சொல்லிவிட்டுப் போனாள். அதுதான் எனக்கும் அவளுக்குமான ஒற்றை வார்த்தை. அன்றில் இருந்து அவள் வரும்போது நான் கேட் பக்கத்திலேயே நின்று, திறந்துவிடுவேன். போகும்போது அந்த ரோடு முனைவரைக்கும் கூடவே நடந்துபோவேன். அங்கிருந்து உள்ளே பிரியும் ஒரு தெருவில் இறங்கி நடந்து போய்விடுவாள்.

எங்கோ தொடுவானத்தில் இருந்து என்னைப் பார்க்கத்தான் அவள் வருவதைப் போல இருந்தது. பார்த்தறியா பரிசுத்தம்போல்... அடைய முடியாத பேரன்பின் அரூபம்போல்... மூன்று மாதங்கள் எந்த மாற்றமும் இல்லாமல் இதுதான் நடந்தது.

சில நாட்களாக அவள் வரவில்லை. காத்திருந்து பார்த்து, ஒரு நாள் அவள் போகும் தெருவில் இறங்கி நடந்தேன். நான்கைந்து தெருக்கள் தள்ளி ஒரு வீட்டு வாசலில் அவள் நின்றாள். என்னைப் பார்த்து சிரிப்பதைப் போல இருந்தது. அவளைப் பார்த்த கணம் சட்டென்று மனம் துடித்தது. உடல் வியர்த்து ஏதோ ஆனது. தடதடவெனத் திரும்பிப் பார்க்காமல் மூச்சடைக்க அங்கிருந்து திரும்பினேன். அதன் பிறகு திருச்சியில் இருந்தும் வந்துவிட்டேன்.

எவ்வளவோ நாட்கள் ஆகிவிட்டன... நேற்றுகூட பெசன்ட் நகர் சர்ச்சுக்குப் போய் மெழுகுவத்தி ஏற்றியபோது, தோளில் சணல் பையோடு கடந்துபோன ஒருத்தி அவளைப் போலவே இருந்தாள். எங்கேயோ பார்த்த ஏதுமற்ற பருவத்தின் சாயலில்!

32

# வீட்டுச் சாப்பாடுக்கு கூட்டம் கும்மும்!

'இங்கு வீட்டுச் சாப்பாடு கிடைக்கும்!' — சென்னையில் அங்கங்கே இப்படி எழுதி இருக்கும். வீட்டுச் சாப்பாடு என்றால், எந்த வீட்டுச் சாப்பாடு? எந்தக் குடும்பத்தின் கை வாசனை? எந்த உறவுகளின் சுவை? எனில், ஒவ்வொரு வீட்டுக்கும் தனிக் குணம் இருக்கிறது; சுவை இருக்கிறது; பக்குவம் இருக்கிறது. ஒவ்வொரு வீட்டுச் சாப்பாட்டிலும் அந்தந்தக் குடும்பத்துப் பெண்களின் ஆண்டாண்டுக்காலக் கண்ணீரும் புன்னகையும் கலந்திருக்கிறது. அந்தப் பாரம்பரியத்தின் உப்பும் உறைப்பும் இருக்கிறது.

வீட்டுச் சாப்பாடு என்ற வார்த்தையில் இவ்வளவும் கிளர்ந்து வருகிறது இல்லையா? திருவல்லிக்கேணியில் விநாயகா மேன்ஷனிலும் ஷோ.ஃபியா மேன்ஷனிலும் சில காலம் இருந்தேன். திருவல்லிக்கேணியை 'பேச்சிலர்ஸ் பேரடைஸ்' என்பார்கள். அது சொர்க்கமா... நரகமா? என்பதுஇருக்கிறவனுக்குத் தான் தெரியும். உண்மையில் அது வறண்ட பிரதேசம். எங்கெங்கும் பெர்முடாஸும் சிகரெட்டுகளுமாக பிரம்மசாரிகள் திரிவார்கள். கூட்டம் கூட்டமாக பெல்ஸ் ரோடு முக்கில் மசாலா பால் குடிப்பார்கள். நேரங்கெட்ட நேரத்தில் பேக்கரிகளில் உட்கார்ந்து எக் பப்ஸ் சாப்பிடுவார்கள். பார்களிலும் மொட்டைமாடிகளிலும் சரக்கடித்துவிட்டு ஹோம் மார்க்கெட்டிங், கிரெடிட் கார்டு கலெக்‌ஷன், அனுஷ்கா, 'தி ஆர்ட்டிஸ்ட்', சங்கரன்கோவில், காவல்கோட்டம், அம்மன்

மெஸ், சுகுமாரி எனப் பிரித்து மேய்ந்து திரிவார்கள். பார்த்தசாரதி கோயிலில் சாமி கும்பிட்டு, மெரினாவில் சைட் அடித்து, பைலட் தியேட்டரில் ஹாலிவுட் டப்பிங் மசாலா படங்கள் பார்த்து... அது ஒரு வாழ்க்கை!

எவனையாவது பார்க்க ஊரில் இருந்து அம்மா—அப்பா வந்தால், மொத்தப் பேரும் ஓடிப்போய் சாப்பாடு வாங்கி வந்து, துணிக் கடைக்குக் கூட்டிப்போய், பஸ் ஏற்றிவிடுவார்கள். ஒருபக்கம் வடமாநிலப் பையன்கள் ஹிந்தி பாடல்களைப் போட்டுவிட, இன்னொரு பக்கம் நம்ம பயலுவோ தமிழ்ப் பாட்டுக்களைத் தட்டிவிட... கிறுகிறு ஜுகல்பந்தியாக இருக்கும். யாரையாவது தேடி அவனது ஃபிகர் வந்துவிட்டால், அவ்வளவுதான்... மொத்தப் பேரும் நிலைகொள்ளாமல் திரிவான்கள். விஷயம் தெரிந்தால், 'சிஸ்டர்... சிஸ்டர்...' என உருகுவான்கள். திடீரென்று போலீஸ் வந்து பக்கத்து ரூமில் பரம சாதுவாக இருந்த பையனைத் தூக்கிப்போகும். ''அண்ணா நகர்ல மூணு நாளைக்கு முன்னாடி ஒரு மர்டர் நடந்துச்சுல்ல... இவன்தான் ஏ—3யாம்...'' எனத் திகிலடிக்க வைப்பார்கள்.

ஞாயிற்றுக் கிழமைகளில் 11 மணிக்கு எழுந்து பல் விளக்கி, மொத்தப்பேரும் துணி துவைக்கச் சண்டையிடுவார்கள். விசித்திரமாக ஒருவன் எப்போது பார்த்தாலும் மிருதங்கம் வாசித்துக்கொண்டே இருப்பான். ஒருவன் தியானம் பண்ணிக்கொண்டே இருப்பான். இன்னொருத்தன் படித்துக்கொண்டே இருப்பான். நாலு ரூம் தள்ளி காவி தரித்த ஒருவர் எப்போதும் அமானுஷ்யமாகவே நடமாடிக்கொண்டு இருப்பார். ரூம் முழுக்க கேஸ் கட்டுகளோடு ஒரு வக்கீல் எப்போதும் மொபைலில் சட்டம் பேசிக்கொண்டே இருப்பார். திடீரென்று ஒரு சித்த மருத்துவரோ ஜோசியரோ என்ட்ரி கொடுத்து அலப்பறை பண்ணுவார். எல்லா மேன்ஷன்களிலும் பாழடைந்த, பெரிதாகப் பயன் இல்லாத ஒரு லெட்டர் பாக்ஸ் தொங்கும்!

வீட்டுச் சாப்பாடு என்ற வார்த்தைக்கான பேரர்த்தத்தை இந்த மேன்ஷன்வாசிகள்தான் அதிகமாக உணர்வார்கள். திருவல்லிக்கேணி

முழுக்க முக்குக்கு முக்கு இருக்கிற மெஸ்களில் கூட்டம் கும்மும். ‘வீட்டுச் சாப்பாடு’ என போர்டு வைத்தால் எக்ஸ்ட்ரா கூட்டம் அம்மும். எங்கெங்கு இருந்தோ வீட்டையும் உறவுகளையும் சுமந்து வந்தவர்களுக்கு இந்த வார்த்தைதான் பிடிமானம். ‘காசி விநாயகா’ என்ற மெஸ் இருக்கிறது. யெல்லோ டோக்கன், க்ரீன் டோக்கன், ரெட் டோக்கன் கொடுத்து வெயிட்டிங்கில் வைப்பார்கள். ஒரு மணி நேரத்துக்கு முன்பாகவே வந்து டோக்கன் வாங்கிக்கொண்டு பேப்பர் படித்தபடி காத்திருக்கும் கூட்டம். ‘யெல்லோ டோக்கன்லாம் வாங்க!’ எனச் சத்தம் வந்தால், திமுதிமுவென உள்ளே ஓடுவார்கள்.

நான் விநாயகா மேன்ஷனுக்கும் காசி விநாயகா மெஸ்ஸுக்குமாக ஓடிக்கொண்டு இருந்தபோதுதான் கணேசண்ணன் எனக்கு அறிமுகம். பக்கத்து ரூமில் இருந்தார். நாற்பது ப்ளஸ் ஆகியும் கல்யாணமாகாத முதிர்கண்ணன். எலக்ட்ரிக் குக்கர் சேல்ஸ்மேன். பர்மா பஜாரில் அசெம்பிள்டு செட் வாங்கி, எக்கச்சக்கமாகப் பேசி நல்ல ரேட்டுக்கு அப்பர் மிடில் க்ளாஸ் ஆன்ட்டிகளிடம் போணி பண்ணி வண்டி ஓட்டிவந்தார். அவர்தான் என்னை, ‘‘டேய் தம்பி... இனிமே எந்த மெஸ்ஸுக்கும் போகாத. உன்னை ஒரிஜினல் வீட்டுச் சாப்பாட்டுக்கு அழைச்சுட்டுப் போறேன்!’’ என்றபடி பிரியங்காம்மா வீட்டுக்கு அழைத்துப்போனார்.

அவர்கள், சௌராஷ்டிரா குடும்பம். ஐஸ் ஹவுஸ் பக்கம் ஒரு பாழடைந்த வீடு. கம்பி வேலியிட்ட தாழ்வாரமும் பித்தளைப் பாத்திரங்கள் மினுங்கும் கூடமுமாகப் பார்க்கும்போதே ஏதேதோ நினைவுகளுக்கு இட்டுப்போகும் வீடு அது. கூடத்தில் நான்கு மர பெஞ்சுகள் போட்டு மெஸ் நடத்திவந்தார்கள்.

பிரியங்காம்மா என்பது நாற்பது வயதிருக்கும் ஓர் அக்கா. அவருக்கு பதின்பருவத்துப் பெண் ஒருத்தி இருந்தாள். அப்புறம் ஒரு முதிர்ந்து கனிந்த பாட்டி. இன்னொரு செவசெவ மாஸ்டர். பாசி படிந்த முற்றத்தில் புறாக்கள் வந்துபோன அந்த வீடு எனக்கு அந்தக் கணமே பிடித்துவிட்டது. கூடவே, அவ்வளவு ருசியான சாப்பாடு.

கணேசண்ணனைப் பார்த்ததும் பிரியங்காம்மா முகத்தில் பெரும் புன்னகை. என்னை அறிமுகப்படுத்திவிட்டு, இருவரும் பேசிக்கொண்டே இருந்தார்கள். அப்போதிருந்து ரெகுலராக அங்கேயே சாப்பிட ஆரம்பித்துவிட்டேன். அந்த வீட்டுக்கென்று ஓர் அபூர்வமான வாசனை, அந்தச் சாப்பாட்டுக்கென்று அபூர்வமான சுவை இருந்தது.

ஒரு முறை சாப்பிட்டு முடித்த பிறகு கணேசண்ணன் உள்ளே போய் பிரியங்காம்மாவிடம் வெகு நேரம் பேசிவிட்டு வந்தார். வரும்போது, ''டேய் தம்பி... இவங்க வாழ்வாங்கு வாழ்ந்த குடும்பம்டா. கொஞ்சம் கொஞ்சமா எல்லாம் அழிஞ்சுபோச்சு. அவங்க புருஷன் ஓடிப்போயிட்டான். அதிலேருந்து என்ன பண்றதுனு தெரியாம இப்படி மெஸ் வெச்சுப் பொழைக்கிறாங்க. இப்போ அவங்க புருஷன் வீட்டு ஆளுங்க இந்த வீட்டு மேல கேஸ் போட்டாங்களாம். அதான் இதைவிட்டுப் போகப்போறாங்களாம். மதுரைல அவங்களுக்குத் தெரிஞ்சவங்க இருக்காங்களாம். அங்கன ஒரு மெஸ் வைக்கிறதுக்கு எதாவது எடம் இருந்தா சொல்லச் சொல்றாங்க...'' என்றார்.

அதுதான் நான் அங்கே கடைசியாகச் சாப்பிட்டது. இரண்டு நாட்கள் கழித்து ஒரு சாயங்காலம் மேன்ஷனுக்குக் கீழே தனது பெண்ணை அழைத்துக்கொண்டு வந்து நின்றது அந்த அக்கா. கணேசண்ணன் கொஞ்சம் பணம் எடுத்துக் கொண்டுபோய் பார்த்துவிட்டு வந்து சொன்னார், ''மதுரைல நமக்குத் தெரிஞ்ச ஒரு எடத்தைச் சொல்லிவிட்ருக்கேன். அங்கன மெஸ் போட்டுக்கச் சொல்லிட்டாக. என்னடா வாழ்க்கை. போற எடத்துல நல்லா இருக்கட்டும். நமக்கு இனிமே காசி விநாயகாதான் கதி!'' என்றபோது கணேசண்ணனின் கண்கள் கலங்கி இருந்தன. புறாக்கள் வந்து போகும் அந்த வீட்டுக்கும், பிரியங்காம்மாவின் கை மணக்கும் சாப்பாட்டுக்கும், கணேசண்ணனின் பூர்வ ஜென்மத்துக்கும் தொடர்பு இருப்பதாக எனக்குத் தோன்றியது!

**கோ** டம்பாக்கம் வந்த பிறகு, டிரஸ்ட்புரத்தில் ஒரு கையேந்திபவனுக்கு நான் ரெகுலர் கஸ்டமர். வைரமுத்து சார் வீட்டுப் பக்கமாக ஒரு தம்பதியினர் தள்ளுவண்டிக் கடை போட்டுஇருந்தனர்.

சாயங்காலமானால் அவ்வளவு சுத்தமாகப் புடவை கட்டி, மஞ்சள் பூசி, பூ வைத்து ஆவி பறக்க இட்லிகளை எடுத்துக் கொடுக்கும் அந்த அக்கா. அது புருஷன் கைலி, முண்டா பனியனோடு பீடி இழுத்தபடி படுகப்பியாக தோசைக்கல்லில் நிற்பார். வண்டியில் ஒரு சிலேட்டில் ‘வீட்டு இட்லி கிடைக்கும்’ என எழுதிப் போட்டிருக்கும். அந்த அக்கா இட்லி மட்டும் எடுத்துவைக்கும். முட்டை தோசை, பீஃப் கறி, சேர்வை என எல்லாவற்றுக்கும் அது புருஷன்தான் இன்சார்ஜ். ‘பெண்தான் வீடு, வீடுதான் பெண்’ என்பதை ஒரு கையேந்திபவன்காரன் எவ்வளவு அழகாகச் சொல்லிவிட்டான் என்பதை இப்போது நினைத்துக் கொள்கிறேன்.

ஒரு வருடம்போல் அங்கேதான் இரவுச் சாப்பாடு. ஒரு நாள் அங்கே போனபோது தள்ளுவண்டிப் பக்கம் வழக்கத்துக்கு அதிகமான கூட்டம். அந்த அக்கா அழுதுகொண்டு உட்கார்ந்திருந்தது. அந்தத் தள்ளுவண்டி நிற்கும் இடத்துக்குப் பக்கத்தில் உள்ள அபார்ட்மென்ட்டில் மதியம்வாக்கில் திருட்டு நடந்துவிட்டது. சந்தேகத்தின் பேரில் தள்ளுவண்டிக் கடைக் காரனைத் தூக்கிப் போய்விட்டது போலீஸ்.

நான் அந்த அக்காவை அழைத்துக்கொண்டு வடபழனி போலீஸ் ஸ்டேஷன் போனேன். அக்கா புருஷன், அயர்ன் வண்டிக்காரர், வாட்ச்மேன் மூவரையும் உட்கார வைத்திருந்தார்கள். இவரைப் போட்டு அடித்திருந்தார்கள். அந்த அக்கா அங்கேயே உருண்டு புரண்டு அழுதது. நெடுநேரம் பேசி, திருட்டுக்கு அவர் எந்த வகையிலும் காரணம் இல்லை எனத் தெரிந்துகொண்டதும் வெளியேவிட்டார்கள்.



ஆட்டோவில் அழைத்து வரும்போதுதான் அவர்களைப் பற்றித் தெரியும். ‘‘நான் தஞ்சாவூர் பக்கம் ஒரத்தநாடுண்ணே. லவ் பண்ணிக் கல்யாணம் பண்ணிக்கிட்டோம். ஊர்ல இருக்க முடியாம ஓடியாந்துட்டோம். இங்க கொத்து வேலை, ரோடு வேலைனு போனது புடிக்காம, இதுதான் இப்பிடிக் கடை போடலாம்னு சொல்லுச்சு. நான் நல்லா சமைப்பேண்ணே. சொந்தக்காரவுகள்லயே எங்கூட்டு சமையல்தான் பேமசு. சரின்னுதான் இப்பிடிக் கடை போட்டு யாவாரம் பாத்தோம்... இனிமே இங்க எப்பிடிண்ணே நிக்கிறது... ரொம்ப தேங்க்ஸுண்ணே...’’ என்றது அந்த அக்கா. நள்ளிரவில் மீந்திருந்த இட்லிகளைச் சாப்பிட்டுவிட்டு, அவர்கள் வண்டியைத் தள்ளிக்கொண்டு போனது இப்போதும் கண்களில் இருக்கிறது. அந்தச் சாப்பாட்டின் வாசம் தொண்டைக்குழிக்குள் இருக்கிறது இப்போதும்!

**ஊ** ரில் எங்கள் வீட்டுக்கு க.சீ.சிவகுமார் அண்ணனும் அருள் எழிலனும் வந்திருந்தார்கள். திருவாரூர் போய்விட்டு, குடித்துவிட்டு, வருகிற வழியில் ஆற்றில் குளித்துப் புரண்டுவிட்டு வீட்டுக்கு வந்தோம். கூடத்தில் இலை விரித்து, இட்லியும் மிளகாப் பொடியும் வைத்துவிட்டு ஓரமாக நின்றது அம்மா. சாப்பிட்டு முடித்துவிட்டு கொல்லையில் கை கழுவப் போனபோது, சட்டென்று என் கையைப் பிடித்துக்கொண்டு க.சீ. அண்ணன், ‘‘டேய்... உங்கம்மாவைப் பார்த்தா எனக்கு அழுகையா வருதுரா. எங்கம்மா கையால சாப்பிடுற மாதிரியே இருந்துச்சுரா...’’ என அழுதது ஈரமாக நினைவில் இருக்கிறது.

இப்படித்தான் மேட்டுப்பாளையத்தில் ஜெகத் வீட்டில் அவன் அம்மா பரிமாறியபோது எனக்கு இருந்தது. காரைக்குடியில் திருமுருகன் சார் அக்கா பரிமாறியபோது தோன்றியது. சபரிமலை போகிற வழியில் விழுப்புரத்தில் சுரேஷ் அம்மா கட்டிக்கொடுத்த எலுமிச்சை சாதத்தைப் பிரித்தபோது இப்படித்தான் நினைவுகள் கிளர்ந்தன.

ஒட்டக்குடியில் பகலிலேயே இருட்டு பரவிக்கிடக்கும் கோவிந்தராஜ் தாத்தா வீட்டுப் பெருங்கூடத்தில், பக்கத்திலேயே உட்கார்ந்துகொண்டு ''சாப்பிடுறா... சாப்பிடுறா...'' என அந்த ஆத்தா வைக்கும் பூசணிக் கூட்டையும் வாசத்தையும் வேறு எங்கும் இதுவரை அறியவே இல்லையே! திருச்சிக்கு விடுமுறைக்குப் போன நாட்களில் சாந்தி சித்தி செய்து தந்த தேங்காய் தோசையின் சுவை அதன் பிறகு எங்கேயும் கிடைக்கவில்லையே! இப்போதும் பார்க்குகளிலும் பீச்சிலும் ஏதேனும் குடும்பம் வந்து, கூட்டமாக ஜமுக்காளம் விரித்து உட்கார்ந்து பிரிக்கும் சாப்பாட்டு வாசம் எவ்வளவு நினைவுகளை, ஏக்கங்களைத் தூண்டிவிடுகின்றன? ஒவ்வோர் அம்மாவும் நமது அம்மாவைப் போலவேதான் சமைக்கிறாள் என்பதுதானே உண்மை!

கல்யாணமான நண்பன் ஒருவனைப் பார்க்கப் போயிருந்தேன். வீட்டுக்குக் கீழே நின்று பேசிக்கொண்டு இருக்கும்போது, அவனுக்கு போன் வந்துகொண்டே இருந்தது. ''ந்தா வந்துட்டேம்மா... வந்துட்டேம்மா...'' எனச் சொல்லிக்கொண்டே இருந்தான். நான் ஒரு மார்க்கமாகப் பார்க்க, ''அண்ணே... நீங்க வேற... இது ரொமான்ஸ் இல்ல. அதுக்குச் சமைக்கத் தெரியாது. ரெண்டு பேரும் சேர்ந்துதான் டெய்லி சமையல்... அதுக்குத்தான் கூப்பிடுது. வாங்க இன்னிக்கு நீங்கதான் பரிசோதனை எலி...'' என்றபடி அழைத்துப்போனான்.

அவனது மனைவி என்னிடம், ''அண்ணே... எங்கம்மா சமையல்லேயே வாழ்ந்துட்டேனா... இவராவது பேச்சிலர் லைஃப்ல சமைச்சுப் பழகிட்டார். இப்போதான் ரெண்டு பேரும் சேர்ந்து சமையல் கத்துக்கறோம். இப்போல்ல... எப்பவும் இந்தக் கூட்டணி சமையல்தான். ஒப்பந்தம்

போட்டாச்சு...'' எனச் சிரித்தார். இரண்டு பேரும் சேர்ந்து சமைத்து சாப்பாடு போட்டார்கள். அடடா... அதுதான் வீட்டுச் சாப்பாடு!

# 33

# ஜனநாயக அனுபவங்கள்!

**இ**ந்தியர்களைப் போல ஜனநாயகத்தைக் கொண்டாடுபவர்கள் யாரும் இல்லை.

தஞ்சாவூர் போவதற்காக எக்மோரில் திருச்செந்தூர் எக்ஸ்பிரஸ் பிடிக்கப் போனேன். 4 மணி வண்டிக்கு 3 மணிக்கே போய், டிக்கெட் எடுத்துக்கொண்டு போனால், அன்ரிசர்வ்டு பெட்டிகள் முழுக்கக் கும்மியடிக்குது கூட்டம். நிற்பதற்கே இடம் இல்லை. எங்கெங்கும் மனிதர்கள். ஏதேதோ லக்கேஜ்கள். நடுவே ஒரு வெங்காயக் கூடை. குழந்தையைப் போட்டு சீட் பிடித்ததில், இரண்டு அம்மணிகளுக்கு நடுவே ஆக்ஷன் ப்ளாக்.

சீட்டில் நெருக்கியடிப்பது போக, தரை எங்கும் நியூஸ் பேப்பர் விரித்து ஜனத்திரள். நாலைந்து பேர் ஒரே நேரத்தில் மொபைல் எஃப்.எம்—மில் பாட்டுகள் போட்டு ரகளை பண்ணுகிறார்கள். ஆரஞ்சை உரித்து அசால்ட்டாகப் பெட்டி எங்கும் வீசுகிறார்கள். டாய்லெட் கதவை ஒட்டி உட்கார்ந்தபடி ஒருவர் வெஜிடபிள் பிரியாணி சாப்பிடுகிறார். ஒருவர் பைக்குள் கைவிட்டு கோக் பாட்டிலில் ஓல்டு மங்க் குவார்ட்டரைக் கலக்கிறார். இத்தனை களேபரங்களுக்கு மத்தியில், முதலில் வந்து, மேல் பெர்த்களில் இடம் பிடித்து, பெட்ஷீட் விரித்து, தலையணைக்குக் காற்று ஊதிக்கொண்டு இருக்கிறது ஒரு குரூப்.

''இந்தக் கூட்டத்துல எப்புடிங்க போறது?'' என நான் அப்பாவியாகக் கேட்க, ''ஹே... ஹே... இதுக்கே சொல்லிட்டா எப்பிடி தம்பி...


தாம்பரத்துல ஏறுவாய்ங்க மாப்பிள்ளைய்ங்க. கொடலு குந்தாணியெல்லாம் வெளில வந்துரும்...'' என ஏக குஷியாகக் கொக்கரித்தார் ஒருவர்.

''சார்... இது வேலைக்காவாது. இப்பிடியே போனம்னா, தஞ்சாவூர்ல எறங்கும்போது ஹெரண்யா—வோடதான் இறங்கணும்...'' என்றபடி சரியாக ரயில் புறப்படும்போது, என்னை வெளியே தள்ளி கூடவே குதித்தான் கரிகாலன். ரயில் போயே போய்விட்டது. டிக்கெட்டை ரிட்டர்ன் பண்ணுவதற்குள் ரெண்டு மணி நேரம் வரிசையில் போட்டுப் புரட்டி எடுத்தார்கள்.

கோயம்பேடு கவர்மென்ட் பஸ் ஸ்டாண்டில், 'காசு போனாலும் பரவாயில்லை' என வீடியோ கோச் அல்ட்ரா டீலக்ஸ் பஸ்ஸாகப் பார்த்து ஏறினோம். '' 'வேட்டைக்காரன்', 'வெடி', 'ஆதவன்'... இதுல ஏதாவது ஒரு படம்தான் போடுவான்... என்ன பெட்டு சார்?'' என்றான் கரிகாலன்.

பஸ் புறப்பட்டு கால் மணி நேரமாகியும் எந்தப் படமும் போடவில்லை. ''ஹல்லோ கண்டக்டர்... ஏதாவது படத்த போட்டுவிடப்பா...'' என முதல் குரல் கொடுத்தார் முன் சீட்டில் இருந்த வினுச்சக்ரவர்த்தி. கண்டக்டர் எதுவும் பேசாமல் போய் டி.வி. இருக்கும் பெட்டியைத் திறந்து காட்டினார். அதில் டி.வி—யே இல்லை. கொஞ்சம் அழுக்குத் துணிகள் கிடந்தன. ''கடைசியா 'பழனி' படம் போட்டது... பாதி படத்துல ரிப்பேரானதுதான். சர்வீஸுக்கு குடுத்தது... இன்னும் வரல'' என்றபடி தலைக்கு மேல் கையெடுத்துக் கும்பிட்டார் கண்டக்டர்.

''இதைக் கோயம்பேடுலயே சொல்லியிருக்கலாம்ல... அப்ப டிக்கெட் காசு கொறைங்க...'' எனப் பின்னால் இருந்து ஒரு விஜயகாந்த் எழுந்து நாக்கைத் துருத்த, அங்கங்கே கூச்சல் குழப்பம். எதையும் கண்டுகொள்ளாமல் கண்டக்டர் மன்மோகன் சிங் மாதிரி மௌனமாகவே இருக்க, கொஞ்ச நேரத்தில்... கூல்.



பக்கவாட்டு சீட்டில் இருந்த ஒரு போதை பார்ட்டி ஃபுல் மப்பில் ஏதோ பினாத்திக்கொண்டே இருந்தார். மேல்மருவத்தூரைத் தாண்டியதும் அவர் விருட்டென்று எழுந்து பதற்றமாக என் காலடியில் விழுந்து எதையோ தேட ஆரம்பித்தார்.

‘‘என்ன சார்?’’

‘‘மொபைலக் காணோம் சார்...’’

‘‘நம்பர் சொல்லுங்க... போடறேன்...’’

‘‘அது சுச் ஆஃப்ல கெடக்கு சார்...’’

இந்த முனையில் இருந்து அந்த முனை வரை எல்லோர் காலிலும் விழுந்து தேடிவிட்டு, வந்து உட்கார்வார். கொஞ்ச நேரத்தில் துள்ளி எழுந்து மறுபடி தேட ஆரம்பிப்பார். இப்படியே விக்கிரவாண்டி வரை தவித்துக்கொண்டு இருந்தார்.

விக்கிரவாண்டியில் இறங்கி ஒரு ஹோட்டலில் ஆளுக்கு ஒரு செட் தோசை சாப்பிட்டோம். ஒரு செட் தோசை 40 ரூபா, ரெண்டு செட் தோசைக்கு 100 ரூபா கொடுத்தால், மீதி 20 ரூபாய் தர வேண்டுமா இல்லையா? சப்ளையர் மனோபாலா 10 ரூபாய் நீட்டினார். ‘‘என்னங்க இது?’’ என்றால், ‘‘10 ரூபா டிப்ஸ் சார்!’’ என்றார். ‘‘ஓ... இப்போ

டிப்ஸை நீங்களே எடுத்துக்கறதா? நீ குடுத்த எம்.ஆர்.எஃப். டயரையும் எண்ணெக் குருமாவையும் தின்னதுக்கு நீதான்யா டிப்ஸ் குடுக்கணும்!'' என கரிகாலன் எகிற, அவர் ஜாலியாகச் சிரித்துக்கொண்டே, ''தோஸ்ஸ்ஸ்ஸே...'' என்றபடி அடுத்த டேபிளுக்குப் போனார்.

வெளியே மொபைலைத் தொலைத்த மப்பு பார்ட்டி ஆவேசமாக தம்மில் இருந்தார். ''சார்... நல்லா யோசிச்சுப் பாருங்க. வரும்போது மொபைலை எடுத்துட்டு வந்தீங்களா?''

''அட... கடைசியா பார்ல உக்காந்து, சூர்யா நடத்துற கோடீஸ்வரன் புரொகிராம்ல கலந்துக்க ஒரு மெசேஜ் அனுப்பினேன் தம்பி. கரெக்ட்டா சார்ஜ் போயிருச்சு... பாக்கெட்ல போட்டது நல்லா நெனப்பிருக்கே. எழவு... அந்த மெசேஜ் வேற சென்ட் ஆச்சானு தெரியலையே!''

''அப்ப ஜீனியஸ்... கன்ஃபார்ம்...'' எனச் சிரித்தான் கரிகாலன்.

**த** ஞ்சாவூரில் இருந்து ஊருக்குப் போனால், அங்கே தினமும் ஒன்பது மணி நேர மின்வெட்டு. எந்த அளவுக்கு என்றால், இந்தியா — பாகிஸ்தான் மேட்ச்சை ஓவருக்கு மூணு பால் பார்க்க முடியும். மூணு பால் பார்க்க முடியாது. ''மாப்ள... லைன் போறதுக்குள்ள தூங்கிருங்க!'' என ஒரு சீப்பு கற்பூரவல்லியோடு வந்து சொல்லிவிட்டுப் போனார் மாமா. ''ஓகைலேருந்து வெங்கடேஷ் பேசறேன்... பத்தரை மணிக்கு கரன்ட்டைப் போட்டுத் தள்ளிருவானுங்கரா... நாலு கற்பூரவல்லிய உள்ள தள்ளிட்டு அதுக்குள்ள தூங்கிரு...'' என இன்னொரு போன். பகலெல்லாம் காந்துகிறது. ராத்திரியானால், நாத்தனார் யார் கொழுந்தியாள் யாரெனத் தெரியாத கும்மிருட்டு. அடையாளம் தெரிய, அத்தனை பயபுள்ளைகளும் ரோட்டில் பாட்டுப் பாடிக்கொண்டு போகிறார்கள்.

இந்தக் களேபரங்களுக்கு மத்தியில் தஞ்சாவூரில் இருந்து வந்த சித்தப்பா, கரன்ட் வந்த கேப்பில் டி.வி.டி—யில் ஏதோ வித்தியாசமான படம் பார்த்துக்கொண்டு இருந்தார். ''என்ன படம் சித்தப்பா?'' என்றால், ''அட... 'அரவான்'தான் கேட்டேன். அந்தக் கம்னாட்டி 'கொண்டான்

கொடுத்தான்' குடுத்துருக்கு. கழுத... எதையாவது பாப்போம்...'' என்றபடி காலாட்டினார்.

ஊரில் வீட்டுக்கு வீடு ரிலீஸான ரெண்டாவது நாளே கிராமத்து ஹோம் தியேட்டர்களுக்குச் சுடச்சுட வந்துவிடுகின்றன திருட்டு டி.வி.டி—க்கள். வாசலில் கருவடாம் காயப் போட்டுக்கொண்டே, `` 'காதலில் சொதப்புவது எப்பிடி?'யா... பேரப் பாருய்யா... என்னடா அது... படம் முழுக்கப் பேசிட்டேக் கெடக்குறானுவோ...'' என ஒரு அத்தை சொல்ல, ``யம்மா... அது கே.எஸ்.ஒய்மா... என்னா சூப்பர் படம்... கூத்தாநல்லூர்ல இருந்து ஒரு அமலாபாலை உனக்கு மருமகளாக் கொண்டுவந்தாத்தான் அடங்குவ நீயி...'' என்றபடி மொபைலில் நெட்டை நோண்டிக்கொண்டு இருக்கிறான் மருமகன்.

பட்டாசுக் கதறல் கேட்டு திடுக்கிட்டு விழித்துப் பார்த்தால், ``செஞ்சுரிஸ் ஆஃப் செஞ்சுரிஸ்... சச்சின் நூறாவது சதம் அடிச்சிட்டான்ல...'' என்கிறார்கள். ``ஏண்டா... கரன்ட்டே இல்ல எப்பிடிறா பார்த்தீங்க?'' என்றால், லேப்டாப்பைக் காட்டுகிறார்கள்.

திடுதிப்பென்று 'திருவரங்கநல்லூரைச் சேர்ந்த அ.தி.மு.க. கிளைக் கழகச் செயலாளர் சந்துரு, நேற்று இரவு அகால மரணம் அடைந்தார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது இறுதி ஊர்வலம் இன்று மாலை திருவரங்கநல்லூர் அவரது இல்லத்தில் இருந்து புறப்படும்...' என ஒரு ஆட்டோவில் மைக் கட்டி அலறிக்கொண்டே போகிறார்கள்.

அடுத்த ஒரு மணிக்கெல்லாம் கொரடாச்சேரி, செல்லூர் டாஸ்மாக்குகளில் கூட்டம் கட்டி ஏறுகிறது. சுடுகாட்டாங்கரையில் வளைத்து உட்கார்ந்து 'சில்டு பீர்' குடிக்கிறார்கள். ``ஏன் மாமா... அஞ்சு வருசத்துக்கு ஒருக்கா தேர்தல் வர்றதுக்குப் பதிலா ஆறு மாசத்துக்கு ஒரு தேர்தல் வந்தா, சீஸனுக்கு சீஸன் வாழலாம்ல...'' என ஒருவர் திகில் கிளப்புகிறார்.

இப்போது எல்லாவற்றுக்கும் டாஸ்மாக்தான். பேரன்பு, பெருங்கோபம், அறம், அதர்மம், அரசியல் என எல்லாவற்றையும் டாஸ்மாக் பார்களிலேயே கொண்டாடித் தீர்த்துவிடுகிறார்கள் மக்கள்.

''மச்சான்... 'சேனல் 4' க்ளிப்பிங்ஸ் பார்த்தியா? தாங்க முடியலடா... தலைவரோட மகனைச் சுட்டுப் போட்ருக்கானுங்க. இந்த மானங்கெட்ட மத்திய அரசப் பார்த்தியா... இலங்கைக்கு எதிரா ஓட்டுப் போட மாட்றானுங்க. நான் இப்ப என்னடா பண்ணணும்... உசுரக் குடுக்க ரெடியா இருக்கேன்டா. ஆனா, தீக்குளிக்கமாட்டேன். நாலு பேரயாச்சும் போட்டுத் தள்ளிட்டுப் போவணும்... அதுக்கு என்னடா பண்ணணும்...'' வயலில் நிற்கும் பிற்பகலில், போன் பண்ணிக் குமுறும் நண்பனுக்கு நாக்கு நடனமிடுகிறது. பின்னணியில் யாரோ ஆம்லெட் சொல்கிறார்கள்.

''அது சரி... அதுக்கு எதுக்குரா நீ குடிச்ச?''

''முடியல மச்சான்... மனசப் பெசையுது. நம்ம இயலாமைய என்ன பண்ணித்தான் மறைக்கறது... குடிச்சுக் குடிச்சுச் சாவ வேண்டியதுதான் போ....''

நண்பனின் மனநிலைதான் இப்போதைய பெரும்பான்மை இந்தியர்களின் மனநிலை.

''கரன்ட் கட் அதிகமானதுல இருந்து சேல்ஸ் டபுள் மடங்காயிருச்சு முருகா...'' என்கிறார் கொரடாச்சேரி டாஸ்மாக்கில் சரக்கு விற்கிற, டிகிரி ஹோல்டர் தோழர். முன்பெல்லாம் கரன்ட் கட் அதிகமானால், மக்கள் தொகை அதிகமாகும். இப்போது டாஸ்மாக்கில் விற்பனை அதிகமாகிறது. ''கூடங்கொளத்துல கடையத் தொறந்தானுங்கன்னா, 24 அவர்ஸ் கரன்ட் வரும்யா... முக்கா அடிச்சாலும் காங்கிரஸ்காரன் காந்தியவாதி... நான் சொன்னாக் கேளுங்கய்யா!''

''யோவ்... அணு உலை வெடிச்சதுன்னா என்னாவும் தெரியும்ல... நீ ஃபேன் போட்டுத் தூங்கறதுக்குள்ள எமன் பாதித் தமிழ்நாட்ட பேன்

பார்த்துட்டுப் போயிருவான்யா'' என ஜஸ்ட் லைக் தட் தேசியப் பிரச்னைகளை பார்களில் கொத்துக்கறி போடுகிறார்கள்.

இப்படிப்பட்ட பஞ்ச் டயலாக்குகளை எல்லாம் எத்தனை ரூம் போட்டு யோசித்தாலும் எழுத முடியுமா என்று தெரியவில்லை. ஈழப் பிரச்னை, இடைத்தேர்தல், கூடங்குளம், என்கவுன்டர், பட்ஜெட், விலை உயர்வு, சசிகலா... அத்தனையும் பேசுகிறார்கள். துயரங்களைக் கொண்டாடுகிறார்கள். குற்ற உணர்வை மறைக்கிறார்கள். அவனவனும் தனி சேனலாக அலைகிறார்கள். சண்டையிடுகிறார்கள். பாசத்தைப் பொழிகிறார்கள். கொள்கைகளாக உருவெடுக்கிறார்கள்.

கொரடாச்சேரியில் இருந்து ஊருக்கு வண்டியில் வரும்போது பார்த்தால், வயல்கரை முழுக்க நெடும் பனைகள் மொட்டை மொட்டையாக நிற்கின்றன. 10 வருடங்களுக்கு முன்பு பார்த்ததில் பாதிப் பனைகளைக் காணோம். முன்பு ஊரில் அஞ்சாறு வருடங்கள், பனை மரங்கள் ஏலம் எடுத்து கள்ளுக் கடை நடத்தி வந்தோம். மாட்டு டாக்டர் கள்ளுக் கடை, ஆப்பாவூர் கள்ளுக் கடை எல்லாம் சுத்துப்பட்டில் அவ்வளவு ஃபேமஸ்.

சாயங்காலமானால், பனங்கரை எல்லாம் கூட்டம் நுரை தள்ளும். சாயங்காலம் எப்போது போனாலும் ஐஸ் வண்டிக்காரர் நெற போதையில் பனங்கொட்டாயில் சரிந்திருப்பார். கள் இறக்கும் அவினாசி நாடார் பையனும் பொண்ணும் 'பாம்... பாம்' என ஐஸ் வண்டி ஹாரனை அடித்துக்கொண்டு இருப்பார்கள். கலியன் ஒரு குடம் கள்ளு குடித்துவிட்டு, பத்தூரு வாய்க்காலில் பொறுக்கி வரும் பனம்பழம் வாசத்தை மறக்க முடியுமா?



பஞ்சாயத்து, பாச மழை, கச்சேரி, கருமாந்திரம் எல்லாம் அப்போது கள்ளுக் கடையில்தான். அதிகாலையில் போனால் நுரை தள்ளத் தள்ள... ஈக்கள் மிதக்க அப்போதுதான் இறக்கிய கள்ளை அவினாசி நாடார் நீட்டுவது இப்போதும் நெஞ்சுக் குழி வரை இனிக்கிறது. இப்போது மணல் அள்ளி அள்ளிக் கட்டாந்தரை ஆகிவிட்ட வெட்டாற்றுத் தரை முழுக்க, யூஸ் அண்ட் த்ரோ கப்புகளும் ஏதேதோ பெயரிட்ட பாட்டில்களும் சிதறிக்கிடப்பதைப் பார்க்கக் கொடுமையாக இருக்கிறது.

அப்புறம் இந்த ஃப்ளெக்ஸ் பேனர்கள்... ‘வழுக்கைத் தலையால் உங்கள் காதல் திருமணம் தடைப்பட்டுவிட்டதா? இனி கவலை வேண்டாம். ஃபேர் அண்ட் ஹேர்’ என வெட்டாற்றுப் பாலத்தை அடைத்து வைத்திருக்கிறார்கள். அம்மா பிறந்த நாள், தளபதி பிறந்த நாளில் ஆரம்பித்து, கல்யாணம், கருமாதி, காதுகுத்து என எதற்கெடுத்தாலும் நாலு பேர் கூடி ஃப்ளெக்ஸ் வைத்துவிடுகிறார்கள். ‘மலர் தூவி வாழ்த்தினால் வாடிவிடும் என்பதற்காக, தமிழ் தூவி வாழ்த்துகிறோம்’ என்ற ஃப்ளெக்ஸ் வரிகளைப் பார்த்துவிட்டு, ‘எங்கடா அந்தக் கவிஞன்?’ என என் நெஞ்சு கூத்தாடியது. நிலா பேக்ட்ராப்பில் பொண்ணும் மாப்பிள்ளையும் சிரிப்பது, ‘பில்லா’ அஜீத் தலையில் லோக்கல் அரசியல்வாதி முறைப்பது என எங்கெங்கும் அட்ராசிட்டி ஜனநாயகம்.

அடுத்த ஜனநாயகக் கொண்டாட்டம் ரியல் எஸ்டேட். சித்தப்பா ஏரியா பால் பண்ணைக்குப் போய், காலார நடக்கக் கிளம்பினேன். 'விளார் ஊராட்சி உங்களை வரவேற்கிறது' என போர்டு இருந்தது. ஊர்தான் இல்லை. வயல்வெளி எல்லாம் பிளாட் போட்டு நிஷா நகர், நிலா நகர், எம்.ஆர்.பி. நகர்... எல்லாம் நகர்கள். கொஞ்ச தூரம் போனால், அப்பால் காலெடுத்து வைக்க முடியவில்லை. ஒரே நாற்றம்... ஒரு மாடு செத்துப்போய், தூக்கிப் போடாமல் அது கூழாகி முந்திரிச் செடிகளுக்கு நடுவே கிடந்தது. அந்த வயல்வெளிகளைப் போல... வாழ்க்கையைப் போல!

கும்பகோணம் வந்து சென்னை வண்டிகளிலேயே வல்லிய வண்டியாகத் தேர்ந்தெடுத்து ஏறினேன். அதுவும் அல்ட்ரா டீலக்ஸ் வீடியோ கோச்தான். முன் சீட்டில் ஒரு குடும்பம் உட்கார்ந்து ஒரு கிலோ கறுப்பு திராட்சையை வைத்து மொத்திக்கொண்டு இருந்தது. டி.வி—யில் லோக்கல் துணிக் கடை, நகைக் கடை, விளம்பரங்கள். வண்டி கிளம்பியதும் சாய்ந்து உட்கார்ந்தேன். கண்டக்டர் வந்து டி.வி—யை நோண்டினார். என்ன படம் போடப்போகிறாரோ என பீதியாக இருந்தது.

கண்டக்டர் நகர்ந்த நொடி காதடைக்கிற சவுண்டில், 'திருவண்ணாமலை' என டைட்டில் ஓட ஆரம்பிக்க... திராட்சைக் குடும்பம் பயங்கர த்ரில்லாகிக் கை தட்ட ஆரம்பித்தது. கண்ணு பொங்க சென்னையில் இறங்குவதை நினைத்தாலே பயமாக இருக்கிறது. வாழ்க ஜனநாயகம்!

# 34

# இன்னமும் இருக்கிறார்கள்!

''மு ருகா... இன்னிக்கு மூணாம் பெற...''

குலசாமிக் கோயிலுக்குப் போய்க்கொண்டு இருந்த இரவில், சித்தார்த்தன் வானத்தைக் காட்டினான். நிமிர்ந்து பார்த்த கணமே, மனசுக்குள் ஏகாந்தம் கொப்பளிக்கத் தொடங்கியது. நிறைய நிறைய நட்சத்திரங்களுக்கு நடுவே 100 கிராம் வெள்ளிக் கீற்றாய் ஒரு மூன்றாம் பிறை. அபூர்வமாய், காவியமாய், சாவதற்குள் திரும்ப இப்படி ஒரு வானம் கிடைத்திடுமா என்பது மாதிரி இருக்கிறது.

யாரும் இல்லாத ரயில் நிலையத்தில் ஒரே மாதிரி புடவைகள் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிற டீச்சர்கள்போல... மினி பஸ்ஸை நிறுத்திவிட்டு, ஆற்றில் குளித்து உள்ளங்கையில் காயாத மஞ்சளோடு ஓடி வருகிற அக்காவைப் போல... நள்ளிரவில் ஒண்ணுக்கடிக்க எழுந்து போகும்போது, பசுவின் கனத்த மடிக் காம்புகள் நசுங்கப் படுத்திருக்கும் ஆட்டுக்குட்டியைப் போல... இப்படி ஒரு வளர்பிறை நாளில் குலசாமிக் கோயிலுக்குப் போகிற தருணம் எப்போதும் அமையாது இல்லையா?



இரவு மூன்றாம் பிறை பார்த்தது மாதிரிதான் மறுநாள் பகலில் வேணியாத்தாளைப் பார்த்தேன். நான் படித்த அதே பள்ளிக்கூடத்தின் வாசலில், அதே கோலத்தில்... தட்டுக்கூடையில் வெள்ளரிக்காய்களும் எலந்தம்பழங்களும் நெல்லிக்காய்களும் போட்டு விற்றுக்கொண்டு இருக்கிறாள் இன்னமும். செங்காமட்டை கலர் பொடிக் கட்டம் போட்ட புடவையில், உதிர்வதற்கு முந்தைய தினத்திலான நாவல்பழம் போன்ற முதிர்ந்த கண்களோடு, மூச்சை புஸ்ஸு புஸ்ஸுவென இழுத்துக்கொண்டு, ஒரு கோட்டோவியம் மாதிரி அங்கேயே உட்கார்ந்திருக்கிறாள்.

சிறு வயதில் நான் பார்த்த மாதிரி இந்த ஊர் இல்லை. மனிதர்கள் இல்லை. ஸ்கூல் இல்லை. எத்தனையோ வசதிகளும் மாற்றங்களும் நுழைந்து படர்ந்துவிட்டன. ஆனால், வேணியாத்தாள் இன்னமும் தட்டுக்கூடையில் பழங்களும் முறுக்குகளும் வைத்துக்கொண்டு, இன்டர்வெல்லில் ஓடிவரும் பிள்ளைகளுக்காகக் காத்திருக்கிறாள். வேணியாத்தா, நாலு கிலோ மீட்டர் தள்ளி உள்ள ஊரில் இருந்து தினமும் காலையில் கிளம்பி, தட்டைத் தூக்கிக்கொண்டு, ஆற்றைத் தாண்டி வெயிலில் நடந்து வருகிறாள். சாயங்காலமாய் பஸ்ஸில் குடவாசலுக்குப் போய், தேவையானதை வாங்கி வருகிறாள். வீட்டுக் கொல்லையில் அடுப்பு வைத்து, தனியாக முறுக்கு சுடுகிறாள்.

பிற்பகலில் ஊரில் யார் வீட்டுத் திண்ணையிலாவது உட்கார்ந்து தண்ணீர் வாங்கிக் குடித்துவிட்டு, ‘‘தொரக்கண்ணு மவனா இது... ஆளு அடையாளமே தெரியல...’’ எனப் பேசிவிட்டுப் போகிறாள். ஒரு தகர டப்பாவில் நைந்த ரூபாய் நோட்டுகளையும் சுருக்குப்பையில் சில்லறைக் காசுகளையும் போட்டுக்கொண்டு அலைகிறாள்.

நான் ஸ்கூல் படிக்கிறபோதே ஒரு நாள் வேணியாத்தாளின் மகனும் மருமகளும் ஸ்கூல் வாசலுக்கு வந்து சண்டை போட்டார்கள். ஹெட் மாஸ்டரிடம் வந்து, ‘‘சார்... இந்தக் கெழவிய இனிமே இங்க சேக்காதீங்க சார். நான்தான் சம்பாரிக்கிறேன். சோறு போடுறேன்... வீட்டோட கெடன்னா கேக்காம, அங்கேருந்து கெளம்பி வந்துருது. இந்த வெயில்ல வந்து எதுக்கு இந்தக் கருமத்தப் பண்ணணும்... சொன்னாக் கேக்க மாட்டுது கம்னாட்டி...’’ எனச் சத்தம் போட்டார். தட்டுக் கூடையைத் தூக்கிக்கொண்டு வேகவேகமாய்ப் போன வேணியாத்தா, நாலைந்து நாட்கள் வரவில்லை. அடுத்த வாரமே தட்டு நிறைய நாவல் பழங்களோடு வந்துவிட்டது. கலைவாணியக்கா வீட்டு வாசலில் உட்கார்ந்து கொண்டு, ‘‘என்ன இவனுவோ ஒண்ணும் பண்ண முடியாது. நாஞ்சாவுற வரைக்கும் இந்தப் புள்ளைவோளுக்குத் தீனி வித்துட்டுத்தான் கெடப்பேன்’’ என்றபடி மூச்சு வாங்க வாங்கத் தண்ணீர் குடித்தது. தசைகள் சுருங்கி, கை கால்கள் நடுங்க, இன்னமும் ஓர் அரசுப் பள்ளிக்கூடத்தின் வாசலில் உட்கார்ந்து இருக்கிறாள் வேணியாத்தா... நாம் பார்க்க வேண்டும் என்பதற்காகவா மூன்றாம் பிறை வருகிறது என்பது மாதிரி.



வேணியாத்தாளைப் பார்த்துவிட்டு வருகிறபோது, தவிர்க்க முடியாமல் ஆனந்தியக்காவின் ஞாபகம் வருகிறது. மாதவரத்தில் ஒரு பழைய ஆஸ்பெஸ்டாஸ் வீட்டுக்குள் இப்போதும் வியர்வை வழிய மெழுகுவத்தியைத் தயாரித்துக்கொண்டு இருக்கிறது ஆனந்தியக்கா. 10 வருடங்களுக்கு முன்பு சென்னையில் வேலை இல்லாமல் திரிந்தபோது, கென்னடிதான் அந்த ஆஸ்பெஸ்டாஸ் வீட்டுக்கு அழைத்துப்போனார். நைட்டி போட்டுக்கொண்டு, நாலைந்து பிள்ளைகளோடு அச்சில் மெழுகை ஊற்றி ஊற்றி எடுத்துக்கொண்டு இருந்தது ஆனந்தியக்கா.

தரை எல்லாம் பிசுபிசுவென உருகிக்கிடக்கும் மெழுகும் வாசமுமாகக் கிடந்தது வீடு. இன்னொரு பக்கம் கொஞ்சம் பிள்ளைகள் உட்கார்ந்து பாலிதீன் கவரில் பாக்கெட் போட்டுக்கொண்டு இருக்கும். ஒரு பாக்கெட் விற்றால் 20% கமிஷன். ‘‘இப்பத்தான் புதுசா வர்றியா? ஒரு வாரம் வித்துட்டு அப்பால துட்டு குடு’’ என்றது அக்கா.

மெழுகுவத்தி தயாரிப்பதையே வேலையாக, வாழ்க்கையாக வைத்திருக்கும் ஓர் அக்காவைப் பார்ப்பதற்கு எனக்கு ஆச்சர்யமாகவும் நெகிழ்ச்சியாகவும் இருந்தது. பெரிய லாபம் புண்ணாக்கெல்லாம் கிடையாது. ஒரு பாக்கெட் விற்பதற்குள் தொண்டைத் தண்ணி போகும்.

ஆனாலும், அக்காவும் இன்னும் பலரும் அதில்தான் வாழ்கிறார்கள். ஓரிரு மாதங்கள் அவ்வப்போது அங்கே போவேன்.

ஒரு நாள் போனபோது, ஆனந்தியக்காவின் புருஷனுக்கு ஹார்ட் அட்டாக் என ஆஸ்பத்திரிக்குத் தூக்கிப்போயிருந்தார்கள். அன்றும் ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டு வந்து, அச்சில் மெழுகை ஊற்றிக் கொண்டு உட்கார்ந்திருந்தது அக்கா. மறுநாள் ராத்திரி ஆஸ்பெஸ்டாஸ் வீட்டு வாசலில், கண்ணாடிப் பெட்டிக்குள் அது புருஷன் துயில, சுற்றி மெழுகுவத்திகள் எரிந்து வழிய, ஓரமாக உட்கார்ந்து டீ குடித்துக்கொண்டு இருந்தது அக்கா. வாழ்க்கைப் பாடின் மகத்தான காட்சிகளில் அதுவும் ஒன்று. அணைந்து கிடந்தது ஒரு மெழுகுவத்தி. எரிவதும் உருகுவதும் எப்போதும் ஒரு மனுஷி. ஜொலித்து இருளும் உயிர் மனுஷி. எரிந்து வழிந்து கையில் விழும் ஒரு பொட்டு மெழுகு சட்டெனக் காந்துவது மாதிரி அந்த இரவு இருக்கிறது இப்போதும்.

இத்தனை வருடங்களுக்குப் பிறகு, சமீபத்தில் மாதவரத்தில் ஆனந்தியக்கா வீட்டுக்குப் போனேன். இன்னமும் அப்படியே மெழுகு வார்த்துக்கொண்டு இருக்கிறது நரைகூடிய அந்தக்கா. அதன் மகளும் மருமகளும்கூட வேலை செய்கிறார்கள். ''இப்ப ஆர்ட்டினு, மாதா, ஃப்ளவர்லாம் வார்ப்பு வாங்கிப் பண்றோம்...'' என ஆனந்தியக்கா சிரித்தது மூன்றாம் பிறை வெள்ளிக் கீற்று மாதிரி! இதைச் சொல்லி முடிக்கிறபோதே சுப்புவின் முகம் நினைவுக்குள் வந்துவிட்டது. ரொம்பவும் யதேச்சையாக, சமீபமாய் ஒரு பிற்பகலில், பட்டுக்கோட்டையில் இருந்து தஞ்சாவூர் வந்த பஸ்ஸில் சுப்புவைப் பார்த்தேன். மடியில் பெரிய மயிலாட்டப் பொம்மையை வைத்துக்கொண்டு, புகையிலை போட்டபடி வெளியே வந்தார். நான் பார்த்து விசாரித்ததும், புகையிலைச் சாறு தெளிக்க, என் கைகளைப் பற்றிக்கொண்டார். மெலிதாய் சரக்கு வாசம். ''காயாவூர்ல ஒரு திருவிழா தம்பி... மயிலாட்டம்னு கூப்புட்டிருந்தானுவோ... என்னமோ இன்னமும் நம்மள நெனப்பு வெச்சுக் கூப்புடுறானுவோ... நல்ல ஆட்டம் தம்பி...'' என்றார்.

சுப்பு திருவிழாக்களில் ‘மயிலாட்டம் மாடாட்டம்’ ஆடுபவர். இன்னமும் அதையே வாழ்க்கையாக வைத்திருப்பவர். அவரைப் பற்றி ஒரு டாகுமென்ட்டரி எடுப்பதற்காக நண்பரோடு சுற்றியபோது தான் பழக்கம். ஒருகாலத்தில் எங்கு திருவிழா என்றாலும் ‘மயிலாட்டம், மாடாட்டம்’ எனப் பரபரப்பாக இருந்தவர். அந்த வழக்கம் எல்லாம் எவ்வளவோ குறைந்துவிட்ட பிறகும், இப்படிப் பொம்மையைத் தூக்கிக்கொண்டு அலைகிறார்.


தஞ்சாவூர் புது பஸ் ஸ்டாண்டில் அந்தப் பொம்மையோடு அவர் நின்ற கோலம் ஒரு கணம் நெஞ்சை அறுத்தது. ‘‘இதுக்கு வேற பெயின்ட் அடிக்கணும் தம்பி’’ என்றார். ‘‘வீட்ல குடுங்க...’’ என அரை டஜன் ஆப்பிள் வாங்கிக் கொடுத்துவிட்டு வந்தேன். நான் போய்விட்டேனா என்று பார்த்துவிட்டு, அவர் சாலையைக் கடந்து எதிரே இருக்கிற ஒயின் ஷாப்புக்குள் நுழைவதைப் பார்த்தேன்.

இன்னமும்... இன்னமும் இருக்கிறார்கள்.

வள்ளுவர் கோட்டம் பிளாட்ஃபார்ம் முழுக்க கிளி ஜோசியர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். தண்டட்டி குலுங்க, ஒரு கிழவி ‘‘சரி... சரி... பத்து ரூவா குடுத்துட்டு ஒரு டீ வாங்கியா போதும்...’’ என யாருக்கோ ஜோசியம் சொல்லிக்கொண்டு இருக்கிறது. பெப்ஸி, கோக்குகளுக்கு நடுவே, கும்பகோணம் தெரு ஒன்றில் இன்னமும் அழுக்கு வேட்டியோடு பழைய வீட்டில் சோடா தயாரித்துக்கொண்டு இருக்கிறார் ஒரு பெரியப்பா.

மட்ட மதியம் அபார்ட்மென்ட் கதவைத் தட்டி, ‘‘சார்... ஊதுவத்தி வாங்கிக்கங்க சார்...’’ என்கிறாள் ஒரு சிறுமி. மீனம்பாக்கம் ஏர்போர்ட்டுக்கு எதிரே உள்ள ஒரு வீட்டில், ஏழெட்டு பெண்கள் ஏதேதோ பேசிக்கொண்டே காது குடைகிற பட்ஸ் ரெடி பண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். கையெல்லாம் எரிய எரிய... சீரியல் கதை சொல்லிக்கொண்டே பீடி சுற்றுகிறார்கள் இன்னமும் நம் தோழிகள். ‘வீட்டிலேயே காளான் வளர்ப்பு’, ‘கலர் மீன்கள் வளர்ப்பு’ என்றெல்லாம் ஆரஞ்சு, மஞ்சள், கறுப்பு — வெள்ளை நோட்டீஸ்களை பஸ்களில்

ஒட்டிக்கொண்டு இருக்கிறான் இன்னமும் ஒருவன். சேமியா பால் ஐஸ்களை ‘பாம்பாம்’ என விற்றபடி கோடையின் தெருக்களில் சுற்றுகிறார்கள் இன்னமும். நெரிசல் மிகுந்த தெருவில் கயித்தைக் கட்டி ‘டமக்கு டமக்’—என அடித்தபடி நடக்கிறாள் ஒரு குட்டிப் பெண். நாச்சியார்கோவிலில் ராத்திரி எல்லாம் ரேடியோவில் பாட்டைப் போட்டுவிட்டு, 24 மணி நேரமும் சைக்கிளில் ரவுண்டு அடித்துக்கொண்டு இருக்கிறார் ஒருவர். ‘‘மக்கள் டி.வி—ல வந்துருக்கோம்க...’’ எனத் தலையைச் சொறிகிறார் அரிச்சந்திரன் வேஷம் கட்டும் பத்மநாபன். டிரா.ஃபிக் மண்டிய சாலையோரத்தில் களிமண் பொம்மைகளைப் போட்டுக் காத்திருக்கிறது ஒரு தம்பதி. பஸ் ஸ்டாண்டுகளில் இஞ்சி மரப்பா விற்கிறார்கள் இன்னமும். ஆளாளுக்கு மொபைல் கேமராவோடு அலையும்போது, ‘‘சார்... போட்டோ எடுத்துக்கங்க சார். சூப்பர் குவாலிட்டில பிக்சர் சார்’’ என சுற்றுலாத் தலங்களில் பழைய கேமராவோடு துரத்துகிறார்கள் சிலர்.



அன்றைக்கு சாஸ்திரி நகர் சிக்னலில் ஒரு பூம்பூம்மாட்டுக்காரரைப் பார்த்தேன். இன்னொரு நாள் தி.நகர் அபார்ட்மென்ட் ஒன்றில், இடுப்பில் கருக்கருவாளோடு சட்டை போடாமல் வந்த ஒருவரைப் பார்த்தேன். ஒரு ரிக்ஷா வண்டியில் சாய்பாபா படத்தை வைத்துக்கொண்டு பாட்டு போட்டு ஊர் ஊராகப் போகிறது ஒரு குடும்பம். எப்போதும் தூசி படிந்த

விளையாட்டுச் சாமான்களைப் போட்டுக்கொண்டு, கோயில் மலை அடிவாரங்களில் ஒருவர் உட்கார்ந்திருக்கிறார். ‘இங்கு பைண்டிங் செய்து தரப்படும்’... ‘பாட்டுக்கள் பதிந்து தரப்படும்’ என போர்டு மாட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள்.

பெருநிறுவனங்கள் மிகுந்த பகுதியில் சைக்கிளில் கட்டி பருத்திப் பால் விற்கிறான் ஒருவன். ஊரில் இப்போதும் அப்படியே தோளில் மடையான்கள் தொங்க, சைடில் சுளுக்கி சொருகி டி.வி.எஸ்—50யில் வருகிறார் ஒரு குறவர். சந்தன கலர் சுடிதாரில் சைக்கிளில் நின்றபடி, தலையில் உதிர்ந்த கருவேலம் பூக்களைத் தட்டிவிட்டபடி ஒரு பெண் பேசிக்கொண்டு இருந்தபோதுதான் வளையல்காரர் நடந்துபோனார். செங்கல்பட்டு பக்கம் விடாப்பிடியாக இப்போதும் டூரிங் டாக்கீஸ் நடத்திக்கொண்டு, பழைய படங்கள் போட்டு... கலர் சோடா, முறுக்கு விற்கிறார் ஒருவர்.

எவ்வளவோ காலம் மாறி, வசதிகள் பெருத்து, ஏதேதோ நிகழும்போது ‘தென்றல் உறங்கிடும்போதும்...’ கேட்டபடி கூடை பின்னிக்கொண்டு இருப்பவரும் மை டப்பா வாங்கும்போது அழுத குழந்தைக்கு கூடையில் இருந்து ஹேர்பின் எடுத்து ஃப்ரீயாகக் கொடுப்பவரும் எவ்வளவு மகத்தானவர்கள்!

வேணியாத்தா, ஆனந்தியக்கா, சுப்பு என நீளும் நினைவுகளில் எப்போதோ எழுதிய கவிதை ஒன்று தலை நீட்டுகிறது...

*‘இன்னும் இப்பெருநகரில்*
*மர நிழல் பரவிய சாலைகள்*
*இருக்கின்றன*
*அடுக்குமாடிக் குடியிருப்புகளில்*
*கனிந்து தாழ்ந்த பார்வையுடைய*
*கனகவல்லிகள் வசிக்கிறார்கள்*

*பத்து ரூபாய்க்கு மூன்று*
*பேனா விற்பவர்*
*அபூர்வமாய்ப் பார்த்த ஓட்டு வீட்டில்*
*தண்ணீர் வாங்கிக் குடிக்கிறார்*
*கோயில் வாசல் சிறுமி*
*மஞ்சள் வெயில் உதிர*
*மலர் தொடுக்கும் நளினத்தைச்*
*சிலர் நின்று பார்த்துச்*
*செல்கின்றனர்*
*காலமற்ற காலத்தின் மேல்*
*குடித்துவிட்டுக் கிடப்பவனின்*
*உளறல் கேட்டு*
*ஒரு கை*
*சோடா வாங்கி வருகிறது*
*இளங்காலையில்*
*பள்ளிக்கூட மைதானத்தில்*
*பாட்டி ஒருத்தி*
*தட்டுக்கூடையில் நாவற்பழம்*
*சுமந்து போகிறாள்*
*மூன்றாவது முறையாகப்*
*பாலியல் தொழிலாளியிடம்*
*சென்று படுக்க மனமின்றித் திரும்பிக்*
*கொண்டிருக்கிறான் ஒருவன்!'*

# 35

# பிரிவின் தீரா வடுக்கள்!

**ஒ**வ்வொரு முறையும் அன்பின் அருமை பிரிவில்தான் புரிகிறது.

ஒரு மாதத்துக்கு முந்தைய இரவில், நண்பர் நாகலிங்கம் பதற்றமாக அலைபேசினார்.

''ஒரு முக்கியமான விஷயம் முருகன்...''

''சொல்லுங்க லிங்கம்...''

''என்னோட காதலைப் பத்திச் சொல்லி இருக்கேன்ல... அதுல கொஞ்சம் பிரச்னைங்க. அவங்க வீட்ல சம்மதிக்கமாட்றாங்க. போராடிப் பார்த்துட்டு, இப்போ என்னை நம்பி வந்துட்டாங்க. இப்போ ரெண்டு பேரும் சேலத்துலதான் இருக்கோம். உடனே கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கோம்.''

''கவனம் லிங்கம்... எல்லாம் நல்லபடியா நடக்கும்'' என்று தைரியம் சொன்னேன்.

சேலத்தில் இருக்கும் ஒரு நண்பனுக்கு தொலைபேசி, அவர்களுக்கான உதவிகளைச் செய்யச் சொன்னேன். மறு நாள் இருவருக்கும் ஒரு கோயிலில் கல்யாணம் நல்லபடியாக நடந்தது. 'நல்லபடியாக' என்பது நண்பர்களால். உறவுகளும் சொந்தங்களும் கூடி நடந்திருந்தால்... அது இன்னும் 'நல்லபடியாக'! நண்பர் லிங்கம், சினிமாவில் உதவி இயக்குநர். அனுதினமும் கனவுகளும் யதார்த்தங்களும் போட்டியிடும்

வாழ்வில் ஜெயிக்க அலைபவர். இத்தனைக்கும் நடுவே வரம் மாதிரி சத்யப்பிரியா வர, காதல் பூத்துவிட்டது.

வயதாலும் மனதாலும் இருவருமே பக்குவமானவர்கள். வாழ்க்கைப் பற்றிய புரிதல் உள்ளவர்கள். இருவரும் பரஸ்பரம் வீட்டில் பேசினார்கள். ஆனாலும், பெண் வீட்டில் மறுத்து விட்டார்கள். லிங்கம் சினிமாக்காரர் என்பது முதல் காரணம். அப்புறம் ஏதேதோ காரணங்கள். நிறையப் பேசிப் பார்த்துதான் இப்படி எங்கோ ஒரு கோயிலில் தனியாகக் கல்யாணம் பண்ணிக்கொண்டார்கள்.

அடுத்த வாரமே கே.கே. நகரில் வீடு பார்த்து, பால் காய்ச்சிக் குடியேறிவிட்டார்கள். பேச்சுலர் லிங்கத்தை எனக்குத் தெரியும். நள்ளிரவு வரை கங்கையம்மன் கோயில் தெருவில் சைக்கிள் டீ தேடியபடி ‘‘செப்பரேஷன்ல ஒரு ஷாட் வரும் பாருங்க...’’ எனப் பேசித் திரிந்து, அறை மீள அதிகாலையும் ஆகலாம். கட்டிலில் மடிக்காத கைலி கிடக்கும். இஸ்பேடு வடிவில் தோசை சுட்டு, பூண்டு தொக்குவைத்து இதுவரை காணாத காம்பினேஷனில் டிபன். புத்தகங்கள் இறைந்துகிடக்கும் டாய்லெட். யாரும் இல்லாமல் பூட்டப்பட்ட வீட்டுக்குள்ளும் அணைக்கப்படாமல் ஓடும் ஸ்டார் மூவீஸ் என ஒரு வாழ்க்கை. கூட ஓர் இதயம் வந்துவிட்டால் ஒரே நாளில் ஒருவரின் வாழ்க்கை எவ்வளவு மாறிவிடுகிறது என்பதை இப்போது லிங்கத்தின் வீட்டுக்குப் போனபோது உணர்ந்துகொண்டேன்.


இப்போது கே.கே. நகர் வீட்டில் காதலின் இன்னோர் அழகான அடையாளம்போல் வசிக்கிறார்கள். வீட்டுக்கு சாப்பிடக் கூப்பிட்டிருந்தார்கள். சாப்பிட்டு முடித்துவிட்டு, ‘‘அவங்க வீட்ல பேசிட்டாங்களா லிங்கம்?’’ எனக் கேட்டேன். ‘‘சத்யா வீட்லயா... இல்லைங்க...’’ என்றபடி மனைவியைப் பார்த்தார் நண்பர். சட்டென்று அவர் மனைவியின் முகத்தில் சொல்ல முடியாத உணர்வுகள் எழுந்தன. குரல் கொஞ்சம் உடைந்துவிட்டது. ‘‘இல்லைங்கண்ணா... அவங்க இன்னும் சமாதானம் ஆகலை. போன வாரம் அம்மா போன் பண்ணிப் பேசினாங்க. அவங்களுக்கு எங்களைச் சேர்த்துக்கறதுல விருப்பம்தான்.

சொந்தக்காரங்கதான் ரொம்பக் கோபத்துல இருக்காங்கனு சொன்னாங்க. வீட்ல இருக்கிற என்னோட துணிமணி, திங்ஸையெல்லாம் கொடுத்துவிடுறேன்னு சொன்னாங்க. அதெல்லாம் வேணாம்னு சொல்லிட்டேன். எங்கப்பாவும் ரொம்ப நல்லவர்ணா. எனக்கு அப்பான்னா உயிரு. அவருக்கும் அப்படித்தான். நாலு பேர் என்ன பேசுவாங்களோங்கிற ஈகோதாண்ணா அவரைத் தடுக்குது. ஆனா, நான் நிச்சயமா நம்புறேங்கண்ணா... ஒரு நாள் எங்களைப் புரிஞ்சுக்கிட்டு அவங்க வருவாங்கண்ணா. இந்தப் பிரிவும், நாங்க வாழ்ற வாழ்க்கையும் எங்களை அவங்களுக்குப் புரிய வைக்கும்ணா'' என அவர் பேசியபோது அழுதுவிடுவார்போல இருந்தது.

'உன் துணிகளையெல்லாம் தந்து விடுறேம்மா...' என்கிற ஓர் அம்மாவின் குரலும் 'இந்தப் பிரிவு எங்களை அவங்களுக்குப் புரியவைக்கும்...' என்கிற ஒரு மகளின் குரலும் எவ்வளவு பேசிவிடுகின்றன? ஓர் அலை எழுவதற்குள் இன்னோர் அலை விழுவது மாதிரி உறவும் பிரிவும் எப்போதும் சேர்ந்தேதான் வருகின்றன. பிரிவின் கோடையில் அன்பின் நிழலையும்; அன்பின் நிழலில் பிரிவின் கோடையையும் சுமந்துகொண்டேதான் அலைகின்றன பருவங்கள். ''நிச்சயம் அவங்க வருவாங்கம்மா'' என்று சொல்லிவிட்டு வந்தேன்.

**சி**று வயதில் எங்கள் வீட்டில் ஒரு பூனை இருந்தது, வெள்ளையும் சாம்பலுமாக. எப்போதும் கத்திக்கொண்டு வீடு முழுக்க சுற்றிக்கொண்டே இருக்கும். ஒளிஞ்சாங்கண்டு விளையாட ஒளியும்போது பத்தாயத்தில் இருந்து வெருண்டு ஓடும். பேபே ஆடும்போது மாட்டுக் கொட்டாயில் இருந்து தெறித்து ஓடும். கத்திரி வத்தல் டின் எடுக்க பரணில் ஏறினால், ரோமம் சுழிக்கக் கொட்டாவி விடும். மீன் குழம்பு வைக்கிற நாளில் கூடத்திலேயே குடியிருக்கும். பல நேரங்களில் சமையல் அறை ஜன்னலில் உட்கார்ந்துகொண்டு, அம்மாவையே பார்த்துக்கொண்டு இருக்கும். வீட்டில் எங்கே ஷாட் வைத்தாலும் ஃப்ரேமில் ஏதோ ஒரு மூலையில் அந்தப் பூனை இருக்கும்.

ஒரு நாள் அந்தப் பூனை கர்ப்பம் தரித்தது. இன்னொரு நாள் அதிகாலையில் பத்தாயத்தில் பிலுபிலுவென நாலைந்து குட்டிகளைப் போட்டது. வெயிட் போட்ட உடம்போடு குட்டிகளின் பக்கத்திலேயே உர்ர்ர்ரென உட்கார்ந்திருந்தது. ஒரு வாரத்துக்கு அதன் அராஜகம் தாங்கவில்லை. பிற்பகலில் எல்லாம் தட்ட்டேர் புட்ட்டேரெனப் பால், மோர் தேடிப் பாத்திரங்களை உருட்டிக்கொண்டே இருக்கும். திண்ணைக்கு வரும் தெருநாய்களோடு ஏக ரகளையாகச் சண்டை கட்டும். ராத்திரி எல்லாம் அதுவும் குட்டிகளுமாக ஆர்.ஆர். வாசித்துக்கொண்டே கிடந்தன. ஒரு நாள், வீட்டுக்கு வந்த மாமா, ‘‘டேய்... ஏண்டா இதுகள வூட்ல வெச்சுக்கிட்டு சேவண்டி அடிக்கிறீங்க... தரித்திரம்... தரித்திரம்...’’ எனத் தூங்க முடியாமல் எழுந்து கத்தினார். தூங்கிக்கொண்டு இருந்த அவர் மேல் தொபுக்கென்று விழுந்து ஓடிவிட்டது பூனை. அதிகாலையில் எழுந்து ‘‘வாடா...’’ என என்னை எழுப்பிவிட்டார் மாமா. தாய்ப் பூனையைப் பிடித்து ஒரு மூட்டைக்குள் போட்டுக் கட்டிவிட்டார். ‘‘ங்க பாரு ஆயி... இந்தக் குட்டிங்களை எல்லாம் கேக்குற ஆளுகளுக்குக் குடுத்துவிட்ரு. அதெல்லாம் பொழைச்சுக்கும்...’’ என அம்மாவிடம் சொன்னார். ‘‘அதுங்க பாவம்... இப்ப எதுக்கு?’’ என அம்மா கேட்கும்போதே என்னிடம் மூட்டையைக் கொடுத்து டி.வி.எஸ்.50—ஐக் கிளப்பிவிட்டார் மாமா.



அந்த அதிகாலையில் ஆற்றைத் தாண்டி கம்மங்குடி போய் நின்றுகொண்டு, ‘‘மூட்டையைப் பிரிச்சுவுட்றா...’’ என்றார். மூட்டையைப் பிரித்ததுமே விருட்டென்று வெளியே குதித்து ஓடி நின்று உர்ர்ரென்று பார்த்தது வெள்ளைச் சாம்பல். ‘‘பார்றா மொறைக்கறத... ஓடு கம்னாட்டி...’’ என மாமா விரட்ட, அது ஓடியே போனது. அதன் பிறகு அந்தக் குட்டிகளையும் யார் யாருக்கோ கொடுத்துவிட்டோம். அப்போது எதுவும் புரியவில்லை. அது எவ்வளவு பெரிய பாதகம்.

அந்த அதிகாலை இருளில் கம்மங்குடி ஆற்றங்கரையில் மிரண்டு ஓடிய அந்த தாய்ப் பூனை எங்கே போனது? என்ன ஆனது? அதன் குட்டிகளைப் பார்க்க முடியாமல் பிரிவில் எப்படி எல்லாம் தவித்தது? அந்தக் குட்டிகள் என்ன ஆகின? எதுவுமே தெரியவில்லை!

வாழ்க்கை முழுக்க வெள்ளையும் சாம்பலுமாகக் கண்கள் ஒளிர... ஒரு பிரிவு நம்மைத் துரத்திக்கொண்டே இருக்கும் என்பது இப்போதுதான் புரிகிறது. மாய்ந்து மாய்ந்து நம்மீது அன்பு செலுத்துபவர்களின் அருமை, அவர்கள் அருகில் இருக்கும்போது நமக்குப் புரிவதே இல்லை. பிரியத்தின் பெருமழையை அவர்கள் பொழியும்போது எல்லாம் குடை பிடித்துக்கொண்டு போகும் கயவர்கள் நாம்.

மணிக்கு மூணு தரம் போன் பண்ணி ‘‘எங்க இருக்க? என்ன பண்ற..?’’ எனக் கேட்டுக்கொண்டே இருக்கும் ஒரு குரல்... சதா தலை வருடத் துடித்துக்கொண்டே இருக்கும் ஒரு கரம்... காய்ச்சலில் கிடந்த அத்தனை நாளும் பக்கத்திலேயே இருந்த ஓர் ஆதூரம்... கேட்கும்போது எல்லாம் கேட்காததையும் சேர்த்துத் தரும் மாகாதல்... எளிதாய்க் கிடைத்துவிடுகிற எதையும் மனசு மதிப்பது இல்லை. அலட்சியப்படுத்தி, புறக்கணித்துத் திரிவோம். ஒரு நாள் நிர்தாட்சண்யமாக நம்மைவிட்டு அவை பிரியும் நேரம் வரும். அப்போது வெறுமையை நம்மால் தாங்க முடியாது. அதுவரை கொட்டிய அன்பெல்லாம் அப்போதுதான் விஸ்வரூபமெடுத்து வந்து நம்மைக் கொல்லும். அந்தப் பிரிவுதான் அன்பின் முழுமையை, அருமையை உணர்த்தித் தவிக்கடிக்கும்.

எனது அத்தையும் மாமாவும் மூன்று பெண் பிள்ளைகளைப் பெற்ற பிறகு இதயம் கசந்து டைவர்ஸ் வாங்கிக்கொண்டு பிரிந்துவிட்டார்கள். 10 வருடங்களுக்கு அப்புறம் மகள்கள் எல்லாம் வளர்ந்துவிட்ட பிறகு ஏதோ ஒரு நாளில் போனில் பேசி, சந்தித்துச் சேர்ந்துவிட்டார்கள். இப்போது திரும்ப ஒன்றாகி அதே வீட்டில் வசிக்கிறார்கள். சின்னச் சின்ன சலிப்புகளைத் தவிர, 10 வருடங்களுக்கு முன்பு இருந்த சண்டைகள் எதுவும் இப்போது அவர்களுக்குள் இல்லை. ப்ளஸ் மைனஸ்களை இட்டு நிரப்ப முடியாத வெறுமையை, அவரவருக்கான தேடலை... எல்லாவற்றையும் அந்தப் பிரிவு அறியவைத்துவிட்டது.

பிரிவுதான் எவ்வளவு புதிரானது? எவ்வளவு கொடூரமானது? ''அவளை நெனைச்சாலே எரியுதுரா... பெரிய ஒலக அழகினு நெனைப்பு அவளுக்கு...'' என முதல் நாள் தண்ணியடித்துவிட்டு மனைவியைத் திட்டும் நண்பர் மறுநாளே, ''அவ மாரி யாரும் வர முடியாதுரா. அவவேறடா...'' எனப் புலம்புகிறார். இரண்டு வருடங்களாக இருவரும் பிரிந்து இருக்கிறார்கள். யாரோ எதுவோ சொல்லிவிட, நம்மைத் திடுதிப்பென்று புறக்கணித்து நடமாடும் நண்பன் எவ்வளவு துயரங்களைத் தருகிறான்?


சமயபுரம் பக்கம் ஒரு பிற்பகலில் லாரியில் மோதி உருண்டு கிடந்த வேனில், காலையில்தான் கல்யாணமாகி மணக் கோலத்திலேயே ரத்தமாகக் கிடந்த மணமக்களைப் பார்த்தேன். திருச்சி ஆஸ்பத்திரியில் அந்த மாப்பிள்ளை செத்துப்போனார்; பலத்த காயத்தோடு அந்தப் பெண் பிழைத்துக்கொண்டார். காலையில் இருந்து அவர்கள் என்னவெல்லாம் பேசியிருப்பார்கள்? கிஃப்ட் கொடுக்க வந்த தோழர்கள் அடித்த கமென்ட்டுகளுக்கு எப்படிச் சிரித்திருப்பார்கள்? காணக் கிடைக்காத புன்னகைகளோடு புகைப்படங்களுக்கு நின்றிருப்பார்கள். பூக்களும் வியர்வையுமாக உரசிய ஸ்பரிசங்களில் எத்தனை எத்தனை கனவுகள் கண்டிருப்பார்கள்? இப்படிச் சில நொடிகளில் அவரை நிரந்தரமாகப் பிரிவோம் என்று அந்தப் பெண் நினைத்திருப்பாரா? 'இனி இவரைப் பார்க்கவே முடியாது...' என்ற தீராப் பிரிவைச் சுமந்துகொண்டு தினம்

தினம் யாரேனும் சுடுகாட்டாங்கரையில் இருந்து திரும்பிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

மொட்டைத் தலையோடு அப்பாவை எரித்துவிட்டு, உடல் நடுங்க வந்து தென்னந்தோப்புப் படித்துறையில் முங்கிய கணம்... ஆறோடா போய்விடும்? பைக் ஆக்ஸிடென்ட்டில் செத்துப்போன பிரேம் சாரை, திருப்பூர் ஜி.ஹெச்—ல் காக்கி கலர் லெதர் ஷூவை வைத்து அடையாளம் சொன்ன நொடிகள் பிரிவின் துயரச் சித்திரம். அரக்கோணம் பக்கத்தில் ரயில் விபத்து நடந்தபோது, ''எந்தம்பி அதுலதான் போனான்... போன் பண்ணா நாட் ரீச்சபிள்னு வருது. கொஞ்சம் போய்ப் பாரேன்...'' எனத் தோழி ஒருத்தி கதற, அங்கே போய் இறந்துபோனவர்களின் பட்டியலுக்காகக் காத்திருந்த கணங்கள் எவ்வளவு பயங்கரமானவை!

தினம் தினம் ரயில் நிலையங்களில், பேருந்து நிலையங்களில், விமான நிலையங்களில் எவ்வளவு பேர் பிரிவின் பொருட்டு தவிக்கும் மனதைச் சுமந்துகொண்டு நிற்கிறார்கள்? முதன்முதலாக வீட்டைவிட்டு விடுதியில் சேரும் நாளில், நம்மைவிட வருகிற தகப்பனும் தாயும் ''ஒழுங்கா இருந்துக்கணும்ரா... நேரத்துக்குச் சாப்பிட்டுக்கிட்டு சேட்ட பண்ணாம இருந்துக்கணும்ரா...'' எனச் சீமாட்டி கடைப் பையில் சீடை குடுத்துவிட்டுப்போன கொஞ்ச நேரத்துக்கெல்லாம் நெஞ்சு கனத்துப் பயமாகி அழுகை முட்டாதவர்கள் யாரும் இருக்கிறோமா?

ரயில்களிலும் மலையடிவாரங்களிலும் பேருந்து நிலைய பாத்ரூம்களிலும் மண்டபங்களிலும் சேர்ந்து சேர்ந்து எழுதிக் கிடக்கும் பெயர்களில் இருப்பவர்கள் எல்லாம் இப்போதும் சேர்ந்திருக்கிறார்களா... பிரிந்திருக்கிறார்களா? பணம், தொழில், தேடல், காதல், நட்பு என எங்கெங்கும் பிரியங்களாலும் பிரிவுகளாலும் நிறைந்து இருக்கிறது பிரபஞ்சம்!



கனடாவில் இருந்து ஒரு நண்பர் என்னைப் பார்க்க வந்திருந்தார். ஒரு நாள் முழுக்க அவரோடு இருக்க வேண்டும் என்று முன்பே கேட்டுக்கொண்டார். ‘‘எனக்கு என்ன நண்பரே அப்பாய்ன்மென்ட்..?’’ எனச் சிரித்தால், ‘‘இருந்தாலும் பிஸியா இருப்பீங்கள்ல...’’ என்றார். ஒரு நாள் முழுக்க சென்னையில் பல இடங்களுக்குச் சென்றோம். அவருக்குப் பிடித்த எழுத்தாளர்கள் வீடுகளுக்கு அழைத்துப் போனேன். ஈழத்தில் அவருடை பால்யம், குடும்பம், இயக்கம், காதல், ஒரு யுத்த நாளில் அங்கே இருந்து வெளியேறியது பற்றியெல்லாம் அந்த நாள் முழுக்கப் பேசிக்கொண்டே இருந்தார். இரவு அவர் தங்கி இருந்த ஹோட்டலில் அவரை விட்டுவரப் போனேன்.

அறைக்கு வந்ததும் அவர் அணிந்திருந்த முழுக்கைச் சட்டையைக் கழற்றினார். பகீரென்றது. அவர் உடம்பு முழுக்க வெந்துபோன தழும்புகள். புன்னகைத்தபடியே இருந்த அவர் முகத்துக்கு நேரெதிராக இருந்தது அந்த உடம்பு. நான் பார்ப்பதைப் பார்த்துவிட்டு அவர், ‘‘இதுவா... யுத்த நாளிலே ஊரைவிட்டு வந்தேனென்டு சொன்னேனில்லையா... அன்றைக்கு நெருப்பிலே மாட்டிக்கொண்டன்...’’— என்றார் சிரித்தபடி. மறுபடியும் ஒரு முழுக்கை டி—ஷர்ட்டை எடுத்து மாட்டிக்கொண்டு அமர்ந்தார். ஆனால், அப்போதும் மறையாமல் என் கண்களுக்குத் தெரிந்தன... நமது உலகம் உணரவே முடியாத பிரிவின் தீரா வடுக்கள்!

36

# உண்மையான அன்பு போரடிக்குமா என்ன?

**‘ப்** ரிங் ஒன் மசால் தோசா!’

செல்போன்கள் வராமல், பேஜர் வந்திருந்த புதிது. மெசேஜ்கள் மட்டுமே வரக்கூடிய பேஜர்களே அப்போது பெரிய அதிசயமாக இருந்தன. வம்பாடுபட்டு நான் ஒரு பேஜர் வாங்கினேன். அதில்தான் தினமும் சாயங்காலமானால் எனது மேன்ஷன் ரூம்மேட் கணேசனின் மேற்சொன்ன மெசேஜ் வந்துவிழும்.

அந்த மெசேஜைக் கண்டாலே, எனக்கு ரத்தம் கொதிக்கும். ‘‘யோவ் கணேசா... பேஜர்ங்கிறது எவ்ளோ பெரிய டெக்னாலஜி... அதுல போயி ‘ப்ரிங் மசாலா தோசா... பூரிக் கெழங்கு’னு தினம் கடுப்படிக்கிற. இனிமே, இந்த மாதிரி மெசேஜ் அனுப்புன... மிதி வாங்கப் போற பாரு!’’ எனக் கொந்தளிப்பேன். ஆனாலும், மறுநாளே ‘ப்ரிங் டூ பனானாஸ்’ என ஸ்க்ரோலிங் ஓடும்.

அந்த பேஜரை சைடு பெல்ட்டில் சொருகி, தேவையே இல்லாமல் அவ்வப்போது பொது இடங்களில் ஸ்டைலாக எடுத்துப் பார்ப்பது... பஸ்ஸில் சீரியஸாக முகத்தை வைத்துக்கொண்டு பட்டன்களை அழுத்திக்கொண்டு இருப்பது... இரவு, ரூமில் அதைத் துடைத்துவைத்துவிட்டு அவ்வப்போது பார்த்துக்கொள்வது... கணேசன்

தொட வந்தால் அவனை விரட்டி அடிப்பது எனக் கொஞ்ச நாளைக்கு பேஜார் பண்ணித் திரிந்தேன்.

ஒரு நாள் திடுதிப்பென செல்போன்கள் என்ட்ரி. மை.பா. அண்ணனுடன் சரத்குமாரைப் பேட்டி எடுக்கப் போகும்போதுதான் முதன்முதலில் அதைப் பார்த்தேன். ‘வாகை சூடவா’ செங்கல் மாதிரி ஒரு வஸ்துவை வைத்துக்கொண்டு வெட்டவெளியில் நின்று சரத்குமார் அதில் பேசிக்கொண்டு இருந்தார்.

‘‘இதாண்டா செல்போனாம்...’’ என்றார் மை.பா. அண்ணன் ஹஸ்கி வாய்ஸில். எனக்கு, செல்லூர் நெல்லுக் கடை ராமதாஸ் வீட்டில் ஒன்றரை டன் வெயிட்டில் உட்கார்ந்திருக்கும் கறுப்பு போன் நினைவுக்கு வந்தது. சுத்துப்பட்டில் அந்த ஒரு வீட்டில்தான் போன் இருந்தது. ஆத்திர அவசரம் என்றால் பெர்மிஷன் கேட்டு, அதில் ஒரு நம்பரைச் சுத்துவதற்குள் கடைசி பஸ் போய்விடும். ‘கிணிங்... கிணிங்.. கிணிங்...’ என அந்த போன் அடிப்பது அய்யனார் கோயிலில் மணியாட்டுகிற மாதிரியே இருக்கும். இப்போது நினைவு கலைந்து சரத்குமாரின் கையில் இருந்த செங்கல்லைப் பார்த்து எனக்குப் புல்லரித்தது.

அதன் பிறகு, செல்போன்கள் கிடுகிடுவெனப் பரவத் தொடங்க, எனது பணக்கார நண்பன் ஒருவன், ஒரு செங்கல்லை வாங்கினான். அவன் காதலில் வேறு இருந்தான். அப்போது அவுட்கோயிங், இன்கமிங் எல்லாவற்றுக்கும் காசு. இன்கமிங்குக்கே நிமிஷத்துக்கு எட்டு ரூபா. அப்படியும் அவன் எப்போது பார்த்தாலும் செல்லில் கடலை போட்டபடியே இருந்ததில், அந்த மாத பில் மட்டும் 26 ஆயிரம் ரூபாய் வந்தது.

அவனையும் அங்கங்கே செல்போனும் கையுமாகப் பேசிக்கொண்டு நடப்போரையும் பார்க்கும்போது எல்லாம் எனக்கு, ‘வாழ்க்கைல எப்பிடியாவது ஒரு செல்போன் வாங்கிரணும்ரா...’ என்ற லட்சிய வெறி ஏறியது. 6 ஆயிரத்துக்கு ஒரு நோக்கியா வாங்கிய நாளில்தான், ஜென்ம சாபல்யம் அடைந்தேன். லேண்ட் லைனில் நானே என் நம்பருக்கு போன்

அடித்து, இன்னொரு காதில் வைத்து எக்கோவில் ‘ஹல்லோ... ஹல்லல்லோ’ எனப் பரவசமானேன்.

பொது இடத்தில் நின்று மொபைலில் பேசினாலே, வி.ஐ.பி. ஆகிவிட்ட மாதிரி ஒரு ஃபீலிங். ‘ப்ளிங்’ என ஒரு மெசேஜ் வந்து விழுந்தாலே... பூப்பூக்கும். கொஞ்ச நாட்கள் கழித்து ரூமில் நக வெட்டி தேடும்போது பார்த்தால், கேட்பாரற்று கிடந்தது பழைய பேஜர்... ‘போங்கடா போங்க’ என்கிற எப்போதைக்குமான மெசேஜுடன்!

யாரைப் பார்த்தாலும் செல் நம்பரைக் கொடுத்து, ‘எப்ப இருந்தாலும் கூப்பிடுங்க சார்’ எனப் பித்தாய்த் திரிந்ததும் எந்த நாளில் போரடித்தது? இப்போது ‘நோ மேன்ஸ் லேண்ட்’ பட க்ளைமாக்ஸில், கண்ணிவெடியில் கால் வைத்துவிட்டு, எடுத்தால் வெடித்துவிடும் என்பதால்... அப்படியே கிடப்பவனை மாதிரி ஆகிவிட்டது மொபைலுக்கும் நமக்குமான உறவு.

சைதாப்பேட்டை பஸ் ஸ்டாண்டில் நின்றுகொண்டு, ‘பாஸ்... பாண்டிச்சேரில இருக்கேன்’ என்பதுபோல் எத்தனை பொய்கள்... ‘நான் மீட்டிங்ல இருக்கேன்னு கட் பண்ணு’ என்பதுபோல் எவ்வளவு சமாளிப்புகள்... ‘மொத்தம் மூணு சிம் கார்டு தலைவா... இது பி.எஸ்.என்.எல்...’ என்பதுபோல் எவ்வளவு தலைமறைவுகள்... ‘ஒரு மாசத்துக்கு செல்லை ஆஃப் பண்ணி வீசிட்டு, ஸ்க்ரிப்ட் எழுதப் போறேன்...’ என்பதுபோல் எவ்வளவு தயாரிப்புகள்... ‘எத்தனை கால் பண்றது... ஏன் எடுக்கலை?’ என்பதுபோல் எத்தனை ரகளைகள்... ‘ப்ளீஸ் சார்... வேலையா இருக்கேன் அப்புறம் கூப்பிடுங்களேன்’ என்பதுபோல் எவ்வளவு இம்சைகள்!

வெகு நாட்களுக்குப் பிறகு அந்த 26 ஆயிரம் ரூபாய் பில் பார்ட்டி நண்பனைப் பார்த்தேன். ‘‘உன் நம்பர் என்னடா? குடு...’’ என்றதற்கு, ‘‘இல்ல மாப்ள... நான் மொபைல் யூஸ் பண்றதில்ல...’’ என்றான். ‘‘ஏன்டா..?’’ என்றால் சிரித்தபடி சொன்னான், ‘‘இப்ப எல்லாம் மொபைல் இல்லைன்னாதான் மாப்ள அவன் வி.ஐ.பி.!’’

இப்போது ஃபேஸ்புக் ஃபீவர் உலுக்கி எடுக்கிறது. ‘தண்டையார்பேட்டைல டிராஃபிக்ஜாம்...’ என ஆன் தி வேயில் யாராவது ஸ்டேட்டஸ் போட்டால், அடுத்த செகண்டே, ‘நுங்கம்பாக்கத்துல டொமட்டோ ஜாம் வாங்கிட்டு இருக்கேன் பாஸ்’ என பதில் கமெண்ட்டுகள் பறக்கின்றன. சும்மா இருக்க முடியாமல் மூணு வருஷத்துக்கு முன்பு மூணாறு போனபோது எடுத்த போட்டோவை எல்லாம் அப்லோட் பண்ணிவிட்டு, எத்தனை லைக்ஸ், எத்தனை கமெண்ட்டுகள் எனப் பார்க்கிற பரவசத்திலேயே, பாதி நாள் காலியாகிவிடுகிறது.


அணு உலையில் இருந்து ‘3’ பட விமர்சனம் வரை ஒரு ரவுண்டு வந்தால், தலை கிறுகிறுக்கிறது. நார்வே, கனடா, சின்னமனூர் என ஒரே நேரத்தில் மூன்று பேர் சாட்டிங்கில் ‘கமான்... கமான்’ என்கிறார்கள். ‘‘பெரியார் என்ன சொன்னாரு தெரியும்ல...’’ என ஒருவர் ஆரம்பித்தால், ‘‘இங்க என்ன சொல்லுது... சின்ன சில்க்கு, சின்ன சில்க்குனு சொல்லுதா...’’ என்பது வரை தெளியவைத்து தெளியவைத்து அடிக்கிறார்கள்.



ரெண்டு, மூணு மணி நேரத்துக்கு ஒரு முறை சிஸ்டத்தில் மேயாமல் இருக்க முடியவில்லை. எந்த நேரமும் ஃபேஸ்புக்கிலேயே கிடக்கும் ஒரு நண்பரைக் கொஞ்ச நாளாக ஆளையே காணோம். நேற்று போனில் வந்தபோது, ''என்னங்க எஃப்.பி—ல ஆளையே காணோம்?'' என்றேன். ''அய்ய... அது போரடிச்சுருச்சுங்க!'' என்கிறார். ''ஏங்க..?'' என்றால், ''நேரத்தைக் கொன்னுறுதுங்க... அதான் எஸ்கேப்'' என்கிறார். ''ஏங்க... எஃப்.பி—லதான் எகிப்து புரட்சிலாம் நடந்து இருக்கு...'' என்றால், ''புரட்சி நடக்கறது இருக்கட்டுங்க... எனக்கு மொதல்ல வேலை நடக்கணும்ல...'' எனச் சிரிக்கிறார்.

நமக்கு எல்லாமே போரடித்துவிடுகிறது. 'சன் டி.வி—யின் தமிழ்மாலை' என்ற குரல் எவ்வளவு குதூகலமாக இருந்தது ஒரு நேரத்தில். கேபிள் வந்த புதிதில் டி.வி. பார்ப்பதே வேலையாகக் கிடந்தது எவ்வளவு பரவசமாக இருந்தது? இப்போது 10 நிமிஷத்தில் 17 சேனல்கள் மாற்றிவிட்டு, அதையும் அணைத்துவிட்டு வாக்கிங் கிளம்பிவிடுகிறோம்.

ஆட்டோவில் போகும்போது 12பி—யில் 'ஹோ...'வென ஃபுட்போர்டு அடித்துப்போகும் பையன்களைப் பார்த்தால் தோன்றுகிறது... 'ஒரு நேரத்தில் இப்படி பஸ்ஸில் ஃபுட்போர்டு அடித்துப் போக எவ்வளவு பிடித்தது?' அந்த சாகசத்துக்கும் சுவாரஸ்யத்துக்கும் மனசு எவ்வளவு ஏங்கியது? இப்போது பைக் கதறக் கதற... அதில் போகிறவர்களைக் கண்டாலே, 'எதுக்கு இந்தக் கொல வெறி' எனத் தோன்றுகிறது. சைட் அடிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு, வீட்டில் இருந்து கிளம்பிய நாட்களும் இருந்ததே... பெண்களைப் பின்தொடர்வதும் ஓரமாக நின்று ஒரு சைஸாகப் பார்ப்பதும், பார்வை உரசும் மின்னல் நொடியில் வயலின்கள் பிளிறுவதுமாக இருந்த நாட்கள் இப்போது போரடித்துவிட்டன.



ஒரே ஒரு பார்வை... சிறு வார்த்தைக்குத் தவம் இருந்த காதல் எல்லாம் கொஞ்ச காலத்தில் எவ்வளவு பேருக்குப் போரடித்து விடுகிறது? ''உனக்காக எதை வேணும்னாலும் விட்ருவேம்பா'' என்றவர் இப்போது, ''வேலையா இருக்கேன்றன்ல... டூ டேஸ் என்னை விட்றேன்...'' என எரிந்து விழுவது எதனால்? எங்கே, எப்போது, என்ன சாப்பாடு கிடைக்கும் எனத் தேடித் தேடிப் போய்ச் சாப்பிட்டதும் ஒரு கட்டத்தில் போரடிக்கிறது. ''அய்யய்யோ! இந்தத் தெள்ளவாரி வாழ்க்கை போரடிக்குதுப்பா... சம்சாரி ஆகிரணும்பா'' எனக் கல்யாணம் பண்ணிக்கொண்டவன், கொஞ்ச காலத்திலேயே வந்து, ''கல்யாணம் மட்டும் பண்ணிக்காத மச்சான்... இப்பிடியே ஜாலியா இருந்துரு...'' என்றபடி என் அறையில் துண்டை விரித்துப் படுக்கிறான். குடி, கொண்டாட்டம், கூத்து எனத் திரிந்தவர்கள் போரடித்து, சாமியாராகிவிடுகிறார்கள். கெட்டது பண்ணியே போரடித்து நல்லது பண்ணுகிறார்கள் சிலர். வேலை, உறவு, ரசனை... எல்லாவற்றிலும் ஏதோ ஓர் இடத்தில் அயர்ச்சியாகிவிடுகிறது நமக்கு.

நண்பர் ஒருவரோடு சேர்ந்து யோகா வகுப்புக்குப் போனேன். கூடவே, தியானமும் உண்டு. 60 வயது இருக்கும் யோகா மாஸ்டருக்கு. முதல் நாள் வகுப்பில் அந்த மாஸ்டர், வந்திருந்த ஒவ்வொருவரிடமும் அவர்களைப் பற்றி பேசச் சொன்னார். ஒருவர் எழுந்து, ''எனக்கு லைஃபே போரடிக்குது மாஸ்டர். அதே வேலை... அதே முகங்கள்... ரொட்டீனா இருக்கு. அதனாலதான் இந்த கிளாஸுக்கே வந்தேன்...'' என்றார். இன்னும் சிலரும் இந்த 'லைஃப் போரடிக்குது' என்பதையே சொன்னார்கள்.

அந்த மாஸ்டர் மறுநாள் கிளாஸுக்கு நடுவே 15 நிமிடம் ஓடும் குறும்படம் ஒன்றைப் போட்டு, எல்லோரையும் பார்க்கச் சொன்னார். அந்தக் குறும்படம் இரும்புப் பட்டறையில் வேலை செய்கிற ஒருவனைப் பற்றியது. 15 நிமிடமும் அவன் அந்தப் பட்டறையில் இரும்பு அடிப்பதை மட்டுமே காட்டி, முடித்துவிட்டார்கள். ''எப்பிடி இருக்கு..?'' என்றார் மாஸ்டர். ''அய்யோ! செம போர் மாஸ்டர்...'' என அலறினார்கள். உடனே அந்த மாஸ்டர், ''15 நிமிஷம் பார்க்கறதுக்கே உங்களுக்கு இவ்வளவு போரடிக்குதே... இதையே வாழ்க்கையா வாழ்ற அவனுக்கு எப்பிடி இருக்கும்?'' என்றார். எனக்குத் தடக்கென்றது. எதையும் அறியாமல், இயலாமல் இப்படி எத்தனை எத்தனை எளிய மனிதர்கள் வாழ்கிறார்கள் என்பதை எவ்வளவு சுருக்கமாகச் சொல்லிவிட்டார்?

சத்யஜித் ரேவின் படம் ஒன்றில் ஒரு பெண் ஜன்னல் வழியே தெருவைப் பார்த்துக்கொண்டு இருக்கிற ஷாட் மட்டும் 10 நிமிடங்கள் வரும். பார்க்கவே போரடிக்கும். அதுபற்றிக் கேட்டபோது, ''அந்தப் பெண்ணோட பல வருஷத்து வெறுமையையும் தனிமையையும் நான் எப்படித்தான் உங்களுக்கு உணர்த்துவது..?'' என்றார் ரே!

அட, இந்த பால்ராஜ் அண்ணாச்சியை எத்தனை வருடங்களாக இதே கடையில் பொட்டலம் கட்டுகிற சித்திரத்திலேயே பார்க்கிறேன். காலையில் கடை திறந்தால், ராத்திரிக்கு எண்ணெய், பிண்ணாக்கு வாசத்தோடு வீடு மீள்வது எவ்வளவு காலமாக நடக்கிறது? யாழினி அக்கா... அதிகாலை 4 மணிக்கு அடுப்பு மூட்டி, நள்ளிரவில் மாவு ஆட்டி

இந்த மெஸ் வாழ்க்கையை எத்தனை வருடங்களாக வாழ்கிறாள்? 20 வருடங்களாக அதிகாலை 4 மணிக்கும், பிற்பகல் 3 மணிக்குமாக டெப்போவுக்கு வந்துவிடுகிற பால்கார மணிக்கு போரே அடிக்காதா? எப்போது பார்த்தாலும் யாரும் வராத பேக்கரியில் கொட்டாவி விட்டபடியே உட்கார்ந்து இருக்கும் கனியப்பா... ஒரு குயர் நோட்டில் கோலம் வரைந்தபடியே பி.சி.ஓ. பூத்தில் உட்கார்ந்திருக்கும் பெரியம்மா... ஒரு நாள்கூட லீவு போடாமல் 35 வருடங்களாக ரயில்வேயில் சிக்னல் மேனாக இருக்கும் சண்முகம் சார்... ஒரே வேலை... வாழ்க்கை... அனுதினங்கள் என எத்தனை எத்தனை பேர் இருக்கிறார்கள்!

சபரிமலை போயிருந்தபோது, வழியில் ஓர் இடத்தில் அன்னதானச் சாப்பாடு வாங்க நின்றேன். வயதான முதியவர் ஒருவர் இரண்டு தட்டுக்களில் சாப்பாடு வாங்கிக்கொண்டு நடக்க முடியாமல் நின்றார்.

''தம்பி ஒரு உதவி... இந்தத் தட்டைக் கொஞ்சம் கொண்டாந்து தர முடியுமா?'' என்றார்.

அவரோடு போனேன். கொஞ்சம் தள்ளி விரிப்பில் ஒரு மூதாட்டி உட்கார்ந்து இருந்தார். இருவருக்குமே 70 வயதுக்கு மேல் இருக்கும். ஒரு தட்டை மூதாட்டியிடம் வைத்தேன். பக்கத்திலேயே இவர் உட்கார்ந்துகொண்டார்.

''தம்பி... நீங்களும் வாங்கிட்டு இப்பிடி வாங்க...'' என்றார். ''ந்தா... பொரியலையும் சேத்துச் சாப்பிடு...'' என அந்தப் பாட்டியிடம் பேசிக்கொண்டே இருந்தார். அவர்களோடு சாப்பிட்டுவிட்டு, அவர்களுடனே சரங்கொத்தி வரை நடந்துபோனேன்.

இருவரும் கணவன் — மனைவி. ஒருவர் கையை ஒருவர் பிடித்தபடியே நடந்து வந்தார்கள். நான்கு பிள்ளைகள் இருந்தும் யார் வீட்டிலும் இருக்கப்பிடிக்காமல், திருச்சியில் இருக்கிற முதியோர் இல்லத்துக்கு வந்துவிட்டார்கள். ''அவங்களுக்கு அப்பா — அம்மாவைப் போரடிச்சிருக்கு... நாம யாருக்கும் பாரம் ஆயிரக்கூடாது இல்லையா? அதான் வந்துட்டோம். ரெண்டு பேரும் சந்தோஷமாத்தான் இருக்கோம்.

இவளுக்கு நான்... எனக்கு இவ... இதோ அய்யப்பனைப் பார்க்க ரெண்டு பேரும் சேர்ந்து வர்றது இது அஞ்சாவது வருஷம்!'' என்றார்.

கோயிலுக்குப் போய்விட்டுத் திரும்பும்போது, நெய்த் தேங்கா கொளுத்துகிற இடத்துக்குப் பக்கத்தில், நசநசவென நிரம்பிக்கிடக்கிற கூட்டத்துக்கு நடுவே அந்தத் தம்பதி கைகோத்தபடி உட்கார்ந்து இருந்தார்கள்.

இந்த இடத்தில் ரே சொன்னது மாதிரி அந்த ஷாட்டை 10 நிமிடங்கள் வைக்கிறேன். எனில், காலாகாலமும் உண்மையான அன்பு போரடிக்குமா என்ன?

# 37

# காத்திருந்து அனுபவித்த தருணங்கள்!

**சை** தாப்பேட்டை சிக்னலில் நிற்கும்போது சாமி ஊர்வலம் ஒன்று கடந்துபோனது.

பெண் சாமிதான். மாரியம்மனா, காளியம்மனா, செல்லியம்மனா, இசக்கியம்மனா... தெரியவில்லை. எதுவாக இருந்தால் என்ன... அம்மன் சாமி... அவ்வளவுதான்!

செல்லூர் மகமாயிக்குத் தங்கச்சி மாதிரிதான் தோன்றியது. தஞ்சாவூர் புன்னைநல்லூர் மாரியம்மனைத்தான் ஞாபகப்படுத்தியது இதுவும். திருநெல்வேலி பேராச்சியம்மனைப் பெயர்த்தெடுத்து வந்ததுபோல இருந்தது. ராசிபுரம் நித்திய சுமங்கலி அம்மனைத் தெருமுக்கில் திடுக்கென்று பார்த்துப் பரவசமானது நினைவுக்கு வந்தது.

‘படவேடு ரேணுகா பரமேஸ்வரி அம்மா...’ என ஒரு நண்பர் உருகிச் சொன்ன கணம் நிழலாடியது. பாலும் பஞ்சாமிர்தமும் வழிய வழிய... இருட்டுக்குள் ஒற்றை அகல் வெளிச்சத்தில் குளிக்கும் அபிவிருத்தீஸ்வரம் காளியம்மனை இப்படி டிரா ஃபிக் மண்டிய பெருநகரச் சாலையில் பார்க்கக் கஷ்டமாக இருக்கிறது.



குருத்தோலைத் திருவிழா இரவில் வாணங்கள் சிதற... தேவன் பாடல்களோடு வரும் மூலங்குடி மாதாவுக்கும் சைதாப்பேட்டை அம்மனுக்கும் ஒரே முகம்தான். இறுக்கிய கையில் குழந்தை இயேசு இல்லாமல், உயர்த்திய கையில் ஆசீர்வாதம் இருக்கிறது... அவ்வளவுதான். எங்கெங்கும் அம்மனும் சாமியும் ஒன்றேதான் இல்லையா? சூழலும் மக்களும்தான் வேறாக இருக்கிறார்கள்.

10–20 பேர்தான் இருக்கும். ஆர்ப்பாட்டமே இல்லாமல் பின்னால் பேசிக்கொண்டு போகிறார்கள். மொத்தமாகவே நாலைந்து குடும்பங்களுக்குத்தான் சாமி போலிருக்கிறது இந்த அம்மன். சாமியைக் கொண்டுபோய் கர்ப்பக்கிரகத்தில் சேர்த்துவிட்டு, வெரசாக வீடுகளுக்குப் போய் டி.வி–யைத் திருகிவிடுவார்கள் என்பதை அவர்களின் நடையே சொன்னது!

அவ்வப்போது இப்படி அபார்ட்மென்ட் வாசல்களுக்கு வந்து போகிறார்கள் அம்மன்கள். மேளச் சத்தமும் வெடிச் சத்தமுமாகச் சட்டென்று கடந்துவிடுகிறார்கள். யாரோ தேங்காய் உடைக்க, கற்பூரமும் பூவுமாக ஒரு வாசம் கணத்தில் கிளம்பி கலைந்துவிடுகிறது. மேளச் சத்தமும் வெடிச் சத்தமும் எங்கோ தூரத்தில் போய்விடுகிறது. இதை எல்லாம் பார்த்துக்கொண்டு அடுக்குமாடி ஜன்னல்களில் நிற்கிற ஏதேதோ ஊர்க்காரர்கள் எல்லாம் அந்த இரவில் நிம்மதியாகத்

தூங்கிவிடுவார்களா என்ன? எத்தனை எத்தனை நினைவுகளைக் கிளறிவிட்டுப் போகிறார்கள் இந்த அம்மன்கள்? திருவிழாக்களால் நிறைந்துகிடந்த நமது பால்யத்தின் சித்திரைகள் இனி கிடைக்கவே போவதில்லை என்பதை நினைக்கும்போதே நெஞ்சுக்குள் காலம் ஒரு குடை ராட்டினம் எனச் சுழல்கிறது.

**ஊ** ரில் திருவிழா என்றால், இரண்டு மாதங்களுக்கு முன்பு பங்குனியிலேயே ஆரம்பித்துவிடும் சந்தோஷம். ஒரு மாதம் வீட்டுக்கு வீடு மண்டகப்படி, சாமி புறப்பாடு தொடங்கிவிடும். தினமும் சாயங்காலமானால், கோயில் கொல்லையிலும் காந்தி ஆத்தா வீட்டுக் கொல்லையிலும் காளியம்மனுக்கு அலங்காரம் பண்ண கனகாம்பரமும் நந்தியாவட்டையும் பறித்துக்கொண்டு இருப்பார்கள் பிள்ளைகள்.

அத்தனை அக்காக்களும் நாட்டார் வீட்டுத் திண்ணையிலும் சின்னையா வீட்டு மாடியிலும் பூ கட்டிக்கொண்டு இருப்பார்கள். மண்டகப்படிக்கார வீட்டில் சுண்டலும் புளியோதரையும் சர்க்கரைப் பொங்கலுமாக ஒரு வாசம் தெருவையே நிறைக்கும். ராத்திரி பூரண அலங்காரத்துடன் அம்மன் புறப்பட்டால் மொத்த ஊரும் பின்னாலேயே போகும். இளைஞர் மன்ற ஆட்கள்தான் சாமியைத் தூக்கிப்போவதும் அணைகட்டி பின்னாலேயே போவதும். திருவரங்கநல்லூர் எல்லை வரை போய்விட்டு வந்து, ஊரில் வீடு வீடாக நின்று போகும் சாமி. எல்லா வீடுகளிலும் தேங்காய் உடைத்து, பூஜை பண்ணி சாமி மறுபடி கோயிலைச் சேர்வதற்கு நள்ளிரவு ஆகிவிடும்.

திருவிழாவையொட்டி 5 நாட்களுக்குத் திரை கட்டி சினிமா, நாடகம், கரகாட்டம் என ஏகப்பட்ட நிகழ்ச்சிகள். என்ன படம் போடுவது; எந்த செட்டு நாடகம் என நிகழ்ச்சி நிரல் ஆலோசனைக் கூட்டம் அனல் பறக்கும். ‘‘காப்பு கட்டிட்டா ஒரு பய வெளியூருக்கு பஸ் ஏறக்கூடாதுரா..." என்பார் துரை பெரியப்பா. சென்னை, திருப்பூர், பெங்களூரு எனப் பிழைப்பு தேடிப் போன அவ்வளவு பேரும் திருவிழாவுக்கு முதல் நாளே வந்துவிடுவார்கள். துபாய், குவைத்தில்

இருந்து போன் போட்டு, ‘‘மண்டகப்படிக்குப் பணம் அனுப்பியிருக்கேன்... அந்தக் காசுல சமைச்சுப் போடும்மா" என ஏங்கும் குரல்கள்.

வெளியூர்களில் இருந்து வரும் உறவுக்காரப் பெண்கள் சுடிதாரிலும் மிடியிலும் தெருவுக்குப் புதுப் பொலிவைத் தருவார்கள். அவர்களைப் பார்ப்பதற்காகவே வேட்டி — சட்டையை மாட்டிக்கொண்டு ரவுண்ட்ஸ் கிளம்பிவிடுவோம். ‘‘வெளியூர் புள்ளைங்களை விடு பங்காளி... உள்ளூர் புள்ளைங்களையே இப்பதான் வெளில பாக்க முடியுது... மஞ்சத் தண்ணி அன்னிக்கு கவனிச்சுக்குவோம்ரா இதுங்களை...’’ என்பான் செந்தில்.

**சு** த்துப்பட்டில் இல்லாமல் எங்கள் ஊர் திருவிழாவின் ஸ்பெஷல் தீமிதி. திருவிழா அன்று சாயங்காலம் தெற்குத் தெருவில் அனல் அடிக்க தீக்குழி தயாராகி இருக்கும். ஒரு வாரம் விரதம் இருந்து, சாமியோடு ஊர் சுற்றி வந்து தீ மிதிக்க வேண்டும். சுத்துப்பட்டு அத்தனை ஊர்களும் ஜேஜே எனக் கூடியிருக்கும். ஃபாஸ்ட் பௌலர் மாதிரி 20அடி தூரத்தில் இருந்து ஓடிவந்து, கையில் இருக்கும் எலுமிச்சையைத் தூக்கி வீசியபடி, ‘காளியம்மா...’ எனக் கத்திக்கொண்டே தீக்குழியில் ஓடி, பால்குழியில் கால் நனைக்கிற வரை அவரவர் குடும்பம் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நிற்கும்.

என் அப்பா 20 வருடங்களாக பழநிக்கு மாலை போட்டு ஊரில் இருந்தே நடந்துபோனவர். ஆனால், ஒரு வருடம்கூட உள்ளூரில் தீ மிதித்தது கிடையாது. ‘‘மொதல்ல இந்தத் தீமிதியை க்ளோஸ் பண்ணணும்ரா...’’ என நான்கு மகன்களும் பகுத்தறிவுப் பாசறையில் கொடி பிடித்ததால், அவர் தீமிதி எண்ணத்தைச் செயல் படுத்தாமலேயே இருந்தார்.

ஒரு வருடம் திடுதிப்பென்று, ‘‘இந்த வருஷம் தீ மிதிக்கப்போறேன் மல்லி...’’ என்றார் அம்மாவிடம். அப்படியே ஒரு வாரம் விரதம் இருந்து தீ மிதிக்குத் தயார் ஆனார். எல்லோரும் சாதாரணமாகத்தான் தீ மிதிப்பார்கள். அலகுக் காவடி சுமந்துகொண்டு தீ மிதிப்பது பால்கார மணி மட்டும்தான். அது ஓர் ஆன்மிகச் சாகசம். பெரிய அலகுக்


காவடியைச் சுமந்துகொண்டு தீமிதிக்க மணி ஓடுவதைப் பார்க்கும்போதே திகிலாக இருக்கும்.

அந்த வருடம் தீமிதி அன்று எங்கள் வீட்டு முன்பு பெரிய மயில் காவடி வந்து இறங்கியது. எதுவும் புரியாமல் பார்த்த அம்மாவிடம், ‘‘காவடி சொமந்துகிட்டுதான் தீ மிதிக்கப்போறேன்...’’ என்றார் அப்பா. அம்மாவுக்கும் எங்களுக்கும் பகீரென்றது. ‘‘ஏங்க... இதெல்லாம் ஒங்களுக்கு கரெக்டா வருமா..? காவடி கீவடி இல்லாம அப்பிடியே தீ மிதிச்சா காளியாத்தா வேணாம்னா சொல்லுது. மொத வருஷந்தான... சும்மாவே மிதிங்க. அடுத்த வருஷம் காவடி எல்லாம் தூக்கிக்கலாம்...’’ என அம்மா சொல்ல... ஒரு முறைப்புவிட்டார் அப்பா.

‘‘காவடி அம்சமா இருக்குல்ல மாப்ள... நாந்தான் மயிலு வைக்கச் சொன்னேன். முருகனுக்கு வருஷா வருஷம் பண்றோம். காளியம்மாளுக்கு இந்த வருஷந்தான செய்றோம்... அத மொறையாச் செஞ்சுருவோம்...’’ எனத் திண்ணையில் உட்கார்ந்து மீசையை முறுக்கிக்கொண்டு இருந்தார்.

சாயங்காலம் சாமி ஊர்வலம் தொடங்கியது. ஆட்டமும் பாட்டுமாக தெற்குத் தெருவுக்குப் போனது ஊர்வலம். ஒவ்வொருவராக தீக்குழியில் ஓடத் தொடங்கினார்கள். கடைசியாகக் காவடி தூக்கி வந்தார்கள் பால்கார மணியும் அப்பாவும். மணி காவடியோடு சரசரவெனத் தீக்குழிக்குள் இறங்கி ஓடினார். ‘ஹோ...!’ எனக் கத்தியது ஜனம். அடுத்து அப்பாதான்.

எதிர்த்த வீட்டு மாடியில் அம்மா கும்பிட்டபடி நின்றது. அப்பா இறங்கி ஓடத் தொடங்கினார்... பாதி குழி தாண்டவில்லை... கால் தடுமாறி அப்படியே நெருப்பில் விழுந்துவிட்டார். கண நேரம்தான் மொத்த ஜனமும் கதற, தடதடவெனக் கூட்டம் இறங்கி அப்பாவை வெளியே இழுத்துப்போட்டது. யாரோ ஓடிப்போய் வாழை இலைகளைக் கொண்டுவந்து போட்டு, அதில் படுக்கவைத்தார்கள். அம்மா ‘‘காளியாத்தா...’’ எனக் கிடந்து கதறியது.



தஞ்சாவூர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் வைத்து இரண்டு நாளில் வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள். உடம்பு எல்லாம் சின்னச் சின்னதாகத் தீக்காயங்கள். நல்ல வேளையாகப் பயப்படும்படியான பெருங்காயங்கள் இல்லை. அந்தக் காயங்களோடு கோயிலுக்குப் போய், ''ஆத்தா... ஏம்மா இப்பிடிப் பண்ண? ஒம் புள்ளதான? எதாவது தப்புன்னா மன்னிச்சுக்க. அடுத்த திருவிழாவுக்குத் தட்டாம தீமிதிச்சுர்றேன்...'' என அப்பா வேண்டிக்கொண்டு நின்றது இப்போதும் சாயம் போகாமல் நினைவில் இருக்கிறது.

**ஊ**ர் நடுவே உட்கார்ந்து இருக்கும் காளியம்மா அளவுக்கு விமர்சை இல்லை என்றாலும், வயல்வெளிகளுக்கு நடுவே வனாந்தரத்தில் நிற்கும் அய்யனாருக்கு வருஷம் தவறாமல் கெடாவெட்டுத் திருவிழா நடந்துவிடும். ஊரே கூடி வசூலித்து, கோடையில் அய்யனாருக்குக் கெடா படையல். இருட்டு அப்பிக்கிடக்கிற ராத்திரியில் லாந்தர் விளக்குகளைத் தூக்கிக்கொண்டு மொத்த ஊரும் அய்யனார் கோயிலுக்குப் போகும். சாராயமும் படையலுமாக அய்யனார் அன்றுதான் புதுவேட்டி கட்டி, எண்ணெய் பளபளக்கும் அரிவாளோடு நிற்பார். கெடா வெட்டி, ரத்தம் வடிய நாலைந்து ஆட்டுத் தலைகள் அய்யனார் காலடியில் முறைத்துக் கிடக்கும். மணக்க மணக்க கறிச்சோறு தயாராகிக்கொண்டு இருக்கும்.

சரியாக 11 மணிவாக்கில் ஊரே கூடி நிற்க, கறுப்பு பெரியப்பாவுக்குச் சாமி வரும். நாக்கைத் துருத்தி, கைகளை முறுக்கி ‘ம்ம்ம்ம்ம்...’ எனப் பயங்கரமாகக் கனைப்பார். சட்டென்று சத்தம் போட்டுக்கொண்டே கூட்டத்தில் புகுந்து, கையில் சிக்குகிறவனை இழுத்துக் கோத்து வெளுக்க ஆரம்பிப்பார். அவன் அலற அலற... அடி பின்னியெடுத்து, ‘‘சாமிக்குப் பரிகாரம் பண்றேன்னியே ஏன் பண்ணல... அறுப்பறுத்ததும் மொதப் படையல் போடலைல்ல...’’ என ஏதேதோ சொல்ல, ‘‘பண்ணிட்றேன் சாமி... பண்ணிட்றேன்...’’ எனக் கதறுவார் சிக்கியவர்.

‘‘...க்காளி... கறுப்பு ஆள் பார்த்து அடிக்கிறார்ரா... வருஷம் முழுக்க டார்ச்சர் பண்றவனுங்களை எல்லாம் பார்த்து வெச்சுக்கிட்டு சாமி புரொமோஷன் கெடைச்சதும் வெளுத்து விட்டுர்றாரு...’’ எனப் பசங்கள் கொலைவெறியாவார்கள். கறிச்சோறு தின்றுவிட்டு அறுவடை முடிந்த வயல்வெளிகளில் வீடு திரும்பும் அந்தத் திருவிழா அதிகாலைகள்... இனி கிடைக்கப் போவதே இல்லையா?

**கோ** டைக் காலம் என்றாலே, திருவிழாக்களால்தானே நிறைந்துகிடந்தது அப்போது? அறுவடை முடிந்த காசெல்லாம் திருவிழாக்களில்தானே கரைந்தன? கீரந்தங்குடி திருவிழாவும் வலங்கைமான் திருவிழாவும் சுத்துப்பட்டில் அவ்வளவு பிரபலம். சாயங்காலமாக சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினால் அதிகாலையில்தான் வீடு வருவது. வீட்டில் போராடி 20 ரூபாய் வாங்கிப்போவதே எவ்வளவு சந்தோஷமாக இருந்தது?

கீரந்தங்குடி திருவிழாவில் வாழைத்தார் ஏலம் நடக்கும். 5 ரூபாய்க்குப் பெரிய தாரே கிடைக்கும். ‘அண்ணாமலை’ பட ரேஞ்சுக்குப் போட்டி போட்டு ஏலம் எடுப்பதே கொண்டாட்டமாக இருக்கும். ராட்டினங்களும், பாம்பே சர்க்கஸும், கலர் பாயசமும், சர்பத்தும், ரிங் போடுகிற விளையாட்டும், ஃபிலிம் விளையாட்டும் திடுதிப்பென்று அம்மாக்களின் புடவைகளில் வந்து நிற்கும் தோழிகளுமாக... எவ்வளவு இனிய அனுபவம் அது?

வலங்கைமானில் மீன்பிடித் திருவிழாவுக்குப் போனால் அது தனி அனுபவம்! ஆண்களும் பெண்களுமாக ஊரே குளத்தில் இறங்கி வாரிக் கொட்டி மீன் பிடிக்கும். ஒரு பக்கம் கரை எல்லாம் ஏகப்பட்ட தண்ணிப் பாம்புகள் ஓடும். பிடித்த மீன்களை எல்லாம் கூறு கட்டிப் பிரித்துக் கொடுக்க, அன்றைக்கு ஊர் முழுக்க மீன் குழம்பு வாசம்தான். நாச்சியார்கோவில் அம்மனை திருவிழா முடிவில் ஆற்றில் கொண்டுபோய் இறக்கிவிட்டு வருகிற இரவுகளை... பாய், போர்வையோடு போய் பஃபூன் வந்துபோகிற வரை பார்த்துவிட்டு தூங்கிப்போன நாடகங்களின் மீதிக் கதைகளைக் காலையில் அத்தைகளிடம் கேட்ட ராத்திரிகளை மறக்க முடியுமா என்ன?

இப்போது ஊரில் திருவிழாக்கள் வெறும் சம்பிரதாயங்கள் ஆகிக்கொண்டு இருக்கின்றன. வெளியூர்களுக்குப் பிழைக்கப்போன குடும்பங்கள் எல்லாம் முன்புபோல் வந்து நிற்பது இல்லை. இந்த ஐ.பி.எல். தலைமுறைக்குத் திருவிழாக்களின் மேல் பெரிய ஈர்ப்பும் இல்லை. டி.வி.டி—க்களில் பார்த்த புதுப் படங்களைப் போட்டு, 'மானாட மயிலாட' புகழ் நடனங்கள் நடத்தி நிறைந்துவிடுகின்றன திருவிழா இரவுகள்.

'மயான காண்டம்' அரிச்சந்திரனும், 'வள்ளித் திருமணம்' குறத்தியும் பெட்டிக் கடை வைத்துக்கொண்டும், கட்டட வேலை பார்த்துக்கொண்டும் அலைகிறார்கள். காத்திருந்து காத்திருந்து அனுபவித்த தருணங்கள் இல்லாமல் கோடையின் இன்னுமொரு நிகழ்வாக இந்தத் தலைமுறைக்கு மாறிவிட்டன திருவிழாக்கள்!

**செ** ன்னைக்கு வந்த பிறகும் திருவிழாக்களின் மேல் உள்ள பெருங்காதல் குறையவே இல்லை. உண்மையில் சென்னையின் பூர்வகுடிகளின் திருவிழாக்கள் கொண்டாட்டத்திலும் பண்பாட்டிலும் கிராமத்துத் திருவிழாக்களுக்குக் கொஞ்சமும் குறைவு இல்லாதவை. ஆடி மாதங்களில் மொத்த சென்னையும் திருவிழாக்களால்தான் நிறைந்து கிடக்கும்.

5 — 6 வருஷத்துக்கு முன்பு வரை ஆடி மாத இரவுகளில் ஏரியா ஏரியாவாக நண்பர்களோடு கிளம்பிவிடுவேன். ஒரு முறை போக் ரோட்டில் சிவாஜி வீட்டுக்குப் பின்னால் உள்ள குடிசைப் பகுதியில் திருவிழா. நானும் நண்பனும் ராத்திரி ரவுண்ட்ஸில் இருந்தபோது, 'ரண்டக்க ரண்டக்க...' சத்தம் இழுக்க, அந்தக் குடிசைப் பகுதிக்குள் புகுந்துவிட்டோம். ஃப்ளாஸ்டர் ஆஃப் பாரிஸில் மிகப் பெரிய அம்மனைச் செய்துவைத்து, கிலோ கணக்கில் மஞ்சளும் குங்குமமும் கொட்டிக்கிடக்க, கூட்டம் கும்மிக்கொண்டு இருந்தது.

'சந்திரலேகா' பட டிரம்ஸ் மாதிரியான பெரிய பறையில் 'ரண்டக்க ரண்டக்க...' என நாலைந்து பேர் அடி பின்னிக்கொண்டு இருக்க... மொத்த ஏரியா பசங்களும் டான்ஸ் போட்டுக்கொண்டு இருந்தார்கள். ஏரியா பெண்கள் வேடிக்கை பார்த்ததில் உற்சாகம் ஓவர் டோஸில் இருந்தது. நானும் நண்பனும் அல்ரெடி பூஸ்ட் என்பதால், உடனடியாகக் களத்தில் குதித்தோம். அப்படியே அந்த குரூப்போடு ஐக்கியமாகி செம குத்து குத்தும்போதே சாமி ஊர்வலம் கிளம்பியது.

பாண்டி பஜார் மார்க்கமாகக் கிட்டத்தட்ட ரெண்டு மூணு கிலோ மீட்டருக்கு நான்—ஸ்டாப் குத்து டான்ஸ். திடீரென்று கூட்டத்தில் ஒரு பையன் என்னைப் பார்த்து, ''நிறுத்து... நிறுத்து... யாரு நீ..?'' என்றதும் மொத்த மியூஸிக்கும் நின்றது. அத்தனை பேரும் எங்களைப் பார்க்க, நண்பன் பாதி மூவ்மென்டிலேயே ஜெர்க்கடித்து நின்றான். ''அட, வாங்க பிரதர்...'' என நான் மறுபடி டான்ஸுக்கு முயல, ''அடங்... கேக்குறன்ல... யார்றா நீ..?'' என என் சட்டையைக் கொத்தாகப் பிடித்தான் அந்தப் பையன். ''அப்டியே போட்றா அவன...'' எனக் கூட்டம் எகிறி வர, எனக்கு அப்போதுதான் மூளைக்குள் அலாரம் அடித்தது. ''இல்லைங்க சார்... சும்மா உங்களோட...'' என இழுக்கும்போதே, ''அவனுங்களுக்கு பல்பு மாட்டு... பல்ப் மாட்றா...'' என நாலைந்து பேர் வெறியோடு வந்தார்கள். சட்டென்று பாதுகாப்புக்கு வந்த இரண்டு போலீஸார் உள்ளே புகுந்ததில் கடைசி நொடிகளில் தப்பித்தோம்.

அந்தப் போலீஸ்காரர், ‘‘என்ன தம்பிகளா வெளியூரா..? சிக்கிருந்தா செதச்சுருப்பானுங்க... ஓடிப் போயிருங்கடா...’’ என அனுப்பிவைத்தார். அதன் பிறகுதான் தெரிந்தது... சென்னையில் ஏரியா திருவிழாக்களில் அந்நியர்கள் யாருக்கும் இடமில்லை என்பது. வேறு ஏரியாக்காரர்கள் நுழைந்தால் பேத்தெடுத்து விடுவார்கள். சாமியும் திருவிழாவும் அந்தப் பகுதிவாசிகளுக்கு மட்டுமேயான சந்தோஷம்... உரிமை... கொண்டாட்டம்!

**ந** ண்பர் ‘கானா’ செந்தில் வந்து, ‘‘எங்க ஏரியால இன்னிக்கு திருவுழா... வாங்க தலைவா..." என வியாசர்பாடிக்கு அழைத்துப் போனார். அது ஒரு முனீஸ்வரன் கோயில். ‘‘ஞாயித்துக்கெழம தேர் மறிச்சுது... நேத்து கூழ் ஊத்துனுது... இன்னிக்குதான் லாஸ்ட் நாளு... அப்பவே இட்டாந்துருக்கலாம்லடா...’’ என்றார் செந்திலின் அம்மா.

லோக்கல் குருப்பின் ஆர்கெஸ்ட்ரா போய்க்கொண்டு இருந்தது. ஒரு பெண், ‘கரிகாலன் காலப் போல...’ என பாடிக்கொண்டு இருக்க... அசுவாரஸ்யமாகக் கேட்டுக்கொண்டு இருந்தது கூட்டம். கொஞ்ச நேரத்தில் முனீஸ்வரனுக்குப் படையல் போட்டு, கோயிலுக்குப் பின்புறமே கறிச்சோறு பரிமாறினார்கள். சாப்பிட்டுவிட்டுக் கிளம்பும்போது குரு போன் பண்ணினான், ‘‘தம்பி... 30—ம் தேதி ஊர்ல திருவுழாவாண்டா. நீ வர்றியா..?"

‘‘முப்பதா... இல்லடா வேலை இருக்கு...’’ என்றேன், கோபமாக முறைத்துக்கொண்டு இருந்த முனீஸ்வரனைப் பார்த்தபடி!

38

# எல்லாரும் சந்தோஷமா இருக்கணும்!

**‘‘மா** ப்ள... சித்தார்த்தனுக்குப் பொண்ணு பாக்கற சங்கதியாத்தான் சுத்திட்டு இருக்கேன். சாந்தி சித்தி வகையறால ஒண்ணு இருக்கு. சாலியமங்கலத்துல ஒண்ணு வந்துருக்கு... எது அமையுதுனு பாப்பம்... அப்பிடியே ஒனக்கும் சேத்து ஒரு புள்ளையப் பாத்துரவா மாப்ள... அம்மாவும் பொலம்பிட்டுக்கெடக்கு!’’

‘‘மாமா... ஒங்களுக்கு வேற வேல இல்லையா? சும்மா டார்ச்சர் பண்ணாதீங்க...’’

நேற்று எக்மோரில் ரயில்வே கவுன்டரில் நிற்கும்போது குணசேகரன் மாமா போன். எங்கேயோ திருவாரூர் பக்கம் உச்சி வெயிலில் அண்ணனுக்குப் பெண் பார்க்க அலைகிறார். போனை வைத்த உடனேயே, வெள்ளை கதர் சட்டையும் கறுப்பு பேன்ட்டும் சுண்ணாம்பு டப்பா வாட்ச்சும் குருவிக் கூடுத் தலையுமாக டி.வி.எஸ்.50—யில் வரும் குணசேகரன் மாமாவின் உருவம் நினைவை ஆக்கிரமித்துவிட்டது.



மூத்த சித்தப்பாவுக்கு அவர்தான் பெண் பார்த்தார். பெரிய அண்ணனுக்கும் குருவுக்கும் இப்போது சித்தார்த்தனுக்குமாக இன்னும் பெண் பார்த்துக்கொண்டே இருக்கிறார். எங்கள் சொந்தத்தில் ஏகப்பட்ட உறவுகளுக்கு வரன் பார்த்தது குணசேகரன் மாமாதான். சொந்தத்தில் பெண்ணோ, பையனோ யார் விளைந்து நின்றாலும், 'டுர்ர்ர் டுர்ர்ர்' என வந்து இறங்கிவிடுவார்.

''ஆயி... காபித் தண்ணி கொண்டா...'' என்றபடி வந்து கூடத்தில் உட்கார்ந்துவிடுவார். ''அம்மு படிப்பு முடிஞ்சுருச்சுல்ல... சுருக்குனு கல்யாணத்த முடிச்சுர வேண்டியதுதான? நெய்க்குன்னத்துல ஒரு பையன் இருக்கான்... மகாராஜா சில்க்ஸ்லதான் வேல பாக்கறான். தஞ்சாவூர்லேருந்து அம்மாப்பேட்டைக்கு பஸ் புடிக்க ஞானம் ஒயின்ஸ் ஷாப் பக்கமாப் போகாம, சுத்திக்கிட்டு ஆத்துப்பாலம் வழியா ஜங்ஷனுக்கு வருவான்னா பாத்துக்கயேன்...'' என உடனடியாக மேப் போட்டுவிடுவார்.

அப்படியே சொந்தக் காசில் பெட்ரோல் போட்டுக்கொண்டு நெய்க்குன்னம் போய், மாப்பிள்ளை வீட்டாரையும் ரெடி பண்ணுவார். நாள் பார்த்து, வேன் பிடித்து, இரு வீட்டாரையும் பார்க்கவைத்து, எல்லாம் பேசி முடித்து கல்யாணம் வரை குணசேகரன் மாமாவின் கொடிதான் பறக்கும்.

பஞ்சு மில்லில் வேலை பார்த்து ரிட்டயராகிவிட்ட மாமாவுக்கு இப்படி வரன்கள் பார்த்துப் பேசி முடிப்பதுதான் வாழ்வின் பாதி. காசு பணம் எதுவும் வாங்குவது இல்லை. எதையும் எதிர்பார்ப்பதும் இல்லை. இப்படி உறவுகளுக்கு வரன் பார்ப்பதும் பேசி முடிப்பதும் அவருக்கு ஆத்மார்த்தமான விஷயம். அது என்னவோ... சொந்த வேலைகளை எல்லாம் விட்டுவிட்டு மற்றவர்களுக்காக அலைவதில் அவருக்கு ஒரு சுகம்.

‘‘ம்க்க்கும்... எந்த ராசாங்கத்த எழுதிவைப்பாகனு இப்பிடி அலையுறீங்க...’’ என அத்தை அலுத்துக்கொள்வதைக் கண்டுகொள்ளவே மாட்டார். ‘‘பதினஞ்சி பவுனு போடுறதாச் சொன்னது வாஸ்தவந்தான்... அவுகதான் கஷ்டத்தச் சொல்றாவல்ல... தாலி பிரிச்சிப் போடும்போது மூணு பவுன் போட்ருவாக... நா கேரன்டி ஆயி...’’ எனச் சமையல் கட்டு இருட்டு மூலையில் நின்று பெரியம்மாவோடு பேசிக்கொண்டு இருப்பார்.

‘‘டேய்... அவுக பெரியப்பன் முசுடுரா... கரெக்டா ரயில்வே கோட்டர்ஸ்ல ரூம் போட்ருங்க. இல்லைன்னா, கல்யாணத்தன்னைக்கு கரைச்சலக் குடுத்துருவான் பாத்துக்க...’’ என டீக்கடையில் சித்தப்பாவிடம் பேச்சு நடக்கும். வரன் பார்ப்பதில் இருந்து கல்யாணத்துக்கு முதல் நாள் வரை பஞ்சாயத்திலேயே இருப்பார்.

கல்யாணத்தன்று ‘டை’ அடித்து, முதல் பந்தியில் உட்கார்ந்தபடி, ‘குருமால கொஞ்சம் உப்பு போடு...’ என கரெக்ஷன்கள் கொடுப்பார். சாயங்காலம் மண்டபத்தைக் காலி பண்ணுகையில், ‘கட்லு ஒண்ணு... டேபிள் ஃபேனு ஒண்ணு... பித்தள தேக்சா ரெண்டு...’ என நாப்பது பக்க நோட்டை வைத்து சீர் வரிசையைக் கணக்கெடுப்பார்.

வேனில் மொதப் பலகாரத்துக்குப் போகும் வழியில், ‘‘ஏ குருக்குமாரி... மண்டபத்துல பச்ச கலர் சுடிதார் போட்டு சுத்திட்டு இருந்துச்சே... நம்ம கொடிக்காடு பெரியாயி பொண்ணா அது? நார்சிங்கம்பேட்டைல அய்யாக்கண்ணு பையன் ஒருத்தன் இருக்கான்ல... பேசிப் பாக்கவா..?’’ என அடுத்த எபிசோடுக்கு டிரெய்லர் கட் பண்ணுவார். அது ஒரு பிறப்பு.

மற்றவர்களுக்காக வாழ்வதையும் வந்து நிற்பதையுமே இன்பமாக நினைக்கும் இதயம். 'இதனால் நமக்கு என்ன?' என நினைக்காமல் காட்டுச்சுனையைப் போலப் பிரவகிக்கும் மனசு. யார் யாருக்கோ வரன் பார்க்கவும் வாழ்க்கை தரவும் புழுதிக் காடுகளிலும் புளிய மரச் சாலைகளிலும் அலையும் மனிதர்கள் எவ்வளவு மகோன்னதமானவர்கள்!

இப்போதும் வழியில் எங்காவது கல்யாணம் காட்சியையோ, எழவையோ பார்க்கும்போது, நடராஜன் மாமா நினைவு வராமல் இருக்காது. சொந்தத்தில், நட்பில் எங்கே கல்யாணம், கருமாதி என்றாலும், முதல் ஆளாக வந்து நின்று எல்லாவற்றையும் எடுத்துச் செய்வது நடராஜன் மாமாதான். ரப்பர் செருப்பும் வேட்டியும் மூணு பட்டன் திறந்துவிட்ட சட்டையுமாக ஆச்ச மங்கலத்தில் இருந்து வந்துவிடுவார்.

ஒரு வாரத்துக்கு முன்னாலேயே சைக்கிள் கேரியர் நிரம்ப வாழை இலைக் கட்டுக்களைக் கட்டிக்கொண்டு அவர் வந்தால்தான் விசேஷம் தொடங்கிவிட்டதாக அர்த்தம். ''கறி விருந்துக்கு கரீம்பாய்தான்... சைவம் சாப்பிடுறவங்களுக்கு பிச்சக்கண்ணு. ஆளுங்களக் கொண்டா...'' என ஆரம்பித்தால், அப்புறம் எங்கெங்கும் அவர்தான் நிறைந்திருப்பார். ''ஆளுக்கொரு வண்டிய எடுத்துக்கிட்டு ரெவ்வெண்டு பயலாக் கௌம்பு... அஸ்கானோடைய மறந்துராத...'' எனப் பத்திரிகை வைப்பதில் இருந்து உள்ளே வந்துவிடுவார். மண்டபம் பிடிப்பது, அய்யர் பிடிப்பது, ரூம் போடுவது வரை அவரது மேற்பார்வையில்தான் நடக்கும்.

''சென்னைலேருந்து ஒன் ஃப்ரெண்ட்ஸு எத்தன பேரு... நாலு ஃபுல்லு போதுமா? டேய்... இவங்கையில ஒரு வாளில இட்லியும் மொளவாப்பொடியும் குடுத்தூடு...'' என ஒண்ணுவிடாமல் சகலத்திலும் சுற்றிச் சுழலுவார். கல்யாணத்துக்கு முதல் நாள் கும்பகோணம் மார்க்கெட்டுக்குப் போய் அவரே காய்கறி, பொருட்கள் வாங்கி வருவார். விடிய விடியச் சமையல் கொட்டாயில் விழித்துக் கிடப்பார். கல்யாணத்தன்று மாப்பிள்ளைத் தோழன், மணப்பெண் தோழியை

ஏற்பாடு செய்துவிட்டு, ‘‘அங்க சாம்பாரு ஊத்து... இங்க பாயாசம் ஊத்து...’’ எனப் பந்தியிலேயே நிற்பார்.

ராத்திரி மாப்பிள்ளை வீட்டில், ‘‘கட்ல அந்த மூலைக்கு நவுத்து...’’ என முதல் இரவு அரேஞ்மென்ட்டில் பிஸியாகி இருப்பார். இரு வீட்டார் கறி விருந்து முடித்து, வெத்தலை சீவல் போட்டு ஒரு சிஸரைப் பற்றவைத்தபடியே, ‘‘கம்னாட்டி இந்த கேசரி மட்டுந்தான் கரெக்டா இல்ல... அரபாடி வேனு வந்தவன் அம்பது ரூவா அதிகமா வாங்கிட்டான்...’’ எனப் பைசல் முடித்துத்தான் கிளம்புவார்!

எழவு விழுந்தாலும் அதிகாலையில் முதல் ஆளாக மாமாதான் வாசத் திண்டில் வந்து உட்கார்வார். ‘‘டேய்... அம்சத்தா வூட்ல போயி கொஞ்சம் காபி தண்ணிப் போட்டுக் கொண்டுவரச் சொல்லு... சிவராஜிட்ட கேட்டு யாராருக்கு போன் பண்ணணும், தந்தி குடுக்கணும்னு ஒரு லிஸ்ட்டு வாங்கு...’’ எனத் தடதடவென வேலையில் இறங்கிவிடுவார். வெட்டியானை அழைத்து வருவதில் இருந்து சுடுகாட்டில் சில்லறை பிரித்துத் தருவது வரை முழுக்க அவர் தலைமையில்தான் நடக்கும்.

நடுவில் ஓர் ஓரமாக ஒதுங்கி சிஸர் அடிக்கும்போது, ‘‘ப்ச்ச்... போன வாரம் பாத்தப்ப வூட்ட இழுத்துக் கட்டணும்னு பேசிட்டிருந்தாப்ல... அதுக்குள்ள இப்பிடியா நடக்கணும்...’’ என்பார் தழுதழுப்பாக. கருமாதி, கறி விருந்து என 16 நாளும் முன்னாடி நின்று எல்லாவற்றையும் முடித்துவிட்டுத்தான் அடுத்த வேலைக்குப் போவார்.

எத்தனையோ நிகழ்ச்சிகளை ஓடி ஓடி நடத்திக் கொடுக்கும் மாமாவுக்கு நாற்பது வயசுக்கு மேலாகியும் இன்னும் கல்யாணம் ஆகவில்லை. இரண்டு சகோதரிகளுக்கும் கல்யாணம் செய்துவைத்துவிட்டு, தனக்கு இன்னும் செய்துகொள்ளாமல் இப்படியே வாழ்கிறார்.

ஒரு முறை பம்பு செட்டில் தண்ணி அடித்துவிட்டு, ‘‘ழேய்... அப்பா எடத்துல இருந்து ஒனக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிவெச்சுட்டா

போரும்டா...'' என்றார். ''அது இருக்கட்டும் மாமா... உங்களுக்கு எப்ப கல்யாணம்? எதுக்கு இன்னும் பண்ணிக்காம இருக்கீங்க?'' என்றதற்கு, கொஞ்சம் திடுக்கிட்டு என்னைப் பார்த்தார். தலையை சைஸாக ஆட்டியபடி சிரித்துவிட்டு, ''டோன்ட் டாக். அம்மா சாப்பாடு வெச்சுட்டுத் தூங்காம உக்காந்துருக்கும்... ஐ கோ...'' என்றபடி சைக்கிளில் தள்ளாட்டமாக அவர் கிளம்பியது ஒரு புதிர்போல் உள்ளது இப்போதும்.

கு ணசேகரன் மாமாவையும் நடராஜன் மாமாவையும் பார்ப்பது மாதிரிதான் இருந்தது சென்னையில் நண்பன் பரமுவைப் பார்த்தபோது. இதுவரை 26 கல்யாணங்கள் பண்ணி வைத்திருக்கிறான் பரமு. அத்தனையும் அடைக்கலம் தேடி வந்த காதல் கல்யாணங்கள். அந்த வகையில் சசிகுமார், சமுத்திரக்கனி எல்லாம் இவனுக்கு சூப்பர் ஜூனியர்ஸ். பரமுவுக்கு நான் வைத்து இருக்கும் நிக் நேம் 'பூந்தோட்டக் காவல்காரன்'.

திடுதிப்பென்று நள்ளிரவில் லைனுக்கு வந்து, ''மச்சான்... காலைல ஆறு மணிக்கு குமாருக்கும் பிருந்தாவுக்கும் பெசன்ட் நகர் அஷ்டலட்சுமி கோயில்ல கல்யாணம். எல்லாத்தையும் ரெடி பண்ணிட்டேன். பை சான்ஸ்... பொண்ணு வீட்ல ஸ்மெல் பண்ணி வந்துட்டாங்கனு வையி... பிரச்னை ஆகிரும். நீ பிரஸ் கார்டோட வந்தேன்னா சமாளிச்சிரலாம்... வந்துரு மச்சான்'' என்பான்.

திடீரென்று ஓர் அதிகாலையில் போன் பண்ணி, ''மத்திய கைலாஷ்ல இப்பதான் கல்யாணம் முடிஞ்சுது... ரெண்டு பேரையும் செல்வம் கார்ல நம்ம கிராமத்துக்கு அனுப்பிட்டேன் மச்சான்...'' என்பான். இன்னொரு நாள் போன் பண்ணி ஹஸ்கி வாய்ஸில், ''ஸ்டேஷன்ல இருக்கேன் மச்சான்... இன்ஸ்பெக்டர் பேரு வனராஜா... பசங்க வந்துட்டு இருக்காங்க...'' என்பான் அமானுஷ்யமாக.

ஏரியாவில் நட்பு வட்டத்தில் யாருக்குக் காதல் கல்யாணம், பிரச்னை என்றாலும் உடனடியாக வந்து நிற்பது பரமுவிடம்தான். டீட்டெயிலாக மேப் போட்டு, கொஞ்ச நாளைக்கு அதே வேலையாகத் திரிந்து முடித்துவிட்டுத்தான் உட்கார்வான். கார் வாடகையில் இருந்து ஆள்

செலவு வரை எல்லாவற்றையும் இவனே பார்ப்பான். பத்தாததற்கு மணமக்களுக்கு அவனே ஒரு கவிதையும் எழுதிப் பரிசளிப்பான்.

‘‘ஏண்டா மச்சான்... இப்பிடியே இருந்தா எப்பிடி மச்சான்?’’ என்றால், ‘‘டேய்... எல்லாரும் சந்தோஷமா இருக்கணும். அது போதுண்டா நமக்கு...’’ என்பான். அவனைப் பார்த்தால், ‘இப்படி ஒரு மனசு நமக்கு இல்லையே’ என ஆச்சர்யமாக இருக்கும்! இப்படி மற்றவர்களுக்காக வாழும் மனசுக்காரர்கள் இன்னும் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?

இப்போதும் எந்த ஃபீஸும் இல்லாமல் கை வைத்தியம் பார்ப்பதையே வாழ்க்கையாக வைத்திருக்கும் பாட்டிகள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? ஊரில் எந்தப் பெண் சடங்கானாலும் பக்கத்திலேயே வந்து உட்கார்ந்திருக்கும் பாட்டிகள். யாருக்குப் பிரசவம் என்றாலும் வலி எடுக்கும்போதே வந்து, பிரசவத்தில் கூடவே இருந்து, அந்தக் குழந்தையைத் தினம் தினம் வந்து குளிப்பாட்டி, அலங்கரித்துப் பார்ப்பதையே வாழ்க்கையாக வைத்திருக்கும் பாட்டிகள். ‘இவள் எத்தனை எத்தனை குழந்தைகளை இப்படி வளர்த்து விட்டிருக்கிறாள்...’ என இப்போதும் துரைக்கண்ணு ஆத்தாவைப் பார்க்கும்போது எல்லாம் ஆச்சர்யமாகவும் நெகிழ்ச்சியாகவும் இருக்கிறது.

காசு கீசு வாங்காமல், வருகிறவர்களுக்கு எல்லாம் அருள் சொல்வதையே வாழ்க்கையாக்கிக்கொண்ட சபாபதி அய்யா, தினம் தினம் சிவன் கோயிலைக் கழுவிவிடுவதும் சாமிக்கு அலங்காரம் பண்ணிவைப்பதையுமே பொழுதாக்கிக்கொண்ட வசுமதி பெரியம்மா, எந்தெந்த நேரத்துக்கு மின்சார ரயில் என்று கைடு போட்டு, சென்ட்ரல் ஸ்டேஷனில் நின்று இலவசமாக விநியோகிக்கும் முருகேசன், யாராவது ஆஸ்பத்திரியில் கிடந்தால் இரவு பகல் பாராது அங்கேயே கிடக்கும் அருள், எந்தப் பிரதிபலனும் பாராமல் சும்மாவே கிராமம் கிராமமாகப் போய் நல்ல சினிமாக்களைத் திரையிட்டுக் காட்டும் செல்வம், குழந்தைகள் கல்விக்காக ஊர் ஊராகப் போய் விழிப்பு உணர்வு ஏற்படுத்துவதையே வாழ்க்கையாக்கிக்கொண்ட ரஸலின் சிஸ்டர், சித்த வைத்திய மூலிகைகள் பற்றி ஆராயவும் சேகரிக்கவும் காடுகாடாக

இப்போதும் திரியும் ராமய்யா சார், இயற்கை விவசாயத்தையே உயிர் மூச்சாகக்கொண்டு பயணம் போய்க்கொண்டே இருக்கும் நம்மாழ்வார் அய்யா... மண்ணுக்காகவும் மற்றவர்களுக்காகவுமே வாழும் இதயங்கள்தான் கடவுளின் நிழல்கள் இல்லையா?!

**தி**.நகரில் நண்பர் ஒருவரைப் பார்க்கப் போயிருந்தேன். அவர் அரசுப் பணியில் இருந்து சமீபத்தில்தான் ஓய்வுபெற்று இருந்தார். இரண்டு பெண் பிள்ளைகளைப் படிக்க வைத்துக் கல்யாணம் பண்ணிக் கொடுத்து, வாழ்க்கை முழுக்க ஓடிக்கொண்டே இருந்தவர். இப்போதுதான் அவருக்கு ஓய்வு கிடைத்திருக்கிறது என நினைத்துக்கொண்டே போனேன். அவர் வீட்டில் இல்லை.

''ம்ம்ம்... சொன்னாக் கேக்கறாரா... பாண்டி பஜார்ல போய்ப் பாருங்க... ரோட்ல நிப்பாரு...'' என்றார் அவர் மனைவி. பாண்டி பஜாரில் நடு ரோட்டில் நின்று பரபரப்பாக டிரா∴பிக் க்ளியர் பண்ணிக்கொண்டு இருந்தார் அவர். அரை மணி நேரம் காத்திருந்து, அவரை அழைத்துப் போய் டீ குடித்தபடி கேட்டேன், ''ஏங்க... பேசாம வீட்ல இருக்க வேண்டியதுதானே... எதுக்கு இப்பிடி இங்க வந்து நிக்கறீங்க?'' அவர் சிரித்தபடி சொன்னார், ''மத்தவங்களுக்காக ஏதாவது பண்ணும்போதுதான் நாம உயிரோட இருக்கிற ∴பீலிங்கே இருக்கு தம்பி!''

# 39

# உண்மையான பிச்சைக்காரர் யார்?

**‘‘பூ**வா டிக்கெட் வாங்கிருச்சு, தெரியாதா?’’

‘‘எப்படா?’’

‘‘அது ரெண்டு மூணு வருஷம் ஆச்சுரா... இப்ப வந்து கேக்குற...’’

ஊரில் இருந்து வந்திருந்த அண்ணனுடன் பேசிக்கொண்டு இருந்தபோதுதான் பூவா செத்துப்போனதே தெரியும். பூவாதான் நினைவு தெரிந்து நான் பார்த்த முதல் பிச்சைக்காரச் சித்திரம்.

ஆள் பார்க்க ஆங்கிலோ — இந்தியப் பெண்மணி மாதிரி அப்படி ஒரு கோதுமை கலரில் இருக்கும். அழுக்குப் பாவாடையும் கிழிந்த சட்டையுமாக கையில் சதா ஓர் அழுக்கு மூட்டையுடன் ஊரைக் கோலிக்கொண்டே கிடக்கும்.

யாரைப் பார்த்தாலும் கையை நீட்டி, தலையைச் சொறிந்துகொண்டே மௌனமாக நிற்கும். காசு சேர்ந்தால் புள்ளைக் கடையில் புரோட்டா வாங்கி, வெளியே உட்கார்ந்து சாப்பிடும். இல்லையென்றால், ஏதாவது வீட்டில் சாப்பாட்டு நேரத்துக்கு வந்து வாசலில் உட்கார்ந்துவிடும். ராத்திரியானால் தூங்க மட்டும் ஹாஜியார் வீட்டுத் திண்ணைக்குப் போய்விடும். மத்தியானத்தில் பார்த்தால், படித்துறையில் உட்கார்ந்து அழுக்குத் துணிகளைத் துவைத்துக்கொண்டு இருக்கும்.

‘‘கம்னாட்டி... அந்தப் பக்கம் போ... போ...’’ என யாராவது விரட்டிக்கொண்டு இருப்பார்கள். மளிகைக் கடையில் வந்து பூவா கையை நீட்டினால், புகையிலை கொடுக்க வேண்டும். டீக்கடை வாசல் பெஞ்ச்சைக் கையில் இருக்கும் தூக்கு வாளியால் ‘லொட் லொட்’ எனத் தட்டினால், டீ கொடுக்க வேண்டும். எதுவும் போடவில்லை என்றால், கொஞ்ச நேரம் உற்றுப் பார்த்துவிட்டு அது பாட்டுக்குப் போய்விடும். எப்போதும் எங்காவது உட்கார்ந்து தனக்குத்தானே முணுமுணுத்துக்கொண்டு இருக்கும் பூவா.

ஒரு பெருமழைக் கால நாளொன்றில், நாய்கள் எல்லாம் ஒண்டிக்கிடந்த ஹாஜியார் வீட்டுத் திண்ணையில் பூவாவைக் காணோம். யாரும் அதைத் தேடவும் இல்லை. ஃபாரூக் மட்டும்தான், ‘‘இந்த பூவாவைப் பாத்தீங்களா? எங்க போய்த் தொலைஞ்சுதுனு தெரியலையே...’’ என்றபடி குடையோடு அலைந்தார். மூன்று நாட்களுக்குப் பிறகு செல்லூரில் ஒரு கடை வாசலில் கிடந்த பூவாவைத் தூக்கி வந்தார்கள்.

ஒரு கோணிப்பை மாதிரி காய்ச்சலில் சுருண்டு நடுங்கிக்கொண்டு இருந்தது பூவா. ஃபாரூக்தான் அந்த மழையிலும் கல்யாணராமன் டாக்டரை அழைத்துவந்து பூவாவுக்கு ஊசி போட்டார். வீட்டில் இருந்து கஞ்சி கொண்டுவந்து தந்தார். ரெண்டு நாளில் எழுந்து பழையபடி (கை நீட்டியபடி) நடமாடத் தொடங்கிவிட்டாள் பூவா.

பெருமழை நனைத்த திண்ணையில் காய்ச்சலில் சுருண்டுகிடந்த பூவாவின் உருவம் இப்போதும் நினைவிருக்கிறது. அதேபோல் அது திடுதிப்பென்று ஒரு நாள் புது பூப்போட்ட பாவாடை—சட்டை போட்டுக்கொண்டு, சின்ன வெட்கத்தோடு யாரிடமும் கை நீட்டாமல் உட்கார்ந்திருந்த ஒரு காட்சி.

கந்தூரி சந்தனக்கூடு அன்று யாரோ வாங்கித் தந்த புது டிரெஸ்ஸைப் போட்டுக்கொண்டதும் அதுக்கு என்னவோ ஆகிவிட்டது. பள்ளிவாசல் பின்புறச் சுவரில் உட்கார்ந்துகொண்டு தனக்குத்தானே சிரித்தபடி, புதுத் துணியைப் பார்த்துக்கொண்டே இருந்தது. ரெண்டு மூணு

நாளைக்கெல்லாம் அதே துணி அழுக்காகி, பழையபடி சுற்ற ஆரம்பித்திருந்தது.



ஒரு கட்டத்தில் சிவன் கோயில், பள்ளிவாசல், வெட்டாறு மாதிரி எங்கள் ஊரின் அடையாளங்களில் ஒன்றாக மாறிப்போயிருந்தது பூவா. ஊரை 45, 50—ம் நம்பர் பஸ்கள் கடக்கையில் எங்கேனும் ஓர் இடத்தில் பூவாவைப் பார்த்துவிட முடியும். ஊரைவிட்டு வந்த பிறகு, பூவாவை மறந்தேபோய்விட்டோம். எப்போதேனும் ஒரு போன் பேச்சில் கேட்பதோடு சரி. இதோ இப்போது பூவா செத்துப்போன செய்திகூட ரெண்டு மூணு வருடங்களுக்குப் பிறகுதான் தெரிகிறது. இப்போது இருந்தால், அதற்கு 70 வயசுக்கு மேல் இருக்கும். சட்டென்று நினைவில் ஒரு முள் ஏறுகிறது.

பூவா யாரென்று எனக்கு இதுவரைக்கும் தெரியாது. பூவா ஒரு பெண்... சகோதரி... காதலி... தாய்... இல்லையா? கனவுகளும் நினைவுகளும் உதிரமான ஒரு ஜீவன். எந்தக் கணத்தில் அவள் பிச்சையெடுக்கத் தொடங்கினாள்? சக மனிதனிடம் கையை நீட்டி யாசிக்கும் எண்ணம் எங்கிருந்து வந்தது அவளுக்கு? இருபது முப்பது வயசில் குளித்து

முழுகி சீவி வந்து நின்றால் பூவா எவ்வளவு அழகாக இருந்திருப்பாள். நிச்சயம் அவள் பேரழகி. பசி மட்டும்தானா அவளை இப்படித் துரத்தியது? இழந்து இழந்து இதயம் மரத்து இப்படி ஆனாளா? எதுவும் தெரியவில்லை? ஆனால், புதுத் துணி போட்டுக்கொண்டு அவள் வெட்கமாக உட்கார்ந்திருந்த காட்சியை மட்டும் நான் பத்திரப்படுத்திக் கொள்கிறேன். இந்த வாழ்வின் தீரவே தீராத விசித்திர அழகியலில் அழியாத புகைப்படமாக!

**இ** ப்படித்தான் ஒரு சாயங்காலம், வடபழனி முருகன் கோயில் சாலையில் நடக்கிறபோது, ''அண்ணே... அண்ணே... புள்ள பால் குடிக்கலண்ணே... சாப்பிடலண்ணே...'' என்றபடி என் தோளைச் சுரண்டியது ஒரு கை. இடுப்பில் ஒன்றும் கையில் ஒன்றுமாக இரண்டு பிள்ளைகளுடன் நிற்கிறாள் ஒரு பெண்மணி. நூல் புடவையும் காவிப் பல்லுமாக நிற்கிறாள். கையைப் பிடித்துக்கொண்டு நிற்கிற குட்டிப் பையன் தன்னிச்சையாக வயிற்றைத் தடவி, ''சாப்பிடல சார்..." என்கிறான். அந்தப் பெண்மணியை உற்றுப்பார்த்த ஒரு கணம் எனக்குத் திடுக்கென்றது. இந்த 10 வருடங்களில் இவளை அவ்வப்போது பார்த்துக்கொண்டே இருக்கிறேன். இதே இடத்தில் குமரியாக தனியே இவள் பிச்சை கேட்ட காட்சிகளைக் கடந்துபோயிருக்கிறேன்.

ஒரு முறை, 'வாடகைக்கு கோட் விடப்படும். கோட் சூட் 100 ரூபாய்' என்ற ஆரஞ்சு நோட்டீஸ்கள் ஒட்டப்பட்ட சென்ட்ரல் ஸ்டேஷன் எதிர் சுவருக்குக் கீழே ஓர் ஆளோடு உட்கார்ந்து, இதே பெண் பிச்சை எடுத்துக்கொண்டு இருந்ததைப் பார்த்தேன். இப்போது இரண்டு பிள்ளைகளையும் வாங்கிக்கொண்டு வந்து நிற்கிறது. சாயங்காலம் பூக் கட்டிக்கொண்டு, ராத்திரிக்கு ஒதுங்கி சம்பாதிக்கும் செண்ட பஜார் அக்கா மாதிரி இது ஆகாமல் போனதும் வாழ்வின் விசித்திர அழகியல்தான்.

பலர் இப்படித்தான் வழிவழியாகப் பிச்சை எடுக்கிறார்கள். இவர்களை விடுங்கள்... ''சாப்பிடல சார்" என வயிற்றைத் தடவும் அந்தக் குட்டிப் பையன் என்னாவான் என்று நினைத்துக்கொள்கிறேன். கோக், பெப்சி

மூடிகளைச் சேர்த்து வைத்துக்கொண்டு அலையும் இது மாதிரியான ஏராளமான பையன்கள் என்னாவார்கள்?

படிப்பது கிடக்கட்டும்... 15 வயசுக்கெல்லாம் கீ —செயின், பர்பி விற்கப் போய்விட்டால்கூட நல்லதுதான். ஏதாவது பஸ் ஸ்டாண்டில் குடை போட்டு கிர்ணி பழம் ஜூஸ் விற்றால்கூடத் தேவலை. நாலஞ்சு அபார்ட்மென்ட்டுகளைப் பிடித்துக்கொண்டு வாட்டர் கேன் போட்டு இந்தச் சமூகத்தில் ஓர் ஆளாகிவிட்டால்கூட நன்றாக இருக்கும்! இப்படியே இவனும் பிச்சையெடுத்து, துணை சேர்த்து, பிள்ளை பெற்று வாழ்ந்துவிடக்கூடாது என்றுதான் வேண்ட வேண்டி இருக்கிறது.

**உ** ட்லண்ட்ஸ் தியேட்டர் பக்கமாக ஒரு பையன் வழி மறித்து, ''சார்... சார்... அம்மாவை ஆஸ்பத்திரில சேர்த்திருக்கு... செங்கல்பட்டு போறதுக்குக்கூட காசு இல்ல சார்..." எனக் கை நீட்டினான். கொஞ்ச நாளைக்கு முன்பு இதே பையன் இதே காரணத்தைச் சொல்லி என்னிடம் 50 ரூபாய் வாங்கிப் போனான். அனுதினம் பார்க்கிற ஆயிரம் முகங்களில் அவனுக்கு என்னை எப்படி நினைவிருக்கும்? ''டேய்... இன்னும் நீ செங்கல்பட்டுக்குப் போகலையா?" என நான் கோபமாகக் கேட்டதும், சட்டென்று முறைத்துக்கொண்டு ரோட்டைத் தாண்டிப் போய் ஓர் இடத்தில் உட்கார்ந்துகொண்டான்.

அப்போலோ ஆஸ்பத்திரி சாலையில் ஒரு பாட்டி, தினமும் சரியாக காலை 8 மணியில் இருந்து 11 மணி வரைதான் பிச்சை எடுக்கும். அது ஒன் வே. அந்த நேரத்தில்தான் ஜனத்திரள் கிழிக்கும். 11 மணிக்கு மேல் மணி அடித்தது மாதிரி கிளம்பிவிடும். அது டியூட்டி டைம் மாதிரி. அப்புறம் அந்தச் சாலை முழுக்க இந்தி, பெங்கால் பிச்சைக்காரர்கள் எதிர் வந்துகொண்டே இருப்பார்கள். ஏதேதோ இந்தியில் பேசி ஒரு குழந்தையைத் தூக்கி முகத்துக்கு நேரே ஆட்டுவார்கள். ராமச்சந்திரன் டீக்கடைப் பக்கம் பிச்சையெடுக்க வரும் ஒரு பெரியம்மா, குறைந்தது அஞ்சு ரூபாய் கொடுத்தால்தான் வாங்கும். ஒரு ரூபாய், ரெண்டு ரூபாய் என்றால் திருப்பிக் கொடுத்துவிடும்.

பழனியிலும் திருவண்ணாமலையிலும் மலை முழுக்க அலையும் ஏராளமான யாசகக்காரர்களின் முகங்கள் எனக்கு நல்ல பரிச்சயம். ஒவ்வொருவரிடமும் பிச்சையெடுப்பது அற்புதமான கலை, தெய்வ காரியம் என்கிற உடல்மொழிதான் இருக்கும். எங்கெங்கு இருந்தோ ஏதேதோ பின்புலங்களில் இருந்து வந்து பிச்சை எடுத்துத் திரியும் அந்த ஒவ்வொருவரிடமும் ஏராளமான கதைகள் இருக்கின்றன.

வேளாங்கண்ணியில் 20 வருடங்களாக கிளிஞ்சல் மாலை சுற்றிக்கொண்டு, சர்ச் வாசலில் அமர்ந்து பிச்சை எடுத்துக்கொண்டு இருக்கும் யேசுராஜாவைப் பார்க்க போனபோதுதான் தெரிந்துகொண்டேன். கீழ் திருப்பதியில் சுரைக் குடுவையில் தந்தி மீட்டிக்கொண்டு, பழைய என்.டி.ஆர். படப் பக்திப் பாடல்களை எல்லாம் பாடிக்கொண்டே பிச்சை எடுக்கும் ஒருவனது பெயர் பாலாஜி என்பது யதேச்சையானதா என்ன?

**நா**கூர் தர்கா வாசலில், கர்ப்பிணி மனைவியோடு ஒரு தாடிக்காரர் அல்லா பாடல்களைப் பாடியபடி பிச்சை எடுத்துக்கொண்டு இருந்ததை ஒரு முறை பார்த்தேன். ரொம்பக் காலத்துக்குப் பிறகு, அதே தம்பதியைத் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸின் அன்ரிசர்வ்டு கம்பார்ட்மென்ட்டில் நெருக்கியடித்து உட்கார்ந்து செல்லும்போது பார்த்தேன். ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்றபோது அவர் ஓடிப்போய் அந்தப் பெண்ணுக்கு டிஃபன் வாங்கி வந்தார். நாகூரில் பார்த்த கோலம் இல்லாமல் அவர்களை இந்தக் கூட்டத்தில் ஒரு தம்பதியராகப் பார்க்கச் சந்தோஷமாக இருந்தது. அவரிடம் பேசியபோது, "கேரளத்தில் பெரிய தர்கா திருவிழாவுக்குப் போய்க்கொண்டு இருக்கிறோம். அங்கே போய் ஒரு வாரம் பிச்சை எடுத்தால் கொஞ்சம் காசு சேரும்" என்றார். இந்த ரயில் பயணத்தின் காட்சி, அவர்கள் வாழ்க்கை நாடகத்தின் ஒப்பனையற்ற பொழுது எனத் தோன்றியது.

கை இல்லாமல், கால் இல்லாமல், விதவிதமான, பாவகரமான, அதிர்ச்சிகரமான, ஊனங்களுடன் எதிர்ப்படும் பிச்சைக்காரர்களைப்

பார்க்கும்போது எல்லாம் தெய்வங்களின் மீதும் இயற்கையின் மீதும் தீரவே தீராத கேள்விகள் எழுந்துகொண்டேதான் இருக்கின்றன.

இப்படி நிறைய மனிதர்களைச் சந்தித்த பிறகு எனக்குத் தோன்றியது… பசி, வறுமை, ஊனம், சோம்பேறித்தனம் போன்றவை இவர்கள் பிச்சை எடுப்பதற்கான சரிபாதிக் காரணங்கள். மீதி, இந்தச் சமூகம் அவர்களை வைத்து ஆடிய பகடையாட்டத்தின் காரணங்கள். பகிர முடியாத மனநிலைகள். உறவுச் சிக்கல்கள் என ஏராளமான காரணங்கள்.

**கோ** யம்பேடு சந்தையில் நண்பர் ஒருவர் இருக்கிறார். அவர் தங்கியிருக்கிற இடத்தில் ஒரு பிச்சைக்கார இணையை எப்போதும் பார்ப்பேன். நடைமேடை மரத்தடியில் அழுக்குத் துணிகளைப் போட்டுக்கொண்டு இரண்டு பேரும் எதாவது பேசிக்கொண்டே உட்கார்ந்திருப்பார்கள். அவருக்கு சுமார் 35 வயது இருக்கும். அந்தப் பெண்மணிக்கு 50 வயசாவது இருக்கும்.



நண்பரைப் பார்க்க ஒரு முறை போனபோது ஏரியாவே களேபரமாகக் கிடந்தது. அந்த ஆளும் பொம்பளையும் பயங்கர சண்டையில்

கிடந்தார்கள். கட்டி உருண்டு சண்டை. அந்த ஆள் அதைப் பிடித்து பிடித்து இழுக்கிறான். அது அவனைப் படு கேவலமான கெட்ட வார்த்தைகளால் திட்டுகிறது. அழுக்குத் துணியில் இருந்த காசைச் சுருட்டி புடவையில் திணித்துக்கொள்கிறது. சுற்றி இருந்தவர்கள் அலுக்கிற வரை வேடிக்கை பார்த்துவிட்டு, இருவரையும் திட்ட ஆரம்பிக்க, அந்தப் பொம்பளை திட்டிக் கொண்டே எதிர்ப் பக்கம் நடக்க ஆரம்பிக்க... பின்னாலேயே ஓடினான் அவன். ''என்னங்க இது..?'' என்றால், ''அட... ரெண்டு பேருக்கும் செக்ஸுவல் லிங்க் இருக்கு. இங்கயே செட்டிலாகி வாழ ஆரம்பிச்சிட்டாய்ங்க. அதைத் தொழிலுக்கு அனுப்பிட்டு அவன் சும்மா குடிச்சுட்டுக் கெடந்திருக்கான். பகல்லயெல்லாம் தொந்தரவு போலயிருக்கு... அதான் ஒரே சண்ட. ராத்திரிக்கு வா... திரும்ப இங்கயே வந்து கூடிட்டுக் கெடக்குங்க!'' என்றார் நண்பர் சிரித்தபடி.



இதைப்போல நாம் அறிந்துணரவே முடியாத ஏராளமான அதிர்ச்சியும் ஆச்சர்யமும் துயரமுமான பக்கங்களை வைத்திருக்கிறார்கள் இந்தப் பிச்சைக்காரர்கள். இவ்வளவுக்குப் பின்னாலும் நம்மைவிடச் சந்தோஷமாக இருக்கிறார்கள். அங்கங்கே உட்கார்ந்து நம்மைப் பார்த்து நக்கலாக நகைக்கிறார்கள். பரமபிதாவின் பார்வையாளர்களைப் போல உலவுகிறார்கள். அவர்களை எனக்குப் பிடித்திருக்கிறது.

ஓட்டுக்குக் காசு வாங்குபவர்களைவிடவா இவர்கள் பெரிய பிச்சைக்காரர்கள்? தையல் மெஷினையும் பிரியாணிப் பொட்டலத்தையும் கொடுத்து அரசியலுக்கு வர விளம்பரப் பிச்சை எடுப்பவர்களைவிடவா இவர்கள் மாஸ்டர்கள்? ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு மாதிரி பேசி, கொள்கை, கூட்டணி என எல்லாவற்றிலும் பதவியையும் அதிகாரத்தையுமே இலக்காக்கும் பிச்சைக்காரர்களை இவர்கள் ஒருக்காலும் மிஞ்சிவிட முடியாதே.

கோயிலுக்கு ஒரு டியூப் லைட் வாங்கி மாட்டினால்கூட 'உபயதாரர்' எனப் பெயர் போட்டுக்கொடுக்கும் நாம், யார் நண்பர்களே? 'நான்தான் அவனுக்கு உதவினேன்...' என எப்போதும் நம்மை முன்னிறுத்தும் குணத்துக்கு என்ன பெயர்? பாதி மறைக்கப்பட்ட நடிக — நடிகைகளின் முகங்களைக் கண்டுபிடித்தால் பரிசு என்கிற தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கெல்லாம் போன் போட்டுப் பேசிக்கொண்டு இருக்கும் ஜனங்களுக்குத்தான் என்ன பெயர்? சுவிஸ் வங்கியின் கறுப்புப் பண இருப்பு, ஐ.பி.எல். விளம்பர வருமானம், உள்ளூர் மணலும் தண்ணியும் யாருக்கோ அள்ளிக்கொடுக்கும் லாபம், பெருமுதலாளிகளுக்கும் அரசியல்வாதிகளுக்குமான பொருளாதார அதிகாரத் தொடர்பு... இதெல்லாம் தெரியாமல், புரியாமல் பன்னாட்டுச் சந்தையில் பிச்சைக்காரர்களாக இருப்பது யார் தோழர்களே? இந்த தேசத்தின் சாமான்யர்கள் ஒவ்வொருவருக்கும் 'பிச்சைக்காரர்' என்பதுதான் நிஜப் பெயர். அவரவரும் வைத்திருப்பது புனைபெயர்தான்.

நண்பர் கார்ட்டூனிஸ்ட் பாலா பேசிக்கொண்டு இருக்கும்போது, "நண்பா, நானும் என்ட்ட பிச்சைக் கேக்குற ஆளுகட்டயெல்லாம் காசு போடாம, 'வா உன்னைப் படிக்க வைக்கிறேன்... எதாவது வேலைல சேர்த்துவிட்றேன்'னு கூப்பிடுறேன். எவனும் வரமாட்றான்... இதைக் கேட்டதும் ஓடிர்றாங்க..." என்றார். உண்மைதான்.

**நே** ற்று லக்ஷ்மன் ஸ்ருதி சிக்னலில் ஆட்டோவில் நிற்கும்போது அழுக்காக ஒரு குட்டிப் பெண் ரைம்ஸ் புத்தகங்கள் விற்றுக்கொண்டு வந்தாள். ''சார்... சார்... ரைம்ஸ் புக்ஸ் சார்... 10 ரூபாதான் சார்...''

என்றாள் தவிப்பாக. நான் 10 ரூபாயை அவள் கையில் திணித்துவிட்டு, ‘‘புக்கெல்லாம் வேணாம்மா... வெச்சுக்க...’’ என்றேன். அவள் பதறிப்போய், ‘‘சார்... சும்மால்லாம் வேணாம் சார். புக் வாங்கிக்கங்க சார்..." என புக்கைக் கையில் திணித்தாள். ‘‘இல்லம்மா வேணாம்மா..." என்றால், ‘‘அப்பன்னா பணம் வேணாம் சார்... புக் வாங்கறதுன்னா தாங்க சார்...’’ என்றாள் என் கண்களையே பார்த்தபடி.

அந்தப் பார்வையில் எவ்வளவு அற்புதம்... நம்பிக்கை. அந்தக் குட்டி தேவதையிடம் நான் வாங்கி வந்தது ஐந்து ரைம்ஸ் புத்தகங்கள்!

# 40

# பெண்களுக்கு கணம் கணமும் ரணம்!

**நே** ற்று இரவு ‘சதயம்’ படம் பார்த்தேன்!

இது எத்தனையாவது முறை எனக் கணக்கில்லை. சிபி மலயில் இயக்கிய அற்புதமான படம்.

படத்தில், மோகன்லால் ஓர் ஓவியர். வீட்டில் அவர் ஓவியம் வரைந்துகொண்டு இருக்கும் போது, எதிர் வீட்டில் இருந்து ஒரு குட்டிப் பெண் வந்து கேன்வாஸ் பின்னால் ஒளிந்து கொள்வாள். மோகன்லால் விசாரிக்கும்போது, தனது சித்தி தன்னை தவறான தொழிலில் ஈடுபடும்படி வற்புறுத்துவதாகக் கூறி அழுவாள்.

பின்னாலேயே அந்தப் பெண்ணைத் தேடி சித்தியும் ஒரு புரோக்கரும் வருவார்கள். அவர்களைத் திட்டி அனுப்பிவிட்டு, அந்தப் பெண்ணை தனது வீட்டிலேயே வைத்துக் கொள்வார் மோகன்லால். அவளை அவரே வளர்ப்பார். படிக்க வைப்பார்.

படித்து முடித்து அந்தப் பெண் விளம்பர கம்பெனி ஒன்றில் சேருவாள். அங்கே அந்த கம்பெனியின் எம்.டி—யோடு அவளுக்கு காதல் வரும். அது தெரிந்து மோகன்லால் அவளை எச்சரிப்பார். ஆனாலும் வயசு மயக்கத்தில் அவள் அந்தக் காதலில் தீவிரமாக இருப்பாள். ஒரு கட்டத்தில் உறவெல்லாம் முடிந்த பிறகு, அந்த எம்.டி. அவளை

விட்டுவிட்டுப் போய்விடுவான். ஏமாற்றமும் விரக்தியும் விரட்டியடிக்க அந்தப் பெண் எப்படியோ பாலியல் தொழிலுக்கே போய்விடுவாள். இது தெரிந்து மோகன்லால் வேதனையில் இருப்பார்.



ஒரு நாள் அதே வீட்டில் அவர் ஓவியம் வரைந்துகொண்டு இருக்கும்போது, எதிர் வீட்டில் இருந்து இன்னொரு குட்டிப் பெண் வந்து ஒளிவாள். முன்பு வந்த பெண்ணின் தங்கை இவள். சித்தியைப் பற்றி அதே புகாரை இவளும் சொல்வாள். அவளை அணைத்து, கத்தியால் குத்திக் கொல்வார் மோகன்லால். பின்னாலேயே வரும் புரோக்கர், அப்புறம் அந்த விளம்பர கம்பெனி எம்.டி. என அடுத்தடுத்து நான்கு கொலைகள்.

கோர்ட்டில் வழக்கு நடந்து, லாலுக்கு தூக்குத் தண்டனை உறுதியாகும். அதன் பிறகு தூக்கில் இருந்து அவரைக் காப்பாற்றுவதற்கு முதலில் வந்த பெண் போராடுவதன் மேல் கதை போகும். படத்தில் விளம்பர கம்பெனி எம்.டி—யை அந்தப் பெண் காதலிப்பதாகக் கூறும்போது மோகன்லால் அவளிடம் ஒரு வசனம் சொல்வார்... ‘‘இதோ பார்... உனக்கு இப்போ புரியாது. ஒவ்வொரு ஆணிடமும் ஒரு விஷக் கொடுக்கு ஒளிஞ்சிருக்கு!’’ படம் பார்க்கும்

ஒவ்வொரு முறையும் இந்த வசனம் என்னை மிகுந்த தொந்தரவுக்கு உள்ளாக்குகிறது. தூக்கத்தைக் கெடுக்கிறது. சிந்தனையைக் கலைத்துப்போடுகிறது!

இங்கே தொலைக்காட்சியைத் திருப்பினால், ஒரு குட்டிப் பையன், 'வேணாம் மச்சான் வேணாம்... இந்தப் பொண்ணுங்க காதலு...' என ஏதோ ஒரு ஷோவில் டான்ஸ் ஆடுகிறான். அதிகபட்சம் அவன் மூணாவது நாலாவதுதான் படிப்பான். இன்னொரு சேனல் ஷோவில், நாலைந்து குட்டிப் பையன்கள் சேர்ந்து, 'ஒய் திஸ் கொல வெறி... கொல வெறி... கொல வெறிடி...' எனப் பாடிக்கொண்டு இருக்கிறார்கள்.

டுபாக்கூர் படங்களில்கூட, 'டேய் இந்தப் பொண்ணுங்களே இப்பிடித்தான்... ஏமாத்திட்டுப் போயிருவாளுங்க...' என்பது மாதிரியான வசனங்கள் வந்தால், ஒரு பெரும் கூட்டம் கைத்தட்டி விசில் பறக்கிறது. பெண்கள் என்றாலே ஏமாற்றுக்காரிகள், அல்வா பார்ட்டிகள் என்ற எண்ணம் சின்னஞ்சிறுசுகள் மனதிலேயே இவ்வளவு தீவிரமாக விதைக்கப்பட்டால் என்னவாகும் இந்தச் சமூகம்? ஒவ்வோர் ஆணின் மனதிலும் ஒளிந்திருக்கும் விஷக் கொடுக்குதான் இதை எல்லாம் செய்கிறது இல்லையா?

**நி** த்யா, நான் குடியிருந்த ஹவுஸிங் போர்டில் ஈ ப்ளாக்கில் குடியிருந்தாள். சினிமா டான்ஸர். ஆள் பார்க்க 'வீடு' அர்ச்சனாவுக்கு தங்கச்சி மாதிரி இருப்பாள். டைட் ஜீன்ஸும் டாப்ஸுமாக அவள் ஸ்கூட்டியில் போவதைப் பார்த்தால், அங்கங்கே ஆட்கள் ஃப்ரீஸாவார்கள். நைட்டியில் தண்ணி எடுக்க வந்தால், செக்யூரிட்டி வரைக்கும் தேவுடு காப்பார்கள். வேறு வேறு பையன்களை ஸ்கூட்டி பின்னால் வைத்துக்கொண்டு அவள் வந்துபோகும் சித்திரங்களை அடிக்கடிப் பார்த்திருக்கிறேன். அப்புறம் பால்கனியில் செல்போனோடு சத்தமாகப் பேசிச் சிரித்தபடி நிற்பதையும், நள்ளிரவுகளில் அவள் வீடு வருவதையும் பல முறை பார்த்திருக்கிறேன்.

ஒரு முறை, மீனாட்சி காலேஜ் பக்கம் ரோட்டில் கார்காரன் ஒருவனோடு ஆவேசமாக சண்டை போட்டுக்கொண்டு இருந்ததைப்

பார்த்தேன். ஒரு முறை, கே.எஃப்.சி—யில் குடும்பத்தோடு சாப்பிட்டுக் கொண்டு இருந்தாள். ‘‘அண்ணா... நீங்க சி ப்ளாக்லதானே இருக்கீங்க?’’ என்றாள் சிரிப்போடு. அப்போதுதான் அவளுடைய குடும்பம் பற்றி எனக்குத் தெரியும். அம்மா, அண்ணன், இரண்டு தங்கச்சிகள். அண்ணன் கல்யாணம் பண்ணி, டைவர்ஸ் பண்ணி இவர்களுடனே வந்து செட்டிலாகிவிட்டான். இவள்தான் குடும்பத்தையே பார்த்துக்கொள்கிறாள்.

ஆனால், இவளைப் பற்றி ஹவுஸிங் போர்டில் ஒருவர்கூட நல்ல விதமாகப் பேசி நான் கேட்டது இல்லை. ‘‘அது ஒரு மாரி பார்ட்டிப்பா...’’ என்பதைத்தான் வேறு வேறு வார்த்தைகளில் சொல்வார்கள். மிகக் கேவலமான வார்த்தைகள். ஏதோ ஒரு நாளில் நித்யா அங்கே இருந்து காலி பண்ணிப் போய்விட்டாள். அப்புறம் அவளை நான் பார்க்கவே இல்லை.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு, டி.வி—யில் நேரு ஸ்டேடியத்தில் நடந்த ஏதோ ஒரு கலை நிகழ்ச்சியில், ஒரு குத்துப் பாட்டுக்கு பின்வரிசையில் ஆடிக்கொண்டு இருந்த நித்யாவைப் பார்த்தேன். சாலையில் ‘வ்ர்ர்ரூம்...’ எனப் படுவேகமாகக் கடந்து போகிற பெண்கள் எல்லாம் நித்யா மாதிரியே இருக்கும். ஏழெட்டு வருடங்கள் ஆகிவிட்டன அவளைப் பார்த்து.

நண்பர் ஒருவரோடு வெங்கடேஸ்வரா ஹாஸ்பிட்டலுக்குப் போனபோது, காத்திருப்பு அறையில் சாய்ந்து உட்கார்ந்திருந்த ஒரு பெண்மணி என்னை உற்றுப் பார்த்துவிட்டு, ‘‘அண்ணே... நீங்க ரிப்போர்ட்டர்தானே? புலியூர் ஹவுஸிங் போர்டுல இருந்தீங்கள்ல?’’ என்றார். நான் யாரென்று புரியாமல் அவரைப் பார்த்தேன். ‘‘நான் நித்யாண்ணே... ’’ என்றார். அதிர்ந்துவிட்டேன். எக்கச்சக்கமாகக் குண்டடித்து, ஆளே உருமாறி அடையாளமே தெரியவில்லை.

‘‘ய்யே என்ன நித்யா?’’ என்றால், வறண்ட சிரிப்பொன்று சிரித்தாள். கேன்டீனுக்கு நடக்க முடியாமல் நடந்து வந்தாள். ஒரு ஆள் பார்க்கவில்லை அவளை. எவனும் ஃப்ரீஸாகவில்லை. கேன்டீனில் உட்கார்ந்து பேசினோம். ‘‘தைராய்டு ப்ராப்ளம்ணே... எப்பவும் டான்ஸ்

வொர்க்னே சுத்திட்டிருந்தேன்ல... சாப்பாடு அது இதையெல்லாம் சரியாவே கவனிக்கலை. குடும்பம், தங்கச்சிகளுக்கு காசு சேக்கணும்னு சுத்திட்டே இருந்ததுல எதுவும் தெரியல... திடீர்னு இது மாதிரி ஆகிருச்சு. ரொம்ப அதிகமாகிருச்சு... சரி பண்ணணும்னா ரொம்ப செலவாகும்னு சொல்றாங்க. ஐ வில் ட்ரைண்ணே...'' என சிரித்தாள். ''இப்போ டான்ஸுக்குப் போறதில்லை. நல்லவேளையா, ரெண்டு தங்கச்சிங்களுக்கும் கல்யாணம் பண்ணி வெச்சுட்டேன்...'' என்றவளிடம், ''நீ கல்யாணம் பண்ணிக்கலையா?'' என்றேன்.

கொஞ்ச நேரம் மௌனமாக இருந்தவள் கரகரவென அழ ஆரம்பித்தாள். ''ஏய்... என்ன கேட்டேன்னு அழற... ஸாரி ஸாரி... அழாதம்மா...'' எனப் பதறிய என்னைப் பார்த்து, கண்ணீரைக்கூட துடைக்காமல் அப்படியே சட்டென்று சிரித்தாள். ''சரி வர்றேண்ணே...'' எனக் கலங்கிய கண்களோடு சிரித்தபடி அவள் போனது இப்போதும் அப்படியே இருக்கிறது.


கவர்ச்சிகரமாக நைட்டியில் தண்ணி எடுக்க வந்து நிற்கும் நித்யா நினைவுக்கு வந்தாள். உடம்பை ஒரு சுமையென தூக்கிக்கொண்டு நடந்துபோகும் இந்த நித்யாவைப் பார்க்கும்போதே மனசு பிசைந்தது. இப்போது இந்த நித்யாவை யாரும் தவறாகப் பேச மாட்டார்கள் எனத் தோன்றியது. 'ஏமாற்றுக்காரி' என்று வசனமோ, பாட்டோ பாடமாட்டார்கள். அவளது கண்ணீரின் அர்த்தம் எனக்கு இப்போதும் புரியவில்லை. எந்த ஆணுக்கும் அது புரியப் போவதும் இல்லை எனத் தோன்றியது. இப்படி ஆயிரமாயிரம் நித்யாக்கள் எங்கெங்கும் இருக்கிறார்கள்தானே?

**எ** ன்னுடைய தோழி ஒருத்திக்கு கல்யாணம். காலையில் அவளைப் பார்க்க மணமகள் அறைக்குப் போனால், அழுது கொண்டு இருந்தாள். ''ஏய்... என்னாச்சு?'' என்றால், ''எனக்குப் பயமாயிருக்குடா...'' என மறுபடி அழுகை. ''வீட்ல பார்த்துத்தான் இந்த மாப்பிள்ளையை ஃபிக்ஸ் பண்ணினது... முதல்ல ரெண்டு பேரும் தனியாப் பேசினப்போ, ஓ.கே. மாதிரிதான் இருந்தது. நானும் வீட்ல சரின்னு சொல்லிட்டேன். அப்புறம்

பேசப் பேச, இவர் ஏகப்பட்ட கண்டிஷன்ஸ் போடுறார். மும்பைலதான் வேலை பார்க்கறார்... மொதல்ல சென்னை வந்து செட்டிலாகிடலாம்னு சொன்னார். நிச்சயத்துக்கு அப்புறம் வேற மாதிரி பேசறார். மும்பைலதான் செட்டிலாகணும்கறார்... வீட்ல இந்த மாப்ளையே வேணாம்னு எவ்வளவோ சொல்லிட்டேன். யாருமே கேட்கலடா... நான் என்னாகப் போறேனோ?'' என அழுதாள்.

எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. அவளுக்குக் கல்யாணம் முடிந்தது. கலங்கிய முகத்துடன் அவள் பலருக்கும் கை கூப்பிக்கொண்டு நின்றது புகைப்படங்களாகிக்கொண்டே இருந்தன.

அதன் பிறகு ஒரு நாள் மும்பையில் இருந்து அவள் போனில் பேசும்போது, ''அய்ய... இந்த ஊரே பிடிக்கலடா... எப்படா அங்க வருவோம்னு இருக்கு. கொஞ்ச கொஞ்சமாப் பேசி இப்போதான் இவர் மனசைக் கரைச்சுட்டு இருக்கேன். பாப்போம்'' என்றாள் பிசிறடிக்கும் குரலில். இப்படி எத்தனை எத்தனை தோழிகள் சின்னச் சின்ன ஏக்கங்களும் எதிர்பார்ப்புகளும்கூட நிறைவேறாமல் எங்கெங்கும் நிறைந்திருக்கிறார்கள்!



**இ** ன்னொரு நண்பன், ஒரு பெண்ணைக் காதலித்து கல்யாணம் பண்ணுவதாய் பேசி அவர்களுக்குள் எல்லாம் முடிந்துவிட்டது. இப்போது அவன்தான் அவனுடைய வீட்டில் பேச வேண்டும். ‘‘அய்யோ... வீட்ல தங்கச்சிக்கு வரன் பேசிட்டு இருக்காங்க... இப்போ போய்ப் பேச முடியாது. ஒரு வருஷம் வெயிட் பண்ணும்மா’’ என அவளிடம் கெஞ்சிப் பேசி சம்மதிக்க வைத்துவிட்டான். அதற்குள் அவள் கர்ப்பம் ஆகிவிட்டாள். மேடிட்ட வயிற்றுடன் அவள் நடமாட ஆரம்பிக்கவும், ‘‘ஏதாவது டாக்டர் இருந்தா சொல்லுங்களேன்’’ என நண்பர்களிடம் கேட்கத் தொடங்கி விட்டான். அடையாறில் உள்ள ஓர் ஆஸ்பத்திரியில் அபார்ட் பண்ணிவிட்டு தேம்பித் தேம்பி அழுதபடி அந்தப் பெண் ஆட்டோ ஏறிப்போனதைப் பார்க்கவே பாவமாக இருந்தது. ஆண்கள் சட்டென்று கடந்து போய்விடுகிற ஒரு நிகழ்வு, பெண்களுக்கு கணம் கணமும் ரணம்!

பெண்கள், சிகரெட் பிடிக்கிறார்கள்; பப்புக்கு வருகிறார்கள்; டிஸ்கோவுக்குப் போகிறார்கள். இதெல்லாம் எவ்வளவு பேர்? எங்கே அய்யா?

ஊர்களில் பிள்ளை பெற்றுக்கொள்ளும் ஒவ்வொருவரும் ஒன்பதாவது மாசம் வரை வயல் வேலைக்குப் போகிறார்கள். மில்லு வேலைக்கும் பிளாஸ்டிக் கம்பெனி வேலைக்கும் போய் பிள்ளைகளைக் காப்பாற்ற அல்லல்படுகிற தாய்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்? குல சாமிகளாகப் பெண் தெய்வங்களைக் கும்பிட்டுக் கொண்டாடும் நாம், நமக்கான உயிர்கொண்ட மனுஷிகளைக் கொண்டாடுகிறோமா? தப்பான பார்வைகள், கேலிப் பேச்சுகள், வக்கிரமான வதந்திகள் என இவற்றாலேயே சிதைந்துபோன பெண்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?

பெண்கள் இல்லாமல் ஆண்களால் ஒரு நாள் ஜீவித்திருக்க முடியுமா? நம்மில் எத்தனை பேர் அவர்களைச் சரிசமமாய் சரிபாதியாய்ப் பார்க்கிறோம்? திடீரென்று யோசித்துப் பார்த்தேன். எனக்கு என் அம்மாவின் இளமைக் காலம் பற்றி எதுவுமே தெரியாது. அவளது சிறுபிராயம், படிப்பை நிறுத்தியபொழுதுகள், விளையாட்டு, காதல் எதுவுமே தெரியாது. ஏனோ அது பற்றி எல்லாம் கேட்காமல் பேசாமலேயே இத்தனை காலம் வந்திருக்கிறோம். இப்படி எத்தனை எத்தனை அம்மாக்கள் இருக்கிறார்கள்... பகிரப்படாத நினைவுகளோடு!

**மு** ன்பு நான் தங்கியிருந்த ஒரு குடியிருப்பில் கீழ் வீட்டில் ஒரு தம்பதி குடியிருந்தனர். அந்த ஆள் தினமும் மனைவியைக் கண்டபடி திட்டிக்கொண்டே இருப்பார். அச்சடிக்க முடியாத வார்த்தைகளால் கடாசுவார். அக்கம்பக்கத்து ஆட்களெல்லாம் பயங்கர டென்ஷனிலேயே இருப்பார்கள். அவர் அடிக்கடி, ‘‘இந்த பொம்பளைக் கழுதைங்களே இப்பிடித்தானடி... தே...... ஒன்னையெல்லாம் எவன்டி நம்புவான்?’’ என்கிற வார்த்தைகளாலேயே சுடு தண்ணியை வீசுவார். அந்தப் பெண்மணி அமைதியாக உட்கார்ந்தே இருப்பார். தனது பெண் பிள்ளையைத்

தூக்கிக்கொண்டு வெளியே வந்து கேட் பக்கத்திலேயே நிற்பார். எனக்கெல்லாம் அவ்வளவு கோபம் வரும். தினமும் இப்படியே கிடக்கும்.

ஒரு நாள் அந்த ஆள் திடுதிப்பென்று செத்துப் போய்விட்டார். நெஞ்சு வலியில் பொட்டென்று போய்விட்டார். வெளியே கண்ணாடி பெட்டியில் வைத்திருந்தார்கள். அந்தப் பெண்மணி உருண்டு புரண்டு அழுதார். தடுக்கவே முடியாமல் அப்படி அழுதார்.

எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. ‘‘அவ்வளவு கேவலமான ஆளுக்கா இப்படி அழுவுது இந்தம்மா?’’ இதைக் கேட்டு மேல் வீட்டுத் தாத்தா சொன்னார், ‘‘பொம்பளைங்க அப்பிடித்தான் தம்பி... என் அனுபவத்துல சொல்றேன்... நாமெல்லாம் அவங்களோட நெழலுக்குக்கூட துப்பில்ல!’’

41

# அரசியல் தெரியலன்னா, அம்பேல்தான்!

**அ**வர் என் நண்பர்தான்!

அவரை முதன்முதலில் பார்த்தது ஏதோ ஒரு ஷாம்பு கம்பெனி பிரஸ் மீட்டில். கிழிந்த லெதர் பேக்குடன், ஓட்டை டி.வி.எஸ்.— 50—யில் வந்திருந்தார். பழைய பேன்ட் — சட்டை, ஒருவார தாடியோடு எல்லோருக்கும் உற்சாகமாக பிரஸ் ரிலீஸைக் கொடுத்துக்கொண்டு இருந்தார். அந்த கம்பெனிக்கான பி.ஆர்.ஓ—வின் அசிஸ்டென்ட் அவர்.

ஒவ்வொருவரிடமும் 'அண்ணே', 'ஜி', 'நண்பா', 'தோழா' என விதவிதமான துணைச் சொற்கள் போட்டுப் பேசுவார். பிரஸ் மீட் முடிந்ததும் ஒரு 'அண்டா கா கசம்' சிரிப்போடு வாசலில் நின்றார். அப்போது பத்திரிகைக்கு நானும் புதுசு... அவரும் புதுசு. என்னிடம் சிநேகம் பொங்க, ''நண்பா... ப்ளீஸ்... நீங்க வெயிட் பண்ணுங்க" என்றார். பிரஸ் மீட்டெல்லாம் முடிந்து, ''எங்கே போறீங்க..?" என்றார்.



‘‘கோடம்பாக்கம் சார்..."

‘‘அய்ய... சாரெல்லாம் வேணாம். நண்பானு கூப்பிடுங்க... வாங்க... நான் டிராப் பண்றேன்" என வண்டியை நேராகவிட்டது வடபழனி பஸ் ஸ்டாண்ட் பக்கம் ஒரு கையேந்தி பவனுக்கு. ரெண்டு முட்டை பரோட்டா ஆர்டர் பண்ணியவர், என்னைக் குறுகுறு எனப் பார்த்துவிட்டு, ‘‘எங்கூரு ஆத்தூரு பக்கத்துல. எங்கப்பன் பால்காரன். ரெண்டு தொத்த மாட்ட வெச்சுக்கிட்டு மொத்தக் குடும்பமும் பூவா திங்கணும். பஞ்சம் பாஸு... பஞ்சம். அதான் கெளம்பி சென்னைக்கு வந்துட்டேன். நெறையக் கவிதை எழுதுவேன் பாஸு. வாலி, வைரமுத்துவை எல்லாம் வண்டியேத்திவிடத்தான் வந்தேன். ஒரு கவிதை சொல்லவா..." என்றபடி அரை டஜன் கவிதைகள் சொல்லித் தாளித்தார்.

‘‘கவிதையை வெச்சுக்கிட்டு என்னா பண்றது... நாம என்ன பாரதியா? வயிறு இருக்குல்ல... இருக்குல்ல பாஸு... என்னமோ தெரியல... ஒன்னையப் பாத்தா அழுகையா வருது பாஸ்... அழுகையா வருது..." என்றபடி அழ ஆரம்பித்துவிட்டார். அவரை வண்டியில் ஏத்தி, வழி கேட்டு கொண்டுபோய் விடுவதற்குள் கிறுகிறுத்துவிட்டது. ‘‘பாலிடிக்ஸ் பழகு... பாலிடிக்ஸ் பழகு பாஸ்..." என்பதையே திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டுப் போனார்.

அதன் பிறகு அவரை அவ்வப்போது பார்த்திருக்கிறேன். ரியல் எஸ்டேட், செக்ரட்டரியேட் கான்ட்ராக்ட், அரசியல் என வேறு

எங்கெங்கோ போய்விட்டார்.

ஒரு முறை அவரை சந்தித்தபோது, ‘‘நமக்கு சி.ஐ.டி. காலனிலயும் ஆள் இருக்கு. மன்னார்குடியிலும் ஆள் இருக்கு!’’ என பஞ்ச் அடித்தார். அப்புறம் அவரை நான் பார்க்கவே இல்லை.

இரண்டு வருடங்கள் இருக்கும். ஒரு மழை நாளில் ஏவி.எம். ஸ்டுடியோ போய்விட்டுத் திரும்பி நடந்துகொண்டு இருந்தேன். சர்ர்ர்ரக்கென்று குழித் தண்ணியை விசிறி அடித்தபடி கடந்த ஒரு கார் சட்டென்று நின்று திரும்பி வந்தது. கண்ணாடியை இறக்கிவிட்டு, ‘‘ஹலோ நண்பா... ஏறுங்க..." எனச் சிரித்தார் அதே நண்பர். புத்தம் புது கார். பூ போட்ட சட்டை, மழுமழு முகம், ப்ரேஸ்லெட் என ஆளே மாறி இருந்தார். மாறி மாறி அடித்த மூன்று மொபைல்களில் பேசிக்கொண்டே இருந்தார்.

ஸ்டீரியோ செட் அலற, ‘‘என்ன நண்பா... எப்பிடி இருக்கீங்க? ஆபீஸ்ல டிராப் பண்றேன்..." என்றவரைப் பார்க்கவே எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. ‘‘இண்டிகா வெச்சிருந்தேன்... போன மாசம்தான் குடுத்துட்டு இதை வாங்கினேன். ஒரு காபி குடிச்சுட்டுப் போலாமா..." என்றபடி ஜெமினி பக்கம் ஒரு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலில் நுழைந்தார்.

ஒரு காபிக்கு ஃபைவ் ஸ்டார் ஹோட்டலா!? ஹோட்டலில் அவருக்கு என்று ஒரு டேபிள் இருந்தது. எனக்கு மிரட்சியாக இருந்தது. பிறகு ஆபீஸில் என்னை இறக்கிவிட்டு, ‘‘உங்க ஆபீஸ்ல பாலிடிக்ஸ் உண்டா? பாலிடிக்ஸ் பண்ணாத்தான் வளர முடியும்... என் பெர்சனல் நம்பரை நோட் பண்ணிக்கங்க..." என ஒரு ஃபேன்ஸி நம்பர் கொடுத்துவிட்டுப் போனார்.

சீனியர் நிருபருடன் பேசும்போது, அதைச் சொல்லி ஆச்சர்யப்பட்டேன். ‘‘அவனா... இன்னிக்குத் தேதிக்கு சென்னைல அவந்தாம்ப்பா நம்பர் ஒன் பிம்ப்பு..." என்றார். அதிர்ச்சியாக இருந்தது. வயல் பற்றியும் வயிறு பற்றியும் கவிதை சொன்ன அவரா இவர்? இரண்டே வருடங்களில் இப்படியா ஒருவனைக் காலம் ஆள் மாற்றி புரட்டிப்போடும்? ‘‘பாலிடிக்ஸ்

பழகு... பாலிடிக்ஸ் பழகு..." என அனத்திக்கொண்டு வந்த குரல் இன்னும் எனக்குள் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

**அ** வரும் என் நண்பர்தான்!

நானறிந்த புரட்சிப் புயல்களில் அவரும் ஒருவர். தீவிர சமூகச் சிந்தனையாளர். பேச ஆரம்பித்தால், 'புரட்சி' கால் டாக்ஸி புக் பண்ணி வந்துகொண்டு இருக்கிற மாதிரியே இருக்கும். மார்ட்டின் லூதர் கிங்கில் இருந்து பிரபாகரன் வரை அவர் சொல்லும் கோட்ஸ்கள் உலுக்கிப் போட்டு உசுப்பேற்றும். ''எதுல அரசியல் இல்ல நண்பா... முத்துக் கடை டீயில் இருந்து ஐ.பி.எல். மேட்ச் ரிசல்ட் வரைக்கும் எல்லாமே அரசியல்தான். அரசியல் கற்றுக்கொள்... அப்போதுதான் கலகம் பிறக்கும்...'' என்பார் அடிக்கடி ஆவேசமாக. அவர் வீட்டில் குவிந்து இருக்கும் புத்தகங்களைப் பார்த்து மிரண்டு இருக்கிறேன். அவர் ஒரு மனித உரிமைப் போராளியாக, எனக்கு இன்ஸ்பிரேஷனாக இருந்தார்.

பல நேரங்கள் ஈழம், தண்டகாரண்ய மக்கள், மாவோயிஸ்ட்டுகள், மதவாதம், அமெரிக்க ஏகாதிபத்தியம், சீனாவின் ஆபத்தான உருமாற்றங்கள், மொழி இன வீழ்ச்சி, உலகமயமாக்கலின் சுரண்டல்... என அவரின் கோபங்களிலும் தாகங்களிலும் கரைந்திருக்கின்றன. மிக எளிமையான வாடகை வீடு, பஸ் பயணம் என்பதுதான் அவரது வாழ்க்கை.

'சென்னை சங்கமம்' நிகழ்ச்சியில் ஒரு கான்ட்ராக்ட் பிடித்ததுதான் அவரைப் பற்றிய என் முதல் அதிர்ச்சி. அந்த நிகழ்ச்சி பற்றியும் அதை நடத்துகிறவர் குறித்தும் எதிர்ப்புக் கருத்துகள் வைத்திருந்தவர் அவர். அதைப் பற்றி நான் கேட்காமலே, ''இதுவும் ஒரு அரசியல்..." என்றார் ஒரு தருணம். ஒரே வருடம்தான்... கெட்டப்பு செட்டப்பு எல்லாமே மாறிவிட்டார் மனிதர். முழுக்க முழுக்கப் பெரிய மனிதர்களின் தொடர்புகள்... வசதி வாய்ப்புகள் என வேறு ஒரு வாழ்க்கைக்குப் போய்விட்டார். அவர் தனது கருத்துகள் எல்லாவற்றையும் விற்கிறார். ஜெகத் கஸ்பர், சீமான், கார்த்தி சிதம்பரம் என எல்லோருடனும் விசித்திரமான அரசியல் நட்பு வைத்திருக்கிறார். ஈழப் பிரச்னை

உச்சத்தில் இருந்தபோது அதையும் வியாபாரம் ஆக்கியவர்களில் நண்பரும் ஒருவர்.

ஒரு நாள் அவரைப் பார்த்தபோது, ‘‘கல்வி நிலையம் ஒன்று அமைச்சிருக்கேன்...’’ என்றார் பெருமையாக. அவர் தீவிர தமிழ் உணர்வாளர். ‘‘ஓ... தனித் தமிழ்ப் பள்ளிங்களா?’’ என்றேன் ஆர்வமாக. அவர் சொன்னார், ‘‘இல்லைங்க... இல்லை... மெட்ரிகுலேஷன் ஸ்கூல்ங்க!"

**அ** வர்கூட என் நண்பர்தான்!

ஏதோ ஒரு தெரியாத நம்பரில் இருந்து எனக்கு ஆன்மிக மெசேஜ்களாக வந்துகொண்டு இருந்தன. ‘26—ம் தேதி ஆசிரமத்தில் குருப்பெயர்ச்சி யாகம்... வந்துவிடவும்’, ‘2—ம் தேதி ராசி விருத்தி யாகம்... வந்துவிடவும்’ என்பது மாதிரியான மெசேஜ்கள். ‘டவுசர்... ஓவரா ஓரண்ட இழுக்கறானே...’ எனக் கடுப்பானேன். ஒரு நாள் அந்த நம்பரில் இருந்து போன் வர, ‘‘வணக்கம்... நான் சுகுமார சுவாமிகள் பேசறேன்..." என்றது குரல். ‘‘யாருங்க..?" என்றால், ‘‘முருகன்தானே... நான் சுகுமார சுவாமிகள்... ஏழெட்டு வருஷத்துக்கு முன்னாடி ஹவுஸிங் போர்டுல உங்க பக்கத்து ரூம்ல இருந்தேனே... கம்ப்யூட்டர் சேல்ஸ்மேன்..."



‘‘அண்ணே... சுகுமாரண்ணே...'' எனப் பரவசமானேன்.

ஹவுஸிங் போர்டில் எங்கள் பக்கத்து அறைக்காரர் சுகுமார். எங்கள் ரூமுக்கே அவர்தான் ஸ்பான்சர் பார்ட்டி. ஞாயிற்றுக் கிழமையானால் குவார்ட்டர் பாட்டில் கொண்டுவந்து குவிப்பார். பலான டி.வி.டி—களுக்குத் தனிப் பெட்டி வைத்து இருந்தார். தமிழில் அவருக்குப் பிடிக்காத வார்த்தை ‘குளியல்’. குளிக்கவே மாட்டார். தலைக்குத் தண்ணி தெளித்துக்கொண்டு, பெர்முடாஸ் மேலேயே பேன்ட் போட்டுக்கொண்டு, பெர்ஃப்யூமைப் பல கோட்டிங் அடித்துக்கொண்டு அவர் ஆபீஸ் கிளம்புவதே திருவிழாவாக இருக்கும். அவர் எப்போது தண்ணியடித்தாலும், ‘‘...க்காளி... எவனைப் பார்த்தாலும் பாலிடிக்ஸ் பண்றான்... நான் வர்றேண்டா... வர்றேன்... சூது எங்களுக்கும் தெரியும்ல...'' என பஞ்ச் அடிப்பார். அந்த சுகுமாரண்ணனா இவர்!?

‘‘என்னண்ணே எப்பிடி இருக்கீங்க?''

‘‘முருகன்... நான் சந்நியாசம் வாங்கி இப்போ சுவாமிகள் ஆகிட்டேன். செங்கல்பட்டு பக்கம்தான் நம்ம ஆசிரமம்... நீங்க நிச்சயம் வரணும். விதி, மோட்சம், பயன் அத்தனைக்குமான நல்ல வழிகளைத் திறந்துவிட நான் காத்திருக்கேன்...’’ என ஆரம்பித்து அமானுஷ்யமாகப் பேசப் பேச, எனக்குக் கிலியடித்தது.

சுகுமாரண்ணன் எப்படி இப்படி ஆனார்? என்ன பாலிடிக்ஸ் அவரை இப்படி இழுத்துப்போனது? என்னடா இது உலகம்? என வியப்பாக இருந்தது. சொல்லப்போனால், சுகுமார் அண்ணன்தான் சூப்பர் அரசியல்வாதி எனத் தோன்றியது. ‘அவசரப்பட்டுட்டியே ஆதீனம்...’ என மதுரைக்கு ஒரு கால் அடிக்கலாமா என யோசித்தேன்!

இப்படிப் பற்பல நண்பர்களால் ‘பாலிடிக்ஸ்’ என்ற வார்த்தை என்னைத் துரத்திக்கொண்டே இருக்கிறது. ‘‘தெறமயெல்லாம் விடுங்க... கொஞ்சம் பாலிடிக்ஸ் பண்ணத் தெரியணும். அப்போதான் முன்னேற முடியும்" என யாராவது அவ்வப்போது அட்வைஸ் பண்ணிக்கொண்டே இருக்கிறார்கள். ‘‘அய்யோ! அவன் பயங்கர பாலிடிக்ஸ்ரா...’’ என யாராவது ஆபீஸ், பார், ஹோட்டல் என எங்கேயாவது உட்கார்ந்து புலம்பிக்கொண்டே இருக்கிறார்கள். யாரைப் பிடிப்பது, யாரைக் கவிழ்ப்பது, யாரைக் கலாய்ப்பது, யாரை எங்கே வைப்பது, யாருக்கு என்ன செய்வது என ஏகப்பட்ட புதிர்ப் பாதைகள் கொண்டது ‘பாலிடிக்ஸ்’ என்ற வார்த்தை.

அரசியல் என்பது மக்கள் புரட்சி, தேர்தல், ஆட்சி என்பது மட்டுமே அல்ல... வேலை, தனி மனித வளர்ச்சி, குடும்பம், உறவுகள் வரை அந்த வார்த்தை ஊடுருவிக் கிடக்கிறது. அரசியல் பண்ணத் தெரிந்தவர்கள் சீக்கிரமாக முன்னேறி, வசதி வாய்ப்புகளை அனுபவிப்பார்கள். அரசியல் பண்ணத் தெரியாதவர்கள் அப்பாவிகளாகச் சிங்கியடிப்பார்கள் என்பதை இந்தச் சமூகம் நமக்கு அறிவுறுத்திக்கொண்டே இருக்கிறது.

குருஷேத்திர யுத்தமும் அரசியல்தான். யூதாஸ் கொடுத்த முத்தமும் அரசியல்தான். நீங்கள் எதைத் தருகிறீர்கள்... எதைப் பெறுகிறீர்கள் என்பது அல்லவா முக்கியம்!

கொலம்பிய காட்டில் மரணத்துக்குப் பிறகும் அணையாத விண்மீனாகத் திறந்துகிடந்த சேவின் விழிகளில், சிறுநீருக்கு பைப் வைத்துக்கொண்டு இறுதிக் கணங்களிலும் பேசிய பெரியாரின் சொற்களில், பன்னிரண்டாம் நாளிலும் திலீபனின் இதழில் உறைந்திருந்த புன்னகையில், வாட்டர் பாட்டில் கம்பெனிக்கு வயலை விற்கமாட்டேன் எனத் தனி ஆளாக மல்லுக்கு நின்ற வேலுச்சாமியின் வைராக்கியத்தில், தன்னைப் பலாத்காரம் செய்த போலீஸ் அதிகாரிக்கு 10 ஆண்டுகள் போராடி தண்டனை வாங்கித் தந்த ரோசினியின் உறுதியில் இருப்பதற்கெல்லாம் பெயர் என்ன? அற்பத்துக்கும் சொற்பத்துக்கும் 'அரசியல்' என்ற பெயரை எதற்குப் பயன்படுத்துகிறோம்? அவரவரது வளர்ச்சிக்கும் வாழ்க்கைக்கும் பெயர்தான் பாலிடிக்ஸ் என்றாகிவிட்டது இந்த தேசத்தில்.

''எனது அன்பு, கோபம், மனிதம் இதை எல்லாம் முழுவதுமாக வெளிப்படுத்த முடியாமல் எந்த அரசியலாவது தடையாக இருந்தால், அது எனக்கு வேண்டாம்" என்றார் வினோபா பாவே. உண்மை. தொடர்ந்து பணத்துக்கும் அதிகாரத்துக்கும் எதிரான மனநிலையில் இருப்பவர்கள் எவ்வளவு நிம்மதியாக இருப்பார்கள் என்பதை அறிந்தவர்கள் உணர்வார்கள்.

எந்த எதிர்பார்ப்புகளும் இல்லாமல் தேசிய நெடுஞ்சாலை ஓரமாக உட்கார்ந்து, நுங்கு விற்று மீதப்பட்டுப்போன காய்ந்த பனை ஓலையில் பிள்ளைகளுக்குத் தர காத்தாடி செய்துகொண்டு இருக்கும் ஒரு முதியவரின் விரல்களைப் போல வாழ்ந்துவிட்டால் அது எவ்வளவு பெரிய விஷயம் என ஏங்குகிறவர்களுக்கு ஏதய்யா பாலிடிக்ஸ்?

*'எந்த வேஷத்துக்கும்*
*பொருத்தமற்றது*
*என் முகம்.*
*சுற்றிச் சூழ*

*நடக்கிறது நாடகம்!’* என்ற வித்யாஷங்கரின் கவிதைதான் ஞாபகத்துக்கு வருகிறது!

# 42

# நன்றி நவில மறவாதீர்!

**போ** ரூர் பக்கம் ஓர் இடுகாட்டில் டெஸி ரீனா, மார்பில் அணைத்த பூங்கொத்தோடு மண்டியிட்டு அமர்ந்திருந்த காட்சி இப்போதும் நினைவில் பிரவகிக்கிறது!

200 வருடங்களுக்குப் பிறகு, ஒரு நன்றியைச் சொல்ல லண்டன் பக்கக் கிராமம் ஒன்றிலிருந்து சென்னைக்கு வந்தவர் டெஸி. இந்தியாவை இங்கிலாந்து ஆட்சி செய்தபோது, சென்னையில் ராணுவ அதிகாரியாக இருந்தவர் டெஸியின் தாத்தா. அவரிடம் வேலை பார்த்தவர் தமிழரான கிருஷ்ண மூர்த்தி. டெஸியின் அம்மாவை வளர்த்தது கிருஷ்ண மூர்த்திதான். அவர் டெஸியின் குடும்பத்தில் ஒருவராகவே ஆகிவிட்டார்.

கிறிஸ்தவரான டெஸியின் தாத்தா, கிருஷ்ண மூர்த்தியின் நட்பால் மனதளவில் இந்து மதத்தைத் தழுவி, கோயில் கோயிலாகச் சுற்றியிருக்கிறார். சிறு வயதில் ஒருவிதமான மனப்பிறழ்வு நோயில் இருந்த டெஸியின் அம்மாவை கிருஷ்ணமூர்த்திதான் தனது அன்பால் மீட்டெடுத்திருக்கிறார். டெஸியின் தாத்தா இறந்தபோது எழுதிவைத்த உயிலில், தனது நண்பர் கிருஷ்ணமூர்த்தி இறந்தால் தனது கல்லறைக்கு அருகிலேயே அவரையும் புதைக்க வேண்டும் என எழுதியிருக்கிறார். ஆனால், கிருஷ்ணமூர்த்தி இறந்தபோது பலரது எதிர்ப்பால் அது நடக்கவில்லை.

அதன் பிறகு, காலத்தின் சுழற்சியால் டெஸியின் குடும்பம் இங்கிலாந்து சென்றுவிட்டது. டெஸியின் அம்மா அவருக்கு கிருஷ்ணமூர்த்தி பற்றி நிறையச் சொல்லி இருக்கிறார். அவர் தனக்கு இன்னொரு தகப்பன் என்றாராம். தான் வாழ்வதே அவரால்தான் என நெகிழ்ந்தாராம். மறுபடியும் அவரைப் பார்க்க முடியவில்லையே என வருந்தினாராம். அவரும் ஒரு நாள் தவறிவிட்டார். இப்போது இத்தனை வருடங்கள் கழித்து, பணம் சேர்த்துக்கொண்டு சென்னைக்கு வந்திருக்கிறார் டெஸி. அப்போது நான் விகடனில் நிருபராக வேலை பார்த்தேன்.

பிரிட்டிஷ் ராணுவத்தினருக்கான கல்லறைத் தோட்டத்தில் வேலை பார்க்கும் நண்பர் ஒருவர் மூலம் இந்த விஷயத்தைக் கேள்விப்பட்டு, இதை விகடனில் எழுதலாம் என்று போனேன். அப்போது கிருஷ்ணமூர்த்தி அடக்கம் செய்யப்பட்டு இருந்த இடுகாட்டைக் கண்டுபிடித்து அங்கு உட்கார்ந்து இருந்தார் டெஸி. அவரிடம் பேசியபோது, ‘‘கிருஷ்ணமூர்த்தி சாருக்கு ஒரு தேங்க்ஸ் சொல்றதுக்குத்தான் இங்கே வந்தேன். இது எங்க குடும்பத்தோட பாக்கி..." என்றார் நெகிழ்வுடன். பத்திரிகையில் எழுதுவதற்காகக் கேட்டபோது மறுத்துவிட்டார். ‘‘இது எங்கள் நன்றியுணர்வு... இதைப் பேச விரும்பலை" என்றார்.

இத்தனை வருடங்களுக்குப் பிறகு, இத்தனை தூரம் கடந்து, எப்போதோ இறந்துபோன ஒருவருக்கு ஒரு தேங்க்ஸ் சொல்வதற்காக வந்திருந்த அவரைப் பார்க்க எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. யாரோ ஒரு வெள்ளைக்காரப் பேத்திக்கும் எப்போதோ செத்துப்போன ஒரு தமிழருக்கும் நடுவே சாகா வரம் பெற்றிருக்கும் அந்த ஒரு நன்றியை என்னவென்று சொல்வது?

போரூர் இடுகாட்டில் டெஸி வைத்துவிட்டுப்போன அந்தப் பூங்கொத்து, எந்தக் காலத்திலும் காயாமல் நன்றியின் ஈரம் மினுங்க உயிர்த்து இருக்கும்தானே?!

எங்கிருந்தோ ஒரு தேங்க்ஸைச் சுமந்துகொண்டு இப்படி வந்து நிற்கிறார் ஒருவர். எனக்கு இந்தக் கணம், ‘எவ்வளவு பேருக்கான நன்றியை நான் சொல்லாமல் வைத்திருக்கிறேன்?’ எனத் தோன்றுகிறது. இன்குபேட்டரில் ஒரு வாரம் என்னை வைத்து உயிர் தந்த பெயர் தெரியாத செவிலித்தாயில் இருந்து முந்தாநாள் ஆதம்பாக்கத்தில், நான் தேடிய முகவரிக்கு வழி சொல்லிவிட்டு தள்ளாடிக் கடந்துபோன முதியவர் வரை எவ்வளவு பேருக்கான நன்றிகள் பகிரப்படாமல் எனக்குள் கிடக்கின்றன?



**இ** த்தனை வருடங்களுக்குப் பிறகு பத்மா டீச்சரைப் பார்க்கப் போயிருந்தேன். ‘‘ரிட்டையர்மென்ட் ஃபங்ஷனுக்கு நீ வரலைல்ல கழுத..."— மஞ்சள் பூசிய முகத்தில் மலர்த்திப்போடும் அதே சிரிப்பு. முந்திக்குள் மறைத்துவைத்து மேரி பிஸ்கட் கொடுத்த அந்தக்

கைகளை இறுக்கி ஒரு முத்தம் கொடுக்கலாம் எனத் தோன்றியது. ‘தேங்க்ஸ் டீச்சர்...’ என்றபடி மடியில் படுத்துக்கொள்ளலாம் எனப் பொங்கியது. ‘‘நல்லாருக்கீங்களா டீச்சர்..?" எனக் கேட்டுவிட்டு வந்துவிட்டேன். பல நேரங்களில் நன்றியை எப்படிச் சொல்வது என்றே தெரியவில்லை.

இப்படித்தான் விமலா அத்தையை ரயிலேற்றிவிடப் போகிற வரைக்கும் ஒரு கணம் கையைப் பற்றி, ‘தேங்க்ஸ் அத்த...’ எனச் சொல்லிவிடத் தவித்தது மனசு. இன்னோர் அம்மா மாதிரி இருந்தவள். வளர்ந்த பிறகு, அன்பையும் நன்றியையும் பகிர்ந்துகொள்வதே பெரும் பிரயத்தனமாகிவிடுவது எவ்வளவு பெரிய துயரம்? ஓடிப்போய் பிஸ்கட்டும் வாட்டர் பாட்டிலும் வாங்கி வந்தேன். ‘‘மொபைல் டாப்அப் பண்ணிவிடவா... தஞ்சாவூர்ல எறங்கி மறக்காமக் கூப்பிடுத்த..." என்றேன். அதிகாலையில் எழுந்து சாணி அள்ளி, நாலைந்து மாடுகளில் பால் கறந்து, டிப்போ போய்விட்டு, சமைத்து முடித்து, நாளெல்லாம் உழைத்து, எப்போதும் ஏனங் கழுவிய வாசத்தோடு, ‘‘வாடா முருகா..." என அழைக்கும் மாறவே மாறாத அந்தப் பாசக்காரிக்கு என்ன நன்றி செய்துவிட்டேன் நான்..?

நள்ளிரவுக்கு மேல் கதவு தட்டினாலும், ‘‘எரும மாடே... சாப்பிட்டுப் படு..." எனத் தோசை சுட்டுக் கொடுக்கும், சித்தப்பா ஆஸ்பத்திரியில் இருந்தபோது இரண்டு நாட்களாய்ச் சாப்பிடாமல் கிடந்தபடி, ‘‘நீ போய்ச் சாப்பிட்டு வா..." எனக் கசங்கிய ரூபாயை நீட்டும் சாந்தி சித்திக்குத்தான் என்ன செய்துவிட்டேன்..?

அது சரி... நன்றி என்பதைச் சொல்லிவிட்டால் போச்சா..? அது வெறும் வார்த்தைதானா..? 10 வருடங்களுக்கு முன்பு, ஒரு ராத்திரி அப்பா என்னை தனியே அழைத்துப் போய், ‘‘ஒனக்கு எவ்வளவு சம்பளம்னு எனக்குத் தெரியாது... தெரியவும் வேணாம். எனக்கு நீ காசு பணம்லாம் தர வேணாம்ப்பா. ஒங்கம்மா பேருக்கு மாசம் ஒரு ஆயிரம் ரூபாய் அனுப்பி வையி... அவளுக்கு ஒரு பொடவ வாங்கியாந்து தா... அவளுக்கு அது சந்தோஷமாயிருக்கும்..." என்றார்.

பணமும் பொருளுமா அது? அது அன்பின், நன்றியின் இன்னொரு வெளிப்பாடு. தீர்க்கவே முடியாத நன்றிகளால்தான் நம் ஒவ்வொருவருக்குமான உலகம் உயிர்த்திருக்கிறது! யார் என்ன என்றே தெரியாமல் நம்மைத் தொட்டுத் தூக்கிய இதயங்கள் எவ்வளவு இருக்கின்றன. வலிகளோடும் தழும்புகளோடும் அணைத்துச் சிரித்த அண்ணன்கள் மட்டும் இல்லையென்றால், நானெல்லாம் என்னவாகியிருப்பேன்..? அன்பாலும் கண்டிப்பாலும் இந்தப் பாதையைப் போட்டுத்தந்த அண்ணன்களுக்கு என்ன நன்றி செய்துவிட முடியும்..?

இந்த வாழ்க்கையே அவர்களுக்கான நன்றிதான் எனத் தோன்றுகிறது. ‘இயற்கைக்கு நன்றி சொல்வதென்றால், ஒரு மரக்கன்றை நடுங்கள்’ என்பது எவ்வளவு உண்மையான வார்த்தைகள்! பொங்கல் நாளிலும் அறுவடை நாளிலும் ஒரு கொத்து நெற்கதிரைத் தூக்கிக்கொண்டு, வானத்தைப் பார்த்து, ‘‘அப்பனே முருகா... அய்யனாரப்பா... நன்றிடா... நன்றிடா..." என அப்பா வேண்டுவது நினைவில் சித்திரமாகவே இருக்கிறது. கடவுளுக்கும் இயற்கைக்கும் நன்றியும் காணிக்கையும் செலுத்துவதுதானே நமது மரபும் மனசும்.

‘‘இது நன்றி கெட்ட ஜனம்ப்பா... காமராஜரைத் தோக்கடிச்ச நன்றி கெட்ட நாடுதானேப்பா இது..." என்பார் கருப்பு பெரியப்பா அடிக்கடி. ஒரு முறை அவர் இப்படிச் சொன்னபோது சத்தியமூர்த்தி தாத்தா சொன்னது எப்போதும் எனக்கு மறக்காது, ‘‘ஜனங்களை அப்பிடிச் சொல்லாத கருப்பு. இப்பவும் ஒரு பூகம்பம், சுனாமி, புயல்னா முடிஞ்சவரைக்கும் உதவறதும் போய் நிக்கறதும் இதே ஜனம்தானே? உதவி, நன்றிங்கற வார்த்தைக்கு எல்லாம் அர்த்தமே தெரியாம அதைச் செய்றவன் இன்னும் ஊர் ஊருக்கு நெறையப் பேர் இருக்கான். மேல இருக்கறவனும் புத்திசாலிகளும்தான் இதுக்கு எல்லாம் அர்த்தம் தேடித் தொங்கிட்டிருக்கான். சாதாரண ஜனம் எவ்வளவோ பேர் எதுவும் அறியாம இதுக்கெல்லாம் அர்த்தமாவே வாழ்ந்துட்டு இருக்கான்."

எவ்வளவு உண்மை! பேருந்தில் முடியாதவர்களுக்கு இடம் கொடுப்பதில் இருந்து, ஒரு கோடி விழுந்த லாட்டரியை உரியவருக்கே

திருப்பிக் கொடுத்துவிட்டு, ஒரு நன்றியை மட்டும் வாங்கிக்கொண்டு போனவர் வரை எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?

நள்ளிரவில் அப்போலோ மருத்துவமனைக்கு வந்து 50 ஆயிரம் ரூபாய் கொடுத்துவிட்டு, ‘‘தேங்க்ஸ் சார்..." என்ற வார்த்தைக்கு, ‘‘ச்சீ... என்னடா நீ..." என்கிற அன்பர்களை... வழியில் விபத்துக்குள்ளாகிக் கிடந்தவர்களைக் கொண்டுபோய் ஆஸ்பத்திரியில் சேர்த்துவிட்டுக் காத்திருப்பவர்களை... வாங்கிய சாப்பாட்டைப் பகிரும் நண்பர்களை... மொபைலில் ரத்தம் கேட்டுவரும் மெசேஜ்களுக்கு ஓடிப்போய் நிற்பவர்களை... பொது இடங்களில் யாரையேனும் யாராவது அநியாயமாக அடிக்கும்போது கொந்தளித்து அவர்களை மீட்பவர்களை... வழியில் பரிதவிப்பவர்களுக்கு லிஃப்ட் கொடுப்பவர்களை... மார்ச்சுவரி வாசலில் கதறிக்கிடக்கும் யாரென்றே தெரியாத பெரியம்மாவுக்குச் சாப்பாடு வாங்கி வந்து, அமரர் ஊர்தி பிடித்துத்தந்து, வீடு வரைக்கும் சேர்த்துவிட்டு வருகிறவர்களை... இன்னும்... இன்னும்... நன்றி என்ற வார்த்தைக்கு உயிர் கொடுத்துக்கொண்டு எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?

‘அன்புக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று நன்றி... இன்னொன்று துரோகம்’ என்பார் எஸ்.பொ. அய்யா. இதுதான் இந்த உலகமாக இருக்கிறது.

**வெ** கு நாட்களுக்குப் பிறகு, சசியை ஸ்பென்சரில் பார்த்தேன். தஞ்சாவூர்க்காரன்; நண்பன். கூடவே ஒரு பெண் இருந்தாள். ‘‘ஸாரி முருகா... எனக்குக் கல்யாணமாகிடுச்சு. உனக்கெல்லாம் சொல்ல முடியலை. ரொம்பப் பிரச்னைக்கு நடுவுல நடந்துச்சு... இதான் என் ஒய்ஃப். விசாலியை உனக்குத் தெரியும்ல..." என்றான். அந்தப் பெண்ணைப் பார்த்ததும்தான் நினைவுக்கு வந்தது. ‘‘டேய்... சிவராமன் சார் பொண்ணுல்ல..." என்றேன். ‘‘ஆமாண்டா... நாங்க லவ் பண்ணோம். தெரிஞ்சா, அவர் ஒப்புக்கவேமாட்டார்னு தெரியும். அதான் வெளில வந்து நாங்களே கல்யாணம் பண்ணிக்கிட்டோம்..." என்றான்.

‘‘அப்புறம் என்னாச்சு..?"

‘‘இன்னும் அவர் சமாதானமாகலை... நாங்களும் எவ்வளவோ ட்ரை பண்ணிப் பாத்துட்டோம்..." என்றான்.

சசி, தாய்—தந்தை இல்லாதவன். அம்மாவும் அப்பாவும் போன பிறகு, அவனது எதிர் வீட்டுக்காரரான சிவராமன் சார் இவனைத் தன் வீட்டிலேயே வைத்துக்கொண்டார். அவர்தான் இவனைப் படிக்க வைத்தார். அவர் வீட்டில்தான் அவனை நான் பார்த்திருக்கிறேன். அவர் மகளைத்தான் இவன் லவ் பண்ணி, கல்யாணம் பண்ணிக்கொண்டு வந்துவிட்டான்.

அதன் பிறகு, தஞ்சாவூர் போனபோது சிவராமன் சாரை யதேச்சையாகச் சந்தித்தேன். பார்த்த அடுத்த கணமே, ‘‘கேள்விப்பட்டியா... ஒன் ஃப்ரெண்டு பண்ண காரியத்தை. நன்றி கெட்ட நாயி, நன்றி கெட்ட நாயி..." எனக் கதறத் தொடங்கிவிட்டார். மறுபடி மறுபடி... ‘நன்றி கெட்ட நாயி...’

சசிக்கு இதை போன் பண்ணிச் சொன்னேன். ‘‘என்ன பண்றது நண்பா... எவ்வளவோ ட்ரை பண்ணிட்டோம். அவரைச் சமாதானப்படுத்த முடியலை. இனிமே அவருக்கு நான் காட்ற நன்றிங்கறது, அவர் பொண்ணை நல்லாப் பார்த்துக்கறதுதான்..." என்றான்.

நன்றி நினைத்தல், நன்றி மறத்தல் என்ற இரண்டு முனைகளுக்கு நடுவேதான் பல உயிர்கள் அலைகின்றன. ஏற்றிவிட்டவனை மறந்துவிடுவது, கூட இருந்தே துரோகிப்பது, நம்பியவனைக் கை கழுவுவது என நன்றி மறத்தலில் காயங்களும் எங்கெங்கும் இருக்கின்றன!

**‘உ**திரி குமார்’ தெரியுமா உங்களுக்கு..? கோயம்பேடு மார்க்கெட்டில் ‘உதிரி குமார்’ என்றால் அவ்வளவு பிரபலம். வெளியூர்க்காரன். மார்க்கெட்டிலேயே உண்டு, உறங்கி, எழுந்து காய்கறி வியாபாரம் பார்த்து வந்தான். மார்க்கெட்டில் வேலை பார்க்கும் நண்பர் ஒருவர் மூலம்தான் ‘உதிரி குமார்’ எனக்குப் பழக்கம். எப்போது பார்த்தாலும் சரக்கடித்துவிட்டு ஒரு நாயுடனேயே திரிவான். ஒரு முறை

அவனிடம் ‘‘என்ன கொமாரு, இந்த நாயி மேல இப்பிடி ஒரு லவ்வு..." என்றதற்கு, ‘‘தலைவா... நாய்தான் நன்றியோட இருக்கும். பொண்டாட்டி, புள்ள, ஃப்ரெண்டுனு எந்த மனுஷன்ட்டயும் ப்யூரா அதை எதிர்பார்க்க முடியாது. மனசுல வெச்சுக்க..." எனச் சிரித்தான்.

ரொம்ப நாளைக்குப் பிறகு மார்க்கெட் போனபோது கண்ணீர் அஞ்சலி போஸ்டரில் ‘உதிரி குமார்’. எனக்குப் பகீரென்றது. ‘‘எப்பிடிங்க... என்னாச்சு..?" என்றேன் நண்பரிடம். ‘‘அய்ய... அது அவன் கூடவே சுத்திட்டு இருந்துச்சுல்ல ஒரு நாயி... அது கடிச்சுத் தொலைஞ்சுருச்சு. வெளாட்டுப் போக்குலயே வுட்டுட்டான். ரேபீஸ் அட்டாக் ஆகி ஆளே போயிட்டான். அய்ய்ய்ய... கொடுமைங்க... அவனே கொஞ்சம் கொஞ்சமா நாய் மாதிரி மாறி ரொம்பக் கஷ்டப்பட்டுப் போய்ச் சேர்ந்தான்..." என்றார் நண்பர். அஞ்சலி போஸ்டரில் சிரித்த ‘உதிரி குமா’ரைப் பார்க்க அதிர்ச்சியாக இருந்தது.

சொல்லப்படாத நன்றிகள் ஒரு நதியாகவும் நாம் அதன் கரை மேல் நகர முடியாத மரங்களாகவும் இருந்துகொண்டே இருக்கிறோம். ஒரு காற்றில் நதியில் பூ கொட்டினால்கூடப் போதும். ‘நீ பார்த்த பார்வைக்கு ஒரு நன்றி...’ என கீர்த்தனாவை நினைத்துக்கொள்ளும்போது எல்லாம் ஒரு காற்று அடித்து கொஞ்சம் பூ கொட்டுகிறது.

யாரோ ஒரு பெயர் தெரியாத ஓவியன், தென்னந்தோப்பும் ஓட்டு வீடுமாக ஓர் ஓவியத்தை இப்போது புதிதாகப் போன தெருச் சுவரில் வரைந்துவிட்டுப் போய்விட்டான். அவனைத் தேடி ஓடி, ‘‘ஹலோ! சூப்பரா வரையறீங்க... தேங்க்ஸ்ங்க..." என்றால், வாய் கோணிச் சிரித்துவிட்டுப் போய்விட்டான். ‘‘அவன் கொஞ்சம் கிறுக்கு சார்..." என டீக்கடைக்காரர் சிரிக்கிறார். அவன் அந்த தேங்க்ஸை எடுத்துக்கொண்டானா தெரியவில்லை. அவன் போய்விட்டான். நாம் அந்தத் தெருவிலேயே நிற்கிறோம்... ஏராளமான நன்றிகளோடு!

43

# இ(எ)துவும் கடந்து போகும்!

**பா**ண்டிச்சேரி அரவிந்தர் ஆசிரமம் போயிருந்தேன். மலர்கள் குவிந்த சமாதியின் அருகில் அமர்ந்தேன். எனக்குள் மௌனத்தின் இசை. சதா இரைந்துகொண்டே இருக்கும் மனம், வெறுமையாய்க் கிடக்கும் அபூர்வ கணங்கள் எவ்வளவு அழகானவை.

சட்டென்று, 'அடப் போங்க பாஸு... நம்மட்ட ஒண்ணுமே இல்ல பாஸு' என்பதை ஆத்மார்த்தமாக உணரும் பொழுதுகள் எவ்வளவு நிம்மதியானவை. மொந்தை பேக்குகள், ரோலிங் சூட்கேஸ்களுடன் ரயில்வே ஸ்டேஷனில் கம்பார்ட்மென்ட் தேடி அலைபாயும் ஆசாமியைப் போலத்தானே இருக்கிறது வாழ்வு.

ரயில் படிக்கட்டில் உட்கார்ந்துகொண்டு, எந்த இலக்கும் இல்லாமல் எதிர்க் காற்றுக்கு முகம் கொடுக்கும் மனசு, என்றாவது ஒரு நாள்தானே வாய்க்கிறது.

எனக்கு எதிரே ஒரு வெள்ளைக்காரப் பெண்மணி கண்கள் மூடி ஏதோ முணுமுணுத்தபடி இருந்தார். தூரத்தில் எங்கோ பலர் சேர்ந்து,

*'ஜீவன் என்னும் ஜோதியில் கலந்து*
*சிந்தை எங்கும் தெய்வத்தின் விருந்து*

*காலை மாலை இரவிலும் நினைந்து*
*கருணை என்னும் மழையினில் நனைந்து'*

எனப் பாடுகிற குரல்கள் பூத்து உதிர்கின்றன.


வெளியே வந்தபோது, காலணிகள் விடுகிற இடத்தில் வாசிகா மேடம். ''ஏய் முருகா... எப்போ வந்த?'' என சட்டெனக் கைகளைப் பற்றிக்கொண்டார். என்னை உற்றுப் பார்த்துவிட்டு, ''ஏய்... ரொம்பத் தெளிவாயிட்டியே... போன தடவை பார்த்ததைவிட... குட்...'' என அணைத்துக்கொண்டார். ஆறு வருடங்களுக்கு முன்பு இதே பாண்டிச்சேரியில் வாசிகா மேடம் என்னைப் பார்த்த கோலம்... அவ்வளவு கேவலமானது!

ஆறு வருடங்களுக்கு முன்பு இதே பாண்டிச்சேரியில் கீர்த்தனாவோடு அவ்வளவு அழகான ஒரு நாள் வாய்த்து இருந்தது. இதே அரவிந்தர் ஆசிரமத்தில் கைகள் கோத்து அமர்ந்து, கடற்கரையில் ஏராளமாய்க் கதைத்து, கீ செயின்கள், கிளிஞ்சல்கள் பரிசளித்து, ஃபிரெஞ்சு உணவகங்களில் சாப்பிட்டு, குளிரும் இருளும் பரவிய பெரும் முற்றம் கொண்ட வீடு ஒன்றில் பாவைக்கூத்து பார்த்து, நள்ளிரவு அரசுப் பேருந்தில் தோளில் முகம் புதைந்து சென்னை திரும்பிய ஒரு நாள்.

காதல் முறிந்து கீர்த்தனாவைப் பிரிந்த பிறகு, துயரம் துரத்தியடித்த இன்னொரு நாளும் இதே பாண்டிச்சேரியில்தான் வாய்த்தது. காதல் பிரிவும் இன்னும் ஏதேதோ கழிவிரக்கங்களும் சுழற்றியடிக்க... இரண்டு நாட்கள் குடித்துக் குடித்து, தெருத் தெருவாகச் சுற்றினேன். பஸ் ஸ்டாண்ட் பக்கம் பாரில் யாரோ ஒருவனுடன் சண்டையிட்டுப் புரண்டு, கடற்கரை மணலில் உருண்டு, நள்ளிரவுக்கு மேலும் ஆட்டோவில் எங்கெங்கோ திரிந்து... நினைக்கவே திகிலடிக்கிற பொழுதுகள் அவை.

அடுத்த நாள் பகலில் போதை எகிறி, அரவிந்தர் ஆசிரமம் முன் அத்தனை அழுக்காக மட்டையாகிக் கிடந்தபோதுதான் வாசிகா மேடம் அவரது வீட்டுக்கு அழைத்துப்போனார். குளிக்க வைத்து, புது டிஷர்ட்

எடுத்துத் தந்து, என்னைப் பற்றி எல்லாவற்றையும் கேட்டு, நிறையப் பேசி, கை நிறைய அரவிந்தர் பற்றிய புத்தகங்களையும் சி.டி—க்களையும் கொடுத்து அனுப்பி வைத்தார். அப்போது கடைசியாக அவர் சொல்லியனுப்பிய வார்த்தைகள் இப்போதும் எனக்கு அசரீரி மாதிரி கேட்கிறது... ''இதுவும் கடந்து போகும்... புரியுதா?''அதன் பிறகு, பாண்டி போகும்போது எல்லாம் அவரைப் பார்த்துவிடுவேன்.



இதோ ஆறு வருடங்களுக்குப் பிறகு அற்புதமான மனநிலையில், ‘இதுவும் கடந்து போகும்’ என அவர் சொன்ன வார்த்தைகளின் அர்த்தத்தை முற்றிலும் புரிந்தவனாக, தெளிந்தவனாக அவர் முன் நிற்கிறேன்.

எவ்வளவு உண்மையான வார்த்தைகள்... 'இதுவும் கடந்து போகும்...' என் வாழ்க்கையில் மிக அதிக முறை எனக்கு நானே சொல்லிக்கொள்கிற சொற்கள் இவைதான். எல்லோருக்குமான, எப்போதைக்குமான வார்த்தைகள்.

'அஞ்சு ரூபா இருந்தா ரெண்டு இட்லியாவது சாப்பிட்டுக்கலாம்...' எனக் கையில் காசில்லாமல் பசியோடு எங்கே திரிந்தேனோ... அங்கேயே மிகப் பெரிய ஹோட்டலில் ரூம் போட்டு, விதவிதமாய் சாப்பாடு தந்து, ஏ.ஸி. காரில் அழைத்துச் செல்லப்பட்ட பொழுதும் வந்தது.

விகடனில் வேலை பார்த்தபோது, ''யப்பா! சாரை ஜீப்லயே கொண்டுபோய் வீட்ல விட்டு வா...'' என டி.சி. சொன்ன தருணம் இருந்தது. வேலையைவிட்ட பிறகு, சந்திரா பவன் சிக்னலில் ஒரு பிசாத்து கான்ஸ்டபிள் மடக்கி, ''வுட்டன்னா மூஞ்சி பேந்துரும்... வண்டிய ஆஃப் பண்றா...'' என அதிகாலை வரை ஸ்டேஷனில் குந்தவைத்த தருணமும் வந்தது.

ஃபுல் பாடி செக்கப் பண்ணிவிட்டு ரிசல்ட்டுக்காகக் காத்திருக்கும் கணங்களில், 'கேன்சர் வரைக்கும் இருக்குமோ...' எனப் பயத்தில் அலறிய மனசு, ''எல்லாமே நார்மல்ங்க... நல்லா சாப்பிட்டு ரெஸ்ட் எடுங்க. வைட்டமின் டேப்ளட்ஸ் மட்டும் எழுதித் தர்றேன்...'' என டாக்டர் சொன்னதும் சட்டென்று தெம்பாகிவிடுகிறதே... 'இனி எப்படி இருக்கப்போகிறோம்' எனக் குலைத்துப் போட்ட மரணங்களும் பிரிவுகளும் கடந்துபோய், நம்முன் புதிய மனிதர்களோடும் கனவுகளோடும் விடிந்துகொண்டே இருக்கின்றதே நாளை.

**த** ஞ்சாவூர் பழைய பஸ் ஸ்டாண்ட் காய்கறி மார்க்கெட் பக்கம் உள்ள டீக்கடை ஒன்றில்தான் ஜெகந்நாதனைப் பார்த்தேன். வாழ்வில் நான் பார்த்த விசித்திரக் காட்சிகளில் அதுவும் ஒன்று. பளபளவென மன்னர் கெட்டப் உடையலங்காரங்களுடன் தலைப்பாகை வைத்துக்கொண்டு பெஞ்ச்சில் உட்காந்து டீ குடித்துக்கொண்டு இருந்தார் ஜெகந்நாதன். 'ஏதோ டிராமா ஆர்ட்டிஸ்ட்போல. பக்கத்தில் எங்காவது நாடகம் முடித்து வருகிறார்' என்று நினைத்துக்கொண்டேன்.

அவர் ரொம்பவே கேஷுவலாக டீயைக் குடித்துவிட்டு, உறைவாள் வைக்கிற பகுதியில் இருந்து சில்லறையை எடுத்துக் கொடுத்துவிட்டு கம்பீரமாக நடந்து போனார். மற்றவர்கள் அவரை ஒரு பொருட்டாகவே பார்க்கவில்லை. இன்னொரு நாள் பார்த்தால் அதே கெட்டப்பில் ஒரு கடையில் உட்கார்ந்து, தலைப்பாகையைக் கழட்டிக் கையில் வைத்தபடி சர்பத் கேட்டுக்கொண்டு இருந்தார். ''சர்பத்தெல்லாம் இல்ல... கெளம்புங்க... கெளம்புங்க..." எனக் கடைக்காரர் டென்ஷனாக, எனக்கு அவரைப் பற்றி சந்தேகம் வந்தது.

''அட... அவரு கொஞ்சம் லூஸுப்பா... அவங்க குடும்பம் மன்னர் பரம்பரைல வந்த குடும்பம். அவங்க கொள்ளுத் தாத்தா வரைக்கும் அரண்மனை ஜோர்ல இருந்தவர்தானப்பா... அப்புறம்தான் எல்லாம் போச்சே. இந்தாளு இன்னமும் தன்னை மன்னர்னே நெனைச்சுட்டு சுத்துறாரு. எப்போ பார்த்தாலும் போன ஜென்மத்துல நான்தான் ராஜேந்திர சோழன்னு சொல்வாரு. குடும்பத்துல எவ்வளவோ பண்ணிப் பார்த்துட்டாங்க... ஒண்ணும் நடக்கல. அவங்க வூட்ல இருந்த இந்தத் துணிமணிகளை எடுத்துப் போட்டுக்கிட்டு இப்பிடிக் கெளம்பிடுறாரு..." என்றார் அந்தக் கடைக்காரர். அதன் பிறகும் அவரை இதே கெட்டப்போடு அங்கங்கே பார்த்திருக்கிறேன்.

ஒரு முறை, சொந்தக்காரர் கல்யாணத்துக்குப் போயிருந்தேன். அதிகாலையில் காய்கறி வாங்குவதற்காக தஞ்சாவூர் மார்க்கெட்டுக்குப் போனபோது, அதே ஜெகந்நாதனைப் பார்த்தேன். ஆச்சர்யமாக இருந்தது. வேட்டி, பனியனோடு வாழை இலைக் கட்டுகளைத் தூக்கி மினி பஸ் மேல போட்டுக்கொண்டு இருந்தார். ஏதோ சத்தமாகப் பேசி ஜோக் அடித்துச் சிரித்தபடி டீ குடித்தார். ''டேய்... மன்னர் டிரெஸ்ல சுத்துவாப்லயில்ல... ஜெகந்நாதன்... அவர்தான். கரெக்ட்டாயிட்டாப்ல... அதையெல்லாம் விட்டுட்டு இப்போ இங்க ரெகுலரா லோடடிக்கிறாரு..." என்றான் சேகர் அண்ணன். அவரைப் பார்க்கும்போது, 'இதுவும் கடந்து போகும்' என்பதற்கு ஜென்மாந்திரச் சின்னம்போல் இருந்தார்.

**இ** ப்படித்தான் திருச்சியில் கேசவனை பரோட்டா மாஸ்டராகப் பார்த்தபோதும் இருந்தது. திருச்சி பஸ் ஸ்டாண்ட் பக்கம் பிரமாண்டமான ஒரு பழைய வீடு கேசவனுடையது. 10 வருடங்களுக்கு முன்பு ஒரு விழாவுக்குப் போயிருந்தபோது மூன்று நாட்கள் அவனுடைய வீட்டில்தான் தங்கி இருந்தேன். ''இந்த வீடு மெட்ராஸ்ல இருந்துச்சுனு வையி... பல கோடி தேறும்" என்றதற்கு, ''அட போங்க சார்... அதெல்லாம் ஒரு ஊரா?" எனச் சிரிப்பான்.

கேசவன் சினிமா பிரியன். சத்யஜித் ரே முதல் கே.எஸ்.ரவிக்குமார் வரை அலசிப் பிழிவான். பார்த்த படங்களை நுணுக்கமாகப் பிரித்துப் பிரித்துப் பேசுவான். அதில்தான் அவனுக்கும் எனக்கும் நெருக்கம். அவ்வப்போது போன் பண்ணுவான். தற்போது, அவன் வீடு இருந்த இடத்தில் ஒரு ஹோட்டல் வந்திருக்கிறது. அதில்தான் கேசவன் பரோட்டா மாஸ்டர். எனக்கு அதிர்ச்சி தாங்கவில்லை.

''ஏய்... என்னாச்சு கேசவா?" என்றால் படுகூலாகச் சிரித்தபடி, ''பெரிய கடன்ங்க... ஒண்ணும் பண்ண முடியலை. அதான் வீட்டை வித்தாச்சு... ஏற்கெனவே கல்யாண சமையல் வேலைக்கு எல்லாம் போயிருக்கேன். பழகிட்டா, எல்லாம் தெரிஞ்ச வேலைதான் சார்..." என்றவன், கடைசியாகச் சொன்னான், ''அந்த வீடு எங்க பரம்பரைச் சொத்து. நானா சம்பாரிச்சு வாங்கினேன்? இப்போ இப்பிடி இருக்கறதும் நானா நெனைச்சு பண்ணேன்? அதுவா நடக்குது... நாம உழைப்போம் சார்... இதுவும் கடந்து போகும்... என்ன சொல்றீங்க?"

**கோ** டம்பாக்கத்தில் ஒரு க்ளினிக்கில் டாக்டரைப் பார்க்கக் காத்திருந்தபோது, எதிர் பெஞ்ச்சில் கையில் குழந்தையோடும் புருஷனோடும் ஒரு பெண் உட்கார்ந்து இருந்தாள். 'எங்கோ பார்த்திருக்கிறோமே' என நினைவில் இடறி, அப்புறம் அவள் பெயர் மனசுக்குள் வந்தது. இவளை எனக்கு நன்றாகத் தெரியும். முன்பு பாலியல் தொழிலில் இருந்தாள். பனகல் பார்க் பக்கம் இருந்து ஒரு நண்பன் இவளை அழைத்து வந்த இரவில், நான் தங்க வேறு அறை தேடி அலைய நேர்ந்தது. அதன் பிறகும் நாலைந்து முறை

பார்த்திருக்கிறேன். ‘எங்க... இதையெல்லாம் விட்டுத் தொலைக்கலாம்னா நடக்கமாட்டேன்னுது...’ என அலுத்துக் கொண்ட அவள் முகம் நினைவில் கலையாமல் இருக்கிறது.

இப்போது கழுத்தில் நைந்த தாலியோடு, கையில் குழந்தையோடு இந்த ஆஸ்பத்திரியில் உட்கார்ந்து இருக்கிறாள். முகம் தெளிந்திருக்கிறது. ஊசி போட்ட குழந்தையின் பின்னால் தேய்த்து விட்டபடி ‘‘அழாதரா... அழாதரா... ஜூஜூம்மா..." என அவள் போனதைப் பார்த்தபடி உட்கார்ந்துஇருந்தேன். அந்த வரவேற்பறையில் இருந்த தொட்டியில் அலைந்துகொண்டு இருந்த கலர் மீன்கள், சட்டென்று குதித்து தங்களுக்கான நதிக்குப் போய்விட்ட மாதிரி இருந்தது எனக்கு.

**அ** லுவலகத்தில் என்னைப் பார்க்க அரவிந்த் வந்திருந்தான்.

விபத்து ஒன்றில் வலது கை முழுக்கப் போய்விட்டது அரவிந்துக்கு. ஆக்ஸிடென்ட் ஆன மறுநாள் அவனை ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த்தேன். வலது கையை முற்றிலுமாக அகற்றியிருந்தார்கள். கண்களில் நீர் வழிய வழிய அப்படியே மௌனமாகக் கிடந்தான். இந்த மாதிரியான தருணங்களில் ஆறுதலான வார்த்தைகள் எவ்வளவு அபத்தமாகவும் ஆகிவிடும் என்பதை அறிவேன். என்ன சொல்வதென்றே தெரியாமல் அங்கிருந்து வந்தேன்.



ஏழெட்டு மாதங்கள்தான் இருக்கும் என நினைக்கிறேன். இப்போது அரவிந்த் வந்திருக்கிறான். ரிசப்ஷனில் உட்கார்ந்திருந்தவன் என்னைப் பார்த்ததும் துள்ளி எழுந்து வலது கையை நீட்டினான். எனக்குச் சட்டென்று ஆச்சர்யமாக இருந்தது. அவன் கையைத் தொட்டுப் பார்த்தேன். கட்டைக் கை. மிகக் கம்பீரமாக அந்தக் கையை வீசி அரவிந்த் சிரித்தான். சிறு சோகமும் தெறிக்காத சிரிப்பு. ‘‘நண்பா... அனிமேஷன் வொர்க்லாம் பண்ணித் தர்றேன். ஏதாவது புராஜெக்ட் இருந்தா சொல்லு..." — அவன் கை வீசி நடந்து சென்றதைப் பார்த்தபடி நின்றேன்.

‘இதுவும் கடந்து போகும்’ என்ற வார்த்தைகளில் இருந்து ஓர் எழுத்து நொறுங்கித் தூளாகி, இன்னோர் எழுத்து இறுகிச் சேர்ந்துகொண்டது... ‘எதுவும் கடந்து போகும்!’

# 44

# கோடை விடுமுறைக் கொண்டாட்டங்கள்!

**ஆ**றாம் வகுப்பு முடித்த கோடை விடுமுறையில் அத்தை வீட்டுக்குப் போயிருந்தேன்.

திருச்சி பக்கத்தில் ஒரு கிராமம். அங்கே எங்களுக்குச் சகலமும் சக்தி மாமாதான். அவர் வீடு இருந்தது பக்கத்து ஊரில். காலையிலேயே கிளம்பி சென்ட்டு போட்டுக்கொண்டு வந்துவிடுவார். எங்களையும் மெட்ராஸில் இருந்து வந்திருந்த குட்டி, தயா குரூப்பையும் புளியந்தோப்பு, மோட்டார் செட்டு, மாரியம்மன் கோயில், சர்பத் கடை என எல்லா இடங்களுக்கும் அழைத்துப் போவார் சக்தி மாமா. மெட்ராஸில் இருந்து வந்த அத்தையும் கூடவே வரும். சதா பொழுதும் ஒரே கொண்டாட்டமாகக் கழியும்.

நாங்கள் மோட்டார் செட்டில் தண்ணீரில் சேவண்டி அடிக்கும்போது, சக்தி மாமாவும் மெட்ராஸ் அத்தையும் வரப்பில் உட்கார்ந்து பேசிக்கொண்டு இருப்பார்கள். பெரிய மாமா வீட்டில் நாங்கள் ஒளிஞ்சாங்கண்டு விளையாடும்போது இவர்கள் ரேடியோவில் பாட்டு கேட்டுக்கொண்டு, நெல் கொட்டுகிற ரூமில் உட்கார்ந்து இருப்பார்கள்.

ஒரு முறை யாரும் பார்க்காத தருணத்தில் சக்தி மாமாவுக்கு வைத்த காபி டம்ளரை எடுத்து பாதி குடித்துவிட்டு மெட்ராஸ் அத்தை வைக்க, மாமா வந்து குறுகுறு சிரிப்போடு அதை எடுத்துக் குடித்தார். எனக்கு

இந்தக் காட்சிக்குப் பின்னால் இருக்கும் ‘ப்ளாப்ளா’ எதுவும் விளங்கவில்லை.

ஒரு நாள் காவேரி கலையரங்கத்துக்கு ‘நீயா’ படம் பார்க்க வண்டி கட்டி எல்லோரையும் அழைத்துப்போனார் சக்தி மாமா. தியேட்டரில் நடு சீட்டில் நான். இந்தப் பக்கம் சக்தி மாமா, அந்தப் பக்கம் மெட்ராஸ் அத்தை. நான் தீவிரமாகப் படம் பார்க்க, அடிக்கடி ‘‘மாப்ள... எடவேளைல ஒனக்கு என்ன வேணும்?" என்றபடி மாமா என் தலையைப் பிடித்துக் கீழே அழுத்துவார். படத்தில் பாம்பு என்ட்ரி ஆகிற சீனாகப் பார்த்து இப்படி நடக்க, எனக்குப் பயங்கர டென்ஷனாகும்.

‘‘க்ரீம் பன்னு வாங்கித் தரவா?" என்றபடி கூல் பண்ணுவார் மாமா. சொன்ன மாதிரியே இன்டர்வெலில் க்ரீம் பன், பன்னீர் சோடா என எனக்குப் பலமான கவனிப்பு. எனக்கு ஒன்றுமே புரியவில்லை. அப்போது ஏழாவது முடித்திருந்த சித்தார்த்தன்தான் சொன்னான், ‘‘டேய் தம்பி... தேட்டர்ல முத்தங் குடுத்துக் கிட்டாங்கடா... அவங்களுக்குள்ள டச்சிங் டச்சிங்!’’

ஊருக்குக் கிளம்புகிற நாளில், ரயில்வே ஸ்டேஷனில் எல்லோரையும் ரயில் ஏற்றிவிட்டு, கடைசி நிமிடங்களில், ‘‘டேய்... டேய்... இதைக் கொண்டுபோயி மெட்ராஸ் அத்தைட்ட குடுத்துட்டு வா..." என சக்தி மாமா என் கையில் எதையோ கொடுத்தார். அது ஒரு லெட்டரும் பாட்டு கேசட்டும். அதைப் பதற்றமாக வாங்கி சூட்கேஸில் வைத்துக்கொண்டது அந்த அத்தை. ரயில் போன பிறகு என்னை அழைத்து வந்து, ‘‘டேய்... இதையெல்லாம் யார்ட்டயும் சொல்லக் கூடாது சரியா..." என்றபடி பஸ் ஸ்டாண்ட் ஸ்வீட் கடை ஒன்றில் பாதுஷா வாங்கித் தந்தார் மாமா. இப்போதும் அந்த பஸ் ஸ்டாண்ட் பாதுஷா வாசம் கமழ்—கிறது.

அந்த ஒரு கோடைக்குத்தான் அந்த அத்தை வீட்டுக்குச் சென்றது. அந்த ஊரில் எங்கு பார்த்தாலும் நெல்லும் கரும்புச் சக்கையுமாகக் கிடக்கும். பெரிய வீடும், மோட்டார் செட்டும், சக்தி மாமா, மெட்ராஸ் அத்தையின் முகங்களும் மறக்க முடியாத ஒரு சினிமா!

**ஒ** ட்டக்குடி தாத்தா வீடு இப்போதும் ஒரு கனவு. எங்களது நிறைய கோடை விடுமுறைகள் அங்கேதான் கழிந்திருக்—கின்றன. பகலிலேயே இருள் பரவிக்கிடக்கிற எட்டுக்கட்டு வீடு. தாத்தா குதிரை வண்டியில்தான் போவார். ரெண்டு, மூணு குதிரைகள் வளர்த்தார். ஆத்துக்குக் கொண்டுபோய் குதிரைகளைக் குளிப்பாட்டி, அதற்கு கொள்ளு போட்டு, விதவிதமான மணி கட்டிய பெல்ட்டுகள் கட்டி... அதுவே எங்களுக்குப் பெரிய திருவிழாவாக இருக்கும்.

''ந்தா... கம்னாட்டி... எம் பேராண்டிக்கு ஒரு வித்தையக் காட்டு..." என தாத்தா இடம் பார்த்துத் தட்ட, குதிரை பெரும் சத்தத்தோடு முன்னங்கால்களைத் தூக்கிக்கொண்டு கனைக்கும். ''ம்ம்ம்... எப்பிடி வளர்ப்பு. அதுல ஏறி லகானப் புடிக்கிறதுக்கு... ந்தா... தாத்தா மாரி தெம்பு வேணாமா? நையினு கெடக்க... டேய் வெங்கிட்டு! எம் பேராண்டிக்கு டெய்லி ஒரு மரக் கள்ளா எறக்கி சாப்புடவையி... லீவு முடியறதுக்குள்ள ச்சும்மா கிண்ணுனு வரட்டும்..." என்பார் தாத்தா.

**தி** னமும் சாயங்காலம் ஆனால் ஆத்து மணலில் காட்டாமணக்கால் வீடு கட்டி, கூட்டாஞ்சோறு செய்து இருட்டும் வரைக்கும் விளையாடுவோம். ஒரு நாள் விளையாட்டுக்கு சுபா வரவில்லை.

''டேய் பீஸு... சுபாவைப் போய் அழைச்சுட்டு வாடா..."


''போடா... அவுங்கூட்டுக்குப் போனா, இனிமே இங்க வராதீங்கடானு அவங்கம்மா வையிறாங்கடா..."

''ஆமாடா... சுபா வயசுக்கு வந்துருச்சாம். இனிமே, அங்க போவக் கூடாதாம்ரா..."

மறுநாளே சுபா வீட்டில் விசேஷம். அதுவரை எங்களுடன் அராஜகம் பண்ணி விளையாடும் சுபாவை புதுப் பாவாடை, தாவணி கட்டி உட்கார வைத்திருந்தார்கள். விதவிதமாகக் கலந்த சாதங்களும் கலர் அப்பளமும் வைத்து விருந்து நடந்தது. ''அமித்தீஸ்வரம் ஆயி மவனா இது... எலேய்... என்னடா மொறப்பு... கட்னாலும் மூத்தவனுக்குத்தாம்ரா

சான்ஸு... ஒனக்கெல்லாம் கெடையாது. கொணசேகரன் பொண்ணு வெளையட்டும்ரா... ஒனக்குப் பாத்துருவோம்" என உத்திரங்குடி பெரியம்மா வெத்தலையைக் குதப்பிக்கொண்டு என் தொடையில் கிள்ளிவிட்டது.

முகமெல்லாம் சந்தனம் பூசிக்கொண்டு உட்கார்ந்திருந்த சுபாவிடம், ''இனிமே வெளையாட வரமாட்டியா..." என்றான் குரு. ''ஏன்... அதெல்லாம் வருவேனே..." என்றது கோபமாக. ஆனால், அதன் பிறகு சுபா விளையாடவே வரவில்லை.



ஒரு மாதம் கழித்து தாத்தா வீட்டுக்கு தூர்தர்ஷனில் 'ஒளியும் ஒலியும்' பார்க்க வந்தது. பார்வை, பேச்சு, சிரிப்பு எல்லாமே மாறிப்போயிருந்தன. ஒரே மாதத்தில் ஒரு பெண்ணால் எப்படிப் பெரிய

மனுஷியாகிவிட முடிகிறது? 15 வருட சாயல்கள் அத்தனையையும் கலைத்துப்போட்டுவிட்டு, சட்டென வேறு ஒருத்தியாக மாற எப்படி முடிகிறது? இந்த மாற்றம் நிஜமா... நாடகமா? இப்படி ஏராளமான கேள்விகளை எனக்குள் கிளறிவிட்டன அந்தக் கோடை விடுமுறை நாட்கள்.

கடைசியாக, தாத்தா வீட்டுக்குப் போன ஒரு கோடையில் அங்கே ஒரே ஒரு குதிரைதான் இருந்தது. அதுவும் சீக்கு வந்து கிடந்தது. அப்பாதான் வந்து தினமும் வைத்தியம் பார்த்துவிட்டுப் போவார். ராத்திரி அரிக்கேன் விளக்கைத் தூக்கிக்கொண்டு நாங்கள் நிற்க, அப்பா ஏதேதோ வைத்தியம் பார்ப்பார். எதுவும் பயன் இல்லாமல் ஒரு சாயங்காலம் அந்தக் குதிரையும் செத்துப்போனது. ஆற்றைத் தாண்டிய தாத்தாவின் வாழைக் கொல்லையில் போய் அதைப் புதைத்துவிட்டு வந்த ராத்திரி, மனப்பத்தாயத்தில் அப்படியே கிடக்கிறது.

**மு** தன்முதலாக நாங்கள் பார்த்த பெருநகரம் என்பது திருச்சிதான். ரயில்வேயில் வேலை பார்க்கிற சிவராஜ் சித்தப்பா திருச்சி சுப்ரமணிய புரத்தில் இருந்தார். மறக்க முடியாத சில கோடை விடுமுறைகள் அங்கே கழிந்தன. வேப்பம் பூக்கள் உதிரும் காம்பவுண்டில் உள்ள வீடு அது. பால் கொழுக்கட்டை, பணியாரம், நீர் உருண்டை என சாந்தி சித்தி தினமும் ஏதாவது பலகாரம் செய்து கொடுத்துக்கொண்டே இருக்கும்.

சித்தப்பா வீட்டுக்குப் பக்கத்து வீட்டில்தான் முதன்முதலில் அம்புலி மாமா புத்தகங்கள் கிடைத்தன. பழைய அம்புலி மாமா, கோகுலம், சிறுவர் மலர் புத்தகங்களை மொத்தமாகக் கட்டி வைத்திருப்பார்கள். காலையில் போனால் சாயங்காலம் வரைக்கும் கதைகள் படிப்பதிலேயே போகும். பீர்பால், மாயாவி, முல்லா, கிருஷ்ணர் கதைகள் என அற்புதமான உலகத்தை அருளியது அந்தக் கோடை விடுமுறை நாட்கள்.

சபீனா தியேட்டரில் ஜாக்கிசான் படம், துப்பாக்கித் தொழிற்சாலை, மலைக்கோட்டை, முக்கொம்பு என எல்லாமே அதிசயமாக இருந்த

அந்தக் கணங்கள் எவ்வளவு அற்புதமானவை!

சுப்ரமணிய புரம் ஏரியாவில் பன்றிகள் அதிகம். எங்கு பார்த்தாலும் நாலைந்து பன்றிகள் நின்று ‘உர்ர்... உர்ர்’ரெனப் பார்த்துக்கொண்டு இருக்கும். பாத்ரூமில் இருக்கும்போதுகூட பின்னால் இருந்து ‘க்ர்ர்ர்’ரென ஒருவர் எட்டிப் பார்ப்பார். அவ்வப்போது கார்ப்பரேஷன் வேனில் நாட்டுத் துப்பாக்கியோடு பன்றி வேட்டைக்கு ஆட்கள் வருவார்கள். அவர்களோடு சேர்ந்துகொண்டு வேனின் பின்னால் ‘‘ஹேய்ய்ய்..." எனத் தொங்கிக்கொண்டு பன்றி வேட்டைக்குப் போனதெல்லாம் மறக்க முடியாத ஆக்ஷன் ப்ளாக்!

ஒவ்வொரு கோடை விடுமுறையும் புதிய புதிய உலகங்களையும் எவ்வளவு சந்தோஷங்களையும் நமக்குத் தந்திருக்கின்றன. ஒவ்வொரு நண்பரிடமும் இதைப் பற்றிப் பேசும்போது அவர்கள் அப்படியே மலர்ந்துவிடுகிறார்கள். ‘‘உசிலம்பட்டில எங்க ஆத்தா வூட்டுக்குப் போவோம். தோப்புல கெணத்துலயே கெடப்போம்... ரமா புள்ளைய மறக்க முடியுமா..?" எனச் சொல்லும்போதே கண்களும் மனசும் விரிகிறது ஒருவருக்கு. ‘‘பம்மல்ல பெரிப்பா வீட்டுக்கு வருவோம். மொத மொதல்ல மெரினா பீச்ச பாத்ததே அப்பதான்..."

‘‘திருநெவேலில மதினி வூட்டுக்குப் போவோம்... அந்த வூடு முழுக்க பூனைங்க பாஸு... அவ்வளவு அழகான வீடு. கேரம் போர்டு, ரம்மி எல்லாத்தையும் கத்துக்கிட்டது ஃபிலோமினா கிட்டதான். கொரங்கு பெடல் சைக்கிளும் அதுதான் கத்துத் தந்துச்சு... இங்க பாருங்க... இந்தத் தழும்பு அப்ப வுழுந்து அடிபட்டதுதான்."

‘‘நைன்த் லீவுல ஈரோடு பக்கம் எங்க சின்ன தாத்தா ஊருக்குப் போனப்பதான் மொத டைம் செக்ஸ் புக்கையே பார்த்தேன் மச்சான்... ரைஸ் மில் மாமா ஒளிச்சுவெச்சுருந்த ‘சரோஜா தேவி’யை அவருக்குத் தெரியாம சுட்டுப் படிச்சுட்டு ஒரே டெரராகிருச்சு..."

‘‘லீவு முடிஞ்சு திரும்பும்போது பெரியத்தான் தஞ்சாவூருக்கு அழைச்சுட்டு போயி பாவாட சட்ட, வளையல்லாம் வாங்கித் தந்துதான்

அனுப்பும்... அந்த ஊர மறக்கவே முடியாதுப்பா..." என ஒவ்வொருவரிடமும் கோடை விடுமுறைப் பயணங்கள், மனசுக்குள் முணுமுணுக்கும் பிடித்த பாடல்களைப்போல் உள்ளே கிடக்கின்றன. புதிய ஊரை, உறவுகளை, அனுபவங்களை நமக்கு முதன்முதலில் கொண்டுவந்தது கோடைகள்தான்.

புளியம்பூ வாசம் சேமித்ததும், தொட்டாச்சிணுங்கி அறிமுகமானதும், வெட்கத்தில் விறைத்து பூ ஜாடிகள் வைத்த ஸ்டூடியோவில் போட்டோ எடுத்துக்கொண்டதும், பருவத்தின் முதல் குறுகுறுப்பை உணர்ந்ததும், கான்வென்ட் படிக்கிற பெண்ணைப் பார்த்ததும், காதலித்ததும், திருவிழாக்களில் தொலைந்ததும், தாழ்வுமனப்பான்மையில் தனித்து அழுததும், அன்பில் நனைந்ததும், வெயில் என்றால் என்னவென்றே உறைக்காமல் ஓடித் திரிந்ததும்... எல்லோருக்கும் ஏதோ ஒரு கோடை விடுமுறையில்தானே நடந்தது.

**அ** ப்போது பத்தாவது பரீட்சை ரிசல்ட் என்பது எங்கள் ஊரைப் பொறுத்தவரை ஓர் இடைத் தேர்தல். அவ்வளவு ரணகளமாக இருக்கும். காலையில் இருந்தே ஏகப்பட்ட பில்ட்அப்கள் அரங்கேறும். ஒருத்தனும் பாஸ் பண்ணமாட்டான். பிற்பகலில் கொரடாச்சேரிக்கு மாலை தினசரிகள் வந்துவிடும். பஸ் ஸ்டாண்ட், வெட்டாத்துப் பாலம், ரயில்வே கேட் என எங்கெங்கும் பையன்கள் நின்று பதற்றமாக பேப்பர் பார்ப்பார்கள். ஆளாளுக்கு உதட்டைப் பிதுக்கிக்கொண்டு, வீட்டுக்கு எப்படித் திரும்புவது எனத் தெரியாமல் திரிவார்கள். அப்படியே பாஸ் பண்ணினால்கூட, அதிகபட்சமாக 300 எடுத்தாலே அவன் கிங்குதான். அதிலும் எங்கள் குடும்பத்தில் பத்தாவது என்பது பூர்வகர்மாபோல் சுழட்டியடித்தது.

மூத்த அண்ணன் மூன்று அட்டைகள், அடுத்தவன் குரு இரண்டு அட்டைகள், மூன்றாமவன் சித்து சிக்ஸர் அடித்தும் களத்தில் கம்பாக நின்றான். ரிசல்ட் வருகிற அன்றைக்கு ‘‘என்னா... இந்த வருஷமும் மாட்டுக்குத் தண்ணிதானா? இன்னும் ரெண்டு செவலைய வாங்கிவுட்ரவா" என்றபடிதான் அப்பா வீட்டுக்குள் நுழைவார். (இதில்

நான் மட்டும்தான் அட்டை வாங்காமல் பார்டர் கட்டியவன் என்பது வரலாறு!)

எவ்வளவு அழகான அனுபவங்களை நமக்கு அறிமுகப்படுத்தின இந்தக் கோடை விடுமுறைகள். ‘‘மூணு நாள் ஊட்டி டூர் போயிட்டு வந்தோம்... பசங்களுக்கு ஸ்பெஷல் கிளாஸ்லாம் இருக்குல்ல..." என்கிறார்கள் நண்பர்கள். மால்களுக்கும் கம்ப்யூட்டர் கேம்ஸ்களுக்கும் போய்விட்டு வருவதோடு முடிந்துவிடுகின்றன அநேக பிள்ளைகளின் கோடை.

ஒரு மாதத்துக்கு முன் ஒரு நண்பரிடம், ‘‘ஏங்க... பிள்ளைங்களை அழைச்சுட்டு ஒங்க கிராமத்துக்குப் போயிட்டு வரவேண்டியது—தான..." என்றால், ‘‘அய்யோ... ஊர்ப் பக்கம் —எல்லாம் இப்ப பத்து மணி நேர கரன்ட் கட்டாம். அதான் இங்கயே இருந்துட்டோம்..." என்கிறார். ‘அற்புதமான கோடைகளை இந்தப் பிள்ளைகள் இப்படி மிஸ் பண்ணுகிறார்களே...’ என நினைத்தால் வருத்தமாக இருக்கிறது. உறவாடவும் விளையாடவும் கொண்டாடவுமாகப் பிள்ளைகளின் பருவங்களைப் பூத்துக் குலுங்கவிடுங்கள்.

**எ** ன் அண்ணன் மகள் பொன்மலர், யு.கே.ஜி. முடித்தாள். லீவு விட்டாச்சு. பக்கத்து ஃப்ளாட்டில் இருக்கும் ஒரு மலையாளக் குடும்பத்தில் இருந்து அந்தம்மா வந்து, ‘‘எம் பையன் சம்மர் கேம்ப் போறான்... அங்கே கிடார், கராத்தே, ஸ்விம்மிங், கிரிக்கெட்னு நிறைய கோர்ஸ் இருக்காம்" என்றார். பக்கத்தில் பாவமாக அந்தக் குட்டிப் பையன் நின்றான். அண்ணி பொன்மலரைப் பார்த்தது. உடனடியாக மறுத்த நான், ‘‘கொன்டேபுடுவேன்... ஊர்ல அவ்வளவு புள்ளைக கெடக்கும். ஒரு மாசம் ஆத்தா வூட்ல போய் இருந்துட்டு வாங்க..." என சாயங்காலமே ரயில் ஏற்றிவிட்டோம்.



இன்று பள்ளிக்கூடங்கள் திறந்துவிட்டன. பொன்மலரை அண்ணி பள்ளிக்குக் கிளப்பிக்கொண்டு இருந்தார். ''ஆளப் பாத்தீங்களா... கருத்துப் போயிட்டா... ஊர்ல ஒரே ஆட்டம்... இரு மிஸ்கிட்ட வெச்சு நல்லா குத்தச் சொல்றேன்!'' என்றது அண்ணி. பேக்கை மாட்டிக்கொண்டு எதையோ இழந்த ஏக்கத்துடன் ஸ்கூலுக்கு நடக்கிறாள் பொன்மலர்.

நான் கடவுளாக இருந்திருந்தால், அவளுக்குப் பரிசளித்து இருப்பேன்... இப்போதே இன்னொரு கோடை விடுமுறையை!

45

# சாமான்யர்களின் தேசம்!

**நா**ன் இருக்கிற எம்.எம்.டி.ஏ. ஏரியாவில் புதிதாக ஒரு அபார்ட்மென்ட் கட்டிக்கொண்டு இருந்தார்கள்! மிகப் பெரிய அபார்ட்மென்ட். மணலும் ஜல்லியும் கொட்டப்பட்டு இருக்க, ஒவ்வொரு நாள் பார்க்கும்போதும் வளர்ந்துகொண்டே இருந்தது.

கட்டட வேலை நடந்துகொண்டு இருக்கிற இடத்தின் அருகிலேயே ஆஸ்பெஸ்டாஸ் சீட் போட்டு இரண்டு, மூன்று குடும்பங்கள் தங்கியிருந்தன. பகல் முழுக்க மாங்குமாங்கெனக் கட்டட வேலை பார்த்துக்கொண்டு இருப்பார்கள். சாயங்காலங்களில் பார்த்தால் கொட்டியிருக்கிற மணலில் குழந்தைகள் விளையாடிக்கொண்டு இருப்பார்கள்.

குளித்து முடித்து ஈரத் தலையை உலர்த்தியபடி ஓர் அம்மா நின்றுகொண்டு இருக்கும். காலெல்லாம் சிமென்ட்டோடு அறுத்துப் போட்ட மரத்தின் மேல் உட்கார்ந்துகொண்டு, ரெண்டு மூணு பேர் எஃப்.எம்—மில் பாட்டு கேட்டுக்கொண்டு இருப்பார்கள்.

பாதி எழும்பிய சுவரில் சாய்ந்துகொண்டு, ஊர்க் கதை பேசியபடி அக்காக்கள் பேன் பார்த்துக்கொண்டு இருப்பார்கள். இரவுகளில் படுதா போட்டு, நடுவில் காண்டா விளக்கு வைத்து, சுற்றி உட்கார்ந்து சாப்பிட்டுக்கொண்டு இருப்பார்கள்.

ஒரு நாள் பார்த்தால் அந்த இடமே ரகளையாகக் கிடந்தது. எங்கோ ஊரில் இருந்து வெள்ளை வேட்டிசட்டை, பட்டுப் புடவைகளில் ஒரு குரூப் வந்து இறங்கியிருந்தது. ‘‘பெரிய மாமா பொண்ணுக்குக் கல்யாணம்... பத்திரிக்க வைக்க வந்துருக்காகண்ணே... எங்க சனம் நெறைய இந்தூர்ல கெடக்கு. வெத்தலாக்கு ரூவா வெச்சு பத்திரிக்க வைக்கலைன்னா போமாட்டானுவோள்ல...’’ எனச் சிரித்துக்கொண்டே சொன்னார் அங்கிருக்கும் ஒரு அண்ணன்.

நள்ளிரவில் வீடு திரும்பிய பொழுதில் பார்த்தேன், சாரங்கட்டப்பட்ட இடத்தில் உட்கார்ந்து மொசுமொசுவென அழுதுகொண்டு இருந்தது ஓர் அக்கா. அது புருஷங்காரன் ஏதேதோ கிசுகிசுவெனப் பேசியபடி கையைப் பிடித்து இழுக்க, அது விசும்பியபடி தள்ளிவிட்டுக்கொண்டு இருந்தது. இன்னொரு நாள் காலையில் போகும்போது பாதி வேலையில் எல்லோரும் நின்றிருக்க, ஒரு குட்டிப் பெண் சாக்லேட் கொடுத்துக்கொண்டு இருந்தாள். ‘‘மாமாவுக்குக் குடு... அதுக்குப் பொறந்த நாளு சார்...’’ எனக் கம்பியைச் சுற்றிக்கொண்டே ஒருவர் சொல்லிக்கொண்டு இருந்தார்.

சில மாதங்கள் போயிருக்கும். அதற்கு முன்பு அந்த இடத்தை என்ன காட்சியோடு கடந்துபோனேன் என்பதுகூட நினைவுஇல்லை. இப்போது அந்த இடத்தில் பிரமாண்டமான அபார்ட்மென்ட் வளர்ந்து நின்றது. பாதி ஃப்ளாட்களில் குடும்பங்கள் குடிவந்திருந்தன. பளபளவென கார்கள் நிறுத்திக் கிடக்க, ஆஸ்பெஸ்டாஸ் குடியிருப்புகள் இருந்த இடத்தில், கூண்டில் வாட்ச்மேன் உட்கார்ந்திருந்தார். இறுகிய முகங்களோடு குடிவந்திருந்த மனிதர்கள் அப்பெரும் கட்டடத்தில் நடமாடிக்கொண்டு இருந்தார்கள். அவர்களுக்கு இந்த அபார்ட்மென்ட்டைக் கட்டிய கைகளுக்கான மனிதர்களைத் தெரியவே போவது இல்லை. இங்கேயே உண்டு, உறங்கி, உழைத்துவிட்டு கட்டடம் எழுந்து நிற்கும்போது எங்கேயோ போய்விட்டார்கள் அவர்கள்.

அவ்வளவு பெரிய கட்டடம் இருந்தும் எனக்குச் சட்டென்று அந்த இடமே வெறுமையாகத் தெரிந்தது. இரண்டு, மூன்று குடும்பங்கள்

இருந்தபோது நிறைந்துகிடந்த இந்த இடம், இத்தனை குடும்பங்கள் வந்த பிறகு வெறுமையாகக் கிடக்கிறது. அந்தச் சமையல் வாசமும் பாட்டுச் சத்தமும் குழந்தைகளும் மஞ்சள் பூசிய அக்காக்கள் முகங்களையும் துரத்திவிட்டுச் சட்டென்று எழுந்து நிற்கும் இந்தக் கட்டடத்தைப் போல, அனுதினமும் பல நூறு கட்டடங்கள் எழுந்துகொண்டே இருக்கின்றன பெருநகரங்களில். அந்தக் குடும்பங்கள் எல்லாம் இப்போது எங்கே போயிருக்கும்? சொந்த ஊருக்கா? வேறு ஏதேனும் ஏரியாவில் அபார்ட்மென்ட்டோ காம்ப்ளெக்ஸோ கட்டிக்கொண்டு இருக்கிறார்களா? அவர்களை வாழ்க்கையில் மறுபடியும் பார்க்க முடியுமா? யோசிக்க யோசிக்க... இந்த மாதிரியான முகம் தெரியாத எவ்வளவு சாமான்ய மனிதர்களால் இந்தப் பேரண்டம் இயங்குகிறது என ஆச்சர்யமாக இருக்கிறது. மிக எளிய மனிதர்களின் வேலைகளால்தான் நமது அன்றாடங்களே சுழல்கின்றன என்ற பேருண்மை உறைக்கிறது. ஆனால், அவர்களை நாம் ஒருபோதும் நினைத்துக்கூடப் பார்ப்பது இல்லை.

**கா** லையில் கதவைத் தட்டிக்கொண்டு ஒருவர் நிற்கிறார். ‘‘சார்... மேடம் டேங்க் க்ளீன் பண்ணணும்னாங்க... டூ ஹண்ட்ரட் ஆகும் சார்... ஹண்ட்ரட் இப்போ குடுங்க... ந்தா வந்துர்றேன்...’’

‘‘க்ளீன் பண்ணிட்டு வாங்கிக்கப்பா... இப்போ எதுக்கு நூறு ரூவா...’’ ‘‘இன்னா சார் நீ... ஒந் துட்ட தூக்கினு ஓடவாப் போறேன்... குடு சார். அர அவர்ல மாடிக்கு வா... சார்ப்பா வந்து நிக்கிறேன்...’’ அரை மணி நேரத்தில் குவார்ட்டரைப் போட்டுக்கொண்டு, ஜட்டியோடு வந்து நிற்கிறார். டேங்கில் இறங்கி க்ளீன் பண்ணிவிட்டு, பாட்டில் நிறைய ஐஸ்வாட்டர் வாங்கிக் குடித்துவிட்டுப் போகும்போது தயங்கி நிற்கிறார்.

‘‘மேடம்... மேடம்... அந்தப் பொம்ம ஒடஞ்சி கெடக்குல்ல... அது ஒங்க பாப்பாக்கு யூஸ் ஆகாதுல்ல... அத்த எட்துக்கவா...’’ கை, கால் எல்லாம் அழுக்கோடு அந்த உடைந்த பொம்மையைத் தூக்கிக்கொண்டு அவர் போவதைப் பார்க்கும்போது மனசு சொல்ல முடியாத உணர்வுகளுக்குப் போய்விடுகிறது.

அத்தனை பேரும் பரபரப்பாக எங்கெங்கோ போய்க்கொண்டு இருக்கிற காலையில், நடுத் தெருவில் இரண்டு பேர் டிரைனேஜில் இறங்கி, உடம்பு முழுக்கச் சாக்கடையோடு நிற்கிறார்கள். நமது கால்களுக்குக் கீழே, நமது அசிங்கங்களையெல்லாம் சுமந்துகொண்டு நிற்கிறார்கள். நாம் அவர்களைக் கடந்து போய்க்கொண்டே இருக்கிறோம். மூச்சு முட்ட முட்ட அந்தச் சாக்கடைக் குழிக்குள் அவர்கள் கிடக்கும் சாலையைக் கடக்கும் ஓர் ஆடி காரில், ஏ.சி—யின் உறுமலுக்குக் காது விறைக்கிறது ஒரு நாய்க்குட்டி. திரும்பும்போது பார்த்தால், உடம்பு முழுக்கச் சாக்கடையோடு வாட்டர் பாக்கெட்டில் கையை மட்டும் கழுவிக்கொண்டு, டீயில் பன்னை நனைத்துத் தின்றுகொண்டு இருக்கிறார்கள் அவர்கள். அதன் பிறகு அவர்கள் எங்கே போகிறார்கள்? என்ன செய்கிறார்கள்? அவர்களது வாழ்க்கையில் நறுமணம் என்று எதாவது இருக்கிறதா? ஆனால், அவர்கள் இல்லையென்றால் நம் வாழ்க்கையில் நறுமணமே இல்லை. இல்லையா?

அவர்கள் அதன் பிறகு, பரபரப்பான சாலையின் ஒதுக்குபுறமாக இருக்கும் கட்டணக் குளியலறையில் சாம்பிள் சோப்பு போட்டுக் குளிக்கிறார்கள். உடைந்து தேய்ந்த பழைய நோக்கியா செட்டில் பொண்டாட்டியிடம் சில வாக்குறுதிகள் கொடுக்கிறார்கள். நியான் விளக்குகளால் மினுங்கத் தொடங்கிவிட்ட ஊரை சிரிப்பும் ஏக்கமுமாகப் பார்க்கிறார்கள். டாஸ்மாக் போகிறார்கள். இருக்கிற காசுக்கு வீட்டுக்குச் சாமான்கள் வாங்குகிறார்கள். வீட்டுக்குப் போய் பொண்டாட்டிகளுடன் கொஞ்சுகிறார்கள்... சண்டை போடுகிறார்கள். ‘‘அய்யே... அப்பா மேல நாத்தமே போகல...’’ என்றபடி ஓடும் தங்கள் பிள்ளைகள் என்ன ஆகுமோ என்கிற கேள்விகளோடு தூங்கிப்போகிறார்கள்.

**இ**ப்படி சாக்கடை அள்ளுபவர்களைப் பற்றி ஒரு டாகுமென்டரி எடுப்பதற்காக நண்பர் ஒருவருடன் சுற்றித் திரிந்தேன். ஐஸ் ஹவுஸ் பக்கம் ராம் நகரில் இப்படி வேலை பார்க்கிற பல குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்குத் தங்களது வாழ்நிலை பற்றிய பெரிய பிரக்ஞை எதுவும் இல்லை. பொதுவாகவே, இந்த எளிய மனிதர்களிடம் தங்களைப் பற்றிய பெரும் துன்பச் சிந்தனைகள் இருப்பதே இல்லை.

எனவேதான் அவர்களுக்கு எந்தச் சாமியார்களும் தேவைப்படுவது இல்லை.

ரகுஜிதான் எங்களை ராம் நகருக்கு அழைத்துப் போனது. அவரும் கழிவகற்றும் வேலைதான் பார்க்கிறார். ‘‘சார்... சாக்கட அசிங்கம்லாம் ரொம்ப நாள் தேங்கிருந்தா வெஷமாகிரும் சார். அப்போ போய் க்ளீன் பண்ண எறங்கினா ரொம்ப டேஞ்சர். நம்ம ஆளுங்கள்லயே ரெண்டு பேர் அப்பிடிப் போயே போய் சேர்ந்துட்டானுங்க...’’ என்றார் அலட்சியமாக ஹான்ஸ் போட்டபடி.

அவருக்கு மூன்று பெண் பிள்ளைகள். அந்தச் சிறிய குடிசையில் அவ்வளவு பெரிய குடும்பம் நெருக்கியடித்து கவர்மென்ட் டி.வி—யில், சன் மியூஸிக்கில் பாட்டு பார்த்துக்கொண்டு இருக்கிறது. ‘‘இந்த டி.வி., நமக்குத் தந்தது இல்ல சார்... பஜார்ல ஆயிரம் ரூவா குடுத்து வாங்குனது. நாம கவர்மென்ட் சர்வன்ட் கெடையாது. கெடைக்கற எடங்கள்ல க்ளீன் பண்றதுதான்... கான்ட்ராக்ட் மாரியும் பாப்போம்...’’ என்றவர், ‘‘மூக்குத்தி... ஏய் மூக்குத்தி...’’ எனக் குரல் கொடுக்க... பின்னால் இருந்து ஒரு பெண் வந்து நின்றாள். ‘‘இது எம் மூத்த பொண்ணு சார்... வெஷம் அடிச்சு நம்ம ஆளுங்கள்ல ரெண்டு பேரு செத்தாங்கன்னு சொன்னேன்ல... அதுல ஒருத்தன் இது புருஷன்தான். நெல்லூர்லேருந்து வந்த மாப்ள... இப்பிடிப் போய்ச் சேர்ந்துட்டான்...’’ என்றார் அதே புன்னகையோடு.



‘‘ஏய் நாதாரிப் புள்ளைங்களா... எத்தன தடவ சொல்றது... ஈவினிங் ஆனா காளி படத்துக்குப் பூ வைக்கணும்னு அறிவு இல்ல...’’ என அங்கு இருக்கும் ஒரு காளி படத்தைப் பார்த்தபடி திட்ட ஆரம்பித்தார். ஏரியாவைச் சுற்றிவிட்டு அவர் வீட்டுக்குத் திரும்பியபோது காளி படத்தில் மணந்துகொண்டு இருந்தது சரம் மல்லிகை!

ர குஜியைப் பற்றிப் பேசும்போதே மாசிலாமணியின் குடும்பமும் கிடைச்சாணியின் வாசமும் ஞாபகத்தில் பரவுகிறது. சிறுபிள்ளையாக இருக்கும்போது எங்கள் ஊருக்கு வயல்களில் கிடை போட வந்த குடும்பம் மாசிலாமணியினுடையது. தொடர்ந்து மூன்று வருடங்கள்போல் அவர்தான் வந்து ஊர் வயல்களில் கிடை போட்டார். இருபதுக்கு மேல் மாடுகளும் ஐம்பதுக்கு மேல் ஆடுகளுமாக வயல்களில் வந்து கிடை போடுவார். ஆடு, மாடுகளின் சாணம் எருவாகி, அதுதான் வயக்காடுகளுக்கு அம்சமான உரம். கோடைகளில் வந்து வயலில்

கிடை போட்டு, அங்கேயே ஓரமாக டென்ட் போட்டுத் தங்கிவிடுவார்கள். ஊரில் இருக்கும்போது அவர்களும் ஊரில் ஒரு குடும்பமாக ஆகிவிடுவார்கள்.

ஒரு கோடையில் கிடை போட வந்தபோதுதான் மாசிலாமணியின் மகளுக்கு நிச்சயம் நடந்தது. அந்த டென்ட்டிலேயே விசேஷம் நடந்தது. அவரது பையன் ஒருவன்தான் எங்களுக்கு 'காக்கா முட்ட' விளையாடக் கற்றுத் தந்தான். எந்த ராத்திரியில் அவர்கள் ஊரைவிட்டுக் கிளம்புவார்கள் என்பதுதான் எப்போதும் புதிர். ஏதேனும் ஒரு காலையில் பார்த்தால், ஒரு ஆடு, மாடு இருக்காது. வயலெல்லாம் சாணமும் எருவுமாகக் கிடக்கும். அப்புறம் நடவு நட்டு, வயல் விளைந்து அறுவடை முடிகிற வரைக்கும் அவர்களைப் பார்க்கவே முடியாது.

அந்த மூன்று வருடங்களுக்குப் பிறகு மொத்தமாகவே அவர்களைப் பார்க்க முடியவில்லை. இப்போது அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? இன்னும் கிடை போட்டுக்கொண்டு இருக்கிறார்களா? இப்போதும் அதெல்லாம் நடக்கிறதா? அந்தப் பிள்ளைகள் வாழ்க்கையில் என்னவாக ஆனார்கள்?... ஏராளமான நினைவுகள் மோதுகின்றன.

எவ்வளவு சாமான்யர்களின் உழைப்பால் நாம் வாழ்கிறோம்? இதோ இந்தப் பக்கத்தை நீங்கள் படிப்பதற்குப் பின்னால்கூட மரம் வைத்தவர், அறுத்தவர், பேப்பர் மில் ஓட்டியவர், பிரின்ட்டிங் பிரஸ்ஸில் உழைப்பவர், புத்தகத்தைக் கொண்டுவந்து சேர்ப்பவர் என எத்தனை பேரின் உழைப்பு தேவைப்படுகிறது? ஒவ்வொருவர் சாப்பிடும் சாப்பாட்டிலும் எவ்வளவு விவசாயிகளின் வியர்வையும் உதிரமும் கலந்திருக்கிறது. சுவாசம் அடைக்கும் சூழலில் உழன்று இந்தச் செருப்பைப் பதனிட்ட கைகள்... இந்தத் துணியைத் தைத்த விரல்கள்... இந்த வாகனத்தின் பாகங்களை உருவாக்கிய கரங்கள்... எவ்வளவு சாமான்யர்களின் வேலைகளால் நிறைந்திருக்கிறது தேசம்!


**டி**.டி.கே. சாலை லைஃப் ஸ்டைல் எதிரே உள்ள பிளாட்ஃபார்மில் இப்போதும் ஒரு தொப்பியை மாட்டிக்கொண்டு நாளெல்லாம் அறுந்த செருப்புகள் தைக்கிறார் ஒரு முதியவர். சொற்ப சம்பளத்துக்குப் பண்ட

பாத்திரங்கள் கழுவி, துணி துவைத்து, சமையல் முடித்துவிட்டு டிகிரி படிக்கிற மகளுக்குக் கொஞ்சம் சாப்பாடு எடுத்துப்போகிறார் ஒரு பெண்மணி. அந்த இஸ்திரிப் பெட்டியைத் தூக்கிச் சுமந்து ஒரு சட்டையை அயன் பண்ணுவதற்குள் வலி பின்னி எடுக்கிறது. நாளெல்லாம் அதைச் சுமந்து ஏகப்பட்ட துணிகளைச் சலவை செய்துகொண்டே இருக்கிற அண்ணன் சாயங்காலமாகத் தலை உயர்த்தி, ‘‘சென்னை சூப்பர் கிங்ஸ் ரன்னு எத்தன..? டோனி இருக்கான்ல..?’’ எனக் கேட்கிறபோதுதான் அவர் அங்கு இருப்பதே தெரிகிறது.

சலூன் ரமேஷ் செவ்வாய்க் கிழமைகளில் கடைக்கு லீவு விட்டுவிட்டு, ‘‘எதாவது புதுப் படத்துக்கு டிக்கெட் ரெடி பண்ணேன்... ஒய்ஃபைக் கூட்டிட்டுப் போறேன்...’’ என்கிறபோது எவ்வளவு சந்தோஷம் தெரிகிறது.

பெட்ரோல் பங்க்கில் யாரும் வராத ஒரு மதியப் பொழுதில் ஓரமாக மொபைல் போனில் பேசிக்கொண்டு இருக்கிற பெட்ரோல் போடுகிற பெண், ஒரு வண்டிச் சத்தம் கேட்டதும் எப்படிப் பதறி ஓடிவருகிறாள். ஆயிரமாயிரம் முகம் தெரியாத மனிதர்களின் உழைப்பாலும் பங்களிப்பாலும்தான் நம் ஒவ்வொருவருக்குமான உலகம் சுழல்கிறது. ஆனால், அவர்களின் உலகத்தில் நாம் என்னவாக இருக்கிறோம் என்பதை ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்கிறோமா?

நேற்று நண்பர் ஒருவர் வந்தார். ‘‘அய்யோ நண்பா... ரொம்ப லோன்லியா இருக்கு. தனியா என்னை விட்டு எல்லாரும் போயிட்ட மாதிரியே இருக்கு... என்னால தாங்கவே முடியல நண்பா...’’ எனப் புலம்பினார்.



அவர் சமீப காலமாகவே இப்படித்தான் பேசிக்கொண்டே இருக்கிறார். ஏதேதோ மனப் பிரச்னைகள். நேற்றும் ஆட்டோவில் அப்படிப் புலம்பிக்கொண்டே வந்தார். ‘எவ்வளவு பேர் நம்மோடு இருக்கிறார்கள். எவ்வளவு பேரின் கரிசனமும் பங்களிப்பும் நம் அனுதினங்களோடு பின்னியிருக்கின்றன. இதை இந்தாளுக்கு எப்படிச் சொல்வது..?’ என நினைத்துக்கொண்டு இருக்கும்போதே சைடு கண்ணாடியைச் சரி செய்தபடியே ஆட்டோக்காரர் நண்பரைப் பார்த்துச் சொன்னார், ‘‘விடுங்க தலைவா... இந்த உலகம் உங்களை விட்டு விலகுறதும் இல்ல... உங்களைக் கைவிடுறதும் இல்ல!’’

46

# நாம எல்லாம் ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்தான்!

**வா** ழ்க்கையைவிட சிறந்த சினிமா ஏது?

இந்த வாழ்க்கை ஒரு சினிமா என்றால், அதில் நாம் யார்? ஹீரோவா... வில்லனா... காமெடியனா... கேரக்டர் ஆர்ட்டிஸ்டா? இப்படி ஒரு கேள்வி, நடராஜப் பிள்ளையைப் பார்த்துவிட்டுத் திரும்பியபோது தோன்றியது.

நடராஜப் பிள்ளை அற்புதமான கூத்துக் கலைஞர். தஞ்சாவூர்க்காரர். முழு வாழ்க்கையையும் கூத்துக்காகவே அர்ப்பணித்த மனிதர். 90 வயதில் மயிலாப்பூரில் உள்ள மகளுடைய வீட்டில் வந்துகிடக்கிறார். கூத்துக்கான மரியாதை எல்லாம் குறைந்துவிட்ட பிறகும்கூட அதையே பிடித்துக்கொண்டு, இப்போதும் அந்த நினைவுகளில் இருப்பவர்.

கூத்துக் கலை சம்பந்தமான தகவல்களுக்காக நாலைந்து தடவை அவரைச் சந்தித்து இருக்கிறேன். ஒரு நாள் நண்பர் சுப்பு வந்து, ‘‘நடராஜப் பிள்ளை ரொம்ப முடியாமக்கெடக்குறாருப்பா. உன்னைப் பாக்கணும்னு சொன்னார். வாயேன் ஒரு எட்டுப் போயிட்டு வருவோம்" என்றார்.

அவ்வளவு முடியாத நிலையிலும் எங்களைப் பார்த்ததும் அப்படி ஒரு புன்னகை நடராஜப் பிள்ளையிடம். சாய்ந்து உட்கார்ந்து படக்கென்று

கைகளைப் பற்றிக்கொண்டார். என் கைக்குள் அவர் கைகள் நடுங்கிக்கொண்டு இருந்தன.

*‘அந்திமத்தின் தெருவில்*
*உட்கார்ந்திருக்கிறேன்*
*ஒரு கார் கடந்துபோய்விட்ட மாதிரி தெரிகிறது*
*போய்விட்டதா?’* என்ற நகுலன் கவிதை நினைவுக்கு வந்தது!

அந்திமம் என்பது, நாம் நுழைந்தறியாத வனத்தைப்போல ஏராளமான இருளையும் ஒளியையும் வைத்திருக்கிறது. பெருமரங்களின் உடலை ஊடுருவி வழியும் வெயிலைப் போல, நிலவொளியைப் போல அந்திமத்தின் வனத்தில் வழிந்துகொண்டு இருப்பவை மரணமும் ஞானமும்தானா? அதை நம்மால் உணரவே முடியாது இல்லையா?

நடராஜப் பிள்ளையின் முகத்தில் அந்த ஜ்வாலையைப் பார்த்தேன். என்ன ஓர் ஒளி! பட்டெனக் கண்கள் கவிந்து நினைவுகளைத் தேடும்போது, ஒரு மேகம் வந்து நிலவை மூடிவிட்ட மாதிரி தோன்றும். ‘‘ஆங்... அது நடந்தது ஆப்பாவூர்ல..." என்கிறபோது மேகம் நழுவிப் பொசுக்கென நிலவு விகசிக்கும். ஒரு குழந்தையைப் போல பாதி தின்று பாதி துப்பும் வார்த்தைகளில் பேசிக்கொண்டே இருந்தார். அவருடைய பழைய கூத்துப் புகைப்படங்களை எல்லாம் எடுத்துப் போட்டு, ஏதேதோ நினைவுகளைச் சொல்லிக்கொண்டு இருந்தார். கண்ணன், தர்மன், துரியோதனன், கர்ணன், அரவான், விக்ரமாதித்யன், பட்டிவீரன், நல்லத்தங்காளாகப் பெண் வேடம் என விதவிதமான, எதிர்மறையான, ஏராளமான பாத்திரங்களில் நடித்திருக்கிறார். அதை எல்லாம் பார்க்கப் பார்க்க ஆச்சர்யமாகவும் பரவசமாகவும் இருந்தது.

பேசிக்கொண்டு இருக்கும்போதே ஓர் இடத்தில், சலனமே இல்லாமல் முகத்தை வைத்துக்கொண்டு, ரொம்ப யதார்த்தமாக இப்படிச் சொன்னார்

நடராஜப் பிள்ளை, ‘‘எத்தனையோ வேஷம் கட்டி நடிச்சிருக்கேன்... நல்லவனா, கெட்டவனா, கோமாளியா... எத்தனையோ வேஷம். அரிதாரம் கலைச்ச பின்னாடியும் அப்படியேதான் இருந்திருக்கேன். நெஜமா நான் என்னவா இருந்தேன்னுதான் எனக்குத் தெரியலை. என்னவா இருக்கேன்னும் தெரியலை. அய்யா... நான் என்னவா சாகப்போறேன்? தர்மனாவா... துரியோதனனாவா? எதுவும் தெரியலையேய்யா" — சிரிப்புடன் சொல்லிவிட்டு, அப்புறம் கடந்து வேறு எங்கோ அவர் போய்விட்டார். ஆனால், நான் அந்த இடத்திலேயே உறைந்து நின்றுவிட்டேன். அவரது கைகளை அழுத்திய வெப்பத்தை வாங்கிக்கொண்டு வெகு தூரம் வந்துவிட்ட பிறகும் அங்கேயேதான் நிற்கிறேன். அந்தக் கேள்வி என்னைத் துரத்திக்கொண்டே இருக்கிறது.

இந்த வாழ்க்கை சினிமா என்றால், இங்கே ஆளுக்கு ஒரு ரோல் கிடையாது. ஒவ்வொருவருக்கும் மாறி மாறி எல்லா ரோல்களையும் கொடுக்கிறான் டாப் ஆங்கிள் டைரக்டர். ஒவ்வொருவரும் ஏதோ ஒரு கணம் ஹீரோவாக இருக்கிறோம். நாமே வேறு வேறு கணங்களில் வில்லனாகவும் காமெடியனாகவும் குணச்சித்திர நடிகனாகவும் மாறிக்கொண்டே இருக்கிறோம்.

பள்ளிக்கூடத்திலும் கல்லூரியிலும் நான் நடு பெஞ்ச். முதல் பெஞ்ச்சில் இருப்பவன் ஹீரோ. கடைசி பெஞ்ச்சில் இருப்பவன் வில்லன். நடு பெஞ்ச்சில் இருப்பவன் யார்? முழுக்க காமெடியனாகவோ, கேரக்டர் ஆர்ட்டிஸ்டாகவோ மட்டுமே இருக்கச் சபிக்கப்பட்டவன். குட்டிச்சுவர் ஃப்ரெண்டாகவோ, அமெரிக்க மாப்பிள்ளையாகவோ, கைப்பிள்ளை முறைமாமனாகவோ இருக்கவே துதிக்கப்பட்டவன். ‘இம்சை அரசன்’ மாதிரி ஆண்டு விழாக் காலங்களிலோ, சுற்றுலாக் காலங்களிலோ மட்டுமே ஹீரோவாக அனுமதிக்கப்படுகிறவன்.

நடு பெஞ்ச்சில் இருப்பவன், முதல் பெஞ்ச்சில் இருக்கும் ஹீரோயினைப் பார்க்கக் கூடாது. நடு பெஞ்ச்களிலேயே இருக்கும் நாயகியின் தோழிகளையே பார்க்க வேண்டும். படிக்காமல் வந்தாலும் குளிக்காமல் வந்தாலும் வாத்தியார்களிடம் அதிகம் சிக்குவது நடு

பெஞ்ச்சுகள்தான். அவ்வப்போது செய்யும் தவறுகளால் அடிக்கடி பலியாடுகள் ஆவதும் இவர்கள்தான். அத்துமீறி அடிக்கும் கமென்ட்டுகளுக்கு வகுப்பறை சிரிக்கும். சிக்கினால் வாத்தியார் கும்மியெடுக்கும்போது அழுதாலும் வகுப்பறை அப்படியே சிரிக்கும். நம்மில் ஏராளமானவர்கள் வாழ்க்கை முழுக்க நடு பெஞ்ச்சுக்காரர்களாகத்தான் இருக்கிறோம் என்பது என் கருத்து.

**‘‘டே** ய்... ஒவ்வொருத்தனும் ஹீரோவாகற இடம் எது தெரியுமா? கல்யாண மேடைதான். அங்க நமக்குனு வரப்போற பொண்ணோட அப்பிடி நிக்கும்போது மனசுக்குள்ள ஒரு பெருமை வரும் பாரு... அதுதான் மேட்டரு. நம்மள மாதிரி ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்டுக்கு எல்லாம் ஹீரோ ஆகற வாய்ப்ப அங்கதான் குடுக்கறானுங்க. இந்தா பாரு... கல்யாண போட்டோல எம் மூஞ்சிய... என்னா ஒரு ரொமான்ஸு... என்னா ஒரு பெருமை...’’ ஒரு முறை வீட்டுக்கு அழைத்துப்போய், புது மனைவி சகிதம் தனது கல்யாண ஆல்பத்தைக் காட்டியபடி ஒரு நண்பர் இப்படிச் சொன்னார்.



இந்தப் பேருண்மையை ஏராளமான கல்யாண ஆல்பங்களில் நான் தரிசித்து இருக்கிறேன். அதற்கு முன்னும் பின்னும் பார்த்தறியாத வெட்கத்தோடும் சந்தோஷத்தோடும் நண்பர்களின் முகங்களைக் கல்யாண ஆல்பங்களில்தான் பார்த்திருக்கிறேன்.

ஒரு ராத்திரி அதே நண்பரை ஹோட்டலில் பார்த்தேன். ஃபுல் போதையில் இருந்தார். ‘‘ஃப்ரெண்டு... லாஸ்ட் ஆர்டர் முடிஞ்சது. ஆனா, ஐ வான்ட் டு மோர் லார்ஜஸ்... உன் பவரைப் பயன்படுத்து...’’ என என் தோளில் சாய்ந்தார்.

நள்ளிரவில் அவரை வீட்டில் கொண்டுபோய் டிராப் பண்ணினேன். அவர் மனைவி, குழந்தை யாரையும் காணோம். பேச்சுலர் அறை மாதிரி கலைந்துகிடந்தது ஃப்ளாட். ஃப்ரிஜ்ஜின் மேல் இருந்த கல்யாணப் புகைப்படத்தை எடுத்துப் புரட்டினேன்.

சட்டென்று பக்கத்தில் வந்து உட்கார்ந்தவர், ‘‘ஆமா... அன்னைக்குத்தான் என்னைக் காமெடியன் ஆக்கினானுங்க... ம்... ங்க பாரு எம் மூஞ்சிய... மொக்க... மொக்க... காமெடியன் ஆயிட்டியேடா...’’ எனக் கொஞ்ச நேரம் அனத்திவிட்டு அப்படியே தூங்கிவிட்டார்.

**ந** ண்பர் கார்த்திக்கு, குழந்தை பிறந்திருந்தது. பில்ராத் ஹாஸ்பிடலில் இருந்து எனக்கு போன் பண்ணும்போதே அவரது குரலில் அப்படி ஒரு பெருமிதம். சாயங்கால வெயில் விழுந்திருந்த வார்டில், கையில் குழந்தையோடு நின்றபோது மினுங்கிய கார்த்தியின் முகத்தில் அவ்வளவு ஹீரோயிஸம். ஒரு சாமான்யன் ஹீரோவாகிற இன்னொரு முக்கிய தருணம் இது அல்லவா..? ‘‘யார் மாதிரிடா இருக்கான்... என்னை மாதிரிதான..?" என்றார் இதுவரை கேட்காத ஒரு குரலில். ‘‘இல்லல்ல... அக்கா சாயல்ல அழகா இருக்கான்...’’ என்றதும் அந்தக்கா சாய்ந்து படுத்துப் புன்னகைத்தபடி, ‘‘தம்பி... ஒனக்கு நான் ட்ரீட் தர்றேன்டா...’’ என்றது ஹீரோயினாக.

இரண்டு நாட்கள் கழித்து கார்த்தி பதற்றமாக போன் பண்ணினார். ‘‘டேய், எங்க இருக்க..? வடபழனிதான..? சரவண பவன் பக்கமா

வாயேன்... வாசல்ல நிக்கிறேன்... அவசரம்டா...'' கொஞ்ச நேரத்தில் அங்கே போனால், வாசலில் பதற்றமாக நின்றார். என் கையில் ஒரு மோதிரத்தைக் கொடுத்து, ''பக்கத்துல அவசரமா இத அடகு வெச்சுட்டு சிக்ஸ் தவுசண்ட் வாங்கியா... அவசரம்டா...'' என்றார். கொஞ்ச நேரத்தில் அடகு வைத்து பணத்தைக் கொண்டு போய்க் கொடுத்தேன். வாங்கிக்கொண்டு பரபரப்பாக ஓடினார்.

மறுநாள் போன் பண்ணும் போது சொன்னார், ''வொய்ஃப் வீட்லேருந்து பெரிய கும்பலே கௌம்பி வந்துட்டாய்ங்கடா. நான் இங்க எதோ பெரிய ஹீரோ மாரி நெனச்சுக்கிட்டு 'எம்.ஜி.எம். போலாம்... மாயாஜால் போலாம்'னு ஒரே அட்ராஸிட்டி... வேன் வெச்சு ஊர சுத்திக்காட்றதுக்குள்ள பதினஞ்சு பழுத்துருச்சு... கையில காசு இல்லாமத்தான் மோதிரத்த அடகு வைக்கக் குடுத்தேன். அத வேற கண்டுபுடிச்சுருவாய்ங்கனு பேன்ட் பாக்கெட்லயே கைய வுட்டுக்கிட்டு காமெடியன் மாரி சுத்திட்டிருந்தேன்.



இதுல இன்னொரு கூத்து... பொண்ணுக்குச் சுத்த தமிழ்ப் பேர் வைக்கலாம்னு நெனச்சுட்டு இருந்தா, ‘பேரு ‘வா’ல ஆரம்பிக்கணும், ராசி வரணும்’ அது இதுனு வாயில நொழையாத சம்ஸ்கிருதப் பேர் சொல்றாய்ங்க. எல்லாரும் ஊருக்குக் கிளம்பட்டும். வீட்ல அதுக்கு ஒரு ரகள இருக்கு.’’

அடகு வைத்துப் பணம் கொடுத்த எனக்குச் சிறிது நேரமே வந்தாலும், நல்ல கேரக்டர் ரோல் என்பது மட்டும் தெரிந்தது. ஜவுளிக் கடைகளிலும் நகைக் கடைகளிலும் தியேட்டர்களிலும் ஷாப்பிங் மால்களிலும் கார்த்தி மாதிரி அலைபாயும் எத்தனை எத்தனை கேரக்டர்கள் இருக்கிறார்கள்.

நிஜமாகவே நம்மைப் போன்ற நடுத்தர வர்க்கத்து சாமான்யர்கள் ஹீரோவாகிற தருணங்கள் மிக மிகச் சொற்பம்தான். அதுவும் அதிக நேரம் நீடிப்பது இல்லை. ‘நான் கமல்ஹாசன்... நான் கமல்ஹாசன்...’ என நாம் கத்திக்கொண்டு திரிந்தாலும், சமூகம் நம்மைச் ‘சப்பாணி... சப்பாணி...’ என்றுதான் பேசுகிறது. வில்லனாக டெரர் முகம் காட்டும்போது, ‘ஏய்! மயில்சாமிக்குக் கோவத்தப் பாரு...’ எனக் கைகொட்டிச் சிரிக்கிறது. இந்தச் சமூகத்தில் காமெடியனாக இருக்கும்போதுகூட, நம்மால் கவுண்டமணியாக இருக்க முடிவது இல்லை... செந்திலாகத்தான் இருக்க முடிகிறது. கேரக்டர் ஆர்ட்டிஸ்டாக வரும்போது எல்லாம் நமக்கான வசனங்களை நம்மால் எழுதிக்கொள்ளவே முடிவது இல்லை. யாரோ, யாருக்காகவோ எழுதிக்கொடுத்த வசனங்களையே பேச வேண்டி இருக்கிறது.

**அ** டையாறில் இருந்து நந்தனத்துக்கு பஸ்ஸில் வந்துகொண்டு இருந்தேன். பத்து, இருபது பையன்கள் ஏறி ஏக ரகளை பண்ணிக்கொண்டு இருந்தார்கள். அவ்வளவும் ஆபாசப் பேச்சு. காது கொடுக்க முடியாத பேச்சு. அத்தனை பேரையும் தொந்தரவு பண்ணிக்கொண்டு வந்தார்கள். ஒருத்தரும் வாய் திறக்கவில்லை. யாராவது ஒருவர் ஹீரோவாகி, ‘‘ஏய்ய்ய்...’’ என வசனம் பேசி ஆக்ஷன் பண்ணுவார்கள் எனப் பார்த்தால், யாரும் வரவில்லை. ஒரு

ஸ்டாப்பிங்கில் அவர்கள் இறங்கிப்போனதும் ஒருவர் சத்தமாக, ‘‘போங்கடா... ஒருத்தனும் உருப்படமாட்டீங்கடா’’ என்றார். யாரிடமும் பெரிதாக எந்த ரியாக்ஷனும் இல்லை.

அந்தப் பேருந்து இந்த தேசமாகவும், நாம் அந்தப் பயணிகளாகவும்தான் இருக்கிறோம். உண்மையில் யோசித்தால், எந்த ரோலும் இல்லாமல் இந்த வாழ்க்கையின் பெரும்பகுதி நாம் ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்டுகளாகத்தான் இருக்கிறோம்.



பெட்ரோல் விலை உயர்ந்து, பெட்ரோலும் கிடைக்காமல்போனால் பங்க்குகளில் கூடி அட்மாஸ்பியரில் அடித்துக் கொள்கிறோம். ஈமு கோழிக் கடையைத் திறந்துவைக்க நமீதா வந்தால், கூட்டம் கூட்டமாக வந்து ஜாலியாகிறோம். ‘நீயா... நானா’வில் பவர் ஸ்டாரைப் பார்த்துக் குதூகலிக்கிறோம். ‘இந்த நித்தியானந்தாவைத் தூக்கிட்டு வந்து கொரில்லா செல்லுல போடணும்யா...’ என்கிற கோபம் பலருக்கும் இருக்கிறது. ‘ஊழல் வழக்குல உள்ள போயிட்டு ஜாமீன்ல வந்தவருக்குத் தார தப்பட்ட வரவேற்பாய்யா...’, ‘ஈ.பி. பில்லு, பால்பஸ் டிக்கெட்டு எல்லாத்தையும் இந்தம்மா ஏத்திட்டு, பெட்ரோல் விலை

உயர்வைக் கண்டிக்கிறாங்களே... என்னங்க அநியாயம் இது?’, ‘ப.சிதம்பரம் பாதி ‘கஜினி’ ஆன பிறகும் அமைச்சராவே இருக்காரேய்யா...’, ‘எதுக்கு இந்த இங்கிலீஷ் சேனல் எல்லாம் இப்பிடிக் கதர்றானுங்க...’ என்றெல்லாம் எல்லோருக்கும் எல்லாக் கோபங்களும் இருக்கின்றன. ஆனால், எந்த ரியாக்ஷனும் வசனங்களும் இல்லாமல் கூட்டம் கூட்டமாக குற்ற உணர்வாகி, கூட்டம் கூட்டமாகக் காமெடி பண்ணி, கூட்டம் கூட்டமாகக் கடந்துபோகிறோம். ஏனென்றால், நாம் எல்லாம் ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்டுகள். ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்டுகளால் என்ன செய்ய முடியும்?

ஒயின் ஷாப்புகளில் கூட முடியும். புலம்ப முடியும். ‘ஐ.சி.ஐ.சி.ஐ. பேங்லருந்து பேசுறோம்... புது லோன் ஸ்கீம் இருக்கு கேக்கறீங்களா சார்...’ என்ற குரலுக்கு டென்ஷனாக முடியும். பழைய லோன் பாக்கிக்கு நாலு தெரு பம்மித் தப்பிக்க முடியும். கண்ணாடித் தூள்களையும் விபத்துகளையும் பார்த்துக்கொண்டே கடந்துபோக முடியும். லஞ்ச் பிரேக்கில் உட்கார்ந்து வதந்தி பேச முடியும். எல்.கே.ஜி. அட்மிஷனுக்கு ராத்திரியே போய் விடிய விடிய ஸ்கூல் வாசலில் தூங்காமல் கிடக்க முடியும். கல்விக்கும் மருத்துவத்துக்கும் எந்தக் கேள்வியும் கேட்காமல், டவுசர் கிழியக் கிழியச் செலவு பண்ண முடியும். பிச்சைக்காரருக்கு பத்து ரூபாய் போட்டோ, ரத்த தானம் பண்ணியோ, ரிங் டோனில் தத்துவக் குத்துக்கள் வைத்தோ அவ்வப்போது கெஸ்ட் ரோலுக்கு முயற்சி பண்ண முடியும். கோர்ட்டில் தீர்ப்பும் சொல்ல முடியாமல், கோர்ட்டுக்கு வெளியே ரெண்டு பேரைப் போட்டுத்தள்ளவும் முடியாமல், தினமும் நியூஸ் பார்த்துப் பொரும முடியும். ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்டுகளால் வேறு என்னதான் பண்ண முடியும்?

**ஒ**ரு நாள் ஏதோ புது நம்பரில் இருந்து ஒரு போன். ‘‘தம்பி... நான் முருகய்யன் பேசுறேன். நீங்க மறந்திருப்பீங்க... ஒங்கள கொஞ்சம் நேர்ல பாக்கணும் தம்பி...’’ என்றது ஒரு முதிய குரல். கொஞ்ச நேரத்தில் அவர் அலுவலகம் வந்தார். பழைய நைந்த வேட்டி, சட்டை... கக்கத்தில் ஒரு துணிப் பை, எழுபது வயதுக்கு மேல் இருக்கும். நரைத்து முகம்

எல்லாம் சுருங்கி, கண்கள் மட்டும் பிரகாசம் குறையாமல் எரிந்துகொண்டு இருந்தன.

கக்கத்தில் இருந்த பையில் இருந்து கொஞ்சம் நோட்டீஸை எடுத்து என்னிடம் தந்தார். ‘‘தம்பி... ஏழெட்டு வருஷத்துக்கு முன்னாடி விகடன்ல நீங்க இருந்தப்ப வந்து பார்த்திருக்கேன்... இப்பவும் அதுக்குத்தான் வந்தேன். நோட்டீஸைப் பாருங்க...’’ என்றார்.

இயற்கை விவசாயம் குறித்தும், இந்திய விவசாயிகளின் பாதுகாப்பு எதிர்காலம் குறித்தும் ஒரு கூட்டம் பற்றிய நோட்டீஸ் அது.

ஏழெட்டு வருஷங்களுக்கு முன்பு இதே தோற்றத்தில் மரபணு மாற்ற விதைகள் பற்றிய எதிர்ப்பு உணர்வுப் பிரசாரத்துக்கு இப்படி ஒரு நோட்டீஸ் கொடுக்கத்தான் இவர் வந்திருந்தார். இப்போதும் இந்த வயதில் உச்சி வெயிலில் ஒற்றை ஆளாக இப்படி வந்து நிற்கிறார். இருவரும் டீ குடித்த பிறகு, என்னைத் தரவிடாமல் அவசரமாக கசங்கிய ரூபாயை அவர் எடுத்து டீக்கடைக்காரரிடம் நீட்டியதைப் பார்த்து எனக்கு சொல்ல முடியாமல் மனசு கனத்துவிட்டது. ஏதோ குற்ற உணர்வு உயிரைப் பிசைந்தது. ‘‘நாம இருக்கறவரைக்கும் எல்லாம் எடுத்துச் செய்வோம் தம்பி... மறக்காம வந்துருங்க தம்பி...’’ என்றபடி பழைய ரப்பர் செருப்பு தேய அவர் நடந்துபோனார் எப்போதைக்குமான ஹீரோவாக!

எனக்கு, ‘சாகும்போதும் நான் தர்மனா, துரியோதனனானு தெரியலையே தம்பி...’ என்ற நடராஜப் பிள்ளையின் குரல் உள்ளே ஒலித்தது. ‘தர்மனாகவும் துரியோதனனாகவும் சாவதைவிட அபிமன்யுவாகச் சாவதுதான் பெரிய விஷயம்...’ எனச் சொல்லிவிட்டுப் போவது மாதிரி இருந்தது முருகய்யனின் வருகை.

47

# காலத்தின் சாயலில் கண்ணாடி நகைக்கிறது!

"**பா** ர்த்த மொகமா இருக்குங்களே..?"

‘‘அப்டியா..?"

‘‘தம்பி... நீங்க மதுரதான..?"

‘‘இல்லைங்க... நா தஞ்சாவூரு..."

‘‘எங்க பாத்தேன்... பரிச்சயப்பட்ட மொகமா இருக்குங்களே தம்பி..."

வீட்டுக்கு வந்த அண்ணனின் நண்பர் இப்படியே பேசிக்கொண்டு இருந்தார். கொஞ்ச நேரம் கழித்து சட்டென்று பிரகாசமாகி, ‘‘ஆங்... நம்ம ஜெய்ஹிந்த் புரம் மகேந்திரன் இல்ல... அப்பிடியே இருக்காருங்க இவரு. பேச்சு, சிரிப்பு எல்லாம் அப்பிடியே..." என்றார் சந்தோஷமாக. அடிக்கடி இப்படியான உரையாடல்களை எங்கேனும் யாராவது முகம் மலர்ந்து சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள்.

திடீரென ஆண்ட்ரூஸின் ஞாபகம் வந்துவிட்டது. அவரைப் பார்த்துப் பல வருஷங்கள் இருக்கும். இப்போது என்ன செய்கிறார்... எங்கே இருக்கிறார் என்றுகூடத் தெரியவில்லை. ஆள் பார்ப்பதற்கு அப்படியே ‘லொள்ளு சபா’ மனோகர் மாதிரியே இருப்பார். யூ டியூபில் மனோகர்

காமெடி பார்த்ததில் ஆண்ட்ரூஸ் ஞாபகம் வந்துவிட்டதா தெரியவில்லை. ஏதேதோ ஞாபகங்கள் வந்துவிட்டன. தடக்கென ஆண்ட்ரூஸ்தான் மனோகராக மாறி நடிக்க வந்துவிட்டாரோ எனத் தோன்றியது. 'இது என்ன பைத்தியக்காரத்தனம்' எனச் சிரிப்பாக வந்தது. ஆனால், நம்மை எப்போதும் பித்து நிலைக்கே கொண்டுசெல்ல வல்லவை நினைவுகளின் சாயல்கள்.

அப்போது வடபழனியில் நெற்குன்றம் பாதை தெருவில் குடிபோய் இருந்தோம். ஒரு நாள் அந்தத் தெருவில் நடந்து வந்துகொண்டு இருந்தபோது, எதிரே செல்போனில் பேசியபடி ஒரு பெண் போனாள். சில பல நொடிகள்தான் அவள் முகத்தைப் பார்த்தேன்... நெஞ்சு பதறத் தொடங்கிவிட்டது. கை காலெல்லாம் நடுங்கி, மூச்சு முட்டியது. அது கீர்த்தனா. ''ஏய்... அம்மா இருக்கும்போது கையப் பிடிக்கிறியே... அறிவில்ல ஒனக்கு... விட்றா..." என உதறிவிட்டு, மறுபடி அவளே என் கையைப் பிடித்துக்கொண்டு, ''பயந்தாங்குளி... பயந்தாங்குளி..." எனச் சிரித்த அதே கீர்த்தனா.

பத்து வருடங்களாவது இருக்கும். பிரிந்த நாளின் கடைசிக் கணங்கள்கூட மறந்துவிட்டன. அவளுக்குக் கல்யாணம் நடந்துவிட்டதை, ஒரு மட்ட மத்தியானம் பாடாவதிக் கடையொன்றில் மீல்ஸ் வாங்கித் தந்துவிட்டு, பாதி சாப்பாட்டில்தான் கருணா சொன்னான். கொஞ்ச நாளைக்கு அவளை எங்கேயாவது பார்த்துவிடுவேனோ என மனசு அடிக்கடி திடுக்கிட்டு யோசிக்கும். கத்தரிப் பூ கலர் சுடிதாரை எங்கேனும் பார்த்தால், மனசு பதறும். கொஞ்ச நேரத்துக்கு வேலையே ஓடாது. ஆனால், அவளை எங்கேயும் பார்க்கவில்லை. இத்தனை வருடங்கள் கழித்து வெயில் எரியும் இந்தப் பெருநகரத் தெருவில் அவளைப் பார்ப்பேன் என நினைக்கவே இல்லை. அந்தக் கணமே சுற்றி நடப்பவை யாவும் மறந்து, பித்து நிலையில் அவளைத் தொடர்ந்து நடந்தேன்.

ஒரு கடையில் நின்று ஏதோ வாங்கிக்கொண்டு எதிரே இருக்கும் அபார்ட்மென்ட்டுக்கு நடந்தாள். கொஞ்சம் வெயிட் போட்டிருந்தாள். அதே

நடை, உடல் மொழி... பின்னாலேயே படிக்கட்டில் ஏறி ஃப்ளாட் வரைக்கும் போனேன். பக்கத்து ஃப்ளாட்டில் நின்று சாவி வாங்கிக்கொண்டு திரும்பியவள்... என்னைப் பார்த்து நின்றாள். சில பொழுது உற்றுப் பார்த்து... ‘‘யாரு..?'' என்றாள். பொசுக்கென்று மூளை ஆசுவாசமடைந்தது. அவள் கீர்த்தனா இல்லை. அவளைப் போலவே சாயல்கொண்ட ஒருத்தி. அப்படியே அவளைப்போல!

விறுவிறுவெனத் திரும்பி கிட்டத்தட்ட ஓடிவந்து தெருவில் நின்று ஒரு தம்மடித்தேன். இப்போதுகூட அந்தப் படபடப்பை உணர்கிறேன்.

*‘பழைய காதலி சாயலில்*
*யாரோ ஒருத்தியைத் தெருவில் பார்த்தேன்*
*பம்மிப் பதுங்கி அவளைக் கடந்து*
*பாதுகாப்பான இடத்தில் இருந்து*
*திரும்பிப் பார்த்தேன்*
*அவளேதான்*
*யாரைப் போலவோ ஆகிவிட்டிருந்தாள்’*

என்ற பேயோனின் கவிதையை இப்போதுதான் படித்தேன்.

சாலைகளில், உணவகங்களில், கடற்கரையில், கோயில்களில்... நமக்குப் பிரியமானவர்களின் சாயல்களைப் பார்த்துத் திடுக்கிட்டுப் பதறி நிற்பவர்கள் எவ்வளவு பேர் இருக்கிறோம்? பக்கத்தில் வந்து ‘‘எப்பிடிறா இருக்க?'' எனக் கேட்பார்களா என்று தவிக்கவைத்துக் கடந்துபோகும் சாயல்களில் எத்தனை பேர் இருக்கிறார்கள்?

‘சாயல்’ என்பது முகம் மட்டுமா? ரோஸி சிஸ்டரின் குரல் அப்படியே ‘டி 4’ பத்மாவதிக்கு இருந்தது. அடிக்கடி தலையைக் கலைத்துவிட்டு, ‘காட் ப்ளெஸ் யூ’ எனச் சொல்கிற அந்த மேனரிஸம். தமிழும் இங்கிலீஷுமாக இழுத்து இழுத்துப் பேசுகிற அந்த ஸ்டைல்.

எல்லாத்துக்கும்மேல் ‘எந்நாளும் உன்னை விடமாட்டேன் என் இயேசய்யா... எந்நாளும் உன்னை விடமாட்டேன்’ என அதே பாட்டை... அதே குரலில் பாடியது.

15 வருடங்களுக்குப் பிறகு, ரோஸி சிஸ்டர்அங்கியில் இல்லாமல் புடவை கட்டிக்கொண்டு வந்துவிட்டதைப் போலத்தான் இருக்கிறது பத்மாவதி அக்காவின் அருகாமை. அருள் எழிலன் மீசையை விரலால் நீவி நீவிக் கடிக்கிற மேனரிஸம், அப்படியே செல்வராஜ் வாத்தியாரைத்தான் நினைவுபடுத்துகிறது எப்போதும். ‘‘என்ன ராசுக்குட்டி..." என ராஜசேகரன் சார் கூப்பிடும்போது எல்லாம் நடராஜ மாமாவின் ஞாபகம் வராமல் போகாது.

சாப்பாடு பறிமாறிவிட்டு ஓரமாக நின்றபடி ‘‘வறுத்த மீனு வைக்கவா..." எனப் பரமு அம்மா கேட்கும்போது, ‘இது சென்னையா... அபிவிருத்தீஸ்வரமா’ எனக் குழம்பி அம்மா நினைவு வருகிறது. எப்போதும் தன்னிச்சையாக சட்டைக் கையை ஏற்றிவிட்டுக்கொண்டே பேசும் பாலாஜியைப் பார்க்கும்போது எல்லாம் பகவதியைப் பார்க்கிற மாதிரியேதான் இருக்கிறது. நடையைப் பார்த்து பின்னாலேயே போய் முகத்தைப் பார்த்ததும் ‘இது பாவா இல்ல...’ எனத் திரும்பியிருக்கிறேன். அன்றைக்குப் பனகல் பார்க் பஸ் ஸ்டாப்பில் நின்றவரிடம், ‘‘ஏய் சுல்தான்... என்ன தாடில்லாம் வெச்சுட்டு... என்ன லுக்கு இது..." எனக் கேட்டு அவர் முறைத்துப் பார்த்ததில், ‘ஸாரி...’ சொல்லி நகர்ந்தேன்.




திருவள்ளூர் மின்சார ரயிலில் கடலை மிட்டாய் விற்கிற பையன் அப்படியே ஜெகத் மாதிரியே இருந்தான். மூலக்கடையில் கருவாட்டுக் கடையில் பார்த்த பெண் ராஜாமணிதானா என இன்னமும் விளங்கவில்லை. வெற்றிடத்தைக் காற்று நிரப்பும் என்பது மாதிரி, முகத்தால்... குரலால்... செயல்களால்... சாயல்களால்தான் நம் பிரியங்களையும் பிரிவுகளையும் நிரப்பிக்கொண்டே இருக்கிறோம்!

கிருஷ்ணமூர்த்தி மாமா ஒரு நாள் காணாமல் போய்விட்டார். அவரது கிராமத்தைவிட்டு யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பிவிட்டார். நாலைந்து நாட்கள் ஆகியும் ஆளைக் காணோம். அதன் பிறகுதான் அவர் காணாமல் போய்விட்டார் என உணர்ந்தோம். அத்தை, நெல் குதிரில் சாய்ந்தபடி அழுதுகொண்டே இருந்தது. என்னமோ சண்டை... கோபம்... மனுஷன் போய்விட்டார். மாமாவைத் தேடி தஞ்சாவூர் முழுக்க அலைந்து திரிந்தோம். அப்போது பார்க்கிற எல்லோரும் மாமா மாதிரியே இருப்பார்கள். சாலைகள், பெரிய கோயில், பஸ் ஸ்டாண்ட் எனப் பார்க்கிற இடங்கள் எல்லாம் அவரே நிறைந்திருப்பதாகத் தோன்றும். யார் யாரையோ பார்த்துத் தோள் தொட்டுப் பக்கத்தில் ஓடி ஏமாந்து திரிந்தோம். இல்லாமல் போய்விடுகிறவர்கள் எங்கேயும் இருக்கிறார்கள் என்பதை நான் உணர்ந்த தருணங்கள் அவை. இல்லாமல் போய்விடுகிறவர்களின் நோக்கமும் அதுவேதானோ?

தேடித் தேடி, சிவகங்கை பூங்காவில் 15 நாள் தாடியோடு உட்கார்ந்திருந்த மாமாவைப் பிடித்து அழைத்து வந்தோம். வீட்டு வாசலில் அப்படி ஒரு பராரிக் கோலத்தில் கண்கள் கசிந்து அவர் வந்து நின்றபோது யாரோபோல இருந்தது. நல்லகண்ணு அய்யாவின் இளமைக் காலப் புகைப்படம் ஒன்றைப் பார்த்தபோது, அப்படியே கிருஷ்ணமூர்த்தி மாமாவைப் போலவே இருந்தது. மனம் எல்லை இல்லாத சாயல்களின் நினைவிலேயே உயிர்த்திருப்பதை உணர்ந்தேன்!

எங்கள் ஊரில் திரிபேண்டு அப்படியே ரஜினி மாதிரியே இருப்பான். இரண்டு பக்கமும் தலை ஏறி, சின்னக் கண்கள், கத்தி மீசை என அப்படியே எண்பதுகளின் ரஜினி. இதை எல்லோரும் சொல்லிச் சொல்லி

அவனே ஒரு ரஜினியாக மாறிவிட்டான். ரஜினியின் மேனரிஸங்கள், ஸ்டைல், காஸ்ட்யூம் எனத் தன்னை ரஜினியாகவே மாற்றிக்கொண்டான். லோக்கல் ஆர்கெஸ்ட்ராவில் பவுடர் அப்பி, ஜிகினா டிரெஸ் போட்டு ‘மை நேம் இஸ் பில்லா…’ என அவன் ஆட, எகிறியது மார்க்கெட். எப்போதும் தலையைக் கோதிக்கொண்டு ‘இது எப்டி இருக்கு…’ என அலைய ஆரம்பித்ததில் கிறுகிறுத்தது ஏரியா. திருவிழா ஆர்கெஸ்ட்ரா எல்லாம் சீஸனுக்குத்தானே! மற்றபடி வயித்துப் பொழப்புக்கு என்ன செய்வது..? ரஜினியால் கூலி வேலைக்கு எல்லாம் போக முடியுமா? திரிபேண்டு திருடனானதன் பின்னணிகளில் இதுவும் ஒன்று.



நள்ளிரவுகளில் கொல்லையில் புகுந்து அண்டா குண்டானை எல்லாம் கொண்டுபோக ஆரம்பித்தான். ஒரு முறை தஞ்சாவூரில் யாரோ ஒருவரின் பெட்டியை அடித்துக்கொண்டு வந்துவிட்டான். அதில் எக்கச்சக்கமாய் பணம் இருந்திருக்கிறது. நூறு ரூபாய் நோட்டைச் சுருட்டி அதில் தம்மடிப்பது, கம்மங்குடி வரைக்கும் சரக்கு சப்ளை செய்வது, ‘பச்சப்புள்ளகூட இந்த திரிபேண்டு பேரக் கேட்டா வாயப்பொத்தும்’ என ‘மூன்று முகம்’ அலெக்ஸ்பாண்டியனாக பஞ்ச் அடித்தபடி பணத்தை

அள்ளிவிட்டு ரவுசு பண்ணியவனை, ஒரே வாரத்தில் போலீஸ் அமுக்கியது. கொண்டுபோய் லாக்கப்பில் வைத்துச் செதுக்கி எடுக்க, ரஜினி கஜினியாகி ஊருக்குத் திரும்பினான். அதிலிருந்து அவன் ஹீரோ இமேஜே காலியாகிவிட்டது. ஒரு முறை, பள்ளிவாசலில் அவன் முதுகில் பாறாங்கல்லை வைத்து நாள் முழுக்க நிற்கவிட்டார்கள். ஆனாலும், 'ஜஸ்ட் லைக் தட்' தூக்கி எறிந்துவிட்டு, மறுநாளே கை வைக்க ஆரம்பித்துவிடுவான்.

15 வருடங்களுக்குப் பிறகு திரிபேண்டைச் சமீபத்தில்தான் பார்த்தேன். பெரியவராகி இருந்தார். பக்கத்து ஊரில் காய்கறிக் கடை போட்டிருக்கிறார். தலைமுடி பாதி கொட்டி, நரைத்து ஆளே உருமாறிப் போயிருக்கிறார். ''இப்போ நேர்மையாப் பொழைக்கிறேன் தம்பி... எல்லாம் போயிருச்சு. ஆனா, இப்பமும் நாம சூப்பர் ஸ்டார்தான்... மனசால தம்பி..." என வேகமாக நெஞ்சில் அடித்துக் காட்டினார். இப்படி ஊருக்கு ஊர் எத்தனையோ எம்.ஜி.ஆர்கள், சிவாஜிகள், சரோஜா தேவிகள், விஜய்கள், அஜீத்கள்... வண்ணங்கள் கரையும் கனவுகளின் துயரங்களாகவே இருக்கின்றன சாயல்களின் வாழ்க்கை எப்போதும்!

'கொழந்த யார் மாரி இருக்கு..?' என்கிற கேள்வியிலேயே தொடங்கிவிடுகிறது ஒவ்வொருவருக்குமான சாயல்களின் உலகம். யாரிடமாவது, யாரையாவது தேடிக்கொண்டே இருப்பது பூர்வ ஜென்மம்போல் நம்மைத் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. யாராவது வந்து யாருடைய இடத்தையேனும் தங்கள் சாயல்களால் இட்டு நிரப்பிக்கொண்டே இருக்கிறார்கள். நினைவுகளைப் புதுப்பிக்கிறார்கள். இந்த நாளை அழகாக்குகிறார்கள். வாடிய பொழுதைத் துளிர்க்க வைக்கிறார்கள். காதலும், நட்பும், உறவும், பிரிவும் சாயல்களால் நிறைந்துகிடக்கின்றன.

இப்போதெல்லாம் அடிக்கடி எனது பேச்சிலும் நடவடிக்கைகளிலும் என் அப்பாவின் சாயலை என்னிடமே நான் உணர்கிறேன். அது சமயங்களில் சந்தோஷத்தையும் சமயங்களில் துயரத்தையும் தருகிறது. எல்லோருக்கும் ஏதோ ஒரு நாளில் அப்பா, அம்மாவின் சாயல்

வந்துவிடும் என்று தோன்றுகிறது. கண்ணாடி பார்க்கும்போது எல்லாம் வயதாகிக்கொண்டே இருப்பது நமக்கா நமது சாயலுக்கா எனக் குழம்புகிறது மனம். கண்ணாடி நகைக்கிறது காலத்தின் சாயலில்!

**ஒ** ரு ஆக்ஸிடென்ட்டில் பிரேம் சார் செத்துப்போனபோது, அவரை அடையாளம் காட்ட திருப்பூர் ஜி.ஹெச். மார்ச்சுவரிக்குப் போயிருந்தோம். அந்த அறையில் 10, 20 பிணங்கள் கிடந்தன. யார் யாரோ, யார் யாரின் சாயல்களிலோ செத்துக்கிடந்தார்கள். மனசு திடுக்கிட்டு திடுக்கிட்டு அடங்கியது. இந்த மாதிரியான தருணங்களில் மனசு ஏதேதோ கற்பனைகளுக்குப் போய்விடுகிறது. இறந்து கிடந்த ஒருவரின் கையைப் பார்த்து என்னுடன் வந்த சக்திவேல் பதறி நின்றான். சட்டென்று அவர் முகத்தைப் பார்த்து ஆசுவாசமானான். ‘ச்சீ...’ எனத் தலையை உதறிக்கொண்டான்.

சந்தன கலர் சட்டையும் காப்பி கலர் பேன்ட்டும் போட்டிருந்த பிரேம் சாரை அடையாளம் காட்டினோம். அடுத்த வாரம்போல ஹாஸ்டலுக்கு சக்திவேலின் அப்பா வந்திருந்தார். அப்போதுதான் பார்த்தேன்... அவரது வலது கையில் ஒரு ரெட்டை இலையைப் பச்சை குத்தி இருந்தார்... திருப்பூர் ஜி.ஹெச். மார்ச்சுவரியில் சக்திவேல் பார்த்துத் திடுக்கிட்டவரின் கையில் குத்தியிருந்ததைப் போலவே!

48

# மனித மனத்தின் மாண்பு...

‘‘**டே** ய் பங்காளி... ஜோதி பேசுறேன். கோயம்பேட்ல இருக்கேன்... ஒங்கூட்டுக்கு எப்பிடி வரணும்? ஆங்... ஆட்டோல்லாம் தோதுப்படாது. பஸ் ரூட்டு சொல்லு?’’— ஒரு நாள் அதிகாலையில் குடும்பத்தோடு வந்து கதவு தட்டினான் ஜோதி. தன் மனைவி, இரண்டு பிள்ளைகளுடன் நான்கு மொட்டைத் தலைகள்.

‘‘ரொம்ப நாளா இது கெடந்து அனத்திட்டேகெடந்துச்சு... திருப்பதி போவணும்னு. வெயிலு வேற ஏறிக்கட்டி அடிச்சுதா... அதான் இழுத்துட்டுக் கெளம்பிட்டேன். சின்னதுதான் மொட்ட அடிக்கிறப்ப கரச்சலக் குடுத்துருச்சு. என்னா கூட்டங்கற... ஆனா முருகா... சபரிமலைக்கு திருப்பதி தேவலாம்யா... கொஞ்சம் எடுத்து செய்றானுவோ..." — வந்து உட்காரக்கூட இல்லை. தடதடவெனப் பேசிக்கொண்டே நின்றான்.

‘‘ஆமா... நீ ஆரம்பிச்சுருவியே... அதுங்கள வேற தூக்கத்துல எழுப்பி... நீங்க படுங்கண்ணே..." என்றார் அவன் மனைவி. ‘‘நீ போய் படுத்துக்க... நாங்க போயி ஒரு டீயடிச்சுட்டு வர்றோம். சின்ன வண்டு நீ வாடி... மாமனுக்கு குட்மானிங் சொல்லு... சாக்கோபார் கேளு!’’



டீ குடித்துவிட்டு வருகிற வழியில் இட்லி மாவு வாங்கினேன். ‘‘என்னங்கடா இது... தண்ணியும் பாக்கெட்ல குடுக்குறான்... இட்லி மாவும் பாக்கெட்ல குடுக்குறான். ஒங்க வாழ்க்கையே இப்பிடி பாக்கெட் பாக்கெட்டாப் போயிட்டு இருக்கேடா. அரிசியும் உளுந்தும் ஊறப்போட்டு நாமளே அரைச்சித் திங்கிற மாரி வருமாய்யா... அதுக்குக்கூட நேரம் இல்லயா?’’ எனச் சிரித்தான் ஜோதி.

‘‘நான்லாம் ஆறு வயசுலதான் பள்ளிக்கூடம் பக்கமே போனேன்... வாழ்க்கைல சந்தோஷமாத்தானய்யா இருக்கேன். ரெண்டு வயசுல எல்லாம் புள்ளைவோலக் கொண்டுபோயி எதுக்குய்யா ஸ்கூல்லவிடுறீங்க... இதுங்கள அஞ்சு வயசுலதான் ஸ்கூல் சேக்கப்போறேன்... அதுவும் அரசாங்கப் பள்ளிக்கூடம்தான். அதுங்களா கத்துக்கும்யா...’’ என்றான், எங்கள் வீட்டுப் பாப்பாவை ஸ்கூலில் விடப் போகும் போது.

சாயங்காலமாக மெரினா பீச் போனார்கள். அவன் பஜ்ஜி வாங்கித் தந்தபோது அவன் மனைவியிடம் மின்னிய வெட்கம் ஒரு இன்ஸ்டன்ட் காவியம். பிள்ளைகளுக்குப் பலூன்கள் வாங்கித் தந்து, அண்ணா சமாதி, எம்.ஜி.ஆர். சமாதி காட்டி, சந்தோஷமாகத் திரும்பினார்கள். வருகிற வழியில் ‘சகுனி’ பட போஸ்டரில் கார்த்தியைப் பார்த்துவிட்டு, ‘‘சிவகுமாரோட ரெண்டு பசங்களும் நல்லா வந்துட்டாய்ங்கள்ல... எடம்லாம் வாங்கிப் போட்ருக்காங்களா..? ஏம் பங்காளி... ரஜினி இப்ப

இங்க இருக்காப்லயா... இமயமலை போயிட்டாப்லயா..? அண்ணே... ஆட்டோ அம்மவூட்டு வழியாப் போவுமா..? புள்ளைவோளுக்குக் காட்டுவோம்... எல்லாப் பயகளுக்கும் நாமதான மொதலாளி...'' என வரும் வரை இருவரும் நான்ஸ்டாப்பாகப் பேசிக்கொண்டே வந்தனர்.

சந்திரா பவனில் சந்தோஷமாக மசாலா பால் குடித்தார்கள். குழந்தைகளுக்கு பொம்மை போட்ட வாட்டர் பாட்டிலும், டி.வி. கவரும் வாங்கிக்கொண்டார்கள். இரவு கோயம்பேட்டில் அவர்களை பேருந்து ஏற்றிவிட்டுத் திரும்பியபோது மனசு ரொம்ப லேசாகி இருந்தது.

ஜோதி என் செட்டுதான். அவனைப் பார்க்கும்போது எனக்கு ஆச்சர்யமாகவும் பொறாமையாகவும் இருக்கிறது. அவனுக்கு இந்த நகரம் குறித்து, வசதி வாய்ப்புகள் குறித்து, எந்தப் பிரமிப்பும் ஏக்கமும் இல்லை. யார் குறித்தும் அச்சம் இல்லை. வாழ்க்கைப் பற்றிய சிக்கலோ, குழப்பமோ இல்லை. குயுக்தி இல்லை. மனைவி, பிள்ளைகளை அப்படி நேசிக்கிறான். மிக எளிமையாக, சந்தோஷமாக இந்த வாழ்க்கையை அணுகுகிறான். எதையும் அடைந்துவிட வேண்டும் என்கிற வெறி இல்லை. யாரையும் புறந்தள்ளிவிடுகிற, கவிழ்த்துவிடுகிற எத்தனிப்பு இல்லை. அவனைப் போன்ற வெள்ளந்தியான, சந்தோஷமான மன அமைப்பு எனக்கு இல்லையே என்கிற வருத்தம் என்னைத் தின்கிறது.

''பங்காளி வந்து சேந்துட்டம்... அதுக்குத்தான் பயணத்துல ஒடம்பு கொஞ்சம் முடியல... படுத்துருக்கு. நானே சமைச்சுட்டேன்... தக்காளி சாதம் எடுத்துட்டு வேலைக்குக் கெளம்பிட்டேன்... சாயங்காலம் வந்து இத கோயிலுக்குக் கூட்டிப் போணும்...'' என காலையிலேயே ஜோதி போன் பண்ணியது மனசைச் சட்டென மலர்த்திப் போட்டுவிட்டது.

இலக்குகள், லட்சியவாதங்கள், அரசியல், பண வேட்கை... எதுவும் இல்லாத எளியவர்களின் வாழ்க்கை எவ்வளவு சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் இருக்கிறது! வாழ்க்கையை அதன் உண்மையோடும் அன்போடும் கொண்டாடுபவர்கள் இந்த மாதிரியான எளியவர்கள்தான்.

**ரெ** ங்கநாதன் தெருவில் ஆயிரம் ரெண்டாயிரத்துக்கு பார்த்துப் பார்த்து பர்ச்சேஸ் செய்துவிட்டு, வியர்வை வழிய வழிய ரோட்டுக் கடையில் கட்டைப் பைகளோடு நின்று குடும்பமாக கோன் ஐஸ்க்ரீம் சாப்பிடுபவர்களின் முகங்களில் எவ்வளவு சந்தோஷம் வழிகிறது. ஞாயிற்றுக் கிழமையில் புருஷனும் பொண்டாட்டியும் லேட்டாக எழுந்து, எண்ணெய்க் குளியல் போட்டு, கறி எடுத்துச் சமைத்து எடுத்துக்கொண்டு அம்மா வீட்டுக்குப் போவதிலேயே எவ்வளவு மகிழ்ச்சி நிறைந்துவிடுகிறது சிலருக்கு.

எவ்வளவு பெரிய கூட்டத்திலும் சட்டெனப் பொண்டாட்டியின் புடவை முந்தியை எடுத்து முகம் துடைத்துக்கொள்கிறவன் எவ்வளவு நிம்மதியாக இருக்கிறான். மொத்தமாக ஒரு வேன் எடுத்துக்கொண்டு, சோறு கட்டிக்கொண்டு ஆலங்குடிக்கும், பெரிய பாளையத்துக்கும் போகிறவர்களின் நாட்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன. எத்தனை பெரிய குடும்பப் பிரச்னையையும் ஒரு காதுகுத்தில், குலசாமிக் கோயிலில் வைத்து, ஆஃப் ஓல்டு மங்கில் தீர்த்துக்கொள்கிறவர்கள் எவ்வளவு கொடுத்து வைத்தவர்கள்.

''பேசுனாத் தீராதது என்னா இருக்கு மாப்ள... நீ சரக்கப் புடிச்சுக்கிட்டு வெட்டாத்துப்பாலத்துக்கு ஆப்போஸிட்ல வந்துரு... செந்திலையும் வரச் சொல்லியிருக்கேன். அவன்ட்ட சைடு டிஷ் வாங்கச் சொல்லிட்டேண்டா... அப்றம் என்னா... இன்னிக்கு மிக்ஸ் ஆகிருங்க...'' என்கிற ரவி சித்தப்பா, ஐ.நா. சபைக்குத் தலைவராகப் போனால்... நல்லா இருக்கும்.

வாசலில் மாஞ்செடிகளும் தென்னங்கன்றுகளும் வைத்து குழந்தைகள் மாதிரி தினமும் அவற்றுடன் பேசுபவர்கள், தெருக் குழந்தைகள், எல்லோருக்குமாக ஃப்ரிஜ்ஜில் கேக் வாங்கி வைப்பவர்கள், ஆஸ்பத்திரியில் படுத்துக்கிடக்கும்போது, பக்கத்து பெட்காரருக்கும் சேர்த்து மணத்தக்காளி ரசம் செய்துவரும் குடும்பம், ஏதோ சண்டையில் பேசாமல் போனவரை அப்பன் செத்துப்போய்க் கிடக்கிற எழவு வீட்டில் பார்த்ததும் கையைப் பற்றிக்கொண்டு கதறி

முன்னிலும் நெருக்கமாக ஆகிவிடுகிறவர்களை, அவசரத் தேவைக்கு கல்லு வைத்த வளையலை அடகு வைத்துவிட்டு, ‘இதுக்கென்ன... ஏங்கைக்கு எடுப்பாத்தான இருக்கு...’ என ரப்பர் வளையல்கள் வாங்கிப் போட்டுக்கொண்டு, கணவனிடம் சிரிப்பவர்களைப்போல் இருந்துவிட்டால்... அதைவிட வேறென்ன வேண்டும் இந்த வாழ்வில்?




அறியாமையைவிடவும் பெரிய சந்தோஷம் எதுவும் இல்லை. இந்த வாழ்க்கையை அதன் போக்கில் அனுபவிக்க, அறிவுதானே பெரிய தடையாக இருக்கிறது? கொஞ்சம் யோசித்துப் பார்த்தால், ஜோதி மாதிரி நிம்மதியான வாழ்க்கையை வாழவிடாமல் என்னைத் துரத்தி அடிப்பது இந்த அறிவு முகமூடிதான் எனத் தோன்றுகிறது. எதையேனும் அடையத் துடிக்கிற மனம்தான் இந்த வாழ்வின் சாபம் என நினைக்கிறேன். இந்த வாழ்வை, சமூகத்தை, அரசியலைச் சிக்கலாக்குவதும் குழப்பியடிப்பதும் சிதைப்பதும் அறிவாளிகள், லட்சியவாதிகள் எனப் பெயரிட்டுக்கொண்டவர்களின் மூளைகள்தான். அன்பை, கருணையை, ஈரத்தை, கோபத்தை அதன் போக்கில் வெளிப்படுத்தாமல், ‘அறிவு’ தரும் முகமூடிகள்தான் இருப்பதிலேயே குரூரமானவை.

**சி** றுபிராயத்தில் தஞ்சாவூரில் உள்ள சித்தி வீட்டுக்கு விடுமுறைக்குப் போவோம். அப்போது பக்கத்து வீட்டில் ஒரு தாத்தாவும் பாட்டியும்

இருந்தார்கள். பெண் பிள்ளைகளைக் கட்டிக் கொடுத்துவிட்டு அவர்கள் தனித்து இருந்தார்கள். அவர்களின் வீட்டு வாசலில் வாதாம் மரங்கள் இரண்டு இருந்தன. எங்கு பார்த்தாலும் இள மஞ்சளும் பச்சையுமாக வாதாம் பழங்கள் உதிர்ந்துகிடக்கும். அதைப் பொறுக்க நாங்கள் போனால், அந்த தாத்தா டென்ஷன் ஆவார். ஒரு தடிக்கம்பை எடுத்துக்கொண்டு எங்களைத் துரத்துவார். அவருக்குத் தெரியாமல் பொறுக்கப்போனால், எங்கு இருந்து வருகிறார் என்றே தெரியாமல் திடீரென வந்து கம்பைச் சுழற்றுவார். அவர் தூங்கிவிடும் மதியங்களில் சத்தம் இல்லாமல் போய் உதிரும் பழங்களைப் பொறுக்கி வந்துவிடுவோம். சாயங்காலம் வெளியே வந்து நின்று கண்டபடி திட்டுவார்.

ஒரு நாள், அந்தத் தாத்தா செத்துப்போய்விட்டார். ஆஸ்பத்திரியில் இருந்து அவரது சடலம் வந்து இறங்கியது. எல்லா மகள்களும் வந்துவிட, ஒரே கூட்டம். அப்போதுதான் அவர் செத்துப்போனதே தெரியும். இரண்டு நாட்களுக்குப் பிறகு, மறுபடி யாரும் இல்லாமல் வெறுமையாகக் கிடந்தது அந்த வீடு. அந்தப் பாட்டி வந்து வெளியே விளையாடித் திரிந்த எங்களை வீட்டுக்குள் அழைத்துப்போனது. உள்ளே ஒரு ரூமில் பாதி அளவுக்கு வாதாம் பழங்கள் குவிந்துகிடந்தன. ‘‘இந்தாங்கப்பா... எடுத்துக்கோங்க... தாத்தா ஒங்களுக்கெல்லாம் குடுக்கச் சொன்னாரு...’’ என்றபடி பழங்களை அள்ளி அள்ளி எங்களிடம் தந்தது அந்தப் பாட்டி. ‘‘அவருக்கு ரொம்ப வருத்தம்... ஒங்களை எல்லாம் அடிச்சுட்டோமேனு... ஆஸ்பத்திரில இருக்கும்போது ரொம்ப வருத்தப்பட்டாரு. இனிமே நீங்க வந்தா அடிக்காம வாதாம் பழம் குடுக்கச்சொன்னாரு... பயப்படாம வாங்க...’’ என அவர் சொன்னதன் கனம் அப்போது புரியவில்லை. இப்போது அது எவ்வளவு பெரிய அற்புதம் எனச் சிலிர்க்கிறது.

சாகும்போது குழந்தைகளிடம் மன்னிப்புக் கேட்கும் ஒரு மனம் ஓர் எளிய மனிதருக்குத்தான் வாய்க்கும். புத்திசாலிகளுக்கு ஒருபோதும் வாய்க்காது. அப்படி ஒரு மனம் வாய்த்துவிட்டால், அதைவிடக் கொடுப்பினை ஏது?

**தி** ருப்பூரில் வேலை பார்த்தபோதுதான் மாறனைத் தெரியும். அவருக்கு ஒரு கை கிடையாது. முழுக்கை சட்டை போட்டு, பாதி மடக்கிவிட்டு உட்கார்ந்திருப்பார். அங்கு ஒரு கட்டணக் கழிப்பறையை எடுத்து நடத்தி வந்தார். கழிப்பறைக்கு எதிரே டேபிள் போட்டு, பக்கத்தில் ஓர் ஓட்டை ஃபேன் போட்டு உட்கார்ந்திருப்பார். டேபிளில் எப்போதும் ரேடியோ பாடிக்கொண்டே இருக்கும். இசைப் பிரியர். அவரே அற்புதமான பாடகர். ரேடியோ பாடுவதை நிறுத்தும்போது, அவர் பாட ஆரம்பித்துவிடுவார்.

*'அதிகாலை நேரமே...*
*புதிதான ராகமே...*

எங்கெங்கிலும் ஆலாபனை...' எனப் பாடிக்கொண்டே சைகையில்தான் நமக்குப் பதில் சொல்வார். ''சாப்பிட்டிங்களாண்ணே..?" என்றால், ''புஞ்சை உண்டு நஞ்சை உண்டு பொங்கி வரும் கங்கை உண்டு... பஞ்சம் மட்டும் இங்கு இன்னும் மாறவில்ல... இந்த பாரதத்தின் சோத்துச் சண்டை தீரவில்ல..." எனப் பாடிக்கொண்டே தோள் குலுக்கி ஆடுவார். அவரிடம் எப்போதும் துளி சோகத்தையும் பார்த்தது இல்லை. எப்போதும் பாட்டு, இசை, புன்னகைதான்.

''ஏண்ணே... இந்தக் கைக்கு என்னாச்சுண்ணே..?'' என ஒரு முறை கேட்டபோது, ''ஒரு ஆக்சிடென்ட்ல போச்சுப்பா... பஸ்ஸு கீழ உருண்டு அடிபட்டு அப்பிடியே கெடந்தேன். கை உள்ள மாட்னதே தெரியல... அப்பிடியே கெடந்துருந்தாக்கூடத் தப்பிச்சுருக்கும். பக்கத்துல ஒருத்தர் மொனங்கிட்டுக் கெடந்தாருல்ல... அவரைப் புடிச்சு இழுக்க நவுந்தேன்ல.... மாட்ன கை புடுங்கிக்கிச்சு..." எனச் சிரித்தார்.

ஒரு நாள் அவருக்கு உடம்பு முடியவில்லை. கல்யாணம் குட்டி என எதுவும் இல்லாத தனிக்கட்டை. காய்ச்சல் வந்து கழிப்பறை ஓரமாகவே படுத்திருந்தார். நான் பார்க்கப்போனபோது, ''ஒண்ணுமில்ல... சின்ன காய்ச்சல்தான். பூங்காற்று புதிதானது புதுவாழ்வு புதிரானது..." எனப் பாடியபடி எழுந்து அமர்ந்து பக்கத்தில் இருந்த ஒரு தகரப் பெட்டியைத் திறந்து காட்டினார். பெட்டி முழுக்கக் கசங்கிய ரூபாய் நோட்டுகள். சில

ஆயிரங்கள் இருக்கும். அதை அள்ளிக் காட்டியபடி, ‘‘எதுக்கு சேத்து வெச்சுருக்கேங்கிற... நாஞ் செத்தா... என் அடக்கச் செலவுக்கு. சும்மாக் கொண்டுபோய் பொதச்சுட்டுப் போயிராம... சந்தோஷமா வேட்டு கீட்டு போட்டு அலங்காரம் பண்ணிக் கொண்டுபோய் அடக்கம் பண்ணணும். நம்ம எளங்கோகிட்ட சத்தியம் வாங்கிப்புட்டேன்... இதுலதான் அடக்கம் பண்ணணும்னு... சந்தோஷமா இருந்தேன்... யாருக்கும் தொந்தரவு கொடுக்காம நம்ம காசுல சந்தோஷமா போயிரணும்... அது போதும்பா எனக்கு..." என அவர் சிரித்தது இப்போதும் மனசுக்குள் ஒலிக்கிறது.

அவரைப் போன்ற அன்பனாய், அற்புதனாய், லட்சியவாதியாய் ஓர் புத்திசாலியால், அறிவாளியால் ஆகவே முடியாது என்பதும் உண்மைதானே!

49

# சொற்களின் மீதான சொல்ல முடியாத ஆச்சர்யம்!

*'இறந்துபோனவரைப்*
*புதைத்துவிட்டுத்*
*திரும்பும் வழியில்*
*உதிர்ந்துகிடப்பவை*
*பூக்களல்ல... சொற்கள்!'*

எப்போதோ படித்த இந்தக் கவிதை, எப்போதும் தீராத சலனங்களை எழுப்பிக் கொண்டே இருக்கிறது. உதிர்ந்துகிடப்பவை இறந்துபோனவர் சொல்லிவிட்டுப்போன சொற்களா... சொல்லாமல்போன சொற்களா? இந்தக் கேள்விதான் என்னை அரிக்கிறது.

யோசித்துப் பார்த்தால், நம் ஒவ்வொருவரிடமும் வாழ்நாள் எல்லாம் சொல்லாமல் வைத்திருக்கும் சொற்கள் எவ்வளவு இருக்கின்றன? ஒரு குழந்தையைப் போல, பைத்தியத்தைப்போல ஒவ்வொருவரிடமும் சொல்லமுடியாமல் புதைந்து கிடக்கும் சொற்கள் லோடு லோடாக இருக்கிறதா இல்லையா?

நேற்று திருநகர் சிக்னல் பக்கம் ஒரு கடை வாசலில் டிரம்மில் வைத்திருந்த தண்ணீரை, கந்தல் வேட்டியும் வெற்றுடம்பும் ஜடாமுடியுமாக வந்த ஒருவர் மொண்டு குடிக்கப் போனார். ''ஏய்... ச்சீய்

போ...'' எனக் கடைக்காரர் சத்தம்போட, சடாரெனத் தண்ணீர் டம்ளரைக் கீழே விசிறிவிட்டு சத்தமாகத் தனக்குள் பேசியபடி ஆவேசமாக நடந்துபோனார் அவர். கடைக்காரர் சட்டென வெட்கி நின்றார். 'மனநலம் சிதைந்த வழிப்போக்கன் ஒருவனுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூட மனசில்லாத நீ மனிதனா?' என்கிற சொற்களை அவர் பேசாமலேயே அங்கே வீசிவிட்டுப் போய்விட்டார்.

**ஒ** ரு முறை, நண்பரின் மகள் தற்கொலை முயற்சியில் இறங்கினாள். டப்பா தூக்க மாத்திரைகள். நல்லவேளையாகப் பிழைத்துக் கொண்டாள். ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த்தபோது, ''என்னன்னே தெரியலப்பா... ஓங்கிட்ட நல்லாப் பேசுவாள்ல...'' என நண்பரும் அவர் மனைவியும் தலையில் அடித்துக்கொண்டு அழுதார்கள். படுக்கையில் கிடந்த அந்தப் பெண்ணிடம் தனியே போய், ''என்னம்மா ஆச்சு..?'' என்றேன். அவள் கண்களில் இருந்து நீர் வழிந்துகொண்டே இருந்தது. வாய் கோணி கோணிச் சிரித்தாள். எதுவுமே பேசவில்லை. கண்ணீரும் நிற்கவில்லை. வெயிலும் மழையும் சேர்ந்து வருகிற மாதிரி கண்ணீரும் புன்னகையும் சேர்ந்து வருவது... அதீத சந்தோஷங்களிலோ, சோகங்களிலோதானே? அவள் மருத்துவமனையில் இருந்த ஒரு வாரமும் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லை.

''அவள்ட்ட இது சம்பந்தமா எதுவும் கேட்காதீங்க. இப்போ இல்ல... எப்பவும்...'' எனச் சொல்லிவிட்டு வந்தேன்.

**மு** ன்பு ஒரு முறை வேளாங்கண்ணி திருவிழாவுக்குச் சென்றிருந்தபோது, நண்பனின் பொம்மைக் கடைப் பக்கம் ஒரு குட்டிப்பெண் அழுதபடி நின்றுகொண்டு இருந்தாள். விசாரித்தபோது, திக்கித் திக்கி ஹிந்தியில் இரண்டு வார்த்தைகள் சொல்லிவிட்டு மறுபடி அழுதாள். எதுவும் புரியவில்லை. கொஞ்ச நேரம் பார்த்துவிட்டு பக்கத்தில் இருந்த போலீஸ் பூத்தில் அவளைக் கொண்டுபோய் விட்டோம்.

மைக்கில் தமிழில் அறிவிப்பு செய்தார்கள். ஒரு பெண் போலீஸ் வந்து, ''தமிழ்ல சொன்னா புரியுமோ புரியாதோ... இங்கிலீஷ்ல

சொல்லுங்க...'' என்றபடி அவரே அறிவிப்பும் செய்தார். கொஞ்ச நேரத்தில் வெள்ளைக்காரப் பெண்மணி ஒருவர் ஓடிவந்தார். அந்தக் குழந்தையை அள்ளி எடுத்துக்கொண்டு, ''தேங்க்யூ... தேங்க்யூ...'' எனச் சொல்லிக்கொண்டே இருந்தார். லண்டனில் இருந்து வந்திருக்கிற அவர், கொல்கத்தாவில் ஒரு ஹோமில் இந்தச் சிறுமியைத் தத்தெடுத்திருக்கிறார். அந்தச் சிறுமியை அழைத்துக்கொண்டு இந்தியா முழுக்கச் சுற்றிக்கொண்டு இருக்கிறார். கண்ணீர் வழிய வழிய... அந்தச் சிறுமியை அவர் முத்தமிட்ட காட்சி மறக்க முடியாதது. எல்லாவற்றையும் சொல்லிவிட மொழிகளால் முடியுமா என்ன?



''கண்ணீரும் புன்னகையும்தான்யா தேவபாஷை...'' என்பார் தஞ்சை ப்ரகாஷ். கண்ணீர், புன்னகை, பசி, வலி எல்லாமே தேவபாஷைதான்.

**அ** ன்றைக்கு விலை உயர்வுக்கு எதிரான ஒரு போராட்டத்துக்குப் போயிருந்தேன். ஒரு பையனும் பெண்ணும் அரை மணி நேரம் பறையடித்து ஆடினார்கள். பறையொலி முடிந்ததும் வந்துவிட்டேன். அந்த இசையைவிடவும் பெரிய கோபம் என்ன இருக்கிறது..? எல்லாம் அது பேசிவிட்டது.

சென்ட்ரல் ஸ்டேஷனில் சாயங்காலமாக ஓவர் பிரிட்ஜில் உட்கார்ந்து பார்வையில்லாத ஒரு முதியவர் புல்லாங்குழல் வாசித்துக்கொண்டு இருப்பார். சிவகங்கை பூங்கா வாசலில் டோலக்கு அடித்துக்கொண்டு

உட்கார்ந்திருக்கிற ஒருவர் பேசியே பார்த்தது இல்லை. சனிக்கிழமைகளில் தாமஸ்மவுன்ட் சர்ச்சில் பியானோ வாசிக்கிறவரின் முகம் எவ்வளவு யோசித்தும் ஞாபகத்தில் வரமாட்டேன் என்கிறது. இசை மாதிரி, கைகுலுக்கல் மாதிரி, சிரிப்பு மாதிரி முகங்கள் இருப்பது இல்லை எப்போதும்.

பத்து வருடங்களுக்கு முன்பு, மேட்டுப்பாளையத்தில் நண்பன் ஒருவனின் வீட்டுக்குப் போய் ஒரு மாதம்போல் தங்கி இருந்தேன். பெரிய வயல்வெளிகளுக்கு நடுவே அவர்கள் வீடு. தோட்டத்தில் சமையலறை தனியே தள்ளி இருக்கும். ஒரு பகலில் தண்ணீர் எடுப்பதற்காக அந்தச் சமையலறைக்குப் போனேன். உள்ளே ஏதோ பேச்சுக் குரல் கேட்டுக்கொண்டு இருந்தது. பேச்சுச் சத்தம் நிற்காமல் தொடரவே எட்டிப் பார்த்தேன்... அந்தக் காட்சி ரொம்ப ஆச்சர்யமாக இருந்தது. நண்பனின் அம்மா சமையல்கட்டு திண்டில் உட்கார்ந்தபடி வெளியே பார்த்து தனியே பேசிக்கொண்டு இருந்தார்.

‘என்ன..?’ என உற்றுப் பார்த்தபோதுதான் பக்கத்தில் இருந்த ஜன்னலில் ஒரு பூனை உட்கார்ந்திருந்தது தெரிந்தது. அவர் அந்தப் பூனையிடம்தான் பேசிக்கொண்டு இருந்தார். அந்தப் பூனை வெகு சகஜமாக அவரைப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தது. அந்த அம்மா தன்னை மறந்து அதனிடம் ஏதேதோ பேசிக்கொண்டு இருந்தார். நான் சட்டெனத் திரும்பிவிட்டேன். அன்றில் இருந்து கவனித்தால், நண்பனின் அம்மா பாதி நாள் அந்தப் பூனையிடம்தான் பேசிக்கொண்டு இருந்தார்.

‘‘அது ச்சும்மா அந்தப் பூனைகிட்டயே பேசிட்டுக் கெடக்கும்ரா...’’ என சகஜமாகச் சொன்னான் நண்பன். அடுக்களை ஜன்னலில் உட்கார்ந்திருக்கும் பூனையிடம் அந்தம்மா பேசிக்கொண்டு இருந்த காட்சி, நெடு நாட்களுக்கு என்னை இம்சித்துக்கொண்டே இருந்தது. அதன் பிறகு பார்த்தால், நிறையப் பெண்கள் வளர்ப்புப் பிராணிகளுடன் பேசுவதைக் கவனித்தேன். ஊரில் இருந்து காதலித்து ஓடிவந்து கல்யாணம் பண்ணிக்கொண்ட, உறவுகளுடன் பேச முடியாமல் போன

அத்தை, தான் வளர்க்கிற நாயுடன் அப்படிப் பேசுகிறது, கோபப்படுகிறது, மடியில் தூக்கிப்போட்டுக் கொஞ்சுகிறது, அழுகிறது.

**ம** துரையில் தங்கியிருந்தபோது, கீழ் வீட்டில் இருந்த கீதாக்கா ஏகப்பட்ட கிளிகள் வளர்த்து அவற்றுடன் பேசிக்கொண்டே இருக்கும். ஒவ்வொன்றுக்கும் ஒரு பெயர் வைத்து அவ்வளவு உயிர்ப்பாகப் பேசிக்கொண்டு இருக்கும். சுதா சித்திக்கு எப்போதும் பஞ்சாரத்துக்குப் பக்கத்தில் உட்கார்ந்து கோழிகளிடம் பேசும் பழக்கம் இருந்தது. தனது துணையிடம், பிள்ளைகளிடம், உறவுகளிடம், நட்பிடம் பேச முடியாத எதை பிராணிகளிடம் பேசிவிட முடியும் என எனக்கு ஆச்சர்யமாக இருக்கும். ஆனால், மனிதர்களிடம் பேசிப் புரியவைக்க முடியாமல் போன அன்பை அவற்றிடம்தான் பேச முடியும் இல்லையா?

பகிர முடியாத விருப்பங்களை, தாளாத உணர்வுகளை, அழுத்தும் சுமைகளைச் சொல்லிவிட சொற்கள் மட்டுமே போதுமா? அந்தச் சொற்களையும் ஏந்திக்கொள்ள இதயங்கள் வேண்டும் இல்லையா? போய்ச் சேர முடியாத ஏராளமான சொற்களை வாழ்நாள் எல்லாம் சுமந்து அலைந்து திரிகிறவர்கள் பூனைகளிடமும் நாய்களிடமும் கிளிகளிடமும் அவற்றை இறைத்துக்கொண்டு இருக்கிறார்கள்.

தெருவுக்குத் தெரு கடவுளிடம் நின்று பேசிக்கொண்டு இருக்கிறார்கள். காணாக் கடவுளர்களிடம் உருகி உருகிப் பேசுகிறார்கள். மனிதர்களிடம் செல்லுபடி ஆகாத சொற்கள் கடவுளின் காலடியில் கொட்டிக்கொண்டே இருக்கின்றன. கடவுளின் ஒரே ஒரு சொல் நம் எல்லாத் துயரங்களையும் தீர்த்துவிடும் என்ற நம்பிக்கையில் எவ்வளவு சொற்கள் கொட்டப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

*‘அதிகாலை*
*புல்வெளிப் பனி*
*அடிவயிற்றை நனைத்த கதை*

*யாரிடம் எப்படிச்*
*சொல்லும் நத்தை..?'*

— ரமேஷ் வைத்யாவின் கவிதை நினைவில் இழைகிறது. நத்தையின் அடிவயிற்று ஈரம் மாதிரி சொல்லப்படாத ஏராளமான சொற்கள் நம்மிடம் இருக்கின்றன.

சில உணர்வுகளை ஆயுசுக்கும் சொல்லிவிட முடியுமா என்றும் தோன்றுகிறது. கழுத்து மடிப்பெல்லாம் வேர்வையாய் ஈரம் பிசு பிசுக்க கையில் ஆரஞ்சு மிட்டாயை மடித்து நீட்டிய பால்ய தோழியின் வாசத்தை எப்படிச் சொல்ல..?

''வயித்த வலிக்குதுரா...''

''டேப்லெட் வாங்கிட்டு வரவா?''

''அய்யோ டேப்லெட்லாம் கெடையாது. நீ போ இங்கேருந்து...'' எனச் சரிந்து உட்கார்ந்தவளின் தவிப்பை எப்படிச் சொல்ல?

''கவலப்படாதரா... ஐ யம் வித் யூ...'' எனக் கையை இறுக்கிக் கொண்ட ஒரு தருணத்தைச் சொற்களாக்க முடியுமா?

''இதுக்கு மேல அதுகிட்ட பேசவே போறதில்ல...'' என முடிவெடுத்த கணங்களைப் புரியவைக்க முடியுமா?

செல்பேசிகள், இணையம் என எத்தனையோ வந்துவிட்ட பிறகும் சொல்லப்படாத சொற்கள் ஏராளமாக இருந்துகொண்டே இருக்கின்றன. எனில், மனசு எப்போதும் தொழில் நுட்பங்களைச் சடுதியில் கடந்து விடுகிறது. அது நினைத்தால்தான் எதுவும் நடக்கும்.

யாரோ வந்து ஒரு லஞ்ச் பிரேக்கில், ''அவன் ஏன் உன்னைப் பத்தி அப்பிடிச் சொன்னான்..?'' என ஒரு நண்பனைப் பற்றிப் போட்டுவிட்டுப்போனால் அவ்வளவுதான். மனசு முறுக்கிக்கொண்டு

நிற்கிறது. அப்புறம் அந்த நண்பனைப் பார்த்தால் எல்லாச் சொற்களும் போலியாகவே இருக்கும். எதையும் கேட்டுக்கொள்ளாமல், பேசிக்கொள்ளாமல் அந்த நட்பே சிதைந்து போனவர்களும் இருக்கிறார்கள்.

யார் யாரிடமோ சொல்லும் சொற்கள் எப்படி எல்லாமோ உருமாறி வந்து சேர்கின்றன. ஒன்றை உருவி ஒன்றைச் சேர்த்து வந்து சேர்கிற சொற்கள் எத்தனை எத்தனை காதலை, நட்பை, அன்பை அழித்திருக்கின்றன? ‘‘நான் அப்பிடிச் சொல்லவே இல்ல...’’ என, எத்தனை இதயங்களைக் கதறி அழவைத்திருக்கின்றன? ‘‘உன்ட்ட ஒண்ணு சொல்லணும்... எப்பிடிச் சொல்றதுனு தெரியல...’’ எனத் தவித்து நிற்க வைத்திருக்கின்றன? ‘‘அப்ப என்ட்ட சொல்லணும்னு தோணலைல்ல...’’ எனத் துடிக்கவைத்திருக்கின்றன?

தப்பிதமாகத் தவறி விழுந்த ஒரு சொல், பூவாக மலர்வதும் முள்ளாக முளைப்பதும் யார் கையில் இருக்கிறது? இவ்வளவு வசதி வாய்ப்புகள் இருந்தும் ஒரு சொல்லைக் கடத்த முடியாமல் தவிக்கிற மனசு யார் கொடுத்த சாபம்? ஆதியின் தூரங்களையும் இன்றைய விஞ்ஞானத்தையும் உடைத்தெறிந்துவிடுகிற சொற்களை ஒளித்துவைத்திருக்கிற மனித மனம்தான் எவ்வளவு மகத்தானது?

துரியோதனன், கர்ணனைப் பார்த்துக் கேட்ட, ‘‘எடுக்கவோ கோக்கவோ...’’ என்ற சொற்கள் எவ்வளவு அற்புதமானவை என இப்போது தோன்றுகிறது.

பத்து வருடம் குடித்தனம் செய்து கசந்து, விவாகரத்துக்கு வரும் தம்பதியரைத் தனியேவிட்டு, ‘‘கொஞ்சம் மனசுவிட்டுப் பேசிட்டு அப்புறம் முடிவைச் சொல்லுங்க...’’ என்கிறார் வக்கீல். பத்து வருடங்களில் பேசிவிடாத எதை அந்தப் பத்து நிமிடங்களில் பேசிவிடப்போகிறார்கள் என அலுப்பாக இருக்கிறது. ஆனால், சிலர் அந்தப் பத்து நிமிடங்களில் பேசி மனசு மாறி வருவதுதான் சொற்களின் மீது சொல்ல முடியாத ஆச்சர்யங்களைத் தருகிறது.

இந்த உலகம் ஒவ்வொரு கணமும் நமக்கு எதையாவது சொல்லிக்கொண்டே இருக்க விரும்புகிறது. அற்பமாக, அற்புதமாக, அபத்தமாக, குரூரமாக... எதையாவது மனசுக்குள் ஏற்றிக்கொண்டே இருக்கிறது. கண் முன்னே ஆயிரக்கணக்கான போராட்டங்களும் கோடானுகோடிச் சொற்களும் மடிந்து மண்ணாகிப்போன ஈழத்தைப் பார்த்தபடி இருந்த நம்மால் என்ன செய்ய முடிந்தது? நமது ஆவேசமான, கோபமான எல்லாச் சொற்களும் இப்போது எங்கே? ஓர் உடல் மீது சேறு பூசி, சித்ரவதை செய்து, அதை ஏராளமான மொபைல் கேமராக்களில் படம் பிடித்துக் கொண்டவர்கள் இந்த உலகத்துக்கு என்ன சொல்ல விரும்பினார்கள்?

ஜாலியன் வாலாபாக் படுகொலைக்காக அன்றைய பஞ்சாப் ஆளுநராக இருந்த மைக்கேல் ஓ டயரின் மேல், பல ஆண்டுகளுக்குப் பிறகு தோட்டா வடிவில் பாய்ந்த உத்தம்சிங்கின் ஒரு சொல்தான் இந்த மாதிரியான கேள்விகளுக்குப் பதிலா? யூதர்களைப் போன்ற உலகளாவிய ஒற்றுமையும் எழுச்சியும்தான் எதிர்கால விடுதலையை, தன்னுரிமையை உருவாக்குமா? நாம் எந்தச் சொற்களை நம்புவது? எவற்றின் பின்னே நிற்பது என்பதுதான் இன்றைக்குப் பெரிய துயரம்.

**தி** ருவல்லிக்கேணி மேன்ஷனில் தங்கி இருந்தபோது பக்கத்து ரூமில் லோகு அண்ணன் தங்கி இருந்தார். ஒரு முறை அவரது அறை முகவரிக்கு, அருண் என்ற பெயரைக் குறிப்பிட்டு ஒரு கடிதம் வந்திருந்தது. போஸ்ட் மேன் லெட்டர் பாக்ஸில் போட்டுவிட்டுப் போய்விட்டார். ‘இதுக்கு முன்னாடி இந்த ரூம்ல இருந்திருப்பான் போலயிருக்கு...’ என்றபடி லோகு அதை எடுத்துப் பிரித்தார். அது ஒரு பெண் எழுதிய கடிதம். அருண் என்பவனுக்கு உருகி உருகிக் காதல் கடிதம் எழுதியிருக்கிறாள். அவளது முகவரி ஏதும் இல்லாமல் சேலம் என்று மட்டும் இருந்தது.

படித்துவிட்டு, ‘‘ஃபுல் லவ் போலிருக்கு... இவன் எங்க போனான்னு தெரியலையே...’’ என்றபடி அந்த லெட்டரைத் தூக்கிப் போட்டுவிட்டார் லோகு. சில நாட்கள் கழித்து மறுபடி அதே பெண்ணிடம் இருந்து ஒரு

கடிதம் வந்திருந்தது. இந்த முறை மிக வருத்தத்துடன் ‘ஏன் என்ட்ட பேசவே மாட்டேங்குற..? நீ இல்லைன்னா நான் செத்துருவேன்’ என்கிற தொனியில் அந்தக் கடிதம் எழுதப்பட்டு இருந்தது. ‘‘அய்யய்யே... பாவமா இருக்கேடா... யார்றா அந்த அருணு..?’’ என லோகு அண்ணன் அந்தப் பையனைத் தேடிப் பார்த்தார். அவன் எங்கே போனான் என்றே தெரியவில்லை. அதன் பிறகு அங்கிருந்து நான் வந்துவிட்டேன். ஆனால், உரியவனுக்குப் போய்ச் சேராத அந்தக் கடிதத்தின் சொற்கள் இப்போதும் என்னைத் துரத்துகின்றன.

ஒரு வகையில் அந்தச் சொற்களைப் போலவே நம்மிடமும் ஏராளமான சொற்கள் இருக்கின்றன. உரியவரிடம் சேர்க்க முடியாமல் அலைந்து திரியும் சொற்கள். அன்பை விதைத்து இருக்கக்கூடிய சில சொற்கள்... பிரிவைத் தடுத்திருக்கக்கூடிய சில சொற்கள்... ஈகோவை உடைத்திருக்கக்கூடிய சில சொற்கள்... உண்மையை உணர்த்தியிருக்கக்கூடிய சில சொற்கள்... நம்மிடம் இருக்கின்றன எப்போதும்.

இதோ இந்த நொடிகூட செல்பேசியை எடுத்துப் பார்க்கிறேன்... ஒருவருக்குப் பேசலாமா, வேண்டாமா என்ற தயக்கத்துடன். அவரிடம் இருந்து ஒரு குறுஞ்செய்தி வந்துவிடாதா என்ற ஏக்கம் இப்போதும் இருக்கிறது. சென்னியாண்டவர் கோயில் பிராகாரத்தில் சண்டிகேஸ்வரர் சாமி காதில் கேட்பதுபோல் கை தட்டி தங்கள் பிரார்த்தனைகளைச் சொல்லிக்கொண்டு இருப்பவர்களைப் போல எல்லோரும் சில சொற்களுக்காகக் காத்திருக்கிறோம் எப்போதும்.

நான் படித்த வே.பாபுவின் இந்தக் கவிதை சொற்கள் முடிவிலியை எனக்குத் தடக்கென்று உணர்த்தியது...

*‘சற்று முன் இறந்தவனின்*
*சட்டைப் பையில்*
*செல்போன்*

*ஒலித்துக்கொண்டே*
*இருக்கிறது*
*கையில் எடுத்த காவலர்*
*‘சார், யாரோ அம்முனு*
*பேசுறாங்க’ என்கிறார்.*
*ஒரு நொடி*
*இறந்தவனின் கண்கள்*
*திறந்து மூடுகின்றன!’*

50

# ஒரு மழையில் பிறந்த பல நினைவலைகள்..!

‘‘**தூ** த்த போடுற மாரி இருக்கு... வெள்ளக்கன்னப் புடிச்சு உள்ள கட்றயாய்யா!’’— அப்பாவின் குரல் கேட்ட மாதிரி இருந்தது. நள்ளிரவில் தடக்கென்று எழுந்துகொண்டேன். ஜன்னலைத் திறந்தால், திடுதிப்பென்று மழை பின்னுகிறது. பொசுக்கென்று ஈர வாசம். வெளியே வெள்ளைக் கன்று வந்து நிற்குமோ எனப் பிரம்மை தட்டுகிறது. கதவைத் திறந்துகொண்டு கீழே வருகிறேன்.

மாடிப்படிகளின் கீழே உடல் கிடுகிடுத்தபடி காப்பி கலர் நாய் வந்து நிற்கிறது. காது மடல் எல்லாம் கழுத்தோடு ஒட்டிக்கொண்டு, அடிவயிற்றில் தண்ணீர் சொட்ட நிற்கிறது. இரண்டு காதுகளையும் பொடப்பொடப்பொடவெனத் தட்டி முதல் மழையில் தலை சிலிர்க்கும் வெள்ளைக் கன்று மாதிரிதான் இருக்கிறது.

செங்காமட்டை கலரில் குஞ்சைக் கவ்விக்கொண்டு ஈரமாய் பத்தாயத்தில் வந்து ஒண்டிய எலி, றெக்கையைச் சிலுப்பிக்கொண்டு வேப்பங்கிளையில் வந்து உட்கார்ந்த காகம், ‘சொட்டேர் சொட்டேர்’ என மழைத் துளி பட்டுத் தெறிக்கும் திண்ணைத் திண்டில் உடல் குறுக்கி நிற்கும் பூனை, எங்கிருந்தோ தபதபவென வந்து திண்ணையை நிறைத்துக்கொண்டு வாசமாய்த் தோல் சிலிர்க்கும் ஆடுகள், சாய்ந்துகிடக்கும் மாட்டு வண்டிக்குக் கீழே வரிசையாக ஒண்டி மழை

குடிக்கும் தவிட்டுக் குருவிகள், ‘பட்... பட்... பட்...’டென அகல்மாடத்தைச் சுற்றத் தொடங்கும் ஈசல்கள் என ஏராளமான உயிர்களை ஞாபகத்தில் கொண்டுவந்து கொட்டுகிறது மழையில் நனைந்து வந்த இந்த நாய்.

இத்தனை நாட்களில் நீல் மெட்டல் தொட்டியின் பக்கத்தில், அண்ணாச்சிக் கடை வாசலில், மீன் மார்க்கெட் ஏரியாவில்... என எங்கெங்கோ இந்த நாயைப் பார்த்திருக்கிறேன். ஆனால், ஒரு மழை இரவில் மாடிப்படிகளின் கீழ் வந்து ஒண்டி நிற்கும் இந்தத் தருணம்தான் இது கவனம் பெற்றுவிட்டது.

நேற்று இரவு சின்ன மழைக்கு எஸ்.எஸ்.ஆர். பங்கஜம் தியேட்டர் பிளாட்ஃபார்மில் படுதா கட்டிக்கொண்டு இருந்த தாத்தா இப்போது எங்கே போய் படுப்பார்? உதயம் தியேட்டர் பக்கம் பிளாட்ஃபார்மில் கிடக்கும் குடும்பங்கள் எல்லாம் பக்கத்துக் கல்யாண மண்டப வாசலில் போய்க் கெஞ்சிக்கொண்டு இருக்கும். மெரினா பீச்சில் படுத்துக்கிடந்தவர்கள் ஐ.ஜி. ஆபீஸ் வாசலில் வந்து நிற்பார்கள். கோயம்பேடு மார்க்கெட்டில் சுப்ரகீத் ஹோட்டல் வாசலில் தூங்காமல் கொள்ளாமல் பீடி வலித்துக்கொண்டு இருப்பான் தக்காளிக் கடை செல்வராஜ். அதிகாலையில் போனால், சைதாப்பேட்டை கூவக் கரையில் ‘பில்லா 2’ ஃப்ளெக்ஸ் பேனரைக் கொண்டுவந்து குடிசை மேல் போட்டுக்கொண்டு இருப்பான் ஒருவன்.

**இ**ப்படி ஒரு மழை இரவில் ஜி.ஹெச். வாசலில் கிடந்த ஆஸ்பத்திரி வேனுக்குள் இரண்டு குழந்தைகளுடன் ஒரு தம்பதி படுத்திருந்தது. ‘இடுப்பு வரைக்கும் தண்ணி மச்சான்... லேப்டாப்பு, புக்ஸெல்லாம் போச்சு. நீ செகண்ட் ஃப்ளோர்... தப்பிச்ச’ என்றபடி பெட்டி படுக்கையோடு செந்தில் வந்து நின்றது, கும்மிருட்டில் நெஞ்சு வரைக்கும் தண்ணீரில் நீந்தி அருள் எழிலனோடு பெனின்சுலா பாருக்குப் போனது, ‘அய்யனார் குண்டுலதான் தண்ணி ஏறிருக்கு. ஆகாசளி குண்டுக்கு இன்னும் நாலு நாளைக்கு மழை அடிக்கணும்’ என்ற அம்மாவின் போன் குரல், ‘த்தா... இன்னும் ஒரு மாசத்துக்கு சோத்தக்

கெடுத்துரும் இந்த மழ... அள்ளி வையி அள்ளி வையி!' என்ற சாலையோர வியாபாரியின் குரல் அத்தனையும் ஆண்டனி எடிட்டிங் மாதிரி சடசடவென ஞாபகத்தில் மான்டேஜ் ஷாட்ஸ் ஆகிக்கொண்டே இருக்கின்றன. ஒரு சின்ன மழை எத்தனை நினைவுகளைக் கிளர்த்திவிடுகிறது!



மழையை விடுங்கள்... மழையால் வாசலில் வந்து நிற்கும் உயிர்கள்தான் இந்த உலகத்தை எவ்வளவு ஈரமாக்கிவிடுகின்றன? இமையில் பட்டுத் தெறிக்கும் ஒரு துளியைப் போல, ஜன்னலில் நடனமாடும் குல்மொஹரைப் போல, ஹால் எல்லாம் தீற்றிக்கொள்ளும் சேற்றைப் போல, பேருந்தில் எங்கே நின்றாலும் கொஞ்ச நேரத்தில் தலையில் சொட்டும் ஈரம்போல, குடையில் பள்ளம் பறித்து முட்டியை நனைக்கும் நீரைப் போல... மழை எத்தனை சூடான நினைவுகளைத் தந்துவிடுகிறது. இந்த ஞாபகங்கள்தான் மழையின் பெரிய அவஸ்தை.

ஒரு மழைக் காலையில், கையில் செருப்புகளை ஏந்திக்கொண்டு இன்னொரு கையில் முட்டி வரை புடைவையைத் தூக்கிக்கொண்டு வாசலில் வந்து நின்ற கீர்த்தனா இந்த மழையில் எங்கிருக்கிறாள்?

''குளிச்சுட்டு துணி ஒலத்திட்டுத்தான் போவேன். என்னா மொறைக்கிற..? திட்றதுன்னா மழையைத் திட்டிக்கோ!'' என அவள் சொன்ன நாளில் சாயங்காலம் வரை விடாமல் மழையடித்தது. பேய் மழை. மொபைலை பாலிதீன் கவரில் சுருட்டிக்கொண்டு சாப்பாடு வாங்க ஹோட்டலுக்குப் போனால், போன் வரும். ''அப்டியே சூடா டீ வாங்கியாடா... ஸ்ட்ராங்கா... ஷுகர் அதிகமா!'' வீடெல்லாம் ஈர வாசனை.

'ஓ வசந்த ராஜா... தேன் சுமந்த ரோஜா...' இப்போது பார்த்து இளையராஜா ஹிட்ஸ் போடுகிறவன் எவ்வளவு அற்புதன்? "ஐய... ரிமோட்டைக் குடு... உனக்கு எப்போ பார்த்தாலும் இளையராஜாதானா?" அவள் மாற்றிய சேனலில் ஏதோ ஒரு இங்கிலீஷ் பாட்டு ஓடத் தொடங்க, ''போடி போங்கு!'' என உள்ளே போய்ப் புத்தகம் படிக்கத் தொடங்குகிறேன். ''இப்போ எதுக்குப் புத்தகம்..? நான் இருக்கும்போது!'' அந்த மழை இப்போதும் பெய்துகொண்டே இருக்கிறது. மழை சிறுத்த இரவில் அண்ணாநகர் ஆர்ச் பக்கம் அவளை விட்டுவிட்டுத் திரும்பியபோது ஆட்டோவில் சுழன்றடித்து நனைத்த ஈரக் காற்று இந்தக் கணமும் சிலிர்க்கிறது.

மழை, எப்போதும் காதலையும் பிரிவையும் அள்ளி வந்துவிடுகிறது. இந்த மழையை அவள் பார்ப்பாளா... ரசிப்பாளா... நினைப்பாளா..? என மனசு சலசலக்கிறது. இந்தத் தெருவில் மழை பெய்து அடுத்த தெருவில் மழை பெய்யாத மாதிரி ஆகிவிடுகிறது சில நேரம். கண் எதிரே வானத்தில் நூல் பிடித்த மாதிரி மழை நெருங்கிவருவதைப் பார்க்க எப்படி இருக்கும்? தார் சாலையில் சொட சொடவென நமக்கு முன்னும் பின்னும் கொட்டிச் சூழும் மழை மாதிரி பிரியங்கள் சூழ்கின்றன. மனிதர்கள் எங்கெங்கோ போய்விட்டாலும் மழை மறுபடி மறுபடி அவர்களை அழைத்துக்கொண்டு வந்து விடுகிறது...

*‘பாபூ...*
*இந்த மழையில் நனைந்துகொண்டே*
*உன்னிடம் மட்டும்*
*சொல்வதற்கென்று*
*ரத்தம் வழியும் ஞாபகங்களைச்*
*சேர்த்துவைத்திருக்கிறேன் பாபூ !’*

என்ற பூமா ஈஸ்வரமூர்த்தியின் கவிதை அடித்து நனைக்கிறது.

மழைக் காலத்தின் உணவைக் கோடையில் சுமந்து திரியும் எறும்பைப் போல, கோடையிலும் இந்த மழையையும் நினைவுகளையும் சுமந்து திரிகிறோம் நண்பர்களே. எங்கிருந்தாலும் இந்த மழை உன்னிடமும் வரும். நீ தீண்டாவிட்டாலும் உனது கூரையில் வழிந்து வாசல் மண்ணில் ‘குபுக் குபுக்’ என விழுந்து குமிழிடும் மழை, எனது உதிரத்தைப்போல !

**ந** ண்பர் ஒருவருக்குக் கல்யாண வரவேற்பு நடந்த நாளில் நல்ல மழை. தி.நகரில் ஒரு ஹோட்டலில் ரிசப்ஷன். விடாமல் பேய் மழை அடிக்கிறது. நான் போனபோது மொத்தமே மூன்று நான்கு பேர்தான் இருந்தார்கள். மணமக்கள் எதுவும் செய்வதற்கு இல்லாமல் நின்றார்கள். அத்தனை பேருக்குச் சாப்பாடு செய்துகிடந்தது. நேரம் ஆகியும் மழை அடித்துக்கொண்டே இருக்க, நான் சாப்பிட்டுவிட்டுக் கிளம்பினேன். எனக்கு நண்பனையும் அவன் மனைவியையும் பார்க்கப் பாவமாக இருந்தது. மறுநாள் அவனிடம் போனில் பேசும்போது, ‘‘அப்புறம் யாராவது வந்தாங்களா..?’’ என்று கேட்டேன். ‘‘இல்லடா... இன்னும் ரெண்டு பேர் வந்தாங்க... அவ்வளவுதான் !’’ என்றான். ‘‘டேய்... வருத்தப்படாத... விடு !’’ என்றதற்கு அவன் சொன்னான், ‘‘டேய்... எதுக்கு வருத்தம்..? யாரும் வரலைன்னா என்ன... எங்க கல்யாணத்துக்கு மழையே வந்துருச்சே ! அதைவிட யாரு பெரிய கெஸ்ட்டு?’’

**வி** மலா அத்தை கல்யாணத்துக்கும் இப்படித்தான் மழை வந்தது. தஞ்சாவூர் ரயில்வே கல்யாண மண்டபத்தில் கல்யாணம் ஆரம்பிக்கிற நேரத்தில் 'சொட சொட'வெனக் கொட்ட ஆரம்பித்துவிட்டது மழை. ''கம்னாட்டி... வெறும் வாய்ல அரிசி திங்காத... அரிசி திங்காதனு சொன்னா கேட்டாத்தான. அதான் அடிச்சு வெளுக்குது!'' என ஆத்தா அலுத்துக்கொண்டது. எனக்கென்னவோ அத்தை கல்யாண நாளில் மழை வந்தது ரொம்ப சந்தோஷமாக இருந்தது. அது பெரிய கொடுப்பினை இல்லையா? கல்யாணத்தைப் பற்றி எப்போது நினைத்தாலும் அப்படி ஒரு மழை வருவது எல்லோருக்கும் கிடைக்குமா என்ன?

அத்தைக்கும் அப்படிச் சந்தோஷமாகத்தான் இருந்தது. முகம்கொள்ளாத சிரிப்போடு மாமாவை இடித்தபடி போட்டோவுக்கு எல்லாம் நின்றுகொண்டு இருந்தது. அடிக்கிற மழையில் வேனில் ஏறி நசநசவென நெருக்கிக்கொண்டு வீட்டுக்குப் போகும்போதும் அப்படி ஒரு சிரிப்பு. அதுவரை பார்த்த மழைதான். ஆனால், அப்படி ஒரு நாளில் அது முற்றிலும் வேறு மழை இல்லையா! இப்போதும் அத்தையை நினைத்தால் ரயில்வே ஸ்டேஷனை ஒட்டிய வீட்டில், முற்றத்தை அடைத்துக் கொட்டும் மழைக்கு பாத்திரங்கள் வைத்துவிட்டு, நீர் தெறிக்கும் இடத்தில் அமர்ந்து இருக்கும் முகம்தான் நினைவில் இருக்கிறது.

**கு** மார் செத்துப்போனது ஒரு மழை நாளில்தான். மழையோடு மழையாக சுடுகாட்டுக்குப் போய் பந்தல் போட்டு எரித்துவிட்டு வந்தோம். முதல் வாரம்தான் மழையில் நனைந்தபடி வீட்டுக்கு வாழை இலைக் கட்டு கொண்டுவந்தான். வாழை இலையெல்லாம் வழிந்துகொண்டு இருந்த மழை நீரை விரலால் சுண்டிக்கொண்டே, ''மழ நிக்கிற மாரி தெரியல ஆயி... சூடா காபி குடு. ஒரு கிளாஸ் அடிச்சுட்டு மழையோட போயிர்றேன். மேட்டு குண்டுல மடத் தொறந்துடலைன்னா நாத்தெல்லாம் அழுவிப்போயிரும்!'' என மச்சான் பேசிக்கொண்டு இருந்தது மழையில் ஊடுருவும் வாகன வெளிச்சம்போல் மனசுக்குள் இருக்கிறது.

அன்றைக்கு ஐ.ஏ.எஸ். அகாடமி நண்பர் சங்கருடன் பேசிக்கொண்டு இருந்தபோது சொன்னார், ‘‘மழைன்னா எனக்கு எங்க அப்பா நெனப்பு வந்துரும் பாஸ். அப்பா செத்த அன்னிக்கு செம மழ... கொண்டுபோய் சிதைக்கு வெச்சா எரியவேயில்ல. நெருப்பு வைக்க வைக்க கை காலெல்லாம் நீட்டிட்டு வருது. மட்டேர் மட்டேர்னு கம்பால அடிச்சு அழுது அழுது எரிச்சோம். இங்க பாருங்க... இப்பக்கூட அழுக வந்துருச்சு’’ எனக் கண்கள் கலங்கியபோது மழை இன்னும் பெரிதானது. சித்தார்த்தனைத் தேள் கடித்தபோது லட்சுமாங்குடி ஆஸ்பத்திரியில் கழிந்த மழை தொடங்கி, அரக்கோணத்தில் நடுவழியில் நின்றுவிட்ட ரயில் மழை வரை எத்தனை எத்தனை மழை? ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான மழை.

**ஒ**ரு முறை கார்த்திகை சுடலை அன்றைக்கு மழை வந்தபோது, ‘‘ஊருக்கு நல்லதில்லடா... என்னவோ குத்தம் செஞ்சிட்டீங்க’’ எனக் கறுப்பு பெரியப்பா மேல் சாமி வந்து எல்லோரையும் மாறி மாறி அறைந்தார். பால்யத்தில் வெடி எல்லாம் காயவைத்துத் தயாராகும்போது எல்லாம் தீபாவளி அன்றைக்கு அடித்துக் கொட்டும் மழை. சகதியில் தேங்கி வானவில் காட்டும் மழை. பெருமழை முடிந்த தெருவில் பேப்பர் கப்பல்விட்ட சிறுபிள்ளை மழை. காலையில் எழுந்து பார்க்கும்போது, கொல்லை எல்லாம் நீரோடி, ‘‘நைட்டு மழையா பேஞ்சது?’’ எனப் பரவசப்படுத்தும் மழை. கண்ணாடியில் வழியும் மழை பார்த்து சூடாய் தேநீர் அருந்தியபடி இசை கேட்கும் கொடுப்பினை எல்லோருக்குமா இருக்கிறது..? பேன்ட்டை மடித்துக்கொண்டு, குடையை விரித்தபடி ‘‘இன்னிக்கு ஆபீஸ் போகலைன்னா லாஸ் ஆஃப் பே!’’ என்றபடி தபதபவென மழையில் ஓடும் கால்கள் எத்தனை?

அன்பை, அவஸ்தையை, பிரியத்தை, பிரிவை, நினைவை அள்ளி அள்ளி இறைத்தபடி பெய்கிறது மழை. கோடம்பாக்கத்தில் தங்கியிருக்கும் நண்பனுக்கு, இலங்கை மாணிக்ஃபார்ம் அகதிகள் முகாமில் இருக்கும் அவனது அம்மாவிடம் இருந்து வந்திருக்கும் ஒரு கடிதம் இப்படித் தொடங்கியிருந்தது,



‘அன்புள்ள ஜான்,

இங்கே மழை தொடங்கிவிட்டது. பாத்ரூம்கூடப் போக முடியவில்லை. தூங்கக்கூட முடியாமல் அவஸ்தைப்படுகிறேன். காய்ச்சலாக வேறு இருக்கிறது. நீ எப்போது என்னை அழைத்துச் செல்வாய்?’

உதிரமாய், கண்ணீராய் மழை மாறிவிடும் தருணமும் இருக்கிறது. நிலம் அற்றோருக்கான பிரார்த்தனைகளை... மன்றாடல்களை இந்த மழையிடம் வைத்துவிட்டுத் தூங்கப்போகிறேன். காலையில் வந்து பார்த்தபோது, மாடிப்படிகளின் கீழே ஓர் உயிர் படுத்துவிட்டுப் போன தடம் இருந்தது ஈரமாய்!

# 51

# நம்ம வொர்க்தாங்க நமக்கு விளம்பரம்!

**"ஒ**ரு வெளம்பரம்..."

'கரகாட்டக்காரன்' படத்தில் செந்தில் சொல்கிற இந்த டயலாக், வெறும் காமெடி அல்ல என்பதைப் பல சந்தர்ப்பங்களில் உணர்ந்திருக்கிறேன். அருணகிரி அவர்களைப் பார்த்ததும் அப்படியான சந்தர்ப்பம்தான்.

கும்பகோணத்தின் குறுகலான தெரு ஒன்றில் பழைய ஓட்டுக்கட்டு வீட்டின் திண்ணையில் அவரைச் சந்தித்தேன். வீடு முழுக்க உடைந்த மரப்பெட்டிகள் குவிந்திருந்தன. கொல்லைக்கட்டில் பழைய சோடா மெஷின்கள் இரண்டு சிதிலமாகி நின்றன. சாவதற்கு முந்தைய நாள் கொல்லைக்கட்டு கயித்துக் கட்டிலில் ஜம்பு தாத்தா படுத்திருந்தது ஒரு கணம் நினைவில் 'க்ளிக்' அடித்தது.

15 வருடங்களுக்கு முன்பு இதே வீட்டுக்கு வந்தபோது எப்படி இருந்தது..? கூடம் முழுக்கப் பன்னீரும் ரோஜாவுமாக ஒரு வாசனை... தட... தட... தடவென மெஷின்கள்ஓடிக்கொண்டே இருக்க... குறுக்கும் மறுக்குமாக ஆட்கள் ஓடிக்கொண்டே இருந்த சித்திரம்... ஜரிகை வேட்டியில் வாய் நிறைய வெத்தலையும் ஜவ்வாது வாசமுமாக நடுக்கூடத்தில் நின்று சைகையில் மிரட்டிக்கொண்டு இருக்கும் அருணகிரி அய்யாவின் ஆகிருதி... எதுவும் இன்று இல்லை.

இந்திய சுதேசி சிறுதொழிலின் ஒட்டுமொத்த இன்றைய சித்திரம்போல் இருந்தது அந்த வீடு. அருணகிரி அய்யாவின் சோடா, கலர், பன்னீர் சோடா என்றால், சுத்துப்பட்டில் அவ்வளவு பிரபலம்... ஒரு காலத்தில்! தஞ்சாவூர், கும்பகோணம், நாகப்பட்டினம் வரைக்கும் வியாபாரம் அள்ளும். கோயில் கோபுரம் போட்டு பக்கத்தில் ஒரு ரோஜாப் பூ வரைந்த ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்ட பன்னீர் சோடா கிடைக்காத கடை இருக்காது.

வெற்றிலையைக் குதப்பிக்கொண்டே திண்ணைத் தூணில் சாய்ந்தபடி, ‘‘நீ இந்த சோடாவ எங்கயும் குடிக்க முடியாது... காவேரித் தண்ணிக்குன்னு ஒரு டேஸ்ட்டு இருக்கு... கோரையாத்து தண்ணின்னா இன்னும் விசேஷம்... அதானே நம்ம பெசல்...’’ என்பார் அருணகிரி அய்யா. இப்போது அந்த கம்பெனியே இல்லை. அழுக்கு வேட்டியும் துண்டுமாக அய்யாவைப் பார்க்கவே மனசுக்கு ஒருமாதிரி இருந்தது.

‘‘கம்பெனிய வுடு... இன்னுங் கொஞ்ச காலத்துல காவேரியே இல்லாமப் போயிருமோனுல்ல பயமாருக்கு... வர்றப்போ பாத்தியா... கம்னாட்டிப் பசங்க மணலா அள்ளி எப்பிடி கட்டாந்தரையாக் கெடக்குன்னு... ம்ம்ம்ம்’’ — பெருமூச்சு விட்டபடி சிரித்த அருணகிரி அய்யாவிடம், ‘‘கம்பெனி என்னாச்சுங்க..?’’ என்றேன். அவர் முகம் ஏதேதோ உணர்ச்சிகளுக்குப் போனது. ‘‘எல்லாம் போயிருச்சு தம்பி...’’ என்றவர் கொல்லைப் பக்கமாக அழைத்துப் போனார். சிதிலமான மெஷின்களுக்குப் பக்கத்தில் போய் உட்கார்ந்துகொண்டு ஏதேதோ பேசினார்.

கடைசியாகச் சொன்னார், ‘‘தம்பி இது விளம்பர உலகம்... டெண்டுல்கர், டோனி, விஜய், சூர்யானு எல்லாப் பயலுகளும் தெனம் தெனம் வந்து ‘பெப்சி குடி’, ‘கோக்கு குடி’னு ஆடுறான்... பாட்றான்... உருண்டு பொரள்றான்... இந்தப் பய மக்க அதைக் கேக்குமா... இந்த அழுக்கு வேட்டி அருணகிரி சொல்றதக் கேக்குமா? நாம என்ன செஞ்சோம்? இந்தா பாபநாசம் பக்கம் மோட்டார் செட்டு சொவத்துல எழுதி வெச்சதுதான் ஜாஸ்தி... கொமரிமுத்துவக் கொண்டாந்து

வௌம்பரம் சொல்றதுக்குகூடத் திராணி கெடையாது... பெருமொதலாளி இல்லையேப்பா. எல்லாப் பயலும் இங்கிலீஸ் கம்பெனி ஜட்டத்துக்குப் போயிட்டான்... நம்ம யாவாரம் அப்பிடியே படுத்துருச்சு. ரெண்டு புள்ளைகளும் குடும்பத்தோட சூரத்துக்குத் துணி யாவாரம் பண்ணப் போயிட்டானுவோ. நா இப்பிடியே இந்த வூட்ல ஒண்டிக்கிட்டேன். தூங்குனா காதுக்குள்ள லொட... லொட... லொடனு சோடா மெஷின் ஓட்ற சத்தமா கேக்குது... எவ்வளவு நாளைக்குனு பாக்குறேன்.''

அங்கிருந்து திரும்பும்போதுதான் தோன்றியது. அவர் சொன்னது எவ்வளவு உண்மை? நம் ஒவ்வொரு நாளும், எவ்வளவு விளம்பரங்களால் நிறைந்து கிடக்கிறது. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் எத்தனை எத்தனை விளம்பர முகங்களும் குரல்களும் நம்மை ஆக்ரமித்துக்கொள்கின்றன? காபி, டீயில் இருந்து கட்டில் மெத்தை வரைக்கும் எதை வாங்குவது, எப்படி வாழ்வது என எல்லாவற்றையும் விளம்பரங்கள்தான் தீர்மானிக்கின்றன. இந்த தேசமே விளம்பரங்களில் மயங்கி, ஸ்பான்சர்களில்தான் இயங்குகிறது.

காலையில் கண்ணைக் கசக்கும்போதே கார்த்தியும் காஜல் அகர்வாலும் ஒரு காபியைச் சிபாரிசு செய்கிறார்கள். மட்ட மத்தியானம் டி.வியைப் போட்டால் 'மேனேஜர்' கிருஷ்ணமூர்த்தி, டெல்லி கணேஷ், 'ஹோம் ஸ்வீட் ஹோம்' திவ்யதர்ஷினியெல்லாம் செங்கல்பட்டு தாண்டி நின்றுகொண்டு ப்ளாட் வாங்கச் சொல்லி டார்ச்சர் செய்கிறார்கள். சாயங்காலமாகப் புதுப் படம் போடுகிற சாக்கில், 10 நிமிஷத்துக்கு ஒரு தடவை மூன்று விஜய் மொபைலில் பேசி, சரத்குமார் வேட்டி கட்டி நடந்து, தனுஷும் விமலும் ஹேர் ஆயில் தடவி, அஞ்சலியும் தமன்னாவும் குத்து டான்ஸ் ஆடி... 'ஏன்டா வூட்ல இருக்கீங்க..? ஷாப்பிங் போங்கடா' என வேப்பிலை அடிக்கிறார்கள். நடுநடுவே 'புரட்சிப் போராட்டம்' என பிரபு நகைக் கடைக்குப் பண்ணுகிற விளம்பரத்தில் சே குவேரா, பகத்சிங்குக்கு எல்லாம் டவுசர் கிழிகிறது. ஊரே தூங்குகிற மிட்நைட்டில் பார்த்தால், தாடை வீங்கிய சஃபாரி பார்ட்டி ஒருவர் வீரிய லேகியத்துக்கு விளம்பரித்துக்கொண்டு இருக்கிறார்.

இன்னொரு சேனலில் கொழுத்த டாக்டர் ஒருவரும் கருத்த காம்பியரும் ‘இதாங்க அமுக்ரா லேகியம்...’ எனக் கடுப்படிக்கிறார்கள். பின்னிரவுக்குப் பின்னும் ஒரு வெள்ளைக்காரிக்கு சிந்தாதிரிப்பேட்டை பெண்ணை டப்பிங் பேசவிட்டு, வீட்டுப் பொருட்களை விற்றுக்கொண்டு இருக்கிறார்கள். தொப்பையைக் குறைக்க டிப்ஸ் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். உச்சகட்டமாக, சிட்டி முழுக்க ‘சினேகாபிரசன்னா பிரிவுக்கு என்ன காரணம்..?’ என போஸ்டர் அடித்து ஒட்டியிருந்தார்கள்.



இருக்கிற பிரச்னையில் இது வேறா என எனக்கு போஸ்டரைப் பார்த்ததுமே வேர்த்தது. சொல்லிவைத்தது மாதிரி, ‘‘என்ன பாஸு... சினேகா — பிரசன்னா பிரிஞ்சுட்டாங்களா? மேட்டரு நெஜமா பொய்யா? என்ன பிரச்னையாம்? நீ சினிமாக்காரன்தான தெரியும்ல...’’ என அடுத்தடுத்து போன்கள். ‘‘இதெல்லாம் எதுக்குரா எங்கிட்ட கேக்குறீங்க..? சினிமாக்காரன்னா... சினேகாபிரசன்னா வூட்ல செக்யூரிட்டியாவா இருக்கேன்? நானே பல பிரச்னைகள்ல சுத்திட்டு இருக்கேன்... நூத்தி எட்டுல போன் பண்ணிக் கேளுங்கடா...’’ எனக் கடுப்பானேன்.

என் அண்ணிதான் சாப்பாடு போடும்போது சொன்னார், ‘‘தம்பி... அது ஆடி மாசம் வருதுல்ல... அதுக்குத்தான் விளம்பரத்துக்கு அப்பிடிப் போட்ருக்காங்க!’’ எனக்கு, ‘இதெல்லாம் யாரு, எங்க உக்காந்துய்யா யோசிக்கிறது..?’ என ஆச்சர்யமாக இருந்தது. அதன் பிறகு மொத்த

மீடியாவும் சினேகாபிரசன்னாவைச் சுற்றி வளைத்து இந்த விளம்பரத்தைப் பற்றிக் கேள்விகள் கேட்க, அவர்களும் ஏகப்பட்ட விளக்கங்கள் கொடுக்க... அது செம ஹிட். எனக்கு, 'எதற்கு இவ்வளவு விளக்கங்கள்?' எனத் தோன்றியது. இதற்கான பதிலையெல்லாம் அன்றே ஒரே வரியில் சொல்லிவிட்டானே தானைத் தலைவன் செந்தில்... "ஒரு வெளம்பரம்!"

**20** வருடங்களுக்கு முன்பு வரை, அம்பாஸிடர் காரில் மைக் கட்டிக்கொண்டு வருவதுதான் எங்கள் ஊரின் அதிகபட்ச விளம்பர யுத்தி. அப்படி எம்.ஏ. தமிழ் படித்த அண்ணன் சரவணனை, மகாராஜா சில்க்ஸுக்கு பிராண்ட் அம்பாஸிடராகப் போட்டார்கள். 'மகாராஜா சில்க்ஸ்... தென்றலின் முதல் வரி, வசந்தத்தின் முகவரி... மகாராஜா சில்க்ஸ்' எனக் கரகரவெனக் கவிதை எழுதி, மைக்கில் கூவியபடி அண்ணன் அண்ட் கோ வரும். நாள் முழுக்க கவிதையாகப் பொழிந்துவிட்டு, ராத்திரி 150 ரூபாய் பணமும் சாந்தி கடை பரோட்டாவுமாக முடியும் அந்த செஷன்.

'ஜெமினி சர்க்கஸ்... குட்டி யானையின் சாகஸம் காணத் தவறாதீர்கள்... திலகர் திடலில் மாலை ஆறு மணி முதல் குடும்பத்தோடு கண்டு களிக்க... ஜெமினி சர்க்கஸ்...' என அடுத்தரவுசு ஆரம்பிக்கும். '' 'உலகம் சுற்றும் வாலிபன்' படம் வந்தப்பலாம் ஆட்டோல மைக் கட்டிக்கிட்டு உங்க மாமன்தான் சுத்துனான். ஊருக்கு ஊர் நோட்டீஸ் போட்டே வெள்ளி விழா பாத்தாங்கள்ல... 'ஆட்டுக்கார அலமேலு' வந்தப்ப ஊர் ஊரா அந்த ஆட்டைக் கொண்டுவந்தாங்க... கும்போணம் விஜயால கொண்டுவந்து நிப்பாட்னப்ப அப்பிடி ஒரு கூட்டம்... 'கூலிக்காரன்' வந்தப்ப விஜயகாந்து வண்டி இழுக்குற மாரி தங்க கலர்ல செல செஞ்சி தேட்டருக்கு தேட்டர் வெச்சாங்க... 'ஆடிவெள்ளி'க்கு எங்க பாத்தாலும் அம்மன் செலையா வெச்சாங்க... இப்பல்லாம் அந்த ஹீரோ, ஹீரோயினே தியேட்டர் தியேட்டரா வந்தாக்கூட பாக்க ஜனம் வரமாட்டேங்குதே... அதான் டி.வில எப்போ பாத்தாலும் வெளம்பரமா பாத்துக்கிட்டு கெடக்குல்ல...'' என்றார் ரவி சித்தப்பா.

உண்மைதான்! இப்போதெல்லாம் விளம்பரங்கள் ‘சீ’ பட்டுவிட்டன. ஊரில் குழந்தை பிறந்த நாள், பூப்பு நீராட்டு விழா தொடங்கி எழவு வரைக்கும் எல்லாவற்றுக்கும் ஃப்ளெக்ஸ் பப்ளிசிட்டி பின்னிப் பிரிக்கிறது. லோக்கல் கேபிளைத் திறந்தால் ‘புலி உறுமுது... புலி உறுமுது...’ பாடல் பின்னணியில் ஒருவர் நடந்து வர, ‘அண்ணனுக்கு இனிய பிறந்த நாள் வாழ்த்துகள்’ என்கிறார்கள். ‘மாசமா... ஆறு மாசமா...’ பாடலில் இருவர் கை கோத்து நிற்க... கல்யாண வாழ்த்து சொல்கிறார்கள். இன்னொரு பக்கம் நெட்டில், மொபைலில் ஷூட் பண்ணி தெரு முக்கில் எடிட் செய்யப்பட்ட ஏகப்பட்ட வீடியோக்களை ஏற்றி கேப் விடாமல் ரகளை பண்ணுகிறார்கள். ஆளாளுக்கு விளம்பரத்தில் இறங்கிவிட்டதால் பலருக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. அதனாலேயே கிசுகிசு கிளப்பிவிடுவது, லிப் கிஸ் அடிப்பது, அரை நிர்வாண போஸ் கொடுப்பது என சினிமா விளம்பரங்களின் எல்லை எகிறிக்கொண்டே இருக்கிறது.

**செ** ன்னை வந்த புதிதில் வேலை இல்லாததால், ஓவியரான செல்வம் சித்தப்பாவைப் பார்க்க தினமும் போய்விடுவேன். சித்தப்பா, விளம்பர பேனர் கம்பெனி ஒன்றில் வேலை பார்த்துக்கொண்டு இருந்தார். அப்போது ஹோர்டிங்குக்கு எல்லாம் தடை இல்லை. கையால் விளம்பர போர்டுகள் எழுதும் வேலைகளுக்குக் கிட்டத்தட்ட இறுதிக் காலகட்டம்போல் இருந்தது அப்போது.

மவுண்ட் ரோட்டில் மிகப்பெரிய ஹோர்டிங் ஏற்றி, சாரம்கட்டி நள்ளிரவில் நாலைந்து பேர் தொங்கியபடி வரைந்துகொண்டு இருப்பார்கள். எனக்கு அந்தக் காட்சியைப் பார்க்கும் கணம் பக்கென்று இருக்கும். உடல் முழுக்க பெயின்டோடு அதிகாலையில் கீழே இறங்கி கையைத் துடைத்துக்கொண்டு இருப்பவர்களை அவ்வளவு ஆச்சர்யமாகப் பார்த்திருக்கிறேன். அந்த வழியாக வரும்போது பளபளவென அந்தப் பலகை நிற்பதையும், ஏராளமான விழிகள் அதைப் பரவசமாகப் பார்த்துப் போவதையும் காணும்போது ஒவ்வொரு விளம்பரத்துக்குப் பின்னும் இருக்கும் பெயர்தெரியா உயிர்களை நினைத்துக்கொள்வேன். அப்புறம் எல்லாம் கம்ப்யூட்டர் மயமாகிவிட்டன.

‘சிப்பி டெய்லர்’ போர்டில் மைக்கேல் ஜாக்சனை அவ்வளவு நளினமாக வரைந்து வைத்தவரும், ‘மணி சலூன்’ போர்டில் ரகுவரனைத் தேர்ந்தெடுத்து வரைந்து வைத்தவரும், ‘நளினி சில்க்ஸ்’க்கு மாதவி முகத்தை உதட்டுச் சுழிப்போடு அப்படி ஒரு காவியமாக வரைந்து வைத்தவரும் ‘விடியல் இசையக’த்துக்கு ராஜாவையும் ரஹ்மானையும் கறுப்புவெள்ளை ஆர்மோனியக் கட்டைகளாலேயே வரைந்தவரும் இப்போது எங்கிருக்கிறார்கள்? என்ன செய்கிறார்கள்?

நம் ஒவ்வொருவருக்கு உள்ளும் ஒரு ‘பவர் ஸ்டார்’ இருக்கிறார். அவரவரின் எல்லைக்கு உட்பட்டு ஏதேனும் ஒரு விளம்பரம் எல்லோருக்கும் தேவைப்படுகிறது. அடிக்கிற கலரில் பூப்போட்ட சட்டை போட்டுக்கொண்டு போவதில் இருந்து, கன்னத்தை மறைத்து திடீரென ‘விருமாண்டி’ மீசைக்கு ட்ரை பண்ணுவது வரை ஏதேனும் கவன ஈர்ப்பு தேவைப்படுகிறது. நடுரோட்டில் நாய் குரைக்கிற மாதிரி பைக் ஹாரன் வைத்துக்கொண்டு பறக்க வைக்கிறது. ஒவ்வொரு நகத்துக்கும் ஒவ்வொரு கலரில் நக பாலீஷ் போட்டு, லோஹிப்பில் பெல்லி ஸ்டட் போட வைக்கிறது. உப்பு பெறாத விஷயத்தை எல்லாம் மணிக்கணக்கில் பேசவைக்கிறது. புதிதாக லாஞ்ச் ஆகியிருக்கிற மாமரத்து மாரியம்மனைப் பிரபலமாக்க, மரமெல்லாம் பால் வடிவதாகக் கிளப்பிவிட வைக்கிறது. கடவுள் வரைக்குமே ஒரு ‘பவர் ஸ்டார்’ டச் தேவைப்படுகிறது.

‘திறமையெல்லாம் விடுப்பா... அவன் மார்க்கெட்ல புலிக்கரடி... அரை மணி நேரம் பேசினான்னா அவனையே வித்துருவான். விளம்பரம் பண்ணிக்குறவன்தான் தடதடனு முட்டித் தூக்கிட்டுப் போயிட்டே இருக்கான்...’ எனப் புலம்பும் எத்தனை நண்பர்கள் இருக்கிறார்கள்? இங்கே மரம் நடுவதைச் சொல்வதற்குக்கூட விளம்பரங்கள் வேண்டி இருக்கிறது இல்லையா?

**ஒ** ரு முறை திருவண்ணாமலை போயிருந்தபோது, மலை உச்சியில் குடிசை போட்டு வசிக்கிற நாராயண சாமியைப் பார்க்க நண்பர்

அழைத்துப் போனார். ஏழெட்டு கிலோ மீட்டர்போல மூச்சிரைக்க ஏறி அவர் குடிசையை நெருங்கும்போது எங்களை நோக்கி 'சரேல் சரேல்ல்ல்' எனக் கற்கள் பறந்து வந்தன. தெறித்து ஓடி பதுங்கிக்கொண்டோம். ''சாமி கோவமா இருக்கு... இருங்க...'' என்றார் நண்பர். கொஞ்ச நேரம் கழித்து படுத்த வாக்கில் நகர்ந்துபோனோம்.

எங்களைக் கண்டதும் பயங்கரக் கோபமாகி, ''டேய்... உங்களையெல்லாம் பாக்க வேணாம்னுதானே இங்க வந்து உக்காந்திருக்கேன்... எதுக்கு வர்ற... போ... போயிரு...'' என சாமி கத்தினார். மறுபடி அவர் கற்களை வீச, கொண்டுபோயிருந்த ஆப்பிளை உருட்டிவிட்டு ஓடிவந்தோம். ''சாமி அப்பிடித்தான்... யாரையும் பாக்கவே விரும்பமாட்டாரு... அவர்ட்ட திட்டு வாங்குனதே பெரிய விஷயம்...'' என்றார் நண்பர். விளம்பர வெளிச்சமே வேண்டாம் என ஓடி ஒளிகிறவர்களுக்கும் விளம்பரம் கொடுத்துக்கொண்டே இருக்கிறது இந்த உலகம்.

**சி** தம்பரம் பக்கம் காரில் போய்க்கொண்டு இருந்தபோது, ''இங்க ஒரு பாட்டி இட்லி சுட்டு விக்கும்... செம ஃபேமஸு... வா போவோம்...'' என ஒரு நண்பர் அழைத்துப்போனார். போனால் தெரு ஓரமாக ஒரு பாட்டி இட்லி சுட்டு விற்க, எக்கச்சக்க கூட்டம் கும்மிக்கொண்டு இருந்தது. ''இந்த ரூட்ல போறவங்க வர்றவங்க எல்லாரும் இங்க வந்துருவாங்க. எப்பிடியோ இந்த ருசி பரவி, சென்னை வரைக்கும் பாட்டி ஃபேமஸ் ஆகிருச்சு...'' என்றார் நண்பர்.



**இ** ப்படித்தான் ஒரு முட்டுச் சந்தில் டாக்டர் அருண்பிரசாத் நடத்தும் சின்ன க்ளினிக்கில் அவ்வளவு கூட்டம் எப்போதும் காத்திருக்கும். ஒரு முறை பஸ் ஸ்டாண்ட் ஸ்க்ரீன்களில் போடுவதற்கு ஒரு விளம்பரம் எடுக்கலாமா என அவரிடம் கேட்டதற்குச் சொன்னார், ‘‘அதெல்லாம் வேணாங்க... நம்ம வேலை நல்லாயிருந்தா எல்லாரும் வருவாங்க... இங்க இருக்கறவங்கள்லாம் விளம்பரம் பார்த்துட்டா வந்தாங்க. நம்ம வொர்க்தாங்க நமக்கு விளம்பரம்!’’

அன்றைக்கு கோட்டூர்புரத்தில் இருந்து ஆட்டோவில் வந்துகொண்டு இருந்தபோது வழியில் மெட்ரோ ரயில் வேலைகளுக்காகப் போட்டு இருக்கும் இரும்புப் பலகையெல்லாம் போஸ்டர்கள். அதில் இருந்த வாசகங்களைப் பார்த்ததும் ஃப்ரீஸாகிவிட்டேன். ‘கெட்டாலும் மேன் மக்கள் மேன் மக்களே... ஒரு லட்சம் கோடி ஊழல் சதியை உடைத்துவிட்டு வெளிவந்த அண்ணனே...’ என அடிக்கப்பட்ட போஸ்டரில் கோட் சூட்டில் அந்த அரசியல் புள்ளி ‘நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி’ சூர்யா மாதிரி நிற்கிறார்.

உடனடியாக செந்திலின் கீச்சுக் குரல் கேட்டது... "ஒரு வெளம்பரம்..!"

52

# மாற்றத்தின் வெளிப்பாடு!

**டி**.ஆர். ரசிகர்களும், ராமராஜன் ரசிகர்களும் இப்போது என்ன செய்கிறார்கள்? அவர்களின் மனஓட்டம் எப்படி இருக்கும்?

இப்படி ஒரு கேள்வி, திடுதிப்பென்று என் மண்டைக்குள் உதித்துக் குதித்தது. உச்சகட்ட மனக்குழப்பத்தில் இருக்கும்போது இப்படிப்பட்ட விநோத ரசமஞ்சரிகள் மண்டைக்குள் நிகழும்.

பிரணாப்ஜி இப்போ என்ன பண்ணிட்டிருப்பாப்ல? குஷ்புவோட ஃப்யூச்சர் பிளான்தான் என்ன? அஜித் அ.தி.மு.க—வை டைம் பார்த்து கைப்பத்திருவாருனு ஒரு பேச்சிருக்கே... அப்பிடியும் நடந்துருமோ? ஆஸ்கர் வாங்கின செகண்ட்ல ரஹ்மான் என்ன ஃபீல் பண்ணியிருப்பாரு? நூறாவது செஞ்சுரிக்கான அந்த பாலை அடிச்சப்போ சச்சின் என்ன நினைச்சுருப்பாரு? சாகப் போற செகண்ட்ல சிலுக்கு மனசுல என்ன இருந்திருக்கும்? ஒபாமா ஆளுங்க வந்துட்டாங்கனு தெரிஞ்சதும் பின்லேடன் என்ன செஞ்சுருப்பாரு? மைக்கேல் ஜாக்சனோட முகம் கடைசியா எப்படி இருந்திருக்கும்? சுனாமி அலை எவ்வளவு உயரம் இருக்கும்? செண்பகா அருவிக்கு மேல ராஜநாகம் இருக்குனு சொன்னானே கலீல்... அது எப்படி இருக்கும்? பெங்குவின்லாம் என்ன சாப்பிடும்? இப்படி எழும் அனாமத்துக் கேள்விகளின் வரிசையில்தான் மேற்சொன்ன டி.ஆர். கேள்வியும் எழுந்தது. ஆனாலும், இந்தக் கேள்வி ஓர் அற்புதமான எபிசோடுக்கான தொடக்கமாகவே பட்டது.

அன்றைக்கு இரவே பஷீரிடம், தனபாலின் நம்பரை வாங்கி போன் அடித்தேன். ‘‘டேய்... எத்தனை வருஷம் ஆச்சுரா... காமராஜர் ஹால் பக்கம்தான் என் டிராவல்ஸ் ஆபீஸ். வாடா...’’ என்றார் தனபால் உற்சாகமாக. அவரைப் பார்ப்பதற்கு முன், ஒரு ஃப்ளாஷ்பேக் போட்ரலாம்...

அப்போது தனபால் தீவிரமான டி.ஆர். ரசிகர். அவரது அடையாளமே அதுதான். ‘‘வாடா என் மச்சி, வாழக்கா பஜ்ஜி, ஓ ஒடம்பப் பிச்சி...’’ எனக் கையைச் சொழட்டிச் சொழட்டிப் பேசுவார். ‘‘பூ வாங்கி வந்த நேரம்... என் பொன்னுரதம்...’’ என உச்சகட்ட ஃபீலிங்கில் பாடுவார். சாதாரணமாகவே தலையைக் கோதிக்கொண்டு, ‘‘ஏன்டா பேசல... எதுக்குடா பேசல...’’ என வானத்தைப் பார்ப்பார்.

டிகிரி காலம் முடித்துவிட்டு சிலபல அரியர்களோடு வெட்டியாகச் சுற்றித் திரிந்தவர் ஒரு நாள், அப்பாவோடு சண்டை போட்டுக்கொண்டு, கையில் பெட்டியோடு இளைஞர் மன்றம் நடந்த தாஸின் நெல்லுக் கடையிலேயே வந்து தங்கிவிட்டார். எதற்கெடுத்தாலும் ரைமிங்கில் பேசிக்கொண்டு டி.ஆர். மாதிரியேதான் திரிவார். ‘‘என் தலைவன்டா...’’ என்பார் எப்போதும் ஆவேசமாக. சின்ன விஷயத்துக்கெல்லாம் பொசுக்கென்று கண்ணீர்விட்டு அழுதுவிடுவார். டீ குடிக்கப் போகும்போது விட்டுவிட்டுப் போனதற்கு எல்லாம் ‘‘இனிமே பேசாதரா... அவ்வளவுதான் உறவு இல்ல...’’ என உச்சகட்ட உணர்ச்சிகளைப் பெருக்குவார். ஊரில் இருக்கும் தங்கச்சியை நினைத்து டைரியில் பக்கம் பக்கமாகக் கவிதை எழுதுவார்.

எப்போது தனபாலை நினைத்தாலும் ‘‘நானும் உந்தன் உறவை...’’ எனக் கையில் ரத்தத்தோடு கண்ணாடிக் கதவை முட்டுகிற டி.ஆரின் விஷுவல்தான் நினைவுக்கு வரும். அதன் பிறகு திருப்பூர், பெங்களூரு, சென்னை... என, தனபாலின் வாழ்க்கை எங்கெங்கோ போய்விட்டது. இப்போது அவர் சென்னையில் இருக்கிறார் என்பதே எனக்கு பஷீர் சொல்லித்தான் தெரியும்.

இத்தனை வருடங்கள் கழித்து அவரைப் பார்க்கப் போனேன். டிராவல்ஸ் ஆபீஸில் உட்கார்ந்திருந்தார். கொஞ்சம் நரையடித்து, ஆளே மாறிப்போய் இருந்தார். லஞ்ச்சுக்கு வெங்கட் நாராயணா ரோட்டுக்குப் பக்கத்தில் இருந்த அவரது ஃப்ளாட்டுக்கு அழைத்துப் போனார். வீட்டில் அவரது ரூமில் நுழைந்ததும் பரவசமாக இருந்தது. ரூமை அடைத்து பெரிய டி.வி.டி. லைப்ரரி. அத்தனையும் உலகப் படங்கள்.

'' 'டு லிவ்' பார்த்துட்டியா? செம பொலிட்டிக்கல் படம். டொரன்டினோ கலெக்ஷன்ஸ் மொத்தமா என்கிட்ட இருக்கு. டைம் கிடைக்கும்போது இங்கயே வந்து பாரு. 'மெலினா'வெல்லாம் பார்த்துருப்பல்ல... ம்... 'சில்வர் சால்ட்' பார்த்துட்டியா? கண்டிப்பா பாக்க வேண்டிய படம்பா... என்னா ஸ்டோரி டெல்லிங்குற...'' எனத் தடதடவென தனபால் பேசப் பேச... எனக்கு படா ஆச்சர்யம். 'டி.ஆரின் ரசிகக் குஞ்சு தனபாலா இவர்!' எனத் தோன்றியது.

அதைப் பற்றிப் பேசியபோது, ''அது மட்டும் இல்ல... நிறைய மாறிட்டேம்பா. வாழ்க்கை, டிராவல், ரசனை எல்லாமே மாறிப்போச்சு. இப்போ எல்லாமே தீவிரமா தேவைப்படுது. மெச்சூர்டா தேவைப்படுது... 'வே ஹோம்' படத்துல வர்ற கெழவியோட முகம் மாதிரி மனசு சலனம் இல்லாம ஆக ட்ரை பண்ணிட்டே இருக்கு...'' என்றார் சிரித்தபடி.

தனபால் இப்படியெல்லாம் பேசுவாரா! என எனக்குச் சந்தோஷமாக இருந்தது. வரும்போது வாசலுக்கு வந்ததும் ஓடிப்போய் 'ஐ அம்' பட டி.வி.டி—யைக் கொண்டுவந்து ''இத வெச்சுக்க...'' எனக் கொடுத்தார்.

'மாற்றம்' என்பது எவ்வளவு அற்புதமான சொல் என்பதை வரும்போது யோசித்துக்கொண்டே வந்தேன். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு காலத்திலும் எவ்வளவு மாற்றங்கள் வந்துவிடுகின்றன? சின்ன வயதில் ரஜினி பிடிக்கும் என்று சொன்ன பெரும்பாலான நண்பர்களுக்கு இப்போது கமல்தான் பிடிக்கிறது. அப்போது கமல் பிடிக்கும் என்ற பல பேர், இப்போது ரஜினி பிரியர். இரண்டு பேரையும் பிடிக்கும் என்கிற இடத்துக்குப் பல பேர் வந்துவிட்டார்கள். தீவிர ரசிகர்கள் என்ற இனமே இப்போது இல்லை என்பதுதான் ஆறுதலான மாற்றம்.

‘ரஜினி’ கணேஷ், ‘பாட்ஷா’ சுரேஷ் என அடைமொழி போட்டுக் கொண்டு, முக்கோண ஹேர் ஸ்டைல் பண்ணிக்கொண்டவர்கள் பலர் இப்போது மாறிவிட்டார்கள். என்னோடு டி.ஒய்.எஃப்.ஐ—யில் பணியாற்றி தீவிர கம்யூனிஸ்ட்டாக இருந்த நண்பன் இப்போது காங்கிரஸ் கவுன்சிலர். ‘‘பெட்ரோல் செலவுக்கும் செல் பில்லுக்குமே மாசம் முப்பதாயிரம் வந்துருது மாப்ள...’’ என்கிறான் கழுத்து செயினை இழுத்துவிட்டபடி.



‘‘ரஹ்மான் வந்தப்போ என்னால ஜீரணிச்சுக்கவே முடியலைங்க... ராஜா மேல அவ்வளவு பைத்தியம். ராஜாவை விட்டா வேற யாரு வர முடியும்னு ஒரே நெனப்புதாங்க... ரஹ்மான்லாம் ஆளே இல்லனு கொந்தளிச்சிட்டே இருந்தேன்... அது முட்டாள்தனம்னு அப்பறம் புரிஞ்சுருச்சுங்க... ஹி இஸ் ஆல்சோ எ லெஜண்ட்... ஜீனியஸ்ங்க... மாற்றத்தை மனசு உடனே எடுத்துக்கமாட்டேங்குது பாருங்க...’’ என ஹவுஸிங் போர்டு பார்க்கில் உட்கார்ந்து அம்பேத்கர் சொன்னபோது ஒரு பருவம் கடந்துவிட்டு இருந்தது. ‘‘டோனியைப் பார்த்தப்போ எனக்கும் இப்பிடித்தான் எரிச்சலா இருந்தது... சச்சின் மாரி வர முடியுமானு... வேர்ல்டு கப் ஃபைனல்ல ஷார்ப்பாப் பார்த்துக்கிட்டு ஒரு சிக்ஸரைப் போட்டான் பாருங்க... அங்கயே மாறிட்டேன்...’’ என்றார் கூடவே வினோத்.

காதலிக்கு நிச்சயம் எனத் தெரிந்ததும் ஆ·ஃப் அடித்துவிட்டுப் போய் ''உன்னை போட்டுத்தள்ளிட்டு நானும் போய் சேர்ந்துர்றேன்டி...'' என ரகளை பண்ணி, விஷம் குடித்துத் தப்பிய கணேசன், இப்போது மூன்று பெண் பிள்ளைகளுக்கு அப்பா. ''அதை நினைச்சா இப்பவும் சிரிப்பா வருது. நம்ம சீரியல்ல செம காமெடி எபிசோடுங்க அது...'' எனக் குலுங்கிச் சிரிக்கிறார் இன்று.

காதலித்துக் கல்யாணம் பண்ணிக்கொண்ட பாலு சித்தப்பா, தனது மகள் காதலித்து வந்து நின்றபோது ஒப்புக்கொள்ளவில்லை. ''இப்போ ஏன் இப்படி மாறிட்டீங்க..?'' எனப் போராடி வீட்டைவிட்டு ஓடிப்போய்தான் கல்யாணம் செய்துகொண்டார்கள் அவர்கள். நாலைந்து வருடங்களுக்குப் பிறகு இப்போது சமாதானமாகி ஒன்றாகிவிட்டார்கள். எப்போது, எந்தக் கணம் இந்த மன மாற்றங்கள் நிகழ்கின்றன என்பதுதான் எனக்கு வியப்பு.

மனித மனம்தான் உலகின் மிகப்பெரிய வேதியியல் கூடம். 'அவன் ரொம்ப மாறிட்டாம்பா...' என்கிற டயலாக்கைக் கேட்கும்போது எல்லாம் எனக்கு செம காமெடியாக இருக்கும். 'மாற்றம் ஒன்றைத் தவிர மாறாதது எதுவும் இல்லை... சம்போ சிவ சம்போ!' அன்பு துரோகமாக மாறுவதும், காதல் வலியாக மாறுவதும், மகிழ்ச்சி துயரமாக மாறுவதும், நம்மால் கண்டறிய முடியாத கணங்களின் மேல் நடந்துகொண்டே இருக்கின்றன. நாம் வாழ்வது, அந்தக் கணங்களும் மாறும் என்ற நம்பிக்கையின் கணங்களில்தான்!

ஒவ்வொரு காலத்துக்குமான சமூக மதிப்பீடுகளும் எனக்கு வியப்புதான். ''அய்யோ! மாப்ள குடிப்பாராம்ல...'' என்கிற குரல் இப்போது ''ஏங்க குடிக்காதவன் இப்போ யாருங்க..? குடிக்கலைன்னாதான் ஆச்சர்யம்'' என மாறிவிட்டது. ''தப்பான ஆளுங்க... லஞ்சம்லாம் வாங்குவாராம்...'' என்ற குரல் ''மேல் வரும்படி இல்லையா... என்னங்க பொழைக்கத் தெரியாத ஆளா இருக்காரு...'' என மாறிவிட்டது. 'தர்மம்' என்ற சொல் பாதிக்கு மேல் 'வன்மம்' என்ற சொல்லாக மாறிவிட்டது. தவறுகள், அவமானத்துக்குரியன அல்ல

என்கிற அளவுக்குச் சமூகம் வசதியாக மாறிவிட்டது. வீட்டில் இருக்கிற எவர்சில்வர் செம்பும் ஈசி சேரும் 25 வருடங்களாக அப்படியே இருக்கின்றன. ஆனால், 2 வருஷத்தில் 3 மொபைல் மாற்றிவிட்டோம். இதுதான் இந்தச் சமூகத்தின் மாற்றம்!

**எ** ங்கள் தெருவில் இருந்த சரவணன், லாட்டரி பைத்தியம். சம்பாதிக்கிற பணத்தில் பாதிக்கு மேல் லாட்டரிக்கே விட்டுவிடுவார். ஒரு முறை கும்பகோணத்தில் சுரண்டல் லாட்டரி கிழித்திருக்கிறார். காசு விழ விழ... மறுபடி மறுபடி கிழித்துக்கொண்டே இருந்திருக்கிறார். 1,000 ரூபாய்க்கு மேல் கிழித்துவிட, ''காச வெச்சுட்டுக் கிழி...'' எனக் கடைக்காரர் தடுக்க, பயங்கர ரகளை. அடிதடி போலீஸ் கேஸாகி ஒரு மாசத்துக்கு திருச்சி ஜெயிலில் கிடந்தார். ஜெயிலில் இருந்து திரும்பி வரும்போதே தஞ்சாவூரில் 1,000 ரூபாய்க்கு லாட்டரி சுரண்டி மறுபடி தகராறு இழுத்த சரித்திர நாயகன் சரவணன்.

திடுதிப்பென்று ஒரு நாள் லட்டரிக்குத் தடை வந்த பிறகு பாதிப் பைத்தியமாகித் திரிந்தார் பார்ட்டி. பதுக்கல் லாட்டரிக்கெல்லாம் போய் சிக்கி, கொஞ்சம் கொஞ்சமாக அதிலிருந்து மீண்டு இப்போது ஆளே மாறிவிட்டார். ''சூதாட்டத்தைவிட மோசமான விஷயம் இல்லைங்க... நல்லவேளை இந்த அளவுல தப்பிச்சுட்டேங்க...'' என்பவர் இப்போது ஈ.பி. ஆபீஸில் பியூனாக உழைக்கிறார்.

நாளைக்கே தமிழ்நாட்டில் தீவிர மதுவிலக்கு வந்துவிட்டால் என்னாகும்? ப்ளாக்கில் சரக்கு தேடுவது, கள்ளச்சாராயம் என அலைபாய்ந்து ஒரு கட்டத்தில் 'குடிமகன்கள்' மொத்தமாகத் திருந்தி, தெளிவான மாற்றம் வந்துவிடும் இல்லையா?

கே.பி.எஸ். தாத்தாவுக்கு அவரது சைக்கிள்தான் எல்லாம். தினம் தினம் காலையில் எழுந்ததும் சைக்கிளை எண்ணெய் போட்டுத் துடைத்துவிட்டுத்தான் அடுத்த வேலை. ஹாண்ட்பாரில் குஞ்சம் கட்டி, மட்கார்டில் ஸ்டிக்கர் ஒட்டி அந்த சைக்கிளை அலங்கரிப்பதுதான் அவருக்குப் பாதி வேலை. ஒரு மகாராஜா குதிரையில் வருகிற

மாதிரிதான் அந்த சைக்கிளை அவர் ஃபீல் பண்ணுவார். யாராவது அவர் சைக்கிளில் கைவைத்தாலே டென்ஷனாவார்.

ஒரு முறை, தெரியாமல் சாவியைத் திருடி சைக்கிளை எடுத்துப்போனதற்காக மாசக்கணக்கில் நண்பனோடு பேசாமல் இருந்திருக்கிறார். அந்த சைக்கிளில்தான் அவரது காதல், நட்பு, கல்வி, வேலை எனப் பல நினைவுகள் சுழன்றுகொண்டு இருந்தன. தாத்தாவின் நண்பர்கள் எல்லாம் மோட்டார் பைக், கார் என அடுத்தடுத்த மாற்றங்களுக்குப் போய்விட... இவர் மட்டும் சாகிறவரை அந்த சைக்கிளில்தான் போய்வந்தார். பணம் காசு வந்தபோதுகூட, ''இவனை விடமுடியாதப்பா...'' என அந்த சைக்கிளையே கட்டிக்கொண்டார். தாத்தா செத்துப்போய் அவரைத் தூக்கிப் போனபோது அந்த ஹீரோ சைக்கிள் திண்ணையில் தனியே கிடந்தது, மட்கார்டில் உதிர்ந்த பெயர் எழுத்துகளோடு. பின்னொரு நாள் கொல்லையில் உடைந்துகிடந்த அந்த சைக்கிளைப் பார்த்தேன். ஆயிரமாயிரம் ஹாரன் ஒலிகளுக்கு நடுவே இப்போது அதன் சித்திரம் தோன்றுகிறது!

'ஒவ்வொரு நாளும் புதிது புதிதாகப் பூக்கும் பூக்களைத் தருவது வேரின் பழமைதான்' என ஜப்பானியப் பழமொழி இருக்கிறது. மாற்றம் என்பது ஒரு சுழற்சி. எல்லாப் புதிய மாற்றங்களும் ஏதோ ஓர் பழமையின் விதையில் இருந்தே கிளைக்கும்.



‘ஃபாதர் அண்ட்சன்’ என்ற படத்தில் ஒரு வசனம் எனக்கு எப்போதும் நினைவிருக்கும். ஒரு மகனுக்கும் அப்பாவுக்குமான உணர்வுகளைப் பேசும் படம் அது. மகனுக்கும் அப்பாவுக்கும் எதாவது சண்டை வந்துகொண்டே இருக்கும். வயதான அந்த அப்பா எப்போதும் இருமிக்கொண்டு அறையின் மூலையில் முனகிக் கிடப்பார். மகனின் குடும்பம் அவரைக் கண்டுகொள்வதே இல்லை. அவரது 3 வயது பேரன் மட்டும் தாத்தாவை நேசிப்பவனாக இருப்பான். ஒரு நாள், மகன், அவரைக் கொண்டுபோய் வலுக்கட்டாயமாக முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டு வருவான். அப்போது அவனிடம் அவனது 3 வயது மகன், ‘‘ஏம்ப்பா தாத்தாவக் கொண்டுபோய் வெளில விட்டீங்க..?’’ என்பான். அதற்கு இவன், ‘‘பழசையெல்லாம் மாத்தினாத்தாம்பா நம்ம லைஃப் மாறும்... தாத்தா பழசாயிட்டாரு...’’ எனப் பதில் சொல்வான். உடனே, பக்கத்தில் மாட்டப்பட்டிருக்கும் ஜீசஸ் படத்தைக் காட்டி அந்தக் குட்டிப் பையன் கேட்கும் ஒரு கேள்விக்குத் திகைத்து நிற்பான் அந்த அப்பன்.

‘‘இந்த ஜீசஸ்கூட ரொம்பப் பழைய ஆள்தானே... இவரை ஏம்ப்பா இன்னும் இங்க வெச்சுருக்க?’’

53

# அதிகாரத்தின் தொனி...

**எ** னது உறவினர் ஒருவருக்குப் பணி மாற்றம் வாங்குவதற்காக அலைந்தேன்.

சென்னையைச் சேர்ந்தவர், விழுப்புரம் பக்கத்தில் அரசு ஆசிரியையாக இருக்கிறார். தினமும் 3 மணி நேரத்துக்கும் மேலாகப் பயணம் பண்ண வேண்டியிருக்கிறது. அவருக்கு கர்ப்பப்பை அகற்றும் சிகிச்சை வேறு நடந்திருப்பதால், சென்னைக்கு டிரான்ஸ்ஃபர் வாங்குவது உடனடித் தேவையாகிவிட்டது. அரசுத் துறைகளில் ஒரு காரியம் சாதிப்பது என்பது அவ்வளவு பெரிய ‘ஜிந்தாக்கா’!

முறைப்படி டிரான்ஸ்ஃபருக்கு 23—ம் தேதி காஞ்சிபுரத்தில் கவுன்சிலிங் என்பார்கள். அங்கு உள்ள அரசுப் பள்ளியில் கவுன்சிலிங் நடக்கும். போனால் ஓர் ஈ காக்காகூட இருக்காது. வடக்குப்பட்டி ராமசாமி ஒருவர், பல் குத்திக்கொண்டே டீடெய்ல் கேட்பார். கடைசியாக, ‘‘என் சகலபாடிக்குக்கூட போன வாரம்தான் நீடாமங்கலத்துலே இருந்து திருச்சிக்கு டிரான்ஸ்ஃபர் வாங்குனோம். இதெல்லாம் ச்சும்மா ஃபார்மாலிட்டி... ஒண்ணும் நடக்காது. பாருங்க... ஒரு கேண்டிடேட்டும் வரல... என் சகலபாடிக்கு மூணு குடுத்துச்சு. டிபார்ட்மென்ட்ல ஆள் இருக்கு... வேணும்னா சொல்லவா...’’ என்பார் கூலாக.

‘‘மூணுன்னா..?’’

‘‘மூணு லச்சங்க...’’

‘‘பாப்பு படிப்புச் செலவு வேற இருக்கு... இப்போ போய் மூணு லச்சம்னா எங்க போறது?’’

‘‘சரி விடுங்க... கொஞ்சம் சென்டிமென்ட்டா அட்டாக் பண்ணிப் பாப்போம்.’’

அதன்படியே மனதை உருக்கும் கடிதம் ஒன்றை சி.எம். செல்லுக்கு எழுதினோம். (கற்பனை கலப்பெல்லாம் இல்லை... உண்மைதான்!) 3 பெண் பிள்ளைகளை வைத்துக்கொண்டு சிரமப்படுவது, அறுவைசிகிச்சை செய்தது, ஒரு பெண்ணாக இந்த சமூகத்தை எதிர்கொள்வது என எழுதப்பட்ட கடிதத்துக்கு, ‘கடிதத்தைப் பெற்றுக்கொண்டோம்’ என்பதற்கான ரெசிப்ட் வந்தது. ஆனால், நடவடிக்கை எதுவும் இல்லை. மேற்கொண்டு யாரை அணுகுவது, பேசுவது என்றும் தெரியவில்லை.

திடுதிப்பென்று ஒரு நாள், உறவினர் எனக்கு போன் பண்ணி, ‘‘தினமும் காலைல 11 மணிக்கு போயஸ் கார்டன்ல சி.எம். பப்ளிக்கை மீட் பண்றாங்களாமே... அங்க உனக்கு யாராவது தெரிஞ்சவங்க இருக்காங்களா? நேர்ல மீட் பண்ணி லெட்டர் குடுத்தா, எதாவது நடக்கும்ல’’ என்றார்.

‘‘இல்லத்த... அவங்க தனியாலாம் யாரையும் மீட் பண்ண மாட்டாங்க... சி.எம். செல்லுக்கு மனு குடுக்கறதுதான்... பெருங்கூட்டம் நிக்கும்... நாமளும் போய்க் குடுத்துட்டு வர வேண்டியதுதான்...’’ என்றேன்.

‘‘இல்லல்ல... நீ விசாரியேன். தனியாப் பார்த்துட்டாங்கன்னா நடந்துரும்ல...’’ என்றார் அப்பாவியாக.

‘‘நீங்க என்னத்த... முக்குக் கட ஆவின் வேலுவப் பார்க்கறது மாதிரி சொல்றீங்க. சரி... நான் ட்ரை பண்றேன்...’’ என்றேன் அப்போதைக்கு. இந்த நாட்டின் குடிமகள் ஒருத்தி, முதலமைச்சரைப் பார்த்துப் பேசுவது என்பது அவ்வளவு சுளுவான காரியமா..? 11 மணிவாக்கில் போயஸ் கார்டன் பக்கம் போய்ப் பார்த்தால், கேட் பக்கமே போக முடியவில்லை.

அங்கிருந்த ஒரு போலீஸ்காரர் டீடெய்ல் கேட்டுவிட்டு, ‘‘லூஸா தம்பி நீங்க... இதெல்லாம் நடக்கற காரியமே இல்ல. டிரான்ஸ்ஃபர்தானே... எங்க மச்சினன் ஒய்ஃபுக்கு போன வருஷம் இங்க வேளச்சேரிக்கு வாங்குனோம்... ரெண்டார் ரூவா... நமக்குத் தெரிஞ்ச வக்கீல் ஒருத்தர் இருக்காரு. செகரட்ரியேட்ல நல்ல பழக்கம்...’’ என்றார் கடைசி பஃப் கிங்ஸ் இழுத்தபடி.

எனக்கு சி.எம்—மை எப்படிப் பார்ப்பது என்ற யோசனை தறிகெட்டு ஓடியது. சசிகலாவின் சொந்தக்கார குரூப்பில் ஒருவர் நுங்கம்பாக்கத்தில் ஹோட்டல் நடத்துகிறார். அவரைப் பிடிக்கலாம் என்றால், ‘‘நீ வேற... அந்த ஏரியாவுக்கே இப்ப போக முடியாது... போட்ருவாய்ங்க...’’ எனத் தடுத்தாட்கொண்டார் ஒரு நண்பர். ‘‘சோ சாரை மீட் பண்ண முடியுமா..?’’ என இன்னொரு நண்பர் என்னிடம் கேட்டார். ‘‘இல்லை நண்பா... அவங்க ஸ்கூல்ல எம் பொண்ணுக்கு சீட் கேட்டுப் போனதுக்கே என் டவுசர் கிழிஞ்சுருச்சு. அமைச்சரை வேணும்னா பார்ப்பமா..?’’ என, ஒரு ரூட் போட்டார் இன்னொரு நண்பர்.

ஓர் அதிகாலையில் அமைச்சரின் பி.ஏ—வை ரெண்டு கோட்டிங் பவுடரோடு சந்தித்தேன். ‘கரகாட்டக்காரன்’ சண்முகசுந்தரத்தை அரசியல்வாதி கேரக்டர்களில் ஏன் தொடர்ந்து பயன்படுத்துகிறார்கள் என்பதை அப்போதுதான் உணர்ந்தேன். சண்முகசுந்தரம் மாதிரியே அந்த பி.ஏவும் சீரியஸாகப் பேசுகிறாரா... நக்கலாகப் பேசுகிறாரா என்பதைக் கடைசிவரை கண்டுபிடிக்கவே முடியவில்லை. இரண்டு நாட்கள் கழித்து அந்த பி.ஏ—வுக்கு போன் பண்ணும்போது சொன்னார், ‘‘தம்பி... ரெண்டு ரூவால முடிச்சுரலாம்... போன வாரம்தான் மூணு பேருக்கு முடிச்சுவுட்டுச்சு... ஒண்ணு அபிராமிபுரம், இன்னொண்ணு நெற்குன்றம்...’’

ஒரு வாரம் கழித்து அந்த அத்தை போன் பண்ணி, ‘‘முருகா... நம்ம வசந்தி டீச்சர் டிரான்ஸ்ஃபர் வாங்கிருச்சு. ரெண்டு ரூவாயாம்... நம்பிக்கையான ஆளுன்னு சொல்லுச்சு. அம்பதாயிரம் ரூவா குடுத்துட்டேன்... ஒண்ணாம் தேதிக்குள்ள வாங்கித்தந்துர்றேன்னு சொல்லிருக்காங்க... இதுக்குமேல போராட முடியாதுப்பா. உடம்பு

தாங்கணும்ல...'' என்றது. என்ன சொல்வது என்று தெரியாமல் போனை வைத்தேன்.

'அதிகாரம்' என்ற ஒன்று நம்மை எப்படி எல்லாம் துரத்தி அடிக்கிறது..? நாம் ஒவ்வொருவரும் இந்த அதிகாரத்துக்கு முன்பாக, ஒன்றும் செய்ய இயலாதவர்களாக வாழ்க்கை முழுக்க நமக்கே தெரியாமல் போராடித் தவிக்கிறோம்.

**அ** திகாரத்துக்கு ஆசைப்படுகிறவர்களுக்கும் அதிகாரத்தால் நசுக்கப்படுகிறவர்களுக்குமான போராட்டம் எப்போதும் நடக்கிறது. அன்றைக்கு ஒரு ஹோட்டலில் கண்ணாடிக் கதவுக்குப் பின்னால் ஒரு நேபாளி சப்ளையர் சிறுவனை, சூப்பர்வைசர் ஒருவர் போட்டு அடித்துக்கொண்டு இருந்தார். ஏதோ கண்ணாடிப் பொருளை உடைத்துவிட்டானாம். அந்த சூப்பர்வைசரைத் திட்டி, அந்தச் சிறுவனை இழுத்தேன். ''சார்... உங்களுக்கெல்லாம் தெரியாது... இவனுங்களை எல்லாம் இப்பிடித்தான் சார் ட்ரீட் பண்ணணும்...'' என்றார் அந்த சூப்பர்—வைசர். அந்தச் சிறுவன் 4000 ரூபாய் சொற்ப சம்பளத்துக்கு எங்கோ தூர மண்ணில் இருந்து மொழி தெரியாத இங்கே வந்து பாத்திரம் கழுவுகிறான்.



அவனது முகத்தைப் பார்க்கும்போது, கனடாவில் ஒரு ரெஸ்டாரென்ட்டில் பாத்திரம் கழுவும் வேலை பார்க்கும் என் ஈழ நண்பர் ஒருவரின் நினைவு வந்தது. ‘வன்னியிலே பெரிய விவசாயக் குடும்பம் எங்களோடது... எல்லாத்தையும் இழந்துட்டு இங்கே பிளேட்டு கழுவிட்டு இருக்கேன். யார் யார்ட்டேயோ அடி வாங்கிருக்கேன்... காயம்பட்ருக்கேன்.... எவ்வளவோ இழந்துட்டேன்... உயிர் வாழ்றது மட்டும்தான் இப்போ என்னோட சாதனை... அதிகாரமும் அதிகார வெறியும் எங்களை விடாமல் துரத்திக்கொண்டே இருக்கப்பா...’ என அவர் சொன்னது வலியாக நெஞ்சில் நிலைத்திருக்கிறது. இந்த நேபாளிச் சிறுவனுக்கு அதையும் சொல்லத் தெரியவில்லை... அவ்வளவுதான்.



உலகம் முழுவதும் எத்தனை எத்தனை பேர் இப்படி யாரோ ஒருவரின், ஒரு நிறுவனத்தின், ஒரு தேசத்தின் அதிகார வேட்கைக்குத் துன்பப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.

''ஏய்... எல்லாத்தையும் அள்ளிப் போடு...'' — திடுதிப்பென்று வந்து நிற்கும் போலீஸ்காரரைப் பார்த்து மிரண்டு, ரோட்டில் போட்ட இட்லிக் கடையை அப்படியே அள்ளிவைக்கிறார்கள் ஒரு தம்பதி. ''இன்னிக்கு யாவாரம் அம்புட்டுதேன்... எல்லாம் நாசமாப்போச்சு...'' என ஒரு டீக்கடைக்காரர் சுருட்டிக்கொண்டு போகிறார். ''என்னை ஏன்யா புடிச்சுட்டு வந்தீங்க...'' என்ற ஒப்பாரியோடு காவல் நிலையங்களில் ஆயிரம் ஆயிரம் பேர் அனுதினம் உட்கார்ந்து இருக்கிறார்கள். ''என் நெலத்தைப் புடுங்கிட்டாங்கய்யா...'' எனக் கதறிக்கொண்டு காத்திருக்கிறார்கள். கட்டப் பஞ்சாயத்து, அதிகார துஷ்பிரயோகம் என எளிய மக்களின் மீது திணிக்கப்படும் கொடுமைகள் ஒவ்வொரு நாளும் அதிகமாகிக்கொண்டே இருக்கின்றன.

ஒரு நடிகைக்காக அடித்துக்கொள்கிற இரண்டு நடிகர்களை எந்த போலீஸும் எதுவும் செய்ய முடியாது இந்த தேசத்தில். ஆனால், சென்ட்ரல் ஸ்டேஷன் வாசலில் பொரிகடலை விற்கிற கிழவனைக் கொண்டுபோய் ராத்திரியெல்லாம் ஸ்டேஷனில் உட்காரவைத்துத்

துன்புறுத்தும். நேற்று வரை ஒன்றையணாவுக்குப் பெறாதவர்கள், கவுன்சிலர் ஆனதில், எம்.எல்.ஏ. ஆனதில்... கார், அடியாட்கள், செல்வாக்கு எனப் பறக்கிறார்கள்.

கோயில்களில், ஆஸ்பத்திரிகளில், பள்ளிகளில் சாமான்யர்கள் அத்தனை பேரும் காத்திருக்க, அதிகாரம் படைத்தவர்கள் முதல் ஆளாக உள்ளே போய்வருகிறார்கள். அதிகாரம் படைத்தவர்களின் தூரத்துச் சொந்தக்காரர்களுக்குக்கூடப் பயப்படவேண்டி இருக்கிறது. இந்த நாடு எப்போதும் அதிகாரம் உள்ளவர்களுக்கு ஒன்றாகவும் இல்லாதவர்களுக்கு வேறாகவுமே இருக்கிறது.

'ரி ங் மாஸ்டர்' என்றொரு ரஷ்யன் சிறுகதை. அந்த ஊருக்குப் புதிதாக ஒரு சர்க்கஸ் வந்திருக்கும். சிங்கத்தை ஒரு சாட்டை நுனியில் அடக்கி வைத்திருக்கிற அந்த ரிங் மாஸ்டரைப் பார்த்து வியந்துபோவான் ஒரு சிறுவன். அவருக்கு பரம விசிறியாகி அவர் செல்லும் இடம் எல்லாம் தொடர்ந்து செல்வான்.

சிங்கத்தை விரல் நுனியில் அதிகாரம் செய்கிற ரிங் மாஸ்டர், சம்பளத்துக்காக சர்க்கஸ் ஓனரிடம் கை கட்டி நிற்பார். வீட்டில் சதா திட்டும் மனைவியின் முன்னால் கூனிக் குறுகி நிற்பார். ரேஷன் கடை, ராணுவ முகாம், மகனின் பள்ளிக்கூடம் என நாளெல்லாம் மிகவும் பணிவாக, பயந்த ஆளாக சுற்றிக்கொண்டு இருப்பார். 'சிங்கத்தை அதிகாரம் பண்ணும் அவர், மற்றவர்களிடம் எல்லாம் அப்படி இருப்பது ஏன்?' என்ற கேள்வியோடு முடியும் அந்தச் சிறுகதை. அந்த ரிங் மாஸ்டரைப் போலத்தான் இருக்கிறது நம் ஒவ்வொருவருக்குமான வாழ்க்கை!

அதிகாரம் என்பது, சமூகத்தின் சகல மட்டங்களிலும் நம்மைப் படுத்தி எடுக்கிறது. 'பூர்ஷ்வா' என்ற சொல்லுக்கு உரியவர்கள் நம்மைச் சுற்றி இருக்கிறார்கள். ''எங்க மேனேஜரின் டாமினேஷன் தாங்க முடியலை... வேணும்னே அவர் பவரை என் மேல திணிக்கிறாரு...'' என எத்தனை பேர் புலம்புகிறார்கள். ''நான் புக் ரீடிங் பண்றது என் ஹஸ்பெண்டுக்குச்

சுத்தமாப் பிடிக்காது... அவருக்குத் தெரியாமதாங்க படிக்கிறேன்...'' என, ஒருவர் போன் பண்ணினார்.

''எம் பொண்டாட்டிக்கு அவ சொல்றதுதான் நடக்கணும்... அவங்க வீட்டுக்குத்தான் நான் பண்ணணும்... அவளை மீறி எதாவது நடந்தா, எந்த எக்ஸ்ட்ரீமுக்கும் போவா...'' என நாக்கு குழற நள்ளிரவில் புலம்புகிறார் நண்பர். ''எங்கப்பாதாங்க எனக்கு முதல் எதிரி... அவர் சொன்ன மாதிரிதான் டிரெஸ் பண்ணணும்... முடி வெட்டணும்... அவர் சொன்ன கோர்ஸைத்தான் படிக்கணும்... ஹிட்லர் மாதிரி நடத்துறாருங்க... இப்போ கல்யாணத்துலயும் வந்து நிக்கிறாரு... நேத்து பெரிய சண்டை வந்துருச்சுங்க...'' என டென்ஷனாகும் மகன்கள் எத்தனையோ பேர். ஓர் உறவை, அன்பை, நட்பைச் சிதைக்கும் முதல் விஷயம் அதிகாரம்தான் இல்லையா?

**இ** ரண்டாம் உலகப் போரின்போது வியட்நாமில் எடுக்கப்பட்ட ஒரு புகைப்படத்தில் நிர்வாணமாக ஓடிவரும் ஒரு சிறுமியின் முகத்தில் இருக்கும் உணர்வுகளை எழுதிவிட முடியுமா? இலங்கையில் ஈழப் பகுதியில் வெற்றிச் சின்னம் என சிங்கள அரசு அமைத்திருக்கும் துப்பாக்கி ஏந்தியிருக்கும் ராணுவ வீரனின் சிலையைப் பார்க்கும்போது, எவ்வளவு கோபம் வருகிறது..! ஆயிரம் ராணுவ வீரர்கள் இறந்ததற்கு அஞ்சலி செலுத்தக்கூடும் அமெரிக்க மக்களிடம், உருத்தெரியாமல் அழிந்து, சிதைந்துபோன ஆயிரமாயிரம் மூன்றாம் உலக நாடுகளின் உயிர்கள் என்ன கேட்கும்..? வில், அம்பு வைத்துக்கொண்டு பெரும் ஆயுதங்கள் தாங்கிய துணை ராணுவப் படையிடம் எதற்காகப் போரிடுகிறார்கள் வனவாசிகள்?

**தி** ருவண்ணாமலையில் கிரிவலப் பாதையில் நடந்துகொண்டு இருந்தபோது சாலையில் இன்னும் அழியாத ரத்தக் கறை கிடந்தது. விசாரித்தபோது, ''இங்க ஒருத்தரைப் போட்டாங்க... அவர் மனித உரிமை ஆர்வலர். ரியல் எஸ்டேட், கவர்மென்ட் ஆபீஸர்ஸ் அது இதுன்னு எதையாச்சும் நோண்டிக்கிட்டே இருப்பாரு. அவரு வூட்ல

நெறைய பூனைங்க வளர்த்தாரு... அதுங்களுக்குப் பால் வாங்கறதுக்காக காலையில வந்தவரை யாரோ போட்டுட்டாங்க...'' என்றார் நண்பர்.

அன்றைக்கு இரவு பௌர்ணமி கிரிவலம். எங்கெங்கும் ஜனத்திரள். பாதை ஓரத்தில் பார்வையற்ற முதியவர் சின்ன இசைக் குழுவோடு உட்கார்ந்து பழைய பாடல்களாகப் பாடிக்கொண்டு இருந்தார். கிரிவலம் சுற்றிவிட்டு அண்ணாமலையார் கோயிலில் போய் நின்றபோது, தூரத்தில் அந்த முதியவர் பாடிக்கொண்டு இருந்த வரிகள் கேட்டன,

*'நானும்கூட ராஜாதானே நாட்டு மக்களிலே*
*அட, நாணமென்ன வெட்கமென்ன*
*காசு கேட்பதிலே...'*

# 54

# பரவச ஆட்டத்தில் (ஆ)சாமிகள்!

**ஆ** டி மாதம், தெருவோரத் தெய்வங்களின் காலம்.

பெரியார் பாதையில் சிலுசிலுவெனத் தூறலில் நனைந்தபடி நடந்தால், வேம்புலியம்மன் கோயில் பக்கமாக 'ச்ச்செல்லாத்தா... ச்ச்செல்ல மாரியாத்தா...' என மாலதி லக்ஷ்மனின் வெண்கலக் குரலில் வீதி அதிரும். ஏகாந்தம் எகிறும். சிம்மாசனத்தில் உட்கார்ந்திருக்கும் சீரியல் லைட் அம்மன், மனசுக்குள் மாடர்ன் ஆர்ட் வரையும்.

நைட்டி மேல் துண்டு போட்டு அபார்ட்மென்ட் வாசல்களில் ஆன்ட்டிகள் உட்கார்ந்திருப்பார்கள். பூப்போட்ட சுடிதார்கள், மூக்குத்தி மூக்குகள், மல்லிப்பூ — சாமந்திப்பூ காம்பினேஷன் என ஏரியாவில் அதுவரை பார்க்காத ஃபிகர்கள் எல்லாம் கோயில் திண்டில் பேப்பர் பிளேட்டில் பொங்கலும் புளியோதரையுமாக நிற்கும்.



அஞ்சாறு தனுஷ்கள் மேடைக்கு சைடில் நின்று மிக்ஸிங் போட்டுக்கொண்டே 'தல பாட்டு... தல பாட்டு' எனக் கத்துவார்கள். 'மதுரைக்குப் போகாதடி...' எனக் குட்டைப் பாவாடையில் குத்தி எடுக்கும் சோனுவை சைடு ஸ்டாண்ட் பைக்குகளில் இருந்து மொபைலில் வீடியோ எடுத்துக்கொண்டு இருப்பார்கள் சில சிம்புகள். தர்மகர்த்தா, கவுன்சிலர், ஏரியா வணிகர் சங்கப் பிரமுகர் என முக்கியப் புள்ளிகள் எல்லாம் பவுடரும் பழ வாசமுமாக மேடைக்கு முன்னால் உட்கார்ந்துகொண்டு, எம்.ஜி.ஆர்., சிவாஜி பாட்டு கேட்டு சீட்டு எழுதுவார்கள்.

இரண்டு போலீஸ்காரர்கள் ஓரமாக ஒதுங்கி சாயங்காலம் மிச்சமான சுண்டலை மென்றுகொண்டே பொண்டாட்டிக்கு போன் போடுவார்கள். நடுவே விடாமல் வந்து ஒரு கார்க்காரன் ஹாரன் அடிக்க, ஒரு குரூப் போய் அவன் அத்துமீறலை முறிப்பார்கள். திடுதிப்பென்று வரும் மூத்திரச் சந்துப் பிரச்னைகளுக்குப் பாதிக் கூட்டம் எழுந்து ஓடும். அந்த நேரம் பார்த்துதான் ஒரு எஸ்.பி.பி. எழுந்து பயங்கர சாந்தமாக, 'ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில் கன்றினைப்போல் மாயக்கண்ணன் தூங்குகிறான்...' என ஆரம்பிப்பார். மொத்தக் கூட்டமும் சோனு ஃபீவரில் இருக்கும்போது ஒரு ஒல்லி பெல்ட் டி.எம்.எஸ். எழுந்து, 'மண்ணானாலும் திருச்செந்தூரில் மண்ணாவேன்...' எனத் திருகல் பண்ணுவார். லோக்கலில் மொபைல் கடை நடத்தும் பெரியம்மா, மட்டன் ஸ்டால் சித்தப்பா, தேங்காய் மண்டி அண்ணாச்சி என ஸ்பான்சர்களின்

போட்டோக்களுடன் பிரமாண்ட ஃப்ளெக்ஸ்கள் எங்கெங்கும் இருக்கும். அந்த இரவு முடியும் அதிகாலையில், குவிந்துகிடக்கும் பேப்பர் கப்புகளுக்கு நடுவே தனித்து நிற்பாள் அந்த அம்மன் எப்போதும்போல.

எனக்கு, சென்னையை ஆடி மாதத்தில் அதிகமாகப் பிடிக்கும். இந்த ஊரில் தெருவுக்குத் தெரு இத்தனை சாமிகள் இருக்கிறார்கள் என்பதே அப்போதுதான் தெரியும். அங்காள பரமேஸ்வரி, கங்கையம்மன், எல்லை மாரியம்மன், வேடியம்மன், கருமாரி, நாகாத்தம்மன், ஹவுஸிங் போர்டு மாரி, மீன்தொற மாரி, வண்ணாந்தொற மாரி, சந்தக்கட மாரி... எல்லாமே தெருவோரத் தெய்வங்கள். யதார்த்தப் பட நாயகிகள். தினம் தினம் கடந்துபோகும் நாலு பேர் கன்னத்தில் போட்டுப் போவதைத் தவிர, வேறென்ன கிடைக்கும் இந்த வீதியோரச் சாமிகளுக்கு?

திருப்பதி ஏழுமலையானைப் பார்க்கப் பல மணி நேரம் காத்திருந்து, எட்டி நின்று லட்டு வாங்க வேண்டும். சபரிமலை ஐயப்பனை அஞ்சாறு நொடிகள் நிதானித்துப் பார்ப்பதே அதிசயம். பழநி முருகனை ஏறிப்போய்ப் பார்க்க எல்லோருக்குமா வாய்க்கிறது? நமது அனுதினங்களின் ஆசீர்வாதங்கள் இந்தத் தெருவோர தெய்வங்கள்தானே? டிராஃபிக்கில் நிற்கும் பஸ் ஜன்னல்களில் திமிறிக்கொண்டு எவ்வளவு பேர் இவர்களைக் கும்பிடுகிறார்கள்? க்ராஸ் பண்ணும்போது ‘உச்ச்... உச்ச்’ எனத் தன்னிச்சையாகப் போட்டுக்கொண்டு போகிறார்கள். பெருநகரத்தில் வாக்கப்பட்டு வந்த ஊர்நாட்டு அக்காக்கள் சாயங்காலமாகப் பூக் கட்டிக்கொண்டு போய்ப் பேசிவிட்டு வருவதே அபூர்வம், இந்தச் சிறு தெய்வங்களுக்கு.

சென்ட்ரல் ஸ்டேஷன் பாலத்துக்கு முன்னால் ஒரு பாடிகாட் முனீஸ்வரன் உட்கார்ந்திருக்கிறார். எப்போதும் தள்ளி நிற்கும் இளநீர்க் கடைக்காரரைப் பார்த்தபடி. புது பைக்கோ, காரோ வாங்கி வந்து எலுமிச்சம் பழம் நசுக்கி கியர் போடும்போது முனீஸ்வரனின் சிரிப்பு கேட்கும். அண்ணா ஆர்ச் பக்கம் அவ்வளவு நெரிசலில் ஒரு குரூப் அலகு குத்திக்கொண்டு நிற்பதைப் பார்த்தேன். பரபரப்பான தி.நகரின் தெரு ஒன்றில் வேப்ப மரத்துக்கு மஞ்சள் பாவாடை கட்டி, சின்னதாகச்

சூலம் நட்டு விளக்கெரியும். யார், எப்போது வந்து இதைச் செய்தார்கள் என்றே தெரியாமல் ஓர் எளிய சாமி அருள் பாலித்துக்கொண்டு இருக்கும் எல்லோருக்கும்.

ஊரில் இருந்து கொரடாச்சேரிக்குப் போகும் வழியில் ராக்கப்பெருமாள் கோயிலில் பஸ்ஸில் இருந்தே காசு போட்டுப் போவார்கள். செங்கல்பட்டு தாண்டினால் வழி எல்லாம் சீரியல் லைட்டுகளில் மின்னுகின்றன சிறு தெய்வங்கள். பயணத்தில், ஊர்களின் வெளியே உசந்து நிற்கும் பெயர் தெரியாத பெருவீரக் காவல் தெய்வங்களின் உருவங்கள் நினைவுகளில் அப்பிக்கொள்கின்றன. அகல் வெளிச்சமும் சர்க்கரைப் பொங்கலும் அனுதினமும் வாய்க்காத ஆயிரமாயிரம் ஏழைச் சாமிகளின் தேசம்ஐயா இது. அதனால்தான் ஆடி மாதத்தை எனக்குப் பிடிக்கும். இது எளிய தெய்வங்களின் கொண்டாட்டம்.

இன்றைக்குக்கூட காலையிலேயே, ‘மஞ்சள் குங்குமக்காரியை மறப்பேனா... அவள் மகிமையைப் பாடாமல் நான் இறப்பேனா...?’ என அலறி, எம்.எஸ்.விதான் என்னை எழுப்பிவிட்டார். டொனேஷன் கேட்டு வந்த ஒரு குரூப்புக்கு 100 ரூபாய் கொடுத்தேன். அடுத்த ஒரு மணி நேரத்தில் ஒரு வாளி நிறையக் கூழ் கொண்டுவந்து வாசலில் வைத்துவிட்டுப் போய்விட்டார்கள்.

காசு வசூல் பண்ணி தெருவுக்குத் தெரு அண்டா வைத்து கூழ் காய்ச்சுகிறார்கள். கல்யாண சாம்பார் மாதிரி, ரம்ஜான் கஞ்சிக்கும் ஆடி மாசக் கூழுக்கும் தனித்தனியாக ஒரு வாசம் இருக்கிறது. தேங்காய்ப் பத்தை மிதக்க, உதடு கொதிக்க ஊதி ஊதிக் குடித்தபோது... அபிவிருத்தீஸ்வரம், சிம்மக்கல், கருமத்தம்பட்டி, வடபழனி எல்லாக் கூழுக்கும் ஒரே வாசம்தான். வேலை இல்லாத காலங்களில் நானெல்லாம் அன்னதானத்திலேயே சலைன் ஏற்றிய கோஷ்டி.

அப்போது ஆடி மாதம் வந்தாலே எங்கள் மொபைலில் டயல்டு கால், ரிஸீவ்டு கால் முழுக்க ‘மிமிக்ரி செந்தில்’ நம்பர்தான் கிடக்கும். ‘கர்ணன்’ டிஜிட்டல் வெர்ஷன் மாதிரி நண்பர் ‘மிமிக்ரி செந்தில்’ சீஸன் ஹிட் அடிக்கிற கலைஞன். ‘சி.எஸ்.ஐ. சர்ச்ல ஒரு கல்யாணம்...

ட்வென்ட்டி மினிட்ஸ்ல வந்தின்னா ட்வென்டி ட்வென்டி பிரியாணி விருந்து' எனப் பசி இரவில் போன் அடிப்பார். இன்னொரு பஞ்சப்பொழுதில் வந்து, 'பைக்ல ஏறு, பாம்குரோவ்ல சேட்டுக் கல்யாணம்... சைட் டிஷ்ஷா சைட்டும் அடிக்கலாம்' என ஜில்லடிப்பார்.



ஆடி மாதம் வந்தால் போத்தீஸ், சரவணா ஸ்டோர்ஸ் மாடல்கள் மாதிரி பார்ட்டியும் செம பிஸியாகிவிடுவார். 'முப்பது நாளும் கச்சேரி புக் பண்றோம்... 365 நாளும் குக் பண்றோம்... இதான் குறைந்தபட்ச செயல்திட்டம்!' என இறங்கி வியாசர்பாடியில் இருந்து போரூர் வரை, ஜெயலலிதாவில் இருந்து ஜெயம் ரவி வரை அத்தனை குரல்களிலும் பேசுவார். மதியமே கிளம்பிவிடுவோம். தெரிஞ்சவன் எவனாவது பார்த்துவிடுவானோ என்ற திகிலைத் தவிர, கோயில்களில் தக்காளி சாதம், புளி சாதம் என அன்னதானம் வாங்கிக்கொண்டு ரோட்டோரம் நின்று சாப்பிடுவது ஒரு சுகம். ராத்திரி செந்திலோடு கச்சேரிக்குப் போனால், நமக்கும் சேர்த்து சோடா, கலர், டீ, டிபன் என அத்தனைக்கும் மீட்டர் போடுவார். சமயங்களில், ஸ்டேஜுக்குப் பின்னால்

ரஜினியோடு உட்கார்ந்து பரோட்டா சாப்பிட்டு, சிலுக்கு, நமீதாவோடு கடலை போடுகிற வாய்ப்பெல்லாம் கிடைக்கும்.

திருவிழாவை நடத்துகிற லோக்கல் புள்ளிகளிடம், 'இவரு கவுஞரு' என நம்மை அறிமுகப்படுத்திவிடுவார் நண்பர். பாசம் பீறிட்டு, 'கவுஞரைக் கவனிங்கப்பா கவுஞரைக் கவனிங்கப்பா...' என நமக்குப் பிரசாதங்கள் வந்துகொண்டே இருக்கும். மொத்த ஏரியாவும் திரண்டு காசு வசூல் பண்ணி, கூட்டம் போட்டு, தங்கள் தெய்வங்களை அவ்வளவு கொண்டாடுகிற மனிதர்கள் அவர்கள்.

**ஒ** ரு முறை வட சென்னையில் ஒரு கோயில் கச்சேரிக்குப் போய்இருந்தோம். கச்சேரியைப் பாதியிலேயே வந்து நிறுத்தினார் ஏரியா தலைவர். 'காவு படையல் போட்டு கண்டினியூ பண்ணுபா... இன்னா?' என அவர் சொன்னதும் ஜனம் மொத்தமும் கோயில் வாசலுக்குப் போனது. ஏழெட்டு ஆடுகளை நிறுத்தி, பூசாரியும் இன்னும் சிலரும் அதன் கழுத்தைக் கடித்து ரத்தத்தைக் குடிக்க... மொத்த ஜனமும் கை எடுத்துக் கும்பிட்டது. சென்னைக்குள் அப்படி ஒரு திருவிழாக் காட்சியை நான் எதிர்பார்க்கவே இல்லை.

இன்னோர் ஆடி மாச இரவில் லீ மெரிடியன் ஹோட்டலுக்குப் பின்னால் ஒரு ஏரியாவுக்கு அழைத்துப்போனார் நண்பர் ஒருவர். 'இதுவரைக்கும் இப்பிடி ஒரு திருவிழாவை நீ பார்த்துருக்கமாட்ட..?' என பில்டப் கொடுத்துக்கொண்டு போனார். அது ஒரு சுடுகாட்டு ஏரியா. கிறுகிறுவென முன்னூறு பேர் கூடிவிட்டார்கள். சின்ன சமாதியில் பூக்களெல்லாம் போட்டு ஒரு சித்தர் சிலை இருந்தது. ஒருவர் பறையடித்தபடி கானா பாடலைப் பாட ஆரம்பிக்க, தடதடவென எல்லோரும் உட்கார்ந்து கஞ்சா பற்றவைத்து ரவுண்ட்ஸில் விட ஆரம்பித்தார்கள். 'இதுக்குப் பேரே கஞ்சா திருவிழா' என்றார் நண்பர். மாறி மாறி கஞ்சாவைப் போட்டு, பாட்டுப் பாடி, கைத்தட்டிச் சிரித்து, 'சொய்ய் ய்ங்... சொய்ய்ய்ங்... சொய்ய்ய்ங்...' எனக் சுழட்டி அடிக்க, அது அஞ்சாறு பாலா படம். கொஞ்ச நேரத்தில் அண்டா நிறைய பிரியாணி கொண்டுவந்து வைத்து பரிமாறத் தொடங்கிவிட்டார்கள். 'என்னடா

இது..? இது எந்த ஊரு? இதெல்லாம் எங்க நடக்குது?’ என அதிர்ந்து அதிகாலையில் அங்கிருந்து ஓடிவந்தோம்.

**சை** தாப்பேட்டை ரயிலடியை ஒட்டி இருக்கிற ஏரியாவில் ஆடித் திருவிழா. நண்பரோடு போயிருந்தேன். தெரு முக்கில் தம்மாத்தூண்டு கோயில். புதுப் புடைவை சுற்றி கருமாரியம்மன் தேஜஸாக உட்கார்ந்திருந்தாள். கூழ் வார்த்தல், அபிஷேகம், அன்னதானம் எல்லாம் முடிந்தது. ராத்திரி ஏரியா ஜனம் மொத்தமும் கோயில் வாசலில் கூடியது. சாமிக்கு பூசாரி பூஜைகள் பண்ணிக்கொண்டு இருக்கும்போதே அங்கு இருக்கும் நண்பரின் அம்மாவுக்குச் சாமி வர ஆரம்பித்தது. ‘ஏய்ய்ய்... ஏய்ய்ய்...’ எனக் கத்த ஆரம்பித்தவர், சட்டென்று நாக்கைத் துருத்திக்கொண்டு நெளிந்து வளைந்து ஆட ஆரம்பித்தார். மொத்தப் பேரும் பக்தியாகக் கையெடுத்துக் கும்பிட்டபடி முணுமுணுக்க ஆரம்பித்தார்கள். அப்படியே உச்சத்துக்குப் போய், கூட்டத்தில் புகுந்து நாலைந்து பேருக்குப் ‘பொளேர் பொளேர்’ என அறைவிட்டார் அந்தம்மா. கூட்டத்தில் நின்ற நண்பனின் அப்பாவுக்கும் சில அடிகள் விழுந்தன. அடித்து முடித்து விபூதியை அள்ளி வீசியபடி சில குறிகள் சொல்லிவிட்டு மயங்கிச் சரிந்தார்.

அது நடந்து பல நாட்கள் கழித்து அந்த நண்பனின் வீட்டுக்குப் போனேன். வாசலிலேயே அவன் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் பெரிய சண்டை நடந்துகொண்டு இருந்தது. அவர் குடித்துவிட்டு தள்ளாடிக்கொண்டு இருந்தார். ஒரே கூச்சல். கொஞ்ச நேரம் ஏதேதோ பேசிவிட்டு அவர் போய்விட, ‘அப்டியே போயிரு... வராத’ என்றபடி அந்தம்மா வாசலில் வந்து உட்கார்ந்துகொண்டது. வரும்போது அந்த நண்பன் சொன்னான், ‘எங்கப்பு செம டார்ச்சரு... எப்போ பாத்தாலும் அம்மாட்ட ராவடி பண்ணலைன்னா தூக்கம் வராது அந்தாளுக்கு. இப்போ பரவால்ல முன்னாடி எல்லாம் அட்ச்சிக்கினே இருப்பாரு... பேஜாராத் திட்டிக்கினே இருப்பாரு. ஒரு திருநால இதுக்கு படீர்னு சாமி வந்துருச்சு... அப்டியே அவரப் புட்ச்சுக் கண்டம் பண்ணிருச்சு. அதுலேர்ந்து திருநால அதுக்கு சாமி வந்துச்சுன்னா ஊரே பயந்துக்கும். இந்தாளும் அடிக்கிறதெல்லாம் இல்ல பாத்துக்கினில்ல!’

வாசலில் உட்கார்ந்திருந்த அந்தம்மாவைப் பார்த்தேன். அவள்தான் தெருவோரத் தெய்வம்.

55

# புரட்சிப் பாதையில் நவீன போராளிகள்!

**வ** ரவர புரட்சிக்காரர்களின் தொல்லை தாங்க முடியவில்லை.

'வெரைட்டி ரைஸ்' மாதிரி இதிலும் பல வகைகள் உண்டு. டாஸ்மாக் புரட்சிக்காரர்கள், ஆன்லைன் புரட்சிக்காரர்கள், ஆன் தி வே புரட்சிக்காரர்கள், அகஸ்மாத்து புரட்சிக்காரர்கள், புதிய புரட்சிக்காரர்கள், பழைய புரட்சிக்காரர்கள், ஏ ஒன், ஏ டூ, ஏ த்ரீ!

இதில் 'டாஸ்மாக்' புரட்சிக்காரர்கள் தீவிரவாதிகள். ஆயுதப் போராட்டமோ, அஹிம்சை நீரோட்டமோ, அதன் எக்ஸ்ட்ரீமுக்குப் போய்... விடிவதற்குள் புரட்சியை வென்றெடுக்கத் துடிக்கும் தீவிரவாதிகள். இவர்களிடம் இருக்கிற அணு ஆயுதம்... செல்போன்! அந்தி சாயும்போதே போன் பண்ணி, ''டெசோ... என்னடா டெசோ... கோபாலபுரத்துல குண்டு வைப்போம் வழ்ழியா... வழ்ழியா...'' என வம்படிப்பார்கள்.

''ஈழம்கிற வார்த்தைக்குத் தட போட்டா... ழும்மா வுட்ருவமா... நாளைக்கு டெல்லி போற தமிழ்நாடு எக்ஸ்பிரஸ்ல ஆயிரம் பேழு கெழம்புழம்டா... லீவு போடு... லீவு போடு...'' எனப் பம்ப்படிப்பார்கள். ''பில்லா ட்டூ பார்த்தல்ல... எவ்வளவு செலவு..? கோட்டுக்கு ஆவுற செலவ மட்டும் குடு... நாப்பது லச்சம்... மெக்பல்பஃப்... டேய் எக் பஃப் இல்லடா... மெக்பல்பஃப்... ஒரு வேனும் டிஜிட்டல் கேமராவும் குடு...

உலக சினிமா கொண்டாந்து ஓம் மூஞ்சில வீசுழேன்...'' எனச் சொம்படிப்பார்கள்.

இவர்களோடு பார்களுக்குப் போய்விட்டால், எதற்கும் தயாராக இருக்க வேண்டும். வீச்சு பரோட்டாவோடு வந்து படுப்பதற்கும், ரத்த வீச்சத்தோடு வந்து படுப்பதற்கும் சம அளவு வாய்ப்புகள் உண்டு. குடும்பம், குட்டி, வேலை எனத் தொடங்குகிற பேச்சு மூன்றாவது ரவுண்டில் ''ஆண்ட்ரியா லிப் கிஸ் அடிச்சா என்ன தப்பு? ஒனக்கு ஏன் எரியுது?'' என ஆரம்பிக்கும். ''அருந்ததி ராய் ஒரு போலிப் புரட்சிவாதி... அதப் புரிஞ்சுக்கோ...'' எனத் திகுதிகுக்கும். திடீரென வெறியேறி ஒருவர் கோக் பாட்டிலை எடுத்து சம்பந்தமே இல்லாமல் நாலாவது டேபிளுக்கு எறிய, அப்புறம் 'கலாசலா... கலசலா... கல்லாசா...'தான். மறுநாள் காலையில் பார்த்தால், இவர்கள் அவ்வளவு பேரும் புரட்சியின் சிறு சுவடும் இல்லாமல் தட்கல் டிக்கெட்டுக்கு நிற்கிற குடும்பஸ்தர்கள் மாதிரியே கடந்துபோவார்கள்.

போன ஆயுத பூஜை அன்றைக்கு இப்படிச் சில புரட்சிவாதிகள் ஒன்றுகூடி பாருக்குப் போனோம். அன்றைக்கு சீஃப் கெஸ்ட்டாக வந்திருந்தவர்கள் எந்நேரமும் அரசால் தேடப்படக்கூடியவர்களின் லிஸ்ட்டுக்கு போகக்கூடிய அதிபயங்கரவாதிகள். எப்படியும் கருத்துக் கலவரம் வெடிக்கும் என்பதை யூகித்து, அதைத் தடுக்கும் பொருட்டு நானும் இன்னொரு மிதவாத நண்பரும் பாதுகாப்பு நடவடிக்கைக்கு பிளான் பண்ணினோம்.

இரண்டாவது ரவுண்டில் நமீதாவைப் பற்றிப் பேச ஆரம்பித்து, தொடர்ந்து ஹீரோயின்களைப் பற்றியே பேசி அவர்களைத் திசை திருப்புவது என்பதே திட்டம். அதன்படியே இரண்டாவது ரவுண்டில் நமீதாவைப் பற்றி பேச ஆரம்பித்தால், அடுத்த நிமிஷமே ஒரு நண்பர், ''நமீதா... சிதைக்கப்பட்ட திராவிடக் கலாசாரத்தின் குறியீடு...'' எனக் கொளுத்திப் போட்டார். அப்புறம் அப்படியே எம்.ஜி.ஆர்., கலைஞர், ஜெயலலிதா, விஜயகாந்த் எனக் கொழுந்து விட்டெறிய... பீர் பாட்டில் உடைந்தது. ஒரு வழியாக அவர்களை அசமடக்கி வெளியே வந்தோம்.

நள்ளிரவு 12 மணி இருக்கும். ரோட்டுக் கடையில் தோசைகள் சொல்லிவிட்டு நின்றால், குரூப்பில் ஒரு நண்பரைக் காணவில்லை. எங்கே எனத் தேடினால், தெருமுக்கில் ஒரு கலவரத்துக்கான சத்தங்கள். ஓடிப்போய்ப் பார்த்தால் நாலைந்து பேர் நண்பரை ரவுண்டு கட்டி நின்றார்கள். பதறித் தடுத்து விசாரித்தால், அங்கே ஆட்டோ ஸ்டாண்டை ஒட்டி ஒரு பிள்ளையார் சிலை வைத்து, குட்டியாக ஒரு கோயில் கட்டி வைத்திருக்கிறார்கள். தெருவை அடைத்துக் கோலம் இருந்தது. நண்பர் சாவகாசமாகப் போய் கோலத்தின் நடுவே நின்று உச்சா போக ட்ரை பண்ணியிருக்கிறார். கிட்டத்தட்ட மதக்கலவரத்துக்கான அடிக்கல் நாட்டு விழா. ஆட்டோக்காரர்கள் ஓடிவந்து ரவுண்டு கட்டிவிட்டார்கள். சமாதானப்படுத்தி ஒருவழியாக நண்பரை மீட்டோம். ''ஏய்யா அப்பிடிப் பண்ண?'' எனக் கேட்டதற்கு, நண்பர் தன் கண்ணாம் முழியை உருட்டி, ''இந்தச் சமூகத்துக்கு எதிரான என் பதிவுகள்ல இதுவும் ஒண்ணு...'' என்றார். தெறித்து ஓடிவந்தோம்.



ஆன்லைன் புரட்சிக்காரர்கள்தான் இப்போதைக்கு 'ரூட்டு தல!' இன்றைய தேதிக்கு ஃபேஸ்புக்கில் ஐ.டி. வைத்திருப்பவர் ஆக்ட்டிவிஸ்ட், ஃபேக் ஐ.டி. வைத்திருப்பவர் டெரரிஸ்ட் என்பதுதான் ஸ்டேட்டஸ். டீ பிரேக்கில் 'பெரியார் தலித்தியத்துக்கு எதிரானவர்...' என யாரோ ஒரு ஸ்டேட்டஸ் போட்டுவிட்டுப் போய்விட, ஆபீஸ் அவர்ஸ் முடிகிறவரைக்கும் கமென்ட்டுகள் குவிகின்றன. ''செங்கொடிக்கு நினைவேந்தல்... வீர

வணக்கம்... வீர வணக்கம்...'' என கீஇன் பண்ணிவிட்டுப் பல பேர் அடுத்த வேலையைப் பார்க்கப் போய்விடுகிறார்கள். 'அட்ட கத்தி' விமர்சனத்தில் இருந்து மன்மோகன் சிங் வரை எல்லாவற்றையும் வறுத்தெடுக்கிறார்கள். 'புரட்சி... புரட்சி...' எனக் கிளம்பி வருகிறவர்கள் வகை தொகை இல்லாமல் அத்தனை டவுசர்களையும் கிழிக்கிறார்கள். இன்றைக்கு 50 லைக்ஸ் வாங்கியே தீருவது எனக் கங்கணம் கட்டிக்கொண்டு, புரட்சி ஸ்டேட்டஸ்களை வீசுகிறார்கள். கெட்ட வார்த்தைகளால் சண்டையிடுகிறார்கள். வார்த்தைகளுக்கு நடுவே புகுந்து நுணுக்கமான அரசியலைக் கண்டுபிடித்து உலுக்கி எடுக்கிறார்கள். நைன் டு சிக்ஸ் அத்தனை பேருமே ருத்ரன் மாதிரி சைக்காலஜிஸ்ட்டாகவோ, சுப்ரமணியன் சுவாமி மாதிரி ஜித்தர்களாகவோ, பவர் ஸ்டார் மாதிரி பப்ளிசிட்டி கோவிந்துகளாகவோ, ராம்ஜெத்மலானி மாதிரி கிரிமினல் லாயர்களாகவோ இருந்தால் என்னதான் செய்வது?

வலைதளம் உருவாக்கி இருக்கும் கட்டற்ற சுதந்திரம் உண்மையிலேயே ஓர் அற்புதம். பல பேருக்குள் ஒளிந்திருக்கும் படைப்பாளிகளை வெளியே கொண்டுவந்திருக்கிறது இந்தச் சுதந்திரம். அதிகாரத்துக்குப் பயப்படாமல் தனது அடையாளத்தை மறைக்காமல் துணிச்சலான அரசியல் கருத்துகளை முன்வைப்பதுதான் பலரது இருப்பை அர்த்தப்படுத்துகிறது. உலகத் தமிழர்களிடையே ஒரு விஷயத்தை முன்னெடுக்கவும், அன்பையும் நட்பையும் பகிரவும் இது ஆரோக்கியமான களம். ஆனால், இந்தக் கட்டற்ற சுதந்திரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதும் ஸ்டேட்டஸ் போடுவதே போதும் என்கிற இன்ஸ்டன்ட் புரட்சியாளர்களும் எந்த மதிப்பீடுகளும் இல்லாமல் யாரையும் எதையும் அசிங்கப்படுத்துவதும் எல்லை மீறிய வார்த்தைகளைப் போட்டுத்தாக்குவதும்... நல்ல விஷயம் இல்லையே நண்பர்களே!

தஞ்சாவூரில் மக்கள் கலை இலக்கியக் கழகத்து நண்பர்களோடும், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கத்து நண்பர்களோடும், அவர்களது பாடல்களோடும் எனக்கு நல்ல நட்பு

உண்டு. கிராமம் கிராமமாகப் போய் பறையடித்தபடி அவர்கள் பாடுவதும் பேசுவதும் அவ்வளவு அதிர்வை உண்டாக்கும். ‘போராட்டம் இல்லை என்றால் வாழ்க்கையா... இதை ஏற்காதவர் யாரும் மனிதரா...’ என்ற ஒரு பாடலில் வருகிற, ‘தாய் மடியினில் சேய் அழுவது பாலருந்திட அல்லவா, மான் கொம்புகள் கூர்வாளென இருப்பதை நான் சொல்லவா...’ என்கிற வரிகள் இப்போதும் சிலிர்ப்பைத் தருகின்றன.

**ஒ**ரு முறை இப்படிக் கலைக் குழுவினரோடு சேர்ந்து ஊர் ஊராகச் சுற்றித் திரிந்தபோதுதான் அரியலூரில் தாயன்பனைச் சந்தித்தேன். ‘தாயு’ என நண்பர்களால் அழைக்கப்படுபவர். அரியலூர் பக்கம். அவருக்கு இடது கால் பாதி கிடையாது. கட்டைக்கால் வைத்து விந்தி விந்திதான் நடப்பார். ‘‘முப்பது வருஷத்துக்கு முன்னாடி... துப்பாக்கியால போலீஸ் சுட்டுப்புட்டான்... தப்பிச்சு ஓடினப்போ காலக் காட்டி மூணு குண்டவுட்டான்... ஆஸ்பத்திரில வெச்சு கால அறுத்த கையோட செறைக்குப் போயிட்டம்ல...’’ எனச் சிரித்தபோதே அவரை எனக்குப் பிடித்துவிட்டது.

அப்படியும் இப்படியுமாகத் தன் வாழ்வில் 15 வருடங்களைச் சிறையிலேயே கழித்தவர். ‘‘17 வயசுல குண்டு தயாரிச்சேன்னு புடிச்சுட்டுப்போனதுதான் மொதல்ல... அப்புறம் ஏதேதோ கேஸுங்க... கல்யாணம்கூடப் பண்ணிக்கலை... ஜெயில்லயே போயிருச்சு பாதி வாழ்க்கை... எதையும் எதுத்துக் கேக்காம போராடாம நம்மளால இருக்க முடியாது... என்ன பண்றது..? இதுவரைக்கும் நம்மள வெளிக்காட்டிக்கணும்னு நெனச்சதில்ல... அதுல நமக்கு விருப்பமும் இல்ல...’’ என்றவர் தனது வீட்டுக்கு அழைத்துப்போனார். அது வீடு அல்ல... அறை. ஒரு சின்ன அறை முழுக்கப் புத்தகங்களைத் தவிர எதுவும் இல்லை.

அவரது கிராமத்தில் மந்தையில் கச்சேரி நடந்தது. ‘தேன் மணக்குது பால் மணக்குது குடம் குடமாய்ப் பேச்சிலே, ஊர் மனதினில் கூன் விழுந்திடும் காட்சியடா நாட்டிலே...’ எனப் பாடல் ஒலிக்க அதிர்ந்த பறைகளுக்கு தாயு தோழர் அந்தக் கட்டைக் காலோடு ஆவேசமாக

ஆடியது இப்போதும் நினைவில் இருக்கிறது. அன்றைக்கு இரவு சொன்னார், ‘‘தோழர்... சே குவேராவும் பிரபாகரனும்தான் போராளிகளா..? நல்லதை நினைக்கிறது மட்டும் இல்லாம, அதைச் செஞ்சுகாட்றவன் எல்லாருமே போராளிங்கதான். இங்க தாசில்தார் ஆபீஸ்ல எல்லார் பிரச்னைகளுக்காகவும் மனு எழுதித் தர்றான் பாரு, அவனும் போராளிதான். ஜி.ஹெச்.ல புள்ள பொறக்குற வார்டக் கழுவிவுட்டுட்டுக் கெடக்கு பாரு ஓர் அம்மா... அதுவும் போராளிதான்... மனுஷன் பேண்ட்டு மனுஷனே அள்றான் பாரு... அந்த மனுஷனும் போராளிதான்... சாதி மறுப்புக் கல்யாணம் பண்றவனும், கட்டுசெட்டாப் பொம்பளைப் புள்ளைகளுக்குச் சொத்து பிரிச்சுத் தர்றவனும், பசின்னதும் சாப்பாடு போடுறவனும், எதிர்பார்ப்பு இல்லாம அள்ளி அணைச்சுக்குறவனும், எவன் மேலயும் அதிகாரம் செலுத்தாதவனும், மத்தவனுக்கும் சேர்த்து உழைக்கறவனும், எல்லாரும் போராளிங்கதான்... சொல்றது சரிதான?’’

வெகு நாட்களுக்குப் பிறகு போனபோது பார்த்தால்... தாயு இல்லை. ‘‘தோழர் இறந்துட்டார்ல... அது எட்டு மாசம் இருக்கும்...’’ என்றார்கள் நண்பர்கள். ‘‘உடம்புக்கு முடியல... ஆஸ்பத்திரி போனா கிட்னி ஃபெயிலியர்னுட்டாங்க...’’ என்றார்கள்.



அவரது அறையை நண்பர்கள் பயன்படுத்திக்கொண்டு இருந்தார்கள். அவரது புத்தகங்களைப் புரட்டியபோது ஒரு டைரி இருந்தது. தாயுமானவன் எழுதிய டைரி. அதன் முதல் பக்கத்தில் அவர் இப்படி எழுதியிருந்தார், 'ஒவ்வொருவர் வாழ்க்கையும் அரசியல்தான்... நாம் ஒவ்வொருவரும் அரசியல்வாதிதான்... ஒவ்வொரு நாளும் போராட்டம்தான்... ஒவ்வொருவரும் போராளிதான்... போராட்டம் இல்லையென்றால் வாழ்க்கையா... இதை அறியாதவர் யாரும் மனிதரா..?' — இந்த வாசகங்களை என்னால் மறக்கவே முடியாது. இவை தாயு தோழரின் டைரியில் இருந்தவை என்கிற ஒரே காரணம்தான். உண்மைதானே... இரவு போகும்போது தெரு நாய்க்கும் சேர்த்து சாப்பாடு வாங்கிப் போகிறவன் எவ்வளவு அற்புதன்!

யாரோ காசில்லாத முகம் தெரியாதவருக்கும் சேர்த்து பஸ்ஸில் டிக்கெட் எடுக்கிறவர், யார் யாருக்கோவான கோபங்களைச் சுமந்துகொண்டு உச்சி வெயிலில் கோஷமிட்டுக்கொண்டு இருப்பவர், ஒரு கி.மீ. துரத்திப் போய், 'சைடு ஸ்டாண்டை எடுத்துவிடுங்க சார்' எனச் சொல்லிவிட்டுப் போகிறவர், விபத்தில் கிடந்தவரைத் தூக்கிக்கொண்டு ஆஸ்பத்திரிக்கு நள்ளிரவு வரை அலைந்து திரிகிறவர், ஒவ்வொருவரின் உணர்வுகளையும் மதிக்கிறவர், தன் இடத்தில் பிறரை வைத்துப் பார்க்கிறவர்... அத்தனை பேருக்கும் ஆயிரமாயிரம் லைக்ஸ் பாஸ்!

56

# மீள் உருவாக்கம் செய்யும் பயணங்கள்!

**இ** ன்னமும் பாஸ்போர்ட் எடுக்கவில்லை நான்.

சிறு வயதில், ஊருக்குள் வந்த கிளி ஜோசியக்காரனிடம் எங்கள் குடும்பமே சீட்டு எடுத்தது. அப்போது எனக்கு வந்த சீட்டைக் காட்டி, 'தம்பி உலகம் சுற்றும் வாலிபன்... தம்பி உலகம் சுற்றும் வாலிபன்' என நாலு தடவை சொன்னார் கிளி ஓனர். விவசாயம் பொய்த்ததால் ஊரில் பாதிக்கு மேல் இளைஞர்கள் சவுதி அரேபிய நாடுகளில்தான் வேலை பார்க்கிறார்கள். அதை வைத்து அம்மா, 'எந்த சேக்குக்குக் குடுத்துவெச்சுருக்கோ' என்றது. உடனே ஜோசியக்காரன், 'சேக்கா? அதில்லையம்மா... தம்பி ஆல் ரவுண்ட் உலகம் சுற்றும் வாலிபன்' என்றார் மறுபடி ராகம் போட்டு.

ஆனால், நான் உலகம் சுற்றிப் பார்த்தது ஊர் பள்ளிக்கூடத்தில் பத்மநாபன் சார் டேபிளில் இருக்கும் நீல கலர் உலக உருண்டையில்தான். சார் வருகிற கேப்பில் அதை ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு ஓடி வந்துவிடுவோம். மேலும், பூகோளத்திலும் நான் ரொம்ப வீக்காகவே இருந்தேன். பூகோளத்திலும் என்பதை அடிக்கோடிடுக.

ரொம்ப நாளைக்கு லண்டன் என்பது அமெரிக்காவின் தலைநகரம் என்றே நினைத்திருந்தேன். டெல்லி மெட்ராஸில் இருந்து 10 கிலோ மீட்டரில் இருக்கிறது; பம்பாய் என்பது சுவிட்சர்லாந்து மாதிரியான இடம்

(முதன்முதலில் தாராவி போட்டோக்களைப் பார்த்து அதிர்ந்துவிட்டேன்), நியூயார்க் என்பது தனி நாடு, ஆப்பிரிக்கா என்றாலே 'ஜும்மாரே ஜும்மாரே' என மனிதர்களை பாயில் பண்ணிச் சாப்பிடும் காட்டுவாசிகள் இருக்கும் இடம் என்றெல்லாம்தான் நினைத்திருந்தேன்.

வரலாறு வாத்தியார் ரமணி சார்தான் முதன்முதலில் இந்த உலகத்தின் ஜன்னல்களைத் திறந்துவிட்டார். மிக எளிய வார்த்தைகளில் சடசடவெனத் திரைகளை விலக்கிக் காட்டியபடி போய்க்கொண்டே இருப்பார். ''வெள்ளைக்காரன் குசு போட்டா மட்டும் மணக்குமா? இருக்கறதுல அவந்தான் மோசமான பண்டி. பார்த்துக்க. குளிக்காமக் கொள்ளாம பப்பரக்கானு திரிவான். இங்க திரியறவன்லாம் அவனவன் ஊர்ல பால் போடுறவன், மசாஜ் பண்றவன், லோடு அடிக்கிறவன். நம்மளவிட கஞ்சப் பிசினாரிங்க. அஞ்சு ரூவா பேராது. அவங்களைப் போய் சினிமாக்காரன்மாரி 'ஆ'னு பாக்காத. நம்மளதான் இந்த உலகமே 'ஆ'னு பாக்கணும். தமிழனும் கிரேக்கனும்தான் 'ஆ'னு பாக்கற அளவுக்கு ஆதி மனுஷங்க... புரியுதா?'' என்பார்.

அப்படியும்கூட தஞ்சாவூர் பெரிய கோயிலில் தோளில் கேமராக்களோடு திரிந்து, சாந்த பிள்ளை கேட்டு சூப் கடையில் முட்டை போண்டா சாப்பிடும் வெள்ளைக்காரப் பெண்கள் அதிசயம்தான் எங்களுக்கு.

**மூ** லங்குடி ஸ்கூலில் 6—வது படிக்கும்போது, தனி பஸ் பிடித்து தஞ்சாவூருக்கு வந்ததுதான் என் வாழ்க்கையில் நடந்த முதல் சுற்றுப்பயணம். அதற்காக வருட ஆரம்பத்தில் இருந்தே சிறுசேமிப்பில் காசு சேர்க்க வேண்டும். தினமும் நாலணா, அம்பது காசு எனப் போட்டு தபால் அட்டையில் 'டிக்' வாங்க வேண்டும். பள்ளியின் பெயர் எழுதிய பேனர் கட்டிய பஸ்ஸில் அதிகாலையில் கிளம்பும்போதே மனசு பறக்கும். பெரிய கோயில், அரண்மனை, மணிமண்டபம்... என க்யூ கட்டி போய்ப் பார்க்க வேண்டும்.

மதியம் சிவகங்கைப் பூங்காவில் உட்கார்ந்து வீட்டில் இருந்து கட்டிவந்த சாப்பாட்டைச் சாப்பிட்ட வாசத்தை மறக்க முடியுமா? அடுத்த

வருஷம் தொடங்கும்போதே, ‘‘இந்த வருஷம் டூர் மெட்ராஸுக்கு. காசு அதிகமாவே ஆகும். ஒழுங்கா சேத்துவைங்க’’ என்றார் ரோஸி சிஸ்டர். ஆளாளுக்குப் போட்டி போட்டுக் காசு சேர்த்தோம். எனில், மெட்ராஸைப் பார்க்க அவ்வளவு பேருக்கும் ஆசை. காரணம், சினிமா. ‘‘எல்லாப் படத்துலயும் காட்றாங்களே மாப்ள... சிஸ்டர்ட்ட சொல்லி எப்பிடியாவது ரஜினியைப் பாத்துட்டு வந்துரணும்றா!’’ என்றான் விட்டல். ‘‘அப்ப கமலும் சிலுக்கும்! அவங்களையும் பாத்துட்டுதான் வரணும்!’’ என்றான் சந்திரமோகன். ‘‘டேய்... எங்க மெட்ராஸ் மாமா சொல்லிருக்கு, எல்லாரும் ஏவி.எம். ஸ்டூடியோலதான் தங்கிருப்பாங்களாம். போனா, மொத்தமா பாத்துரலாம்!’’ என்றது தாஸ்.

டூர் பஸ் சென்னைக்குள் நுழைந்த கொஞ்ச நேரத்துக்கு எல்லாம் மோகன் சொன்னான், ‘‘மாப்ள, என்னா இது ஊரு? நம்ம கும்மோணம் மாரிதான் இருக்குது. பஸ்ஸெல்லாம் பாரு அழுக்குப் புடிச்சவனுங்க. அடுத்த வருஷம் சிங்கப்பூர் போணும் மாப்ள!’’ எல்லோரையும் கொண்டுபோய் பிர்லா கோளரங்கத்தில் உட்கார வைத்தார்கள். சட்டென்று ஃபுல் ஏ.சி—யில் அப்படி ஓர் உலகத்துக்குள் போனதில் அத்தனை பேரும் பரவசமானோம்.

மகாபலிபுரம் போய்விட்டு சாயங்காலமாக அண்ணா, எம்.ஜி.ஆர். சமாதி பார்க்க மெரினா பீச் வந்தோம். கடல் பார்த்த பரவசத்தில் நானும் விட்டலும் பெப்பேவெனத் திரிந்து திரும்பினால்... கூட வந்தவர்கள், பஸ் எதையும் காணோம். ஒரு பக்கம் அவர்கள் எங்களைத் தேடி திரிந்திருக்கிறார்கள். 2 மணி நேரமாக ‘ஸ்லம்டாக் மில்லியனர்’ பசங்க மாதிரி பீச்சிலேயே திரிந்தோம். ‘‘எங்கம்மா வந்தோடனே இட்லிக்குப் போட்றேன்னுச்சு... அய்யய்யா!’’ என விட்டல் அழ ஆரம்பித்துவிட்டான்.

காந்தி சிலைக்குக் கீழே டயர்டாகி உட்கார்ந்தபோது, ‘‘சிஸ்டர் இங்க இருக்காங்க’’ என ஜமீல் ஓடிவந்தான். பின்னாலேயே ஒரு கான்ஸ்டபிளோடு ஆவேசமாக வந்த ஹெச்.எம்., சிஸ்டர், அங்கேயே வைத்து 2 பேரையும் வெளுத்து எடுத்தார்கள். உலக அடி. கண்ணீரும்

கம்பலையுமாகப் பஸ் ஏறி ஊர் மீண்டோம். எல்லாப் பள்ளிச் சுற்றுலாக்களிலும் ஒரு பையன் காணாமல் போய்த் திரும்புவது, ஒரே கேமராவின் வெவ்வேறு புகைப்படங்களைப்போல் நடந்துகொண்டே இருக்கிறது.

இன்னொரு டூருக்கு மைசூர் போயிருந்தோம். 'ஒரு மணி நேரம் டைம். எதாவது வாங்கறதுன்னா வாங்கிக்கங்க!' வண்டி மலை மேல் ஓர் இடத்தில் நின்றுவிட்டது. ஒரு கடையில் ஒரு குட்டிப் பெண் மட்டும் உட்கார்ந்திருந்தாள். அது இனிஷியல்கள் பொறித்த சங்குகளும் மரப் பலகைகளும் விற்கிற கடை. எல்லோரும் சாப்பிடவும் மலை பார்க்கவும் போய்விட்டார்கள்.

நான் அந்தக் கடையிலேயே உட்கார்ந்துவிட்டேன். அந்தப் பெண்ணைப் பார்த்ததுமே ஏதோ ரொம்ப நாட்களாகப் பார்த்து வந்தவள்போலத் தோன்றியது. மஞ்சக்குடியில் ஓர் அக்ரஹார வீட்டில் பார்த்த முகமாகவோ, கூத்தாநல்லூரில் பள்ளிவாசல் தெரு வீடொன்றின் கொல்லையில் கண்ட முகமாகவோ, ஒரத்தநாடு ஓட்டு வீடொன்றில் அப்பாவின் சட்டையைப் போட்டுக்கொண்டு வந்து நின்ற ஒருத்தியைப் போலவோ தோன்றியது. அவள் ''உன் பேரென்ன..?'' என்றாள். சொன்னதும் ''எம் பேரு மல்லிகா'' என்றாள். அது என் அம்மாவின் பெயர். அங்கேயே தங்கிவிடலாமா எனத் தோன்றியது. அவளுடன் அந்த மலைக் கடையிலேயே இருந்து இப்படிச் சங்குகள் விற்றுக்கொண்டே வாழ்ந்துவிடலாம் எனத் தோன்றியது. சிறிது நேரத்தில் அங்கிருந்து கிளம்பிவிட்டோம்.

மறுநாள் ஊருக்கு வரும்போது அந்த வழியாக வந்தோம். அங்கே வண்டி நின்றது. மறுபடி அவளைப் பார்த்தேன். ''என்ன வேணும்?'' என்றாள். நான் 'எம்' என்ற மரத் துண்டை எடுத்துக்கொண்டேன். அந்தக் கணம் அவள் பூத்த குறுநகை இருக்கிறதே... அப்படியே இருக்கிறது. வாழ்வின் காலத்துளிகளில் அது மிகச் சொற்ப துளிதான். ஆனால், இந்த நொடி வரை அந்தப் பெண்ணின் முகம் அழியாமல்

கொள்ளாமல் அப்படியே இருக்கிறது. ரமணர் ஆஸ்ரமத்தில் கண்டெடுத்த ஒரு மயில் பீலியைப்போல!



இதுதான் பயணங்களின் பேரற்புதம். மறுபடி கண்டடைய முடியாத மனிதர்கள், முகங்கள், சொற்கள், நினைவுகள், காட்சிகள்! நம் ஒவ்வொருவரையும் ஒவ்வொரு முறையும் மீள் உருவாக்கம் செய்பவை பயணங்கள்தான். பயணங்களில் யாரோ நீட்டுகிற ஒரு வாட்டர் பாட்டில், புளியோதரைப் பொட்டலம், பாதி சிகரெட், ஒரு புன்னகை, விசாரிப்பு, சினேகம், காதல்... எல்லாவற்றுக்குமே ஒரு காவியத்தன்மை வந்துவிடுகிறது.

''தலவலியா சார்... நமக்கும் பனிக் காத்து ஒவ்வாது பாருங்க. இந்தாங்க ஜண்டுபாம். கல்கத்தால மிர்தாஸ் ஸ்ட்ரீட்ல ஒரு தமிழ் ஆள் கடை நடத்துறான். தேவக்கோட்ட ஆளுதான். முன்னாடி ஒரு ஃபேன்ஸி கடையைத் தாண்டும்போதே வாசம் கண்டுக்கும். மூணு மாசம்னா அங்கயே சாப்பிட்டுக்கங்க'' என யாரோ ஒரு மனிதர் அதுவரை தெரியாத யாரிடமோ பேசிக்கொண்டே வரும்போது அந்த ரயில் ஏதோ உறவினர் வீடு மாதிரி ஆகிவிடுகிறது.

''என்.சி.சி. ட்ரிப்புக்காக இந்தியா முழுக்க ஒரு டிரெயின்ல போனோம். கோரக்பூர்ல கிலோ மீட்டர் கணக்கா நீளுது ரயில்வே பிளாட்ஃபார்ம். இந்தியாவிலேயே நீளமான பிளாட்ஃபார்ம். இந்தக் கடைசில இருந்து

அந்தக் கடைசி வரைக்கும் பேசிட்டே நடந்தோம். அந்த பெங்களூரு பொண்ண மறக்கவே முடியாது. கரெக்ட்டா தாஜ்மகால்ல வெச்சு ஃபுல்லா இளையராஜா பாட்டா பாடினேன். துள்ளி எழுந்தது பாட்டு...!'' — 20 வருடங்களுக்குப் பிறகும் அதே பரவசத்தோடு, அபூர்வத்தோடு ஒரு பயணத்தை விவரிக்கிறார் நண்பர்.

ஒவ்வொருவரிடமும் இருக்கும் அலுக்கவே அலுக்காத வார்த்தைகள், பயணங்கள் பற்றியதாகவே இருக்கின்றன. என் வாழ்க்கையில் சரிபாதிப் பொழுதுகள் பயணங்களுடன்தான் கழிந்திருக்கின்றன. விதவிதமான பஸ்களும், ரயில்களும், ஒலிகளும், ஒளிகளும் வார்த்தைகளைக் கடந்த காட்சிப் படிமங்களாக மனதில் படிந்துகிடக்கின்றன. கவலைகளையும் எதிர்காலம் குறித்த பதற்றங்களையும் கடக்க முடியாத பிரிவுகளையும் துடைத்து வீசிவிட ஒரே ஒரு புதிய நிலப்பரப்பின் காட்சியால் முடிந்துவிடுகிறது. மூணாறு மலையில் போய் பஸ் திரும்புகிற நொடியில் ஒரு பெரிய அன்னாசித் தோட்டமும், நடுவில் நிற்கிற ஒற்றை மனுஷியும் பொசுக்கென்று எல்லாவற்றையும் வெளித்தள்ளி மனதில் நிரம்பிவிடுகிறார்கள்.

தடதடத்துப் போகும் பெரும் தேயிலைக் காடு, திருச்சியைத் தொடும்போது வரும் ரசாயனத் தொழிற்சாலையின் துர்நாற்றம், வேலூர் மண்ணுக்குள் நுழையும்போது அடிக்கும் தோல் பதனிடும் நாற்றம், நீடாமங்கலத்தைத் தாண்டியதும் பாழ் மண்டபச் சுவரில் கடக்கும் 'கோல்டு ஸ்பாட்' விளம்பரம், கரிசல் அறுந்து சடாரெனச் செம்மண் விரியும் ஒரு புள்ளி, பாளையங்கோட்டையைக் கடக்கும்போதெல்லாம் பாதி உதிர்ந்த பைபிள் வாசகங்களோடு கடக்கும் மேரி மாதா, கோயம்புத்தூர் எல்லை வந்ததுமே பஜாஜ் எம்80—யில் பஞ்சு மூட்டை கட்டிக்கொண்டு கடக்கிற ஒருவர், ராத்திரி எப்போது கடக்கும்போதும் இட்லிப் பானை மூடியைத் தூக்கிக்கொண்டு ஓர் ஆத்தா பேசிக்கொண்டு இருக்கிற மதுரை டவுன்ஹால் ரோடு, அதிகாலையில் 'சரவணப் பொய்கையில்...' பாடல் ஒலிக்கும் மினி பஸ்ஸில் பச்சைப் பசேலெனக் கறிவேப்பிலை வாசம் தூக்க, வாழை இலைக் கட்டுகளுக்கு நடுவே உட்கார்ந்து இருக்கும் நாஞ்சிக்கோட்டை ரோடு, 'சூடா சமோசே... சூடா

சமோசே' என ஒருவர் ராகம் போட ஒவ்வொரு முறை மின்சார ரயிலில் கடக்கும்போதும் புதிதாக வரும் செங்கல்பட்டு ஏரி, மூட்டைப் பூச்சிகள் மண்டிய மரப்படுக்கையும் காரை உதிர்ந்த சுவர்களும் 'ஆந்திரா மால் சார்... நருவுசு சார்... போலீஸ் பிராப்ளம்லாம் இல்ல. வேணுமா..?' என்கிற சித்தூர் லாட்ஜ், கொல்லை முற்றத்தில் குளமும் பேரழகு இருளில் பொசுக்கென்று விளக்கெரியும் கோயில் கொண்ட திருச்சூர் என வெயிலும் மழையும் ஒளியும் இருளும் ஒவ்வொரு பயணத்துக்கும் புதிது புதிதாக இருக்கின்றன!

**மு**ம்பை தாராவியில் பார்த்த அரியலூர்க்காரர் செல்வத்தை அப்புறம் பார்க்கவே இல்லை. தாராவியில் வீடியோ கிளப் நடத்துகிறார். வீடியோ கிளப் என்றால், தமிழ்ப் படங்களும் செக்ஸ் படங்களும் ஓட்ட ஓர் இடம். ஒரு படத்துக்கு 2 ரூபா, 5 ரூபா என டிக்கெட். இந்தியாவில் அவர் வேலை பார்க்காத நகரமே இல்லை. அப்படி இடம்பெயர்ந்து போய்க்கொண்டே இருப்பதுதான் செல்வத்தின் வாழ்க்கையே.

''எட்டு வயசுல வீட்டை விட்டு ஓடிவந்தேன். ஊட்டில ஒரு ஆப்பிள் லாரில ஏறி வந்துட்டேன். டெல்லில கம்பளி வித்ததுதான் மொதல் வேலை. கோவால பிம்ப் வேல வரைக்கும் பார்த்துருக்கேன்'' என அவர் சொன்னது அத்தனையும் இதுவரை எடுக்கப்படாத சினிமா. செல்வம் எனக்குப் பரிசாகக் கொடுத்த ஒரு வங்க மொழி கிராமபோன் ரெகார்டை இப்போதும் வைத்திருக்கிறேன். ஒரு நள்ளிரவுப் பயணத்தில் பெங்களூருவைத் தாண்டி பஸ்ஸை மறித்த போலீஸ், நாலு சீட் தள்ளி ஒருவரை நக்சலைட் என அடித்து இழுத்துப்போனது.

இன்னொரு பயணத்தில் பக்கத்து சீட் இளைஞனை ஒருவர் நோண்டியதில் மாறி மாறி அவரை அறைந்து இருட்டில் இறக்கிவிட்டார்கள். திருவண்ணாமலை போகும்போது செஞ்சியில் வைத்து ஒரு பெண்மணி மயங்கி விழ... மொத்த பஸ்ஸும் ஆஸ்பத்திரிக்குப் போனது. ஈரோடு பக்கம் அப்போதுதான் அடிபட்டுக் கிடந்த ஒரு அரைபாடி வேனில் ரத்தம் சொட்டச் சொட்டக் கிடந்த இரண்டு பேரை அள்ளிக்கொண்டு ஓடியது ஒரு பயணம்.

குடித்துவிட்டு ஏறிய ஒரு கும்பல் வழிநெடுக பழைய பி.பி. ஸ்ரீனிவாஸ் ஹிட்டாகப் பாடிக்கொண்டு வந்தது ஒரு தடத்தில். ஒரு கணவனும் மனைவியும் திடீரெனப் பெருஞ்சண்டை போட்டுக்கொண்டு, பஸ்ஸை நிறுத்தி அவள் மட்டும் இறங்கிப்போனாள் ஒரு முறை. அன்ரிசர்வ்டு கம்பார்ட்மென்ட்டில் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு பெண்ணிடம் அட்ரஸ் வாங்கி, அதன் பிறகு ரொம்ப நாளைக்கு அவளோடு கிட்டத்தட்டக் குடும்பமே நடத்தினான் ஒரு நண்பன். எல்லாப் பயணங்களிலும் யாரோ ஒருவர் வீட்டைவிட்டு ஓடி வருகிறார். யாரோ ஒருவருக்குக் காதல் பூக்கிறது. யாரோ ஒருவருக்கு மரணம் நிகழ்கிறது. யாரோ ஒருவன் கலைஞனாகிறான். யாரோ ஒருவன் குற்றவாளியாகிறான். யாரோ ஒருவன் திருந்துகிறான். யாரோ ஒருவன் தன்னையே கண்டுபிடித்துக்கொள்கிறான் வெகுநாட்களுக்குப் பிறகு!




நான் இதுவரை இரண்டு முறைதான் விமானத்தில் போயிருக்கிறேன். இரண்டுமே ஓசி ட்ரிப்புகள்தான். ஒரு முறை விகடனுக்காக ஹைதராபாத்துக்கு. இன்னொரு முறை கதை சொல்வதற்காக நண்பருடன் மும்பைக்கு. ஏறி உட்கார்ந்து ஃப்ளைட் கிளம்பும் நொடியில் மனதில் வருகிற எண்ணம், ‘இந்த ஃப்ளைட் கவுந்துருமோ?’ என்கிற திகில்தான். மேகக் கூட்டங்களுக்கு நடுவில் மிதக்கும்போது, ‘நம்ம ஊரு எங்கடா இருக்கு?’ என்று எட்டிப் பார்க்கச் சொல்லும். நண்பர்கள் பலர் நம்மைப் பார்த்ததும் கேட்பது, ‘‘உன் படத்துல ஃபாரின்ல சாங் இருக்கா? ரெண்டு ட்ரீம் சாங் வையி... போயிட்டு ரவுண்டு அடிச்சுட்டு

வரலாம்ல.'' ''இல்லைங்க... யதார்த்த படம்ங்க...'' என்றால் அனிமேஷன் மாதிரியே பார்க்கிறார்கள்.

முதல் தலைமுறை நண்பர்கள் பலருக்கும் இருக்கிற பொதுக் கனவு... 'அம்மாவை ஒரு தடவை ஃப்ளைட்ல ஏத்திக் காட்டிரணும்' என்பது. சில நண்பர்கள் அதைச் செய்தும் விட்டனர். உண்மையில் அது அற்புதமான கனவுதான்.

''பேரமவுன்ட்ல மூவாயிரம்தான் டிக்கெட்டு. மதுரைக்கு ஒரு ட்ரிப் அடிச்சுரலாம்ல!'' என்கிறார்கள். என் அம்மாவிடம் இதைப் பற்றிச் சொன்னதற்கு பட்டென்று சொன்னது, ''மொதல்ல நீ ஊருக்கு வாடா!''

57

# தள்ளிவை தற்கொலையை!

**இ** ன்று காலையில் வெளியே வரும்போது முதலில் கண்ணில்பட்டது பி.ராஜாவுக்கான கண்ணீர் அஞ்சலி போஸ்டர்! இது அஞ்சாவது வருஷம். அவசர அவசரமாக எங்கேயாவது ஓடிக்கொண்டு இருக்கும் ஒரு காலையில் இப்படி போஸ்டர்கள் கண்ணில்படும்.

ஒரு பைக்கில் சாய்ந்து பி.ராஜா நிற்கிற அதே புகைப்படம். 'பன்னீர் புஷ்பங்கள்' சுரேஷ் மாதிரி ஒரு முகம். கட்டம் போட்ட மெரூன் கலர் சட்டை, கையில் சில்வர் வாட்ச், உதடு சுழித்து ஒரு புன்னகை.

பி.ராஜாவை, இந்த ஹவுஸிங் போர்டு டாஸ்மாக் பக்கம் அவ்வப்போது பார்ப்பேன். குப்பென்று பெர்ஃப்யூம் தூக்க, மொபைல் பேசியபடி கடந்துபோவான். பார்க்கிங்கில் கிடக்கிற ஏதாவது கார் பேனட்டில் ஸ்டைலாக உட்கார்ந்திருப்பான். ''ஒரு பாக்கெட் கிங்ஸ்..." என்றபடி பெர்முடாஸோடு எதிர்க் கடையில் நிற்பான். ஓர் அதிகாலையில் கைலியில் சுருக்கிட்டு, நாக்கு தள்ள, நிர்வாணமாக இவன் தொங்குவான் என்ற காட்சியை யாராலும் நினைத்துப்பார்க்க முடியுமா? அப்படித்தான் தொங்கினான் பி.ராஜா.

அவன் வசித்த ப்ளாக்கில் கூட்டம் கூடி, போலீஸ் வந்திருந்தது. ''த்தா கல்யாணமாகி ஒரு வருஷம்கூட இல்ல... இன்னா பிரச்னையோ எழவோ... நைட்டுகூட சிரிச்சினேதான் விஷ் பண்ணினு போனாரு!'' என்றார் வாட்ச்மேன். ''தொங்குனவன் இன்னாத்துக்கு நியூடா தொங்குனான்? என்னா சொல்லவர்றான்? எவ்ளோ எமோஷனலா

இருந்துருப்பான் பாத்துக்க'' என்றார் சிவராமன். கொஞ்ச நேரத்தில் பாடியைத் தூக்கிப் போனார்கள். ''ஒய்ஃப் மேட்ருதாம்ப்பா" ''கடன் பிரச்ன... அஞ்சு லச்சம் வட்டிக்கு வாங்கிருக்கான்" என்றெல்லாம் கொஞ்ச நாளைக்கு ஏதேதோ சொன்னார்கள்.

அதன் பிறகு இரவுகளில் யதேச்சையாக பார்க்கும்போது அவனது ஃப்ளாட்டில் யாரும் இல்லாமல் பல்பு எரியும் மஞ்சள் வெளிச்சம் திடுக்கிட வைக்கும். இப்போதுகூட, வேறு ஏதோ குடும்பம் குடிவந்து குழந்தைகள் விளையாடிக்கொண்டு இருக்கும் அந்த ஃப்ளாட்டின் பால்கனியைக் கடக்கும்போது நினைவில் நறுக் என்று ஒரு முள் குத்துகிறது! இப்படித்தான் சில நேரங்களில் நாம் யோசிக்கவே முடியாத அமானுஷ்யங்களை நிகழ்த்திவிடுகிறது மனித மனம்.

**ந** ண்பன் பாக்கியம் சங்கரின் வண்ணாரப்பேட்டை ஏரியாவில் கட்டித்தங்கத்தைக் காதலித்த ஸ்ரீதரனின் கதை தெரியுமா?

ஸ்ரீதரன், கட்டித்தங்கத்தை அப்படிக் காதலித்தான். டவுன் பஸ்ஸில் அவளுக்காக சீட் பிடித்து, அவளுக்காக வண்டி வாங்கி, அவளுக்காக வேலையை மாற்றி, கல்யாணத்துக்குக் காசு சேர்த்தான். அவளுக்காக ஒரு சுடிதார் வாங்கி வைத்திருந்தான் அவன். மறுநாளே ஏதோ விபரீதமான விஷக்காய்ச்சல் தாக்கி ஆஸ்பத்திரியில் சேர்ந்த கட்டித்தங்கம், இரண்டு நாட்களில் செத்துப்போனாள்.

யாரிடமும் பேசாமல் கொள்ளாமல் திரிந்த ஸ்ரீதரன், அடுத்த மாதமே தற்கொலை செய்துகொண்டான். கட்டித்தங்கத்துக்காக வாங்கி வைத்திருந்த சுடிதாரை அணிந்துகொண்டு தூக்கில் தொங்கினான். சுடிதாரைப் போட்டுக்கொண்டு ஓர் ஆண் தொங்கியதைப் பார்த்தவர்களால் ஆயுசுக்கும் மறக்க முடியுமா? என்னவிதமான நினைவின் பயங்கரம் இது? ''கட்டித்தங்கம், டீக்கடையை கிராஸ் பண்ணும்போது எல்லாம் ஸ்ரீதரன் இதே பாட்டைத்தான் பாடுவான். அதுக்குப் புடிச்ச பாட்டு 'என் இனிய பொன் நிலாவே, பொன் நிலவில் உன் கனாவே...' '' என பாக்கியம் சங்கர் பாட ஆரம்பிக்கும்போதே

மனசு கட்டித்தங்கத்திடம் இருந்து ஷோபாவிடம் போய்விடுகிறது. ஷோபா என்றால் ஷோபா மட்டுமா? கலா அத்தையும்தான்.

**ஒ**ரு நள்ளிரவில் பொய்யாமொழி மாமா போன் செய்து, ''கலா மருந்து குடிச்சுருச்சு. பெரிய ஆஸ்பத்திரியில போட்ருக்கு... ஒண்ணும் சொல்ல முடியல...'' என அழுதார். அதிகாலையில் போனபோது உடம்புதான் கிடந்தது. முதல் நாள் கார்த்திகை. தஞ்சாவூர் பள்ளியக்ரஹாரத்தில் தெருவெல்லாம் அகல் எரியும் கார்த்திகை ராத்திரியில் இப்படி மருந்து குடித்து, குடல் அறுந்துகிடக்க ஒருத்திக்கு மனசு வருமா? மனசு வந்துதான் கலா அத்தை செத்துப்போனாள்.

ஒரு கையால் முந்திக்குள் தாம்பூலப் பையை மடித்துக்கொண்டு, இன்னொரு கையால் என் கையை இறுக்கிப் பிடித்துக்கொண்டு ரயில்வே கல்யாண மண்டப வாசலில் ரொம்ப நேரம் நின்ற கலா அத்தையை, இப்படி பெரிய ஆஸ்பத்திரி மார்ச்சுவரி வாசலில் வைத்துப் பார்ப்பது எவ்வளவு விசித்திரம்? முதுகுப்பக்கம் கிழிந்த சட்டையில் எம்ப்ராய்டரி ரோஜாவை மலரவிட்ட, ஒரு மழை சாயங்காலம் மரவல்லிக் கிழங்கு அவித்துவைத்த, அடுத்த வீட்டுக் கோழிகளுக்கும் குருணை இறைத்த, கல்யாண மண்டப வாசலில் இறுக்கிக்கொண்ட கைகள் அதற்குள் இப்படி விறைத்துக்கிடப்பது எவ்வளவு பயங்கரம்? பிழைத்து வந்தால் ஓங்கி ஓர் அறைவிட்டு, கைகளைக் கட்டிக்கொண்டு அழலாம். ''ஏண்டி ஒனக்காக எவ்வளவு உசுருங்க இருக்கு. எவ்வளவு அன்பு இருக்கு?" எனப் புரியவைக்கலாம். இப்போது என்ன செய்வது? இந்தக் கையறு நிலையும் பயங்கரமும்தான் தற்கொலை செய்துகொள்கிறவர்கள் நமக்குக் கொடுத்துவிட்டுப்போக நினைப்பதுவா?

**ஒ**ரு நாள், ஐ.ஐ.டியில் நண்பனைப் பார்க்கப் போயிருந்தபோது கேம்பஸில் ஒரே கூட்டம். போலீஸ். ''இங்க சரயூ ஹாஸ்டல்ல ஒரு பொண்ணு சூஸைட் பண்ணிக்கிச்சு மச்சான். பாக்கவே ரொம்பக் கஷ்டமா இருக்குடா'' என்றான் நண்பன். போன மாதம்தான் பக்கத்தில் இருக்கிற அண்ணா யுனிவர்சிட்டியில் ஒரு மாணவன் தற்கொலை செய்துகொண்டான். கல்வி, காதல், சமூகம், குடும்பம் தரும் மன

அழுத்தம் என ஏதேதோ காரணங்களால் தற்கொலை செய்துகொள்ளும் மாணவர்களைப் பற்றிய செய்திகள் அதிகமாகிக்கொண்டே இருக்கின்றன.



விஞ்ஞானமும் அதன் வளர்ச்சி விகிதமும் நாளும் எகிறுகிற காலத்தில், மனதால் மிகவும் பூஞ்சையான, பலவீனமான ஒரு தலைமுறையை நாம் உருவாக்கி வருகிறோம். கடன் தொல்லையால் குடும்பத்தோடு தற்கொலை செய்துகொள்கிறவர்கள், ஏதேனும் சுற்றுலாத் தலங்களில் அறை எடுத்து ஜோடியாக செத்துப் போகிறவர்கள், எங்கெங்கோ அபார்ட்மென்ட் அறைகளில் சுய மரணம் எய்தும் இளம்பெண்கள் என ஒரு தற்கொலை செய்தியாவது இல்லாத நாள் இருக்கிறதா?

ஒரு முறை, நம்மாழ்வார் அய்யாவுடன் இதுபற்றிப் பேசிக்கொண்டு இருந்தபோது சொன்னார், ‘‘இயற்கை மேல இருக்கிற நேசம் குறைஞ்சதுதான் இந்தத் தலைமுறைகளோட பெரிய சாபம். இயற்கையைக் காதலிக்கிற எவனுக்கும் சாகணும் என்கிற எண்ணம் துளியும் வருமா? இன்னும் இன்னும் வாழணும்கிற கனவுகள்தான் வரும். இயற்கையோட பிரமாண்டங்களையும் அற்புதங்களையும் உணர்ந்துட்டா, இந்த வாழ்க்கையோட இன்ப, துன்பங்கள் எல்லாம் சாதாரணம். ஒவ்வொருத்தரும் புள்ளை மாதிரி ஒரு மரமாவது வளருங்க... செடிகொடிகளை நேசிங்க... பறவைகளோட பேசுங்க... இயற்கையை

அனுபவிக்க ஆரம்பிச்சிட்டா, தனிமை, பிரிவு எதுவும் உன்னை அண்டாது!’’

அந்த அற்புதத்தின் உண்மையை நான் உணர்கிறேன். ஊரில் இயற்கை விவசாயம் பார்க்க வேண்டும் என்கிற எனதுஆசை அன்றுதான் கிளர்ந்தது!

பொறுக்கிகளும், பேமானிகளும், சுரண்டல் பேர்வழிகளும் வாழ்வாங்கு வாழும் இந்த தேசத்தில்தான் இன்னமும் விவசாயிகள் தற்கொலை செய்துகொள்கிறார்கள். அலைபேசி, கணினிப் புழக்கம் ஏகத்துக்கும் எகிறிவிட்ட நாட்டில்தான், இன்னமும் வறுமையும், பசியும் அவமானமும் துரத்த... நமக்குச் சோறு போடும் விவசாயி தற்கொலை செய்துகொள்கிறான். ஒரு விவசாயியின் மரணம் என்பது, ஒரு நாட்டின் இறையாண்மையின் மரணம் என்பதை இந்தச் சமூகமும் அதிகார மையங்களும் உணர வேண்டும்!

**இ** ளைய அப்துல்லாஹ் எழுதிய ‘அண்ணை நான் தற்கொலை செய்யப்போகிறேன்’ என்ற கட்டுரைத் தொகுப்பைப் படித்தேன். ஒரு கட்டுரை இப்படித் தொடங்குகிறது, "அண்ணை நான் தற்கொலை செய்யப்போகிறேன். என்னாலை இனியும் வாழ முடியாது. அகதி அந்தஸ்தும் நிராகரிக்கப்பட்டுவிட்டது. எனக்கு 15 லட்சம் கடன். வீட்டிலை இரண்டு தங்கச்சிமார். அவையளுக்கு உழைக்கத்தான் வந்தனன். ஆனால், இப்படி ஆயிட்டுதே..." திருகோணமலையைச் சேர்ந்த ஒருவர் லண்டன் அகதிகள் முகாம் ஒன்றில் இதைச் சொல்கிறார். அந்தத் தமிழன் இலங்கையில் இருந்து லண்டனுக்கு அகதியாக வந்த பயணம் எப்படிப்பட்டது என்பதைச் சொல்கிறது அந்தக் கட்டுரை.

சிங்கப்பூர், ரஷ்யா, உஸ்பெகிஸ்தான் என நீளும் அந்தப் பயணம் மிகக் குரூரமானது... பயங்கரமானது. நினைத்துப் பார்க்க முடியாத பசி, தாகம், வலி, கொடுமைகள் நிறைந்தது. இவ்வளவையும் தாண்டி லண்டன் வந்துவிடுகிற அந்த அகதி, இப்போதும் அங்கே இருக்கிற முகாமில் கையெழுத்திட்டபடி ஒவ்வொரு விடியலுக்குமான நம்பிக்கையோடு வாழ்கிறான் என்பதோடு முடிகிறது அந்தக் கட்டுரை.

இப்படிப்பட்ட மனிதர்களைத்தான் நான் எப்போதும் நினைத்துக்கொள்கிறேன். போராடுவதும் வாழ்வதும்தானே மனிதனின் பேரழகு? தனிமை, பிரிவு, விரக்தி... எல்லாமே பொய். அன்பும் போராட்டமும் மட்டுமே இந்த மானுடத்தின் நிரந்தரம். அது ஒருபோதும் வற்றிப்போவதே இல்லை. சக மனிதனை நேசிப்பதுதான் வாழ்க்கை. உண்மையான அன்பும், அறமும், கோபமுமே அனுதினம் என நினைக்கிற யாரும் சாக நினைக்க மாட்டார்கள். எல்லா இழப்புகளையும் இட்டு நிரப்புவதற்கு ‘மானுட சமுத்திரம் நானென்று கூவு’ என்கிற மனசு மட்டும் போதும்... போதும்!

**ஒ**ரு மாதமாக நண்பர் ஜெயராமன் மருத்துவமனையில் கோமாவில் இருக்கிறார். முப்பது சொச்சம் வயசுதான் இருக்கும். தினம் தினம் அவரது குழந்தையைக் காதருகே பேச விடுகிறார்கள். மனைவி தன் அன்பைச் சொல்லிக்கொண்டே இருக்கிறார். பாட்டு வைக்கிறார்கள். ஒரு கண் அசைவும் விரல் அசைவும் பெரும் நம்பிக்கையைக் கிளர்த்திவிடுகிறது. இன்னமும் அவர் கண் விழிக்கவில்லை. திறந்த ஜன்னலில் வெயிலும், காற்றும், நிழலும் பரவிக்கொண்டே இருக்கிற அந்த அறைக்குள் காத்திருக்கும் ஜீவன்களைப் பார்த்தபோது, உயிர் எவ்வளவு அற்புதமானது, மகத்தானது, உன்னதமானது என்பதை சிறு கணத்தில் உணர்ந்தேன். அதைவிடவும் பெரிதென்று ஏதும் இல்லை.

செயற்கைக் கால்களை வைத்துக்கொண்டு ஒலிம்பிக் ஓட்டப்பந்தயத்தில் ஓடிய பிஸ்டோரி யஸின் ஒரு வியர்வைத் துளி, மூங்கிலில் விரல் தடவி விரல் தடவி ஒரு தெருவோர அற்புதன் இசைக்கும் சங்கீதம், இடுப்புக்குக் கீழே எதுவும் செயல்படாமல் கணினியில் புதிய மென்பொருள் கண்டுபிடிக்கும் ஒரு சகோதரியின் விரல்கள், கல்யாணமே பண்ணிக்கொள்ளாமல் புற்று நோயாளிகள், எய்ட்ஸ் நோயாளிகள், ரோகிகளுக்குச் சேவை செய்வதையே வாழ்க்கையாக்கிக்கொண்ட அமுதாம்மாவின் ஒரு புன்சிரிப்பு, தூக்குக் கைதியாக நிற்கும் மகன் பேரறிவாளனையும் மற்றவர்களையும் மீட்க, சதா அலைந்து திரியும் அற்புதம்மாளின் வார்த்தைகள்... இதற்கு

எல்லாம் முன்பு நமது சோகங்களும் விரக்திகளும் எவ்வளவு தூசியானது?

நான் பார்த்த ஆங்கிலப் படம் ஒன்றில், இரண்டு நண்பர்கள் இருப்பார்கள். ஒருவன் வாழ்க்கையில் எப்போதும் விரக்தியை மட்டுமே பேசுகிறவன். இன்னொருவன் நம்பிக்கையை மட்டும் நினைக்கிறவன். க்ளைமாக்ஸுக்கு முந்தைய காட்சியில், தான் தற்கொலை செய்து கொள்ளப்போவதாக புலம்பிக்கொண்டு இருப்பான் முதல் நண்பன். அவனை ஆறுதல்படுத்திவிட்டு இன்னொருவன் கிளம்புவான். காலையில் வந்து அவன் நண்பன் வீட்டுக் கதவை திறப்பான். திறந்தவனின் பார்வை சட்டென்று மேலே போகும். அவ்வளவுதான்... மறுபடி கதவைச் சாத்திவிட்டு அவன் போய்விடுவான். அதோடு படம் முடிந்துவிடும்.

உண்மையில் இந்த உலகம் அப்படித்தான் போய்விடும். 'மூடிக்கிடக்கும் மனங்களின் உள்ளே விரக்தியின் இருட்டும்; திறந்துகிடக்கும் மனங்களின் வெளியே நம்பிக்கையின் விடியலும் எப்போதும் இருக்கும்' என்பதை அந்தக் காட்சி சொல்லிக்கொண்டே இருக்கிறது.

துன்பம் அதிகமாகும் போதெல்லாம் எனக்கு பாரதியின் இந்த வரிகள்தான் உள்ளே ஒலிக்கும்...

*'எத்தனை கோடி இன்பம் வைத்தாய்*
*எங்கள் இறைவா!'*

58

# குழந்தமை சொல்லும் குட்டிக் கதைகள்!

"**எ** க்ஸிபிஷன் போனீங்களா குட்டி?"

''ஆமாம்பா!''

''எப்போ போனீங்க?''

''நாளைக்குப் போனோமே!''

— இப்படிச் சொல்லிவிட்டு விளையாட ஓடிவிட்டாள் என் அண்ணன் மகள் பொன்மலர். எனக்கு அவள் சொல்லிவிட்டுப் போன கடைசி வார்த்தைகள் புகைப்படப் புன்னகையைப் போல நிலைத்துவிட்டது. காலத்தை இப்படி அசால்ட்டாகத் தூக்கிப் போட்டு மிதிக்க ஒரு குழந்தையால்தான் முடியும்.

அன்றைக்கு இப்படித்தான், சின்ன அண்ணன் வீட்டில் குருவி கத்துகிற மாதிரி ஒரு காலிங்பெல் வாங்கி வைத்தார்கள். குகன் அடம்பிடித்தால் அதை அழுத்தி, ''குருவி வருது... குருவி வருது... சாப்பிட்ரு!'' என்றால், அவனும் பயந்து சாப்பிட்டுவிடுவான். இது ஃபார்முலா. கொஞ்ச நாள் போனது. அண்ணி சாதம் பிசையும்போது அவனே ஸ்டூலைப் போட்டு ஏறி நின்று காலிங்பெல்லை அழுத்தி, ''குவி ஆப்புட ஆ குவி ஆப்புட ஆ!''

என்றான். கணம்தோறும் இப்படி அற்புதங்களை நிகழ்த்த குழந்தைகளால்தான் முடியும்.



அப்பழுக்கு இல்லாத பிராயம். ஆசை, ஏக்கம், கனவு, வன்மம், பொறாமை, ஈகோ, காதல், மன்னிப்பு, தண்டனை ஏதும் இல்லாத இதயங்கள். உண்மையில் பரிசுத்தம் என்றால் அது குழந்தைமைதான். எங்கிருந்தது என்றே தெரியாமல் ஒரு மழைக் காலையில் ஜன்னல் விளிம்பில் நெளிந்த மரவட்டை, ரயில் பூச்சியானது ஒரு குழந்தைக்காகத்தானே? அய்யனார் குண்டில் ஊளையிடும் நரிகள் கதைகளானதும் ஒரு குழந்தைக்காகத்தானே? மரக்கிளை தூளியாவதும், சுவர்களின் கிறுக்கல்கள் ஓவியமாவதும் குதப்பித் துப்பும் ஒரு சொல் காவியமாவதும் குழந்தைகளால்தானே? பிள்ளைகளின் உலகத்தில் அசிங்கம் என்பதே இல்லை. அதனால்தான் அநேகமான உலக சினிமாக்களும், கவிதைகளும், கதைகளும் குழந்தைமையையே பேசுகின்றன.

தூய்மையாக வருகிற மழைத்துளி கூரையில் பட்டதும் அழுக்காக வடிவது மாதிரி ஆகிவிடுகின்றன குழந்தைமையைக் கடந்து வரும் நம் பருவங்கள். ஆனால், ஒவ்வொருவருக்குள்ளும் ஒளிந்துகிடக்கும் ஒரு குழந்தைதான் மனித மனத்தின் பேரழகு இல்லையா? வந்து

சேர்ந்துவிட்ட உணர்ச்சிகளை எல்லாம் எரித்துவிட்டு, குழந்தையாகிவிடத்தானே தவிக்கிறோம் எல்லோரும்?

குரு அண்ணன், சிவகாசிக்குப் போய் 100, 200 காமிக்ஸ் புத்தகங்கள் வாங்கி வந்து பாதி அறையை அடைத்து வைத்திருக்கிறான். ''மாயாவி, லக்கி லுக், டெக்ஸ்வில்லர்னு படிக்க ஆரம்பிச்சாலே சின்ன கொழந்தை ஆகிட்ட மாரி இருக்குடா!'' என்கிறான். நண்பன் வெங்கடேஷ் டாம் அண்ட் ஜெர்ரி கலெக்ஷன்ஸ் மொத்தமாக வாங்கி வைத்திருக்கிறான். தமிழில் அட்டகாசமான கார்ட்டூன் அனிமேஷன் படம் ஒன்று எடுப்பதுதான் அவனது லட்சியம்.

எல்லோரும் தூங்கிவிட்ட மதியம் சமையல்கட்டு கதவில் சாய்ந்து உட்கார்ந்துகொண்டு, ''ராசாவே உன்ன நம்பி இந்த ரோசாப்பூ இருக்குதுங்க... வந்து சொல்லாத ஒறவ...!'' எனப் பாடிக்கொண்டு இருந்த பெரியம்மா சட்டென்று குழந்தையாகிவிட்ட மாதிரி இருந்தது. ரவுண்டு கழுத்து டிஷர்ட் வாங்கிப் போனபோது, அதைப் போட்டுப் பார்த்து அப்படி இப்படி இழுத்துவிட்டபோது சிவராஜ் சித்தப்பா குழந்தையாகித்தான் இருந்தார்.

55 வயசு கதிரேசன் பாத்ரூம் கண்ணாடியில் நின்று உதட்டைக் குவித்துக் குவித்து ஏதோ பேசிக்கொண்டு இருந்தார். சட்டென்று நான் உள்ளே நுழைந்ததும் வெட்கப்பட்டு ஒரு சிரிப்புச் சிரித்தாரே... அப்படியே குட்டிப் பையன் மாதிரியே இருந்தது. பெல் குவாட்டர்ஸில் பாலாஜியைப் பார்க்கப் போயிருந்தபோது டி.வியில் 'அன்பே வா அருகே வா... அலையே வா தலைவா வா' என சுசீலா பாட்டு போட்டான். ''இப்போ பாரு எங்கப்பா ஓடி வருவாரு!'' என பாலாஜி சொன்ன கணத்தில் சாப்பாட்டுக் கையோடு உள்ளேயிருந்து ஓடிவந்து நின்றார் அவன் அப்பா ஒரு குழந்தை மாதிரியே.

கீரந்தங்குடி திருவிழாக் கூட்டத்தில், ''போங்க போங்க... பின்னால வர்றேன்'' எனச் சொல்லிவிட்டு, போஸ்டர் தட்டிக்குப் பின்னால் நின்று கலர் பாயசம் குடித்துக்கொண்டு இருந்த சம்பத் குழந்தை இல்லாமல் வேறென்ன? அநேக உணர்ச்சிகளை, நியாய அநியாயங்களைக் கடந்து

வந்துவிட்ட பிறகு, அழுகையும் சிரிப்பும் காற்றும் இசையும் மட்டும் நிறைந்திருக்கிற பரிசுத்தத்துக்குள் போய் ஒருகணம் ஒளிந்துகொள்கிற கைக் குழந்தை நம் ஒவ்வொருவருக்கு உள்ளும் தூங்கிக்கொண்டு இருக்கிறது.

கடலூர் ஜெயிலிலில் இருந்து ஆயுள் தண்டனை முடிந்து வெளியே வந்த பாலு, ''மனசுல ஒண்ணுமே இல்லைங்க... புதுசா ஒரு வாழ்க்கை வாழணும்னு ஆசப்படறேன். எங்கேயாவதுகூடப் போயிடறேங்க!'' என அழுதபோது எவ்வளவு குழந்தைமை இருந்தது அவருக்குள்? ஆஜானுபாகுவாக இருக்கிற ரத்தினம் அர்த்த ராத்திரியில் வந்து, ''அவரு என்னை மன்னிச்சா போதும்ரா... மன்னிச்சா போதும்ரா!'' என அழுதபோது பச்சப்புள்ள மாதிரிதான் தோன்றியது.

ஒரு டாக்குமென்டரிக்காக திருச்சியில் இருக்கிற முதியோர் இல்லத்துக்குப் போயிருந்தபோது, அவ்வளவு பேரும் சாயங்காலம் செஸ் விளையாடிக்கொண்டும், பஜனை பாடிக்கொண்டும் உட்கார்ந்திருந்தார்கள். ஒவ்வொன்றும் குழந்தைதான். பாதம் வெடித்து, தசைகள் சுருங்கி, கண்கள் இடுங்க ''ஒன்னப் பாக்க கொணாளன் மாரியே இருக்கு!'' என்றது ஒரு குழந்தை. ''மதுர போறன்னா திண்டுக்கல்ல தாண்டித்தான போவ... இத எங்கூட்ல குடுத்துட்றியா?'' என்றபடி ஒரு பாலிதீன் பையில் அங்கே பறித்த கீரையைக் கொண்டுவந்து கொடுத்தது ஒரு குழந்தை. என்னவோ வீட்டைப் பற்றிப் பேச, கோடிட்ட கன்னமெல்லாம் ஈரம் படர்ந்து நின்றது இன்னொரு குழந்தை. வெளியே வந்த பிறகு உள்ளே கோரஸ் குரலில் பஜனை கேட்டது, 'கண்ணா எனதருமை கண்ணா... ஏழை நெஞ்சம் குழந்தையல்லவா... ஏந்திக்கொள்ள வாடா...!'

**எ**னக்கு ராமநாதபுரத்தில் பார்த்த ஒரு காட்சி, அடி மனதில் ஆயுளுக்குமான பெயின்டிங்போலத் தங்கிவிட்டது. நண்பனின் குழந்தை காது குத்துக்குப் போனபோது, கோயில் மண்டபத்தில் 90 வயசுக்கு மேல் இருக்கும். பழுத்த ஆத்தா ஒன்று உட்கார்ந்திருந்தது. புருவம் எல்லாம் நரைத்து பஞ்சு பஞ்சாகச் சுருங்கிய உடலோடு நடுங்கியபடி

உட்கார்ந்திருந்த அதன் மடியில், பூப்போலப் பிறந்து ஒரு மாதமான குழந்தையைக் கிடத்தியிருந்தது. சாதாரண விஷயம்தான். ஆனால், அந்தக் காட்சி என்னை ஏதேதோ செய்துவிட்டது. 'நாலஞ்சு தலமொற பாத்த கெழவி... குடும்பத்துல ஒவ்வொரு புள்ள பொறக்கும்போதும் இதுதான் பாத்துக்கிச்சு... எத்தன உசுருங்க... இப்போ அதுக்கு முடியல... அதுவும் ஒரு கொழந்தையாதான் ஆச்சு. கால்ல தூக்கிப்போட்டு எடுத்துக்குறோம்!'' என்றார் நண்பனின் சொந்தக்காரர். அந்த ஆத்தாவின் கண்களில் இன்னும் ஏழு ஜென்மத்துக்கான குழந்தைமை இருந்தது. குழந்தையாக வந்து குழந்தையாகப் போகும் நெடுநாளில் எல்லோரும் மறுபடியும் நமது அறிவற்ற பிராயத்தைத்தான் தேடிக்கொண்டே இருக்கிறோம் இல்லையா?

*'அந்தக் குட்டிப் பாப்பா*
*விடும்*
*பேப்பர் கப்பலில்*
*கரை சேர்ந்துவிடக்கூடும்*
*இந்த மானுடம்!'*

என்ற ரெஸ்வானின் கவிதை இப்போதும் நினைவில் கிறுக்கலாகிறது.

**தி**ருப்பூரில், நண்பர் ஜெயபாலுக்கு உடல்நிலை சீரியஸாகி ஆஸ்பத்திரியில் சேர்த்திருந்தபோது பார்க்கப் போயிருந்தேன். பனியன் கம்பெனியில் என்னோடு வேலை பார்த்தவர். மதியங்களில் அவர் வீட்டில் இருந்து எப்போதும் எனக்கும் சேர்த்துச் சாப்பாடு எடுத்து வருவார். ஞாயிற்றுக் கிழமைகளில் அவர் வீட்டில் சாப்பிடக் கூப்பிட்டுப் போய்விடுவார். ''வூட்ட விட்டு தனியா இருந்தோம்னு வையி... வெறுமையா கெடக்கும். அதான் இங்க ஒன்ன கொண்டு வந்துர்றேன்!'' என்றபடி வீட்டிலேயே தண்ணியடிப்பார். அவர் மனைவி எதாவது கொண்டுவந்து வைத்துக்கொண்டே இருப்பார். அவ்வளவுதான் அந்தக்காவைப் பார்த்திருக்கிறேன். ஒரு முறை கோயில் வாசலில்

வைத்து, ‘‘நீ போய் சாமி கும்பிட்டுக் கெளம்பு... நான் முருகன்கூட மன்றம் வரைக்கும் போயிட்டு வாரேன்!’’ என்றபோது கொஞ்சம் கோபமாக முறைத்துவிட்டுப் போனது அக்கா.

இப்போது ஆஸ்பத்திரியில் அவரைப் பார்த்தபோது என்னைப் பக்கத்தில் அழைத்தவர் பொசுக்கென்று என் கையைப் பிடித்துக்கொண்டு, ‘‘ஒங்கக்காவுக்கு நான் ஒண்ணுமே பண்ணலைடா... ஒண்ணுமே பண்ணலைடா... அது மட்டும்தான்டா பாரமாக் கெடக்கு!’’ என அழ ஆரம்பித்துவிட்டார். அப்போதுதான் அந்தக்கா உள்ளே வந்தது. இவர் அழுவதைப் பார்த்ததும் பதறிப்போய் வந்ததை, சட்டென்று இழுத்து உட்கார்த்தி, அது மடியில் படுத்து விசும்ப ஆரம்பித்துவிட்டார். அது அவர் தலையைக் கோதிக்கொண்டு, ‘‘ச்சூ... என்னது...’’ என அதட்ட ஆரம்பித்தது. நான் பட்டென்று வெளியே வந்துவிட்டேன்.

**ஒ** ரு முறை தடாலென உள்ளே நுழைந்தபோது, அடுப்பங்கரை இருட்டில் கணபதி சித்தப்பா மடியில் கண்ணீரோடு கிரிஜா சித்தி சாய்ந்திருந்த காட்சி, நினைவில் எழுந்தது. இப்போது ஜன்னலில் ஜெயபால் அந்தக்கா மடியில் கிடந்த சித்திரம் உறைந்துவிட்டது. காதல், காமம் எதிர்பார்ப்பு வேறெதுவும் இல்லை. அது குழந்தைமை. ஏதுமற்ற குழந்தைமையின் கண்ணீர். ஆண், பெண்ணிடமும் பெண், ஆணிடமும் குழந்தைமையை மீட்டுக்கொள்கிற அநேக தருணங்கள் வாய்த்துக்கொண்டே இருக்கின்றன. சந்தோஷங்களிலும் துயரங்களிலும் அது நிகழ்வதற்கான கணங்கள் கிடைத்துக்கொண்டே இருக்கின்றன. பல நேரங்களில் அறிவும், கோபமும், ஈகோவும் நமது குழந்தைமையின் மேலே ஏறி நின்றுகொள்கின்றன பெரிய மனிதர்களின் வேஷத்தைப் போட்டுக்கொண்டு!

இப்போது வீட்டுக்குள் நுழையும்போது பொன்மலர் விளையாடிக் கொண்டு இருக்கிறாள்...

‘‘ஏய்! காலைல ஸ்கூல்தானே? போய் சீக்கிரம் படு!’’

‘‘இல்லையே... ஸ்கூல் இல்லையே... நேத்திக்கு லீவாச்சே!’’ என்றபடி ஓடுகிறாள். நாளையையும் நேற்றையும் சர்வ சாதாரணமாக இடம் மாற்றிப் போட்டு பொம்மைகளைப் போல விளையாடும் அவளைப் பார்க்கப் பொறாமையாக இருக்கிறது.

என்னதான் செய்ய முடியும்... ஒருக்காலும் நேற்றைக்குள் நுழையவே முடியாத நம்மால்!

59

# பக்தியின் வெளிப்பாடு, பிரார்த்தனையா?

**"எ** னக்காக ப்ரே பண்றீங்களா..?"

— போனை வைப்பதற்கு முன்பு பொசுக்கென்று கேட்டாள் கோமதி. துபாயில் வேலை பார்க்கிற புதுக்கோட்டைத் தோழி.

விவசாயம் பொய்த்து, அப்பாவும் இறந்த பிறகு, குடும்பத்தைச் சுமக்க வெளிநாட்டுக்கு வீட்டு வேலை பார்க்கப் போனவள். த.மு.எ.க.ச. கலை இரவு, தஞ்சாவூர் புத்தகக் கடை என நாலைந்து தடவைதான் நேரில் பார்த்திருப்போம். அப்புறம் எல்லாம் அலைபேசி நட்புதான்.

ஒரு முறை ஏகப்பட்ட மூன்றுகளோடு வந்த விசித்திர எண்ணை எடுத்தபோதுதான் அவள் துபாய் போனதே தெரியும். இலங்கைத் தமிழ்ப் பெண், இந்தோனேஷியப் பெண் இருவருடன் அங்கே அறை எடுத்துத் தங்கி இருக்கிறாள். அவளுடைய அத்தனை கஷ்டங்களும் எனக்குத் தெரியும். ஆனால், கஷ்டங்களைக்கூட சிரிக்கச் சிரிக்கத்தான் பேசுவாள்.

அப்படி ஒரு நாள் பேசும்போது ஏதேதோ பேசிவிட்டு ஒரு மௌனத்துக்குப் பிறகு சம்பந்தமே இல்லாமல் இப்படிச் சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டாள்: ‘‘எனக்காக ப்ரே பண்றீங்களா..?"

ஊத்துத் தண்ணீர் மாதிரி குபுக்கென வந்துவிட்டன அந்த வார்த்தைகள், இமைகளில் ஒட்டிக்கொண்ட கண்ணீரைப்போல பிசுபிசுக்கின்றன இன்னும். கொஞ்ச நேரம் கண்களை மூடி அவளை நினைத்துக்கொண்டேன், அவள் பெயர் எழுதிய ஒரு துண்டுச் சீட்டைக் கடவுளின் முன்பு வீசுகிற மாதிரி. கோடிக் கோடித் துண்டுச் சீட்டுகள் அனுதினமும் கொட்டிக்கொண்டே இருக்கும் கடவுளின் பால்வெளியில் அது எங்கே விழுந்திருக்கும்? எங்கெங்கோ இருக்கிறவர்களுக்காக எங்கெங்கோ இருக்கிறவர்களின் பிரார்த்தனைகள்தான் காற்றெங்கும் நிறைந்திருப்பதாக இந்தக் கணம் உணர்கிறேன்.

'ஐ ப்ரே ஃபார் யூ' என்ற முகமறியாத் தோழியின் குறுந்தகவல் ஒவ்வொரு காலையிலும் என் மொபைலில் ஒளிர்கிறது. சாலையில் ஆம்புலன்ஸ் கடக்கும்போதெல்லாம் சடுதியில் கண்களை மூடி முணுமுணுக்கும் வண்டிக்காரர்கள் எத்தனை பேர் இருக்கிறோம்? பெசன்ட் நகர் சர்ச் வாசல் அடைத்து எவ்வளவு பிரார்த்தனைகள் உருகிக்கிடக்கின்றன ஒவ்வொரு மாலையும்? வனக் கோயில் புலச்சிமடியில் நிறைந்து இருந்த பன்றிக் கறித் துண்டுகளுக்குள் எவ்வளவு வேண்டுதல்கள் கிடந்தன? சென்னியாண்டவர் கோயில் நடையை அடைக்கிற நேரம் லோகம்மா கூட்டி அள்ளுகிற மலர்ச் சருகுகள் எவரெவருடைய பிரார்த்தனைகள்?


குழந்தைகளும் பெண்களும் சிதறிக்கிடந்த முள்ளிவாய்க்கால் மண்ணில், ரத்தத்தோடு ஒரு சகோதரி வானம் பார்த்துக் கும்பிட்டு அழும் புகைப்படத்தை எனது அறையில் வைத்திருக்கிறேன்; தீரவே தீராத ஒரு பிரார்த்தனையின் கொடும் நினைவுகளோடு. ஜெமினி லிட்டில் ஃப்ளவர் ஸ்கூலில், 'இதயத்தால் பேசுவதைக் கடவுள்கூட புரிந்துகொள்வார்' என எழுதப்பட்ட சுவருக்குப் பக்கத்தில் ஒரு தாய் கை தட்டும் ஓசைகளுக்கு எல்லாத் திசைகளிலும் வந்து சாப்பாடு வாங்கிக்கொண்டு இருந்தாள் பார்வையற்ற சிறுமி ஒருத்தி. வாசலில் எஃப்.எம். கேட்டுக்கொண்டு இருந்த வாட்ச்மேனுக்கு கொய்யாப் பழம் பறித்துக் கொடுத்தான் செவிகேளா ஒரு சிறுவன்.

பார்க் ஹோட்டலின் கீழே பிளாட்ஃபார்மில் கையில் செருப்பை மாட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் ஒரு பைத்தியக்காரி. பாம்குரோவ் பக்கம் ஒரு குரோட்டன்ஸ் அடியில் மழைச் சேற்றில் சுருண்டுகிடந்தான் ஒருவன். எக்மோர் ஜி.ஹெச்—சில் உயிருக்குப் போராடும் இரண்டு மனிதர்களின் கட்டில்களுக்கு நடுவே கைகளை விரித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார் ஒரு தேவகுமாரி. பரங்கிமலை ஸ்டேஷனில், மரப் பலகையை உருட்டிக்கொண்டு வந்த ஒரு ரோகி, ‘‘வேண்டுதலை வாங்கிக்கொள்ளப்பா... எங்கள் வாழ்வுக்கொரு வழியைச் சொல்லப்பா..." எனப் பாடிய பாடலை எடுத்து வந்துவிட்டேன்; எல்லோருக்குமான பிரார்த்தனையாக.

**க** டவுள்கள் பிச்சை எடுக்கும் ஒரே தேசம் இந்திய தேசம்தான். நேற்றுகூடப் பார்த்தேன். வடபழனி சிக்னலை ஒட்டி அனுமாரும் கிருஷ்ணரும் பிச்சை எடுத்துக்கொண்டு இருந்தார்கள். இது ரொம்பவும் பழக்கப்பட்ட விஷுவல்களாகிவிட்டன. அவர்கள் சென்ட்ரல் ஸ்டேஷனை ஒட்டிய பிளாட்ஃபார்மில் படுத்து உறங்கி, கூவக் கரையில் ஒதுங்கி, கட்டணக் குளியலறையில் குளித்து, அதிகாலையில் கடவுள்கள் ஆகின்றனர். ‘‘உச்சி வகுந்தெடுத்து பிச்சிப்பூ வெச்ச கிளி..." என ஒலிக்கும் மொபைலை எடுத்து, ‘‘லூஸுச் செறுக்கி... டூட்டில இருக்கேன்" எனக் கிசுகிசுக்கின்றனர். தேவர் மெஸ்ஸில் சாப்பிட்டுவிட்டு, வடபழனி முருகன் கோயில் வாசலில் சாய்ந்து, ‘‘யப்பா முருகா..." என அவர்கள் கையெடுத்துக் கும்பிட்ட காட்சியை ஒரு முறை பார்த்தேன். அப்போதே மனம் தறிகெட்டு யோசித்தது... எல்லோருக்குமான பிரார்த்தனைகளைச் சுமக்கும் கடவுளின் பிரார்த்தனை என்னவாக இருக்கும்? ‘ஆளை விடுங்கடா சாமீ...’ என்பதா?



ஒரு நாள் செந்தில்நாதன்தான் சொன்னார், ‘‘என்னவா இருக்கும்? ‘மனிதர்களிடம் இருந்து என்னைக் காப்பாற்று... மதங்களை நானே பார்த்துக்கொள்கிறேன்’கிறதா இருக்கும்.’’



உண்மையிலேயே வேண்டுதல் என்பது என்ன? பாவம் செய்துவிட்டு ஜாமீன் கேட்பதா? அதைச் செய்... இதைச் செய்... என மனுப்

போடுவதா? பிறத்தியாருக்கு நல்லது நினைப்பதும் செய்வதும்தானே வேண்டுதலும் பிரார்த்தனையும்?

உண்மையில் பிரார்த்தனை என்பது பக்தியா என்ன? அது நம்பிக்கை. நல்லவைக்கான தவிப்பு. பெரியாரின் பிரார்த்தனை... சமூக மீட்பு. பிரபாகரனின் பிரார்த்தனை... சுதந்திரம். இளையராஜாவின் பிரார்த்தனை... இசை. தெரசாவின் பிரார்த்தனை... மனிதநேயம். புதுமைப்பித்தனின் பிரார்த்தனை... எழுத்து. ஜீவாவின் பிரார்த்தனை... சமத்துவம். ஃபூகோவின் பிரார்த்தனை... இயற்கை. மேதா பட்கரின் பிரார்த்தனை... உரிமை. இப்போது இடிந்தகரையில் மாதா கோயிலின் முன்பு கைகளை விரித்தபடி வேண்டுகிற ஏழைத் தாய்களின் பிரார்த்தனைகள் என்னவாகும்?

தங்கள் மண்ணை, உயிரை, தலைமுறைகளைக் காப்பாற்றிக் கொள்ளும் எளிய மக்களின் பிரார்த்தனைகளை எப்போதுதான் கேட்கப்போகிறாய் சாமி? காலங்காலமாக இவர்களின் பிரார்த்தனைகளைக் கசக்கி எறிந்துவிட்டு, அதிகாரம் தரும் தங்கக் கிரீடங்களைத்தானே சூடிக்கொள்கிறாய்? பணத்தையும் அதிகாரத்தையும் முன்வைத்து எளியவர்களின் உயிர்களை நசுக்கும் அரச பயங்கரவாதத்தின் பிரார்த்தனைகளை ஏற்றுக்கொள்ளும் கடவுளே, நீ யார்?

திருப்பதி கோயிலில் சாமி கும்பிட்டுவிட்டு புன்சிரிப்போடு போன ராஜபக்ஷே உன்னிடம் என்ன பிரார்த்தித்தார் பெருமாளே? 3 லட்சம் அப்பாவி உயிர்களை உன் உண்டியலில் போட்டாரா? ஏழைகளின் வேண்டுதல்கள் இறைந்துகிடக்கிற பெரும் பிராகாரத்தில், நிராசைகளே கற்பூரங்களாக எரிகின்றன எப்போதும்.

அய்யப்பன் கோயிலுக்குப் போகும்போது, ‘‘இத உண்டியல்ல போட்ருடா... பதிக்குப் பொண்ணு தகைஞ்சுரணும்னு..." என நச்சோனையாத்தா மஞ்சள் துணியில் முடிந்து கொடுத்த காசை சபரிமலை உண்டியலில் போடும்போது, எவ்வளவு கைகள் நீண்டன? திருப்பதி போகும்போது விவேக் கொடுத்த பத்து ரூபாய், அம்முவின்

புற்றுநோய்க்காக. அவ்வளவு அழகான அம்மு? மொட்டைத் தலையோடு கேன்சர் இன்ஸ்டிட்யூட் வாசலில் வைத்துப் பார்த்தபோது புன்னகை தளும்ப, ‘‘மண்டைலயே குட்டுவேன்..." என்ற அம்முவுக்கான பத்து ரூபாயை உண்டியலில் போட்டபோது மனசு தவித்தது. ‘‘அவ நல்லாருக்கணும்... போற எடத்துல சந்தோஷமா இருக்கணும்" என நன்முல்லைக்காகத் தமிழ்ச்செல்வன் வேண்டிக்கொண்டு நின்றது காதலின் மகா சமுத்திரத்தில் இருந்து பிரிக்கவே முடியாத பிரார்த்தனை உப்பு.

உடல் முழுவதும் தொட்டில் கட்டிக்கிடந்த பிராகார மரத்தை, தாயத்துகள் குவிந்துகிடந்த தர்ஹா குளக்கரையை, ரத்தம் தோய்ந்துகிடந்த ஆணிப் படுக்கையை, தோல்கள் ஒட்டிக்கொண்டு இருந்த ஒரு கசையை, நீர்க் கரை எல்லாம் இறைந்துகிடக்கும் முடிகளை ஒவ்வொரு நாளும் கடந்து போய்க்கொண்டே இருக்கின்றன தெய்வங்கள்!

யார் யாருக்கோவான பிரார்த்தனைகள் நம்மிடமும் நமக்கான வேண்டுதல்கள் யாரிடமோ இருப்பதும்தான் இந்த ஜீவிதத்தின் அழகு. ‘‘இன்னைக்கு உங்களுக்காக வேண்டிக்கிட்டேம்ப்பா" என தாரிணி காலையில் சொன்னபோது, ‘‘கோமதிக்காகவும் வேண்டிக்க" எனச் சொல்லத் தோன்றியது.

**ஒ**ரு நண்பனின் மனைவிக்கு மனநலன் குன்றிவிட்டது. பல்லைக் கடித்துக்கொண்டு, கைகால்களை முறுக்கிக்கொண்டு தன்னைத்தானே வருத்திக்கொள்கிறார். தெருவே எழும்பக் கத்துகிறார். மாறி மாறி ஆஸ்பத்திரிகளுக்குப் போயும் சரியாகவில்லை. யாரோ சொல்லி கேரளத்தில் பகவதி அம்மன் கோயிலுக்கு அழைத்துக்கொண்டு போய்விட்டான். அங்கே சாட்டையால் அடித்து, நெருப்பு வைத்து ஏதேதோ செய்திருக்கிறார்கள். இவன் கண் முன்னாலேயே துவண்டு கிடந்தவளை வீட்டில் கொண்டுவந்து போட்டிருந்தார்கள். நான் போய்ப் பார்த்துவிட்டு கண்டபடி திட்டினேன். ‘‘நீயெல்லாம் மனுஷனாடா... என்னடா பண்ணிட்டு வந்திருக்க?" என்றதற்கு அவன் சட்டென்று என்

கையைப் பிடித்துக்கொண்டு அழுதான். ‘‘என்ன பண்றதுனு தெரியலைடா. எல்லாம் பண்ணியாச்சு. ஒண்ணும் நடக்கலை. பாக்க முடியல. அதான் இதையும் பண்ணிப்பார்த்துரலாம்னு..." அவன் பெரியப்பா வந்து அவனை ஓங்கி ஓர் அறைவிட்டார். ‘‘கம்னாட்டி அந்தப் புள்ளைய நா கொண்டுபோறண்டா..." என அவரே ஊருக்கு அழைத்தும் போய்விட்டார்.

வெகு நாட்களுக்குப் பிறகு அவனைப் பார்த்தபோது தெளிந்து இருந்தான். ‘‘அவளுக்கு நல்லாயிருச்சுறா... ஊர்லதான் இருக்கா. தெனமும் போன் பண்ணிப் பேசுறா. முந்தாநேத்திக்குத்தான் ஊருக்குப் போய் நேர்த்திக்கடன் பண்ணிட்டு வந்தேன்" என்றான் சிரிப்போடு. நல்லதுகளையும் கெட்டதுகளையும் நம்பிக்கைகளையும் பிரார்த்தனைகளையும் விட்டுவிட்டு நம்மால் எங்கே போக முடியும் என நினைத்துக்கொண்டேன்!

நியூஸ் பேப்பரில் ‘டீசல் விலை உயர்வு’ என்ற செய்தியில் இருந்து தொடங்கும் இந்த நாள், இன்னும் பல இம்சைகளை வைத்திருக்கக்கூடும். ஆனால், ஒவ்வொரு நாளும் டெலிட் செய்தாலும் அடுத்த விடியலிலும் அந்தக் குறுந்தகவல்தான் என்னை எழுப்பிவிடுகிறது... ‘ஐ ப்ரே ஃபார் யூ!’

60

# எது, கெட்டப் பழக்கம்?

**ஒ**ரு நண்பனை, நான்கு வருடங்களுக்குப் பிறகு தொலைப்பேசியில் தொடர்புகொண்டேன். அப்போது அவனுக்கும் எனக்கும் நடந்த உரையாடல் இது.

''டேய்... நான்தான் பேசறேண்டா...''

''ஹேய் மச்சான்... இப்ப யோகா க்ளாஸ்ல இருக்கேன்... கூப்பிடுறேன்...''

அதிகாலையில் போன் அடித்தவனுக்கு, என் பதில் ஷாக் அடித்தது. ''என்னது, யோகா க்ளாஸா... நீயா..?'' என அடுத்த தெரு வரைக்கும் அலறினான். ''வில் கால் யூ பேக்டா...'' என கட் செய்தேன் (இந்த இங்கிலீஸுக்கு இன்னும் டர்ர்ர்ராகி இருப்பான்).

கொஞ்ச நேரம் கழித்துக் கூப்பிட்டால், ''காலைல 6 மணிக்கு யோகா க்ளாஸா? என்னடா சொல்றே?'' என மறுபடி பதறினான். நண்பர்கள் 'நல்லவர்கள்' ஆவதை நண்பர்களால் ஜீரணித்துக்கொள்ள முடிவதே இல்லை.

ஃபாஸ்ட் கட்டில் அவனது மண்டைக்குள் திருவல்லிக்கேணி மேன்ஷன், கம்ஃபர்ட் பார், பீஃப் கறி, பாண்டி பஜார் நெய் பரோட்டா, நைட் ரவுண்ட்ஸ், மொட்டை மாடி நடனங்கள்... எல்லாம் சடசடத்து மறைந்திருக்கும்.



‘‘இன்னைக்குத்தான் சென்னை வந்தேன்டா... ஈவினிங் எங்க பாக்கலாம்?’’

‘‘நீ எங்க இருக்க?’’

‘‘மயிலாப்பூர்ல...’’

‘‘இன்னைக்கு வியாழக்கெழம... மயிலாப்பூர் சாய்பாபா கோயில் வந்துரு...’’ என்றேன் வேண்டும் என்றே.

‘‘எது சாய்பாபா கோயிலா..? அதான் லேண்ட் மார்க்கா..? பக்கத்துல என்ன பார் இருக்கு..?’’

‘‘மொதல்ல அங்க வாடா...’’ எனில், எனக்கும் அவனுக்குமான பூர்வஜென்ம பந்தம் அப்படி. கூடுவதே குடிப்பதற்காகத்தான் என்பதே எங்களின் ஒரு வரி ஃப்ளாஷ்பேக். ‘‘நண்பா... ஒரு பேபா...’’ என்பான் அடிக்கடி ஒரு சிகரெட்டை உருவிக்கொண்டு. ‘பேபா’ என்றால் பேருக்குப் பாதி... ஒன் பை டூ!

அவன் என் மேன்ஷன் தோழன். நான்கு வருடங்கள் கூடிக் கும்மியடித்தோம். சரக்கு, சிகரெட், காதல்கள் பகிர்ந்துகொண்ட நட்பு.

அதன் பிறகு வேலைக்கு நைஜீரியா பக்கம் போனவனை நான்கு வருடங்களுக்குப் பின் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன்.

சாயங்காலம் சாய்பாபா கோயிலில் பார்த்ததும், ‘‘டேய்! ஆளே மாறிட்ட... வெய்ட் லாஸாகி... ப்ரைட்டாகிட்டடா...’’ என்றான் ஆச்சர்யமாக. அவன் எக்கச்சக்கமாக வெயிட் போட்டு இருந்தான். கண்களில் ஒரு நிரந்தரப் போதை சுழித்திருந்தது. ஓரமாக தள்ளிக்கொண்டு வந்து, ஒரு ஃபாரின் சிகரெட்டை உருவி, ‘‘நண்பா... பேபா...’’ என்றான். ‘‘ஸாரி மச்சான்... சிகரெட் பிடிக்கறதில்ல...’’

‘‘காமெடியா..? இந்தா அட்றா...’’

‘‘இல்ல மச்சான்... சீரியஸாத்தான்... ஃபோர் இயர்ஸ் ஆச்சு...’’

சாமி கும்பிட்டுவிட்டு வெளியே வந்தால், ‘‘பக்கத்துலயா தூரமாடா... ஆட்டோ பிடிச்சுருவோமா..?’’ என்றான் ஆர்வம் மினுங்க. ‘‘பக்கத்துலதாண்டா...’’ என்றபடி சுகநிவாஸுக்கு அழைத்து வந்து, ‘‘ரெண்டு காபி...’’ என்றேன்.

‘‘இப்ப எதுக்குரா காபி... டைம் ஆகிருச்சு... பாருக்கே போயிரலாம்...’’

‘‘பாரா..? நான் தண்ணியடிக்கிறது இல்லடா... ஒரு காபி சாப்பிட்டு பக்கத்துல ராமகிருஷ்ணா மிஷன் இருக்கு... அங்க போவோம்... நல்ல வைப்ரேஷன் இருக்கும்!’’

‘‘வேணாம்... வேணாம்... நா அடிக்கிறேன்... சும்மா கம்பெனிக்கு வந்து உக்காரு...’’ என்றான் கொலை வெறியாகி. பாரில் கடைசி வரை நான் சாலட்டையும் ஜூஸையும் ருசிக்க, அவன் மப்பில் என் உள்ளங்கையை ஏந்தி எக்கச்சக்கமாகக் கிஸ் அடிக்க ஆரம்பித்தான். ‘‘மச்சான்... எப்டிடா..? எப்பிட்றா விட்ட..? நானும் ட்ரை பண்ணி ட்ரை பண்ணிப் பாக்குறேன்... முடிய மாட்டேங்குதே... ம்...’’ என்றவன் ஏழாவது ரவுண்டில், ‘‘த்தா... ஆஸ்காரு... ஆஸ்காரு வாங்கிட்டு நீ வரும்போது நான் ஒரு ட்ரீட் குடுப்பேன்... அன்னைக்கு ஒரு நாள் மட்டும் நீ

குடிக்கணும்!'' என்றவன், சட்டென்று அழ ஆரம்பித்தான். ''குடிக்கலைன்னா தூக்கம் வர மாட்டேங்குது... நெனப்பு அரிக்குது... அத்தனையும் ஞாபகத்துக்கு வருது... மண்டை கொய்ய்ங்குது... என்னாடா பண்றது..?''

நள்ளிரவுக்கு மேல் அவனை ஆட்டோ பிடித்து அனுப்பிவிட்டுத் திரும்பினேன். அப்போதுதான் தோன்றியது... இப்படி எத்தனை எத்தனை இரவுகளை வெற்றுக் கூச்சல்களோடும் நம்பிக்கைகளோடும் தொலைத்து இருக்கிறோம்? உடலையும் மனதையும் வதைத்து இருக்கிறோம்? எவ்வளவு இதயங்களை இம்சித்து இருக்கிறோம்? விடியல்களை இழந்து இருக்கிறோம்? அவற்றில் இருந்து மீண்டுவிட்ட இந்த இரவுக்குள் அந்த நண்பனும் வர வேண்டும் என நினைத்துக்கொள்கிறேன்.

''கெட்ட பழக்கங்கள் நல்ல பாம்பைப்போல... பட்டெனத் தூக்கி வீசிவிடு'' என்கிறார் பரமஹம்சர். நானும் அப்படித்தான் ஏதோ ஒரு நாளில் புகையையும் மதுவையும் தூக்கி வீசினேன். அந்த நண்பன் சொன்னதைப்போல அப்போது எனக்கு முன்பு வந்து நின்ற பெரும் சவால்... இந்த வெற்றிடம்தான்! நேரமே போகாமல், மனதைத் தவிக்கவைக்கும் வெற்றிடம். அடுத்து என்ன செய்வது எனப் புரியாத தவிப்பும் குழப்பமும். ஏக்கம், பிரிவு, கவலை, கண்றாவி என நமது அத்தனை உணர்ச்சிகளையும் லாகிரி வஸ்துக்களிடம் அடகு வைத்துவிட்டோம் என்பதே அப்போதுதான் புரிந்தது.

அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கும் அடுத்து நாம் செய்வதற்கும் எத்தனை எத்தனை அற்புதங்கள் இருக்கின்றன? எழுத்து, வாசிப்பு, இசை, சினிமா, நல்ல உரையாடல்கள், பயணங்கள், வேலை, உணவு, யோகா, உடற்பயிற்சி என எவ்வளவோ விஷயங்கள்... அத்தனையும் போதைதான் என்பதை இப்போது உணர்கிறேன்!

''நாம பண்ண சீனுக்கு தியேட்டர்ல ஆடியன்ஸ் கை தட்னாங்கன்னா... அப்ப ஜிவ்வ்வுனு இருக்கும் பாருங்க... அதான் உண்மையிலேயே போதை...'' என்பார் லிங்குசாமி சார். ''உதவி பண்றதே ஒரு போதைதாங்க... யாருக்காவது எதாவது பண்ணிட்டா

கிறுகிறுனு சந்தோஷமா இருக்கும். யாராவது வாழ்த்திட்டா பொசுபொசுனு பூத்துக்கும். அதை உணர்ந்துட்டா நாலு பேருக்கு எதாவது பண்ணிக்கிட்டே கெடப்போம்ங்க!'' எனத் தோழர் அருளானந்தம் ஒரு முறை சொன்னபோது, 'அடடா... இதெல்லாம்தானே போதை!' என உணர்ந்தேன்.

''த்தா... வலியை மறக்கக் குடிக்கிறியா... உங்கம்மாவுக்கும் எங்கம்மாவுக்கும் இல்லாத வலியாடா...'' என எப்போதோ சரோ சிம்பிளாகச் சொல்லிவிட்டுப் போனது, இப்போதும் எக்கோ அடிக்கிறது. எங்கோ, யாருக்கோ நாம் உருவாக்கும் கண்ணீரும் புன்னகையும்கூடப் போதைதான்.



சபரிமலைக்கு மாலை போட்டுக்கொண்டு 48 நாட்களும் அதிகாலையில் எழுந்து, குளித்து, சாமி கும்பிட்டு ஒரு வாழ்க்கை வாழ்வோமே... அது அத்தனை போதையானது. இருமுடி கட்டிக்கொண்டு பரதேசியாகக் கிளம்பும் பயணம்... ஆன்மிகம் தவிர்த்தும் ஓர் அற்புதம். இந்த மனசையும் மனிதர்களையும் இருமுடியாகக் கட்டிக்கொண்டு ஆயுசுக்கும் பரதேசியாக வாழ்வதே ஆகச் சிறந்த போதைதான்!

‘‘சுரண்டல் அரசே சுரண்டல் அரசே... அந்நிய சந்தையில் மக்களை விற்காதே...’’ எனத் தகிக்கும் தார் சாலையில் கோஷம் போட்டுத் திரும்பும்போது வரும் ஒரு சின்ன நிறைவும், போதைதான்.

ரயில் பயணத்தில் எதிரே இருப்பவரின் பையில் சட்டென்று கிடைத்துவிடும் அசோகமித்திரன் புத்தகம் எல்லா வெற்றிடங்களையும் நிரப்பிவிடும். அதுவும் இல்லை என்றால், ஜன்னல் மரங்கள். ஆரஞ்சு வானம். நிலையத்தில் கடக்கும் மனித முகங்கள். பாடல்கள் கரையும் குரல்கள். இந்த எழுத்தும் கலையும் மனிதர்களும் எனக்குள் நிறைந்துகொண்டே இருக்கிறார்கள்... என் எல்லா வெற்றிடங்களையும் முழுமையாக்கிக்கொண்டே!

**ம**துவும் புகையும் தரும் போதை... கொண்டாட்டமும் விளையாட்டுமாகக் கடந்துபோகிறது... சட்டென்று ஒரு நிறுத்தத்தில் நிகழும் மரணம்தான் எவ்வளவு கொடூரமானது? நெசப்பாக்கத்தின் ஒண்டுக்குடித்தன வீட்டின் பாத்ரூமில் இறந்துகிடந்த தமிழ்மணி அண்ணனை இரண்டு நாட்களுக்குப் பிறகு கண்டெடுத்த கணம் எத்தனை பயங்கரமானது? ‘கிருஷ்ணா எக்ஸ்பயர்டு’ என ஒரு குறுந்தகவல் என் மொபைலில் ஒளிர்ந்த நொடி எத்தனை கோரமானது? தஞ்சாவூர் பெரிய ஆஸ்பத்திரியில் மூச்சற்ற அப்பாவின் முகம் பார்த்து, ‘தங்கமே...’ என அம்மா அழ ஆரம்பித்த கணம் எவ்வளவு கனமானது? கண் முன்னே வாழ வேண்டிய உயிர்களை வாரிக்கொண்டுபோன காலம்... உயிர்களின் உன்னதத்தை உணர்த்திக்கொண்டே இருக்கிறது!

கெட்ட பழக்கங்களை விடுவதே ஒரு போதைதான். ‘‘அவரு இப்போ தண்ணி எல்லாம் அடிக்கறது இல்ல...’’ ‘‘ஆமாமா... மொகத்தைப் பாத்தாலே தெரியுதே... இப்பத்தான் தெளிவா இருக்கு...’’ என யாராவது பேசும்போது மனசு உற்சாகமாகும். ‘‘நான் அப்போலாம் அப்பேர்ப்பட்ட பொம்பளப் பொறுக்கிங்க... ‘எம் பொண்டாட்டிய விட்டுர்றா’னு ஒரு ஆளு நடுரோட்ல என் கால்ல விழுந்தான். எனக்கு எல்லாம் மன்னிப்பே கெடையாது... எங்கம்மா அவ்ளோ அழுதுருக்கு, என்னை நெனைச்சு.

பாலகுமாரன் சார் எழுத்தைப் படிக்க ஆரம்பிச்ச பிறகுதான் எல்லாத்தையும் விட்டு வெளில வந்தேங்க...

ஒருத்தி கூப்பிட்டானு அப்பிடி ஒரு நாள் போனேன். தெரு முக்கு திரும்பினப்போ மனசு வரட்டுனு புடிச்சு நிறுத்துச்சு. சைக்கிளைத் திருப்பிக்கிட்டு ரெண்டு கிலோ மீட்டர் தூரம் மூச்சிரைக்க வந்து நின்னு பாத்தேன்... அப்பிடியே காலரைத் தூக்கிவிட்டு உள்ள ஒரு பெருமை பொங்கிட்டு வந்துச்சு... நீ கரெக்ட்ரானு ஒரு பெரும... இன்னைக்கு வரைக்கும் ஒய்ஃப் மட்டுந்தான்... உண்மையா இருக்கேங்க!'' என்றார் ஒரு நண்பர் டீக்கடையில் வைத்து.

கெட்ட பழக்கங்கள் என்றால் லாகிரி வஸ்துக்கள்தானா? சொல்லப்போனால், கொண்டாட்டங்களைத் தாண்டி குடும்பங்களையும் மனசையும் கெடுக்கும்போதுதான் அவை அப்படி ஆகின்றன. சுரண்டலும், திருட்டும், பொய்யும், வன்மமும், வஞ்சமும் எவ்வளவு பெரிய கெட்ட பழக்கங்கள்? காலையில் எழுந்ததும் பவர் ஸ்டார் கைதும் 'மன்மோகன் சிங் அறிக்கையும்தான் கண்ணில் படுகின்றன. கீழ் ஃப்ளாட் சண்டையும் எஃப்.எம். கடிகளும் காதில் கேட்கின்றன. யார் யாரிடமோ எப்படியும் சில, பல பொய்கள் சொல்லத்தான் வேண்டி இருக்கிறது. காந்தி சொன்ன குரங்குகளாக வாழ்கிற வாழ்க்கை எல்லோருக்குமா வாய்க்கிறது?

**வ** ழி எங்கும் கெட்டதுகளை நம் ஐம்புலன்களிலும் ஏற்றிக்கொண்டே இருக்கிறது இந்தச் சமூகம். கூட்டம் பிதுங்கும் பேருந்தில் ஒரு திருநங்கையை நாலைந்து பையன்கள் ஆபாசமாகக் கேலி செய்துகொண்டு இருக்கிறார்கள். ''போன் நம்பர் கேள்ரா மாமு...'' என அசிங்கமாகச் சைகை செய்கிறார்கள். அங்கே எதுவும் பேசாமல் நிற்பதும் கெட்ட பழக்கம்தான்.

கந்து வட்டிக்குக் காசு வாங்கியவனை அபார்ட்மென்ட் வாசலில் விட்டு நாலைந்து பேர் வெளுத்துக்கொண்டு இருக்க, போலீஸுக்குகூட போன் பண்ணாமல் டி.வி. சவுண்டைக் கூட்டுவதும் கெட்ட பழக்கம்தான்.

மிக நுணுக்கமாக நுழைந்து சாதி பார்ப்பதும், ஆள் அம்பு பார்த்து அன்பு வைப்பதும், எளியவர்களிடம் அரசியல் செய்வதும், அடுத்தவன் உழைப்பில் தனக்கான நாற்காலியைத் தயாரித்துக் கொள்வதும், விருப்பமில்லா இதயத்தை எடுத்துக்கொள்வதும், சிரிக்கச் சிரிக்க வதந்தியும் சீரியஸூமாகப் பொரளி சொல்வதும்... எல்லாம் எவ்வளவு பெரிய கெட்ட பழக்கங்கள்? புகை, குடி மாதிரி மனதின் எல்லா அழுக்குகளையும் தூக்கி தூர வீசி விடுகிற ஒரு தருணம் ஆயுசுக்குள் வந்துவிடுமா?

எதற்காக இந்தப் போதைப் பழக்கங்கள்? எல்லாவற்றையும் மறக்க என்கிறது எல்லாக் குரலும். எல்லாவற்றையும் மறந்துவிட முடியுமா? எதையுமே மறக்க முடியாது... கடக்கத்தான் முடியும் என்பதை உணர்ந்துகொள்ளவே இத்தனைக் காலம் ஆயிற்று. நினைத்துக்கொள்வதும் ஒதுக்கிக்கொள்வதுமே நிதர்சனம் எனப் புரிகிறபோது எந்தப் போதையும் தேவையில்லை.

**கெ** டையில் ஆடு திருடி, வீட்டிலேயே சாராயம் காய்ச்சி, ஆத்தாவைத் துன்பித்து, கூத்தியாள் வைத்து வாழ்நாளெல்லாம் கொண்டாட்டமாக வாழ்ந்தார் ஜம்பு தாத்தா. ஒரு சின்ன வயல் பூச்சி கடித்து, குஷ்டம் வந்து, கடைசியில் யாரும் தீண்டாமல் தனியே குடிசை போட்டுக்கிடந்தார். சாப்பாடு கொடுக்கப் போகும்போது, ‘‘மறக்க முடியலைய்யா... ஒண்ணுத்தையும் மறக்க முடியலைய்யா...’’ என அரசு தாத்தாவிடம் அவர் புலம்பிக்கிடந்ததை மறக்க முடியுமா?

அன்றைக்குப் பேசிக்கொண்டு இருக்கும்போது நண்பர் சுரேஷ் சந்திரா சொன்னார், ‘‘சின்ன வயசுல எங்க அப்பாவோட போகும்போது ஊட்டி ரயில்வே ஸ்டேஷன்ல தினமும் பார்ப்பேன்... ஸ்டேஷன் கட்டைல உக்காந்து ஒருத்தர் படிச்சுட்டே இருப்பார். மொத்த மொத்தமா புத்தகம்... இலக்கியப் புத்தகங்களா படிச்சுட்டு இருப்பார். இல்லைன்னா அங்கே வர்ற பயணிகளுக்கு பொட்டி தூக்கறது, தண்ணி பாட்டில் கொடுக்கறது, குழந்தைகளுக்கு சாக்லேட் கொடுக்கறதுனு எதாவது

பண்ணிட்டே இருப்பார். அவர்ட்ட பேசிரணும்னு எனக்கு ஆசையா இருக்கும்.

பல வருஷம் கழிச்சு, ஊருக்குப் போனப்போ அதே ஸ்டேஷன்ல அவரைப் பார்த்தேன். இப்பவும் அவர் அப்படியே உக்காந்து ஒரு புத்தகத்தைப் படிச்சுட்டு இருந்தார். நான் ஃபர்ஸ்ட் டைம் அவர்ட்ட போய் பேசினேன்... எதோ ஒண்ணு கேட்டேன். அவர் சட்டுனு 'ப்பர்ர்ர்... ப்யான்... ப்பா...'னு சைகைலயே பேச ஆரம்பிச்சுட்டார். அப்பதான் அவருக்குப் பேச முடியாதுங்கிறது தெரியும். சட்டுனு மனசு கனத்துப் போச்சு!''

அந்த ரயில் நிலைய ஆசாமி எனக்குள் சித்திரமாகிவிட்டார். அவரைப் போலத்தான் இருக்க வேண்டும். வெளிப்படுத்திக் கொள்வது அல்ல... செயல்கள்தான் நல்ல பழக்கம், இல்லையா?

61

# கட்சியும் புரட்சியும், வெறும் கனவுகள்தானா?


"**கா**மராஜர் கை நனைச்ச கடையப்பா!'' — கறுப்பு பெரியப்பாவின் பன்ச் இது.

'நாங்க ரயில்வே கேட்லயே எம்.ஜி.ஆரைப் பாத்தவய்ங்க...' வசனத்துக்கு கொஞ்சமும் இளைத்தது அல்ல இது. வாழ்விலே நான் பார்த்த முதல் தொண்டன் கறுப்பு பெரியப்பாதான். அவரே பாதி காந்தி; பாதி காமராஜர்தான். உள்ளூரில் இருக்கும்போது பேர்பாடி. வெளியூர் கிளம்பினால், முழங்கை தாண்டிய கதர்ச் சட்டை, காங்கிரஸ் துண்டு காஸ்ட்யூம்.

ஒரு கடை வைத்திருந்தார். சாயங்காலம்தான் திறப்பார். இரண்டு நெல் மூட்டை கிடக்கும். இரண்டு வாழைத் தார் தொங்கும். மத்தபடி அது அவருக்கு கட்சி ஆபீஸ். வந்தவுடன் ரேடியோவைத் திருகி நியூஸ் வைத்துவிட்டு உட்கார்ந்துவிடுவார்.

''தெருவுக்குத் தெரு ஆயிரம் சாமிங்க இருக்கலாம்... ஆனா, ஊருக்கு மத்தில உக்காந்துருக்கானா... அது காளியம்மாதான? காங்கிரஸ் அப்படித்தான்... இந்தியாவுக்கு நேரு குடும்பம், தமிழ்நாட்டுக்கு மூப்பனார் குடும்பம்... அதான் கரெக்ட்டு'' என்பார் சத்தியமூர்த்தி தாத்தாவிடம். தேர்தல் வந்தால் கூட்டணிக் கட்சிகளுடன் கும்மியடிக்கமாட்டார். ஊருக்குள் காங்கிரஸுக்கு ஓர் ஈ, காக்கா கிடையாது. 'வின்னர்'

கைப்புள்ள மாதிரி ரெண்டு பேரைச் சேர்த்துக்கொண்டு, தனியே கேன்வாஸ் பண்ணுவார். கூட்டணிக் கட்சிக்காரர்களிடம், ‘‘தம்பி நாங்க சென்ட்ரலு, நீங்க ஸ்டேட்டு... தட்டி கட்டிட்டு வந்து பாத்துட்டுப் போங்க" என வெறி ஏற்றுவார்.



ஊருக்குள் முதன்முதலில் விஜயகாந்த் ரசிகர் மன்றம் வந்தபோது, கொந்தளித்துவிட்டார். ‘‘ஏங்க... காமராஜர் கால் பட்ட மண்ணுல இதெல்லாம் நடக்கலாம்ங்களா..." என ஒரு வாரம் ரவுசு கட்டினார். ஓர் ஓட்டு வீடு, பழைய சைக்கிள், வெத்தலைப் பெட்டி... இவ்வளவுதான் கறுப்பு பெரியப்பா தன் குடும்பத்துக்குச் சேர்த்துவைத்த சொத்துகள். ‘‘ஏங்க... மூணு பொம்பளப் புள்ளைகள வெச்சுக்கிட்டு எதாவது சொத்துக்கித்து சேக்க வேணாமா?" என யாராவது கேட்டால், ‘‘உண்மையான காங்கிரஸ்காரன்னா இப்பிடித்தான் இருக்கணும். காமராஜர், கக்கன், அப்புறம் இந்தக் கறுப்பு" என்பார் வெற்றிலை வாயோடு. ராஜீவ் காந்தி இறந்தபோது கதறிவிட்டார். ஒரு வாரத்துக்கு கறுப்புக் கொடியைக் குத்திக்கொண்டு திரிந்தார்.

20 வருடத்தில், ஒரு நாள் ஊருக்குப் போயிருந்தபோதுதான் அவரைப் பற்றி நினைத்தேன். ‘‘செந்திலு ஃபாரீன் போய் கொஞ்சம் குடும்பத்த எடுத்துக்கிட்டான்டா... அவரு ரொம்பல்லாம் பேசறதில்ல" என்றான் அண்ணன். அவரைப் போய்ப் பார்த்தேன். அதே காங்கிரஸ் கரை வேட்டியோடு வந்துகொண்டு இருந்தார். ‘‘காமராஜர் போயிட்டாரு...

மூப்பனாரும் போயிட்டாரு... இன்னும் கறுப்பு போகலில்ல" என்றார் அதே பழைய சைக்கிளில் நின்றபடி!

**மு** தன்முதலில் நான் 'முரசொலி' பார்த்தது செல்லூர் ராஜேந்திரன் சைக்கிள் கடையில்தான். ஏரியாவிலேயே அவர்தான் 'முரசொலி' சந்தாதாரர். திராவிடக் கட்சிகளை ஊருக்கு ஊர் வளர்த்த சைக்கிள் கடைகளில் இவருடையதும் ஒன்று. கர்லிங் ஹேர், தி.மு.க. டர்க்கி டவல் எனக் கலைஞர் மாதிரியே கரகரப்பாகப் பேசிக்கொண்டு திரிவார். ''ங்க பாரு... கலைஞர் மாரி ஒரு ராஜதந்திரி ஒலகத்துலயே கெடையாது. மூளக்காரன்யா... அவரு மட்டும் அமெரிக்கால பொறந்துருந்தார்னு வையி, ஒலகத்தையே ஒரு ஆட்டு ஆட்டிருப்பாரு" என எப்போது பார்த்தாலும் பாராட்டு விழா போடுவார். ''அப்பறம் எதுக்கு அவரு தோக்குறாப்ல?'' என வம்புக்கு இழுத்தால், ''முட்டாப்பய சனம்... யேசுவக் கொன்ன சனம்ரா இது. இந்தக் கமல் எவ்வளவு கஷ்டப்பட்டு நடிக்கிறான்... எவனாவது பாக்குறானா? ரஜினி ஒடம்பு வளையாம வந்து இந்தா இப்பிடி இப்பிடிச் சிலுப்பிக்கிட்டு நடந்தான்னா பாக்குறானுவோள்ல... அதான் இந்த சனம். இங்க பாரு... நாங்கெல்லாம் உசுரு நிக்கிற வரைக்கும் கலைஞரு கட்சிதான். அவரு வந்து உக்காந்து சோடா குடிச்சுட்டுப்போன கடைடா இது. அந்தப் புகழ் போதும்ரா நமக்கு" என்பார்.

ஒரு முறை, திருக்கொள்ளம்புதூருக்கு ஒரு கல்யாணத்துக்கு வந்திருந்தார் கலைஞர். நான் சுப்ரமணி தாத்தாவோடு போய், பின்னால் இருந்து கலைஞரின் சட்டையைப் பிடித்து இழுத்தேன். அவர் திரும்பிப் பார்த்து சிரிக்கும்போதே, தடதடவென வந்த ராஜேந்திரன்... அவர் காலில் விழுந்து கண்ணீர் மல்க நின்ற காட்சி இப்போதும் நினைவில் இருக்கிறது.

தஞ்சாவூர், திருவாரூர், கும்பகோணத்தில் ஏதாவது கட்சி மீட்டிங் என்றால், கட்டாரி மாமாவும் சோமு மாமாவும்தான் ஊரில் இருந்து வேன் எடுத்துக்கொண்டு கிளம்புவது. செல்லூரில் ராஜேந்திரன் ஏறினால் போய் வருகிற வரைக்கும் சோலோ மீட்டிங் போட்டுக்கொண்டு இருப்பார்.

தேர்தல் வந்துவிட்டால், மண் கொட்டிப் பானையில் தண்ணீர் வைத்த பூத்திலேயே நிற்பார். நாங்கள் சின்னப் பிள்ளைகள் பல்டி அடித்துப் போய் தண்ணீர் மொண்டு குடிப்போம். ''டேய் கலைஞர் வாழ்க... கலைஞர் வாழ்கனு கத்துங்கடா" என்பார் துண்டை விசிறியபடி.

இப்போது போகும்போது பார்த்தால் சைக்கிள் கடை இருந்த இடத்தில் மளிகைக் கடை போட்டு அவர் மனைவி உட்கார்ந்து இருந்தார். தி.மு.க. கொடி கட்டிய டி.வி.எஸ். எக்ஸெல் ஓரமாகக் கிடந்தது. ''ராஜேந்திரன் எப்பிடிறா இருக்காரு..?" என்றதற்கு அண்ணன் சொன்னான், ''அதே வெறியோட இருக்காரு... போன வாரம் கட்சி ஒன்றியக் குழு உறுப்பினர் சீட்டு கேட்ருக்காரு. அவரு ஒய்ஃப் மாவட்டத்துட்ட போயி 'அவருக்கு சீட்டே குடுத்துராதீங்க. ஏற்கெனவே கட்சி கட்சினு இருக்கற சொத்தை எல்லாம் அழிச்சது போதும். இப்போ புள்ளைங்க சம்பாதிக்கறதையும் அழிச்சிருவாரு. வீட்டை அடமானம் வெச்சாலும் வெச்சுருவாரு...'னு அழுதிருச்சாம். அதனால சீட்டுக் குடுக்கலபோல இருக்கு. ஆனாலும், வேகம் குறையலடா மனுஷனுக்கு'' என்றான். அப்போது உள்ளே இருந்து டி.வி. நியூஸ் சத்தம்... ''கிரானைட் வழக்கில் தலைமறைவான துரை தயாநிதியை போலீஸார் தீவிரமாகத் தேடுகின்றனர்!' என்றது.

**இ** ரட்டை இலையையும் எம்.ஜி.ஆரையும் பச்சைக் குத்திக்கொண்டு திரியும் ஆயிரமாயிரம் பேரில் சௌந்தர்ராஜன் மாமாவும் ஒருவர். என் தாய் மாமன். 'கோழி' சௌந்தர்ராஜன் என்றால், ஏரியா பப்ளிக்குட்டி. பஞ்சாயத்து எலெக்ஷனில் கோழி சின்னத்தில் நின்றதால், இந்தப் பெயர். அ.தி.மு.க. வெறியர். ''எம்.ஜி.ஆர நாலடி தூரத்துல பார்த்தேன் மாப்ள... என்னா கலருங்கற... அப்பிடியே பச்சக் குத்தின மாரி இருக்குல்ல" என்பார்.

எம்.ஜி.ஆர். செத்தபோது லாரி பிடித்து மெட்ராஸ் போன பார்ட்டி. அவ்வப்போது கல்யாணம், காட்சி, கருமாதிகளில்தான் அவரைப் பார்ப்பேன். கரை வேட்டி கட்டிக்கொண்டு பழ வாசத்தோடு பப்பரக்கா என வருவார். ''நம்ம என்னைக்கும் எம்.ஜி.ஆர். விசுவாசி, இப்போ அம்மா விசுவாசி. கட்சிக்காக என்ன வேண்ணா பண்ணுவோம்.

சாலியமங்கலம் கடத் தெருல தீக்குளிக்கக்கூட ரெடி. கட்சி வரலாற்றுல ஓர் ஓரமா சௌந்தர்ராஜன் பேரு இருந்தா போதும் மாப்ள" என்பார் 'என்னுயிர்த் தோழன்' பாபு மாதிரி. ரொம்ப காலத்துக்குப் பிறகு சமீபத்தில் ஒரு கல்யாணத்தில் பார்த்தேன். அதே கரை வேட்டி, பழ வாசம், பேச்சு மெலிந்து வயசாகி இருந்தது மட்டும்தான் மாற்றம். அத்தையிடம் கேட்டபோது, ''கட்சி கட்சின்னுதான் அலையுறாரு, என்னா சொல்லி என்னா? ஒண்ணும் கேக்க மாட்டேங்குறாரு. போஸ்ட்டு கீஸ்ட்டு வாங்கலாம்னா, அதுவும் கெடையாது. ஆமா, மெட்ராஸ் வந்தா நெசமா அம்மாவப் பாக்க முடியுமா முருகா?'' என்றது அப்பாவியாக!

**'கா** ம்ரேட்' என்ற வார்த்தையை நான் முதன்முதலில் கேட்டது யுகபாரதி அண்ணன் வீட்டில்தான். அவர் அப்பா த.க.பரமசிவம், மார்க்ஸிஸ்ட் கட்சிப் பொறுப்பாளர். அண்ணனின் வீடு எப்போதும் தோழர்களால் நிறைந்திருக்கும். ''சூளையப் போய் ஒரு எட்டு பாத்துட்டு வாங்கன்னா, அது நடக்க மாட்டேங்குது. கச்சி கச்சினு நின்னா, அதான வந்து சோறு போடப் போவுது? நான்தான் போய் வேவணும்'' என வசந்தாம்மா புலம்பிக்கொண்டே இருக்கும். 'புரட்சி' என்கிற வார்த்தை சகஜமாகப் புழங்கிய காலம் அது.

''தோழர்... புரட்சி வரும். அடிப்படைப் பொருள் முதல் வாதத்தை நீங்க புரிஞ்சுக்கணும்'' எனத் தேநீர்க் கடை தோழர் பேசப் பேச, எனக்கு சி.ஜியில் நரம்புகள் முறுக்கும். மார்க்ஸ், ஏங்கெல்ஸ் முதல் ஏ.கே.கோபாலன் வரைக்கும் படிக்கப் படிக்க இதயம் சிலிர்க்கும். அதே வேகத்தோடு திருப்பூர் போனபோதுதான் சே குவேராவும், செந்தில்வேலனும், அருளானந்தமும் அறிமுகமானார்கள். ''சே குவேரா சொல்ற போர்த் தந்திரம் என்னன்னா தோழர்... 'எதிரிகளை முழுமையாகப் புரிந்துகொள்ளுங்கள். அவர்கள் உங்களைப் புரிந்துகொள்ளவிடாதீர்கள்'னு சொல்றாரு தோழர்.'' ''உலகமயமாக்கலை எதிர்க்கணும்னா, உள்ளூர்த் தொழில்களைப் பெருக்கணும் தோழர்" என எந்த நேரமும் சுருட்டிவைத்த தீக்கதிர் பத்திரிகையோடு டீக்கடைகளில் நிற்போம். திடுதிப்பென்று வந்து ''வாங்க தோழர், நிதி சேர்ப்பு இருக்கு" என அழைத்துப் போவார்கள்.

சாலைகளில் அங்கங்கே நின்று உண்டியல் குலுக்குவார்கள். இரவோடு இரவாக காசு சேர்த்து, 'அதிகார வெறியும் சாதி வெறியும் ஒழிக' என போஸ்டர் அடித்து ஒட்டுவார்கள். எப்போதும் கட்சி, புரட்சி, கனவுகள்தான்.

ஒரு நாள் திடுதிப்பென்று அருளானந்தம் செத்துப்போனார். சல்லிக் காசு இல்லாமல் குடும்பத்தை விட்டுவிட்டு போனார். பாரதியாரைவிடப் பரவாயில்லை. அவரின் இறுதிப் பயணத்தில் 20 பேருக்கு மேலிருந்தோம். அங்கிருந்து நான் வந்த பிறகு, ஏழெட்டு வருடங்களுக்கு பிறகு சென்னையில் செந்தில்வேலனைச் சந்தித்தேன். ''ஈழப் பிரச்னையில உங்க கட்சி என்ன ஸ்டாண்ட் எடுத்துருக்கு? இவ்வளவு அப்பாவித் தமிழ் மக்கள் சாவுறாங்க, கம்யூனிஸ்ட்டுங்க என்ன ஆணி புடுங்குனீங்க?" எனக் காரசாரமான விவாதம் நடந்தது. அப்போது, இரண்டு பேரிடமும் கையில் காசு இல்லை. இன்னொரு நண்பர்தான் ஹோட்டல் பில் கொடுத்து, காசு தந்து கோயம்பேட்டில் செந்திலை பஸ் ஏற்றிவிட்டான். இப்போதும் செந்திலோடு அவ்வப்போது போனில் பேசுவேன். போன வாரம் பேசியபோது, ''என்னங்க... உங்க தலைவர் பர்த் டேக்கு அம்மா நேர்லயே போய் வாழ்த்திருக்காங்க" என்றேன். உடனே அவர் மிகுந்த சலிப்புடன் சொன்னார், ''அட போப்பா... வர்ற வெள்ளிக்கெழம என் ரெண்டாவது பையன் ஜீவாவுக்குப் பொறந்த நாளு. அதுக்கு ஒரு பெரிய செலவு இருக்குன்னு நானே கவலைல இருக்கேன்!''

தொண்டர்களின் ரத்தமும், உயிரும், கண்ணீரும்தான் ஒவ்வொரு கட்சிக்கும் கொடி மரத்து வேர்கள் இல்லையா? கலவரத்தில், போராட்டத்தில், அடிதடியில், தீக்குளிப்பில் உருவான கல்லறைகளின் மேல் எத்தனை எத்தனை சபதங்களும் வெற்றிகளும் கட்டப்பட்டன? தொண்டர்களின் உயிரிழைகளை இழுத்து இழுத்துத்தான் இத்தனை சிலந்திகளும் உருவாகின. காமெடியாக, கலாட்டாவாக, உணர்ச்சிபூர்வமாகக் கடந்துபோய்விடுகிற தொண்டர்களைப் பற்றி யாருக்கும், எப்போதும் கவலை இல்லை. கட்சிகள் கம்பெனிகளாகி, தலைவர்கள் அதன் எம்.டிகளாகிவிட்ட பிறகு, தொண்டர்களாவது

குண்டர்களாவது? இப்போதும் உணர்ச்சிகளில் சிக்கிக்கிடக்கிற தொண்டர்களைப் பாவமாக நினைத்துக்கொள்கிறேன்!

20 வருடங்களுக்கு முன்பு செல்லூரில் கால்நடை மருத்துவராக அப்பா வேலை பார்த்த நேரம். ஒரு மதியம் அவசரமாக வீட்டுக்கு வந்து, ‘‘ஒரு ஆளுக்கு சாப்பாடு கட்டு, டேய் நீயும் வா" என அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப்போனார். அதற்குள் கொஞ்சம் ஊர்க்காரர்கள் அங்கே திரண்டு இருந்தார்கள். ஆஸ்பத்திரியின் கொல்லையில் உடம்பில் ஒரு போர்வையைச் சுற்றியபடி ஓர் இளைஞர் உட்கார்ந்திருந்தார்.

அப்பா அவருக்கு சாப்பாடு கொடுத்ததும் சாப்பிட்டார். போர்வையை விலக்கினால் தோள்பட்டையில் ரத்தம் வடிந்து காயமாகக் கிடந்தது. அப்பா அதற்கு வைத்தியம் பார்த்தார். அதற்குள் ஊர்க்காரர்கள் சேர்ந்து கொஞ்சம் பணம் திரட்டிக் கொண்டுவந்து அவரிடம் கொடுத்தார்கள். ‘‘நைட்டு இங்க தங்கிட்டு போங்க" எனச் சொல்ல சொல்ல, அந்த இளைஞர் மறுத்துவிட்டு, எல்லோருக்கும் நன்றி சொல்லிவிட்டு நடந்தே அங்கிருந்து போனார். ‘‘யாருப்பா அது..?" எனக் கேட்டதற்கு அப்பா சொன்னார்... ‘‘விடுதலைப் புலிடா... வேதாரண்யத்துலேர்ந்து நடந்தே வந்துருக்காரு. குண்டடிச்சு கையெல்லாம் டேமேஜா இருக்கு. பாஸ்கர் பார்த்து விசாரிச்சதும்தான் எல்லாம் சொல்லிருக்காரு. ரெண்டு நாளா சாப்பிடலை போலருக்கு. இப்பதான் கொஞ்சம் தெளிச்சியாகிருக்காரு. சீர்காழி போறாராம்" என்றார்.

அன்று நான் பார்த்ததுதான் ஒரு தொண்டனின் உலரவே உலராத ரத்தம்!

62

# நாற்றத்தின் நறுமணம்!

**நே**ற்று இரவு ‘வாசனை’ என்ற சிறுகதையைப் படித்தேன்.

ஸ்யாம் ராய் எழுதிய வங்காளக் கதை. தன் மனைவியின் வாசனை பற்றி ஒரு கணவன் சொல்லும் கதை. அற்புதம்!

பெண் பார்க்கப் போனபோது முற்றத்தில் குவிந்துகிடந்த மண் உதிரா உருளைக் கிழங்குகளும், புறா எச்சங்களும் தந்த வாசனைதான் அவள் நினைவுகளை எழுப்பிடும் முதல் வாசனை எனத் தொடங்குகிறது, கதை.

கல்யாணமான நொடிகளில் பூச்சரமும் வியர்வையும் கலந்த அவளது அக வாசனையில் இருந்து ஒவ்வொன்றாகச் சுழன்று சுழன்று எழுகிறது. அதிகாலையில் அவள் தரும் வாசனை, சமையலின் ருசி மணம், காமத்தின் அந்தரங்க மணம், புடவை கட்டியபோது, குளித்துவிட்டு வரும்போது, குழந்தை சுமந்தபோது, தாய்ப்பால் சுரந்தபோது, காய்ச்சலில் கிடந்தபோது, வயதானபோது என எல்லா வாசனைகளையும் சொல்லிக்கொண்டே போகிறார். ‘பல நேரங்களில் அவளது வாசனைதான் எனக்கும் இருந்தது’ என்ற வரிகளில்தான் அத்தனை காதலும் இருக்கிறது. கடைசியில் அவள் இறந்து தூக்கிப்போன பிறகு, கூடத்தில் பூக்கள் குவிந்துகிடக்கும். அந்த வாசனை எழுதவே முடியாத வெறுமையின் வாசனை என்கிறார்.

கடைசியில் இப்படி முடிகிறது கதை... ‘வாழ்நாள் முழுதும் எவ்வளவோ வாசனைகளை அவள் தந்தாள். ஆனால், அவளுக்கு

மட்டுமேயான ஒரு பிரத்யேக வாசனை எனக்கு மட்டுமே தெரியும்... எனது கல்லறையில் பூக்கும் ஒரு பூவுக்கு அந்த வாசனை இருக்கக்கூடும்!' இதைப் படித்து முடித்த கணமே நினைவுகளில் ஏதேதோ வாசனைகள் நிரம்புகின்றன.

'ஒவ்வோர் அம்மாவுக்கும் ஒரு வாசனை இருக்கிறது. ஒவ்வொரு அப்பனின் கக்கத்துக்கும்' என்ற தஞ்சை ப்ரகாஷின் வரிகள் புளியம் பூ மாதிரி உதிரத் தொடங்குகிறது. புளியம் பூக்கள் உதிர்ந்த தார்ச் சாலைக்கும், இலுப்பைப் பூக்கள் உதிர்ந்த தார்ச் சாலைக்கும் வெவ்வேறு வாசம். அலுஞ்சி பழங்கள் நசுங்கிய கொல்லை, பனம் பழங்கள் விழுந்த ஒற்றையடிப் பாதை, செம்பருத்திப் பூக்கள் உதிர்ந்த கிணற்றடி, எள்ளுருண்டை காயும் திண்ணை, காளான் பூத்த குப்பை மேடு, துளசி வைத்த அகல் மாடம், கரும்புக் காடு எரியும் மாசி ராத்திரி, பொங்கல் மணக்கும் மார்கழிக் காலை, திரிகள் கருகும் கார்த்திகை கர்ப்பக்கிரகம், புதுத் தண்ணி வரும் ஆடி மணல், கதிர் இறைந்த பத்தாயம், மரிக்கொழுந்து படர்ந்த வேலிப்படல், கோரை மணக்கும் மணியாத்துப் புதர், சாணி மணக்கும் எரு வயல், கோழிப் பீ அப்பிய பஞ்சாரம், புழுக்கை மண்டிய ஆட்டுப்பட்டி, பட்டாசு புகையும் தீபாவளித் தெரு, புதுப் புத்தகம் பிரிக்கும் வகுப்பறை, பெட்ரோல் நெடியேறும் டிரா.்பிக் சாலை, குப்பை லாரி கடக்கும் தெருமுனை, கூவம் கடக்கும் ரயில் பாலம், இஞ்சிமொரப்பா விற்கும் அழுக்குக் கிழவன், முன் இருக்கையில் மல்லிகையோடு உட்கார்ந்திருக்கும் பெண், ரூம் ஃப்ரெஷ்னரும் பெர்ஃப்யூம்களும் மூச்சடைக்கும் விழாக் கூடம், சிகரெட் புகைந்து சாராயம் எரியும் பார் இரவு என வழி எல்லாம் எத்தனை எத்தனை வாசனைகள்!

குழந்தை பிறந்த வீட்டுக்குப் போனால் ஒரு வாசனை இருக்கும் இல்லையா? ஆய்த் துணிகளும் பால் வீச்சமும் பவுடர் வாசமும் நிறைந்துகிடக்கும் வீடு எல்லோரது நினைவிலும் இருக்கிறது. தொட்டிலில் குனிந்து முத்தமிடும்போது எடுத்து வந்துவிடுகிற வாசம். ஒவ்வொருவரின் மூச்சுக் காற்றும் அம்மாவின் வாசத்தில்தான் தொடங்கும். தாய்ப்பாலின் பச்சை வாசனையைப் போன்ற ஓர்

உண்மையைத்தானே நாம் வாழ்க்கை முழுக்கத் தேடிக்கொண்டே திரிகிறோம். மஞ்சள் குழைத்துக் காய்ந்த அம்மாவின் கை வாசனை மூச்சிலேயே கிடக்கிறது. கழுத்து மடிப்பில் கிடக்கும் பாண்ட்ஸ் வாசமும். எங்கேயாவது சாப்பிடும்போது, ‘இது அம்மா வைக்கிற கொழம்பு மாதிரி இருக்கு... சாந்தி சித்தி வைக்கிற கொழம்பு மாதிரி இருக்கு’ என வாசம் பிடித்துவிட்டால், எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது?



தனிமையில் இருக்கும் ஞாயிற்றுக் கிழமைகளில், கீழ் வீட்டில் இருந்து வரும் மீன் குழம்பு வாசனை எத்தனை நினைவுகளைக் கிளறிவிடுகிறது?



அப்பாவைப் பற்றி நினைக்கும்போது மருந்து வாசமும் சாராய வீச்சமும்தான் வரும் எனக்குள். ஆஸ்பத்திரியில் வேலை முடித்துவிட்டு வரும்போது அந்த வாசங்களோடுதான் வீட்டுக்குள் நுழைவார். மருந்தும் வியர்வையுமாக ஹேங்கரில் தொங்கும் ஒரு சட்டை. கக்கத்தில் இடுக்கிக்கொண்டு கை பிடித்துவிடும் வாசனை அப்பாவை வரைந்து விடுகிறது இப்போதும்.

கார்த்திகையில் மாலை போடும் 48 நாட்கள் மட்டும் விபூதியும் கற்பூரமுமாக ஒரு வாசத்தில் கிடக்கும் வீடு. சந்தன வாசம் எப்போது வந்தாலும் மீராக்கா ஞாபகம்தான் வருகிறது. சாண்டல் சோப் போட்டுக் குளித்துவிட்டு, வெயில் விழுந்த ஜன்னலோரம் வந்து தலை உலர்த்தும் மீராக்கா. வெத்தலை வாசம் வந்தாலே பத்மநாபன் வாத்தியார்தான். குளித்துவிட்டு வந்தாலும் தனபாலிடம் கரியும் கிரீஸுமாக ஒரு வாசம் நிரந்தரமாகிவிட்ட மாதிரி தோன்றும். புதுச் சட்டை போட்டு வந்தாலும் பிச்சையிடம் வெங்காயமும் பூண்டுமாக சமையலுக்கு நிற்கிற வாசம்தான் வரும்.

குட்டிக்கூரா பவுடரும் மெழுகு அணைந்த வாசமும் ரோஸி சிஸ்டர் விட்டுப்போனவை. அபூர்வமாக இந்தப் பெருநகரத்தில் எலந்தப் பழம்

விற்கும் தள்ளுவண்டியைக் கடக்கும்போது வரும் வாசனை மணிமேகலையை அழைத்து வந்துவிடுகிறது. ஒரு தேன் மிட்டாய் வாசனை பள்ளிக்கூடத்தையும், காபி வாசனை கும்பகோணம் சுந்தரேசனையும், ஒரு கறித்துண்டு வாசனை முபாரக் அலி வீட்டையும், ஃப்ரூட்டி வாசனை கீர்த்தனாவையும் கொண்டுவந்து விடுகிறது.

கீர்த்தனாவோடு வண்டியில் போனபோது உணர்ந்த வாசனைஎல்லாம் காற்றில் அப்படியேதான் இருக்கிறது. சின்ன மழைக்கு வருகிற மண் வாசனை எவ்வளவு செய்துவிடுகிறது? அதுவும் மழையில் ஒவ்வொரு மண்ணுக்கும் ஒவ்வொரு வாசனை. சென்னையில் நான் இருக்கிற தெருவில் மழைபெய்தால் குப்பையும் சாக்கடையுமாகக் கப்படிக்கிறது. ‘‘தஞ்சாவூர்ல ஜன்னலைத் தொறந்தா இப்பிடியா இருக்கும்... தூத்தல்லயே கும்முனு மண் வாசம் அடிக்க ஆரம்பிச்சுரும்ல...’’ என்பான் அண்ணன். மனிதர்களையும் ஊர்களையும் அன்பையும் பிரிவையும் ஒரு வாசனை எப்படி அள்ளியெடுத்துக்கொண்டு வருகிறது?

எல்லா வீடுகளிலும் கொஞ்சம் ஆஸ்பத்திரி வாசமும் கல்யாண வீட்டு வாசமும் எப்போதுமாகத் தங்கிவிடுகிறது. யாரையாவது பார்க்க ஆஸ்பத்திரி போய்விட்டு வந்தால், அந்த வாசம் போகவே சில நாட்கள் ஆகின்றன. கோபால் அண்ணன் உடலை வாங்க மார்ச்சுவரிக்குப் போய் வந்த பிறகு ரொம்ப நாட்களாயிற்று அந்த வாசத்தை உதற. ஏதேதோ சென்ட் அடித்து வந்த புகாரியண்ணன் பாடியோடு விழித்திருந்த இரவின் வாசம் போக எவ்வளவு நாட்களாயிற்று? கல்யாணத்துக்குப் போனால், சந்தனமும் பன்னீரும் காய்ந்த பூக்களுமாக நம்மோடு வீட்டுக்கு வந்துவிடுகிறது ஒரு வாசம். ஒரு வார்த்தை, எழுத்து, இசை எல்லாமும்கூட இப்படிச் செய்துவிடுகிறது.

‘தீப தீபங்கள் ஓயும் நேரம், நீயும் நெய்யாக வந்தாய். இந்தக் கண்ணீரில் சோகம் இல்லை, இன்று ஆனந்தம் தந்தாய்’ யேசுதாஸின் குரலில் இந்த வரிகளைக் கேட்கும்போது எல்லாம் புறங்கையால் கூந்தலை ஒதுக்கிக்கொண்டு, பிராகாரத்தில் விளக்குப் போட்டுக்கொண்டு இருக்கும் மகேஸ்வரியும், மாவிளக்கு வாசமும் வந்துவிடுகிறது.

ஒவ்வொரு வாசமும் நம் நினைவுகளை நூலில் பூக்கள் மாதிரி எடுத்துத் தொடுத்துக்கொண்டே இருக்கின்றன.

‘பெர்ஃப்யூம்’ படத்தில் சாக்கடையும், பன்றிகளும், மீன்களும் நிறைந்துகிடக்கும் ஓர் இடத்தில் அந்த ஹீரோ பிறப்பான். பிறந்தவுடன் அவன் அம்மாவைக் கொன்றுவிடுவார்கள். அப்படி ஓர் இடத்தில் பிறந்தவன், அப்புறம் நுணுக்கமான நுகர்வு சக்தியோடு வெவ்வேறு வாசனைகளைத் தேடித் திரிந்துகொண்டே இருப்பான். அவன் முதலில் கண்டுபிடித்த பெர்ஃப்யூமை கர்ச்சீப்பில் தெளித்து அவன் காற்றில் வீசும்போது மொத்தக் கூட்டமும் மயங்கித் திளைத்துக்கிடக்கும் காட்சி... மறக்கவே முடியாத விஷுவல். இந்த வாழ்க்கையும் பிழைப்பும் தருகிற வாசனைகள்தான் எனக்கு எப்போதும் ஆச்சர்யங்கள்.

நாம் சில நிமிடங்கள்கூட நிற்க முடியாத இடத்தில் பலர் வாழ்க்கை முழுக்க வேலை பார்க்கிறார்கள். நண்பன் ஒருவனைப் பார்க்க அவன் வேலை பார்க்கிற தோல் தொழிற்சாலைக்குப் போயிருந்தேன். ஒரு நிமிஷம் நிற்க முடியவில்லை. ‘‘எப்பிடிறா இங்க வேல பாக்குற?’’ என்றேன். ‘‘மச்சான்... பழகிட்டன்னா பூ மார்க்கெட்ல வேல பாக்குற மாதிரி ஆகிரும்றா...’’ என்றான் சிரித்துக்கொண்டே.

இறைச்சிக் கடையில் பாட்டு பாடிக்கொண்டே வேலை பார்ப்பவர்களை, குவித்து வைத்த மீன்களுக்கு நடுவே நாளெல்லாம் உட்கார்ந்து இருப்பவர்களை, நடு ரோட்டில் சாக்கடைக் குழியில் இருந்து எட்டிப்பார்ப்பவர்களை, மார்ச்சுவரியில் உட்கார்ந்து கதை பேசிக்கொண்டு இருப்பவர்களைப் பார்க்கும்போது எல்லாம் நண்பன் சொன்னதைத்தான் நினைத்துக்கொள்வேன்.

அன்றைக்கு சைதாப்பேட்டை ரயிலடியில் ரமேஷைப் பார்த்தேன். அவர் துப்புரவுத் தொழிலாளி. மனிதக் கழிவுகள் அள்ளும் வேலை பார்க்கிறவர். சாயங்காலங்களில் அவ்வப்போது சைதாப்பேட்டை ரயிலடியில்தான் அவரைப் பார்ப்பேன். எப்போது பார்த்தாலும் சத்தம் போட்டுப் பழைய பாடல்களைப் பாடிக்கொண்டு உட்கார்ந்திருப்பார். அங்கு இருக்கிற பழக்கடையிலோ டி.வி.டி. கடையிலோ உட்கார்ந்து

வம்பு பேசிக்கொண்டு இருப்பார். நான் எழுதிக்கொண்டு இருக்கிற திரைக்கதைக்காக ரயில்வே ஸ்டேஷனில் சிலரைப் பார்க்க உதவிஇருக்கிறார். அன்றைக்கு என்னைப் பார்த்ததும், ‘‘சார்... உங்க பேர மறுக்கா சொல்லுங்க...’’ என்றபடி ஒரு கல்யாணப் பத்திரிகையை எடுத்து பேர் எழுதிக் கொடுத்தார்.

‘‘சார்... பொண்ணுக்குக் கல்யாணம்... இங்க பல்லாவரத்துலதான்... வந்துருங்க’’ என்றார்.

பத்திரிகையை வாங்கிப் பிரித்துப் பார்த்தேன். நாற்புறமும் ரோஜாக்கள் வரைந்துஇருந்தது. கிளம்பும்போது அவரிடம், ‘‘வேலையெல்லாம் எப்பிடிப் போகுது..?’’ என்றேன் வழக்கமாக. அவர் பெரிதாகச் சிரித்துக்கொண்டே சொன்னார், ‘‘நமக்கு என்ன சார்... நல்லா நாறுது!’’

63

# முகங்களுடனான முதல் சந்திப்பு...

**மு** கங்கள்... முகங்கள்... முகங்கள்!

நேற்று தி.நகர் நெரிசலில் எதிரே வந்தவர் வணக்கம் வைத்தார். யார் என்று தெரியவில்லை. மறுபடியும் வணக்கம் வைத்தார். உற்றுப் பார்த்தேன். ‘‘என்ன சார்... யார்னு தெரியலியா? சாயங்காலம்தான் சார் ஆபீஸாண்ட உங்களுக்கு சல்யூட் வெச்சேன். அதுக்குள்ள மறந்துட்டீங்களே சார்...’’ எனச் சிரித்தபோது தான் அவரது முகமே பிடிபட்டது.

விகடன் ஆபீஸ் செக்யூரிட்டி. ஆறேழு மாதங்களாகப் பார்க்கிற முகம்தான். யூனிஃபார்மிலேயே பார்த்துப் பழக்கப்பட்டவர், திடுதிப்பென்று கலர் சட்டையில் வரும்போது அடையாளமே தெரியவில்லை. யூனிஃபார்மைக் கழற்றினால் ஒரு மனிதனின் முகமேவா தொலைந்து போகும்? அதுவரை அந்த யூனிஃபார்ம்தான் அவரது முகமா?

கறுத்த உதடுகளும் டை அடித்த மீசையும் சிரிக்கையில் இடுங்கி வரி விழும் கண்களுமாக மஞ்சள் பூப் போட்ட சட்டையில் எதிர்க் காற்றில் வந்தார். இப்போது அவர் கடந்து போய்விட்டார், ‘அதுக்குள்ள மறந்துட்டீங்களே சார்...’ என்றபடி சிரித்த முகத்தை என்னிடம் கழற்றித் தந்துவிட்டு.



கரகரவென நிறைய முகங்களைக் கிறுக்கத் துவங்குகிறது நினைவு. நிலா டிபன் சென்டர் பரோட்டா மாஸ்டர், பெஸ்ட் ஹாஸ்பிடல் கீதா நர்ஸ், ஹவுஸிங் போர்டு லாண்டரிக் கடை அண்ணன், கைத்தடியும் விசிலுமாக வந்து சில்லறை கேட்கும் கூர்கா, ஒவ்வொரு முறையும் ஜன்னல் தட்டி தீப்பெட்டி கேட்கும் பாரா கான்ஸ்டபிள், கிரே கலர் தொப்பியில் பேப்பர் போட வரும் செபாஸ்டின், காக்கிச் சட்டையில் ஃப்யூஸ் போட வரும் ரவி, ‘இன்னிக்கு எந்த ஆபீஸ் சார்?’ எனப் பார்த்ததும் காக்கிச் சட்டையைப் போட்டுக்கொள்கிற தெருமுனை ஆட்டோக்காரர், ‘சமந்தா நம்பர் கேட்ருந்தேன்ல சார்...’ எனப் பளிச்சென்று வந்து நிற்கிற சரவண பவன் சப்ளையர் ராம்குமார்... இவர்களை எல்லாம்கூட எங்கேயாவது கலர் டிரெஸ்ஸில் பார்த்தால் அடையாளம் தெரியாமல்தான் நிற்பேன். அவரவர்க்கு அவர்களது இடத்தையும் வேலையையுமே முகங்களாக்கி வைத்திருக்கிறோமோ?

வேலையில் பார்க்கும்போதும் சாலையில் பார்க்கும்போதும் எல்லோர்க்கும் வெவ்வேறு முகங்கள்தான் எப்போதும்.

**நா**லைந்து வருடங்களுக்கு முன்பு ஊருக்குப் போவதற்காக பஸ் ஏற கோயம்பேட்டில் நின்றேன். அது வெள்ளிக்கிழமை என்பதால் கூட்டம் எகிறி அடித்தது. வம்பாடுபட்டு ஓர் அரசுப் பேருந்தில் இடம் பிடித்தேன். பஸ் கிளம்பிய பிறகுதான் கவனித்தேன். எனக்குப் பக்கத்து சீட்டில் ஒருவர் ஃபுல் மப்பில் உட்கார்ந்திருந்தார். நாப்பது ப்ளஸ் வயசிருக்கும். போதையில் தலை தொங்கியபடி ஏதேதோ அரற்றிக்கொண்டு இருந்தார். 'நமக்குனு வந்து சிக்குறாய்ங்களே...' என டென்ஷனாக இருந்தது.

வண்டி, சென்னையைத் தாண்டும்போதே அவரது அட்ராஸிட்டி கிறுகிறுக்க ஆரம்பித்தது. ஹை டெசிபலில் பினாத்திக்கொண்டு, மொத்த பஸ்ஸின் தூக்கத்தையும் கெடுக்க ஆரம்பித்தார். 'இல்லடி... இன்னிக்கு ஒரு முடிவு எடுத்துருவோம்டி... இப்பப் பேசு... இப்பப் பேசு... இப்பப் பேசு' என்கிற மாதிரி வார்த்தைகளையே மாறி மாறிக் கத்தியபடி ரவுசு கட்டினார். 'ஏய்... பேசாம வாப்பா...' என ஆரம்பித்து, ஒரு கட்டத்தில் மொத்த பஸ்ஸும் கொந்தளிக்க ஆரம்பித்தது. அவர் கேட்கிற மாதிரியே இல்லை.

வழியில் இரவு உணவுக்காக ஒரு மோட்டலில் நின்றது பஸ். எல்லோரும் முணுமுணுத்தபடி இறங்க, அவர் தள்ளாடியபடியே இறங்கினார். கொஞ்ச நேரத்தில் வண்டி கிளம்பியது. அவரைக் காணோம். அதற்குள் வண்டி வேகம் எடுத்துக் கிளம்பிவிட்டது. மற்றவர்கள் கிசுகிசுவெனப் பேசிக்கொண்டார்கள். ''ஏங்க... என் பக்கத்து ஸீட்காரரு இன்னும் வரலீங்க...'' எனக் கத்தினேன். கண்டக்டர் உள்ளே வந்தார். என் காதில் மெதுவாக, ''தம்பி... யூரின் போற எடத்துல அந்தாளு அப்பிடியே மட்டையாகி விழுந்துட்டாப்ல... மண்டைலாம் ரத்தம்... தூக்கி ஓரமாப் படுக்கவெச்சுட்டாங்க... என்னாச்சுனு தெரியல... டிரைவரு வண்டிய எடுத்துட்டாப்ல...'' என்றார். இன்னொருவர், ''கண்டிஷனப் பாத்தா போய்கூடச் சேந்துருப்பாரு... வந்து சேர்றாய்ங்க பாரு...'' என்றார். எனக்குத் திடுக்கென்றது. யார்..? என்ன..? அங்கே என்னாவார் அந்த மனுஷன்..? எனத் திகிலாக இருந்தது.

காலையில் கும்பகோணத்தில் இறங்கும்போது சீட்டுக்குக் கீழே குனிந்து செருப்பைத் தேடினேன். ஒரு பர்ஸ் கிடந்தது. எடுத்துப் பார்த்தேன். அதில் நைந்த இருபது ரூபாய் நோட்டும், பாஸ்போர்ட் சைஸ் போட்டோ ஒன்றும் இருந்தன. கறுப்பு — வெள்ளையில் சுடிதாரில் ஒரு பெண் புன்னகைக்கும் போட்டோ. அதைப் பார்த்தஉடனே மனம் சொல்ல முடியாத துயரத்துக்குப் போனது. என்ன செய்வது என்றே தெரியவில்லை.

*'திருடப்பட்ட பர்ஸில்*
*புன்னகைப்பது யார்?*
*அவனது*
*மனைவியா... அம்மாவா?'* என எங்கோ படித்த கவிதை நினைவில் சுருண்டது.

*'பிரித்துப் பிரித்து நிதம் மேகம் அளந்தே*
*பெற்றதுன் முகமன்றிப் பிறிதொன்றில்லை'*

என்ற பாரதியின் வரிகள் சுடு வெயிலானது. அந்த பர்ஸை அங்கு இருக்கும் போக்குவரத்துத் துறை பூத்தில் கொடுத்துவிட்டு வந்தேன். அந்தப் புகைப்படத்தில் இருந்த பெண்ணின் முகம் அப்படியே மனதில் படிந்துவிட்டது. குடித்துப் புலம்பி வழியில் காயம்பட்டுக்கிடக்கும் ஒருவனது நேசத்துக்குரிய முகம். அந்த முகத்தைக் காணத்தான் அவன் இந்தப் பயணமே வந்தானா? அவனது சந்தோஷத்துக்கும் துன்பத்துக்கும் அந்த முகமே காரணமாக இருக்கக்கூடுமா? கோடிக் கோடி முகங்களிலும் எல்லோருக்கும் சுமந்து திரிய ஒரு முகம் இருக்கிறது. இன்பமும் துன்பமும், அன்பும் வெறுப்பும், மழையும் வெயிலுமாக மாறி மாறி அடக்கவிடாமல் சுமந்து திரிய ஒரு முகம். ஆற்றில் கிடக்கும் சூரிய பிம்பம்போல் கலைந்து கலைந்து ஒளியாகி ஊடுருவும் ஒரு முகம். உயிர் விலகும் நொடியில் இதயத்தில் உறையும் ஒரு முகம்... எல்லோரிடமும் இருக்கிறது.

*‘பள்ளிக்குத் திரும்புகையில்*
*ஆசிரியர்கள் அவர்களை அதிசயிக்கிறார்கள்*
*அடையாளம் தெரியாமல்!*
*ஆசிரியர்களை அவர்கள் அதிசயிக்கிறார்கள்*
*அடையாளம் தெரிந்து!’* என்ற தேவதச்சனின் கவிதை, மறுக்க முடியாத ஒரு புகைப்படம்போல அசைகிறது.

**எ** னது பள்ளியில் எடுக்கப்பட்ட ஒரு குரூப் போட்டோவை எடுத்துப் பார்க்கிறேன். 7—ம் வகுப்பில் எடுக்கப்பட்டது. தேவாலயத்தின் படிக்கட்டுகளில் வலது ஓரம் 4—வது வரிசையில் விழித்தபடி நிற்கிற முகம் நானா? தரையில் ரெட்டை ஜடையோடு உர்ரென்று இருப்பது சோலையம்மா முகம். ரோஸி சிஸ்டரை நெருக்கியபடி சிரிக்கிற முகம் விட்டல். எண்ணெய் வழிய குரோட்டன்ஸ் செடிக்குப் பக்கத்தில் இருப்பது குளோரி. எந்த முகமும் இப்போது நான் பார்க்கிற தொலைவில் இல்லை. இப்போது எந்த முகமும் இப்படி இருக்கப்போவதும் இல்லை. புகைப்படங்கள் வைத்திருக்கும் இந்த முகங்கள்... ஏழு கடல், ஏழு மலை தாண்டி நாம் தொலைத்துவிட்ட முகங்கள். உங்கள் அம்மாஅப்பாவின் கல்யாண போட்டோவைப் பார்த்து இருக்கிறீர்களா? அதில் இருக்கும் அம்மாவின் முகம் இப்போதும் அம்மாவிடம் இருக்கிறதா? பறவைகள் பறக்கும் பின்புலத்தில், பூ ஜாடிகள் வைக்கப்பட்ட ஸ்டூடியோவில் எடுக்கப்பட்ட எனது அம்மா — அப்பாவின் முகங்களில் மீட்க முடியாத புன்னகையும் வெட்கமும் உறைந்திருக்கிறது.

சரவணன் அண்ணனின் கல்யாண ஆல்பத்தைப் புரட்டும்போது ஆச்சர்யமாக இருக்கிறது. 10 வருடங்களில் பல முகங்கள் எப்படி மாறிவிட்டன? முகம் என்பது புறம் மட்டும்தானா? அகமும்தான் இல்லையா? நண்பனின் கல்யாண ஆல்பத்தைப் புரட்டி, ஒரு போட்டோவைப் பார்த்தபோது பகீரென்றது. அந்த போட்டோவில் சிரித்தபடி

கூடி நிற்கிற முகங்களில் யாருமே இப்போது நண்பர்களாகக்கூட இல்லை. அந்த நண்பனும் அவன் மனைவியும் உட்பட!

எத்தனையோ மொபைல் கேமராக்கள் வந்துவிட்ட பிறகும் புகைப்படங்கள் தருகிற பரவசமும் கூச்சமும் போகவே இல்லை. 10–வது பரீட்சைக்காக கொரடாச்சேரி மணி ஸ்டுடியோவில் வெட்கமும் வேர்வையும் வழிய நின்றதைப் போலத்தான் இப்பவும் இருக்கிறது. இப்போதும் போட்டோ எடுக்கும்போது முகத்தை எப்படி வைத்துக்கொள்வது..? கைகளை எங்கே வைத்துக்கொள்வது எனத் திணறலாகிறது.



‘சிலுவைப் போர்’ பற்றிய ரூஸ்காவின் ஓவியம் ஒன்றில், துண்டிக்கக் காத்திருக்கும் கில்லட்டில் தலை வைத்தபடி நிற்கிற ஒருவனது முகம் நினைவில் பயங்கரமாக இருக்கிறது. நாஜிப் படைகளின் வதை முகாமுக்குப் போக வரிசையில் நிற்கும் யூதர்களில் மிரண்டு விழிக்கும் ஒரு பெண்ணின் முகம், கோத்ரா ரயில் எரிப்புக் கலவரத்தில் கண்கள் கலங்கி கை கூப்பிக் கெஞ்சும் ஓர் இஸ்லாமியரின் முகம், ஈழப் போரில் கண்கள் உறைந்து சிதைந்துகிடந்த இசைப் பிரியாவின் முகம், குண்டு துளைத்திருந்த சார்லஸ் ஆண்டனியின் முகம், முள் வேலி முகாமில் ஒரு கை இல்லாமல் இன்னொரு கையில் தட்டுடன் நிற்கிற ஒரு சிறுவனின் முகம், ஈராக்கில் பர்தா விலக்கி புகை அடர்ந்த தெருவைப்

பார்க்கும் ஒரு பெண்ணின் முகம், சூடானில் பள்ளிக்கூடம் எதிரே போதைப் பொருள் விற்கும் ஒரு சிறுவனின் முகம், தண்டகாரண்யா காட்டில் துப்பாக்கியோடு பேசும் ஒரு முகம்... எல்லா முகங்களும் மனதில் குவிந்துகிடக்கின்றன... மாறி மாறி மேலெழும்பியபடி.

திருவிழாக் கடைத் தெருவில் முதல் ஆளாக வந்து படுதா விரித்து, 10 ரூபாய் சாமான்களைக் குவித்துவைத்து துடைப்பவன் மாதிரி இந்த மனம் தினமும் ஏராளமான முகங்களைத் துடைத்துத் துடைத்துப் பார்க்கிறது.

போன வாரம் சேரன் எக்ஸ்பிரஸில் மேல் பெர்த்தை தட்டி, ''தம்பி கோய்ம்புத்தூர்தானுங்கெளே...'' என்று கேட்டவரின் முகம் தெளிவாக ஞாபகத்தில் இருக்கிறது. அஞ்சு வருஷம் சொல்லிக்கொடுத்த பத்மா டீச்சரின் முகம் நினைவில் பனி மூட்டமாகவே இருக்கிறது. ''இப்படியே போனா பழந்தின்னி வவ்வாக் கொக வரும்... இந்தப் பாலத்துல ஏறி மேக்கால போங்க...'' — முண்டாசு கட்டிக்கொண்டு குன்னூர் மலை மேல் வழி சொன்ன ஒரு முதியவர் முகம் கோட்டோவியம் மாதிரி தங்கிவிட்டது. கீர்த்தனாவின் முகத்தை நினைத்துப் பார்த்தால் சலனச் சித்திரமாகவே இருக்கிறது பல நேரங்களில். ஓர் இசையோ, சுடரோ, பேச்சோதான் அந்த முகமாக வருகிறது. இசை, ஓவியம், எழுத்துக்கும்கூட முகம் இருக்கிறதுதானே!

**அ** ரை இருட்டில் எட்டு கைகளும் நாக்குதள்ளி கண்கள் உருண்டு, ஒரு முகமுமாக இருந்த மாகாளியைப் பார்த்தபோது முதலில் பயமாகவும் பின்பு பேரன்பாகவும் இருந்தது. அச்சத்தை அடித்து நொறுக்கிய பெண்மையும் பெருமுகமுமாக மிளிர்ந்தது. கொல்லிமலையில் சிதிலம் அடைந்த ஒரு கோயிலில் கைகள் உடைந்துகிடந்த துர்க்கை அம்மனின் முகத்தில் மாகாளியின் சாயல் தெரிந்தது. இவளின் முகத்தில் அன்பு வேறுவிதமாக ஒளிர்ந்தது. அவரவரின் இதயத்தின் ஜீவன் ஒளி — விளக்கு. அவ்வளவுதான். புன்னகையும் அழுகையும்தான் முகம்.

ஒவ்வொரு குரலுக்கும் நாம் நினைத்த முகம் வேறு. கிடைத்த முகம் வேறுதானே..? ஓவியர் ம.செ. சார் வீட்டுக்குப் போனபோது அவர் வரைந்த ஒரு சிவன் ஓவியம் பார்த்தேன். அந்தச் சிவனுக்கு முகமும் இல்லை. வரையாத முகம்தான் எவ்வளவு அழகு... எவ்வளவு அர்த்தம். அப்புறம் அழகு என்பது முகமா என்ன? காதலிக்கும் பெண்ணின் முகத்தில் ஆசிட் அடித்துச் சிதைக்கும் செய்திகள் எவ்வளவு குரூரமானவை? அழகு என்பது, இதயத்தின் ஒளி அல்லவா... நாலு தலைமுறை ஆக்கிப் போட்டு உயிர்கள் வளர்த்த அப்பத்தாவின் முதிர்ந்த உள்ளங்கைச் சுருக்கங்களைவிட அழகு ஒரு முகத்துக்கு வந்துவிட முடியுமா?

ஓவியர் மருது சார் கொடுத்த கோட்டோவியத்தில் இருந்தவனுக்கு அவ்வளவு பரிச்சயமான முகம். பறவைக் கூடு மாதிரி முகம். ''என்ன சார்... வெயில் ஜாஸ்தியா இருக்குல்ல...'' என்றபடி ஒரு கிளாஸ் மோரை நீட்டுகிற முகம். கூடத்தில் உட்கார்ந்து பேசிவிட்டு சற்று முன்தான் சட்டத்தில் போய் உட்கார்ந்துகொண்ட ஒரு முகம். வான்காவின் ஓவிய முகங்களில் எப்போதும் இருக்கிற காதலின் ஆதித் துயரம் அறை முழுவதும் வழிகிறது.

வீட்டுச் சட்டங்களில் வரிசையாக சின்னதும் பெரிதுமாக மாட்டப்பட்டு இருக்கும் படங்கள்... அதன் முகங்கள்... ஒன்று தோன்றியது... இடுப்பைத் தாண்டி ஆடும் வாழை மட்டை சடை கட்டி, கண்ணாடியில் பிம்பம் காட்டிச் சிரிக்கும் நம் அக்கா தங்கச்சிகளின் புகைப்படங்கள். எல்லா வீடுகளிலும் எங்கோ கிடக்கின்றன. கனவுகள் உதிர்ந்த கண்களோடும் தன் பிள்ளைகளோடும் எப்போதாவது பிறந்த வீட்டுக்கு வரும் அக்கா தங்கச்சிகள் அந்தப் புகைப்படங்களைத் தடவிப் பார்க்கின்றனர்... தனியே சிரிக்கின்றனர்.... ஏனோ அழுகின்றனர்!

64

# வாகனப் பிரவேசம்!

"**போ**ய்யா போ... நமக்கெல்லாம் காலுதான் காரு!'' — இப்படிச் சொல்லிவிட்டு விடுவிடுவெனப் போய்விட்டார் அந்த முதியவர். தேய்ந்த செருப்பில் வெடித்து மண் உதிரும் பாதங்களைப் பார்த்தபடி அப்படியே கொஞ்ச நேரம் நின்றுவிட்டேன்.

அவர் எங்கள் குடியிருப்பின் வாட்ச்மேன். மதுரைப் பக்கம் ஏதோ ஒரு கிராமத்துக்காரர். பிள்ளைகள் எல்லோரும் கைவிட, இந்த வயதில் மனைவியை அழைத்துக்கொண்டு சென்னைக்கு வந்துவிட்டார். இவர் வாட்ச்மேனாக வேலை பார்க்க, அந்தம்மா ஏதோ ஒரு ஆபீஸில் பினாயில் போடுகிற வேலை பார்க்கிறது. தாம்பரம் தாண்டி எங்கோ ஒரு வீடு எடுத்து இருக்கிறார்கள். சாயங்காலத்துக்கு மேல் இரண்டு பேரும் சேர்ந்து பஸ் பிடித்து, நகரத்தைத் தாண்டிப் போகிறார்கள்.

அன்றைக்கு அவர் கிளம்பிக்கொண்டு இருந்தபோதுதான் நான் காரில் வந்தேன். அவரைப் பார்த்ததும் ''என்ன தாத்தா கௌம்பியாச்சா... ஏறுங்க நான் ரோட்ல ட்ராப் பண்றேன்...'' என்றேன் சாதாரணமாக. ஒரு கணம் உற்றுப் பார்த்தவர், ''இன்னிக்கு நீ விட்ருவ... நாளைக்கும் நீயா வருவ...'' என்றார் படபடவென. சட்டென்று காரில் ஒரு தட்டு தட்டிவிட்டு, ''போய்யா போ... நமக்கெல்லாம் காலுதான் காரு...'' என வேகமாக நடக்கத் தொடங்கிவிட்டார். வார்த்தைகள்கூட இல்லை... அந்தப் பாதங்கள் என்னை என்னவோ செய்துவிட்டன.

மறு நாள் சாப்பாட்டு நேரத்தில் அவரைப் பார்த்தேன். ‘‘என்னங்க நேத்து நீங்க பாட்டுக்கு அப்பிடிச் சொல்லிட்டுப் போயிட்டீங்க..?’’ என்றதும், ‘‘மன்னிச்சுக்க தம்பி... நம்ம வாழ்க்கைல வாகன பாக்கியம் இல்லப்பா...’’ என்றபடி சிரித்தார். ‘‘நாப்பது வயசு வரைக்கும் எல்லாம் கால்நடைதான்... இந்தக் காலுங்க எம்புட்டு நடந்துருக்கும்கிறீங்க..? கொள்ளத் தூரம். நாப்பது வயசுக்கு அப்புறம்தான் ஒரு சைக்கிள் வாங்குனேன் தம்பி. நீங்க நம்பமாட்டீங்க... 30 வருஷமா புத்தம் புதுசா ஓட்டிட்டு இருந்தேன் தம்பி. குடும்பத்துல ஒரு ஆளு மாரி... போன வருஷம் ஒரு தகராறுல மூத்தவன் அதப் போட்டு ஒடச்சுப் புட்டான். அப்பிடியும் கொண்டுபோயி ரிப்பேர் பண்ணிக் கொண்டாந்துட்டேன். அடிச்சோம் பிடிச்சோம்னு இங்கிட்டுக் கெளம்பி வரும்போது அதத் தூக்கிட்டு வர முடியல.... அங்ஙனயே போட்டுட்டு வந்துட்டேன். இப்பமும் கிணிங்... கிணிங்னு பெல் சத்தம் கேட்டாத் தூக்கிவாரிப் போடுது. ஐப்பசி முடிஞ்சதும் போய் பயலத் தூக்கியாந்துரணும்...’’ என்றபோது அவரது கண்களில் அவ்வளவு ஆசை.

விதவிதமாக, ரகரகமாக இவ்வளவு கார்கள் ஓடும் இந்தப் பெருநகரத்தில், இன்னமும் நினைவில் ஒரு சைக்கிளைச் சுமந்துகொண்டு இருக்கும் ஒரு முதியவரைப் பார்க்க எப்படியோ இருக்கிறது. யோசித்துப் பார்த்தால், எண்பதுகள் வரை பிறந்த எல்லோரது ஞாபகத்திலும் கை, கால், முகம் முளைத்த ஒரு சைக்கிள் உட்கார்ந்திருக்கிறது.

**பா** ஸ்கர அண்ணன், ஹெர்குலிஸ் சைக்கிள் வைத்திருந்தார். அதே ஹெர்குலிஸ் லேடீஸ் சைக்கிள் வைத்து இருந்தது சுனிதாக்கா. குடவாசல் டைப்ரைட்டிங் வகுப்பு வாசலில் இரண்டு சைக்கிள்களும் ஒட்டிக்கொண்டு கிடப்பதைப் பார்த்திருக்கிறேன். அவை வெறும் சைக்கிள்கள் அல்ல... பாஸ்கர அண்ணன் சைக்கிளை அப்படிப் பராமரிப்பார். உலகத்திலேயே அவருக்குப் பிரியமான இரண்டாவது விஷயம் அந்த சைக்கிள்தான். (முதல் விஷயம் சுனிதாக்கா என்பது அப்போது எனக்குத் தெரியாது!) காலையில் எழுந்ததும் அரை மணி நேரத்துக்கும் மேல் அந்த சைக்கிளை எண்ணெய் போட்டுத் துடைத்து

எழும்போதுதான் அவரது நாள் துலங்கும். கிழித்த கைலித் துணியை ரிம், மட்கார்ட் உள்ளே எல்லாம் விட்டு கிரிச்... கிரிச் எனத் துடைப்பதைப் பார்த்து, எதிர் திண்ணை தாத்தாவே டென்ஷன் ஆவார். திடீரென ஹேண்ட்பாரில் கலர் குஞ்சங்கள் கட்டிக்கொண்டு கலவரமாகப் பறப்பார். மட்கார்டில் மாசத்துக்கு ஒரு கலரில் எழுதுவார்.



எம்.பாஸ், சூப்பர்மேன், மும்மதச் சின்னங்கள், ஆட்டின் என ஸ்டிக்கர்கள் வாங்கி ஒட்டுவதே தனி வேலை. முன்னால் டைனமோ லைட் வைத்து, கரன்ட் போகும்போது நிறுத்திவைத்த சைக்கிளில் கரகரவென பெடல் போட்டுத் தெருவுக்கே வெளிச்சம் காட்டுவார். அது அவர் வசிக்கும் கிழக்குத் தெரு இல்லாமல் சுனிதாக்காவின் தெற்குத் தெரு என்பதுதான் விசேஷம்.

''ஏண்டா, எப்போ பாத்தாலும் இந்த சைக்கிளைக் கட்டிக்கிட்டே மாரடிக்கிற... வந்தன்னா மோரையப் பேத்துப்புடுவேன் பாத்துக்க... வந்து வெக்க அள்ளிப் போடு. கம்னாட்டி...'' என அத்தை கிடந்து கதறுகிற அளவுக்கு இருக்கும் பாஸ்கர அண்ணனின் சைக்கிள் அட்ராஸிட்டி. காலையில் ஏழு மணிக்குப் பார்த்தால் ரோட்டில் ஸ்கூல் யூனிஃபார்மில் சுனிதாக்கா சைக்கிளில் போகும். பத்தடி பின்னால் காலேஜுக்கு பாஸ்கர அண்ணன் போவார். அம்மையப்பன் வரைக்கும்தான் இந்தப்

பத்தடி. அப்புறம் சோடி போட்டுக்கொண்டுபோகும் சைக்கிள்கள். அவ்வப்போது ராக்க பெருமாக் கோயில், எண்கண் பஸ் ஸ்டாண்ட், கமலாலயம் குளக்கரை என இரண்டு பேரும் பேசிக்கொண்டு நிற்பதைப் பார்த்திருக்கிறேன். அண்ணனின் சைக்கிள் கேரியரில் இரண்டு பக்கமும் கால்களைப் போட்டு உட்கார்ந்தபடி பேசிக்கொண்டு இருக்கும் சுனிதாக்கா. அது ஏதோ அந்த சைக்கிளை லவ் பண்ணுகிற மாதிரியே இருக்கும். தைலம்மை தியேட்டர் பக்கம் அண்ணனுடைய சைக்கிளில் முன்னால் சுனிதாக்கா உட்கார்ந்தபடி வந்ததைப் பார்த்தேன்.

ஒரு நாள் சுனிதாக்கா திருச்சிக்கு வாக்கப்பட்டுப் போனது. வீட்டுக்கு முன்னால் நின்ற அரபாடி வேனில் சீர் செனத்தி, பண்ட பாத்திரம் எல்லாம் நின்றது. ''எல்லாத்தையும் ஏத்தியாச்சா?'' என்றார் பெரிய மாமா. மாப்பிள்ளையோடு நின்ற சுனிதாக்கா, திண்ணையில் கிடந்த சைக்கிளைப் பார்த்தது. அதைப் பார்த்துவிட்ட பெரிய மாமா, ''என்னாத்த பாக்குற... அத அருளு பய ஓட்டிக்கட்டும்... அங்க ஒனக்கெதுக்கு சைக்கிளு. மாப்ளதான் பைக்கு வெச்சுருக்காப்லய்ல... பதவுசா ஒன்ன ஏத்தி எறக்கிருவாப்ல... என்னா கம்னாட்டி...'' எனச் சிரித்ததும் வண்டி கிளம்பிவிட்டது. அதன் பிறகு, பாஸ்கர அண்ணனின் சைக்கிள் துடைக்கப்படாமல் துருப்பிடித்து க்க்க்ர்ர்ரீச்... க்க்ர்ர்ரீச் என அழுதபடி சாலைகளில் சுற்றியது. பெரும்பாலும் அவர் சைக்கிளையே எடுப்பது இல்லை. அயன் பண்ணாத சட்டையோடு பஸ்ஸில் போக ஆரம்பித்தார். மன்னார்குடியில் பெண்ணெடுத்த பிறகு, சீதனமாக வந்த டி.வி.எஸ்—50—ல் பொண்டாட்டியோடு போனபோதுதான் பாஸ்கர அண்ணன் பழைய மாதிரி சிரித்தார். அந்த இரண்டு ஹெர்குலிஸ்களும் அப்புறம் எங்கே போயின... என்ன ஆகின?

**ஏ** ழாவது படிக்கும்போது உண்ணாவிரதம் இருந்து அப்பாவிடம் வாங்கிய கறுப்பு நிற பி.எஸ்.ஏ. எஸ்ஸெல்லார் இப்போது எங்கே போனதென்றே தெரியவில்லை. ஆத்தங்கரையில் குரங்குப் பெடல் கற்று அடிபட்ட தழும்புகள் எல்லோரிடமும் இருக்கின்றன, மனதுக்குப் பிடித்த, மறக்க முடியாத ஒரு பாடலைப்போல.

முதன்முதலில் நாங்கள் மோட்டார் சைக்கிளைப் பார்த்தது நன்னிலம் நடராஜன் தாத்தாவிடம்தான். காட்டெருமை மாதிரி கனத்த என்.ஃபீல்ட். அதுதான் தாத்தாவின் அடையாளம். 'டபுடபுடபு'வென புல்லட் சத்தத்தில் தெருவே தெறிக்கும். அந்த புல்லட்டைப் பார்த்தால் எங்களுக்குச் சொல்ல முடியாத பரவசமாக இருக்கும். பின்னாலேயே கொஞ்ச தூரம் ஓடிவிட்டு வருவோம். வீட்டுக்கு வெளியே போட்டுவிட்டு அவர் உள்ளே போனதும் ஓடிப்போய் அதில் ஏறி விளையாடுவோம். ''போங்கடா... போங்கடா... ராஸ்கோலுங்களா...'' எனத் துண்டாலேயே விசுறுவார் தாத்தா.

பளபளவெனச் சிவப்பு கலரில் எம்.டி.சாதிக், ஹீரோ ஹோண்டா வாங்கி வந்தபோது ஆச்சர்யமாக இருந்தது. அதற்கு முன்பு சினிமாவில் மட்டுமே பார்த்த பைக் அது. கெஞ்சிக் கூத்தாடி பின்னால் உட்கார்ந்துபோவதே அவ்வளவு பரவசம்.

சைக்கிளைக் கடாசிவிட்டு அப்பா டி.வி.எஸ்—50 வாங்கிய நாளில், அதைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துச் சந்தோஷப்பட்டது இப்போதும் நினைவில் இருக்கிறது. அதைத் தொட்டாலே அப்பா டென்ஷனாகிவிடுவார். அவர் தூங்கிவிட்ட மதியங்களில் மெதுவாகத் திண்ணையைவிட்டு இறக்கி, கொண்டுபோய் ரெண்டு ரவுண்டு அடித்துவிட்டு வந்து வைத்துவிடுவோம். ''வண்டின்னா, ஒன் ஹாண்ட்ல இருக்கணும்றா...'' என்பார் சிவராஜ் சித்தப்பா. அப்புறம் நாங்கள் தலையெடுத்த பிறகு, அந்த வண்டியைப் பலப் பல ஹாண்டுகள் அடித்துத் துவைத்து, காயலாங்கடையில் போட்டோம். அண்ணன்களின் கல்யாணங்களில் மண்டப வாசலில் மாலை போட்டு ஒரு பைக் நிற்கிற போட்டோ ஆல்பங்களில் இருக்கிறது.

ஊரில் கல்யாணப் பேச்சு எடுத்ததுமே, ''மாப்ளைக்கு ஒரு பைக்கு வாங்கித் தந்துருங்க...'' என்பதுதான் முதல் பேச்சு. கல்யாணமாகி முதல்முறையாக அந்த பைக்கில் மாமியார் வீட்டுக்குப் போய்விட்டு தம்பதிகள் வந்து இறங்கும்போது, அவர்கள் முகங்களைப் பார்க்க வேண்டுமே... அடடா! இப்போது ஊரில் பெரும்பாலும் பைக் இல்லாத

வீடுகளே இல்லை. வேலையைப் பொறுத்து, ‘‘மாப்ளைக்கு ஒரு கார் வாங்கித் தந்துருங்க...’’ எனப் பேச ஆரம்பித்து இருக்கிறார்கள்.



நான் முதன்முதலில் கார் பார்த்தது இலாஹி வீட்டில்தான். வெள்ளை கலர் அம்பாஸடர். அப்புறம் குமரகுரு மாமா வீட்டில் சென்னையில் இருந்து வந்து நிறுத்திக்கிடந்த ஃபியட். அஸ்கானோ டையில் நாட்டாரத்த வீட்டில் சிவப்பு கலரில் டாப்பே இல்லாமல் கப்பல் கணக்காக ஒரு கார் நின்றுகொண்டு இருந்தது. ‘‘சிவாஜி வூட்லேருந்து வந்துருக்காங்க... எப்புடி இருக்கு பாத்தியா காரு... சினிமா காரு. அந்த டிரைவர ஆரன் அடிக்கச் சொல்லிக் கேக்குறோம். அடிக்க மாட்றான்... பொரி உருண்ட வாங்கித் தருவமா..?’’ என்றான் சுந்தர். கறுப்பும் மஞ்சளுமாக ஒரு கார் வந்தபோது, ‘‘ ‘படிக்காதவன்’ல ரஜினி ஓட்ன

கார்றா...'' என்றான் செந்தில். அப்போது எல்லாம் கறுப்புவெள்ளை கலர் அம்பாஸடர்கள் மட்டும்தான் கார்கள். மாருதி காரை முதன்முதலில் பார்த்தபோது, ''ஐ... சோப்பு டப்பா கார்றா...'' என ஆச்சர்யமாக இருந்தது. இப்போது மொபைல் போன்கள் மாதிரி கலர் கலராக ஏதேதோ மாடல்களில் கார்கள் குவிந்துவிட்டன.

**ஒ** ரு நாள் என் நண்பன் ஒருவன், புது காரில் வந்து இறங்கினான். போன வருஷம் பார்த்தபோதுகூட பழைய கைனடிக்கில் சுற்றிக்கொண்டு இருந்தான். இப்போது வந்து இறங்கி ஒரு ரிமோட்டை அழுத்தினான். கார் இரண்டு பக்கமும் றெக்கை விரித்தது. ''மச்சான்... ட்வென்டி சிக்ஸ் லேக்ஸ்தான்... எப்பிடி இருக்கு?'' என்றவன் போகும்போது, ''டேய்... கார் வாங்குறது எல்லாம் இப்போ காய்கறி வாங்குற மாதிரி... ஃபிஃப்டி தௌசண்ட் ரெடி பண்ணு... ஒண்ணு வாங்கிரலாம்...'' எனப் போட்டுவிட்டுப் போனான். நேற்று போன் பண்ணி, ''தம்பி... செக்ரெட்டரியேட்ல யாராவது தெரியுமா? புது காருக்கு ஒரு ஃபேன்ஸி நம்பர் வாங்கணும்... அது ராசியான நம்பரு...'' எனக் கேட்டது பாஸ்கர அண்ணன்!

**எ** ல்லோருக்கும் ஏதாவது ஒரு பஸ் நம்பர் முக்கியமாக இருக்கிறது. எனக்கு 45—ம் நம்பர் பஸ். எத்தனை எத்தனை காதல்களை, நட்புகளை, உறவுகளைப் பேருந்துகள் தந்திருக்கின்றன. சேகரும் மேரியும் 'அரண்மனைக் கிளி' பஸ்ஸில்தான் காதல் வளர்த்தார்கள். அதே பஸ்ஸில்தான் அவளைச் சீமந்தத்துக்கு அழைத்துப் போனவனைப் பார்த்தேன். ஒரு நாள், அந்த பஸ் விபத்துக்கு உள்ளானபோது ஏழெட்டுப் பேர் பலியானார்கள். சேகருக்குக் கால் முறிந்து சில மாதங்கள் வீட்டிலேயே கிடந்தான். அவனைப் பார்க்கப் போனபோது சொன்னான், ''நமக்கு இப்பிடி ஆகிப்போச்சு... ப்ச்... அந்த பஸ்ஸும் சுத்தமா செதஞ்சுபோச்சுறா... திரும்பவும் அதைப் பாக்கவே முடியாதுல்ல!'' ஏதேதோ வாசங்களோடும், பாடல்களோடும், பார்வைகளோடும், வியர்வைகளோடும், பேச்சுக்களோடும், பிரியங்களோடும், சண்டைகளோடும் எல்லோருக்கு உள்ளும் ஒரு பேருந்து இருக்கிறது.

**செ** ன்னையில் மீட்டர் கேஜில் இருந்து பிராட் கேஜுக்குச் சில தடங்கள் மாறியபோது, 100 ஆண்டுகள் ஓடிய ஒரு ரயிலுக்கு மூடுவிழா நடத்தினார்கள். அதன் கடைசிப் பயணத்தை விகடனுக்காகக் கட்டுரை எழுத நான் போயிருந்தேன். அப்போது நான் பார்த்ததும் கேட்டதும் மறக்கவே முடியாது. ஒரு ரயிலுக்குப் பின்னால் எவ்வளவு கதைகள்... உணர்ச்சிகள்... அனுபவங்கள். ''சார்... நான் இந்த ரயில்லதான் பொறந்தேன் சார். கோஷா ஆஸ்பிட்டலுக்குப் போறதுக்காக அம்மா ஏறிருக்கு... வலி அதிகமாகி இங்க நாலாம் நம்பர் பொட்டியிலயே பொறந்துட்டேன். அதான் கடைசியா இதைப் பாக்க வந்துருக்கேன் சார்'' என்றார் ஒருவர். தம்பதிகள், காதலர்கள், நண்பர்கள் என அவ்வளவு பேர் அவ்வளவு நினைவுகளோடு வந்திருந்தார்கள். அந்த ரயிலை செட்டில் விட்டுவிட்டுத் திரும்பும்போது எனக்குத் தோன்றியது, நம் நினைவுகளோடும் உணர்வுகளோடும் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு பொருளுக்கும் உயிர் இருக்கிறது என்று.

**எ** னது தேசிய வாகனம்... ஆட்டோ. 10 வருடங்களாக என் பிக்கப் அண்டு டிராப்புகள் ஆட்டோக்கள்தான். ''நீ ஆட்டோக்குக் குடுத்த காசுல ஒரு ஹம்மர் எறக்கிருக்கலாம்றா...'' என்பான் எழிலன்.

சீப்பு, பேஸ்ட், பிரஷோடு நாள் முழுக்க ஆட்டோவில் சுற்றிய கதை எல்லாம் உண்டு. கையில் காசே இல்லாமல் ஆட்டோ பிடித்து எங்காவது போய், அப்படியே நள்ளிரவு வரை டூர் போடுகிற கிராதகன். எல்லா ஏரியாக்களிலும் எதாவது ஒரு ஆட்டோக்காரர் என்னைப் பார்த்து, ''தல... எங்க? மவுன்ட் ரோடா, வளசரவாக்கமா..?'' என பிரைட் ஆவார். ஆட்டோ ஜாகிர், ஆட்டோ தென்னவன், ஆட்டோ எட்வின் என எனது மொபைலில் ஒரு கான்டாக்ட் லிஸ்ட் இருக்கிறது.

டிரஸ்ட்புரம் ஆட்டோ ஸ்டாண்டில் எப்போது பார்த்தாலும் பதற்றமாக, ''சார்... கார்லாம் வாங்கிரலைல்ல...'' என்பார்கள். ஆட்டோவில் போவது ஓர் அனுபவம். போகும்போதே திசைகளைத் தீர்மானித்துக் கொள்ளலாம். வருகிற ஆட்டோக்காரர் ஒரு சந்தானமாகவோ,

சாக்ரடீஸாகவோ இருப்பார். எதிர்பார்க்காத கருத்துகளை எல்லாம் வீசிவிட்டுப் போவார்கள்.

ஸ்கூல் பஸ்ஸில் இருந்து விழுந்து ஒரு சிறுமி இறந்தாளே... அன்றைக்கு ஒரு ஆட்டோவில் போய்க்கொண்டு இருந்தேன். அப்போ அந்த ஆட்டோக்காரரர் சொன்னார், ‘‘அரசன் எவ்வழியோ மக்கள் அவ்வழி சார்... அரசாங்கம் எதையாவது ஒழுங்காப் பராமரிக்குதா..? எதாவது நடந்துட்டா மட்டும் வரிஞ்சு கட்டிட்டு நிப்பானுங்க... அப்புறம் அதே அலட்சியம்தான். மக்களுக்கு ஒழுங்காப் பாதுகாப்பும் இல்ல... அப்பறம் என்னா சார்? மொதல்ல இந்த பிரதமர், ஜனாதிபதி, மொதலமைச்சர்... எல்லார்ட்ட இருந்தும் குண்டு தொளைக்காத கார்களப் புடுங்கணும் சார்!’’

65

# பண்டிகைப் பதிவுகள்!

**''தீ** பாவளி முடியறதுக்குள்ள நீ மல்டி மில்லியனர்டா... ஒரு பத்தாயிரம் ரூவா ஷேர் போடு!'' திருப்பூரில் 1000 ரூபாய் சம்பளத்தில் சிங்கியடித்துக்கொண்டு இருந்தபோது, சிவா அண்ணன் இப்படி ஓர் ஐடியாவோடு வந்தார்.

பட்டாசுக் கடை ஐடியா. ஐந்து பேர் ஆளுக்கு 10,000 போட்டு, தெருவோர வெடிக் கடைக்கு வித்திட்டோம். என்னிடம் டிபன் காசு மட்டுமே இருந்ததால், எனது ஷேரையும் சிவாவே போட்டார். ஆகவே, கம்பெனியின் ஓடும் பிள்ளையாக இருக்க விதிக்கப்பட்டேன். ஒரு ராத்திரி, ஆளுக்கு ரெண்டு பீர்போட்டுவிட்டு சிவாவும் நானும் சிவகாசிக்கு பஸ் பிடித்தோம்.

''அது நமக்கு பேஸிக்கா பிசினஸ் மைண்டு பாத்துக்க. எல்லாம் கெரகம்... சனியன் பனியன் கம்பெனில கலர் ஊத்தவெச்சிருக்கு. இந்த வெடி பிசினஸ்ல என் ட்ரிக்ஸ நீ பாக்கத்தான போற. தம்பி, இப்ப பிசினஸ்ல ஸ்டிராங்காப் பிடிச்சம்னு வையி... இப்பிடியே பிரின்ட்டிங், டெக்ஸ்டைல்னு போய், இன்னும் நாலஞ்சு வருஷத்துல 'வணக்கம் தமிழகம்' பேட்டி குடுத்துரலாம். அம்பானிலாம் எப்பிடி வந்தாங்குற..? கொங்கு மண்டலத்துல பாதிப் பேரு எப்பிடி வளர்ந்தாங்குற..? பொட்டுனு ஒரு சொட்டுதான்... இடி, மின்னல், பேய் மழை எல்லாம் அப்புறம்தான். ஸோ... இது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பயணம். ஹெலிபேட்

வெச்சு ரெண்டு வீடு கட்றம்டா... அண்ணன் இருக்கேண்டா...'' என சிவா அப்போதே பேட்டி தட்ட ஆரம்பித்தார்.

சிவகாசியில் ஒரு கோடவுனுக்கு அழைத்துப்போய், 50,000—க்கு வெடி பர்ச்சேஸ் பண்ணினார். ராத்திரி சிவகாசி பஸ் ஸ்டாண்டில் கொத்து பரோட்டா கட்டியபோதே பாதி அம்பானி ஆகிவிட்ட மாதிரி இருந்தது. வரும்போது எனக்கு ஒரு சந்தேகம். ''சிவாண்ணே... திருப்பூரே துணிகளுக்குத்தான் ஃபேமஸு... பேசாம துணி யாவாரம் போட்ருக்கலாம்ல. எதுக்கு வெடி யாவாரம்..?''

''அடேய்... மொதல்ல சிந்தனைய மாத்து. எதிர் திசைல யோசி... அப்பதான் உருப்படுவ!''

மறு நாளே சூர்யா தியேட்டர் பக்கம் படுதா விரித்து, கடையைப் போட்டோம். 'அதிரடி வெடிக் கடை' என ஒரு பேனர் எழுதி வைத்தார் மணியண்ணன். நான் கம்பெனிக்குப் போய் சாயங்காலம் கடைக்கு வந்துவிடுவேன். சிவாண்ணன்தான் ஃபுல் டைமாகக் கடையிலேயே கிடந்தார். நான் வந்தவுடனே, ''டேய்... 500 ரூவா பார்சல் அஞ்சு கட்டு... கேட்லாக் பாத்துக்க...'' என்பார் பரபரப்பாக. பொட்டு வெடியில் இருந்து அணுகுண்டு வரைக்கும் சில்லறை வியாபாரமே எகிறியது. மூணே நாள்தான்... சோல்டு அவுட்.

தீபாவளிக்கு முதல் நாள் ராத்திரி, ஷேர் ஹோல்டர்ஸ் மீட்டிங் கூடியது. சிவா அண்ணன் மட்டும் ஆப்சென்ட்.

''டேய்... எல்லாம் சோல்டு அவுட்டு. ஆனா, போட்ட காசே வரலியே... என்னடா சங்கதி..? நான்லாம் மோசமானவன்...'' எனச் சூடானார் மணியண்ணன். ஆளாளுக்குப் போட்ட காசே கைக்கு வரவில்லை. விசாரணை கமிஷன் வைத்ததில் சார்லிதான் உண்மையைத் தோண்டி எடுத்தார், ''பாதி வெடிகளை கம்பெனில வேலை பார்க்குற பொம்பளைகளுக்கு ஓசிலயே குடுத்துருக்கான் சிவா பய... அதான் டோட்டல் லாஸு!''

சிவா அண்ணனைத் தூக்கி வந்து விசாரித்தபோது அலட்சியமாகச் சொன்னார், ‘‘அதெல்லாம் அக்கௌன்ட்டு. அடுத்து பொங்கலுக்கு பாத்தர யாவாரம் பண்ணப்போறம்ல... அதுக்கெல்லாம் பொம்பளைக ஆதரவு வேணும். இதெல்லாம் ஒரு பிசினஸ் ட்ரிக்கு...’’



இதைக் கேட்டுப் பயங்கரக் கோபமாகி, ‘‘ஓ... இதுல பொங்கல் வேறயா..? இப்ப எனக்குக் காசு வரல... ஒரு பய இங்க தீபாவளி கொண்டாட முடியாது’’ என அதிரடி வெடிக் கடை பேனரைக் கிழித்தெறிந்தார் மணியண்ணன். அப்படி முடிந்தது அந்த பிசினஸ் கனவு.

சில வருடங்களுக்குப் பிறகு சிவா அண்ணன் போன் பண்ணியிருந்தார். ‘‘தம்பி, தீபாவளிக்கு திருச்சில துணிக் கடை போட்ருக்கேன். தொறந்துவைக்கறதுக்கு ஏதாவது சீரியல் நடிகை வருமா? இந்தத் துளசில்லாம் வந்தா ஒரு அள்ளு அள்ளிரலாம்!’’

‘‘ஹேப்பி தீபாவளிண்ணே... இப்ப நான் நியூயார்க்ல இருக்கேண்ணே... அடுத்த வாரம் கூப்பிடுறேன்’’ என போனை வைத்துவிட்டேன்!

**ம** துரையில் இருந்தபோது ஒரு தீபாவளிக்கு விளக்குத் தூணில் துணிக் கடை போட்டிருந்தார் ரங்கராஜ். துணிக் கடை என்றால், ஃப்ளாட்ஃபார்மில் குவித்துவைத்து ஏலம் போடுகிற வியாபாரம். விளக்குத்

தூண், வடக்கு மாசி வீதி, காமராஜர் சாலை, திண்டுக்கல் ரோடு முழுக்கத் தீபாவளிக்கு முதல் நாள் பார்க்க வேண்டுமே... ஜேஜே என்று கிடக்கும். 'நூறு ரூவா... நூறு ரூவா...' என பேன்ட் பிட்டை 20 அடிக்குத் தூக்கிப் போட்டுப் பிடிப்பார்கள். தோளில் போட்ட புடைவையை கலர் கலராக விசிறி இழுப்பார்கள். கோடு போட்ட, கட்டம் போட்ட, பூப்போட்ட சட்டைகள் அடுக்கி அடுக்கிச் சரிந்துகிடக்கும். அழுக்கு வேட்டியோடும் புடைவையோடும் பிள்ளைகளைக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு, ''நாப்பது ரூவான்னா குடு...'' எனப் பேரம் பேசும் முகங்கள் வழியெல்லாம் கிடக்கும்.

ரங்கராஜ், தனது கடையில் ஸ்பீக்கர் வைத்து பல நடிகர்களின் குரல்களில், ''வாங்கம்மா... வாங்க... அய்யா வாங்க... அம்மா வாங்க...'' எனப் பேசப்பட்ட பதிவுகளைப் போட்டுவிட்டு இருந்தார். ஊரில் இருந்து அக்காவையும் இரண்டு தங்கச்சிகளையும் அழைத்து வந்து கடையில் விட்டிருந்தார். மஞ்சள் பூசிய முகங்களோடு கை கூப்பியபடி அவர்கள் வியாபாரம் பார்த்ததில் சேல்ஸ் எகிறியது.

தீபாவளிக்கு முதல் நாள் இரவு நேரம் ஆக ஆக... விலையெல்லாம் கூறுகட்டிக் குறையும். நள்ளிரவுக்கு மேல் ரங்கராஜ் கடையில் புடைவை திருடிக்கொண்டு ஓடப் பார்த்தவனைப் பிடித்துப் போட்டுப் பொளந்தார்கள். அவ்வளவு பேரும் கூடி அடிக்க, ரத்தம் வரக் கதறிய அவனது முகம் இப்போதும் நினைவில் இருக்கிறது. அதிகாலையில் இரண்டு போலீஸ்காரர்கள் அவனை அடித்து இழுத்துப் போனார்கள்.

இப்போதும் தீபாவளியை முன்னிட்டு சேனலுக்குச் சேனல் கதறும் விளம்பரங்களைப் பார்க்கும்போது, எனக்கு சிவாண்ணனும் ரங்கராஜும்தான் நினைவுக்கு வருகிறார்கள்.

**ஒ**ரு நாள் துபாயில் இருந்து ராஜி போன் பண்ணினான். ''என்ன மாப்ள... தீபாவளிக்கு ஊருக்குப் போறியா..?''

''போவணும் மச்சான்... அங்க எப்பிடி..?''

‘‘இங்க என்ன மாப்ள... லீவு கெடைக்குமான்னு தெரியல. சேக்குட்ட சொல்லணும். கெடைச்சா செந்திலு, குணா, சாகுலெல்லாம் ஒரே எடத்துலதான இருக்கானுவோ... போய்ப் பார்த்துட்டு வரணும். போனா, சரக்கப் போட்டு ஒரே ஊர்க் கததான்... அதான் தீபாவளி. நாட்டாரு வூட்டு மாடில யான வெடி காயவெச்ச கதைலாம் நெனப்பிருக்குல்ல’’ — ராஜி பேசியபோதுதான் தீபாவளி வந்துவிட்டதே தெரிந்தது. வெடி வாசமும் சுழியன் ருசியுமாக நினைவில் புகைந்தது.

சொல்லிவைத்தது மாதிரி அன்றைக்கு இரவு லண்டனில் இருந்து கிரிதரன் போன் பண்ணினார். ஈழத் தமிழ் நண்பர். ‘‘தீபாவளி வந்துருச்சா...’’ எனச் சிரித்தபடி தொடங்கிய உரையாடல் எங்கெங்கோ போய்விட்டது.

பண்டிகைகள் எவ்வளவு உறவுகளையும் நினைவுகளையும் இழுத்து வந்துவிடுகின்றன. ‘‘எங்கட தீபாவளியெல்லாம் போயிருச்சு முருகன்... இனிமே அப்பிடி ஒரு தீபாவளி வர வாய்ப்பு இல்லே. யாழ்ப்பாணம் சந்தைல துணி எடுக்கப் போவியணும். லாந்தர் விளக்குல துணிகள் ஏலம் விடுவாங்கள். ‘காக்கிச்சட்டை’யிலே கமல் போட்ட டிசைனென்டும், ‘தர்மதுரை’யிலே ரஜினி போட்ட டிசைனென்டும் கூவிவிடுவாங்கள். அம்பது அறுபதென்டு சொல்லி அதை ஏலம் எடுப்பதே ஒரு சாகசம்தான். காங்கேசன் துறை வீதி மனோகரா தியேட்டர்ல புதுப் படம் போடுவான். தீபாவளிக்கு மொத நாளே அங்கட ரிலீஸாகிரும். மொத ஆளா போய் நின்டு பாத்துடுவோம்.

ஒரு வாரத்துக்கு முன்னாடியே வெடிகள் வாங்கி பன ஓலையிலே காயவெச்சுருவோம். தீபாவளியன்றைக்கு ஆர் வீட்டு வாசலில் அதிகமாய் வெடித்த காகிதங்கள் கெடக்குதுன்னு பொடுசுகளுக்குள்ளே ஒரு போட்டியே நடக்கும். மத்தியானம் பக்கத்து வீட்டு வாசல்லே இருந்து காகிதங்கள் பொறுக்கி எங்கட வாசல்ல போட்டுக்குவோம்.

கற்குளம் கற்பக விநாயகர் கோயிலுக்குப் போயிட்டு வந்தால், எங்கம்மை செய்து தர்ற சீனிப் பணியாரமும் பயித்தம்பயிறு உருண்டையும்தான் தீபாவளி. எல்லாம் போச்சு. இப்போ நான்

லண்டனிலே கெடக்கிறன். தம்பியும் அவன் குடும்பமும் வல்வெட்டித்துறையிலே கெடக்குதுகள். அங்கே எங்கட பிள்ளைகள் ஆரும் வெடியே கேக்கறதில்லே. அவியளும் தினம் தினம் எவ்வளவு வெடிகளைப் பார்த்துவிட்டதுகள். சொந்தங்கள்தானே பண்டிகை? ஊரே இல்லாதவனுக்கு தீபாவளி என்ன கேடு?'' என்று கிரிதரன் போனை வைத்துவிட்டார்.


'சொந்தங்கள்தானே பண்டிகை..?' என்ற வார்த்தைகள் இன்னும் அணையாத மத்தாப்பாகப் பொரிந்துகொண்டே இருக்கிறது.

இப்போது கோயம்பேடு பஸ் ஸ்டாண்ட் போனால், அத்தனை பேருந்துகளிலும் பிதுங்கும் முகங்கள். மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர் என எல்லாப் பேருந்துகளும் சொந்தங்களைச் சுமந்த முகங்களால் நிறைந்து இருக்கும். துணிக் கடை கட்டைப் பைகளும், இனிப்பு கவர்களும் ஊர்களைப் பார்க்க உட்கார்ந்திருக்கும். கடன்பட்டு தலை தீபாவளிக்குப் போகிற ஒருவனது மொபைல், விடாமல் சிணுங்கிக்கொண்டே இருக்கும். யார் யாரோ, யார் யாருக்கோ போன் பண்ணி, வருகையைச் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். உண்மையில் உறவும் நிலமும்தானே பண்டிகையின் முதல் அர்த்தம்?

**ஒ**ரு தீபாவளி இருந்தது. ரயில்வேயில் வேலை பார்க்கிற சிவராஜ் சித்தப்பா வாங்கிவரும் வெடிகளை ஒரு வாரத்துக்கு முன்பே நாட்டார் வீட்டு மாடியில் காயவைத்துக் காவல் இருந்த தீபாவளி. வெங்கட் மாமா வீட்டில் இருந்து நாகராஜ அண்ணன் வீட்டுக்கு நூல் கட்டி ரயில்விட்ட தீபாவளி. திண்ணை எல்லாம் பாம்பு மாத்திரையும் எலக்ட்ரிக் கல்லும் வைத்த தழும்புகள் தரும் சந்தோஷ தீபாவளி. கொரடாச்சேரி வின்ஃபிட் டெய்லரிடம் துணி தைக்கக் குடுத்துவிட்டு, 'ஃப்ளிட் வெச்சாரா இல்லியா?' என இரவெல்லாம் விழித்திருந்த தீபாவளி. கருக்கலில் எழுந்து வெட்டாற்றில் எண்ணெய் தேய்த்துக் குளித்த தீபாவளி. கும்பகோணம் விஜயாவிலும் திருவாரூர் தைலம்மையிலும் படம் பார்த்துவிட்டு, சைக்கிளில் வீட்டுக்கு வந்து சுழியனும் கோழிக் கறியும்

சாப்பிட்ட தீபாவளி. கார்த்திகைக்கு வெடிகளைச் சேமித்துவைத்துவிட்டு, வயித்து வலி என்று ஸ்கூலுக்கு இரண்டு நாட்கள் மட்டம் போட்ட தீபாவளி. எனக்கும் இப்போதுள்ள பிள்ளைகளுக்கும் அந்தத் தீபாவளி கிடைக்கப்போவதே இல்லை. நமது பால்யம் என்ற நதியில் இந்தப் பண்டிகைகள் கொட்டிய கூடைப் பூக்கள் எப்போதும் நினைவில் மிதந்துகொண்டே இருக்கும்.

''**தீ** பாவளி எல்லாம் கொண்டாடாத... அன்னிக்கு கறுப்புச் சட்ட போட்டுக்க''— ஏழெட்டு வருடங்களுக்கு முன்பு ஒரு தீபாவளி நாளில் கரிசல் கோவிந்தராஜய்யா இப்படிச் சொன்னார். ''இதெல்லாம் வர்ணம் பிரிச்சவன் கொண்டுவந்தது... கட்டுக்கதைங்க. எங்க பார்த்தாலும் நூத்துக்கணக்கான நரகாசுரனுங்க இருக்காய்ங்க. அரசியல், அதிகாரம், ஊழல்னு கொழுத்துத் திரியுறாய்ங்க... அவிய்ங்கள அழிக்காம ஒனக்கென்ன தீபாவளி..? ஏழைபாழைங்களுக்கும் விவசாயிக்கும் என்னய்யா தீபாவளி..? ஒரு நா மட்டும் சந்தோஷமா இருந்துக்கன்னா..? 24 மணி நேரமும்தான் டி.வி—ல தீபாவளி கொண்டாடறான்... அன்னிக்கு மட்டும் என்னா வந்துச்சு? இந்தத் தேசத்துல ஒருத்தன் நியாயமா, சந்தோஷமா இருந்தான்னா, ஒவ்வொரு நாளும் பண்டிகைதான்'' என அவர் சொன்னது இப்போதும் கேட்கிறது. தீபாவளி முடிந்த மறு நாள் எனது தெருவில் கோணிச் சாக்கு போட்டுக்கொண்டு, வெடித்துக்கிடக்கும் பேப்பர்கள் பொறுக்க வந்த ஒரு சிறுவனின் அழுக்கு முகம் உள்ளே கிடக்கிறது... ஒரு கரித் துண்டைப் போல!



**தீ** பாவளி என்றதும் எவ்வளவோ நினைவுகள்... எப்போதும் முதலில் வருவது அமுதாக்கா முகம்தான். ஒரு தீபாவளி தினத்தில்தான் அமுதாக்கா தீக்குளித்து செத்துப்போனது. நாங்கள் குட்டிப் பையன்கள். ஏன், எதற்கென்றே தெரியாது. திருச்சியில் ஆஸ்பத்திரியில் வைத்திருந்தார்கள். ஏதேதோ பேசிக்கொண்டார்கள். அதிகாலையில் காவிரிக் கரையில் மாமாவோடு உட்கார்ந்து இருந்தபோது காகங்கள் கரையத் தொடங்கியிருந்தன. அக்கா இறந்துவிட்டதை ஒருவர் வந்து சொன்னார். அந்தத் தீபாவளி அப்படியே நின்றுவிட்டது. அடுத்த வருடம் தீபாவளிக்கு வீட்டில் போட்டோவில் சரமிட்டுச் சிரித்தது அமுதாக்கா. ‘‘இந்த வருஷம் நமக்குத் தீபாவளி இல்ல... அக்கா சாமி

ஆகிருச்சுல்ல... அதுக்கு சாமி கும்புட்டுக்கிட்டா போதும்...'' என்றது அம்மா. அமுதாக்காவின் கீழ் சுடர்விட்டுக்கொண்டு இருந்தது ஓர் அகல். நாற்புறமும் நற்சுடர்கள் ஏற்றச் சொன்னதைப்போல் இருந்தது புன்னகை.

ஒரு சுடர் உயிரைப் பறிக்கும்... ஒரு சுடர் ஒளியைக் கொடுக்கும்... ஒரு சுடர் எதுவும் செய்துவிடும் இல்லையா?

66

# நமக்கான உலகம்!

"**தி**ரும்பிப் பார்க்கும்போது சட்டுனு ஒண்ணுதான் தோணுது பாஸ். ஒரு காலத்துல யாரோ ஒருத்தரோட உலகமா நாம இருந்தோம். இப்போ அவங்க உலகத்துலயே நாம இல்ல."

நேற்று மழைக்கு ஒதுங்கிய டீக்கடையில் இப்படி ஸ்டேட்டஸ் போட்டார் ஒரு நண்பர்.

''என்ன டவுசருக்குத் திரும்பிப் பார்க்குற? மொதல்ல முன்னாடி பார்த்து மூணு இஞ்சி டீ சொல்றா."

''அதுக்கு இல்லண்ணே... பெருங்காத்தும் மழையுமா சொழட்டி அடிச்சுதுல என்னவோ ஒரு நெனப்பு. ரொம்ப நாளைக்கு அப்புறம் பழைய லவ்வருக்கு போன் போட்டேன். பேசணும்னு தோணுச்சு. அவ போனை எடுத்து, 'சின்னவனுக்குச் சோறு ஊட்டிட்டு இருக்கேன். அப்புறம் பேசறேன்டா'னு பட்டுனு கட் பண்ணிட்டா. மனசு கனத்துப்போச்சுண்ணே. 'நமக்கு எவ்வளவு புள்ளைங்க பொறந்தாலும் என் மூத்த மகன் நீதான்டா'னு சொன்னவண்ணே அவ... ப்ச்ச்ச்."

''இப்பிடி 77 கிலோல தொப்ப போட்ட மூத்த புள்ளைய சொமக்க முடியுமாடா? அதான் விட்டுட்டுப் போயிருச்சு. கன்னுக்குட்டி... டீக்குக் காசைக் குடு."

மழை விசிறி அடிக்க ஆரம்பித்தது. கவுன்ட்டர் கொடுத்துக் கொண்டு இருந்த சீனியர் அண்ணன், ஒரு சிகரெட்டைப் பற்றவைத்து ஆழமாக இழுத்து ஊதினார்.


‘‘ஆமாண்டா. அது அப்பிடித்தான். போன மாசம் திருச்செந்தூர்ல செல்வம் கல்யாணத்துல மலர் வனத்தைப் பாத்தேன். கண்ணுக்குக் கண்ணு பாக்கலடா. காத்தைக் கடந்து போற மாதிரி போறா. என்னா பண்ணேன் ஒனக்கு? புருஷன் புள்ளைங்களோட நல்லாருக்கணும்னு மூகாம்பிகைக்கு காசு முடிஞ்சு போட்டவன்டி நான். நீதான தொட்ட. நீதான விட்ட. வூட்ல யாரும் இல்லாதப்ப வந்து நின்னு, எங்கம்மா பொடவையக் கட்டிக்கிட்டு மூட்டம் போட்டது யாரு? நீதான் என் ஒலகம்னு க்ரே டிஷர்ட்ல கண்ணு மை அப்புனது யாருங்கறேன்? போனது போச்சுய்யா. இப்ப எதுக்க பாக்கும்போது ஒரு ஹாய் சொல்லக்கூடாதா? ‘தங்கப்பதக்கம்’ சிவாஜி மாதிரி வெரச்சுக்கிட்டுப் போற? என்னை என்னன்னு நெனைச்சுக்கிட்டா? கூசிப் போச்சுரா."

அப்போது அவருடைய மொபைல் அடித்தது. ‘‘என்னடி சொல்றான்? குடு. தம்பி குட்டி, மழைல சைக்கிள்லாம் வேணாம்ரா. வீஸிங் வரும். டாடி ஒனக்கு லேஸ் வாங்கிட்டு வர்றேன். எது... பட்டர்ஃப்ளை சி.டி—யா? சரி வந்துர்றேன். அழாம இருந்துக்கணும். என்னா?" — கொஞ்சம் குறைந்த மழையில் தடதடவென ஓடிப்போய் பைக்கைக் கிளப்பிக்கொண்டு போனார் சீனியர்.

அதே மழையோடு வீட்டுக்கு வந்தால், என் அறையெல்லாம் மழைத் தண்ணீர். ‘‘தம்பி, ஜன்னல் எல்லாம் சாத்தாமப் போயிட்டீங்களா? சார அடிச்சு தண்ணியாகிப்போச்சு. ஸ்லாப்புல இருக்கிற அட்டப் பொட்டியில எதாவது முக்கியமா வெச்சிருக்கீங்களா? இருந்தா எடுத்து ஹால்ல வெச்சுருங்க."

அந்த அட்டைப் பெட்டியை எடுத்து ஹாலில் கவிழ்த்தேன். எப்போதோ சேர்த்த குப்பைகள் (அவை வைரங்களாக இருந்த ஓர் உலகம் இருந்தது). கிளறிய காகிதங்களில் சட்டென்று அந்தக் கடிதம் கண்ணில் வந்தது. ‘லூஸு’ எனத் தொடங்கும் கடிதம். ‘உன்னைப் பார்க்காத

எனது உலகம் சுற்றவே இல்லை' என்ற வரிகள் என்னைப் பார்த்துச் சிரிக்கின்றன. 'நான்கு கண்ணாடிச் சுவர்களுக்குள்ளே நானும் மெழுகுவத்தியும். தனிமை தனிமையோ, கொடுமை கொடுமையோ' என்ற பாடல் வரிகள் அடிக்கோடு இடப்பட்டு இருக்கின்றன. 'முத்தங்களுடன்' என முடிந்திருக்கிறது. இந்தக் கடிதம் என்னிடம் வந்து சேர்ந்த நாளும் இப்படித்தான் மழை. குடையைக் கழுத்தில் இடுக்கிப் பிடித்தபடி, பர்வீனக்கா கடை வாசலிலேயே நின்று இதைப் படித்த தருணம் ஞாபகம் வருகிறது. சில பொழுதுகள் அப்படித்தான் அமையும். கண்ணுக்குத் தெரியாமல் ஏதோ ஒரு தொடர்பு உள்ளோடிக்கிடக்கும். அப்புறம் அந்த அட்டைப் பெட்டியில் இருந்து, 'ஹவ் மச் டூ யூ லவ் திஸ் வேர்ல்டு?' 'திஸ் மச்' என்று எழுதப்பட்ட ஓர் ஓவியம் வந்து விழுந்தது. இயேசு சிலுவையில் இரு கைகளையும் விரித்துக்கொண்டு, 'திஸ் மச்' என நிற்பதுபோல் ஓவியம். இதை எனக்குத் தந்துவிட்டு, 'இப்படித்தான் நான் உன்னை லவ் பண்றேன். திஸ் மச்' எனக் கைகள் விரித்து சிரித்த இதயம் இப்போது எங்கே? இப்போது அவளுக்கு ஒரு போன் பண்ணிப் பேசலாம் எனத் தோன்றுகிறது. ஆனால், அவளது புது மொபைல் நம்பர்கூட என்னிடம் இல்லை. அவள் தரவில்லை.



என்றோ ஒரு நாள்... ஏதோ ஒரு லேண்ட் லைனில் இருந்து அழைத்துப் பேசினாள். ‘‘ஏய்... உன் மொபைல் நம்பர் குடுடி.’’ ‘‘அதெல்லாம் வேணாம். இது ஆபீஸ் நம்பர். எதுன்னா ரொம்ப முக்கியம்னா நைன் டு சிக்ஸ், ஆபீஸ் நம்பர்லயே கூப்பிடுங்க. முக்கியம்னா மட்டும் கூப்பிடுங்க. அப்புறம் இனிமே இப்பிடி வாடி, போடினு கூப்பிட வேணாம்." இப்போது அவள் உலகம் வேறு. அந்த உலகத்தில் ஒரு லேண்ட் லைன் போனில் எப்போதாவது முக்கியத் தேவை என்றால், சிணுங்கும் சிறு குரல் மட்டுமே நான். வானம் அளவுக்கு விரித்த கைகளில் இப்போது ஒரு நட்சத்திரம்கூட இல்லை. திஸ் மச்!

இப்படி எவ்வளவோ இருக்கிறது எல்லோருக்கும். எல்லோருடைய உலகத்திலும் ஒவ்வொருவருக்கும் ஒரு பாத்திரம் இருக்கிறது. திரும்பிப் பார்க்கும்போது எல்லாம் அது மாறிக்கொண்டே இருக்கிறது. ‘‘இப்பவும்

கண்ணாடி பார்த்துப் பொட்டு வைக்கும்போது திடுக்குனு இருக்குரா. பின்னால எளங்கோ வந்து நிக்கிற மாரி இருக்கு. பிம்பமா வந்துட்டுப் போற மாதிரி. ஆளு இப்ப அரிசி மண்டிக்கு எல்லாம் வருதா? ஈ.பி—ல சேந்துருச்சுல்ல. பெரிய எடத்துச் சம்பந்தம் வேற. முன்னமாரி இருக்க முடியுமா?'' என்ற மாலதி அக்காவின் குரல் இப்போதும் ஒலிக்கிறது. கரி படிந்த செய்தித்தாள்கள் ஒட்டப்பட்ட அடுக்களைதான் மாலதி அக்காவின் உலகம். அந்த உலகத்தில் நுழைந்து வண்ணத்தாள்கள் ஒட்டிய இளங்கோ, இப்போது தெருவில் இறங்கிப் போய்விட்டார் வேறு ஓர் உலகத்துக்கு. இப்போது மாலதி அக்காவுக்கு காட்டுமன்னார்குடி பக்கம் வேலிப்படல் போட்ட ஓர் உலகம் உருவாகிவிட்டது.

**ப** ள்ளிக்கூடத்தில், கல்லூரியில், அலுவலகத்தில் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் உலகம் திறக்கிறது. ஒவ்வோர் உலகத்திலும் ஒவ்வொரு விதமான நட்புகள், காதல்கள், உறவுகள்... எல்லா உலகங்களிலுமா நம் கூடவே வருகின்றன? முந்தைய உலகத்தின் முதல் நபராக இருந்த நண்பனை, இன்றைய நமது உலகத்தில் பார்க்கவே முடிவது இல்லை. கல்லூரி உலகத்தில் ஒன்றாகவே திரிந்தவன் இப்போது போன் பண்ணும்போது குரலையே கண்டுபிடிக்க முடியவில்லை.

திடீரென்று மொபைலில் ஒரு குரல். ''டேய், நான் கல்யாணராமன் பேசறேன்டா."

''எந்தக் கல்யாணராமன்?"

''கம்னாட்டி. மூலங்குடி ஸ்கூல்ல எட்டாவது வரைக்கும் படிச்சோம்ல. பிம்பிளிக் குஞ்சுக் கத கல்யாணராமன்டா."

''ஏய், கல்யாணராமா எப்பிடிறா இருக்க?"

''அதெல்லாம் இருக்கேன். நீ எங்க இருக்க?" அடுத்த நாளே வீட்டுக்கு வந்தான். 20 வருடங்களுக்குப் பிறகு, அலை அலையாகத் தளும்பும் சுருட்டை முடி கல்யாணராமன் பாதி தலை ஏறிப்போய் இருந்தது. வந்தவுடனே, ''யம்மா... சேர எடுத்துப் போடு. எங்கடா உன்

புள்ளைக? சும்மா ஆப்பிளும் மேரி பிஸ்கெட்டும்தான்" எனப் படபட எனப் பேச ஆரம்பித்துவிட்டான்.

''எது..! இன்னும் ஒனக்கும் கல்யாணம் ஆகலையா? எனக்குத்தான் என்ன எழவு தோஷமோ இருக்குன்னுட்டாய்ங்க. முப்பத்தி ஏழுலதான் முடியுமாம். பஜாஜ் அல்லயன்ஸ்ல வேல பாக்குறேன்டா. நம்ம பயலுவோள்ட்ட எல்லாம் பேசுவியா?"

''எங்கடா... யார்ட்டயும் டச்சே இல்ல."

''என்னடா இப்பிடிச் சொல்ற. டைரிய எடு. பயலுவோ நம்பர்லாம் நோட் பண்ணித் தர்றேன். நாம மேக்ஸிமம் எல்லாப் பயலுவளையும் பார்த்துருவேன். பொண்டுகள மட்டும்தான் பாக்கறதில்ல. கொடவாச கடத் தெருல ஃபேன்ஸி ஸ்டோர் போட்ருக்குல்ல அங்க சித்ராவப் பாக்கறதோட சரி. அங்கன்வாடில வேல பாக்குது சசி. அது புருஷன் நல்ல டைப்புரா. உன்னை எல்லாம்கூட கேக்கும். அது நம்பரும் தர்றேன். பேசு. நமக்கு நண்பர்கள் மட்டும்தான்டா உலகம். நீதான் இத்தன நாளா மிஸ்ஸாயிட்ட. அதான் இப்பப் பிடிச்சிட்டன்ல. யம்மா, மதியம் சாப்பிட்டே போயிர்றேம்மா. இந்தக் கம்னாட்டியோட சாப்பிட்டு எவ்வளவு நாளாச்சு."

எனக்கு ரொம்ப ஆச்சர்யமாக இருந்தது. வரட்டிகள் ஒட்டப்பட்ட, பிம்பிளிக்காக் குஞ்சுக் கதை பேசிய பள்ளிக்கூட சுவரில் இருந்து நான் எத்தனையோ உலகங்களைத் தாண்டிவிட்டேன். இன்னும் அந்த நண்பர்களை மட்டுமே தன் உலகமாக வைத்திருக்கும் கல்யாணராமன் எவ்வளவு அற்புதம்!

**கு**ற்றாலம் பகவதி இப்படித்தான் கல்லூரி நண்பர்களைத் தேடித் திரிவான். அவன் போன் பண்ணும்போது எல்லாம் ஏதாவது வேலையாக இருப்பேன். மொபைல் மாற்றியபோது அவனுக்கு நம்பரே தரவில்லை. ஒரு முறை காரில் போனபோது பாண்டிச்சேரி சென்னை ஈ.சி.ஆர். சாலை டோல்கேட் ரூமில் இருந்து, ''நாப்பத்தஞ்சு ரூவா சார்" என எட்டிப் பார்த்தான். கடையநல்லூரில் அவ்வளவு பெரிய மளிகைக் கடையில்

உட்கார்ந்திருப்பவனை, இப்படி ஒரு டோல்கேட்டில் நினைத்துப் பார்க்கவே இல்லை.

''எலே... மக்கா! என்னை எல்லாம் மறந்துட்டியாலே" எனக் குதித்து வந்த அவன் முகத்தைப் பார்க்க வெட்கமாக இருந்தது. புதிய முகங்களால் நிறையும் நிறுத்தங்களில் ஏறி ஏறி இறங்கினாலும், தனது அன்பு சூழ் உலகத்தை அப்படியே வைத்திருக்க இப்படிச் சில கல்யாணராமன்களாலும் பகவதிகளாலும்தான் முடிகிறது.

ர மணி மாமா ரிட்டையராகி வந்த நாள் இப்போதும் நினைவில் இருக்கிறது. அரசாங்கப் பள்ளியில் கணக்கு வாத்தியார். அவருக்கு பள்ளிக்கூடம்தான் உலகம். 35 வருஷ சர்வீஸில் அஞ்சாறு நாட்கள்தான் லீவு போட்டிருக்கிறார். மனைவி பிரசவம், பொண்ணு கல்யாணம், அப்பா மரணம். இப்படித்தான். பள்ளிக்கூடத்தை வீட்டுக்கும் இழுத்து வந்துவிடுவார். திண்ணைக் கட்டில் டியூஷன் எடுப்பார். இரவுகளில் நோட்ஸ் எடுப்பார். பேப்பர் திருத்துவார். ''ஸ்கூலும் இந்த வாத்தியார் தொழிலும்தான் எனக்கு எல்லாம். அது இல்லாம ஒரு ஒலகத்த நெனச்சே பாக்க முடியல மாப்ள" என்பார்.

சாக்பீஸ் வாசமும் கோவக்கா வாசமும் அவர் கூடவே இருக்கும். ரிட்டையரான பிறகு, அவர் எப்படி வாழப்போகிறார் என நினைத்துக்கொள்வேன். அக்கா அதைச் சொல்லியே திட்டும். ''பாக்கறேன்... பாக்கறேன்... ரிட்டையரான பொறவு இங்ஙனதான கெடக்கணும். அப்ப என்ன பண்றீயனு பாக்கறேன்." அந்த ரிட்டையர்மென்ட் விழாவுக்கு அக்காவை அழைத்துக்கொண்டு போயிருந்தேன். ஏற்புரை நிகழ்த்தும்போது குரல் உடைந்து தேம்பினார் மாமா. ஷீல்டை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்தவர் ரூமுக்குள் போய் கதவைச் சாத்திக்கொண்டார் நெடுநேரம். அவ்வளவுதான்.

மறு நாளில் இருந்து சிரிப்பும் உற்சாகமுமாக இந்த உலகத்துக்குள் வந்துவிட்டார். அத்தையோடு கடைகளுக்குப் போவது. தோட்டத்தில் செடிகள் வைப்பது. பேரன், பேத்திகளை அள்ளிக்கொண்டு அலைவது என ஒரு ரமணி மாமா. ''இது சைனா மூங்கி, நாட்டு மூங்கி எடுத்தாடா"

என கையெல்லாம் சேறாக கொல்லையில் உட்கார்ந்து இருக்கும், திண்ணைக் கட்டில் உட்கார்ந்து அக்காவுக்கு நகம் வெட்டிக்கொண்டு இருக்கும் மாமாவின் உலகத்தில் 'ஏழேழு நாப்பத்தொம்போது' என்ற குரல், நினைவின் இனிய பாடல்போல் எங்கோ கேட்கிறது!

**ப** ரமேஸ்வரியை மறுபடி அப்படிப் பார்ப்பேன் என்று நினைக்கவே இல்லை. சுத்துப்பட்டில் பரமேஸ்வரி என்றால், ஒரு மாதிரி. ஊரில் ஒரு பொம்பளைக்கும் அதைப் பிடிக்காது. ''அம்பது ரூவாடா" என்பார்கள் பையன்கள். பஸ் ஸ்டாண்டிலும், கிளப்புக் கடைகளிலும், இலுப்பைத் தோப்பிலும் அவ்வப்போது அதைப் பார்ப்பேன். கொஞ்சம் தள்ளி யாராவது ஒரு பெரிய மனுஷன் வருவார்கள். எப்போதும் மஞ்சள் பூசி, பெரிய பொட்டுவைத்து... அப்படி இருக்கும் அது முகம். எப்போதும் அப்படி ஒரு சிரிப்பு. யாரைப் பற்றியும் சட்டை பண்ணாத சிரிப்பு.

பல வருடங்களுக்குப் பிறகு ஊர்ப் பக்கம் அதை பார்த்து அதிர்ந்துவிட்டேன். ஆல மரத்தடியில் எலும்பும் தோலுமாக, அழுக்காக வெறித்து வெறித்துச் சிரித்தபடி உட்கார்ந்திருந்தது. ''அது ஒரு மாரி கிறுக்காயிருச்சுரா. இப்பிடித்தான் திரியுது பாவம்!" என்றான் நண்பன். அதன் உலகம் எவ்வளவு ஆண்களால் நிறைந்திருந்தது. எவ்வளவு முகங்கள், குரல்கள், வாக்குகள் குவிந்திருந்தன. இப்போது அதன் உலகம் எது? அங்கே என்ன இருக்கிறது? யார் இருக்கிறார்கள்? அதில் பரமேஸ்வரியாவது இருக்கிறாளா? அர்த்தம் விளங்காத அந்தச் சிரிப்பு மட்டும்தான் இன்னும் அப்படியே இருக்கிறது!

திரும்பிப் பார்க்கும்போது சட்டுனு ஒண்ணுதான் தோணுது பாஸ். மாறிக்கொண்டே இருப்பது உனக்கான உலகமும் எனக்கான உலகமும்தான். உனக்காகவும் எனக்காகவும் அப்படியேதான் காத்துக்கொண்டு இருக்கிறது நமக்கான உலகம்!

67

# அன்பால், அகிலத்தை ஆளலாம்!

**‘யா** தும் ஊரே யாவரும் கேளிர்!’ இது பூங்குன்றன் சொன்னது. ‘யாதும் ஊரே யாதும் கேளிர்!’ இது நண்பன் ஃபிரான்சிஸ் கிருபா சொன்னது. ‘யாவரும்’ என்றால் மனிதர்கள். ‘யாதும்’ என்றால் ஆகாயத்தின் கீழ் இருக்கும் அனைத்தும்!

அதுவும் டிராஃபிக் மண்டிய சாலை ஓரம் நின்றபடி, பசித்த கண்களோடு ஒரு கவிஞன் இதைச் சொன்னது விசேஷம். ஒரு முறை ஆசிரம முற்றத்தில் இருந்து எழுந்து உள்ளே போய்விட்ட விசிறி சாமியார், திரும்பி வந்து தலைக்கு நேரே கையை நீட்டி... ‘ஃபாதர் ப்ளெஸ் யூ’ எனச் சொன்ன மாதிரி. சிங்கிப்பட்டிப் பக்கம் பிரேக் டவுனாகி நின்றபோது, ஆடு மேய்த்துக்கொண்டு இருந்த முதியவர் என் பஸ்ஸில் இருந்த குழந்தைகளுக்கு வேட்டியில் இருந்து அவிழ்த்துக் கொடுத்த ஈச்சம் பழங்கள் மாதிரி.

‘காலைல காலைல போய்ப் பேசினாத்தான் பட்டு ரோஸ் சீக்கிரம் பூக்கும்’ என காந்தி ஆத்தா சொன்னதால், தினம் தினம் காலையில் கொல்லையில் நின்று பட்டு ரோஸ் செடியோடு பேசிக்கொண்டு இருந்த மங்கை அத்தை மாதிரி. ‘சர்ச்ல எல்லாரையும் வுட்றான்பா. அதான் அங்க போறோம். இந்தக் கோயில்ல பந்த போடுறதும் வாழமரம் கட்றதும் மட்டும்தான் நாங்க... நல்லா இருங்க சாமி’ என கலியன் கேட்டது மாதிரி. ‘சொந்த அண்ணனா?’ என ஆபீஸர் கேட்டதற்கு, ‘சொந்தமா வந்த அண்ணன்னு வேணா எழுதிக்கங்க’ என ரெஜிஸ்டர்

ஆபீஸில் நின்று சிரித்த பரமு மாதிரிதான் இருந்தது ‘யாதும் கேளிர்’ என ஃபிரான்சிஸ் சொல்லிக் கேட்டபோது.

**பே**ருந்தில் செஞ்சியைத் தாண்டி வரும்போது, ஒரு கிராமத்தை ஒருவர் நடந்து கடந்துகொண்டு இருந்தார். பை நிறையப் பொம்மைகள் சுமந்துகொண்டு ஓர் அட்டைத் தட்டியில் பலூன்கள் கட்டிக்கொண்டு வந்தார். ஒரு கையில் அழுத்தினால் ‘பீய்ய்ங்... பீய்ங்ங்...’ என வெளியே வரும் நாய்க்குட்டி பொம்மையை அழுத்தியபடி நடந்துகொண்டு இருக்கிறார்.

நான் அவராக மாறிவிடக்கூடாதா என எத்தனையாவது முறையாகவோ நினைத்துக்கொள்கிறேன். வெயில் மருகும் கிராமத்துத் தெருக்களில் பொம்மைகளோடு குழந்தைகளைத் தேடும் ஒருவன்... அற்புதன். ஏதேனும் ஒரு திண்ணையில் பிளாஸ்டிக் ரயிலை சாவி கொடுத்துவிட்டபடி, ‘‘பாப்பா... பேரென்ன பாப்பா?’’ எனக் கேட்கிறவன். ‘‘ஊதிக் காட்டவா... பாப்பாவுக்கு என்ன பாட்டு வேணும்?’’ என வேப்ப மரத்தடியில் உட்கார்ந்து 10 ரூபாய் ஃப்ளூட்டில் ‘சந்தத்தில் எழுதாத கவிதை’ வாசிக்கிறவன். ‘‘எட்டு ரூவாய்க்கு மேல தர முடியாது’’ என்கிற பெரியம்மாவிடம் அதை வாங்கிக்கொண்டு, ‘‘பவளமல்லி ஒட்டுத் தாவரங்களா..? ஒரு கௌ ஒடிச்சுக்கவாக்கா..?’’ எனக் கேட்டு வாங்கிப்போகிறவன். ‘‘பாப்பா சிரிப்புக்கோசரம் தர்றேன்... சோத்த எறக்கலைல்ல... வடிதண்ணி இருந்தா தாங்கம்மா’’ எனச் சிரிக்கிறவன். ஒரு நாளைக்கு நூறு ரூபாய் லாபம் கிடைத்தாலே பெருசு. வெறும் காசுக்காக மட்டும் இவர்கள் பொம்மை விற்கவில்லை. அவர்கள் அழுத்தும்போது ‘பீய்ய்ங்... பீய்ய்ங்...’ என வெளியே வரும் நாய்க் குட்டிகள் ‘யாதும் கேளிர்’ எனச் சொல்லிக்கொண்டே ஊர் ஊராக அலைகின்றன.

‘‘முட்டாயின்னா முட்டாயி... பத்து பைசா முட்டாயி. நல்ல வாச்சு, பல்லி முட்டாயி’’ எனப் பாடியபடி ஊர் ஊராகப் போய் பிள்ளைகளின் கைகளில் வாட்ச் மிட்டாய் கட்டிவிட்டவர்கள் இப்போதும் இருக்கிறார்களா? பாறை வண்டியில் மாஞ்செடிகளும்

தென்னங்கன்றுகளும் விற்றுவிட்டு, சாதிக் வீட்டுத் திண்ணையில் தூங்கிவிட்டுப் போகிறவர்கள் இப்போதும் வருகிறார்களா? ''ந்தா... உள்ள வந்து பாலு குடு'' — மிதியடியும் போர்வைகளும் விற்க வந்து, அப்பத்தா வீட்டுக் கூடத்தில் உட்கார்ந்து குழந்தைக்குப் பால் கொடுத்த சப்பை மூக்குக்காரி இப்போது எந்த ஊரில் இருக்கிறாள்? 20 வருடங்களுக்குப் பிறகும் அந்தச் சித்திரம் நினைவிருக்கிறது. 'நீல வானம் இல்லாத ஊரே இல்லை' என்ற பாடலைப்போல!

**சௌ** ந்தர் அண்ணன் லாரி டிரைவர். வண்டியில் டிரைவர் சீட்டுக்குப் பக்கத்தில் பகத்சிங் படத்தை ஒட்டியிருப்பார். லாரியின் பின்னால் 'அநீதிகளுக்கு எதிராகப் பொங்கி எழுந்தால் நீயும் என் சகோதரனே' என்ற எழுத்துக்கள் தோளில் கை போடும். நெடுஞ்சாலைகளில் மறிக்கும் பாலியல் தொழிலாளிகளுக்கு சும்மாவே அம்பது, நூறு தந்து, தாபாவில் சாப்பாடு வாங்கித் தருவார். அவரிடம் வேலை பார்த்த கிளீனர்களில் மூன்று பேருக்கு அவரே சுயமரியாதைத் திருமணங்கள் நடத்தி வைத்திருக்கிறார். பெரும்பாலும் கறுப்புச் சட்டைதான் அணிவார்.

திடுதிப்பென்று போன் பண்ணி, ''தம்பி... ஃப்ரீயா இருக்கியா? ஒரு ரவுண்ட் வர்றியா?'' என்பார். ரவுண்டு என்றால், கிட்டத்தட்ட பீகார் வரைக்கும். அவரோடு போனால், அது வேறு அனுபவம். இரவுபகலே தெரியாமல் வண்டி போய்க்கொண்டு இருக்கும். சுதீப்களையும் புனித் ராஜ்குமார்களையும் பார்த்துவிட்டுப் படுத்தால், விழிக்கும்போது எதிரே பவன்கல்யாண்களும் பாலகிருஷ்ணாக்களும் சிரித்துக்கொண்டு இருப்பார்கள். 'என்ன மொழி' எனப் புரியாமலேயே பெயர்ப் பலகைகள் கடந்துகொண்டு இருக்கும். விதவிதமான மனிதர்களும் நிலங்களும் டச் ஸ்க்ரீனைத் தட்டிவிட்ட மாதிரி ஓடிக்கொண்டே இருக்கும்.



சௌந்தர் அண்ணன் கன்னடம், தெலுங்கு, இந்தி என எல்லாவற்றையும் பிட்டு பிட்டாகப் பேசுவார். ‘‘எல்லா மொழியிலயும் எட்டு வார்த்தைங்க தெரிஞ்சா போதும் தம்பி... சர்வைவல் பண்ணிரலாம்’’ என்பார் சிரித்தபடி. எந்த ஊரானாலும் இறங்கி சகஜமாகப் பேசுவார். யாரிடமும் உடனே ஒட்டிக்கொள்வார். அப்படி ஓர் அழகான மனிதர். சௌந்தர் அண்ணனைப் பார்த்துப் பேசியே ரொம்ப நாட்களாயிற்று.

சமீபத்தில் ஒரு வேலையாக கள்ளக்குறிச்சி போயிருந்தபோதுதான் அவரது வீட்டுக்குப் போயிருந்தேன். சௌந்தர் அண்ணனுக்கு இரண்டு பெண் பிள்ளைகள். நான் போயிருந்தபோது இரண்டு பேரும் இருந்தார்கள். சாப்பிடும்போது இன்னொரு பையன் வந்து உட்கார்ந்தான். 15 வயசிருக்கும். செம்பட்டைத் தலையும் வெளிர்நிறமுமாக இருந்தான். ‘‘இது ரதீஷ்’’ என்றார் அண்ணன் அவனைக் காட்டி.

‘‘யாருண்ணே... கிளீனரா’’ என்றதற்கு அவசரமாகத் தலையாட்டி ‘‘இல்ல தம்பி... மவன்... என் மவன்’’ என்றார். எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. அப்படி ஒரு மகன் இருப்பதே அதுவரை தெரியாது.

சாப்பிட்டு வந்து உட்கார்ந்ததும் அண்ணன் சொன்னார்... ‘‘தம்பி, இவன ஜார்கண்ட்ல பாத்தேன். அப்பன போலீஸ் அழைச்சிட்டுப் போய் கொன்னுப்புட்டானுவோ போல... ஆத்தாவும் செத்துப்போச்சு. லாட்ஜ்ல மாவா வித்துட்டுக் கெடந்தான். வெத தெரியும்ல நமக்கு. நல்ல பயலாத் தெரிஞ்சான். பசிக்குதுனு வந்து நின்னான். ‘எங்கூட வர்றியாடா?’னு

கேட்டேன். லாரில ஏறி உக்காந்துக்கிட்டான்'' என்றபடி திரும்பி தன் மனைவியைப் பார்த்தவர், ''வூட்லயும் இப்ப எல்லாருக்கும் புள்ளையாகிட்டான். தொழில் கத்துக்குடுத்திருவோம். அப்புறம் அவன் ஆளாயிட்டுப் போறான்'' என்றார். வரும்போது அந்தப் பையன் தெருப் பையன்களோடு கிரிக்கெட் ஆடிக்கொண்டு இருப்பதைப் பார்த்தேன்... சந்தோஷமாக!

**இ** ப்படித்தான் ஒரு நாள் மாணிக்கம் தாத்தா வீட்டுக்கு துளசி வந்தான். ஒரு பேய் மழையில் வந்து திண்ணையில் உட்கார்ந்து கொண்டான். எவ்வளவு சொல்லியும் போகாமல் 'ப்ப்ப்ப்பா... ம்ம்ம்மா... ய்யாய்யா' என ஏதேதோ சத்தமிட்டுக்கொண்டே இருந்தான். அவனுக்குப் பேச வராது. வாயில் அவ்வப்போது வழியும் எச்சிலைக் கைலியால் துடைத்தபடியே இருப்பான். ராத்திரிக்குப் பொறுக்க முடியாமல் ''ங்கொப்புரானனு வுட்டன்... அழுத்தக்காரக் கம்னாட்டியா இருக்கு...'' என்றபடி ஆத்தா வந்து அவனுக்குச் சாப்பாடு போட்டது. எதுவும் பேசாமல் பக்கு பக்கெனச் சாப்பிட்டான் துளசி. ரெண்டாவது நாளே கொட்டாயில் துண்டை விரித்துப் படுத்துக்கிடந்தான்.

மறுநாளே தாத்தா சொன்னார், ''என்னவோ... அந்த மகமாயிதான் இந்தப் பயல அனுப்பியிருக்கு. ஊர்ல எல்லாரையும் வுட்டுட்டு இங்க வந்து எதுக்கு ஒண்டிக்கிட்டான்? இங்கயே கெடந்துக்கட்டும்!'' அதிலிருந்து துளசி, தாத்தா வீட்டில் ஒருவனாகிவிட்டான்.

அவன் யார்? எங்கிருந்து வந்தான்? என யாருக்கும் தெரியாது. கேட்டால், புரியாமல் ஏதேதோ சத்தமிடுவான். ''அப்படியே வெளங்கிரும். கம்னாட்டி நடிக்குது... அதுக்கு என்னா தும்பமோ!'' என்பார் தாத்தா. துணிமணி எல்லாம் அவனுக்கும் சேர்த்து எடுக்க ஆரம்பித்தார்கள். சனிக்கிழமைகளில் காசு வாங்கிக்கொண்டு நீடாமங்கலத்துக்குப் படம் பார்க்கப்போவான். எப்போதும் வயக்காட்டிலும் வாழைத் தோப்பிலுமாகக் கிடப்பான்.

ஏழெட்டு வருடங்களுக்குப் பிறகு பக்கத்து ஊரிலேயே பெண் பார்த்து துளசிக்குக் கல்யாணம் செய்து வைத்தார்கள். அன்றைக்குக் கையில்

கல்யாணப் பத்திரிகையோடு நின்றபடி ஆத்தா அவனிடம், ‘‘என்னடா... இதையாவது ஒன் ஒறவுக்காரங்ககிட்ட போய் சொல்றியா? நா வேணும்னாலும் வர்றேன்’’ என்றது. அவன் எதுவும் பேசவில்லை. ஆத்தா ரெண்டு மூணு தடவை கேட்க, சட்டென்று கோபமாக ஏதேதோ கத்தியபடி பத்திரிகையை வாங்கி தாத்தாவிடம் தந்தான். அவன்பாட்டுக்குக் கத்தியபடி போய்விட்டான். எனக்குச் சட்டென்று மனம் கனத்துப்போனது. அவன் எவ்வளவோ சொல்லிவிட்டுப் போன மாதிரிதான் இருந்தது.

சௌந்தர் அண்ணன் சொன்னதும் இதுதான். ‘‘தம்பி, எதுரா சொந்தம்? உன் வாழ்க்கையிலயும் என் வாழ்க்கையிலயும் ஒளியடிச்சவன் பூராம் யாருடா? ரத்த சொந்தமா? அங்காளி பங்காளியா? நம்மள நேசிச்சதும் தூக்கிவிட்டதும் எங்கெங்கு இருந்தோ வந்த யார் யாரோதானடா... எவ்வளவு பேரு சேந்துடா நம்மள உருவாக்குறான்? நாம எல்லாருக்கும் சொந்தம்ரா. எல்லாரும் நமக்குச் சொந்தம். அதுக்கு நட்பு... அன்பு... அது இதுனு எதுனா பேர் வையி. ஆனா, எல்லாம் ஒறவுதான்!’’

**‘ஸ்** னோ அண்ட் டைகர்’ படம் பார்த்திருக்கிறீர்களா? ‘லைஃப் இஸ் ஃபியூட்டிஃபுல்’ எடுத்த ராபர்ட்டோ பெனினியின் இன்னொரு படம். அந்த ஹீரோ ஒரு கவிஞன். அவன் யதார்த்த உலகத்தில் இருக்கவில்லை என மனைவி அவனை வெறுப்பாள். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள். பிள்ளைகளை அவன் தன்னைப்போலவே வளர்ப்பான். ஒரு காட்சியில் அவர்கள் அறைக்குள் வௌவால்கள் வந்துவிடும். அவற்றை அடித்து வெளியே விரட்ட முயற்சிப்பார்கள் பிள்ளைகள். போகாமல் உள்ளேயே சுற்றிக்கொண்டு இருக்கும். ஹீரோ வந்து தன் பிள்ளையிடம், ‘‘இப்படி வெறுத்து அடிச்சா அது போகாது... இப்போ பாருங்க நான் சொல்ற பிரேயரைச் சொல்லுங்க’’ என்றபடி கீழே உட்கார்ந்து சொல்வான்.

‘‘வௌவாலே... உனது இடது பக்கம்தான் ஜன்னல் இருக்கிறது. அதில் நீ போகலாம்’’ என அவனும் பிள்ளைகளும் சொல்ல... வௌவால்கள் ஜன்னல் வழியே போகும். ‘‘அன்பா சொன்னா எல்லாமே

கேட்கும்'' என்பான். உண்மைதான், அன்பை உணர்வதும் உணர்த்துவதும்தான் இந்த உலகின் யாவற்றுக்குமான தேவை!

68

# சில விஷயங்கள ஏத்துக்கிட்டுதான் ஆகணும்!

**‘ந**மக்கு மட்டும் ஏன் இப்படி நடக்குது?’

வாழ்வில் அதிகமாக எதிர்கொண்ட கேள்விகளில் இதுவும் ஒன்று. எந்த பஸ்ஸுக்காகக் காத்திருக்கிறோமோ, அது எதிர் திசையிலேயே போய்க்கொண்டு இருக்கும். முதல் நம்பர் இருக்கும்... அடுத்த நம்பரும் இருக்கும், நாம் தேடிப் போகிற அட்ரஸ் மட்டும் அலைக்கழிக்கும்.

அவசர அவசரமாக ஓடிவரும்போது பத்தடி தூரத்தில் கடையை அடைத்துக் கற்பூரம் கொளுத்துவான். டீக்கே காசு இல்லாமல் போய்க்கொண்டு இருக்கும்போது, நாய்க் குட்டிக்கு சிக்கன் பிரியாணி ஊட்டிக்கொண்டு இருப்பார்கள். ‘‘அச்சோ ஸாரிப்பா... நீ புரொபோஸ் பண்ணது தப்பில்ல... நான் கணேஷை லவ் பண்றது உனக்குத் தெரியாதா?’’ என ஒருத்தியிடம் பட்டு வரும்போதுதான், எல்லாப் பயல்களும் அழகழகான ஃபிகர்களோடு திரிவான்கள்.

‘முக்கியமான மூணு கொஸ்டீனப் படிச்சாச்சுப்பா’ என எக்ஸாமுக்குப் போகும்போது, முக்கியம் இல்லாத நாலாவது கொஸ்டீன்தான் முதல் கொஸ்டீனாக இருக்கும். ரிசல்ட் பார்க்கப் போகிறபோது திரும்புகிற இடம் எல்லாம் டுடோரியல் விளம்பரங்களாக இருக்கும். முக்கியமான போன் வரும்போது எல்லாம் நாட் ரீச்சபிள் ஆக இருப்போம். வந்து போன் பண்ணினால், ஆபீஸர்கள் எடுக்கமாட்டார்கள்.



‘‘சன் நியூஸ்ல மழையப் பத்தி மக்கள் கருத்து சொல்லி இருக்கேன். ஏழு மணிக்குப் பாருங்க மாமா...’’ எனக் குடும்பத்தோடு உட்கார்ந்து இருக்கும்போதுதான் கரன்ட் கட் ஆகும். 8 மணி மீட்டிங்குக்கு 8.10—க்குப் போய்க்கொண்டு இருக்கும்போதுதான், டிரா·ஃபிக் கான்ஸ்டபிள் மடக்கி வறுவல் போடுவார். மெடிக்கல் ரிசல்ட் வாங்கப் போகும்போதுதான், வழி எல்லாம் கண்ணீர் அஞ்சலி போஸ்டர்கள் கண்ணில்படும். ‘இன்னிக்கு இருந்து குடிக்கவே கூடாது’ என உச்சகட்ட உறுதி எடுக்கும்போதுதான், ‘நார்வே சரக்கு வந்து இருக்கு... கிரில் சிக்கன் வாங்கியாச்சு. ராஜா சாங்ஸ் டவுன்லோட் பண்ணியாச்சு. அரைக் கிலோ ஆப்பிள் போதும்ல...’ என போன்கள் வரும்.

நமக்குப் பிடித்த டிசைனில் ‘38’ இருக்கும்... ‘42’ இருக்கும்... நமக்கான சைஸ் ‘36’ மட்டும் இருக்காது. குடும்பத்தோடு சினிமா கிளம்பும்போதுதான், போன் பண்ணாமல் விருந்தினர்கள் வந்து இறங்குவார்கள். நைட் ஷி·ஃப்ட் முடித்த கையோடு மனைவியை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகும்போது, ‘டோக்கன் நம்பர் 67...’ என்பார்கள். அன்ரிசர்வ்டு கம்பார்ட்மென்ட்டில் நெருக்கியடித்து மூச்சு முட்டும்போது, மேல் பெர்த்தில் கால் ஆட்டியபடி இயர்போனில் பாட்டு

கேட்டுக்கொண்டே, ‘இந்தியா டுடே’ புரட்டுபவரைப் பார்த்தால், எப்படி இருக்கும்? எனக்கு இதுவரை எதிர் பெர்த்திலோ, பக்கத்து சீட்டிலோ, ஒரு சமீரா ரெட்டிகூட வந்ததே இல்லை. கேட்கும்போது போக்குக் காட்டிவிட்டு, நாற்று பறிக்கும்போது அடித்து இம்சிக்கும் மழையை என்ன செய்வது? தேடும்போது எல்லாம் கிடைக்காமல், தேவை இல்லாதபோது எதிரே இளிக்கும் பொருளாக இருக்கிறது, பல நேரங்களில் இந்த வாழ்க்கை!

‘நமக்கு மட்டும் ஏன் இப்படி நடக்குது?’

**செ** ன்னை வந்த புதிதில் நான் பார்த்த ஒரு வேலையில், எனக்கு 800 ரூபாய்தான் சம்பளம். அதெல்லாம் 10—ம் தேதியோடு பணால். அப்புறம் எல்லாமே அன்புக் கடன்கள்தான். ஆனாலும், நான் பஸ்ஸிலோ, ரயிலிலோ ‘வித் அவுட்’ அடித்ததே இல்லை.

ஒரு நாள் 10 ரூபாயோடு பீச்சுக்கு பஸ் ஏற நின்றேன். என்னுடன் வந்த நண்பன் முஜிபுர் ரஹ்மான், ‘‘முருகா... டிக்கெட் எடுக்காத’’ என்றான்.

‘‘ஏன்... நீ எடுத்துர்றியா?’’

‘‘நாம எதுக்கு எடுக்கணும்? நாமெல்லாம் கவர்மென்ட்டோட தத்துப்பிள்ளைகள்யா... லூஸுப் பசங்கதான் டிக்கெட்லாம் எடுப்பாய்ங்க. நீ வா.’’ பஸ்ஸில் ஏறி டிக்கெட் எடுக்கவே இல்லை. கொஞ்சம் திகிலடித்தது.

‘‘டேய், செக்கர் வந்து பிடிச்சுட்டாங்கன்னா என்ன பண்றது?’’

‘‘ஐயே... நான் சென்னை வந்து நாலு வருஷம் ஆச்சு. ஒரு தடவகூட டிக்கெட் எடுத்ததே இல்ல. வித் அவுட்தான். இனிமே நீயும் இதையே மெயின்டெயின் பண்ணு. இந்தக் காசுல ஒரு டீ, வடையப் போடலாம்யா. டிக்கெட் எடுத்த மாரியே நில்லு...’’ என்றான் கேஷுவலாக. அதைக் கேட்டு கொஞ்சம் நெஞ்சு விடைக்க, விசிலடித்தபடி நின்றேன்.

எனக்கு ‘வித் அவுட்’ என்ற வார்த்தையிலேயே மனம் குதிரை ஏறியது. ஆஹா... எவ்வளவு அற்புதமான வார்த்தை. ‘வித் அவுட்’ என்றால் ஏதுமற்றவன்... அவன் துறவி... ஞானி. ஒரு கவிதை எழுதலாமே!

‘‘எல்லாரும் டிக்கெட்ட எடுத்துக் கைல வெச்சுக்கங்க’’ திடுதிப்பென்று எல்.ஐ.சி. ஸ்டாப்பிங்கில் பஸ்ஸை மடக்கி, இரு புறமும் செக்கர்கள் ஏறினார்கள். ‘‘ஒன் பை ஒன்னா வா... டிக்கெட் இல்லைன்னா, ஃபைன் 500 ரூவாய எடுத்து வெச்சுக்க’’ தடதடவென உள்ளே ஏறி வந்தார்கள். நான் ‘பரதேசி’ அதர்வா மாதிரி கிறுகிறுத்து நின்றேன். அடிவயிற்றில் ரிங்டோன்கள் கிளம்பின. கண் இமைக்கிற நொடியில் முஜிபுர் மொபைலைக் காதில் வைத்தபடி, ‘‘எம்.எல்.ஏ. ஆளுதான்யா... கார் வர்றதுக்கு இவ்வளவு லேட்டா? இந்நேரம் கோர்ட் ஆரம்பிச்சிருக்கும்... ந்தா வர்றேன்யா’’ எனக் கத்தியபடி செக்கரைப் பிடித்துத் தள்ளிவிட்டு வெளியே தவ்வி, எகிறி ரோட்டில் விழுந்து எதிர் திசையில் ஓடி மறைந்தான். எல்லாமே ‘கால்’ கட் பண்ணுகிற நொடியில் நடந்தது. செய்வது அறியாது திகைத்த செக்கர்கள், ‘‘ஹை கோர்ட்டுக்குப் போறதுக்கு எதுக்குய்யா பீச் வண்டில ஏறுனான்..? நாதாரி...’’ எனத் திட்டிவிட்டு, ‘‘நீ வா... டிக்கெட்ட எடு...’’ என என்னிடம் வந்தார்கள். அப்படியே காலரைப் பின்பக்கம் கவ்வி என்னை வெளியே இழுத்தார்கள்.

‘‘சார்... சார்... பாஸிங் விட்ருந்தேன் சார்...’’

‘‘யார்ட்ட..?’’

‘‘அவரு தவுசன் லைட்ல எறங்கிட்டாரு சார்...’’

‘‘அப்ப நீ ஜெமினிலயே இறங்கி இருக்கணும். வாடா...’’ — வண்டியில் அடைத்து ஸ்டேஷனுக்குக் கொண்டுபோனார்கள். அங்கே என்னைப் போலவே, ‘நமக்கு மட்டும் ஏங்க இப்படி நடக்குது நண்பர்கள்’ குழுமி இருந்தனர். எவ்வளவோ கொட்டடித்தும் கேட்கவே இல்லை.

கடைசியாக, எனது பழைய நோக்கியா போனை அவர்களிடம் கொடுத்துவிட்டு வந்து, 300 ரூபாயோடு போய் மீட்டு வந்தேன்.

டென்ஷனில் இருந்தபோது, டீக்கடையில் தம் அடித்தபடி முஜிபுர் அலட்சியமாகச் சொன்னான், ''முருகா... நான் நாலு வருஷமாப் போறேன், சிக்குனதே இல்ல. நீ மொத தடவையே சிக்கிட்ட... சில விஷயம் சில பேருக்குத்தான் அமையும்'' — அதிலிருந்து நான் வித் அவுட்டில் போனதே இல்லை.

ஆமாம்... சில பேருக்குத்தான் சில விஷயங்கள் அமையும்.

**நா** னும் ஜெயசீலனும் பள்ளிக்கூடம் முடிகிற வரை கிளாஸ்மேட். ஒரே பெஞ்சுக்காரர்கள். அவன் அப்பா டவுனில் பி.வி.சி. பைப் கடை போட்டு இருந்தார். வசதியான குடும்பம். காலேஜ் முடித்துவிட்டு நானும் மற்ற நண்பர்களும் வேலை எதுவும் செட் ஆகாமல் வெட்டியாகச் சுற்றிக்கொண்டு இருந்தபோது, ஜெயசீலனுக்கு அவனது அப்பா தனியாகக் கடை போட்டுக் கொடுத்துவிட்டார். நாங்கள் கைலியும் கவலையுமாகக் கையில் பைசா இல்லாமல் திரியும்போது, ஜெயா ஜம்மென்று கல்லாவில் முதலாளியாக உட்கார்ந்துவிட்டான்.

வெள்ளை வேட்டி — சட்டையும் கழுத்தில் பட்டைச் செயினுமாகக் கல்லாவில் உட்கார்ந்தபடி, ''என்ன மாப்ள... ஜாப் எதுவும் கெடைக்கலையா? எப்பிடிறா மாசக் கணக்குல சும்மா இருக்கீங்க?'' என்பான். நாங்கள் கிரிக்கெட் டோர்னமெண்ட்டுக்கு வேடிக்கை பார்க்கப் போய் உட்கார்ந்து இருந்தால், அவன் 1,000 ரூபா டொனேஷன் குடுத்துவிட்டு, ஆட்டத்தைத் துவக்கி வைத்துவிட்டுப் போவான்.

ஒரு முறை ஒயின் ஷாப்பில் வைத்து ஏதோ தகராறு வந்துவிட்டது. சேகர் வெகுண்டெழுந்து, ''போடா ..ரு... உங்கப்பன் சீமக்கருவ... எங்கப்பன் எருக்க... அந்தாளு போட்ட ரூட்ல நீ சடக்குனு கல்லால உக்காந்துட்ட. இல்லைன்னா, நீயெல்லாம் இருந்த இருப்புக்கு இங்கதான்டி தட்டு கழுவணும். பெருசா காசக் காட்டிப் பீத்தாத. எங்களுக்கு அமையல... அதான் இப்படிக் கெடக்குறோம். நாங்களேதான்

கைய ஊன்டி ஊன்டி வரணும்... ஓங்காசு பத்துக்கு எங்காசு அஞ்சு சமானம்... போடா'' என்றான். அப்படியே என் மேல் சாய்ந்து, ''மாப்ள... நமக்கு மட்டும் ஏன்டா இப்படி எல்லாம் நடக்குது? நமக்கும் அப்படி ஒரு அப்பா பேக்ரவுண்டு வந்துருக்கலாம்ல...'' எனப் புலம்பினான். இரண்டு பேரும் ரொம்ப நாளைக்குப் பேசாமல் இன்னொரு பார்ட்டியில் சேர்ந்தார்கள்.

எனக்கு இப்போதும் சில அரசியல், கலை உலக வாரிசுகளை எல்லாம் பார்க்கும்போது ஜெயசீலன் ஞாபகம்தான் வரும்.

**''எ** னக்கு மட்டும் எதுவும் சீக்கிரமே கிடைக்காது. அது என் ராசி...'' என்று அடிக்கடி சொல்வான் குரு. ''என் அண்ணனுக்கு எல்லாமே உடனே நடந்துரும்ங்க... சின்ன விஷயம்னாக்கூட எனக்கு அது நடக்கறதுக்குள்ள நாக்கு தள்ளிடும்ங்க...'' என்பார் பாண்டி.

நண்பன் லெனினுக்குச் சமீபமாக நடந்தது எல்லாமே ரம்மி ஆட்டம் மாதிரிதான் இருந்தது. முட்டி மோதி உழைத்து, கஷ்டப்பட்டு சேர்த்து வீடு கட்டினான்... கார் வாங்கினான். கல்யாணம் பண்ணிக் காசு சேர்க்கும்போது, அடுத்தடுத்து அவன் குடும்பத்தில் நடந்தது எல்லாமே துயரங்கள். அம்மாவுக்கு கேன்சர் வந்து பெரும் பணம் செலவழித்து சிகிச்சை எடுத்தார்கள். அது முடிவதற்குள் அப்பாவுக்கு பைபாஸ் ஆபரேஷன் பண்ணி... கொஞ்ச நாளில் இறந்துவிட்டார். அடுத்து மச்சானுக்கு நடந்த ஒரு விபத்தில் வீட்டையே விற்றான். சின்னதும் பெரிதுமாக அவ்வளவு பிரச்னைகளோடும் விடாமல் வேலை பார்த்து, அப்படியே சிரித்துக்கொண்டு தினசரி கடக்கிறவனை நினைத்தால் ஆச்சர்யமாக இருக்கிறது.

ஒரே ஒரு தருணம் அவன் மச்சானை வைத்திருந்த மருத்துவமனை வளாகத்தில் நின்றபடி, ''நமக்கு மட்டும் ஏன்டா இப்படி நடக்குது... தெரியலையே... நாளைக்கு திருநள்ளாறு கிளம்பலாம்னு பாக்கறேன்!'' என்றபோது அவனது கண்களில் விடை இல்லாத ஒரு கேள்வி நெருஞ்சியைப்போலக் கிடந்தது.

திடுதிப்பென்று என்ன நோய் என்றே தெரியாமல் மொத்த உடலும் சுருங்கி, முப்பத்தஞ்சு வயதில் ஒரு குழந்தையைப்போல திண்ணையில் கிடந்த நாகுவை... நாப்பத்துச் சொச்சம் வயதில் வாரத்துக்கு இரண்டு முறை கோயம்புத்தூர் ஆஸ்பத்திரிக்குப் போய் டயாலிசிஸ் பண்ணிக்கொண்டு வாழும் ஞானத்தை... வகுப்புத் தோழி கட்டிய பங்களாவிலேயே சித்தாளாக வேலை பார்த்ததை, அந்த வீட்டைக் கடக்கும்போது எல்லாம் பெருமையாகச் சொல்லிக்கொள்ளும் சுதாக்காவை... கல்யாணத்துக்கு முதல் நாள் சாயங்காலம் பெண் ஓடிப்போக, மறுநாள் மண்டபத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் நின்ற பாஸ்கரனை... பெற்ற நாலு பிள்ளைகளும் கைவிட்டுவிட, பெரியாஸ்பத்திரி பிரசவ வார்டில் வந்து தர்மத்துக்கு வேலை பார்க்கிற மணியம்மாவை... நினைக்கிறபோது எல்லாம் நான் ரொம்பவும் சின்னவனாகத் தெரிகிறேன்.

**நே**ற்று சார்லஸ் வந்திருந்தான். பெசன்ட் நகர் சர்ச் பக்கம் இருக்கிற குப்பத்தில் இருப்பவன். நண்பன் பரமுவின் நண்பன். அப்படித்தான் அவன் எனக்கு அறிமுகம். சுனாமி வந்த நாளில், பீச்சுக்குப் போன சார்லஸை ஒரு பேயலை வந்து தூக்கி மண்ணில் சொருகியது. என்ன... ஏதென்றே தெரியாமல் நினைவு இழந்து மணலில் கிடந்தவனை ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ப் போட்டார்கள். எப்படியோ பிழைத்துவிட்டான். எழுந்து வந்தால் அவனது குடும்பத்திலேயே இன்னும் இரண்டு உறவுகளைக் கொண்டுபோய்விட்டது கடல்.

இவனுக்குள் ஏகப்பட்ட தண்ணீரும் மணலும் உள்ளே போய் ஆளே உருக்குலைந்துவிட்டான். இப்போது வரைக்கும் சாப்பிட்டாலே வயிறு வலிக்கும். அப்படியும் மீண்டுவந்து, வேலைக்குப் போக ஆரம்பித்துவிட்டான். இன்னமும் சிரிக்கிறான். இந்த உலகை ரசிக்கிறான். அவனை விடுவதற்காக ஈ.சி.ஆர். பக்கம் இருக்கிற சுனாமி குடியிருப்புக்குப் போனேன். அங்கே பையன்கள் கிரிக்கெட் ஆடிக்கொண்டு இருந்தார்கள். சட்டென்று ஏதோ தோண சார்லஸிடம், ''நமக்கு மட்டும் ஏன் இப்படி நடக்குது?னு யோசிச்சுருக்கியா தலைவா..?'' என்றேன்.

அவன் சிரித்தபடி சொன்னான், ‘‘அப்பிடிலாம் இல்ல சார்... எவ்வளவோ பேருக்கு எவ்வளவோ நடக்குது. சில விஷயங்கள ஏத்துக்கிட்டுதான் ஆகணும். ஏத்துக்கிட்டாதான் மனுஷன். சுனாமி வந்தப்ப இந்த எடம் எப்பிடிக் கெடந்துச்சு... இப்ப எப்பிடி இருக்கு? என்னா சார்..?’’ எனக்கு சுருக் என்றது. ஒரு பையன் பந்தை ஓங்கி அடிக்க... சட்டென்று உற்சாகமாகி கையைத் தூக்கினான் சார்லஸ், ‘‘டோலு... சிக்ஸர்றா!’’

# 69

# உறவுகள் தரும் உணர்வுகள்!

"**தா** ய்மாமனாயிட்ட... இன்னும் இப்பிடிப் பொறுப்பு இல்லாமச் சுத்திட்டு இருந்தா எப்பிடிறா? நந்து பொண்ணுக்குக் காதுகுத்து வெச்சிருக்கு. மாமன் என்ன பண்ணப்போறாப்ல?"

நேத்து போனில் அம்மா இப்படிக் கேட்டபோது, வீட்டுக்குள் நுழைகையில் முதல்முறையாக நிலைப்படியில் இடித்துக் கொண்டது மாதிரி இருந்தது.

நாம் வளர்ந்துவிட்டோம். இப்போதுதான் என்னை திருச்செந்தூருக்குக் கூட்டிப்போய் மொட்டை போட்டுக் காது குத்திய மாதிரி இருக்கிறது. தாய்மாமன் மடியில் உட்கார்த்தி காது குத்தி, அழும்போது வாயில் கற்கண்டும் வாழைப் பழமும் திணித்து சொந்தங்கள் சிரித்தது முந்தாநேத்து நடந்த மாதிரி தோன்றுகிறது.

இப்போது ஊருக்குப் போயிருந்தபோது, தீபாவளிக்கு மறுநாள் போஸ்ட்மேன் மணியார்டர் கொண்டு வந்தார். அம்மாவுக்கு சௌந்தர்ராஜன் மாமா தீபாவளி சீர் பணம் அனுப்பியிருக்கிறார். அதை வாங்கக் கையெழுத்து போடும்போது, அம்மா அதன் சொந்த ஊர் நெய்க்குன்னத்துக்குப் போய்விட்ட மாதிரி இருந்தது. கோழிக் கிறுக்கலில், 'ஆயி... தீபாவளி சீர் ஆயிரத்தைப் பெற்றுக்கொள்ளவும்' என எழுதி இருந்த ரசீதோடு, அந்தப் பணத்தை அப்பா படத்துக்குக் கீழே வைத்துக் கும்பிட்டது அம்மா. பணமா அது..? அது, 40

வருடங்களுக்குப் பிறகும் அக்காவை நினைத்துக்கொள்கிற தம்பியின் மனசு.

பெருஞ்சருகுகள் உதிர்ந்துவிட்ட உறவின் கிளைகளில் துளிர்க்கும் பசும் தளிர். எனக்கு என் தங்கச்சிகளைப் பற்றி பெரிதாக எதுவும் தெரியாது. அவர்களது உலகத்தில் நுழைந்ததே இல்லை. வி.ஆர்.என். மண்டபத்தில் கல்யாணம் முடிந்து, காரில் வீடு திரும்பும்போது, பின் சீட்டில் மாப்பிள்ளையோடு உட்கார்ந்துகொண்டு, முன் சீட்டில் இருந்த என் கையை வீடு வரைக்கும் பற்றிக்கொண்டு வந்தது நந்து. இறங்கும்போது மாப்பிள்ளை என் காதருகே வந்து மெதுவாக, ‘‘கவலைப்படாதீங்க மச்சான்... உங்க வீட்டைவிட உங்க தங்கச்சியை நல்லாப் பார்த்துக்குவோம்" என்றார். அப்போதுதான் நான் அண்ணனாக இருப்பதையே உணர்ந்தேன். பக்கத்திலேயே வளரும்போதெல்லாம் இல்லாமல், தங்கைகளை வழியனுப்பிவைக்கும் ஒரு கணம்தான் நம்மை அண்ணன்களாக்கிவிடுகிறது.

**உ** றவுகளின் அற்புதத்தையும் முக்கியத்துவத்தையும் நான் சமீபமாகத்தான் அறிகிறேன். பொறுப்பு என்பதையே இப்போதுதான் உணர்கிறேன். அது நம்மை அறியாமல் நடக்கிறது.

பொன்மலருக்கு அப்ளிகேஷன் நிரப்பப் பள்ளிக்குச் சென்று நிற்கும்போது, ‘‘யாரு நீங்க... அவங்க சித்தப்பாவா?’’ எனக் கேட்ட தருணம்... கடைத்தெருவில் நின்றாலே திட்டுகிற நடராஜன் மாமா, கட்டாரி மாமா கருமாதியில் வைத்து, ‘மாப்ளைக்கு ஒரு க்ளாஸ் ஊத்திக் குடு’ என்றபோது, ‘சிவன் கோயில எடுத்துக்கட்றோம். உங்க அப்பா எடத்துல நீங்கதான நிக்கணும். அர்ச்சனத் தட்ட முருகங்கைல குடு’ என காளிதாஸ் சொன்னபோது, ‘அண்ணே! நான் ஒரு பையன லவ் பண்றேன். நீங்கதான் எங்க வீட்ல சொல்லிப் பேசி வைக்கணும்’ என செல்வா தங்கச்சி போன் பண்ணியபோது, ‘காலேஜ்ல ஆனுவல் ஃபங்ஷண்ணே... அப்பா வர முடியாது. நீங்களும் அம்மாவும் வாங்கண்ணே’ என அருண் வந்து நின்றபோது என, அது பாட்டுக்கு நடக்கிறது.

‘அது மாசமா இருக்குல்ல... ஒரு வாரமா ஒரே வாந்தி. கஷ்டமா இருக்கு. வீட்ல நான்தான் சமைக்கிறேன். சீக்கிரம் போகணும் பாஸ்’ எனக் கிளம்பிப் போகிற சிவஞானத்தைப் பார்த்தால் ஆச்சர்யமாக இருக்கிறது. யாரையும் போகவிடாமல் டார்ச்சர் பண்ணுகிற பார்ட்டியா இவன்!? ஓர் உறவு ஏற்படுத்தும் கெமிஸ்ட்ரி அவ்வளவு அழகு.

மனைவி பிரசவத்துக்கு ஊருக்குப் போன கார்த்தியிடம் இருந்து, ‘நிலா வந்தாச்சு’ என வந்த குறுந்தகவலிலேயே அவனது முகம் தெரிந்தது. ‘பாப்பா நைட்டெல்லாம் தூங்கவே விடமாட்டேங்குது அண்ணே’ எனச் சொல்லும்போது அவனிடம் எவ்வளவு சந்தோஷம்? அங்கே இங்கே என நாலு லட்ச ரூபாய் ரெடி பண்ணிக்கொண்டு போய், ராமச்சந்திரா ஆஸ்பத்திரி வராந்தாவில் நின்றபோதுதான், சந்திரமோகன் மனுஷனாகவே மாறியிருந்தான். யார் யாரின் நெஞ்சிலும் தோளிலும் கிடந்த நாம், அண்ணனாக, மாமனாக, சித்தப்பனாக, அப்பனாக மாறுகிற தருணங்கள் அற்புதமானவை, துயரமானவை, அழகானவை.

**உ** றவுகளைப் பற்றி அறியவும் புரியவும் ஒரு காலம் இருக்கிறது. ‘முத்துகிருஷ்ணன் மாமா நீடாமங்கலத்துல ஒரு டீச்சர வெச்சுருக்காராம்’ என முதன்முதலாகக் கேட்டபோது, எனக்கு அதிர்ச்சியாக இருந்தது. சித்ரா அத்தைக்குத் துரோகம் பண்ண இந்தாளுக்கு எப்படி மனசு வந்தது எனப் பொங்கியது. சித்ரா அத்தை அப்படி ஒரு மனுஷி. ஊருக்குப் போனால் அப்படித் தாங்கும். இளநி வெட்டித் தந்து, கோழி அடித்துப் போட்டு, கயிறு கட்டிவிட்டு ‘தங்கம்... தங்கம்...’ எனக் கொஞ்சிக் குழையும். நம்மையே இப்படிப் பார்த்துக்கொள்கிறவள் மாமாவை எப்படிப் பார்த்துக்கொள்வாள் எனத் தோன்றும்.

"எங்க... அந்த மனுஷன் வூட்டுக்கு வந்து ஒரு மண்டலம் ஆச்சு... நீடாமங்கலத்துலயேதான் கெடக்குறாரு" என குதிரில் சாய்ந்து மூக்கு சிந்தியபோது, மாமா மேல் கோபமாக வந்தது. ‘அந்தாளைப் பார்த்து நாக்கப் புடுங்கற மாதிரி கேக்கணும்’ எனத் தோன்றியது. அவரைப் பார்க்கவே முடியவில்லை. மூர்த்தி தாத்தா இறந்தபோது ஊருக்கு

வந்திருந்தார். பந்தலில் கூட்டத்துக்கு நடுவே உட்கார்ந்திருந்தபோது போனேன். அங்கேயே வைத்து, ‘என்ன மாமா... நீடாமங்கலத்துலயே கெடக்குறீங்களாமாம். வீட்டுக்கே வர்றதில்லைனு அத்தை அழுவுது. ஏன் இப்பிடிப் பண்றீங்க?’ எனக் கேட்கிற ஆவேசத்தில் போனேன். ‘நீடாமங்கலத்திலேயே’ எனக் கேட்டால், எல்லோருக்கும் புரியும். நாலு பேருக்கு முன்பு அசிங்கப்படட்டும் என நினைத்தேன்.



நான் பக்கத்தில் போய் நின்றதுமே என்னைப் பார்த்தவர் சட்டென்று, "வாடா மாப்ள... ஏய் இங்க பாரு... நான் சொன்னேன்ல இவந்தான் ராஜேந்திரன் சின்னப் பையன். மாப்ள இது ஒங்க டீச்சர் அத்தடா" என்று பக்கத்தில் இருந்த ஒரு பெண்மணியைக் காட்டினார். அந்த டீச்சர் அவ்வளவு சாந்தமாக இருந்தார். என்னைப் பார்த்துக் கும்பிட்டார். எனக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. உள்ளே போனால் பொம்பளைங்க கூட்டத்தில் அத்தை உட்கார்ந்து இருந்தது. என்னைப் பார்த்ததும், "எலேய்! துணி சாத்தறதுக்கு உங்க மாமாவ வந்து பக்கத்துல நிக்கச் சொல்றா" என்றது.

இத்தனை வருடங்களுக்குப் பிறகு இப்போது மாமா இறந்துவிட்டார். சமீபத்தில் வீட்டில் ஒரு விசேஷம். பத்திரிகை பிரித்து வைத்துக்கொண்டு இருந்தபோது, முந்தானையில் கை துடைத்தபடி வந்த சித்ரா அத்தை

ரொம்பவும் கேஷுவலாக, "அந்த டீச்சருக்குப் பத்திரிக்க எழுதியாச்சா? ஒண்ணு குடுத்துருங்க" என்றது.

**க** ல்யாணமாகி, இரண்டு வயசுப் பிள்ளை இருக்கும், உறவுக்காரி ஒருத்தி, இன்னொரு மனுஷனோடு வாழப்போய்விட்ட ஒருநாள் அவ்வளவு அதிர்ச்சியாக இருந்தது. 10 வருடங்களுக்குப் பிறகு ஒரு தருணம் அதை சாலிகிராமத்தில் பார்த்தபோது, ஆளே அடையாளம் தெரியவில்லை. இளைத்துக் கறுத்து அப்படி நின்றது. "எப்பிடி இருக்கீங்க?" எனக் கேட்டதற்கு, "ஒறவுங்க சாபம் என்ன சும்மாவா வுடும்?" என்றது சிரித்தபடி. அது அசரீரி மாதிரி கேட்கிறது இப்போதும்.

ஒவ்வொரு முறையும் இந்த உறவுகள் தரும் உணர்வுகள்தான் நம்மைப் பெரிய மனுஷனாக்கிக்கொண்டே இருக்கின்றன. வெவ்வேறு ஆழங்களுக்கு இட்டுச் செல்கின்றன. ஏதோ ஒரு சண்டை. 10 வருடங்களுக்கும் மேலாகிவிட்டது. இப்போதும் 'செந்திலு எப்பிடி இருக்கு? அதுக்கு ரெண்டாவது புள்ள பொறந்துருக்காம்ல...' எனப் பிடித்தமான உறவிடம் மீடியேட்டர் வைத்துப் பேசிக்கொண்டிருக்கும் ஓர் அத்தை, 'உண்மைல எனக்கும் அதுக்கும் என்ன நடந்துச்சு தெரியுமா முருகா' எனச் சமீபத்தில்தான் என்னிடம் எல்லாவற்றையும் பேசியது.

**'ம** க கல்யாணம் வெச்சுருக்கேன்... இத்தன வருஷம் பேசாமக் கெடந்தாச்சு. இத சாக்காவெச்சு மறுக்கா பாத்துக்கலாம்னு பாக்கறேன். சிவா அண்ணன்ட்ட பேசுறியா?' என இப்போதுதான் மஞ்சுக்கா கேட்கிறது. 'தங்கச்சி கல்யாணத்துக்கு 20 சவரன் தேவப்படுது. லோனுக்கு செக்யூரிட்டி கையெழுத்து போடுறியா?' என்று ஹாலில் காபி குடித்தபடி அருணா கேட்டது நேற்றுதான். 'செத்தா வந்து சேந்துருங்கய்யா... வேல கீலனு ஒருநா பாக்காதீங்க. சீவன் தேடும்யா' என சத்தி தாத்தா போனில் தழுதழுத்தபோது என்னவோ போலிருந்தது. தாத்தாவாகிவிட்ட பிறகு வரும் உணர்வுகளை அந்தக் குரல் கடத்துகிறது. கடைசி வரை உறவுகளையே தேடுகிறது நினைவு. சொந்தபந்தம் வந்து நிற்கிற கரையிலேயே உறைந்திருக்கிறது ஒவ்வொரு ஜீவனும்.

‘**எ** னக்கும் இவங்களுக்கும் இனிமே எதுவுமே இல்லைனு எழுதிக் குடுத்துர்றேன். அவங்களையும் கையெழுத்து போடச் சொல்லுங்க’திருச்சி போலீஸ் ஸ்டேஷனில் நின்றபடி மாலதியக்கா இப்படிச் சொன்னபோது, ராமின் குடும்பமே நிலைகுலைந்து நின்றது. ராம் என் நண்பன். அவனது ஒரே அக்கா மாலதி. அய்யர் குடும்பம். அவ்வளவு கட்டுப்பாடாக வளர்ந்த பெண். பி.எஸ்ஸி., இரண்டாம் ஆண்டு படித்தபோது, வீடியோ கேசட் வாடகைக்கு விட வருகிற வேறு சாதிப் பையனோடு ஓடிப்போனது.

ராமுவுக்கு அக்கா மேல் அவ்வளவு பாசம். இதை அவனாலும் அந்தக் குடும்பத்தாலும் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை. அந்தக்கா அந்தப் பையனோடு ஸ்டேஷனுக்குப் போய்விட்டது. அந்த இன்ஸ்பெக்டர், "ஏம்மா அய்யர் பொண்ணா இருக்க... இதெல்லாம் ஒனக்குத் தேவையா..?" என்றபடி அந்தப் பையனிடம் திரும்பி, "ஏம்ப்பா... ஒன்னைய டவுசரக் கழட்டி உக்காரவைக்கவா? பேசாம அவங்க வீட்ல இத விட்டுட்டுப் போயிரு" என்றார். இருவரும் கேட்கவே இல்லை. "ஏம்மா... ஒங் குடும்பத்தோட பத்து நிமிஷம் பேசு... போ" என அனுப்பி வைத்தார். ஸ்டேஷன் வாசலில் மொத்தக் குடும்பமும் கதறியது. "நா அவரத்தான் கட்டிக்குவேன்... என்ன விட்ருங்க" என்பதைத் தவிர எதுவுமே சொல்லவில்லை அந்த அக்கா. "வாக்கா, வீட்டுக்குப் போயிரலாம்" என ராம் தோளில் கை வைத்தபோது சட்டென்று அதைத் தட்டிவிட்டு, "நீ யாரு... ஹலோ! ஏட்டு சார் இவன் யார்னே தெரியல. என்னன்னு கேளுங்க" என்றது. அவன் அதிர்ந்துவிட்டான். ஸ்டேஷனில் "இனி, இந்தக் குடும்பத்துக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை" என எழுதிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டது மாலதியக்கா. தனது டைரியில், ‘எனக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தார்கள். அதில் ஒரு பெண் இன்று இறந்துவிட்டாள்’ என எழுதி வைத்தார் ராமின் அப்பா. அந்த அக்கா தன் கணவனோடு பக்கத்துத் தெருவில்தான் வாழ்ந்தது. குடும்பத்தோடு பேச்சுவார்த்தையே கிடையாது. ராம் வழியில் அக்காவையோ மச்சானையோ பார்த்துவிட்டால், கொலை வெறியாவான்.

மூன்று வருடங்களுக்குப் பிறகு ஒரு நாள் மாலதியக்கா கணவன், வழியில் ராமைப் பார்த்து, "உங்கக்கா உன்னையப் பாக்கணும்ங்குது. ஒரு தடவ வந்துட்டுப் போயேன் ப்ளீஸ்" என்றார். அவன் முறைத்துவிட்டு வந்தான். அதன் பிறகு, எங்கு பார்த்தாலும் அவர் இதைச் சொல்லிக்கொண்டே இருந்தார். ஒரு நாள் அக்காவைப் பார்க்கப் போகிற முடிவை எடுத்தான் ராம். "ஒனக்கு இஷ்டம்னா, போய்ப் பாத்துட்டு வாடா" என்றார்கள் அப்பா, அம்மா. "இல்லம்மா... அவ நாண்டுக்கிற மாரி நாலு வார்த்த கேட்டுட்டு வந்துர்றேன். அதுக்குத்தான் போறேன்" என்று சொல்லிவிட்டு சைக்கிளில் என்னையும் ஏற்றிக்கொண்டு ரயிலடி கல்லுப் பாலத்துக்குக் கிளம்பினான்.

அது ஒரு சாயங்காலம். பாலத்தில்போய் உட்கார்ந்திருந்தோம். ‘அவ வரட்டும்... என்ன கேக்குறேன் பாரு... ஏதாவது பேசுனா, மொகரையப் பேக்குறேன்’ என முஷ்டியை முறுக்கிக்கொண்டே குனிந்து உட்கார்ந்திருந்தான் ராம். அவன் அக்காவும் மச்சானும் வந்தார்கள். இவன் நிமிர்ந்தே பார்க்கவில்லை. அந்த அக்கா மெதுவாக வந்து அவன் பக்கத்தில் நின்றது. ரொம்ப யதார்த்தமாக முந்தியால் விசிறிக்கொண்டே, ‘உஷ்ஷ்ஷ்... யப்பாடா...’ என அவன் தோளில் கை போட்டது. பயங்கரக் கோபமாக ராம் திரும்பிப் பார்த்தான். மேடிட்ட வயிற் றுடன் ஒரு கையால் இடுப்பைப் பிடித்தபடி உட்கார்ந்திருந்த அக்காவைப் பார்த்தான். ஒரு கணம்தான்... விசுக்கு விசுக்கென்று தேம்பியபடி கேட்டான்... "அக்கா... எப்பிடிக்கா இருக்க?".

70

# லைஃப் இஸ் பியூட்டிஃபுல்!

**நீ**ங்கள் மனநல மருத்துவரிடம் போயிருக்கிறீர்களா? நான் ஒரு முறை போயிருக்கிறேன். 3 வருடங்களுக்கு முன்பு. காரணம், சிம்பிள்... 'தூக்கமே வரமாட்டேங்குது சார்!'

சைக்கியாட்ரிஸ்ட்டிடம் செல்ல வேண்டும் என முடிவு எடுத்த பிறகு, என் சாய்ஸ் டாக்டர் ருத்ரன். பி.சி.ஸ்ரீராம்போல போட்டோவில் பார்க்கும்போதே சிநேகமாகிவிடுகிற ஒரு முகம் அவருக்கு. ஆனால் நண்பன், விடாப்பிடியாக முகப்பேரில் இருந்த ஒரு மருத்துவரிடம் அழைத்துச் சென்றான். பழைய நடிகர் முத்துராமன் மாதிரி புன்னகையே முகமாக இருந்தார் அவர்.

''தூக்கமே வரமாட்டேங்குது சார்...''


''சொல்ல முடியாமப் போட்டு வெச்சிருக்கிற கவலைகள் ஏதாவது உங்க மனசுல இருக்கா?''

''சொல்ல முடியாமல்லாம் எதுவும் இல்ல சார்... சொல்ற மாதிரிதான் இருக்கு. எல்லார்ட்டயும் சொல்லிட்டுத்தான் திரியுறேன்...''

''நீங்க மேரிடா..?''

''இல்ல சார். ஆனா, அதெல்லாம் எனக்குக் கவல இல்ல சார்...''

உரையாடலின் முடிவில் டாக்டர் இப்படிச் சொன்னார்.



‘‘ராஜு... உலகத்துல நாம ப்ரெடிக்ட் பண்ண முடியாத விஷயம் நம்ம மனசுதான். கீழை நாடுகள்ல பார்த்தீங்கன்னா, நிறையப் பெண்கள் நெஞ்சு வலி, முதுகு வலினு ஆஸ்பத்திரி ஆஸ்பத்திரியா சுத்திட்டு இருப்பாங்க. உண்மையில அவங்களுக்கு எதுவுமே இருக்காது. மனப் பிரச்னைதான்... அந்த மனப் பிரச்னை வரும்போது குறிப்பிட்ட இடத்துல வலிக்கிற மாதிரி ஃபீல் பண்ணிக்குவாங்க... அதான். இந்த மனசு நமக்கே தெரியாம நிறைய விஷயங்களைச் சேத்துவெச்சுக்கும்... சீழ் பிடிக்கிற மாதிரிதான். அப்புறம் கெடந்து அனத்திட்டே கெடக்கும். ஐ திங்... வெயிட்டிங்தான் உங்க பிரச்னை. காத்திருப்பு... லைஃப்ல நெனச்சது அமையாமத் தள்ளிப்போயிட்டே இருக்கிற தவிப்பு. அது தர்ற அழுத்தம். அதான் பிரச்னை. முதல்ல ஃபீல் ஃப்ரீ...’’

டாக்டர் இன்னும் என்னென்னவோ சொன்னார். தூக்கம் வருவதற்குச் சில பயிற்சிகள் சொல்லித் தந்தார். அது க்ளினிக் மூடுகிற நேரம். நான் வெளியே வந்தபோது, அங்கு இருந்த கம்பவுண்டர் ஒருவர் என் கூடவே வந்தார்.

‘‘சார்... நீங்க சினிமாலயா இருக்கீங்க?’’ என்றார்.

‘‘ஆமா...’’

‘‘நானும் சினிமா ஆசையில வந்தவன்தான் சார். நெறைய கதைலாம் எழுதி வெச்சிருக்கேன். அப்படியே வாழ்க்கை வேறு திசைல போயிருச்சு. ஆப்போஸிட்லதான் என் வீடு. வாங்களேன் சார்... டாக்டர் சொன்ன பிராக்டீஸ்லாம் சி.டியில இருக்கு. தர்றேன்...’’

தொட்டிச் செடிகள் வைக்கப்பட்ட வாசல். ஹால் முழுதும் விதவிதமான ஓவியங்கள் மாட்டப்பட்ட சின்ன வீடு.

‘‘உக்காருங்க சார்...’’ என்றபடி வெளியே போய் காய்ந்துகொண்டு இருந்த புடைவைகளை எல்லாம் எடுத்துவந்து மடித்து வைத்தார். ‘‘என்ன சார் சாப்பிடுறீங்க...’’

‘‘அதெல்லாம் ஒண்ணும் வேணாம் சார். தண்ணி மட்டும் குடுங்க...’’ என்றதும் உள்ளே எட்டிப் பார்த்தார்.

‘‘பத்மா... பத்மா... தண்ணி கொண்டா...’’ என்றார். உள்ளே ஏதோ சத்தம் கேட்டது. இவர் எழுந்து போய்ப் பார்த்தார்.



‘‘ஆங்... அப்பிடித்தான்... எடுத்துட்டு வா...’’ என்றபடி வந்து உட்கார்ந்து சிரித்தார். ஒரு பெண்மணி நடுங்கும் கைகளில் டம்ளரைப் பிடித்தபடி உள்ளே இருந்து நடந்து வந்தார். மிக மெதுவாக நடந்து வந்து டம்ளரை நீட்டியபடி அப்படியே நின்றார். பார்க்கவே விசித்திரமாக இருந்தது. இவர் அந்த டம்ளரை வாங்கிக்கொண்டு, ‘‘வெரிகுட். தண்ணி தந்தாச்சு... உள்ள போங்க’’ என்றதும் கொஞ்ச நேரம் அப்படியே நின்றுவிட்டு, உள்ளே போனார்.

அவர் சிரித்தபடி எங்களைப் பார்த்து, ‘‘என் ஒய்ஃப்தான் சார்... கொஞ்சம் புத்தி சுவாதீனம்... ஒரு வாரமாப் பரவாயில்ல. ந்தா... இப்பிடித் தண்ணி கொண்டாந்து தருது பாருங்க. இங்க வாங்களேன். சாயங்காலம் வாசல்ல பாதி கோலம் போட்ருக்கு. பாருங்களேன்...’’ என்றார். வாசலில் முடிவடையாத பாதி கிருஷ்ணர் கிடந்தார்.

‘‘நாங்க லவ் மேரேஜ் சார். அது ஆர்ட்டிஸ்ட்டு. தஞ்சாவூர் பெயின்ட்டிங்லாம் நல்லா வரையும். இங்க மாட்டிருக்குற படங்கள்லாம் அது வரைஞ்சதுதான். நல்லாத்தான் இருந்துச்சு. நாலு வருஷத்துக்கு

முந்தி இப்பிடி நெனப்பு தட்டிப்போக ஆரம்பிச்சுது. ஒரு நாள் திடீர்னு ஹிஸ்டீரியா மாதிரி வந்துருச்சு. அன்னைக்குப் போனதுதான் என் தூக்கம். இப்ப வரைக்கும் திரும்பலை. ஆஸ்பத்திரி, கோயில்னு அலைஞ்சு திரிஞ்சுட்டேன். எதாவது ஆஸ்பத்திரியில சேத்துவிட்ருனு சொன்னாங்க. எனக்குக் கேக்கல. வீட்டோடயே வெச்சுக்கிட்டேன். அது ஒண்ணும் பண்ணாது சார். எதையும் கெரகிச்சுக்க முடியாது, அப்பிடியே கெடக்கும்... செல நேரம் ரொம்ப அனத்தும்... இப்ப ஒரு வாரமா பரவாயில்ல. நல்லா நடக்குது. சிரிக்குது... சொன்னா செய்யுது. ந்தா... இன்னிக்கு திடுதிப்னு வந்து க்ளினிக் கௌம்புறப்ப கோலம் போட்டுது. சந்தோஷமாயிருச்சு சார்...'' என்றவர் பொசுக்கென்று தேம்பினார்.

எனக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. ஆற்றில் குளித்துக் கரையேறுகிற ஒரு பெண்ணும், கரையில் காத்திருக்கிற ஓர் ஆணுமாக அங்கு இருந்த ஓவியம், அதுவரை காணாத காவியம்போல் உறைந்து இருந்தது.

‘‘பத்மா... சார் கிளம்புறாங்களாம்...'' என்றதும் மிக மெதுவாக வந்து வாசலில் சாய்ந்து நின்றார் பத்மா. வெளியே வந்து தெருமுனை வரை நடந்து வந்தவர் விடை பெறும்போது சொன்னார், ‘‘சார்... என்னவோ இப்பிடி ஆயிருச்சு... இப்பிடி அவளப் பாத்துக்கறது எனக்குச் சந்தோஷமாத்தான் சார் இருக்கு. இப்பதான் சார் என்னோட லவ்வ அதிகமாக் குடுக்கறேன். எனக்கு அவ... அவளுக்கு நான். அந்த வாசக் கோலத்த அவ முழுசாப் போட்டுருவா சார். இங்க பாருங்க சார்... என்னையக் கேட்டா ஒரே வரில சொல்லிப்புடுவேன்... லைஃப் இஸ் பியூட்டிஃபுல் சார்!'' அந்த இரவின் தெருமுனையில் நின்று அவர் சொன்ன அந்த வார்த்தைகள் எனக்கு விடியலைப்போல இருந்தது.

**ந**ண்பன் ரஞ்சனுக்குக் குழந்தை பிறந்தபோது பிள்ளை அழவே இல்லை. நான் போனபோது குழந்தை சலனம் இல்லாமல் விழித்துக்கொண்டு இருந்தது. டாக்டர் குழந்தையை ஏதேதோ செக்கப் செய்து பார்த்தார். கொஞ்ச நேரம் கழித்துப் பெரிய டாக்டர் வந்தார். குழந்தையின் பக்கத்தில் நின்று கை தட்டினார். ஒரு பாத்திரத்தை

எடுத்துப் பக்கத்தில் போட்டார். பாப்பா அப்போதும் சலனம் இல்லாமல் மேலே பார்த்தபடியே இருந்தது.

‘‘குழந்தைக்குக் காது கேக்கல...’’ என்றார் டாக்டர். நண்பனின் அம்மாவும் மாமியாரும் கதறி அழ ஆரம்பித்தார்கள். நண்பனும் மனைவியும் தவிப்பாக டாக்டரைப் பார்த்தார்கள். ஓர் உயிர் பிறக்கும்போதே மௌனத்தில் இருப்பதை அப்போதுதான் பார்த்தேன். அந்த இடமே அவ்வளவு தவிப்பில் கிடந்தது. இப்போது பார்த்தால் எல்லாம் போய்விட்டது. அவ்வளவு அழகாக வளர்கிறாள் அந்தப் பாப்பா. கௌபாய், காந்தி, கிருஷ்ணர், ஜான்சிராணி என எல்லா கெட்டப்புகளிலும் அவள் சிரிக்கிற ஆல்பம் எப்போதும் அந்த வீட்டின் ஹாலில் கிடக்கிறது. வைப்ரேட்டர் வைத்த பந்து, கால்குலேட்டர், பொம்மைகள் என அவளுக்கு என்று ஓர் உலகத்தை உருவாக்கித் தந்திருக்கிறான் ரஞ்சன்.

இசை என்பது ஒரு வடிவம். அதைத் தொடவும் முடியும் என்பதை அவர்கள் வீட்டுக்குப் போயிருந்தபோதுதான் உணர்ந்தேன். லைஃப் இஸ் பியூட்டிஃபுல்!

**பா**ண்டி பஜாரில் வரிசையாக நிற்கும் பூங்கொத்துக் கடைகள். வரிசையாக பொக்கேக்கள் அடுக்கப்பட்டு, மஞ்சள் விளக்கில் கடந்துபோகும் கடைகள். சமீபத்தில் டைரக்டர் ஷங்கர் சார் பிறந்த நாளுக்கு பொக்கே வாங்கலாம் என்று போனபோதுதான் சுலேனாவைப் பார்த்தேன். பூங்கொத்துகளுக்குப் பின்னால் பாவாடை, சட்டையில் தலை மட்டும் நீட்டிக்கொண்டு இருந்த சிறுமி.

‘‘மூணு ரோஸ் மட்டும் வெச்சுச் சின்னதா வேணும்...’’ என்றதும், ‘‘ஏண்ணே... அவ்ளோ சின்னதாப் போதுமா...’’ எனச் சிரித்தாள். ‘‘போதும்மா’’ என்றதும், சட்டென்று ஒரு ரோஜாப் பூவை எடுத்து வாயில் வைத்துக்கொண்டு, இடது கையாலேயே கத்தரியை எடுத்துத் தடதடவென பேப்பர் கட் பண்ணி பேக் செய்தாள். அப்போதுதான் எட்டிப் பார்த்தேன். அவளுடைய வலது கால், கை இரண்டுமே போலியோ தாக்கியதுபோல் மெலிந்து விழுந்திருந்தன. இடது கையாலேயே

பூங்கொத்தைத் தயார் செய்து புன்னகையோடு நீட்டியபோதுதான் பெயர் கேட்கத் தோன்றியது.

‘‘எட்டாவது படிக்கிறேண்ணே... இங்க கார்ப்பரேஷன் ஸ்கூல்ல. இங்க வந்து உட்கார்ந்தா டெய்லி அம்பது ரூவாண்ணே...’’

அதன் பிறகு எப்போது அந்த ஏரியா போனாலும், கண்கள் சுலேனாவைத்தான் தேடும். பெருநகரத்தின் இவ்வளவு நெரிசலான சாலையில் இப்படி ஒருத்தி பூங்கொத்து விற்றுக்கொண்டு இருப்பதை யார் அறிவார்? அவள் புன்னகை தரும் ஆயிரமாயிரம் பூங்கொத்துகளை யார் தருவார்?

பூங்கொத்துகள் விற்றுவிட்டு 50 ரூபாய் சம்பளத்துடன் காலை இழுத்துக்கொண்டு இரவின் சாலையில் அவள் வீடு திரும்பும் ஒரு சித்திரம் சொல்கிறது... லைஃப் இஸ் பியூட்டிஃபுல்!

**பா**லன் வந்து கல்யாணப் பத்திரிகை கொடுத்தபோது இதுதான் தோன்றியது... பாலனுக்கு 40 ப்ளஸ் இருக்கும். ஆள், இரண்டரை அடிதான் இருப்பார். சர்க்கஸ் குள்ளர். சாலிகிராமத்தில் தங்கியிருக்கிறார். அவ்வப்போது சினிமாவில் தலைகாட்டுவார். அப்படி ஒரு ஷூட்டிங்கில்தான் எனக்கு அவர் பழக்கம்.

ஒரு நாள் பிரசாத் ஸ்டூடியோ எதிரில் இருந்த டீக்கடையில் வைத்து எல்லோருக்கும் பத்திரிகை கொடுத்துக்கொண்டு இருந்தார். எனக்கும் தந்துவிட்டு, ‘‘கன்ஃபார்மா வந்துரணும் சார்... இருங்க என் ஒய்ஃபையும் கூப்பிட்டுச் சொல்லச் சொல்றேன்...’’ எனக் கைதட்டினார். பக்கத்தில் இருந்த கடையில் இருந்து வந்தார் அஞ்சரை அடியில் ஒரு பெண்.

‘‘எஸ்.டீ.டி. பூத் வெச்சிருக்கு சார். நாம வாய்ப்புக்காக அப்பப்ப போன் பண்ண வருவோம்ல, அப்ப நம்மளைப் புடிச்சுப்போச்சு. எட்டு வருஷ லவ் சார்...’’ என்றார் வெட்கமாக.

''கல்யாணத்துக்கு அப்புறம் ரெண்டு பேரும் சேர்ந்து ஒரு கேட்டரிங் சர்வீஸ் ஆரம்பிக்கலாம்னு இருக்கோம் சார்...'' என்றபடி இருவரும் நடந்தார்கள். லைஃப் இஸ் பியூட்டிஃபுல்!

**தி** ருப்பூரில் இருந்தபோது, குழந்தைக் கல்வியை வலியுறுத்தி ஒரு கலைக் குழுவுடன் ஊர் ஊராகச் சுற்றிக்கொண்டு இருந்தேன். அது ஒரு என்.ஜி.ஓ. அமைப்பு. அந்தக் குழுவில் பாடகராக இருந்தார் தேவன். தப்பாட்டம், பாடல்கள், நாடகம் என விதவிதமான பிரசாரங்கள் நடக்கும்.

தேவன், பழைய பாடல்களை மெட்டெடுத்து பிரமாதமாகப் பாடுவார். மற்றபடி குழுவில் அவர்தான் சந்தானம். எப்போதும் ஏதாவது காமெடி பண்ணிக்கொண்டே இருப்பார். பாக்கெட்டில் பிள்ளைகளுக்குத் தருவதற்கு எப்போதும் மிட்டாய்கள் வைத்திருப்பார். டி.டீ.எஸ். எஃபெக்ட்டில் களேபரமாகச் சிரிப்பார். சில நேரங்களில் நமக்கு எரிச்சலாகக்கூட இருக்கும்.

ஓர் இரவு அப்படி அவர் காமெடி பண்ணிச் சிரித்தபோது, ''ஏங்க... இவரு டார்ச்சரு தாங்க முடியலையே'' என்றேன் ஒரு நண்பரிடம். அவர் சாதாரணமாகச் சொன்னார், ''இருக்கிற வரைக்கும் சந்தோஷமா இருந்துட்டுப் போகட்டும். மனசோட வெச்சுக்க முருகா... அவர் ஹெச்.ஐ.வி. பேஷன்ட்!''

இப்போது தேவன் மேடையில் பாடிக்கொண்டு இருந்தார்,

*'கடவுள் இருக்கின்றார்... அது கண்ணுக்குத் தெரிகின்றதா...*
*காற்றில் தவழுகிறாய்... அது கண்ணுக்குத் தெரிகின்றதா?*
*கடவுள் இருக்கின்றார்... இருக்கிறார்... இருகின்றார்...'*

லைஃப் இஸ் பியூட்டிஃபுல்!

Printed Books



**ராஜுமுருகன்,** திருவாரூர் மாவட்டம் அம்மிருந்தீஸ்வரம் கிராமத்துக்காரர். ஆனந்த விகடனில் ஏழு ஆண்டுகளாய்ப் பணியாற்றியவர். இப்போது, புதிய தமிழ்த் திரைப்பட இயக்குநர். தீராத பயணங்களும் மனித மனங்களின் தரிசனங்களுமே வாழ்வான எழுத்துக்காரர்.



**ஹாசிப் கான்,** தனது புதிய பாணி ஓவியங்களால் 'வட்டியும் முதலும்' தொடருக்கு ஒளி கூட்டியவர். கன்னியாகுமரி மாவட்டம் இரவிபுதூர்கடைக்காரர். விகடன் மாணவப் பத்திரிகையாளராக இருந்தவர். 'எல்லாக் கனவுகளையும் வண்ணங்கள் ஆக்குவதே என் விருப்பம்' என்பவர், இப்போது முழுநேர ஓவியர்.

விகடன் பிரசுரம்

VATTIYUM MUTHALUM

₹ 215

ISBN 978-81-8476-473-4

9788184764734